# CPA@25:
# சீர்திருத்தமும் நல்லிணக்கமும்

CPA
Centre for Policy Alternatives
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வெளியீடு

# CPA@25:

# சீர்திருத்தமும் நல்லிணக்கமும்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

CPA at 25

**CPA@25: சீர்திருத்தமும் நல்லிணக்கமும்**


முதற் பதிப்பு: **நவம்பர் 2021**

ISBN : 978-624-5914-12-8

தொகுப்பாசிரியர்: **லயனல் குருகே**

பக்க வடிவமைப்பு: **வாக்யா ரூ - (சுகந்தி மணிமாறன்)**

வெளியீடு : **மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்**


---


பல்வேறு புலமையாளர்கள், ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தோடு இணைந்து செயற்பட்ட முன்னாள், இந்நாள் பணிக்குழுவினரை முதன்மையாகக் கொண்ட பல்வேறு எழுத்தாளர்கள் முன்வைத்த தமது சொந்தக் கருத்துக்களையும், கருத்தியல்களையும் உள்ளடக்கிய கட்டுரைகள் இவ் வெளியீட்டில் பிரசுரமாகியுள்ளன. மேற்படி கட்டுரைகள் மூலம் அந்தந்த எழுத்தாளர்களின் தனிப்பட்ட கருத்துக்களே முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் உத்தியோகபூர்வ கருத்துக்கள் பிரதிபலிக்கப்படவில்லை.


---

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் என்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் அதனுடன் இணைந்த பிரச்சினைகள் மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும், 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்கள் மீதான கொள்கைகள் விமர்சன ரீதியாகத் திறனாய்வு செய்யப்படல், மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.


| | | |
|---|---|---|
| முகவரி | : | 6/5, லெயாட்ஸ் வீதி, கொழும்பு - 05, இலங்கை |
| தொலைபேசி | : | +9411 2081384, +94112081385, +94112081386 |
| ஃபக்ஸ் | : | +9411 2081388 |
| இணையதளம் | : | www.cpalanka.org |
| மின்னஞ்சல் | : | info@cpalanka.org |
| ஃபேஸ் புக் | : | www.facebook.com/cpasl |
| டுவிட்டர் | : | @cpasl |

# உள்ளடக்கம்


| | | | | |
|---|---|---|---|---|
| | ஆசிரியர் குறிப்பு | ........... | ........... | 7 |
| | முன்னுரை - இருபத்தைந்து வருடங்கள்!<br>**கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து** | ........... | ........... | 9 |
| | விசேட நன்றிகள் | ........... | ........... | 13 |
| 1. | 25 வருடங்கள்: மீண்டும் ஆரம்பத்திற்கு<br>**ரொஹான் எதிரிசிங்க** | ........... | ........... | 15 |
| 2. | சவால்மிக்க பயணத்தின் ஆரம்பம்<br>**பேராசிரியர் ஜயதேவ உயன்கொட** | ........... | ........... | 19 |
| 3. | முன்னோக்கிய இருபத்தைந்து வருட இடையீடுகள்<br>**திஸ்ஸ ஜயதிலக்க** | ........... | ........... | 22 |
| 4. | கலைத்துறைக்கு வழங்கிய பங்களிப்பு<br>**பேராசிரியர் சந்திரகுப்த தேநுவர** | ........... | ........... | 25 |
| 5. | தற்செயலல்லாத தனிச்சிறப்பு<br>**சாகரிக்கா தெல்கொட** | ........... | ........... | 28 |
| 6. | இருபத்தைந்து வருட நினைவலைகள்<br>**லயனல் குருகே** | ........... | ........... | 30 |
| 7. | இலங்கையின் ஆளுகைக்கு வழங்கிய பங்களிப்பு<br>**உதய இதிரிமான்ன** | ........... | ........... | 36 |
| 8. | மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆரம்ப நாட்களின்<br>போலித்தனமற்ற பொன் போன்ற பெறுமதி மிக்க நினைவுகள்<br>**அல்தா: ஹுசைன்** | ........... | ........... | 38 |
| 9. | சனநாயக ஆளுகைக்கான பங்களிப்பு<br>**தேவானந் இராமையா** | ........... | ........... | 40 |
| 10. | சோஷல் இன்டிகேட்டர் (Social Indicator) பங்களிப்பு<br>சனநாயகம் தொடர்பான பரீட்சார்த்தம்<br>**கலாநிதி பிரதீப் பீரிஸ்** | ........... | ........... | 42 |

| | | |
|---|---|---|
| 11. | உள்ளூராட்சித் துறையில் மேற்கொண்ட இடையீடு<br>**ஸ்ரீயானி ருவனாரா விஜேசுந்தர** | 45 |
| 12. | மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் இலங்கை அரசியலமைப்பியலும்<br>**கலாநிதி அசங்க வெலிக்கல** | 47 |
| 13. | 15 ஆண்டுகால சமூக ஊடக வகிபாகம்<br>**சஞ்சன ஹத்தொட்டுவ** | 51 |
| 14. | துணிச்சல், தலைமைத்துவம் மற்றும் மேலும் பல<br>**பவானி பொன்சேக்கா** | 54 |
| 15. | உரிமைகளுடனும் கௌரவத்துடனும் சமாதானத்தை அடையும் போராட்டம்<br>**மிராக் ரஹீம்** | 57 |
| 16. | மாற்று மனிதர்களின் வேலைத் தளம்<br>**சந்திரிக்கா காடியவசம்** | 61 |
| 17. | குரலற்றோர்களுக்காக எழுச்சி பெறல்<br>**இரோமி பெரேரா** | 64 |
| 18. | சிறிய மனிதனின் - சிறிய புள்ளடியிலேயே ஜனநாயகம் தங்கியுள்ளது<br>**மஞ்சுல கஜநாயக்க** | 66 |
| 19. | ஒப்பீடு செய்ய முடியாத ஊடக வகிபாகம்<br>**கலாநிதி தேவநேசன் நேசையா** | 71 |
| 20. | நீங்கள் ஒருபோதும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தை<br>வீட்டு நீங்க மாட்டீர்கள்<br>**கலாநிதி குமாரவடிவேல் குருபரன்** | 73 |
| 21. | மாற்றுவழி ஒன்றைத் தேடிச் சென்ற பயணம்<br>**சம்பத் சமரகோன்** | 75 |
| 22. | ‘மாற்றம்’: மாற்றுக் கருத்தியலுக்கான இடமும் வேறுபட்ட ஊடகப்பாணியும்<br>**செல்வராஜா ராஜசேகர்** | 82 |
| 23. | ஜனநாயகத்திற்கும் சர்வாதிகாரத்திற்கும் இடையேயான பாதுகாப்பு அரண்<br>**ராதிகா குமாரசுவாமி** | 86 |
| 24. | “விபாஷா” மொழிபெயர்ப்புத் திட்டம்<br>**எஸ். சிவகுருநாதன்** | 88 |
| 25. | இலங்கை வாழ் மக்களுக்காகவே இருபத்தைந்து வருடப் பெரும்பணி<br>**எஸ்.ஜி. புஞ்சிஹேவா** | 91 |
| 26. | CPA தொடர்பான எனது நினைவுகள்<br>**விமல் பிரனாந்து** | 95 |

| | | | | |
|---|---|---|---|---|
| | மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பல்வேறு சந்தர்ப்பங்கள் கமராக் கோணங்களில் | ........... | ........... | 99 |
| 27. | மாற்றுவழியொன்றைத் தேடிச் செல்லும் நீண்ட பயணத்தின் ஆரம்பம் **மஹிந்த ஹத்தக்க** | ........... | ........... | 133 |
| 28. | சட்ட ரீதியான பாதச் சுவடுகள் சட்டத்தரணி **விரான் கொரெயா** | ........... | ........... | 136 |
| 29. | அதிகார சக்தியின் பலத்தையும் பழமைவாத மனநிலை கொண்ட தன்னிச்சையாட்சியையும் தகர்த்தல் **பேராசிரியர் ஜயந்த செனவிரத்ன** | ........... | ........... | 138 |
| 30. | பொதுமக்கள் நன்மைக்காக வழக்காடும் வகிபாகம் விமர்சன ரீதியான ஒரு பார்வை **விக்டர் ஐவன்** | ........... | ........... | 140 |
| 31. | புதிய இலங்கையின் மாற்றுக் கொள்கைகள் **சட்டத்தரணி கே.டப்ளியு ஜனரஞ்சன** | ........... | ........... | 146 |
| 32. | மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் சமூக வகிபங்கும் **பேராசிரியர் ஏ.எம். நவரத்ன பண்டார** | ........... | ........... | 150 |
| 33. | உரிமைகளுக்காக எழுந்திருப்பதற்கு எமது மனங்களை தயார்ப்படுத்திய நிறுவனம் **நிமல்கா பிரனாந்து** | ........... | ........... | 159 |
| 34. | முன்னுதாரண சமூகப் பாத்திரம் **சந்திரா ஜயரத்ன** | ........... | ........... | 161 |
| 35. | மக்கள் இயக்கத்தின் செயற்பணியை நிறைவேற்றியது **குமுதினி சாமுவேல்** | ........... | ........... | 164 |
| 36. | அரசியலமைப்புவாதத்தை மக்கள் மயப்படுத்தல் **கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன** | ........... | ........... | 166 |
| 37. | சிவில் சமூகத்தின் வகிபாகம் பிரச்சினைகளும் சவால்களும் **பேராசிரியர் உப்புல் அபேரத்ன** | ........... | ........... | 168 |
| 38. | வெள்ளி விழாவிற்கு நல்வாழ்த்துக்கள் **விசேட வைத்திய நிபுணர் வின்யா ஆரியரத்ன** | ........... | ........... | 172 |
| 39. | சிவில் சமூகவெளியின் தலைமைத்துவம் **டினேஷா டி சில்வா விக்ரமநாயக்க** | ........... | ........... | 174 |
| 40. | லிபரல் ஜனநாயக மாற்றுவழி ஒன்றுக்காக சளைக்காமல் போராடிய இருபத்தைந்து ஆண்டுகள் **சட்டத்தரணி சுதர்ஷன குணவர்தன** | ........... | ........... | 177 |

41. 'சமாதான நோக்கு' ஊடாக CPAஐ சந்தித்தல் ………… ………… 180
**பிறிட்டோ பிரனாந்து**

42. மாற்றீட்டிற்கான - மாற்றுவழி ………… ………… 182
**ஊவா சக்தி நிறுவனம்**

43. மாற்றுக்கொள்கைகளுக்காகத் துணிவுடன் கருமமாற்றுதல் ………… ………… 185
**ஷெரீன் அப்துல் சரூர்**

44. LGBTIQ சமூகத்தின் சார்பில் தோற்றுதல் ………… ………… 187
EQUAL GROUND

45. 'தொலைநோக்கிற்கு அப்பாற் செல்லும் புலமைத்துவம்" ………… ………… 189
**ஒஸ்ரின் பிரனாந்து**

46. தாராளவாதத்திற்கு எதிரான அடிப்படைக்குச் செல்வதைத் தவிர மாற்று வழியில்லை! ………… ………… 192
**பேராசிரியா சரித்த ஹேரத்**

47. இருபத்தைந்து ஆண்டு ஐந்தொகை மற்றும் எதிர்கால சவால்கள் ………… ………… 196
**சிரால் லக்திலக**

48. சனநாயகம் மற்றும் மனித சுதந்திரத்திற்காக பாராட்டத்தக்க பணியை நிறைவேற்றியது ………… ………… 203
**சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க**

49. ஒன்றிணைந்து அல்லது எதிர்த்து செயற்படுவதற்கான பலம் ………… ………… 205
**ரணில் விக்ரமசிங்க - இலங்கையின் முன்னாள் பிரதமர்**

50. மேற்கொண்ட பணிகள் மிகச்சிறப்பானவை ………… ………… 207
**எம்.ஏ. சுமந்திரன்**

51. "அனைவருக்கும் நீதி" குறித்த இடையறாத தேடல் ………… ………… 209
**ரவூப் ஹக்கீம்**

52. இணங்கியும் இணங்காமலும் வந்த ஒரு பயணம் ………… ………… 211
**எரான் விக்ரமரத்ன**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் / அடிப்படை உரிமை மனுக்கள் ………… ………… 213

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையப் பிரசுரங்களின் ஒரு சில... ………… ………… 216

# ஆசிரியர் குறிப்பு

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திற்கு இருபத்தைந்து வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு, அதன் ஆரம்ப உறுப்பினர்கள், பல்வேறு காலகட்டங்களில் அங்கு சேவையில் ஈடுபட்டவர்கள், இன்னமும் அங்கு பணியாற்றுபவர்களைப் போன்றே, அதன் பணிகளில் பல்வேறு வகைகளில் பங்களிப்புச் செய்தவர்களும், வெளியிலிருந்து அதனைப் பார்க்கின்ற அறிஞர்களும், வெளியிடுகின்ற கருத்துகள் இப் படைப்பில் உள்ளடங்குகின்றன. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தொடர்பான பல்வேறு பார்வைக் கோணங்களில் நோக்கியுள்ள இக் கட்டுரைத் தொகுப்பானது பலவண்ண சித்திரத்தைப் போன்றது. அந்த பன்முகத் தன்மையே அதன் அற்புதமும் ஆகும்.

கலாநிதி சரவணமுத்து உள்ளிட்ட சிலரது மாற்றீட்டு உரையாடல்களின் பெறுபேறாக ஆரம்பிக்கப்பட்ட மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இரண்டரை தசாப்தங்களாகக் கடந்து வந்த சவால் மிக்க பயணப் பாதையின், பல்வேறு முக்கிய கட்டங்கள் இங்கே சித்தரிக்கப்பட்டுள்ளன. இக் காலகட்டத்தில் அது எதிர்பார்த்த நோக்கங்களை நூற்றுக்கு நூறு வீதம் அடைந்து விட்டது என்று சொல்ல முடியா விட்டாலும், சமூகத்தை மேலும் சிறந்த இடத்துக்குக் கொண்டு செல்லும் அபிலாசையுடன் கூடிய, புதியதோர் கண்ணோட்டத்துடன் உலகத்தைப் பார்க்கின்ற சந்ததிக்கு ஒரு ஊக்குவிப்பாகவும் முன்மாதிரியாகவும் எடுத்துக் கொள்ளக் கூடிய பல இடையீடுகளை அதில் இனங்காண முடியும்.

நிறுவனங்கள் உருவாவதும், பல்வேறு குழுவினர் அதனோடு இணைவதும் பல்வேறு குறிக்கோள்களை நோக்கி அவை பரந்து செல்வதும் பொதுவான நியதியாகும். எனினும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அளவுக்கு, அதில் தொடர்புற்றோரிடையே ஆத்மார்த்தமான பிணைப்பை ஏற்படுத்திய வேறெந்த நிறுவனமும் இருக்குமாயின்

அது சந்தேகத்திற்கிடமானதே. ஒட்டுமொத்த செயற்பாட்டில் உள்ள மனித நேயமிக்க அணுகுமுறை, ஒவ்வொருவருக்கிடையிலான மனிதநேயமிக்க பிணைப்பு, என்பன நிறுவனத்தின் நோக்கத்தையும் பணிப்பொறுப்பையும் விஞ்சி நிற்கின்றன. அது அமுலிலுள்ள எழுதப்படாத உடன்படிக்கையைப் போன்றது. எந்தவொரு நிறுவனத்தின் செயற்பாடு தொடர்பிலும் விமர்சனங்கள் காணப்பட்ட போதிலும், மிகச் சில நிறுவனங்களே விமர்சகர்களின் பாராட்டுக்கும் ஆளாகின்றன. இக் கட்டுரைத் தொகுப்பிலிருந்து பிரதிபலிக்கப்படுகின்ற மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் அவ்வாறானதே.

நாட்டுப் பற்று என்ற பெயரில் முன்வருகின்ற பின்தங்கிய நிலை, தீவிரவாதம் மற்றும் அரக்கத்தனமாக பழங்குடிவாதத்தை தாண்டிச் சென்று மனித இனத்தால் கைப்பற்றப்பட்ட உலகெங்கும் பரந்துள்ள விழுமியங்களுடன் நிற்கின்ற மாற்று அடிப்படையிலான நாட்டுப் பற்றுச் செயற்பாடு தொடர்பான முன்மாதிரியொன்றை இக்கட்டுரைகளின் மூலமாக இனங்காண முடியும்.

வரலாற்றில் முக்கியமான காலகட்டமொன்றுடன் ஏற்புடைய தனது நினைவுகளை மீட்டி, இக்குறுகிய காலத்திற்குள் இக்கட்டுரைகளை வரைவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து எழுத்தாளர்களையும் நான் சிரந்தாழ்த்தி வணங்குகின்றேன். அவ்வாறே எழுத்தாளர்களின் மூலக் கருத்துக்கு நியாயமளித்து அவற்றை சிங்கள மொழியிலும், தமிழ் மொழியிலும் ஆங்கில மொழியிலும் மொழிபெயர்த்த அனைத்து மொழிபெயர்ப்பாளர்களுக்கும், இவ்வாக்கம் தொடர்பான கனவை நனவாக மாற்றுவதற்குப் பல்வேறு வகைகளில் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எனது மரியாதையையும் நன்றியையும் செலுத்துகின்றேன்.

**லயனல் குருகே**

CPA at 25

# முன்னுரை

## இருபத்தைந்து வருடங்கள்!

**கலாநிதி**
**பாக்கியசோதி சரவணமுத்து**

இது பொறுமையாகப் போராடி முன்செல்லுதல், அடிக்கடி ஏற்படும் விரக்தி உணர்வுகள், பொதுநலன் வழக்காடல், தேர்தல் வன்முறைகள், முறைகேடுகள் மத்தியில் கோட்பாடுகளை உயர்த்திப்பிடித்தல், யுத்தம் கொணர்ந்த அழிவுகள், ஓர் அரசியலமைப்புச் சதிப்புரட்சி, மரண அச்சுறுத்தல்கள், பகிரங்க அவதூறுகள் மற்றும் நிறைவேற்று அதிகாரம், செல்வாக்கு என்பவற்றின் அளவுமீறிய செயற்பாடுகள் என்பவற்றின் மத்தியிலான குறுங்கால மற்றும் உணர்வூட்டும் நினைவுகள் நிறைந்த ஒரு நீண்ட பயணமாகும்.

பகிரங்கக் கொள்கைகளை வகுத்தமைப்பதில் சிவில் சமூகம் வகிக்கவேண்டிய ஒரு முக்கிய பாத்திரம் உள்ளது என்னும் நம்பிக்கையின் மீதே மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) தாபிக்கப்பட்டது. இந்த வகையில் நோக்குகையில், சிவில் சமூகம் என்பது அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பதல்ல. மாறாக அது ஆட்சியிலுள்ள அரசாங்கம் உரிமைகளை அனுபவித்து, பாதுகாத்து, மேம்படுத்தும் சூழமைவை உறுதிப்படுத்தக்கூடியவகையில் ஒரு நிகழ்ச்சிநிரலை ஏற்றுக்கொண்டு, நடைமுறைப்படுத்துவதைக் குறிப்பதாகும். இந்த நூலின் தலையங்கம் குறிப்பிடுவதுபோன்று, இது அரசின் மீறல்களுக்கெதிராக, பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாத்து, வலுப்படுத்துவதன், அடிப்படை உரிமைகள் மற்றும் அரசியலமைப்பு விரோதச் செயற்பாடுகளை எதிர்த்து நிற்பதன் ஆட்சிமுறை மற்றும் அரசாங்கத்தின் கட்டுமானம் மற்றும் நடைமுறையில் பயமோ பக்கச்சார்போ இல்லாமல் பகிரங்கக் கொள்கை நிகழ்ச்சிநிரல் சீர்திருத்தத்தில் சட்டத்தின் ஆட்சியையும், சட்டத்தின்முன் சமத்துவத்தையும் அங்கீகரித்து, நிறுவனப்படுத்துவதன், மற்றும் இந்த நாட்டின் மக்கள் அனைவரும் பல்வகைமையில் ஒற்றுமை என்பதைக் கொண்டாடும் வகையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் கதையாகும். இந்தவகையில், இருபத்தைந்து வருடங்கள் கழிந்தபோதிலும், CPA யின் பணி எப்பொழுதும் அதுவாகவே இருக்கும், அதுவாகவே மாறிக்கொண்டிருக்கும் ஒன்றாகும்.

**விமர்சனங்கள்**

ஆரம்பநிலையிலேயே, நான் எம்மைக்குறித்து முன்வைக்கப்படும் சில விமர்சனங்களுக்குப் பதிலளிக்க விரும்புகின்றேன். முதலாவது, நாம் சராசரிக் குடிமக்களுக்கு என்ன நடக்கின்றது என்பது குறித்து எதுவித கவலையுமின்றி, கொழும்பைத் தளமாகக்கொண்டியங்கும் ஒரு சிறப்பரிமை பெற்ற வர்க்கத்தின் அமைப்பு என்பதாகும்.

நாம் அடிப்படை உரிமைகளுக்கு முதலிடம் வழங்கியுள்ளோமென்பது உண்மையாகும். இது சராசரிப் பிரஜைக்குக் கரிசனையற்றது என்பதை நாம் பூரணமாகவே மறுக்கின்றோம். அவர்களின் உரிமைகளுக்காகவே நாம் போராடுகின்றோம். ஏனெனில், அடிப்படை உரிமைகளைக்கொண்ட ஒரு காத்திரமான அரசியலமைப்புச் சட்டகமின்றி, சராசரிப் பிரஜை தான் விரும்பித் தகுதியோடு எதிர்பார்க்கும் ஐக்கியம், சமாதானம் மற்றும் சுபீட்சம் என்பவற்றை ஈட்டிக்கொள்ளுதல் இயலாது. ஒருவேளை, நாம் பாரிய மக்கள் தொகையினருக்கு இந்த விடயத்தைப் போதியளவு தெளிவுபடுத்தவில்லையென்பது ஏற்றுக்கொள்ளப்படவேண்டியதாகும். எவ்வாறாயினும், நாம் பிரயத்தனம் எடுத்துள்ளோம். எமது பணிகள் அனைத்தும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் முன்னெடுக்கப்படுவதை நாம் தொடர்ந்தும் உறுதிசெய்வோம். எமது முனைப்பெல்லை அலகு மற்றும் தேர்தல் வன்செயல் கண்காணிப்பு நிலையம் (CMEV) என்பவற்றின் பணி நாடளாவிய வலையமைப்புகளூடாக பிரதானமாக அரசகரும மொழிகளில் ஆற்றப்படுகின்றது என்பதை எம்மை விமர்ச்சிப்போருக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். அத்தோடு, முறையே சிங்களத்திலும், தமிழிலும் “விகல்ப” மற்றும் “மாற்றம்” என்னும் எமது இரு வெப்தளங்களும் கருமமப்படுகின்றன.

வெளிநாட்டு அரசாங்கங்கள் எமது பிரதான நிதியளிப்போராக விளங்குவதால், நாம் அவர்களின் நிகழ்ச்சிநிரலுக்கேற்பவே செயலாற்றுகின்றோம் என்பது இரண்டாவது விமர்சனமாகும். ஆம், இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் ஆட்சிமுறை போன்ற துறைகளில் பணியாற்றும் சிவில் சமூக அமைப்புகளுக்கு நிதியளிப்பு இல்லையென்பதால், அவர்களே எமது பிரதான நிதியளிப்பாளர்களாக விளங்குகின்றனர். அத்தகைய ஒரு நிலைமை இலங்கையில் இருந்திருப்பின், எவ்வளவு சிறப்பாக இருந்திருக்கும்! மேலும், நாம் எமது முன்னுரிமைகளை இனங்கண்டு, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக வெளியில் சென்று நிதிகளைத் தேடுவதால், நாம் அவர்களிடம் பணத்தைப் பெற்றுக்கெண்டு, அவர்களின் கருத்திட்டங்களை நடைமுறைக்கிடுவதாகச் செய்யப்படும் குற்றச்சார்த்துதல்களும் பூரணமாகவே உண்மையற்றவையாகும். மேற்குலகின் கொடையாளர்களும் மனித உரிமைகள் பாதுகாப்பு, சட்டத்தின் ஆட்சி மற்றும் அரசியலமைப்புவாதம் என்பவற்றுக்கு முறைசார் அர்ப்பணிப்புணர்வு கொண்டிருப்பதால் எம் இருசாராரினதும் முன்னுரிமைகளிடையே இணக்கப்பாடு காணப்படுவது தற்செயலான செயல் அல்ல.

நாம் அரசாங்கங்களுடன் அதிகம் முட்டிமோதுவோராகவும், எதிர்க்கட்சியின் கைக்கருவியாகவும் விளங்குகின்றோம் என்பது மேலுமொரு விமர்சனமாகும். எமது இருபத்தைந்து வருடகால வாழ்க்கையில் ஏறக்குறைய இருபது ஆண்டுகாலமாக நாம் ஜனாதிபதி குமாரதுங்க, மகிந்த மற்றும் கோட்டாபய சகோதரர்களின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி (UPFA) அரசாங்கங்களின் கீழ் இருந்துள்ளோம் என்பது கவனிக்கத்தக்கதாகும். இந்தக் காலப்பகுதியில் 12 வருடங்களுக்கு மேலாக ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கட்சியாகவும், எட்டு வருடங்கள் ஆளுங்கட்சியாகவும் இருந்துள்ளது. CPA யின் பணிநோக்கும், பணிப்பாணையும் ஒரு மனித உரிமைகள் கண்ணோட்டத்தில், ஆட்சிமுறை மற்றும் முரண்பாட்டு நிலைமாற்றங்குறித்த கொள்கை ஆராய்ச்சியும், பரப்புரையுமாகும். இத்தகைய கொந்தளிப்பான காலங்களில், அன்றிருந்த அரசாங்கத்தைவிட எதிர்க்கட்சி எமது கருத்துகளோடு மேலும் இணங்குவதாகவிருந்தது. மேலும், 2015 இல் அரசாங்கம் அமைத்த கொள்கை அரங்கு குறைந்தது இரண்டு தசாப்தகாலங்களாக தாராளவாத சிவில் சமூகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி மற்றும் பரப்புரைகளால் வரைவிலக்கணப்படுத்தப்பட்டு, வடிவமைக்கப்பட்ட ஒன்றாகும். தாராளவாத சிவில் சமூகத்துக்கு இக்கொள்கைகள் கைவிடப்படாதிருப்பதை உறுதிசெய்யும் கடப்பாடொன்று இருந்தது. இதன்பிரகாரம், சுயாதீனத்தையும், நம்பகத் தன்மையையும் இழந்து, அரசாங்கத்துக்காக வேலைசெய்வதற்கும், அவர்களுடன் இணைந்து சேவைசெய்வதற்குமிடையிலான வேறுபாட்டை உயர்த்திப்பிடிக்கும் நிலைப்பாட்டை நாம் எடுத்திருந்தோம்.

அதற்குமுன்னர், 1999 இல் இடம்பெற்ற வடமேல் மாகாணத் தேர்தல்களைச் செல்லுபடியற்றதாக்கவேண்டுமென்ற கோரிக்கை குமாரதுங்க அரசாங்கத்தில் எமது அறிக்கைகளைக் கறைப்படுத்தியது. அவர்கள் CMEV வெளியிட்ட ஒவ்வொரு ஊடக அறிக்கையையும் மறுதலிக்கும் ஒரு போட்டி அமைப்பை உருவாக்கினர். மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் வகைப்பொறுப்புக்கூறுதல் சம்பந்தமான பரப்புரை அவர்களுக்குக் கசப்பாகவிருந்தது. இது இன்னமும் இரு ராஜபக்ஷ அரசாங்கங்களுக்கும் கசப்பாகவே உள்ளது. நாம் ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சார்பானவர்கள் என்னும் விமர்சனம்

அவர்கள் ஆட்சியிலிருந்த காலத்தில் நாம் தொடர்ந்த பொதுநலன் வழக்காடல்கள் மற்றும் எமது தொடர்ச்சியான மனித உரிமைகள் பரப்புரை என்பவற்றால் பொய்யாக்கப்பட்டுள்ளது.

**சாதனைகள்**

இந்த இருபத்தைந்துவருட காலப்பகுதியில் இலங்கையின் குடியியல் ஊடக முன்னோடிகளாக விளங்கி, விருதுபெற்ற யதார்த்தநிலைக் காட்சி (Ground views) வெப்-தளத்தினூடாக பிரதான பிரவாக ஊடகங்களில் போதிய அளவு கவனிப்பு வழங்கப்படாத அல்லது அறவே கவனிக்கப்படாத செய்திகள் மற்றும் அபிப்பிராயங்கள் குறித்த, அன்றாட எதிர்நிலைக் கதைகளுக்கான அரங்காகச் செயற்பட்டோம். சமூகக்காட்டி (Social indicator) சிவில் சமூகத்தின் ஒரேயொரு அபிப்பிராய வாக்கெடுப்பு அலகாகும். அது நாடு முழுவதும் நிலவும் சமகால சமூக மற்றும் அரசியல் விவகாரங்கள் குறித்த பொதுமக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்துகின்றது. அது நாட்டில் யுத்தம் மற்றும் சமாதானம் குறித்த பொதுமக்களின் கருத்துக்கள் சம்பந்தமான ஏழுவருடகாலத் தரவுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அமைப்பின் முதல் செயற்பாடான தேர்தல் வன்செயலைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளிலிருந்து பரிணமித்த CMEV பெரும் பழிச்சொல்லைச் சம்பாதித்த வடமேல் மாகாணத் தேர்தல் இரத்துச் செய்யப்படவேண்டுமென்று கோரிக்கை விடுத்தபோது அரசாங்கத்தின் தணிக்கை மற்றும் தடைகளுக்கு முகங்கொடுத்தது. ஆயினும், அது இப்பொழுது முழுத் தேசத்தினதும் மக்களால் அங்கீகரிக்கப்பட்ட இரு தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுள் ஒன்றாக விளங்குகின்றது.

அரசியலமைப்பு விவகாரங்களில் நாம் பாராளுமன்றத்தையும், சமஷ்டியையும், அதிகாரப்பகிர்வையும் உள்ளடக்கும் வகையிலான ஒரு செழுமையான தரவுக் கருவூலத்தைக் கொண்டுள்ளோம். எமது பொதுநலன் வழக்காடல் நிகழ்ச்சித்திட்டம் சமகால முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களைச் சுட்டிக்காண்பித்ததோடு, வழக்குகளில் வெற்றியீட்டியபோது உரிமை மீறல்கள் குறித்த விழிப்புணர்வை அதிகரித்துள்ளது. மனிதஉரிமைகள் பாதுகாப்பு, வகைப்பொறுப்புக் கூறல் மற்றும் நாடு முழுவதிலுமுள்ள சிவில் சமூக அமைப்புகள் ஒன்றிணைப்புப்போன்ற விடயங்களில் பரப்புரை மேற்கொண்டமை என்பவை குறிப்பிடத்தக்க முக்கியம்வாய்ந்த விடயங்களாகும்.

**மூலங்களும், ஏற்புரைகளும்**

CPA அமைப்பு கொழும்புப் பல்கலைக்கழக முன்நாள் உப-வேந்தர் ஜி.எல்.பீரிஸ் அவர்களால் தாபிக்கப்பட்ட கொள்கை ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுக்கான நிலையத்திலிருந்து (CEPRA) வளர்ச்சியுற்றதாகும். CEPRA புதிய அரசியலமைப்பு ஒன்றுக்கான அரசாங்கத்தின் 1995 முன்மொழிவுகள் சம்பந்தமான முதலாவது பகிரங்கக்கூட்டத்தை ஏற்பாடுசெய்தது. CEPRA அதேவிதமான ஒரு கூட்டத்தைச் சிங்களமொழியில் ஏற்பாடுசெய்ய விரும்பியபோதிலும், எமக்கு அவ்வாறு செய்வதற்கு அனுமதி கிட்டாதென்று மாணவர் அமைப்பு தெரிவித்தது. எவ்வாறிருந்தாலும், பல்கலைக்கழக வளாகத்தின் ஒழுக்கக்கோவைகளும், அதிகாரத்துவவாதிகளும் CEPRA அதன் தாபகர்களின் குறிக்கோளாகிய ஒரு புதிதுபுனைதல் ஆய்வு நிறுவகமாக விளங்கவேண்டுமென்பதை ஈட்டிக்கொள்வதற்குத் தடைக்கல்லாக விளங்கியதால் CEPRA வில் பணியாற்றிய ஜயதேவ உயன்கொட, ரொஹான் எதிரிசிங்க மற்றும் நான் (பாக்கியசோதி சரவணமுத்து) ஆகிய மூவரும் வெளியேறி, இத்தகைய தடைகளால் பாதிப்புறாத ஓர் அமைப்பை உருவாக்கத் தீர்மனித்தோம். நாம் எமது சபை அந்த நாட்களில் நிலவிய அரசியல் அபிப்பிராயங்களைப் பிரதிபலிக்கவேண்டுமென்றும், அதன் நிறைவேற்றுப் பணிப்பாளராக நான் செயற்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. CPA தனது பெயருக்காகவும், அமைப்பு அகவிதிகளுக்காகவும் உயன்கொடவுக்கு நன்றி தெரிவிக்கவேண்டும். எமது தாபிதக் கொடை ஆசியா பவுன்டேஷனிடமிருந்தும், சார்லி அபேசேகர தாபிதப்பணிப்பாளராக விளங்கிய INFORM அமைப்பிலிருந்து கிட்டிய ஒரு கடனிலிருந்தும் நிதி பெற்றுக்கொள்ளப்பட்டன. ஆதரவு மற்றும் ஒருமைப்பாட்டுக்காக ஆசியா பவுன்டேஷன் பிரதிநிதி “எட் ஆன்டேர்சனுக்கு“ நான் நன்றிசெலுத்துதல் வேண்டும்.

இரண்டு தாபகப்பணிப்பாளர்களாகிய சார்லி அபேசேகர மற்றும் பிராட்மன் வீரக்கோன் என்போருக்கு நான் எனது நன்றிகளைப் பதிவிடவேண்டும். அவர்களின் அனுபவக் கருவூலமும், CPA யின் நோக்கங்கள் மற்றும் பணிகுறித்த அவர்களின் ஆர்வம் மற்றும் தைரியமூட்டல் மற்றும் அமைப்புக்கான அர்ப்பண உணர்வு என்பவை பெறுமதிமிக்கவையாக இருந்தன. CPA எப்பொழுதும் அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கும். அவ்வாறே, சபையின் சிரேஷ்ட உறுப்பினராகப் பணியாற்றிய ஷெல்டன் வணசிங்க அவர்களின் பாத்திரமும் விசேடமாக யுத்தத்துக்குப் பின்னரான வருடங்களில் அமைப்பு முகங்கொடுத்த தாக்குதல்களின்போது அவரின் பிரசன்னமும் பெறுமதி வாய்ந்ததாகவிருந்தன. நான் நன்றி தெரிவிக்கவேண்டிய மேலுமொருவரான முன்னாள் பணிப்பாளர் அர்ஜூன

பராக்கிரம ஆவார். அவரே CMEV யின் முறையியலை வடிவமைத்தவர். CMEV அதை இன்றுவரை பின்பற்றிவருகின்றது. அவர் “விபாஷா” எனப்படும் மொழிபெயர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தையும், முதலாவது ஊடகக்கண்காணிப்பு அமைப்புகளையும் தாபித்தார். இவை இரண்டையும் பற்றி இன்னமும் பேசப்படுகின்றது. இறுதியாக, சபையின் முன்னாள் அங்கத்தவர்கள் மத்தியில், சமாதானம் மற்றும் முரண்பாட்டு அலகுக்குத் தலைமைதாங்கிய கேதீஷ் லோகநாதனுக்கும் CPA கடன்பட்டுள்ளது. கேதீஷ் சுய-நிர்ணயத்துக்கான தமிழர்களின் போராட்டம் சம்பந்தமான பல வருடகால அனுபவத்தை CPA வுக்கு எடுத்துவந்தார். அவர் LTTE மற்றும் அன்றிருந்த ஏனைய கெரில்லாத் தலைவர்கள் சம்பந்தமான தனிப்பட்ட அறிவையும் கொண்டுவந்தார். இதன் பிரகாரம் CPA யில் அவர் பணியாற்றிய காலங்களில் சமாதானம் மற்றும் முரண்பாடு குறித்த அறிவை மேலும் ஆழமாக்கினார். சில நேரங்களில் அது அத்தனை இலகுவானதாகவும் இருக்கவில்லை.

தாபகப்பணிப்பாளர் ரொஹான் எதிரிசிங்கவை விசேடமாகக் குறிப்பிடவேண்டும். அவரே, சட்ட அலகின் தாபகராகவிருந்தார். அது இப்பொழுது ஆராய்ச்சி மற்றும் பரப்புரை அலகாகவும், பொதுநலன் வழக்காடல் நிகழ்ச்சித்திட்டமாகவும் மாறியுள்ளது. அரசமைப்பியல் மற்றும் பகிரங்கச்சட்டம் குறித்த ரொஹானின் பரந்த அறிவு பல இளம் ஆராய்ச்சியாளர்களை CPA ஐ நோக்கி ஈர்த்ததோடு, சமஷ்டி மற்றும் அதிகாரப்பகிர்வு மற்றும் இப்போது நன்கு தாபிக்கப்பட்டுள்ள பொதுநலன் வழக்காடல் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றுக்கான அத்திவாரங்களையிட்டது.

CPA அமைப்பின் வயது முதிர்ந்த அங்கத்தவர்களுள் பலர் நிர்வாகத்துறை தலைவியாகிய ஜீன் கொட்லியெப் அவர்களை நினைவில் வைத்திருப்பார்கள். அவர் பதவியினர் அனைவருக்கும் ஒரு தாயாகவே விளங்கினார். ஆரம்பத்திலிருந்தே அவரது பொறுமையும், வினைத்திறனும், மகிழ்ச்சியூட்டும் மனோபாவமும் அமைப்பைப் பணிபுரிவதற்கான மேலும் மகிழ்ச்சியான இடமாக மாற்றியமைத்தது.

25 வருடகாலமாக CPA சர்வதேச மனித உரிமை அமைப்புகள், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மத்தியிலிருந்து பல நண்பர்களைச் சம்பாதித்துள்ளது. மகிழ்ச்சியான நேரங்களிலும், மோசமான காலப்பகுதிகளிலும் அவர்களின் ஆதரவு மற்றும் ஒருமைப்பாடு குறித்து நன்றிதெரிவிப்பதோடு, தேவையேற்படின் எதிர்காலத்திலும் இணைந்து பணியாற்றும் நம்பிக்கை எதிர்பார்ப்பை வெளியிடுகின்றேன்.

நான் CPA பதவியினருக்கும், வெளிநாட்டு மற்றும் தேசிய பணியில் பயில்வோருக்கும் எமது விழுமியங்களுக்கான அவர்களின் அர்ப்பணிப்புணர்வு மற்றும் சிறப்பான பணிக்காக நன்றி தெரிவிக்கவேண்டும். அவர்களுள் பலருக்கு CPA அமைப்புக்காகப் பணியாற்றுவது அவர்களின் முதல் வேலையும், ஒரேயொரு வேலையாகவும் இருந்தது. பிரத்தியேகமாக, நான் பவானி, சஞ்ஜன, பிரதீப், தேவ், மிராக், சிரியாணி மற்றும் ரேணுகா என்போருக்கு, சில விடயநிகழ்வுகளில் முன்னெப்போதும் இல்லாத வகையிலான அற்புதமான பணிக்கும், அர்ப்பணவுணர்வுக்கும், CPA யின் பணி மற்றும் விழுமியங்களுக்கான அவர்களின் இடைவிடாத ஈடுபாட்டுக் கடப்பாட்டுக்கும் நன்றி கூறுதல்வேண்டும். அவர்களுட் பலர் ஐக்கிய நாடுகள் வதிவுப் பிரதிநிதிகள், தமது சொந்த அரசாங்கங்களின் தேர்தல் கண்காணிப்பாளர்கள், அரசின் பாதுகாப்புப் பிரதி உதவிச்செயலாளர்கள். காணாமல்போனோருக்கான முதலாவது அலுவலகம் போன்ற எமது சொந்தத் தேசிய நிறுவனங்கள் மற்றும் வெளிநாடுகளின் கல்விக்கழகங்களில் மாண்புமிக்க பணிகளுக்காகச் சென்றுள்ளனர்.

CPA யின் பதவியினரே அவற்றைச் சிறப்பித்தார்கள். மறுபுறம் CPA அவர்களின் வாழ்க்கையை மாற்றியமைத்துள்ளது. அவர்களும் இந்த விடயத்தில் இணக்கம் தெரிவிப்பார்களென்று நம்புகின்றேன்.

CPA எதிர்காலத்தில் தனது பணியைத் தொடருமென்று நம்பிக்கையோடு எதிர்பார்க்கின்றேன். அது தொடர்ந்து மேலும் சிறப்பாகப் பணியாற்றுமென்று நம்புகின்றேன். நிறைவாக, காந்தி நினைவுப் பேருரையில் நான் செய்தவாறே கவிஞர் ரொபேர்ட் பிரவுனிங் (Robert Browning) மேற்கோள் ஒன்றை எடுத்தாள விரும்புகின்றேன்.

“ஆ! ஒரு மனிதனின் முனைப்பெல்லை பற்றிப்பிடிக்கும் ஆற்றலைவிட அதிகமாக இருக்கவேண்டும், இல்லையேல் சுவர்க்கம் எதற்கு?”

இவ்வாறே அடுத்த 25 ஆண்டுகளுக்கும், அதற்குப் பின்னரும் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் அவ்வாறேயாக வேண்டும்!

# விசேட நன்றிகள்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சார்பில், இந்த நினைவு மலரின் ஆசிரியர்கள் இருவரான ஷிமாலி சேனாநாயக்க, மற்றும் லயனல் குருகே ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். அது தொடர்பில் அவர்கள் காட்டிய பொறுமை, புரிதல் மற்றும் அர்ப்பணிப்பைப் போன்றே மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சார்பில் அவர்கள் காட்டுகின்ற அர்ப்பணிப்பை வேறெதனுடனும் ஒப்பிட முடியாது. குறிப்பாக, இதிலே உள்ளடக்கப்பட்டுள்ள புகைப்படங்களைத் தொகுப்பதற்கு சுஜித், சிரமம் பாராது எடுத்துக் கொண்ட முயற்சி தொடர்பிலும் கவர்ச்சியான உள்ளடக்கங்களைத் தயாரிப்பது தொடர்பில் எமது பணிப்பாளர் சபையின் தவிசாளர் பேராசிரியர் சந்திரகுப்த தேநுவர அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். மிகச் சிறந்த பணியை நிறைவேற்றிய அச்சகத்திற்கும், அது தொடர்பில் அள்ளி வழங்கப்பட்ட நிதியுதவிக்காக ஃப்ரட்ரிக் நியுமன் ஸ்ட்டிஃருன்க் (Freidrich Neumann Stiftung -FNst) நிறுவனத்திற்கும் பெரிதும் நன்றி சொல்லிக் கொள்கின்றேன். பல வருட காலமாக நியுமன் ஸ்ட்டிஃருன்க்கின் ஹியுபர்ட்ஸ் வொன் வெல்க்கின் பங்களிப்பிற்கும் ஒத்துழைப்பிற்கும் விசேடமாக நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

இறுதியாக இதற்கான ஒத்துழைப்பை நல்கிய அனைவருக்கும் மிகுந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இதனை எதிர்பார்த்தவாறு நினைவு மலராக மாற்றியது மட்டுமன்றி, சிவில் சமூக உலகம், நல்லாட்சிக்கான சவால்களும் சந்தர்ப்பங்களும், நிலைபேறான சமாதானம் மற்றும் சுபீட்சம் தொடர்பான புரிந்துணர்வை வழங்குவதற்குப் பொருத்தமான முறையிலான உள்ளீட்டை உறுதிப்படுத்தியிருப்பதையும் வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் எனது சகபாடிகளுக்கும் கடந்தகாலத்திலும் நிகழ்காலத்திலும் அதன் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் எனது உச்சபட்ச நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். நீங்கள் அனைத்தையும் வெற்றிகரமாக்கியதுடன் அதனைத் தொடர்ந்தும் மேற்கொள்வீர்கள்.

**கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து**
**நிறைவேற்றுப் பணிப்பாளர்**



# 25 வருடங்கள்: மீண்டும் ஆரம்பத்திற்கு

**ரொஹான் எதிரிசிங்க**

ஒரு பணியின் மிக முக்கியமான பகுதி அதன் தொடக்கம் என ஒரு கூற்று உள்ளதால், இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தை ஆரம்பித்தமை தொடர்பில் அதனை மீட்டிப் பார்க்க வேண்டும் என எண்ணினேன். 1996ல் அதன் தொடக்கத்திற்கு, அரசியல், நிறுவன மற்றும் நபர்கள் தொடர்பில் கவர்ச்சிகரமான ஒரு சேர்க்கை பங்களிப்புச் செய்தது. மிகச் சிறப்பான தனித்துவம், உத்வேகம் மிக்க அரசியல் நோக்கு மற்றும் அரச கொள்கைகள் தொடர்பில் அடிப்படைக் கோட்பாட்டுப் பிரவேசமொன்றைத் தயாரித்துக் கொள்வதற்கு முதல் ஐந்து ஆண்டுகளும் மிகவும் முக்கியமானவை. இதனூடாக அமைப்பின் எதிர்கால வெற்றிக்கு மிக முக்கியமான அர்ப்பணிப்பும் ஆற்றலுமுள்ள இளம் குழுவினரை அமைப்பிற்குள் ஈர்த்தெடுக்க முடிந்தது.

எமது நண்பர் சானக்க அமரதுங்கவின் கருத்திற்கு ஏற்ப, 1981ல் கூட்டாட்சி சனநாயகத்திற்கான சபை மற்றும் 1987ல் லிபரல் கட்சியை ஆரம்பிப்பதன் மூலம் தொடங்கப்பட்ட இலங்கை லிபரல் அமைப்பில் சராவும் நானும் செயற்பாட்டாளர்களாக இருந்தோம். [1]அதன் மாநாடுகள் மற்றும் வெளியீடுகள் ஊடாக, அரசியல் மற்றும் யாப்புப் பிரச்சினைகள் தொடர்பில் மக்கள் கலந்துரையாடலில் கூட்டாட்சி சனநாயகத்திற்கான சபை பங்களிக்க இயன்ற போதும், தேர்தல் அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு கட்சிப் போராட்டமொன்றை நடத்த நேர்ந்தது. [2]அதாவது கருத்துகளையும் அரசியல் ரீதியான அழுத்தங்களையும் விடுக்கக் கூடிய மிகப் பெரிய கட்சிகள், குழுக்கள் என்பவற்றுடன் கட்சி கூட்டமைப்பை ஏற்படுத்த நேர்ந்தது என்பதே அதன் அர்த்தம். கட்சி அவ்வாறானதொரு பணியை நிறைவேற்றுவதற்கு 1988 ஜனாதிபதித் தேர்தலில் சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாருக்கு ஒத்துழைப்பு வழங்கிய எட்டுக் கட்சிகளுடன் கூடிய ஜனநாயக பொதுஜன முன்னணியின் தேர்தல் வெளியீட்டை வரைந்து உதாரணமாக விளங்கியது. எவ்வாறாயினும், பாரிய கட்சிகள் மற்றும் கூட்டமைப்புகளுடன் கூட்டமைவதைத் தவிர்க்க முடியாதவாறு, கொள்கைகள் மற்றும் மூலோபாயங்கள் தொடர்பான சவால்களை ஏற்படுத்துவதுடன், அரசியல் பங்குதாரர்களின் நடத்தையும் அவர்கள்

மீது அழுத்தம் விடுக்கும் ஆற்றல் ஆகிய இரண்டையும் அனுமானித்து, அவதானமிக்க சிரமமான தீர்மானங்களை எடுக்க நேர்ந்தது. 1993ல், பிரேமதாச ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டமைய வேண்டுமா? அல்லது குமாரதுங்கவின் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் கூட்டமைய வேண்டுமா? என்பதைத் தீர்மானித்தல் சிரமமானது என்பது நிரூபிக்கப்பட்டதுடன், பிரமேதாசவுக்கு ஒத்துழைப்பு வழங்க கட்சி தீர்மானித்த போது, சரா, மற்றும் திஸ்ஸ ஜயதிலக்க (பின்னர் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் சபையில் கடமையாற்றிய) உள்ளிட்ட எம்மில் பலர் கூட்டாட்சி கருத்து மேம்படுத்தல்களுக்கு வேறு வழிகளைத் தேடிக் கொள்வதற்கு கட்சியிலிருந்து விலகத் தீர்மானித்தனர்.

1993ல், கொழும்பு பல்கலைக்கழகத்தின் உப பீடாதிபதி, பேராசிரியர். ஜீ.எல். பீரிஸ், ஜயதேவ உயன்கொடவிடமும், என்னிடமும் பல்கலைக்கழகத்தில் கொள்கை ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வு மத்திய நிலையம் ஒன்றை (CEPRA – செப்ரா) கட்டியெழுப்பி வழிநடத்துமாறு கோரினார். துறைகளுக்கிடையிலான ஒத்துழைப்புகளுக்கு வசதிகளை வழங்குதல், அரசியலமைப்பு மற்றும் கொள்கை மறுசீரமைப்பு ஆராய்ச்சிகள் மற்றும் குறிப்பாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சிகளுடன், ஒன்றிணைந்து எச்.ஐ.வி/எயிட்ஸ் மற்றும் மனித உரிமைகள் நிகழ்ச்சியின் பிராந்திய மத்திய நிலையமாக செயற்படுவதே அதன் பொருளாக இருந்தது. 1992ல் ஐக்கிய இராச்சியத்திலிருந்து வந்த சராவிற்கு துரதிர்ஷ்டவசமாக தேசிய பல்கலைக்கழகக் கட்டமைப்பிற்குள் அர்த்தமுள்ள பணியொன்றுக்கான வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ள முடியாமற் போனது. ஆலோசகராக செப்ராவில் (CEPRA) இணையுமாறு நாம் அவருக்கு அழைப்பு விடுத்தோம். அதன்போது காணப்பட்ட முதல் சில வருடங்களில் பயனுள்ள வேலைகளை செப்ராவால் நிறைவேற்ற முடிந்தாலும்,[3] அரசியலுக்காக ஜீ.எல். பீரிஸ் பல்கலைக்கழகத்திலிருந்து விலகிய பின்னர், இலங்கையில் பல்கலைக்கழகக் கட்டமைப்பில் ஒரு பகுதியாகவுள்ள அடிக்கடி தோன்றும், தர்க்க ரீதியற்ற அதிகாரவாதத் தடைகளை தவிர்த்துச் செல்வதற்குத் தேவையான உயர் ஒத்துழைப்பு அதற்குக் கிடைக்காமற் போனதுடன், நாம் அனைவரும் எடுத்துக் கொண்ட முயற்சியின் அளவுக்கு பெறுபேறு கிடைக்கிறதா? என விரக்தியுடன் சிந்தித்தோம். 'பல்கலைக்கழகக் கட்டமைப்பிற்கு வெளியே மற்றும் அரச அதிகாரவாதத்திலிருந்து விடுபட்ட செப்ரா'வைப் பற்றி நாம் அப்போதுதான் சிந்தித்தோம்.

1994 அரசியல் மாற்றமொன்றின் ஆண்டாகவும் இருந்தது. ஜே.ஆர். ஜயவர்தன அரசாங்கம், சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் குடியுரிமை பறிக்கப்படுதல் மற்றும் 1982ல் சர்வஜன வாக்கெடுப்பு, உள்ளிட்ட அரசியலமைப்பு ரீதியான தந்திரங்களில் ஈடுபட ஆரம்பித்த காலங்களிலேயே லிபரல் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. எனவே, 1994ல் தேர்தல்கள் மூலம் ஆரம்பிக்கப்பட்ட ஜனநாயக மாற்றம் சிறந்த வளர்ச்சியாக இருப்பினும், அவ்வாறு செய்வதற்குப் பொருத்தமான காலம் உருவாகியிருப்பதும், அதற்கு முன்னர், இருபது, முப்பது வருட காலத்திற்குள், முக்கியமான பணிப்பொறுப்பை நிறைவேற்றிய, சிவில் உரிமைகள் இயக்கம், மோர்ஜ் மற்றும் மார்கா நிறுவனம் போன்ற பழைய சிவில் சமூக இயக்கங்களின் அழுத்தம் குறைந்து செல்லும் காலமாகவும் இருந்ததால் சிவில் சமூகத்தை வலுப்படுத்தும் முக்கியத்துவம் எம்மிடையே ஒரு பிரிவினருக்கு புரிந்தது.[4] இருபது வருடங்களுக்குப் பிறகு மீண்டும் திரும்பிப் பார்க்கக் கூடியதாக இருப்பதால், நான் அந்தத் தீர்மானம் சரியானது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக நினைக்கின்றேன்.

பல்கலைக்கழகத்தில் முழுநேர பணிக்குழுவில் உயனுக்கும் எனக்கும் இருந்த பிணைப்பின் காரணமாக புதிய இயக்கத்தின் முழுநேரப் பிரதானியாக சரா பொறுப்பேற்க வேண்டும் என்பது ஆரம்பத்திலிருந்தே தெளிவாக இருந்தது. முன்னோக்கிச் செல்ல வேண்டிய விதம் பற்றிய அறிவுறுத்தல்களைப் பெறுவதற்காக எம்மை விடவும் அனுபவமும் அறிவும் வாய்ந்த இருவரை நாடிய நாம், புதிய நிறுவனத்தின் பங்குதாரர்களாக மாறும்படி அவர்களுக்கு அழைப்பு விடுத்தோம். அவர்கள் சுனில் பஸ்டியனும் சார்ள்ஸ் அபேசேக்கரவும் ஆவர். அவர்களுடைய ஞானமும், வழிகாட்டலும், விலைமதிப்பற்றவை என்பதுடன் அவர்கள் பல ஆற்றல்களை குழுவை நோக்கிக் கொண்டு வந்தார்கள். அதன் பின்னர், நாம், சூழலுக்கு ஏற்ப, பல்வேறு வகையான நபர்களை பணிப்பாளர் சபைக்குள் உள்வாங்குவது முக்கியமானது என நாம் சிந்தித்தோம். 1990களின் ஆரம்பத்தில், பிரேமதாச ஜனாதிபதி அவர்கள் தலைமை வகித்த சர்வகட்சி மாநாட்டில், செயலாளராகப் பணியாற்றிய, திரு.பிரட்மண் வீரக்கோனுடன் பணியாற்றியிருக்கின்றோம். அவர் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இணக்கம் தெரிவிக்காவிடினும், எப்போதும், புரிதலுடன் செயற்பட்டதுடன் 1972ல் அரசியல் மயமாக்கத்திற்கு முன்னர் இருந்த உயர் குணப் பண்புகள் நிறைந்த வித்தியாசமான அரச உத்தியோகத்தராகத் திகழ்ந்தார். அவரைப் போன்றே அதனை அண்மித்த காலத்தில் ஐக்கிய இராச்சியத்திலிருந்து வருகை தந்த இளம் பெண் சட்டத்தரணியான சைரினி சிரிவர்தனவையும்[5], பணிப்பாளர் சபையில் இணைந்து கொள்ளத்

தூண்டினோம். இந்தக் குழு அதாவது, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், முதலாவது பணிப்பாளர் சபை, அதன் பின்னர் அவர்களது தொடர்புகளைப் பயன்படுத்திக் கொண்டு, இயக்கத்தின் பணிகளைத் தொடங்குவதற்காக முதலாவது பணிக்குழுவை எடுத்து வந்தது. 'செப்ரா'வுடன் இணைந்திருந்த பல நபர்களும் சேர்ந்து கொண்டனர். அல்தாப் ஹூசைன், கேதீஸ் லோகநாதன், சுந்தரி த அல்விஸ், சாவித்திரி வலத்தர மற்றும் பிந்திய காலத்தில், பிரதீப் பீரிஸ் ஆகியோரே அவர்களாவர். அவ்வாறு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆராய்ச்சி, ஆதரித்து வாதாடல், சட்டங்கள் மற்றும் கொள்கைகள் விமர்சனத்தின் போது ஆக்கபூர்வமான மாற்று வழிகளை வழங்குவது தொடர்பில், மேற்கொள்ளப்படும் முறைகளைத் தேடிச் சென்று இயக்கத்திற்கான மிகச் சிறந்த அடையாளத்தைக் கட்டியெழுப்பிக் கொள்வதற்கு பல விடயதானங்கள் 1990களின் பிந்திய காலத்தில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திற்குக் கிடைத்தன. [6]குமாரதுங்க ஆட்சி ஆரம்பித்த அரசியலமைப்பு மறுசீரமைப்புக் கருத்திட்டம் அதற்குப் பொறுப்பாக இருந்தவர்களின் பலவீனத்தாலும், சிந்தித்துப் பார்க்க முடியாத தலைமைத்துவத்தாலும், காமினி திசாநாயக்கவின் (அரசியலமைப்பு மறுசீரமைப்பு ரீதியான நிலைப்பாட்டில் இருந்த) பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்துக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க தலைமைத்துவத்தின் பொறுப்பற்ற பிரதிபலிப்பு மற்றும் நாட்டின் சட்டப் பிரசைகளின் பழமைவாய்ந்த மனநிலையாலும் தடைப்பட்டிருந்தது. பதின்மூன்றாம் திருத்தத்திற்கு அப்பால் சென்ற தீர்வுக்காக அரசாங்க பிரச்சார இயக்கத்தை நடத்துகையில், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மேலும் முன்னோக்கிச் சென்று, கூட்டாட்சி அரசாங்கம் ஒன்றுக்காக (1980களின் ஆரம்பத்திலிருந்து லிபரல் இயக்கம் செய்தவாறு) திறந்த ஆதரித்து வாதாடலை நடத்தியதுடன் கூட்டாட்சி பற்றிய மூட மற்றும் தவறான மனப்பாங்குகளுடன் மோதுவதற்குத் தயாரானது.[7] அரசியலமைப்பு ரீதியான நிலைப்பாடு மற்றும் தமிழ்க் கட்சிகள் அனைத்துமே பங்களிப்புச் செய்த திம்பு அடிப்படைக் கோட்பாடுகளுக்கிடையிலான இடைவெளியை குறைக்கின்ற அரசியலமைப்பு ரீதியான மாற்று வழிகளை ஆய்வு செய்வதற்கும் முக்கியமான பணி அதனூடாக நிறைவேற்றப்பட்டது.

ஜனாதிபதியாதிக்கம் மற்றும் அதிகாரவாதத்திற்கிடையிலான தொடர்பைச் சுட்டிக் காட்டுதல், பாராளுமன்ற நிறைவேற்றதிகாரத்திற்காக நிலையாக முன்னிற்றல், உரிமைகள் தொடர்பில் வலுவான சட்டம் மற்றும் சட்டங்கள் தொடர்பில் நீதிமன்ற மீளாய்வை மீண்டும் அறிமுகப்படுத்தி அரசியலமைப்பின் உன்னதத்தை ஏற்றுக் கொள்ளுதல் போன்றவை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அரசியலமைப்பு மறுசீரமைப்புக் கருத்திட்டத்தின் மூலம் வலியுறுத்தப்பட்டன. இவற்றில் பல 1980களிலும், 1990களின் ஆரம்பத்திலும் சர்வகட்சி மாநாட்டுப் பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்தும் லிபரல் இயக்கத்தின் நிலைப்பாட்டின் பகுதிகளாயின. இந்தக் காலத்தில் காணப்பட்ட அரசியலமைப்பு மறுசீரமைப்புச் செயற்பாட்டில், மூடப்பட்ட தேர்வத்தாட்சிக் குழுக்கள் அறைகளுக்குள்ளே அரசியலமைப்பு மறுசீரமைப்புக் கலந்துரையாடல்களை நடத்தும் அரசியற் குழுக்களில் எண்ணக்கரு ரீதியான பொருத்தமின்மைகள், வெளிப்படைத் தன்மையின்மை மற்றும் மக்கள் கலந்து கொள்ளாமை பற்றியும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கொள்கை ரீதியான விமர்சனத்தையும் செய்தது.

தன்னார்வ சமூக சேவை அமைப்புகளும் இலங்கை ஒலிபரப்பு அதிகாரச் சட்டங்கள் மீது விடுக்கப்பட்ட சட்டரீதியான சவால்கள், சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தற் கோட்பாடுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, கல்விச் சுதந்திரத்தை அடக்கக் கூடிய பல்கலைக்கழகச் சட்டத்தின் திருத்தங்களுக்கு எதிரான மனுக்களுக்கான வசதிகளை வழங்குதல் மற்றும் நாட்டின் சட்டத்தின் நிர்வாகத்திற்கு அழிவுமிக்க விளைவுகளை ஏற்படுத்தி 1999ல் சரத் சில்வா நீதியரசராக சர்ச்சைக்குரியவாறு நியமிக்கப்பட்டதை எதிர்த்தல் என்பவற்றின் மூலம் நிலையத்தின் சட்டரீதியான ஆதரித்து வாதாடற் பணிகள் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டன. இலங்கையில் ஐக்கிய அமெரிக்காவிலும் கனடாவிலும் சட்டத்துறை மாணவர்கள் அமைப்பில் பயிற்சியைப் பெற்று பொதுக் கல்விக்கான வழக்குக் குறிப்புகளையும் சட்ட விமர்சனங்களையும் எழுதி மூட் பொயின்ட் போன்ற வெளியீடுகளில் பிரசுரித்தது.

சானக்க அமரதுங்கவின் கவலைக்குரிய அகால மரணம் இடம்பெற்ற ஆண்டிலேயே, மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தை ஆரம்பித்தலை, நாட்டின் லிபரல் இயக்கத்தை பிரபலப்படுத்துவதற்கு பதினைந்து ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்த முயற்சியின் புதியதொரு கட்டமாக காண முடியும். இயக்கத்தை நெறிப்படுத்துவதற்கு அவர் கட்டியெழுப்பிய அமைப்புகள் காலத்தின் கோலத்தால் இயக்கத்தின் ஆரம்ப அடிப்படைக் கோட்பாடுகளைக் கைவிட்டுவிட்டு செயற்பட்ட புதிய தலைமைத்துவம் ஒன்றால் பொறுப்பேற்கப்பட்டதால் மாற்றுக்

கொள்கைகளுக்கான நிலையத்திற்கு சானக்க அமரதுங்கவின் மரணத்தின் பின்னர், பெரும் முக்கியத்துவம் உரித்தானது. தெளிவாகவே, அரசியல் அமைப்பானதும் அதனாலேயே மேலும் ஒட்டுமொத்த கூட்டாட்சி ஜனநாயகத்திற்கான சபை அல்லது லிபரல் கட்சியைப் போலன்றி, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திலிருந்து கூட்டாட்சி விழுமியங்கள் நிச்சயமாக யாப்பு ரீதியான, அரசியல் மற்றும் மனித உரிமைகள் பிரிவுகளிலிருந்தே வளர்க்கப்பட்டுள்ளன. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆரம்பிக்கப்படுதல் மற்றும் முதல் ஐந்து வருடங்களில் அதன் பணிகள், எதிர்காலத்திற்கான அடிப்படையொன்றை அமைப்பதில், மிக முக்கியமாக அமைந்தன. அக் காலகட்டத்தில் காணப்பட்ட அரசியல் சூழல், ஏனைய தொடர்புகள் மற்றும் தனிப்பட்டதும் அமைப்பு ரீதியானதுமான இரு முறைகளிலும், பல்வேறு நிலைமைகளின் கூட்டு என்பன அதனது தொடக்கத்தில் கணிசமான அளவு தாக்கத்தை ஏற்படுத்தின. அதன் பின்னர், அதன் முதல் ஐந்து ஆண்டுகளில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மிகச்சிறந்த நெறிமுறை மற்றும் தனித்துவத்தைக் கட்டியெழுப்பிக் கொண்டு ஆராய்ச்சிகள் மற்றும் ஆதரித்து வாதாடல் ஆகிய இரு துறைகளிலும், அதன் பணிகள் தொடர்பில் வலுவான நியாயப்படுத்தலைக் குறித்து நின்றதுடன், அதனூடாக அதன் பணிகளை உறுதிப்படுத்தி வளர்ப்பதற்கு இலட்சியங்களையுடைய இளம் மற்றும் சிறப்பு வாய்ந்த பணிக்குழுவொன்றை ஈர்த்தெடுத்துக் கொண்டது. புதிய நூற்றாண்டில் வளர்ச்சி பெறுவதற்கு அமைப்பின் அடிப்படை அவ்வாறுதான் இடப்பட்டது.

**அடிக்குறிப்புகள்**

1 மிகத் தெளிவாக 1920களின் இறுதிப் பகுதியில் ஸ்ரீமத் ஜேம்ஸ் பீரிஸ், ஏ. டபிள்யு. பெரேரா, ஜீ.ஜீ. பொன்னம்பலம், மற்றும் பெரியசுந்தரத்தின் தலைமையில் லிபரல் லீக் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பமே இதற்கு முந்திய லிபரல் இயக்கத்தைக் கட்டியெழுப்பும் சந்தர்ப்பமாகும். அவர்களில் பலர் 1931ல் முதலாவது தேசிய பேரவைத் தேர்தலில் லிபரல்வாதிகளாகப் போட்டியிட்டனர்.

2 இன்று இலங்கையில் அரசியல் விமர்சகர்களின் விமர்சனங்களுக்கு அடிக்கடி ஆளாகும், லிபரல்வாதத்திற்கு மிகக் கிட்டிய புகழ்பெற்ற லிபரல்வாதத்திற்கு எதிராக கூட்டாட்சி ஜனநாயகத்திற்கான சபை மற்றும் லிபரல் கட்சியானது, மறுசீரமைப்பு ரீதியான அல்லது திருத்தங்கள் ரீதியிலான லிபரல்வாதம் என்றே அழைக்கப்பட்டது. பிரித்தானிய மற்றும் கனேடிய லிபரல் கட்சிகளுக்கு சமமாக மறுசீரமைப்பு ரீதியான லிபரல்வாதம், வேறு விடயங்களிடையே சந்தைகளைக் கையாள்தல், நலன்புரி, பொருளாதார மீள்பகிர்வு மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு ஆகிய துறைகளில் அரசாங்கத்துக்கு முக்கியமான பணிப்பொறுப்பு உள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றது.

3 ஒப்பீட்டு ரீதியான அரசியலமைப்பு மற்றும் மோதல் மத்தியஸ்தம், எச்.ஐ.வீ எயிட்ஸ் மற்றும் அவதூறு மற்றும் அநீதிக்குட்படுத்தல் தொடர்பில் சட்டங்களும் மருத்துவத் தொழில் சார்ந்தோருடன் பணியாற்றுதல், அரசியலமைப்பின் 13வது திருத்தம், உள்ளூராட்சி மற்றும், அவசரகால சட்டம் மற்றும் மனித உரிமைகள் போன்றவற்றுடன் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பில், அரசியல் தலைவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் கல்வியியலாளர்களுடன் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல் என்பன அவற்றில் உள்ளடங்கின.

4 எந்தவொரு சிவில் சமூக அமைப்பிற்கும் தமது ஆயுட் காலமொன்று அதாவது தமது பணிகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய கால எல்லையொன்று உள்ளதா? என்பது தொடர்பில் ஆர்வம் காட்டுகின்ற சவால்மிக்க பிரச்சினை இதனூடாகத் தோற்றுவிக்கப்படுகின்றது.

5 1993ல் கொழும்பில் நடத்தப்பட்ட Law Asia மாநாட்டில் அறிக்கையிடுவோரின் குழுவில் அவர் பணியாற்றினார்.


6 அரச சார்பற்ற அமைப்புகள் எந்தவொரு செயற்பாட்டையும் “வெறுமனே விமர்சிப்பது மட்டுந்தான்’ என அடிக்கடி குற்றச்சாட்டு விடுக்கப்படுவதால், இது முக்கியமாக அமைந்தது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அதன் தொடக்கத்திலிருந்தே இந்த குற்றச்சாட்டை உணர்ந்திருந்தது.

7 அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளுதல், அதிகபட்ச அதிகாரம் பகிரப்படுதல் அல்லது அவ்வாறான வேறு மாற்றுப் பதங்களைப் பாவிப்பதற்குப் பதிலாக அதன் அனைத்து அம்சங்களுடனும், நேரடியாகவே இந்த ‘கெட்ட வார்த்தையை’ பாவிக்கின்ற தீர்மானம், 1981ல் கூட்டாட்சி சனநாயகத்திற்கான சபையும், 1996ல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும், தெரிந்தே எடுத்த தீர்மானமாகும். ‘1908-2008 இலங்கையில் அதிகாரப் பகிர்வுகள்’ வெளியீட்டில் ‘அதிகாரப் பகிர்வு’ என்ற பதத்தைப் பாவிப்பதற்கான தீர்மானம் அவ்வெளியீட்டிலிருந்து விரிவான அடிப்படையில் பிரச்சினைகள் மீளாய்வு செய்யப்பட்டதால் வேண்டுமென்றே எடுக்கப்பட்டது.

**ரொஹான் எதிரிசிங்க**

ரொஹான் எதிரிசிங்க கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் என்பதுடன், அரசியலமைப்புச் சட்டம் தொடர்பில் போதுமான அறிவுடையவர். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் ஆரம்பப் பணிப்பாளரும் ஆவார். சட்டம், அரசியலமைப்பு தொடர்பான கட்டுரைகள் மற்றும் பல படைப்புகளை உருவாக்கியுள்ளார். இப்போது ஐக்கிய நாடுகள் அமைப்பின் அரசியலமைப்புச் சட்டம் தொடர்பில் ஆலோசகராகக் கடமையாற்றுகின்றார்.

# சவால்மிக்க பயணத்தின் ஆரம்பம்



பேராசிரியர்
**ஜயதேவ உயன்கொட**

1996ல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆரம்ப உறுப்பினர்களில் நானும் ஒருவனாக இருந்தேன். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தை ஆரம்பிப்பதில் குறிப்பிட்ட பின்னணியொன்று காணப்பட்டது. ஆரம்ப உறுப்பினர்களில் மூவரான, பாக்கியசோதி சரவணமுத்து, ரொஹான் எதிரிசிங்கவுடன் நானும், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கொள்கை ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வு மத்திய நிலையத்தில் (CEPRA-செப்ரா) பணியில் ஈடுபட்டிருந்தோம். நானும் ரொஹானும் அங்கே பணிப்பாளர்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, “சரா” அங்கு ஆலோசகராகவும், சிரேஷ்ட ஆராய்ச்சியாளராகவும் பணியாற்றினார். பின்னர் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் சமாதான பகுப்பாய்வுப் பிரிவின் பிரதானி மற்றும் பணிப்பாளர் சபையின் உறுப்பினராகப் பணியாற்றிய கேதீஸ் லோகநாதனும் CEPRA வில் சிரேஷ்ட ஆராய்ச்சியாளராகப் பணியாற்றினார். சார்ள்ஸ் அபேசேக்கர, சுனில் பஸ்ட்டியன், சிரீன் சிரிவர்தன மற்றும் பிரட்மன் வீரக்கோன் ஆகியோர் ஏனைய ஆரம்பகால உறுப்பினர்களாவர். சுனிலும் - சிரீனும் கூட CEPRA வில் எமது ஆராய்ச்சிகள் மற்றும் வளவாளர் குழுவில் இருந்தனர். இப்போது அரச சேவையில் ஓய்வு பெற்றுள்ள பிரட்மன் CEPRA ஊடாக ஏற்பாடு செய்யப்பட்ட மாநாடுகளிலும் பேச்சுவார்த்தைகளிலும் இடைவிடாது கலந்து கொண்டவராவார்.

CEPRA வில் நாம் ஆதரித்து வாதாடுதல், ஆராய்ச்சிகள் மற்றும் அறிவைப் பகிர்தல் உள்ளிட்ட கொள்கை விடயங்களில் ஓரளவு ஆழமான பணிகளை மேற்கொண்டிருந்தோம். CEPRA வின் செயற்பாட்டு விடயப் பரப்பை விரிவாக்கும் தேவை எமக்கு ஏற்படும் போது, எமது இலக்குகளை அடைவதற்கு சில நிருவாக ரீதியான தடைகள் காணப்படுவது அனுபவங்களின் மூலம் புரிந்தது. அரச பல்கலைக்கழகமொன்றுடன் தொடர்புபட்ட நிறுவனம் என்ற வகையில், இந்தத் தடைகள் நிறுவன ரீதியான, அரசியல் மற்றும் முகாமை வடிவத்தைக் கொண்டிருந்தன.

சனநாயகம், மனித உரிமைகள், சமாதானத்தைக் கட்டியெழுப்புவதிலும் செயற்படுத்துவதிலும் நேரடியாக அர்ப்பணிப்புச் செய்த மற்றும் அரச சார்பற்ற மூலங்களிலிருந்து நிதி உதவி பெறுகின்ற சிவில் சமூக அமைப்பு என்ற

வகையில், புதிய சுயாதீன நிறுவனமொன்றை அமைப்பதே எமது கருத்தாகவிருந்தது. 1996ல் அதற்கேற்பவே, கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் கொழும்புக்குள்ளே, ஃபிளவர் வீதியில், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அலுவலகம் உருவாகியது. இவ்வாறு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஒரு வகையில், CEPRA வில் நாம் ஆற்றிக் கொண்டிருந்த சில பணிகளையே மனித மற்றும் பௌதீக ரீதியான வளங்களுடன் மேலும் பரந்த அளவில் ஆற்றிச் சென்றது.

1990களின் ஆரம்ப காலம் வளர்ச்சியடைந்த சிவில் சமூக செயற்பாட்டில் காணப்பட்ட சில இடைவெளிகளை நிரப்பும் நோக்குடனேயே மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தாபிக்கப்பட்டது. மிகச் சொற்ப எண்ணிக்கையைத் தவிர, பெரும்பாலான சிவில் சமூக இயக்கங்கள், தமது ஆதரித்து வாதாடுதல் மற்றும் மக்கள் கல்வி நடவடிக்கைகளில் ஆராய்ச்சிகள்,

நூல் வெளியீடுகள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுடனான பேச்சுவார்த்தைகளையும் உரையாடல்களையும் தமது நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கமாலே தமது பணிகளில் ஈடுபட்டிருந்தனர். ஆக்கபூர்வமான சிவில் சமூக இடையீடுகளுக்கான பாரிய வாய்ப்பு இருந்த பொதுவான அரசியற் சூழலில், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இச் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளித்தது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் அமுல்படுத்தப்பட்ட புதிய மூன்று செயற்பாடுகளாவன (அ) தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கும் அறிக்கையிடுவதற்கும் பிரிவொன்றை நிறுவுதல் (சீஎம்ஈவீ). (ஆ) சட்ட மூலங்களில் அரசியலமைப்புக்கு ஏற்ற தன்மை, மற்றும் அரசாங்கத்தின் சில செயற்பாடுகளின் சட்டரீதியான தன்மையை நீதிமன்றத்தின் முன்னிலையில் சவாலுக்குட்படுத்தல் (சட்டப் பிரிவு) மற்றும் (இ) சமகால ரீதியாக முக்கியத்துவம் பெறும் கொள்கைகள் மற்றும் அரசியல் பிரச்சினைகள் தொடர்பில் காணப்படுகின்ற, மக்களது கருத்துகள் தொடர்பில் இடைவிடாது ஆய்வுகளை நடத்துவதும், அப்பிரிவின் ஊடாக ஆய்வறிக்கைகளை வெளியிடுவதுமாகும் (சோஷல் இன்டிகேட்டர்). மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் அதன் சட்டப் பிரிவு இலங்கையில் மக்களுக்குச் சாதகமான வழக்குத் தாக்கல் செய்யும் முன்னோடிகளாக மாறின. தேர்தல் வன்முறைகள் மற்றும் வெளியீடுகள் அரசியற் தீர்வொன்றின் மூலம், இனரீதியான மோதல்களைத் தீர்ப்பதற்கு அரசியலமைப்பு மறுசீரமைப்பிற்கான செயற்பாடுகளைப் போன்றே, நீதிமன்றத்தின் முன்னால், அரசாங்கத்திற்கு சவால் விடுப்பதனாலும், சில அரசாங்கங்களினதும் அரசியல்வாதிகளினதும் கோபம் தூண்டப்பட்டது. அதன் பெறுபேறாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும், அதன் நிறைவேற்றுப் பணிப்பாளரும், அச்சுறுத்தல்களுக்கும், பொலிஸ் விசாரணைகளுக்கும், வெறுக்கத்தக்க ஊடகத் தாக்குதல்களுக்கும், வெறுப்புப் பேச்சுகளுக்கும், அடிக்கடி ஆளாக நேர்ந்தது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினதும், அதன் நிறைவேற்றுப் பணிப்பாளரதும், மிகச்சிறந்த அனுபவங்கள் ஊடாக சமகால இலங்கையின் சிவில் சமூக இயக்கங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் சில சவால்கள் அடையாளங்களாக மாறின. சர்வோதய இயக்கமும் அதன் தலைவர் கலாநிதி ஏ.ரீ. ஆரியரத்ன அவர்கள் அப்போதிருந்த ஜனாதிபதி ஆர்.பிரேமதாச அவர்களால் பொலிஸ் விசாரணைகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றின் விசாரணைகள் ஊடாக சுமார் இரண்டு வருட காலம் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டார். சிங்கள இனவாத அரசியல் மற்றும் கல்வியியலாளர்களின் குழுக்களைப் போன்றே ஊடகமும் 1990களின் ஆரம்பத்திலிருந்தே, சிவில் சமூக குழுக்களுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் எதிராக அவர்கள் துரோகிகள், வெளிநாட்டு அல்லது எல்.ரி.ரி.ஈ. முகவர்கள் என பகிரங்கமாகப் பெயர் குறித்து தொடர்ச்சியான பிரச்சாரங்களை எடுத்துச் சென்றன. அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பில், முறைசாராத அரச சார்பற்ற இரண்டு ஆணைக்குழுக்களும், பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டன. இவ்வாறன பல ஆரம்பங்களுக்கு தவறாத பிரதான இலக்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மாறியிருந்தது.

முரண்பாடுகளுக்கு, பன்முகத் தன்மைக்கும் பன்மைத்துவத்திற்கும் இடமளிக்காத, பொறுமையற்றதும் வெறுப்பை உருவாக்குவதுமான தேசியவாத கொள்கைகளின் தொடர்ச்சியாக, மனித உரிமைகள் மற்றும் செயல்ரீதியான அரச சார்பற்ற நிறுவனங்களால் இவ்வாறான சிங்கள தேசிய வாதத்தின் எதிர் பிரச்சாரங்களை அது புரிந்துகொள்ளுகின்ற ஒரு வகையாக உள்ளது. அரசியல் கருத்தியலும், அரச கொள்கைகள் துறையில், அரசியற் கட்சிகளை பேணிச் செல்வதற்காக வகிக்கின்ற ஆதிக்கத்திற்கும், சிவில் சமூகச் செயற்பாட்டை ஒரு அச்சுறுத்தலாகக் காணுகின்ற தேசியவாத அரசியற் கட்சிகள் வெளியிடுகின்ற பாதுகாப்பற்ற தன்மைக்கும் அதுவே குறிப்பிட்ட காரணமாகும்.

அரசியல், அரசியலமைப்பு ரீதியானதும் அரச கொள்கைப் பிரச்சினைகள் தொடர்பான மக்கள் கலந்துரையாடல்களை தரநியம ரீதியாக வளர்ப்பதும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் செய்து வருகின்ற மேலுமொரு பிரதான பணியாகும். மேலே தரநியம ரீதியான வெளியீடுகள், சமகால அரசியலும் கொள்கைப்

பிரச்சினைகள் தொடர்பில் தொடர்ச்சியாகவும் சிறப்பாகவும் சிந்தித்துச் செய்யப்படுகின்ற ஊடக அறிவித்தல்கள், நிபுணர்களைப் போன்றே பொதுமக்களிலிருந்தான உறுப்பினர்களினதும் விரிவான பங்கேற்புடன் கூடிய மாநாடுகள் போன்றவை, மிகச்சிறந்த நிறுவன ரீதியான அடையாளமொன்றைக் கட்டியெழுப்புவதற்கும் பேணிச் செல்வதற்கும், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திற்கு வாய்ப்பளித்த செயற்பாடுகளாகும்.

வெளியீட்டு நிகழ்ச்சி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் மேலுமொரு பிரதான பணியாகும். உள்ளடக்கத்தையும் வெளியீட்டின் தரத்தையும் போன்றே நாட்டின் அரசியற் கலந்துரையாடலில் முக்கியத்துவம் வாய்ந்த, மிகவும் சமகால அரசியல் மற்றும் கொள்கைப் பிரச்சினைகள் மீதான அவற்றின் கருப்பொருள் ரீதியான ஏற்புடைத் தன்மை ஆகிய இரு முறைகளிலும் உயர் தரத்துடன் கூடிய வெளியீடுகளாக அமைவது அதன் விசேட அம்சமாகும். மூன்று தொகுதிகளைக் கொண்ட 'இலங்கை குடியரசுக்கு 40 வருடங்கள் : அரசியலமைப்பு வரலாறு, கோட்பாடும் பாவனையும் பற்றிய பிரதிபலிப்புகள் (2012)' என்னும் வெளியீடு, இலங்கையின் அரசியல் மற்றும் அரசியலமைப்பு ரீதியான பிரச்சினைகள் பற்றிய இலங்கையராலும் வெளிநாட்டு அறிஞர்களாலும் எழுதப்பட்ட உயர்மட்ட விமர்சன ரீதியான ஆய்வுகளின் கூட்டாகும்.

இதற்கிடையே கொழும்பை மையப்படுத்திய, நகரம் சார்ந்துள்ளதும் மேட்டுக் குடியினரைச் சார்ந்தது எனவும் விடுக்கப்பட்ட விமர்சனங்களுக்கு ஆக்கபூர்வமாக பதிலளிக்க முடிந்தமை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினதும் அதன் தலைமைத்துவத்தினதும் கௌரவத்திற்குக் காரணமானது. இது அவர்களின் கவனத்தை வேறு புறமாகத் திருப்புபவர்களால் சிவில் சமூக அமைப்புகளுக்கு எதிராக பொதுவாக விடுக்கப்படுகின்ற குற்றச்சாட்டாகியுள்ளது. கொழும்பை அடிப்படையாகக் கொண்ட கொள்கை வகுப்பாளர்கள், தொழில் ரீதியான சமூகம், சர்வதேச செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கல்வியியலாளர்களுடன் பணியாற்றுகிறார்கள் என்பதைக் காண முடிவதால், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இக்குற்றச்சாட்டுக்கு இரையாகும் வாய்ப்பு அதிகரித்தது. மனித உரிமைகள் மற்றும் சமாதானக் கல்வி, நல்லிணக்கம், மக்கள் மட்டத்தில் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் தகவல்களுக்கான பிரசைகளின் உரிமை என்பவற்றின் போது அடிமட்டத்திலான சமூக செயற்பாடுகளில் ஈடுபட்டு மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் செயற்படுகிறது என்பது விமர்சகர்களுக்கு குறைவாகத் தெரிந்த ஒருவிடயம். இலங்கையில் கிராமிய மாவட்டங்களில் சிங்களம் மற்றும் தமிழ் பேசும் மக்களுடன் பிரசைகளை வலுவூட்டும் மாற்றுக்கொள்கை நிலையத்தின் மக்கள் கல்வி நிகழ்ச்சிகளில், மாற்றுக்கொள்கை நிலையத்தின் பணிக்குழுவின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான லயனல் குருகே முன்னோடிப் பணியை நிறைவேற்றினார்.


இறுதியாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராக கலாநிதி சரவணமுத்து வழங்கிய அத்தியாவசிய தலைமைத்துவத்திற்கு அங்கீகாரம் அளிப்பது அவசியமாகும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திற்கும் அர்ப்பணிப்புடன் கூடிய அதன் பணிக் குழுவிற்கும், அவர் திறமையாகவும், பொறுமையுடனும் துணிச்சலாகவும் நீண்டகால குறிக்கோளுடனும் தலைமைத்துவத்தை வழங்கினார். அதனூடாகப் பல எதிர்ப்பு வட்டங்களுடன் வெற்றிகரமாகக் கொடுக்கல்வாங்கல் செய்வதற்கும் அதன் ஆரம்ப அடிப்படைக் கோட்பாடுகள் அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்கள் எதற்கும் பங்கம் விளைவிக்காமல், தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் முடிந்தது. அவ்வாறு கலாநிதி. சரவணமுத்து அவர்களின் முன்மாதிரியான சிவில் சமூக நிறுவனங்களைக் கட்டியெழுப்புபவரும், சமூக செயற்பாட்டுத் தலைவருமாவார். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், அவரது பெயருடனும், தனித்தன்மையுடனும் மிகவும் தனித்துவம் வாய்ந்தது என்ற விடயம் மனச்சாட்சியுள்ள பிரசைகள் தலைவரான அவரது தனித்தன்மைக்கும் வெற்றிகளுக்கும் உதவின.

---

**பேராசிரியர் ஜயதேவ உயன்கொட**

கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல் அறிவியல் மற்றும் மக்கள் கொள்கை ஆய்வுகள் துறையின் முன்னாள் சிரேஷ்ட பேராசிரியராவார். ஒருகாலத்தில் இடதுசாரி அரசியற் செயற்பாட்டாளராக இருந்ததுடன், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆரம்ப உறுப்பினரைப் போன்றே பணிப்பாளர் சபை உறுப்பினராகவும், இலங்கை மன்றத்தின் முன்னாள் தவிசாளராகவும் பணியாற்றினார். 'பிரவாத' சஞ்சிகையின் இணை ஆசிரியராக இருப்பதுடன் அரசியல் விஞ்ஞான விடயம் தொடர்பில் சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பல புத்தகங்களையும் எழுதியுள்ளார். அவ்வாறே யாழ்ப்பாண பல்கலைக்கழகப் பேரவையின் உறுப்பினராகவும், தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி அலுவல்கள் சபையின் தலைவராகவும், தேசிய கல்வி நிறுவகத்தின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். அவர் திரைப்பட மற்றும் கலை விமர்சகருமாவார்.

# முன்னோக்கிய இருபத்தைந்து வருட இடையீடுகள்



திஸ்ஸ ஜயதிலக்க

எனது நண்பர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவின் தலைமையில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வினைத்திறன் மிக்கதும் பயனுள்ளதுமான இருபத்தைந்து வருட சேவை இந்த ஆண்டில் பொறிக்கப்படுகின்றது. நானும் சில ஆண்டுகள் நிருவாக சபையில் கடமையாற்றியுள்ள மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது, நாட்டில் சனநாயக ரீதியான ஆட்சி மற்றும் மோதல் பரிணாமத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான சுயாதீனமானதும், கட்சி சார்பற்றதுமான ஒரு அமைப்பாகும். 'மோதல்களைத் தீர்த்தல் மற்றும் சனநாயக ரீதியான ஆட்சிக்கான வன்முறையற்ற மாற்றுக் கொள்கைகள் மற்றும் இலட்சியங்களை நோக்காகக் கொண்டு முன்னிற்கின்ற இடையீடுகளுக்கான' மக்கள் கொள்கைத் துறையில் செயற்படுவதையே அது அதன் அடிப்படை வகிபாகமாகக் காணுகின்றது.

இருபத்தைந்து வருட காலத்திற்குள், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மரபுவழிப்பட்ட நிலைகளுக்கு அடிபணியாது, தவறைப் பார்த்த இடத்தில் வெளிப்படுத்தி, தாக்குதல் நடத்தி, அது சீர் செய்யப்படுவதற்காக ஆட்சிகளுக்கு அழுத்தம் விடுக்கும் வகிபாகத்தை நிறைவேற்றியது. அது பாரம்பரியமான அரசியல் முறைகளைத் தாக்கியது. அரசாங்கத்தை வகைபொறுப்புக் கூற வேண்டிய நிலைக்கு மாற்றியது. சனநாயக ரீதியான ஆட்சிக்குத் தீங்காக அமையும் அரசியலமைப்புகளுக்கு சவால் விடுத்தது. அனைத்து பிரசைகளினதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்குமான தீர்மானங்களை எடுப்பதற்கு வன்முறையற்ற முறையில் அழுத்தங்களை விடுத்தது. அவ்வாறு செய்கையில், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 'நபர்களை விட அரசியற் காரணிகளுக்காக முன்வந்தது.

அந்த நோக்கங்களை அடைகின்ற போது, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிகள் கீழ்வரும் அடிப்படைத் துறைகளைச் சுற்றி அமைந்திருந்தது.

அ. சமூக பிரச்சினைகள் மற்றும் மாற்றமொன்றுக்காக முன்வருவதற்கு விழிப்புணர்வைக் கட்டியெழுப்புவதற்கு உள்ளூராட்சி மற்றும் சமூகம் சார்ந்த அமைப்புகளுடன், நெருக்கமாகப் பணியாற்றி ஆற்றல்களைக் கட்டியெழுப்புதல்

ஆ. அடிப்படை உரிமைகளைப் போன்றே, அரசியலமைப்புகளை நிறைவேற்றுவதற்கு முன் மீளாய்வு செய்யப்படுவதற்கான சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் மக்களுடைய தேவைகளுக்காக சட்ட நடவடிக்கை எடுத்தல்.

இ. பிரதான அலையில் உள்ள பிரசைகளின் குறிப்பாக புறக்கணிக்கப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்ட பிரசைகளின் பல்வேறு வகையான கருத்து வெளிப்பாடுகளுக்காக மாற்றம், விகல்ப்ப மற்றும் கிரவுண்ட்வீவ்ஸ் (Ground views) ஊடாக வாய்ப்பளித்தல்.

ஈ. மக்கள் கொள்கைகளைப் பகுப்பாய்வு செய்யும் ஆய்வுகள் மற்றும் கருத்தியல்களுக்காக முன்வருதல். சனநாயக ரீதியான ஆட்சியில், குறிப்பாக சமாதானம், மற்றும் மனித உரிமைகள் உள்ளடக்கப்பட்ட கொள்கைகளை இனங்காண்பதும் மாற்றுக் கருத்துகளை முன்வைப்பதும்.

உ. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் மீளாய்வுப் பிரிவு, Social Indicator ஊடாக மக்கள் கருத்துக் கணிப்புகளை நடத்துதல். இந்த நிறுவனம் அவ்வப்போது பல சமூக அரசியல் பிரச்சினைகள் பற்றி, மக்கள் கருத்துக் கணிப்புகளை நடத்துகின்றது. இந்த மக்கள் கருத்துக் கணிப்புகளில் கண்டுபிடிப்புகள், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் மீளாய்வு நிகழ்ச்சி நிரலை வலுப்படுத்துவதற்காக ஈடுபடுத்தப்படுகின்றன. சோஷல் இன்டிகேட்டரானது பொது மக்களை தமது நாளாந்த வாழ்க்கையில் தாக்கம் செலுத்தும் பிரச்சினைகள் தொடர்பில் தமது குறைநிறைகளை வெளியிடுகின்ற ஊடகமுமாகும். இந்த வகையில், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சோஷல் இன்டிகேட்டரானது, இரண்டு தேர்தல்களுக்கு இடைப்பட்ட காலத்தில் இலங்கைப் பிரசைகளுக்கு கொள்கை வகுப்பாளர்கள் மீது அழுத்தம் விடுக்கின்ற வலுவூட்டல் வழியாகவும் இருந்தது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், சுதந்திர ஊடக அமைப்பு மற்றும் அரசியல் வன்முறைக்கு எதிரான கூட்டமைப்புடன் கட்டியெழுப்பப்பட்ட தேர்தல் வன்முறைச் செயற்பாட்டு கண்காணிப்பு மத்திய நிலையத்திற்கான (CMEV) செயலகமாகவும் செயற்படுகின்றது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் மொழிபெயர்ப்புப் பிரிவு விபாஷா என்ற பெயரில் நிகழ்ச்சியொன்றை நடத்தியதுடன் அதில் மொழிபெயர்ப்புப் பயிற்சியும் மொழிபெயர்ப்புக் கல்வி பற்றிய சான்றிதழையும் வழங்கியது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கடந்த கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளிடையே கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களும் அடங்கும்.

- சமாதானச் செயற்பாடுகளில் தாக்கம் ஏற்படுத்துகின்ற காரணிகளை மேற்பார்வையிடல்
- தேர்தல்களும் சிறுபான்மையும்: தற்போதைய பிரச்சினைகளும் எதிர்காலத்திற்கான மாற்றீடுகளும்.
- இலங்கையில் அதிகாரத்தைப் பகிர்தல், அரசியலமைப்பு மற்றும் அரசியற் கட்டுரைகள் சார்ந்த ஆவணங்கள். 1926-2008
- வீட்டுக்கு வெளியே அமைந்த வீடு: இலங்கையில் சிறுவர்கள், இடம்பெயர்தல், மற்றும் பாதுகாப்பு. அடுத்தது என்ன?
- திருகோணமலை உயர்பாதுகாப்பு வலயமும் விசேட பொருளாதார வலயமும் 2008
- இலங்கையில் எச்.ஐ.வி/எயிட்ஸ்: கொள்கைகள் மற்றும் பயன்பாடு பற்றிய குறுக்கு வெட்டு 2007

பல சமூக, அரசியல் பிரச்சினைகள் தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பல வெளியீடுகள் காணப்படுவதுடன், அவை அனைத்தும் உயர் தரத்தினை உடையவை. அவற்றில் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- கோவிட் நோய்க்கான சிகிச்சை, நோயை விடவும் மோசமானதா? இலங்கையில் கோவிட் கட்டுப்பாடு தொடர்பான பிரதிபலிப்பு (2021) - பதிப்பாசிரியர் பிரதீப் பீரிஸ்
- 20வது அரசியலமைப்புத் திருத்தம் பற்றிய சிறு வழிகாட்டல். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வெளியீடு.
- நிலைமாறுகால நீதி: வாக்குறுதிகளுக்கு அப்பால் (2017) - பதிப்பாசிரியர்: பவானி பொன்சேக்கா
- 19வது அரசியலமைப்புத் திருத்தம் - உள்ளடக்கமும் சூழலும் (2016) - பதிப்பாசிரியர்: அசங்க வெலிக்கல
- இலங்கையில் ஜனாதிபதி முறையை மாற்றியமைத்தல்/ஆதாரம், கேள்விகள் மற்றும் எதிர்பார்ப்புகள் - தொகுதி 1 மற்றும் 2 (2015) - பதிப்பாசிரியர்: அசங்க வெலிக்கல
- 40 ஆண்டுகளைக் கடக்கும் இலங்கைக் குடியரசு: அரசியலமைப்பு வரலாறு, கோட்பாடு மற்றும் பயன்பாடு 1ம் மற்றும் 2ம் தொகுதிகள் (2012) - பதிப்பாசிரியர்: அசங்க வெலிக்கல
- 18வது அரசியலமைப்பு/உள்ளடக்கமும் செயற்பாடும் (2011) - பதிப்பாசிரியர்: ரொஹான் எதிரிசிங்க மற்றும் அருணி ஜயகொடி

- மக்கள் கொள்கைத் துறையில், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் மிக அண்மைக்கால பிரதிபலிப்புகளை பின்வருமாறு குறிப்பிடலாம்.

- உத்தேச நிதிச் சட்டத்திற்கு (2021) எதிராக உயர் நீதிமன்றத்தில், மனுத் தாக்கல் செய்தல்.(SC28/21)

- சிறுவர் உழைப்பு கடத்தல், மற்றும் பாலியல் சுரண்டல் தொடர்பான விடுவிப்பை முடிவுக்குக் கொண்டுவருமாறு சிவில் சமூகத்திடமிருந்து கோருகின்ற அறிக்கை

- இலங்கையில் சுபீட்சத்தின் நோக்கு: வழங்கப்பட்ட வாக்குறுதிகள் பற்றி விமர்சனங்கள் மற்றும் தற்போதைய போக்குகள் (2021)

- 2021 துறைமுக நகரச் சட்டம் தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கருத்து

- ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவும் அரசியல் அங்கீகாரங்களும் பற்றிய விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு பற்றிய கருத்து (2021)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் செயற்பாடுகளைக் கருத்திற் கொள்ளும் போது அதன் ஆரம்பம் முதல் 25 வருடங்களில் இலங்கையில் சனநாயக ஆட்சி, சமாதானம், மனித உரிமைகள் மேம்பாட்டுக்காக வழங்கிய பங்களிப்பு என்பன அளப்பரியன. அதற்கு எப்போது தாம் முன்வந்த நோக்கங்களுக்கு சாதகமாக அல்லாத சமூக அரசியல் சூழலொன்றில் செயற்பட நேர்ந்ததைக் கருத்திற் கொள்ளும் போது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வெற்றிகள் பாராட்டுக்குரியன. தாம் முன்வந்த நோக்கங்களை நிறைவேற்றுகையில் பல சந்தர்ப்பங்களில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அதிகாரவாத அரசாங்கத்தின் அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள், கட்டாயப்படுத்தல்கள் மற்றும் பகைமைகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. இந் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு கடந்த காலங்களில் மரண அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டன. வேறு யாராக இருந்தாலும், அது ஆண்களோ பெண்களோ முன்வைக்கப்பட்ட தடைகளின் முன்னிலையில் தமது பணிகளைக் கைவிட்டு விடக் கூடும். ஆனால், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் அதன் பணிக்குழுவும் அவற்றுக்கு துணிச்சலாக முகங்கொடுத்தன. மிகச் கடினமான நிலைமைகளின் கீழும், கூட்டாட்சி சனநாயகத்தின் பெறுமதிகளுக்காக அச்சமின்றி முன்வந்து தமது கருத்தியலை சளைக்காது முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான தைரியம் அவர்களிடம் இருந்தது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திற்கு மீண்டுமொரு முறை தற்காலத்தில் காணப்படுகின்ற சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காகத் தமது வளங்களை ஒதுக்க நேர்ந்தது. தற்போதைய அரசாங்கம் அதற்கு முன்னிருந்த அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட சில சனநாயகரீதியான திருத்தங்கள் மீளப் பெறப்பட்டுள்ளன. 20வது அரசியலமைப்புத் திருத்தத்தால் மீண்டுமொரு முறை நிறைவேற்று ஜனாதிபதி முறையிலே அதிகாரங்கள் குவித்துக் கொள்ளப்பட்டன. பயங்கரவாத ஒழிப்புச் சட்டங்களை தொடர்ந்தும் பயன்படுத்துதல், நிருவாகத்தை இராணுவ மயமாக்குதல் மற்றும் நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மையை பலவீனப்படுத்தியது என்பவற்றால் சட்டத்தின் ஆதிக்கமும் சனநாயக ஆட்சியின் ஏனைய அடிப்படை சுதந்திரங்களும் ஆபத்துக்குள்ளாக்கப்படுகின்றன.

இந்தச் சூழலில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் போன்ற அமைப்புகளுக்கு இலங்கையில் சனநாயகம் மற்றும் சனநாயக ரீதியான நிறுவனங்களைப் பாதுகாக்கும் போராட்டத்தை ஆரம்பிக்கவும், அனைத்துப் பிரசைகளின் சமத்துவத்திற்காக போராடவும், சட்டத்தின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்தவும், இலங்கையின் அரசாங்கத்திற்கு அழுத்தம் விடுக்கவும் நேரலாம்.

இதுவரை இந்த அமைப்பு கைப்பற்றியுள்ள வெற்றிகளுக்கு நான் வாழ்த்துத் தெரிவிக்கின்றேன். எதிர்வரும் ஆண்டுகளிலும் கூட்டாட்சி சனநாயக இலட்சியத்தை வலிமையுடன் தூக்கி நிறுத்தும் முக்கிய வகிபாகத்தை நிறைவேற்றும் என நம்புகின்றேன்.

---

**திஸ்ஸ ஜயதிலக்க**

U.S. Sri Lanka -Fullbright ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளராகப் பணியாற்றியுள்ளார். இனங்கள் தொடர்பான ஆய்வுக்கான சர்வதேச நிலையம் மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் முன்னாள் பணிப்பாளர் சபை உறுப்பினராவார். ஆங்கிலம் மற்றும் அமெரிக்க இலக்கியம் தொடர்பில் பல பல்கலைக்கழகங்களில் கற்பித்துள்ள அவர், வட கரோலினா வேக் பொரஸ்ட் பல்கலைக்கழகத்தில் ஆங்கில முதுமானிப் பட்டத்தையும் மசச்சுசெட்டில் ஸ்மித் பல்கலைக்கழகத்திலிருந்து பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவையும் பெற்றுள்ளார்.

# கலைத்துறைக்கு வழங்கிய பங்களிப்பு



**பேராசிரியர் சந்திரகுப்த தேநுவர**

இலங்கையில் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவையொட்டி இச்சிறிய குறிப்பை எழுதுவது மிகவும் மகிழ்ச்சியளிப்பதாகவுள்ளது. ஒரு கலைஞனாகவும், சமூகச் செயற்பாட்டாளன் என்ற வகையிலும், அரசியல் நிச்சயமின்மையும், பீதியும் என்னைச்சுற்றி இருந்தவேளையிலும், பொதுமக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் இருந்தமை எனக்கு ஆறுதலளிப்பதாகவிருக்கின்றது. நான் பின்னோக்கிப் பார்க்கையில், 1997 இலிருந்து கொண்டாடப்படமுடியாத கறுப்பு ஜூலை படுகொலைகளை எனது வருடாந்த கட்புல மொழிக் கலை இடையீடுகள் நினைவுபடுத்துகையில், மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையமும் இருப்பது எனக்கு மகிழ்ச்சியான ஒரு விடயமாகும். எவ்வாறாயினும், இலங்கையில் நிறுவனங்களை வலுப்படுத்தவும், நல்லாட்சி மற்றும் முரண்பாட்டு நிலைமாற்றமான இயலுமையைக் கட்டியெழுப்பவும் CPA 1996 இல் தாபிக்கப்பட்டமையால், கலையின் பெறுமதியையும், சமூகத்தில் அதன் பாத்திரம் மற்றும் தாக்கம்குறித்தும் அது நன்கு விளங்கிக்கொள்ளுகின்றது. நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்துவின் அலுவலகத்தைச் சுற்றிக காணப்படும் கலைப்படைப்புகள் இதற்குச் சான்றாக அமைந்துள்ளன. 1997 இலிருந்து இன்னமும், ஒவ்வொரு வருடமும் அதன் பதவியினர் எனது கலைக்கண்காட்சிகளுக்கு வருகின்றனர். அது இந்த அமைப்பின வித்தியாசத்தைக் காண்பிக்கின்றது. ஒரு கலைஞன் மற்றும் சமூகச் செயற்பாட்டாளன் என்றவகையில், அழகு மற்றும் வகையுதாரணமான சுவர் அலங்கார அம்சங்கள் என்பவற்றுக்கு அப்பால் கலைப்பணிகளை அங்கீகரிக்கும் ஒருசில பார்வையாளர்களாவது இருப்பது தொடரும் பணிகளுக்குத் தீர்மானகரமானதென்று நான் நம்புகின்றேன்.

தனது முதனிலைக் குறிக்கோள்களைத் தொடர்ச்சியாக முன்னெடுக்கும் CPA கலைக்கும், சமூகப் பிரக்ஞைமிக்க கலைச்செயற்பாடுகள், கண்காட்சிகள், செயலமர்வுகள் மற்றும் கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்வதற்கும் ஆதரவளிக்கும்வகையில் கணிசமான பங்களிப்புகளை ஆற்றியுள்ளது. உதாரணமாக, 2010 ஆண்டில் CPA "யுத்தத்தின்போதான கட்புலப் பிரதிவினைகள்" எனப்படும் பொருட்காட்சியின்

நிரல்தொகுப்பை வெளியிடவும், ஒழுங்மைக்கவும் உதவியது. அது இலங்கையின் சமகாலக்கலைஞர்களின் பணிகளினூடாக யுத்தம் குறித்த அவர்களின் பார்வையை எடுத்துக்காண்பித்தது. இந்த நிரல்தொகுப்பு ஒவ்வொரு கலைஞரினதும் பணியின் படிமத்தையும் மீளுருவாக்கம் செய்தது. அது உருவாக்கப்பட்டவேளையில், இடம்பெற்ற கலைஞர்களின் கூற்றுக்களில் இருபத்திரண்டு கலைஞர்கள் பங்கேற்றனர். இந்தக் கண்காட்சி இலங்கையின் சமகாலக் கலை விடயத்தில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

மேலுமொரு உதாரணம், கட்புலக்கலை ஊடகத்தின்மூலம் நிலைமாறுகால நீதியை ஆய்வுசெய்வதற்கான கலைஞர்களின் ஒரு வதிவிடச் செயலமர்வும் கலைக்கண்காட்சியுமாகும். இலங்கை முழுவதிலுமிருந்து கலந்துகொண்ட பதின்நான்கு பரிணமிக்கும் இளம் கலைஞர்கள் அதேவருடம் பெப்ரவரி மாதத்தில் பவானி பொன்சேகாவும், நானும் நடத்திய வதிவிடச்செயலமர்வொன்றில், நிலைமாறுகால நீதி குறித்த எண்ணக்கருக்களையும், இலங்கைக்கான அவற்றின் இயைபுகுறித்தும் கலந்துரையாடும் விவாதங்களில் ஈடுபட்டிருந்தனர். இந்தச் செயலமர்வுக்குப் பின்னர் இடம்பெற்ற “உண்மைக்கு உண்மை” என்னும் தலைப்பிலான கண்காட்சி “பாரதூரமான மனிதஉரிமை மீறல்கள் மற்றும் பாதிக்கப்பட்டோரின் கௌரவம்” குறித்த சர்வதேச தினமாகிய 2016 மார்ச் 24 ஆம் திகதி ஆரம்பித்தது. இது CPA மற்றும் விபவி அருங்கலைகள் கல்விக்கழகத்தின் (VAFA) இணைந்த முயற்சியாகும்.

இலங்கை தனது விருப்புரிமைகள் பொதுத்திட்டத்தை (GSP+) 2017 மே மாதத்தில் மீண்டும் பெற்றுக்கொள்ள முன்னர் ஐரோப்பிய ஒன்றியம் மனிதஉரிமை விவகாரங்களைக் கையில் எடுத்துக்கொண்டது. GSP+ 2010 இல் ஒரு தற்காலிகத் தடையை எதிர்கொண்டிருந்தது. இந்தத் தடைநீக்கம் ஐரோப்பிய ஒன்றியப் பொதுச்சந்தைக்கு இலங்கையில் 66% தீர்வைப்பொருட்களுக்கு வரியற்ற ஏற்றுமதிச் சலுகையை வழங்கியிருந்தது. நாடுகள் GSP+ சலுகைகையைப் பெற்றுக்கொள்வதற்கு அவற்றின் பிரவேசத்துக்கு அவசியமான நிபந்தனைகளைப் பூர்த்திசெய்திருப்பதைக் காண்பித்தல்வேண்டும். அவற்றுள் ஒரு நிபந்தனை மனிதஉரிமைகள் மற்றும் உழைப்பாளர் உரிமைகள், சூழல் பாதுகாப்பு மற்றும் நல்லாட்சி குறித்த 27 சர்வதேச மரபொழுங்குகளை, அவற்றால் தடைசெய்யப்பட்ட அல்லது அவற்றின் குறிக்கோள் மற்றும் நோக்கத்திற்குப் பொருத்தமற்ற எந்தவிதமான தனிக்காப்பு ஒதுக்கீடு எதுவுமின்றி ஏற்றங்கீகரித்து, பயனுறுதியுள்ளவகையில் நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதாகும். துரதிஷ்டவசமாக தேசியவாதிகள் மற்றும் தேசாபிமானிகள் என அழைக்கப்படுவோர் மனிதஉரிமைகள் என்னும் வார்த்தையை சாத்தானுக்குரிய ஒரு சொல்லாகவும், சுயாதீனத்துக்கும், இறைமைக்கும் இலங்கையின் ஒற்றையாட்சிக்கும் எதிரான மேற்குலகின் கருத்திட்டமாகவும் நோக்குகின்றனர். இதன்விளைவாக மனிதஉரிமைச் செயற்பட்டாளர்கள் துரோகிகளெனப் பெயரிடப்படுகின்றனர்.

2017 இல் நான் இலங்கைகக் கலைகள் பேரவையின் தலைவராகச் செயற்பட்டவேளையில் சகல கலைவடிவங்கள் ஊடாகவும் மனிதஉரிமைகள் குறித்த தவறான வழிநடத்தலை மாற்றியமைத்து ஒரு கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தவேண்டுமென்று சிந்தித்தேன். ஆகவே, டிசம்பர் 10 ஆம் திகதி சர்வதேச மனிதஉரிமைகள் தினத்தை வித்தியாசமான முறையில் கொண்டாடும் வகையில், 2017 இன் முதலாவது மனிதஉரிமைகள் கலைகள் கொண்டாட்டத்தை ஆரம்பித்து அதை மேற்பார்வை செய்தேன். அது ஒரு வருடாந்தக் கலைநிகழ்வாகத் தொடர்ந்திருக்க வேண்டும். 2018 இல் நான் அங்கிருந்தவேளையில் புதிய அமைச்சர் அப்பதவிக்கு வேறொருவரை நியமனஞ்செய்தார். பின்னர் கலைகள் பேரவையின் ஆதரவின்றி, நான் அதை எவ்வாறு செய்யமுடியுமென்று வினாவெழுப்பினார். இத்தீர்மானகரமான சந்தர்ப்பத்தில் CPA அமைப்பும், நீலன் திருச்செல்வம் நம்பிக்கை நிதியமும் இரண்டாவது மனிதஉரிமைகள் கலைகள் கொண்டாட்டத்தை ஒழுங்குசெய்வதற்கு ஆதரவளித்தன.

2018 அக்டோபரில் ஓர் அரசியலமைப்புச் சதிப்புரட்சி முயற்சி இடம்பெற்று ஜனாதிபதியினால் பிரதமரும், அரசாங்கமும் அரசியலமைப்புக்கு விரோதமானமுறையில் பதவியிலிருந்து அகற்றப்பட்டனர். நானும் எனது சகமேற்பார்வையாளர் டேவிட் கொட்டரல் அவர்களும் (ஷெஃபீல்ட் ஹல்லம் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம்) சமீபத்திய மனித உரிமை மீறல்களுக்குப் பிரதிவினை காண்பிக்கும்வகையில் இரண்டுமாத காலத்தினுள் கலைப்பணிகளை உருவாக்கத் தீர்மானித்தோம். நாம் மனித உரிமைகள் தொடர்பிலான பணிகளை மேற்கொள்ளும் சிவில் சமூக அமைப்புகளுக்கும், அரசியலமைப்புச் சதிப்புரட்சியின்போது நாட்டில் ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்டுவதில் பங்கேற்ற - வேளைக்கேற்ற குழுக்களுக்கும் அழைப்புவிடுத்தோம். கலைக்காட்சிக்கூடம் மூன்று தளங்களைக் கொண்டு அமைந்திருந்தது. மூன்றாவது தளம் ‘எதிர்ப்புக் கலைக்கு’ ஒதுக்கப்பட்டிருந்தது (பதாதைகள், சுவரொட்டிகள், சுலோக அட்டைகள், புகைப்படங்கள் போன்றன). இவை மனிதஉரிமை விவகாரங்களில்

அவர்களின் சமகாலப் போராட்டங்களைக் காண்பிக்கும் வகையில் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களால் தயாரிக்கப்பட்டிருந்தன. ஆகவே, இக்கண்காட்சியின் முக்கிய கவனம் மனிதஉரிமைகள் பிரகடனத்தின் 19 ஆவது உறுப்புரையாகிய கருத்துவெளிப்பாட்டுக்கான சுதந்திரம் மற்றும் 23 ஆவது உறுப்புரையாகிய ஜனநாயகத்துக்கான உரிமை என்பவற்றில் செறிந்திருந்தது.

நான் தொடர்புற்ற இணைந்த செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, CPA யினால் ஆதரவு வழங்கப்பட்ட எனக்கு மறக்கமுடியாத கட்புல அனுபவத்தை வழங்கிய இரு கட்புலக் கதைக்கூற்றுக்கள் இடம்பெற்றன. முதலாவது, சஞ்ஜன ஹத்தொட்டுவையின் மேற்பார்வையில் உருவாகிய அதிகாரத்தின் நடைக்கூடம் ஆகும். அதன் ஆராய்ச்சி உள்ளீட்டை வழங்கியவர் அசங்க வெலிக்கல ஆவார். கட்டிடக்கலை வரைபுகள் மற்றும் மாதிரிகள் ஊடாகக் கட்புலக்காட்சிப்படுத்தல்கள் இடம்பெற்றன. அது அரசியலமைப்புச் சீர்திருத்த முயற்சிகள், மத்திக்கும் சுற்றயல் பிரதேசங்களுக்குமிடையிலான பதற்றநிலைகள், 1972 முதல் இலங்கையில் இடம்பெற்ற அரசியலமைப்புப் பரிமாணத்தைக் கேள்விக்குட்படுத்தி, 1972 மற்றும் 1978 அரசியலமைப்புகளினதும், 13ஆம், 18ஆம் மற்றும் 19ஆம் திருத்தங்களினதும் அதிகார இயக்கவியல் குறித்துச் சிந்திப்பதாகும்.

இரண்டாவது, 'தேயிலைச் சாயம்' எனப்படும் புகைப்படக் கண்காட்சியாகும். அதன்செயல்முறைக் கண்காட்சிக்கும் தயாராகும்வகையில், தேயிலைத் தோட்டப்புறங்களிலிருந்து, நாற்பது தெரிவுசெய்யப்பட்ட திறன்படைத்த இளைஞர், யுவதிகள் தாமே, தமது பார்வையூடாக தமது சமூகங்களின் வாழ்வாதார நிலைகளைத் தழுவும்வகையிலான, அவசியமான புகைப்படத்திறன்களையும், அறிவையும் வழங்கினார்கள். தேயிலைச் சாயம் கண்காட்சி புகைப்படக்கலையூடாக, மலைநாட்டுத் தமிழ் சமூகத்தின் இதுவரை சொல்லப்படாத சமூக, அரசியல், பொருளாதார மற்றும் கலாசார அம்சங்களை வெளிக்கொணர்ந்து அவைகுறித்த வெகுஜன விழிப்புணர்வை ஏற்படுத்தும்வகையில் ஒரு கட்புல முறையினைப் பயன்படுத்துவதன் அதிசிறப்பான உதாரணமாக அமைந்திருந்தது.

இறுதியாக, நான் CPA யினதும், அதன் குடியியல் ஊடக அலகினதும் மேலுமொரு பங்களிப்பு மற்றும் முக்கிய பாத்திரங்குறித்துக் குறிப்பிடவிரும்புகின்றேன். இலங்கையில் பெரிய வண்ண ஓவியங்கள், பெரியசிலைகள் மற்றும் பொருத்திணைப்புகள் போன்ற மூலக்கலைப்பொருட்களுடன் பயணிக்கும் ஒரு கண்காட்சியை ஒழுங்குசெய்வது மிகக்கடினமான ஒரு விடயமாகும். அவற்றைக் கொழும்பில் கண்காட்சிப்படுத்துவதுபோன்று, பிராந்தியங்களிலும் காட்சிப்படுத்துவதற்கான அகநிலையமைவு வசதிகளோ, பொருத்தமான வாய்ப்புவெளிகளோ கிடையாது. ஒரு கண்காட்சி அதன் சொந்த நிதிகளில் இடம்பெறுகையில், அதை இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குமேல் நீடிக்கமுடியாது. ஏனைய மாகாணங்களில் வாழும் மக்களிடம் சமகால ஆக்கங்களைப் பார்க்கும்வகையில் மூலக்கண்காட்சி வாய்ப்பு வெளிகளுக்கு விஜயம்செய்யும் கலாசாரம் காணப்படுவதில்லை. கலையை அனுபவிக்கும் அல்லது விமர்சிக்கும் வகையில் கலைக்கண்காட்சிக்கூடங்களுக்கு விஜயம்செய்யும் கலாசாரம் அருகிச் சென்றுகொண்டிருக்கின்றது. பரீட்சைகள் மற்றும் சான்றுப்பத்திர திசைமார்க்கங்கொண்ட கல்வி இத்தகைய வெற்றிடங்களை உருவாக்குகின்றது. இத்தகைய சூழ்நிலையில், ஊடகங்கள் கலைசார் வெளிப்பாடுகளை ஓரளவுக்கேனும் மக்களிடையே பரவலாக வழங்குவதில் ஒரு பாரிய பாத்திரத்தை வகிப்பது சாத்தியமாகும். இதற்குமாறாக, பிரதான பிரவாக ஊடகங்கள் உயர்வான விமர்சனப்பாணியிலான கலாசாரங்களின் குரலை வெளிப்படுத்துவது மிகவும் அருமையாகவே இடம்பெறுகின்றது. இவ்விடத்தில் நான் CPA யினால் ஆரம்பிக்கப்பட்ட குடிமக்கள் இதழியல் பக்கங்களான யதார்த்தக்காட்சிகள் (Ground views) மற்றும் விகல்ப இணைய தளங்களைக் குறிப்பிடுதல்வேண்டும். ஆரம்பித்த நாட்களிலிருந்தே, அவை எனது வருடாந்தக் கண்காட்சிகள்குறித்து மீளாய்வு மற்றும் அறிக்கையிடல் பணிகளுக்கான வாய்ப்புவெளிகளை வழங்கியுள்ளது. ஆகவே, எனது கண்காட்சிகளுக்கு மட்டுமன்றி, ஏனைய கட்புல மற்றும் அரங்காட்டல் கலைவடிவங்கள் குறித்த, அர்ப்பணிப்புணர்வு கொண்ட கலைஞர்களினது விமர்சனம் மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த குரல்களுக்கும் வாய்ப்புவெளிகளை வழங்கியுள்ளன.

---

**பேராசிரியர் சந்திரகுப்த தேநுவர**

அழகியல் கலைப் பல்கலைக்கழகத்தின், கலைக் கோட்பாடுகளின் வரலாறு பற்றிய கற்கைப் பிரிவின் பேராசிரியராவார். தேசிய மற்றும் சர்வதேசிய மட்டத்தில் பல ஓவியக் கண்காட்சிகளை நடாத்தியுள்ள ஓவியக்கலைஞரும் சிவில் சமூகச் செயற்பாட்டாளரும் ஆவார். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் சபையின் தவிசாளர் ஆவார். களனிப் பல்கலைக்கழகத்தின் கலாநிதிப்பட்டத்தையும், மாஸ்கோ பிராந்தியக் கலைநிறுவனத்தின் நுண்கலைக்கான முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். "விபவி" கலைக்கழகத்தின் ஆரம்ப உறுப்பினராவார்.



# தற்செயலல்லாத தனிச்சிறப்பு

**சாகரிக்கா தெல்கொட**

சுதந்திரத்திற்கான ஃபெட்ரிக் நியுமான் மன்றத்தின் (Friedrich Naumann Foundation for Freedom) (FNF) உள்நாட்டுப் பிரதிநிதி பதவியின் பணியைப் பொறுப்பேற்ற பின்னர், புதிய மற்றும் ஏற்புடைய பங்குதாரர்களைத் தேடிக் கொள்வது நான் முகங்கொடுத்த முதலாவதும் பொறுப்புமிக்கதுமான பணியாக அமைந்தது. சுதந்திரத்திற்கான ஃபெட்ரிக் நியுமான் மன்றம் சுதந்திரம், சமாதானம், சனநாயகம், சட்டத்தின் ஆட்சி மனித உரிமைகள் மற்றும் சமூக சந்தைப் பொருளாதாரத்தை மேம்படுத்தலுக்காக உலகளாவிய ரீதியில் பணியாற்றுகின்றது. ‘லிபரல் சனநாயக இலங்கை’ பற்றிய நோக்குள்ள மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எமது மன்றத்தின் சில நிகழ்ச்சிகளுடன் ஒத்துழைப்புடன் பணியாற்றுவதற்கு எம்மை நோக்கி வந்த போது அது ‘மிகச் சிறந்த’ பங்குதாரர் எனவும் நீண்டகால ரீதியில் எம்மோடு பங்குவகிக்கக் கூடும் எனவும் புரிந்து கொண்டேன்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் ரொஹான் எதிரிசிங்க போன்ற சில சிரேஷ்ட உறுப்பினர்களை, அவர்கள் கலாநிதி சானக்க அமரதுங்க மற்றும் லிபரல் சனநாயகத்திற்கான பேரவையில் பணியாற்றிய காலத்திலிருந்தே அறிந்திருந்தேன். நாம் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் முதன் முதலாகப் பணியாற்றிய நிகழ்ச்சிகளில் அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் மற்றும் தேர்தல்கள் சீர்திருத்தம் என்பவை அடங்கும். ஆரம்பம் முதலே சனநாயகத்தைக் எழுச்சியுறச் செய்வதற்கு மிகமிக ஏற்புடையதான கருத்திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போது, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமே அவ்வாறான கருத்திட்டங்களுக்கு முன்னணியில் நின்று அடித்தளமிட்டது. நான் எப்போதும் இக்கருத்திட்டங்கள் பலவற்றுடன் ஒத்துழைப்புடன் பணியாற்றியதற்கு அவை மன்றத்தின் நோக்கங்களுடன் பொருந்தியிருந்தது என்பது மட்டுமே தூண்டுதலாக அமையவில்லை. அவை தனிப்பட்ட முறையில் நான் எதிர்பார்த்த சனநாயக ரீதியான இலங்கைக்கு உண்மையாகவே தேவைப்படுபவை என்பதுதான் அதற்கான காரணம்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் மன்றமும் நடைமுறைப்படுத்தி (FNF) ஒன்றிணைந்த நிகழ்சிகளின் ஊடாக மக்களிடையே நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பில் கலாநிதி நீலன் திருச்செல்வம் போன்றோருடனும் புதிய அரசியலமைப்பு தொடர்பில் பிரதான அரசியற் கட்சிகளிடையே இணக்கப்பாட்டையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு திரு. கேதீஸ் லோகநாதன் அவர்களுடனும் பணியாற்றும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வெளியீடுகள் பற்றிப் பார்க்கின்ற போது, என்னால் அவற்றுக்கு FNF மன்றம் சார்பில் ஒத்துழைப்பு வழங்க முடிந்தது. எம்மால், சமகால அறிஞர்களுக்கு மட்டுமன்றி, சிலசமயங்களில், அரசியல் விஞ்ஞானம் தொடர்பிலான எதிர்கால மாணவர்களுக்கும் பெறுமதிமிக்க கல்விப் பங்களிப்பை பெற்றுத் தர இப்படைப்புகளால் இயன்றமை தொடர்பில் நான் பெருமையடைகின்றேன். 'அரசியலமைப்புச் சட்டத்தின் 18வது திருத்தம்: 'உட்பொருளும் செயற்பாடும்' மற்றும் '40 வருடங்களைக் கடக்கும் குடியரசு' என்ற இரு வெளியீடுகளும் ஆழமான அறிவாராய்ச்சிகளைப் போன்றே குறிப்பிட்ட காலகட்டத்தில் அரசியல் தடுமாற்றத்துடன் ஏற்புடையன என நான் நம்புகின்றேன். இவ்வெளியீடுகளின் ஆசிரியப் பொறுப்பேற்ற, எமது மகனின் பாலர் வகுப்பிலிருந்து நான் அறிந்திருந்த அசங்க வெலிக்கலவுடன் பணியாற்றுவது எனக்கு பெரும் உத்வேகத்தை அளித்தது.

சர்வதேச பரிசுகளைப் பெற்று 'பலயே மங்கட (Corridors of Power) (அதிகாரங்களின் தாழ்வாரங்கள்) மற்றும் அதனுடைய இன்னொரு பகுதியான 'அரசியலமைப்பின் முப்பரிமாணக் குறிகாட்டி' (3D Modelling of the Constitution) ஆகிய இரு கருத்திட்டங்களும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் இணைந்து பங்கேற்க முடிந்த மிகச் சிறந்ததும் குறிப்பிட்டுக் கூறக்கூடியதுமான இரண்டு கருத்திட்டங்களாகும். அவை இரண்டையும் உருவாக்கியவராக சஞ்சன ஹத்தொட்டுவ விளங்கினார்.

நான் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் கூட்டுச் சேர்ந்து FNF மன்றத்துக்காக ஆற்றிய அனைத்தையும் குறிப்பிட்டால் அது ஒரு சிறு புத்தகமாகிவிடும் என்பதை நான் அறிவேன். அதனால், கிட்டத்தட்ட இரண்டு தசாப்த காலமாக நிலவிய இப்பங்குடமையானது எனது தொழில் ரீதியான வாழ்க்கையில் மேலும் பயனுள்ளதும் உத்வேகமிக்க அனுபவமுமாகும் என்பதைக் குறிப்பிடுவதோடு மட்டுப்படுகின்றேன்.

எனது உயர்வானதும் சிறந்ததுமான குறிப்பை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து அவர்களுக்காக ஒதுக்குகின்றேன். கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவின் வழிகாட்டல்கள், திறமைகள் மற்றும் பங்களிப்பு காரணமாகவே மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இலங்கையில் பெறுமதி வாய்ந்த அறிஞர் சபைகளில் ஒன்றாக மாறியது, குறிப்பாக சுயாதீன கொள்கைகள் ஆய்வு மற்றும் கருத்தியல்களை சமர்ப்பிக்கும் நிறுவனமாக மாறியது. அவ்வாறே கலாநிதி சராவின் வழிகாட்டல்களாலும் ஒத்துழைப்பாலும் பங்களிப்பாலும் தான், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் FNF மன்றம் செய்ய முடிந்த கணிசமான அளவு பணிகள் பற்றி நான் பெருமையுடன் பேச முடிகின்றது.

கலாநிதி சராவும் எமது கூட்டுச் சேரலும் - மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் / FNF ஆகிய இரண்டுக்கும் பொருந்துகின்ற அரிஸ்டோட்டலின் மேற்கோள் ஒன்றுடன் இக்குறிப்பை முடிக்க விரும்புகின்றேன்.

'தனிச்சிறப்பு என்பது தற்செயல் அல்ல. அது எப்போதும் உயர் அபிப்பிராயத்தினதும் நேர்மையான பிரயத்தனத்தினதும் அறிவுபூர்வமான செயலினதும் பெறுபேறாகும்.

அது பெரும்பாலும் மாற்றீட்டாளர்களின் அறிவுபூர்வமான தெரிவைப் பிரதிநிதித்துவப்படுத்தும். தெரிவு தற்செயலானது அல்ல. உங்கள் விதியைத் தீர்மானிப்பதாகும்.'

---

**சாகரிக்கா தெல்கொட**

FNF நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதியாக பல வருடங்கள் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் முன்னாள் பணிப்பாளர். சமூக செயற்பாட்டாளர்.

# இருபத்தைந்து வருட நினைவலைகள்



**லயனல் குருகே**

காலத்தைப் பிடித்து நிறுத்த முடியாது. அது தானாகப் பாய்ந்தோடுகின்றது. எங்களுடைய வாழ்க்கையும் அதனோடு மிதந்து செல்கின்றது. காலம் பாய்ந்தோடிய காலகட்டத்தில் நாம் செய்த பணிகள்தான் வாழ்க்கைக்கு அர்த்தம் சேர்க்கின்றன. தொடர்ச்சியாக 25 ஆண்டுகளாக வாழ்ந்த வேலைத் தளமொன்றின், கடந்த காலத்தை திரும்பிப் பார்க்கத் தோன்றுகிறது. மாபெரும் சவால்களுக்கும், மோதல்களுக்குமிடையே கடந்த அந்தக் காலகட்டத்தைப் பற்றியும், அதில் செயற்பட்டுக் கொண்டிருந்த பாத்திரங்களைப் பற்றியும், புத்தகம் ஒன்றை எழுதும் அளவுக்கு, எனது நினைவில் அனுபவங்கள் குவிந்து கிடக்கின்றன. எனினும் இத்தருணத்தில் குறிப்பிட்ட சில விடயங்களை மட்டுமே சுருக்கமாகப் பதிவிடக் கூடியதாக உள்ளது.

### பியர் பருகும்போது ஏற்பட்ட உரையாடல்

எனது நினைவுகள் 1996ம் ஆண்டில் ஒரு நாளை நோக்கிச் செல்கின்றது. அப்போது நான் தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். பேராசிரியர் ஜயதேவ உயன்கொட அவர்கள், உடனடியாகத் தன்னை வந்து சந்திக்குமாறு ஒரு செய்தி அனுப்பியிருந்தார். எனது ஆசிரியர் என்ற வகையில், பல்கலைக்கழக நாட்களிலிருந்தே அறிமுகமான அவர், எம்மால் பெரிதும் நேசிக்கப்பட்ட ஒரு மனிதர். நான் உடனடியாக அவரைச் சந்திக்கச் சென்றேன். அவரோடு ரொஹான் எதிரிசிங்கவும் இருந்தார். கலாநிதி உயன்கொட அவர்கள் அழைத்ததால், அவ்விருவருடனும் ஆசிரியர்களுக்கான கிளப் ஒன்றில் பியர் பருகுவதிலும் இணைந்து கொண்டேன்.

புதிதாக ஒரு நிறுவனத்தை அமைத்து சில வேலைகளைச் செய்ய எதிர்பார்ப்பதாகவும், அவ்வேலைகளுக்கு நான் பங்களிப்புச் செய்ய வேண்டுமென எதிர்பார்ப்பதாகவும் பேராசிரியர் உயன்கொட என்னிடம் கூறினார். அமைக்கப்படவிருக்கும் குறிப்பிட்ட நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பதவியில் கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து கடமையாற்றுவார் என்று அவர் கூறியபோதிலும், அன்றைய தினம் கலாநிதி சரவணமுத்து அவர்களைச் சந்திக்க முடியவில்லை.

### ‘சிந்தித்து எடுத்த முடிவு’

பின்னர் ஒரு நாள், சட்ட பீடத்தின் மேல் மாடியில் அமைந்துள்ள ‘செஃப்றா வில்’ (Centre for Policy Research and Analysis-CEPRA) நான் கலாநிதி சரவணமுத்து அவர்களைச் சந்தித்தேன். அப்போது நாம் சமூக, அரசியல் விடயங்கள் பற்றி நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டோம். உயன்கொட அவர்களும் அவ்வுரையாடலில் கலந்துகொண்டார். ஆரம்பத்தில் எனக்குள்ளே ஒரு தயக்கம் ஏற்பட்டாலும், நான் பணியாற்றிக் கொண்டிருந்த தனியார் துறையை விடவும் புதிதாக ஏதாவது செய்ய முடியும் என்ற எதிர்பார்ப்புடன் கூடிய புத்துணர்வு என்னில் ஏற்படத் தொடங்கியது. கலாநிதி சரவணமுத்து அவர்கள் நிறைவேற்றுப் பணிப்பாளர் என்ற வகையில் தனது சம்பளம் மாதமொன்றிற்கு 15,000 ரூபா. எனவும், எனக்கு 10,000 ரூபா சம்பளம் வழங்க முடியும் என்றும் என்னிடம் கூறினார். புதிதாக ஓர் இடத்தில் பணியாற்றுவதற்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பை எண்ணி எனது மனதில் ஒரு குழப்பம் ஏற்பட்டது. நான் அப்போது வேலை செய்து கொண்டிருந்த நிறுவனத்தில் எனக்கு வீடு, வாகனம் என்பவற்றுடன் சிறந்த சம்பளத்தையும் வழங்கியிருந்தனர் என்பதே அதற்குக் காரணம். அவ்வாறானதொரு பொருளாதார ரீதியான சுபீட்சத்தைக் கைவிட்டு வருவதில் ஒரு பதற்றம் இல்லாமலும் இருக்கவில்லை. எனினும் இறுதியில் புது இடத்திற்கு வேலைக்குச் செல்ல நான் முடிவெடுத்தேன். அது தொடர்பில் மனைவியிடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பு என்னை மேலும் ஊக்குவித்தது.

புதிய நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு நாம் முதலில் “லொங்டன் பிளேசிற்கு வந்தோம். என்னோடு கமலும் இருந்தார். நாம் டொக்டர் சராவின் (நாம் கலாநிதி சரவணமுத்து அவர்களை அவ்வாறுதான் அன்புடன் அழைப்போம்) வீட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட இரண்டு மேசைகளில் தான் வேலை செய்ய ஆரம்பித்தோம். ஒரு மேசையில் டொக்டர் சரா வேலைகளைச் செய்ததுடன் மற்றது எமக்குரித்தானது. குறைந்த வசதிகளுடன், குறுகிய இடத்திற்குள், நிறையப் பேசுவதற்குக் கிடைத்த சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்த பெரும் கொடையாக அமைந்தது. இதற்கு முன், டொக்டர் சராவை சந்தித்திராத போதும், பல்கலைக்கழக நாட்களில் “ரிச்சர்ட் த சொய்சா” சொன்ன விடயத்திற்கேற்ப அவரைப் பற்றி நான் நிறைய கேள்விப்பட்டிருந்தேன். ரிச்சர்ட், டொக்டர் சராவை ‘லிபரல் தம்பி’ என்றுதான் குறிப்பிடுவார். பல்கலைக்கழகத்தில் பல்வேறு மனித உரிமைகள் தொடர்பிலான வேலைகளுடன் தொடர்புடைய விரிவுரைகளின்போது டொக்டர் சராவை, ரிச்சர்ட் உதாரணமாக எடுத்துக் கொண்டார். அப்போது நாங்கள் மனித உரிமைகள் தொடர்பில் பல்வேறு பணிகளை மேற்கொண்டோம். நான் ‘தம்பி’ யின் கதை பற்றி டொக்டர் சராவைக் கேட்டபோது ரிச்சர்ட் அவரை அவ்வாறு செல்லப் பெயர் கொண்டு அழைத்ததாகச் சொன்னார்.

### மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

லொங்டன் பிளேசிற்கு வருகை தந்த நாம், சுமார் இரண்டு மாதங்கள் வரையான குறுகிய காலமே அங்கு பணியாற்றினோம். பின்னர் ஃபிளவர் வீதியில் 32/3ம் இலக்கத்தில் அமைந்திருந்த இடமொன்றிற்கு 1997ன் தொடக்கத்திலே வந்தோம். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சரியான ஆரம்பம் ஃபிளவர் வீதியில் தான் உருவானது.

எமது முதற்கட்டமாக 1997 உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தலை முன்னிட்டு தேர்தல் வன்முறைகளைக் கண்காணித்தோம். பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம அதனை நெறிப்படுத்தினார். தகவல்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலான விதிமுறைகளைத் தயாரித்தல், ஆய்வு செய்தல் போன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். “சனத்” என்னும் இளைஞர் இதிலே களநிலைச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாகவிருந்தார். (சனத் இன்று ஐக்கிய நாடுகள் சபையில் உயர் பதவி வகிப்பது மகிழ்ச்சிக்குரியது) சிரேஷ்ட ஊடகவியலாளர் வருண கருணாதிலக்கவும் எம்மோடு இணைந்து பணியாற்றினார்.

பின்னர் Social Indicator மற்றும் Media Unit ஆகிய பிரிவுகள் இந்த இடத்திலேயே ஆரம்பிக்கப்பட்டன. இவற்றுக்கிடையே பல்வேறு சம்பவங்கள் இடையில் இடம்பெற்றிருந்தாலும், அவற்றைச் சொல்வதற்கான நேரம் இதுவல்ல என நினைக்கின்றேன். எனவே தேவையானவற்றை மட்டும் பதிவு செய்கின்றேன். இக் காலகட்டத்தில் Center for Policy Alternatives எனப்படும் ஆங்கிலப்பதத்தை சிங்கள மொழியில் எவ்வாறு பிரயோகிக்க வேண்டும் என “சரா” எம்மிடம் வினவினார். பல்வேறு வழிகளில் அதுபற்றி ஆராய்ந்து பார்த்துவிட்டு நாங்கள் அது ‘விகல்ப்ப ப்ரத்திபத்தி கேந்திரய’ (மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்) என அமைய வேண்டும் எனக் கூறினோம். என்னை விட ஆங்கில மொழியில் புலமை கொண்ட சட்டத்தரணி கமல் ‘விகல்ப்ப ப்ரத்திபத்தி சந்தஹா வூ மத்தியஸ்தானய’ என்னும் பெயர் பொருத்தமானது என ஆலோசனை கூறினார். இறுதியில் பேராசிரியர் உயன்கொட அவர்கள் ‘விகல்ப்ப ப்ரத்திபத்தி கேந்திரய’ என்ற பெயரை அங்கீகரித்தார். சிங்களப் பெயரை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மொழியிலும் “மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்” என்ற பெயர் அங்கீகரிக்கப்பட்டது.

### களத்தில் இறங்குதல்

கொழும்பை மையமாகக் கொண்ட ஹோட்டல்களில் இடம்பெறும் வேலைகள் அதிகரிக்கும் போது அதற்கு அப்பாற் சென்று அடிமட்டத்தில் பணிபுரிவதற்கான அளவுகடந்த ஆசை எனக்கிருந்தது. நான் “சராவைச்” சந்தித்து, கொழும்பு பொதுநூலகத்தை மையமாகக் கொண்டு கல்வியியலாளர் மாநாட்டுத் தொடரொன்றை நடத்துவதற்கு 5,000 ரூபா பணம் கேட்டேன். “சரா” அதற்கு இணங்கினார். அப்போது எம்மோடு பணியாற்றிய இளைஞர்களும் நெருக்கமாக சகோதரத்துவத்துடன் பணியாற்றினார்கள். நாம், சமூகத்தில் இடம்பெறுகின்ற பல்வேறு வகையான சமூக, சமகால அரசியற் சம்பவங்களையொட்டி கல்வியியலாளர் கலந்துரையாடற் தொடரொன்றை நடத்தினோம்.

அடிமட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதற்கட்டப் பணியாக இது அமைந்தது. 1997 முதல் சில வருடங்கள் தொடர்ச்சியாக இக் கலந்துரையாடற் தொடர்களை நடத்த முடிந்தது. ‘ஒரு கிண்ணம் தண்ணீரைக் கூட வழங்காமல் இவ்வாறான கலந்துரையாடல்களில் மனிதர்கள் கலந்து கொள்வதைப் பற்றி’ எம்மோடு பணியாற்றிய சில ஆய்வாளர்கள் ஆச்சரியமடைந்தனர். இக்கலந்துரையாடல்

தொடர் மிகவும் பிரபலமானதுடன் தேசிய செய்திப் பத்திரிகைகளிலும் பேசப்படுகின்ற விடயமாகியது. கலந்துரையாடல்களின் பின்னர், அது பற்றி ஏதேனுமொரு வெளியீடு வெளியிடப்பட வேண்டும் என, பேராசிரியர் உயன்கொட அவர்கள் ஆலோசனை விடுத்ததுடன், அது தொடர்பில் நான் பல சிறிய நூல்களைத் தயாரித்தேன். அவை பல்வேறு நிறுவனங்களுக்கும் நூலகங்களுக்கும் அனுப்பப்பட்டன. பல்வேறு அனுபவங்கள் நிறைந்த “கேதீஸ் லோகநாதன்” எனப்படும் சிரேஷ்ட ஆய்வாளர் இந் நடவடிக்கைகளோடு ஒன்றிணைந்தார்.

சமாதானம் பற்றியதும் புதிய அரசியலமைப்பு பற்றியதுமான பேச்சு சந்திரிக்காவின் ஆட்சிக் காலத்தில் சமூகத்திலும் மிகவும் காத்திரமாக வெளிவாரியாகப் பேசப்பட்டது. பேராசிரியர் உயன்கொட மற்றும் லோகநாதனுக்கிடையிலான உரையாடல்களின்போது, இது தொடர்பில் ‘நியூஸ் லெட்டர்’ ஒன்றைச் செய்வோம் என்று உத்தேசிக்கப்பட்ட அதேவேளை அதற்கு உயன்கொட அவர்களால் ‘சாம கத்தா’ (சமாதான உரையாடல்கள்) என்ற பெயரும் இடப்பட்டது.

### “சாம விமர்ஷியின்” (சமாதான நோக்கின்) தோற்றம்

பின்னர் ஆறு இதழ்கள் வெளியிடப்படும் வரை மூன்று மொழிகளிலும் பல்வேறு கட்டுரைகள் உள்ளிட்ட ‘சாம கத்தா’ வெளியிடப்பட்டது. அது தொடர்ந்தும் சமூகமயமாகின்ற அதேவேளை ஊடகடவியலாளர் திரு. சுனந்த தேசப்பிரிய எம்மோடு இணைந்ததுடன், இதனை ஒரு சஞ்சிகையாக முன்னேற்ற வேண்டும் என நான் கருதினேன். அது பற்றி சுனந்த தேசப்பிரிய அவர்களுடனும் கலந்துரையாடினோம். பின்னர் அதனை டொக்டர் சராவிடமும் எடுத்துரைத்தோம், ‘சாம கத்தா’ பின்னர் ‘சாம விமர்ஷி’ என பெயர் மாறியது. நான் பல்கலைக்கழகத்தில் இருந்தபோது ‘விமர்ஷி’ என்ற பெயரில் ஒரு சஞ்சிகையை நடத்தியதுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு இறுதியில் ‘சாம விமர்ஷி’ எனப் பெயரிடுவதற்கு நடவடிக்கை எடுத்தோம். அவ்வாறு பிறந்த சஞ்சிகைதான் இன்றுவரை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வெளியீடாகப் பிரசுரமாகின்றது. ஆரம்பம் முதலே சாம விமர்ஷி இணை ஆசிரியராகப் பணியாற்றக் கிடைத்தமை நான் பெற்ற பாக்கியமாகும்.

“சாம விமர்ஷி” சஞ்சிகை சிங்கள மொழியில் பிரசுரமான அதேவேளை, அதன் தமிழ் மொழிபெயர்ப்பு (சமாதான நோக்கு) என்ற பெயரில் பிரசுரிக்கப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் தமிழ் மொழிமூலத் தொகுப்புகளும் பிரசுரிக்கப்பட்டன. எம்முடைய நிறுவனத்தில் “சஞ்சன” இணைந்த பின்னர் ‘சாம விமர்ஷி’ சஞ்சிகையானது ஆங்கில மொழியில் Peace Monitor என்ற பெயரில் தனியாக வெளியிடப்பட்டது. ஆங்கில மொழியைப் பயன்படுத்துகின்ற வாசகர்களிடையே இது மிகவும் பிரபலமானது.

### கொழும்புக்கு வெளியே களத்தில்

இதனிடையே நிகழ்ச்சிகளுக்காக கொழும்புக்கு வெளியே செல்வது ஆரம்பமானது. கீழ்மட்டத்திலான வேலைகளை நான் முதலில் கொழும்புக்கு வெளியே பதுளை மாவட்டத்தில்தான் ஆரம்பித்தேன். பதுளை நான் பிறந்த மாவட்டம் என்பதாலும், அங்கு எனக்குப் பல்வேறு தொடர்புகள் இருந்தமையாலும் அங்கு வேலை செய்வது இலகுவாக இருந்தது. பதுளை மாவட்டத்தில், சிவில் மற்றும் அரசியற் செயற்பாட்டாளர்கள் பலரை நான் முன்னரே அறிந்திருந்தேன். இவ்வாறாக பதுளை, மொனராகலை, அம்பாறை என பல்வேறு பிரதேசங்களுக்கும் சென்று பல்வேறு நிகழ்ச்சிகள் அமுலாக்கப்பட்டன.

களநிலை வேலைகளின் போது எதிர்நோக்கிய  எதிர்பாராத சம்பவமொன்று என் நினைவுக்கு வருகின்றது. அந்நாட்களில் “அசங்க வெலிக்கல“ என்னும் இளைஞனும் எங்களோடு இணைந்திருந்தார். நாங்கள் பல்வேறு பிரதேசங்களில் அடி மட்டத்தில் கலந்துரையாடல்களை நடத்தினோம். இங்கு நான், வெறுமனே நிகழ்ச்சிகளை  நெறிப்படுத்துபவராக மட்டுமே செயற்பட்டேன். பிரதான பேச்சாளராகக் கலந்துகொள்ளவில்லை சரவணமுத்து, சுனந்த மற்றும் அசங்க ஆகியோர் பிரதான பேச்சாளர்களாக கலந்துரையாடல்களில் பங்கு  கொண்டனர். இவ்வாறு நடத்தப்பட்ட ஒரு நிகழ்ச்சிக்கு பௌத்த தேரர்களால் பாரிய அச்சுறுத்தலொன்று விடுக்கப்பட்டது. பிரதான பேச்சாளர்களால் அவர்களுக்கு சரியான பதில் வழங்க முடியாமற் போனதுடன், அவர்களை கட்டுப்படுத்த தர்ம உபதேசம் தேவைப்பட்டது. பிக்குமாருக்கு அன்று என்னால் மட்டுமே பதிலளிக்க முடிந்தது. “அக்கஞ்ஞபல” சூத்திரத்தையும், “மகா பரிநிப்பான” சூத்திரத்தையும் கற்றிருந்த எனக்கு அன்று எழுந்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவது இலகுவாக இருந்தது. எங்களோடு சச்சரவுக்கு வருகின்ற தர்ம புத்திரர்களுக்கு (பௌத்த பிக்குமாருக்கு) நான் பௌத்த கொள்கையைக் கொண்டே பதிலளித்தேன். சுமார் இருநூறு அல்லது முந்நூறு பேர் கொண்ட கூட்டத்தின் மத்தியில், ஐம்பது பேர் மட்டிலான குழுவொன்று தொடர்ந்தும் எம்மிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தது. இறுதியில் தர்மத்தின் ஊடாக அவர்களைக் கட்டுப்படுத்த முடிந்தது. இனவாதம், சாதியம் மற்றும் மனிதநேயம் பற்றிய பௌத்த போதனைகளை தொடர்ச்சியாக அவர்கள் முன்னிலையில் சொல்லிக் கொண்டிருந்த போது, பிரதான அரங்கில் தோன்றாத ‘நான் யார்’ என்பது அவர்களுடைய வினாவாக இருந்தது. அவர்கள் கலாநிதி சரவணமுத்து உள்ளிட்ட குழுவினரைத் தாக்குவதற்காகவே வந்திருந்தனர். அன்றைய கலந்துரையாடல் எம் அனைவருடைய வாழ்க்கையிலும் புதிய அனுபவமாக அமைந்ததைப் போன்றே எமது பல்வேறு செயற்பாடுகளை புதியதொரு கோணத்தில் மாற்றியமைத்தது.

### தர்ம யுத்தத்தின் பின்னர் புதிய பாதையில்...

அந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு நாம் “எல்ல” பிரதேசத்தில் அமைந்திருந்த ஒரு விடுதியில் தங்கினோம். அன்றிரவு, பகற் பொழுதில் நடந்த விவாதத்தைப் பற்றி தொடர்ச்சியாகக் கலந்துரையாடினோம். அந்த நீண்ட கலந்துரையாடலின் பயனாக ‘இலங்கையின் இன ரீதியான நெருக்கடியும் தீர்வும்’ என்ற நூல் உருவானது. “சரா” உள்ளிட்ட குழுவினர் இதனை சிங்கள மொழியில் எழுதுமாறு எனக்கு ஆலோசனை விடுத்தனர். பின்னர் இன ரீதியான நெருக்கடி தொடர்பில் நான் செய்த வேலைகளையும் பெற்றுக் கொண்ட அனுபவங்களையும், வாசித்தறிந்த விடயங்களையும் கொண்டு, ‘மோதல்கள்

தொடர்பில் பௌத்த தர்மம்' என்ற நூலை எழுதினேன். நான் அதனை எழுதுவதைத் தெரிந்து கொண்ட என்னுடைய நண்பர்கள் பலர் அதனை என்னுடைய சுய படைப்பாக வெளியிடுமாறு ஆலோசனை கூறினர். ஆனால், அதனை நான் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பிரசுரமாக வெளியிடத் தீர்மானித்தேன்.

அதன் பின்னர், சமாதானம், அதிகாரப் பகிர்வு, கூட்டாட்சி போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பான நிகழ்ச்சிகள், பயிற்றுவிப்புகள் போன்றவற்றை, கீழ்மட்டத்தில் மிகவும் ஒழுங்கு முறையாகவும், வெற்றிகரமாகவும் மேற்கொள்வதற்கான வாய்ப்பு உருவானது. அந்நிகழ்ச்சிகளை இலங்கை முழுவதும் நடத்த முடிந்தது. இந்த செயற்பாடுகளுடனேயே, மக்களைப் பங்கேற்கச் செய்து மேற்கொள்ளப்படும் வேலைகள் தொடர்பில் வெளிவாரி சமூகத்தின் மீது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் தீவிர கவனம் செலுத்தப்பட்டது. அதனாலேயே 'மக்கள் பங்கேற்பு நிகழ்ச்சிகள் பிரிவு' (Outreach Unit) ஆரம்பிக்கப்பட்டது.

Outreach அமைக்கப்பட்டதன் பின்னர், நாம் பெருமளவிலான நிகழ்ச்சிகளை நடத்தினோம். என்னுடன் பல ஆய்வாளர்கள் பணியாற்றியுள்ளதுடன், தற்போதைய 'தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு நிலையத்தின்' தேசிய ஒருங்கிணைப்பாளராக பணியாற்றுகின்ற "மஞ்சுள கஜநாயக்கவும்" அன்று எமது குழுவில் இருந்த செயற்திறன்மிக்க இளைஞராவார்.

### மக்களோடு தொடர்ந்தும் களத்தில்

Outreach என்ற ரீதியில் நாம் மேற்கொண்ட பல பணிகளுக்கிடையில் எனது நினைவலைகளை மீட்டுகின்ற போது ஓரிரு இடங்களில் நினைவு சட்டென்று தரித்து நிற்கின்றது. அதில் மனதைக் கவரும் ஒரு பகுதியாக பாடசாலைப் பிள்ளைகளையும் பல்கலைக்கழக மாணவர்களையும் பங்கேற்கச் செய்து, நடத்திய கலாசாரப் பகிர்வு நிகழ்ச்சி அமைந்தது. இன ரீதியான நட்புறவை வளர்க்கும் நோக்கில் தோட்டப்பகுதி தமிழ் சிறார்கள் வடக்கின் தமிழ் மற்றும் முஸ்லிம் சிறார்கள் தெற்கின் சிங்கள சிறார்களுக்கிடையில், பல கலாசாரப் பகிர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. அவை மிகவும் வெற்றிகரமாக அமைந்ததுடன், சமாதானக் கல்விக்கான நல்லதொரு முன்மாதிரியாகவும் அமைந்தன. அன்றைய அரசாங்கம் அதனை சாதகமாக ஏற்றுக் கொண்டதற்கான சமிக்ஞைகளும் கிடைத்தன. எனினும் அரசாங்கம் மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டமைப்பொன்றுக்கு முன்வந்திருந்த காலத்தில் மீண்டும் எமது பணிகள் மீது கோணல் பார்வை நோட்டமிடப்பட்ட சந்தர்ப்பங்கள் இல்லாமலும் இல்லை.

அன்று மாணவர்களாக இந்த கலாசாரப் பகிர்வு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர்கள் இன்று ஆசிரியர்களாக அப் பகிர்வு நிகழ்ச்சிகளைப் பல்வேறு பிரதேசங்களில் நடைமுறைப்படுத்துவதை அக் கலாசாரப் பகிர்வு நிகழ்வுகளின் நேர்மறை விளைவுகளாகக் காண முடிகிறது.

பின்னர், நிறுவனம் பல்வேறு அமைவிடங்களுக்கு இடமாற்றம் பெற்றது. அவ்வாறு அங்குமிங்குமாகச் சென்ற பயணத்தில் இப்போது நான்காவது இடத்தில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைவிடமாக அமைந்துள்ளது. ஃபிளர்வர் வீதியில் அமைந்திருந்த அலுவலகம் பின்னர், 24/2, 28வது ஒழுங்கைக்கு மீண்டும் மாறியதுடன், நாம் அங்குதான் நீண்டநாட்கள் தரித்திருந்தோம். தற்போதைய அலுவலகம் அமைந்துள்ள இடத்திற்கு அதன் பின்னரே வந்தோம். இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் நான்கு இடங்களுக்கு தலைமை அலுவலகம் மாற்றப்பட்டுள்ளது.

நான் பணிபுரிகின்ற Outreach அலுவலகமும் தலைமை அலுவலகத்திலிருந்து தொலைவில் அமைந்திருந்ததுடன், மீண்டும் ஐந்து வருடங்களுக்குப் பின்னர் தலைமைக் காரியாலயத்திற்கு அண்மையில் வந்திருக்கின்றது.

இவ்வாறு அங்குமிங்கும் மாறி மாறி, பல்வேறு சவால்களுக்கும் தடைகளுக்கும் நடுவே பிரசைகளின் ஜனநாயக உரிமைகளை வலுப்படுத்துவதற்காகவும் புதிய அரசியற் கலாசாரமொன்றை உருவாக்குவதற்காகவும் இடைவிடாது பணியாற்றினோம். வீழ்ந்து வீழ்ந்து எழுந்தோம். அவ்வாறு மேற்கொண்ட பல விடயங்களுக்கிடையே நாம் மிகத் திருப்தியடைகின்ற சில நிகழ்ச்சித் திட்டங்களைப் பற்றிச் சுருக்கமாக நினைவூட்ட விரும்புகின்றேன்.

### அரசகரும மொழிக் கொள்கை

அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக செயற்பட்ட காலம் மிகவும் பயன்மிக்கதாக அமைந்ததைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். சட்டங்கள், ஒழுங்குவிதிகளுக்கு மாத்திரம் மட்டுப்பட்டிருந்த மொழிக் கொள்கையை அதற்கு அப்பால் எடுத்துச் சென்று பல்வேறு அரச நிறுவனங்கள், சமூக அமைப்புக்கள், கூட்டுத்தாபனங்கள் உள்ளிட்ட பல இடங்களில் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படும் அளவுக்கு நாம் முயற்சிகளை மேற்கொண்டோம். ஒரு மொழியில் மட்டுமே பெயர்ப் பலகைகள் காணப்பட்ட பல அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் பெயர்ப் பலகைகளைப் பொருத்துவதற்காக நாம் அந்நிறுவனங்களோடு இணைந்து செயலாற்றினோம். அவ்வாறே பஸ் வண்டிகளின் பெயர்ப் பலகைகள், புகையிரத நிலைய அறிவித்தல்கள் போன்றவற்றிலும் அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான வலியுறுத்தல்களை மேற்கொண்டோம். அரசகரும மொழிக் கொள்கையின் கீழ் பல உயர்நீதிமன்ற வழக்குகளைத் தொடுப்பதற்கு நாம் முன்னின்றதுடன், தமது மொழியில் உயர்கல்வியைக் கற்றல் தொடர்பில் பல்கலைக்கழகக் கல்வி தொடர்பான வழக்கு, தேசிய அடையாள அட்டை தொடர்பில் தொடுக்கப்பட்ட வழக்கு என்பன குறிப்பிடத்தக்கவை. அவற்றில் தேசிய அடையாள அட்டை இரு மொழிகளிலும் வெளியிடப்பட்டமை நாம் பெற்ற வெற்றியாகும்.

மருந்துப் பொதிகளிலும் நுகர்வுப் பொருட்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள், மொழிக் கொள்கைக்கு ஏற்றவாறு அமைய வேண்டும் என நாம் வழக்குத் தொடர்ந்ததுடன், பல நுகர்வுப் பொருட்களில் மொழிக் கொள்கைக்கு ஏற்றவாறு குறிப்பிடப்பட வேண்டும் என அண்மையில் சுற்றுநிருபங்கள் வெளியிடப்பட்டன.

மருந்துப் பொதிகள் தொடர்பான வழக்கு இன்னமும் விசாரணையில் உள்ளது. அவ்வாறே பல்வேறு அரச நிறுவனங்களில், மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு, அதிலுள்ள குறைபாடுகள் இனங்காணப்பட்டது. அதேசமயம், 2017ல் மொழி அமைச்சுடன் இணைந்து 49 அமைச்சுகளில் அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இணைந்து, செயலிழந்து போயிருந்த பொறிமுறையை வலுப்படுத்துவதில் வெற்றி பெற்றோம். இன்று நாடு முழுவதும் எந்தவொரு பிரஜையும் தமது மொழியில் செயலாற்றக் கூடியதாக இருப்பின் அது எமது நிறுவனத்தின் இடையீட்டின் காரணமாக ஏற்பட்ட ஒரு மாற்றம் என்பதையிட்டு நாம்  மகிழ்ச்சியடைய முடியும்.

### தகவல் அறியும் உரிமை

தகவல் அறியும் உரிமை தொடர்பான பேச்சுவார்த்தைகளில் தகவல் அறியும் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக சிவில் அமைப்பு என்ற வகையில், ஆரம்பத்திலிருந்தே, தொடர்புகொள்ளக் கிடைத்தமை தொடர்பிலும் மகிழ்ச்சியாகவே உள்ளது. நாம் இது தொடர்பில் செயற்பட ஆரம்பித்த காலத்தில், ஒரு கனவாக இருந்த தகவல் அறியும் உரிமையானது பின்னர் ஒரு சட்டமாக நிறைவேற்றப்பட்ட பின்னர், அது பற்றி அரச உத்தியோகத்தர்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட பிரஜைகளை அறிவூட்டுவதற்காக நாட்டின் அனைத்து மூலை முடுக்குகளிலும் கூட அலைந்து திரிந்தேன். அவ்வாறான பல இடங்களில் பிரஜைகள் தகவலறியும் சட்டத்தின் ஊடாகத் தமது உரிமைகளைக் கோரி வென்றெடுத்துள்ளமையைக் காணுவது பெரு மகிழ்ச்சியாக இருக்கிறது.

### மாகாண சபைப் பொறிமுறையை வலுப்படுத்தல்

அவ்வாறே, எமது பணிகளின் வரலாற்றில் மிகச் சிறந்த காலகட்டமாக பல்வேறு உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் மாகாண சபைகளுடன் பணியாற்றக் கிடைத்த வாய்ப்பை என்றுமே மறக்க முடியாது. மாகாண சபைகளின் உத்தியோகத்தர்களுடன் பல சந்தர்ப்பங்களில், மாகாண சபைகள் முறையை வலுப்படுத்துவதற்காக பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டவாறு பணிபுரிந்தோம். மாகாண சபைகளின் ஆளுநர்கள், முதலமைச்சர்கள், ஆளுங் கட்சி - எதிர்க்கட்சி என்ற பேதங்களின்றி அனைத்து உறுப்பினர்களுடனும் நிருவாக உத்தியோகத்தர்களுடனும் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றிய சந்தர்ப்பங்கள் பல. அப்போது அவர்கள் வழங்கிய ஒப்பற்ற ஒத்துழைப்பை நினைவுகூர வேண்டும். இன்று உயிரோடிருக்கின்ற மற்றும் இல்லாத பல முதலமைச்சர்கள் அன்று எமக்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள். மாற்றுக் கொள்கைக்கான நிலையம் பற்றிப் பல்வேறு விமர்சனங்கள் வெளிச் சமூகத்திலிருந்து தோன்றியபோதிலும் மாகாண சபைகளுடன் பணியாற்றியது அவ்வமைச்சர்களது நம்பிக்கைக்கு ஏதுவாகியது.

இப் பணிப் பட்டியல் பற்றிக் குறிப்பிடுகையில், ஒரு சிறப்பான நபர் நினைவுக்கு வருகின்றார். திரு. திலக் ஜயரத்ன அவர்களே அந்த நபர். செய்யப்படுகின்ற இப்பணிகள், அடிமட்ட மக்களிடையே கட்டாயமாகக் கொண்டு செல்லப்பட வேண்டும் எனவும் சமூகத்தை நல்லமுறையில் மாற்றியமைக்க முயற்சிப்பதாயின் அது பற்றிச் சிந்திக்குமாறும் பல சந்தர்ப்பங்களில் அவர் என்னிடம் சொல்லியிருக்கிறார். அதற்கேற்ப, பிரதேச மட்டத்திலான நிறுவனங்களுடன் பணியாற்றிய பல களநிலைச் செயற்பாடுகளை அதற்கு அப்பால் எடுத்துச் சென்று அவற்றை மேலும் அடித்தட்டு மக்களிடையே கொண்டு செல்ல வேண்டுமென நாம் சிந்தித்தோம். அதன் மேலுமொரு பெறுபேறாக, உள்ளூராட்சி பொறிமுறையைப் போன்றே கிராமிய மட்டத்தில், அபிவிருத்திப் பொருளாதார, கலாசாரத்தை கட்டியெழுப்பக் கூடிய 'பிரஜைகள் சபை' எண்ணக்கரு நடைமுறைப்படுத்தப்பட்டது. கிராமத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள், கிராமத்தின் நிருவாக நடவடிக்கைகள், கிராமத்தின் கலை மற்றும் கலாசார நடவடிக்கைகள் தொடர்பில் கிராமத்திலேயே உள்ள அமைப்புகளுடன் இணைந்து தீர்மானங்களை எடுப்பதன் ஊடாக வெளிவாரித் தலையீடுகளற்ற ஒழுங்குபடுத்தப்பட்ட அபிவிருத்தியையும் நிருவாக விதிமுறையொன்றையும் உருவாக்குவது 'பிரஜைகள் சபை' எண்ணக்கருவின் அடிப்படை நோக்கமாக இருந்தது. அது பல மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

### தேயிலைச் சாயம்

இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பாரிய பங்களிப்பை தோட்டப் பகுதியில் வாழும் மலைநாட்டுத் தமிழர்களே வழங்குகின்றனர். அவர்களுடைய பிரஜா உரிமைகளை வலுப்படுத்துவதற்காக மேற்கொண்ட பல செயற்பாடுகள் எங்களுடைய நினைவுகளில் பதிந்துள்ளன. முகவரியற்ற பிரசைகளுக்கு ஒரு முகவரியை வழங்குவது அதன் பிரதான செயற்றிட்டமாக அமைந்தது. பல்வேறு தோட்டச் சமூகங்களில் வாழும் தொழிலாளர்களுக்கு குறிப்பிட்ட முகவரியொன்று இல்லாத காரணத்தால் பல பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கின்றார்கள் என்பதை நாம் தோட்டங்களில் நடமாடியதன் மூலம் அனுபவத்தில் கண்டறிந்தோம். முக்கியமான கடமை சார்ந்த கடிதங்கள் கிடைக்காமல் போதல், பல்கலைக்கழக நுழைவு போன்றவற்றிற்கு ஏற்புடைய கடிதங்கள் வராமை, வங்கி மற்றும் வேறு நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் கடிதங்கள் உரிய காலத்தில் வந்து சேராமை காரணமாக பல்வேறு நெருக்கடிகளுக்கு அந்த மக்கள் ஆளாகி வந்தனர். உணர்வுகளற்ற கொங்கிறீட் கட்டிடங்களுக்குக் கூட முகவரி இருக்கின்ற ஒரு நாட்டில் சுவாசிக்கின்ற மனிதர்களுக்கு முகவரி ஒன்று இல்லாத காரணத்தால் அவர்கள் படும் வேதனையை இனங்கண்டோம். அதற்கேற்ப, பதுளை, நுவரெலியா, மாவட்டங்களில் பெரும்பாலான பிரதேசங்களில் முகவரிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக நடத்த எம்மால் முடிந்தது.

### "தேயிலைச் சாயம்"

அதுமட்டுமன்றி, அண்மையில் நாம் நடத்திய, மலையகத் தமிழ் மக்களின் வாழ்க்கையின் குறுக்குவெட்டைப் பிரதிபலிக்கும் "தேயிலைச் சாயம்" புகைப்படக் கண்காட்சி எமது இன்னுமொரு வெற்றிகரமான நிகழ்வாகும். மலையக இளைஞர்

யுவதிகளை தெளிவுறச் செய்தல், மற்றும் தமது பிரச்சினைகளை கலையின் ஊடாக தொடர்பாடல் செய்தல், தொடர்பான பல கலந்துரையாடல்களின் பின்னர், வாழ்நாளில் முதன்முதலாக டிஜிட்டல் கமெரா ஒன்றைத் தொட்டுக் கூடப் பார்க்காத மனித ஜன்மங்கள் கொழும்பு “லயனல் வெண்ட்” கலை அரங்கில் தேசிய மட்டத்திலான கண்காட்சி வரையில் முன்னேற்றங்கண்டமை பலரது கவனத்தையும் ஈர்த்தது. அதனூடாக தோட்டக் கம்பனிகளும் பொது நிருவாகக் கட்டமைப்பும் மலையக மக்கள் மீது அவதானம் செலுத்தின. இது அம்மக்களுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

இவ்வாறு சொல்வதற்குப் பல விடயங்கள் காணப்பட்டாலும் பிரதானமாக மேற்கொண்ட சில நிகழ்ச்சித் திட்டங்களை மட்டும் நான் சுருக்கமாகக் காட்டியுள்ளேன். இவை தவிர, மேற்கொண்ட பல விடயங்களைக் குறிப்பிடுவதற்கு நான் நேரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. கடந்த 25 ஆண்டுகளைத் திரும்பிப் பார்க்கின்ற போது பெரு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் ஆரம்பத்திலிருந்தே தொடர்ச்சியாக அடித்தட்டு மக்களுக்காகப் பணியாற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததே அந்தப் பெருமகிழ்ச்சிக்குக் காரணமாகும்.

இங்கு கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து அவர்களுக்கே விசேட கௌரவம் உரித்தாக வேண்டும். மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு வேலையும் அவர் வழங்கிய எல்லையற்ற சுதந்திரம் மற்றும் வழிகாட்டல் காரணமாகவே வெற்றியடைந்தன. அவ்வாறில்லாவிடில் இவ்வாறான பாரிய பணிகளை மேற்கொள்வது கடினமான விடயம். அவரில்லையேல் ‘மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்’ என்ற நிறுவனமும் இல்லை. வெறுமனே நிறுவனத் தலைவராகவோ, நிருவாகியாகவோ இல்லாமல், ஏனையோரின் கருத்துகளையும் சகித்து, அவற்றுக்கு இடமளித்து மனப்பூர்வமாகவும் மனித நேயத்துடன் கூடிய நண்பரைப் போன்றும் செயலாற்றியமை இப்பயணத்திற்கு ஏதுவாக அமைந்தது. நாம் பல வாத விவாதங்களையும் தர்க்கங்களையும் செய்துள்ளோம். அவை பணிகள் தொடர்பிலேயே அன்றி வேறெதனையும் நோக்காகக் கொண்டிருக்கவில்லை. பேராசிரியர் உயன்கொட அவர்களைப் பற்றியும் அதே விடயத்தைத்தான் குறிப்பிட்டாக வேண்டும். அவர் எனது ஆசிரியர் மட்டுமல்ல. எமது நிறுவனத்தைத் தொடங்கி பணிப்பாளராகப் பணிபுரிந்த அவர், என்னைப் போன்ற ஒருவரை தயங்காது இந்த நிறுவனத்திற்குத் தேர்ந்தெடுத்திராவிடில் நான் இங்கே நிற்கும் வாய்ப்பிருந்திருக்காது.

### செல்ல வேண்டிய பாதை மிக நீண்டது...

பல்வேறு பணிகளுக்கு மத்தியில் காலம் கடந்து சென்றதை உணர முடியவில்லை. நாங்களும் மெல்ல மெல்ல முதுமையடைந்து வருகின்றோம். நாட்டுக்கும் சமூகத்திற்கும் பயனுள்ள ஏதேனுமொன்றை இங்கிருந்துதான் செய்ய முடிந்தது என்பதுதான் கடந்து சென்ற இருபத்தைந்து வருடங்களுக்குள், இந்த இடத்தை விட்டுச் செல்ல தோன்றாததற்கும் இப்போது தரித்திருப்பதற்கும் காரணம். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் என்கின்ற சகோதரக் குடும்பத்தின் உறுப்பினர் என்பதாலேயே சிங்கள, தமிழ், முஸ்லிம் உள்ளிட்ட ஒட்டுமொத்த பிரஜைகளுக்காகவும் பல பணிகளை மேற்கொள்ள முடிந்தது. அது தாமரை மலர்கள் மீதான பாதையில் நடந்து சென்ற பயணம் அல்ல. பல துன்ப துயரங்களுடனும், உயிர் அச்சுறுத்தல்களின் மத்தியிலும் சென்ற சவால் மிக்க பயணம். இரகசிய பொலிசாரினதும், பல்வேறு புலனாய்வுச் சேவைகளின் விசாரணைகளுக்கும் அரசின் கோபத்திற்கும், தீவிரவாதக் குழுக்களால் தேசத் துரோகிகள் என்ற முத்திரை குத்தலுக்கும், நேரடியான உயிர் அச்சுறுத்தல்களுக்கும் ஆளாக நேர்ந்தது. அவை அனைத்திலுமிருந்தும் கட்டியெழுப்பப்பட்ட அந்த அனுபவம் எமது வெற்றிக்கு அடிப்படையாக அமைந்தது.

நாம் பல பணிகளை மேற்கொண்டிருந்தாலும் இன்னும் ஆற்றப்பட வேண்டிய பணிகள் பல உள்ளன. கடந்து சென்ற இருபத்தைந்து ஆண்டுகளின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு, எதிர்காலத்தை நோக்குகின்றபோது எமது செயற்பாடு நாம் கவனம் செலுத்துகின்ற விடயப் பரப்புகள் என்பனவற்றை மேலும் விரிவாக்க வேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றது. மக்களுக்கு வாழ்க்கையின் கட்டாய தேவையாக அமையும் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளைப் போன்றே, கிராமிய கடப்பாடு, காடழிப்பு உள்ளிட்ட சுற்றாடல் பிரச்சினைகள் போன்றவை பற்றியும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதைப் போன்றே மக்களோடு பணியாற்றுவதும் அத்தியாவசியமான விடயமாகும். இது தொடர்பில் நிறைவேற்றுப் பணிப்பாளர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையின் கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கின்றேன்.

இந்த மண்ணின் மக்களுக்காக, இன்னும் இருபத்தைந்து வருடங்கள் தொடர்ச்சியாக பணியாற்றுவதில், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிலைப்பாடு, எமது இளம் ஆய்வுக் குழுவின் தொடர்ச்சியான ஆக்கத்திறன் மிக்க பங்களிப்பிலேயே தங்கியுள்ளது. நாம் செய்யாத பல விடயங்கள் CPA என்ற ரீதியில் அவர்களால் செய்யப்பட வேண்டியுள்ளன. அவர்கள் இந்த அஞ்சல் ஓட்டத்தைத் தொடர்ச்சியாகக் கொண்டு செல்வார்கள் என்ற எதிர்பார்ப்போடுதான் அஞ்சல் ஓட்டத்தின் தடியை அவர்கள் கையில் ஒப்படைக்கின்றோம். உள்ளன்பு, மனிதநேயம், நேர்மை, அர்ப்பணிப்பு என்பவற்றோடு, அடிமட்டத்தில் பணியாற்றுவதற்கான உண்மையான ஆர்வம் மட்டுமே அதற்குத் தேவை. இப்போது அதற்கான காலம் கனிந்துள்ளது. கற்களுக்கும் முட்களுக்குமிடையே கந்தகப் பூமியில் நடந்து வந்த நினைவுகளின் ஞாபகங்களுக்கிடையே இன்னும் புதிய பாதைகள் திறந்துள்ளன. எனவே, நாம் அவற்றின் ஊடாகவும் நடந்து செல்வோம்.

---

**லயனல் குருகே**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளர்

# இலங்கையின் ஆளுகைக்கு வழங்கிய பங்களிப்பு



உதய இதிரிமான்ன

அரசுக்குள்ளே அங்கத்துவம் கிடைத்த பின்னர் ஒரு நபர் பிரசையாக மாற்றப்படுகின்றார். அரசால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் பிரசைகளாகிய எமது வாழ்க்கையிலும் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் அதனூடாக பிரசைகளுக்குக் கிட்டுகின்ற வாழ்வுக்கான வாய்ப்பு எதுவெனத் தீர்மானிக்கப்படுகின்றது.

வளர்ச்சியடையாத நாடொன்றில் வாழ்ந்து கொண்டு, பல்வேறு அரசியல் ரீதியான சமூக மற்றும் பொருளாதார அழுத்தங்களுக்குள் வாழும் நாம் அதன் அரசியல், பொருளாதார மற்றும் சமூக மாற்றத்தின் இயல்பைச் சரியாகப் புரிந்து கொள்வது கடினம். விரும்பியோ விரும்பாமலோ, அவற்றின் பங்காளியாக இருக்கின்ற ஒரு சூழலில், நடுநிலையோடு அவற்றை விளக்குவதும் புரிந்து கொள்வதும் சிரமமானது. அவ்வாறானதொரு சூழலில், வெதும்பிக் கிடக்கும் நம்மால், பல்வேறு சந்தர்ப்பங்களில் தலைவர்களினதும் குழுக்களினதும் அறிவீனங்கள், முட்டாள்தனங்கள், அல்லது அதிகார மோகத்தின் அணுகுமுறைகளை இதற்கான காரணங்களாகக் காண முடிகின்றது.

இவ்வாறானதொரு சூழலில் ‘அதற்கான பிரசைகளின் கலந்துரையாடலொன்றினாலும், அறிவுசார் இடையீட்டினாலும், சிறந்த சனநாயக ரீதியான பிரவேசத்துக்குள் அச் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான அழுத்தங்கள் மீது இடையீடு செய்ய முடியாது. அவ்வாறே அவற்றின் ஊடாக அக்காரணிகள் மீது அழுத்தமொன்றை ஏற்படுத்த முடியும்.’

அக்கருத்திற்கும் செயற்பாட்டிற்கும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கடந்த 25 வருடங்களாகவே தொடர்ச்சியான இடையீட்டை மேற்கொண்டது. அதுவே இத்தலைப்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் எனது அனுபவம்.

அரசையும் பிரசையையும் வலுப்படுத்துகின்ற செயற்பாடொன்று இல்லாமல் காணப்படுகின்ற அரசுக்குள், பிரசையைப் போன்றே, அரசுக்கும் நிலைப்பாடொன்றையும் எதிர்காலத்தையும் ஏற்படுத்திக் கொள்வது கடினம் என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆரம்பத்திலிருந்தே நம்பியது. அதற்கேற்ப சமகால சமூகத்தை ஆராய்ந்து, கடந்த 25 வருடங்களாக அரசியல் ரீதியாக நாட்டில் வலிமையான சனநாயக முறையொன்றும் கட்டமைப்பொன்றும் உருவாக வேண்டும் என்ற கருத்துடன் போராடியது. சனநாயகக் கட்டமைப்பொன்றில் பிரசையையும் அரசையும் வலுப்படுத்துவதே அதன் அடிப்படைத் தொனிப்பொருளாக இருந்தது.

அதற்கு ஏற்புடையதாக, பிரசைகள், சிவில் அமைப்புகளைப் போன்றே, அறிவுசார் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இடையீடுகள் அளப்பெரியவை. அதில் கடந்து சென்ற 25 வருடங்களுக்குள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை, ஒவ்வொன்றாக கணக்கிட்டால் அதற்கு பாரிய அளவிலான பெறுமதி கிட்டும் என நான் நினைக்கிறேன்.

25 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட அக் கலந்துரையாடலுக்கு, இன்று அதாவது, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திற்கு 25 வருடங்கள் பூர்த்தியாகின்ற இத்தருணத்தில் அங்கீகாரம் கிடைத்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயம். அதன் மூலம் இலங்கைச் சமூகத்திற்குப் புதிதாகப் பார்ப்பதற்கு ஒரு விழியைப் போன்றே சிந்திப்பதற்கு புதியதோர் பாதையும் திறக்கப்பட்டுள்ளது.

உலகத்தில் காணப்படுகின்ற மற்றும் ஏற்படுகின்ற, சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டுமாயின், 'இலங்கையர் என்ற தேசியமும் அரசைக் கட்டியெழுப்பும் செயற்பாடும்' மீண்டும் ஆழமான கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட வேண்டும். இது இத் தருணத்தில், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திற்கு கட்சி, எதிர்க்கட்சியைப் போன்றே, நிடுநிலையோடு கருத்துத் தெரிவிக்கின்ற பலரதும், அவ்வாறே குழுக்களினதும் கருத்தாகியுள்ளது. அதற்கேற்ப, அவ்வாறான செயற்பாடுகளுக்குத் தேவைப்படுகின்ற, முன்னோடியினது வகிபாகம் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் மூலம் அதியுயர்ந்த மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நாம் நம்புகின்றேன். மேலும் கடந்த காலகட்டத்தில் பிரசைகள் முகங்கொடுத்த சமூக மற்றும் அரசியல் அழுத்தங்களுக்கு எதிரான இடையீடு, அதன் மூலம் சமூகத்திற்குப் பெற்றுக் கொடுத்த வெற்றிகள் என்பவற்றை, சிவில் அமைப்பாக மேற்கொண்ட மாபெரும் பணியாக நான் கருதுகின்றேன்.

விமர்சனங்கள், தாக்குதல்கள் மற்றும் கரடுமுரடான பாதைகளின் ஊடாக 25 வருடங்களாகப் பயணித்த நிறுவனத்தின் அப் பயணப் பாதையானது இலகுவானது அல்ல.

அவ்வாறான பின்னணியில் சரியான வழிகாட்டலை அளித்து உயர் முகாமைத்துவம் காட்டிய பங்களிப்பும் ஏனைய உறுப்பினர்கள் நிறைவேற்றிய பணிப் பொறுப்பும் நிறுவனத்தின் வெற்றிக்குத் துணையாயின.

அவர்கள் அனைவரும் கடந்த 25 வருடங்களில் நிறுவனம் பெற்ற வெற்றியின் சமமான பங்காளிகள் என நான் நன்றியுடன் கூறுகின்றேன். அவ்வாறே 25 வருட காலமாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் செயலாற்றக் கிடைத்தது நான் பெற்ற பாக்கியம் என்றே நினைக்கின்றேன்.

---

**உதய இதிரிமான்ன**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் முன்னாள் ஆய்வாளராகவும், தேர்தல் வன்முறைகள் அவதானிப்பு நிலையத்தின் தேசிய இணைப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். மோதல்களுக்குப் பின்னரான ஐக்கிய நாடுகளின் தேர்தல்கள் விவகாரங்களிலும், நிர்வாகத்திலும் நீண்டகால அனுபவமும் அறிவும் உடையவர். மேலும் ஆப்கானிஸ்தான், ஈராக், நேபாளம், பாகிஸ்தான் ஆகிய பல்வேறு நாடுகளிலும் பரந்துபட்ட சேவை அனுபவம் உடையவர். ஐக்கிய நாடுகளின் பல்வேறு தூதுக்குழுக்களுக்காக ஆப்கானிஸ்தானிலும், நேபாளத்திலும், ஐக்கிய நாடுகளின் செயற்பணிகளில் கடமை புரிந்துள்ளார். ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் பிரண்டய் பல்கலைக்கழகத்தில் சமூகக் கொள்கைகளுக்கும் முகாமைத்துவத்திற்குமான ஹெலர் கல்லூரியில் நிலைபேறான சர்வதேச அபிவிருத்திக்கான முதுகலைப் பட்டத்தைப் பெற்றுள்ளார். தற்போது சோமாலிய நாட்டில் ஐக்கிய நாடுகளின் தூதுக் குழுவின் தேர்தல் உத்தியோகத்தராகக் கடமையாற்றுகிறார்.

# மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆரம்ப நாட்களின் போலித்தனமற்ற பொன் போன்ற பெறுமதி மிக்க நினைவுகள்



**அல்தாஃ ஹுசைன்**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆரம்பிக்கப்பட்டு சில மாதங்களின் பின்னர், நான் அதில் இணைந்து கொண்டேன். எனக்கு முன்னால் லயனல் குருகே, இணைந்திருந்ததுடன், நாம் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆரம்ப உறுப்பினர்களிடையே சிலரானோம். முதலாவது அலுவலகம், இன்னர் ஃபிளவர் வீதி என்ற இடத்தில் தாபிக்கப்பட்டதுடன் அப்போது எமது பணிக்குழுவில் ஒருசிலரே காணப்பட்டனர். அக்காலத்தில் இடம்பெற்ற விடயங்கள் மறக்க முடியாததும் மிகவும் சுவாரஸ்யமான சந்தர்ப்பங்கள் பலவற்றையும் கொண்டிருந்தன. அப்போது நான் யாரும் கண்டுபிடிக்க முடியாதவாறு ஊளையிடும் ஆற்றல் மிக்கவனாக இருந்ததுடன், எனது நண்பர்கள் நான் அதனை மிகச்சிறப்பாக எப்படிச் செய்கின்றேன் என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் மிக விருப்பத்துடன் பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஒருமுறை என்னைச் சந்திப்பதற்காக அலுவலகத்திற்கு வந்த நண்பியர் இருவர் சனக்க சமரசிங்கவின் கண்ணில் பட்டனர். அவர் மிகவும் வாட்டசாட்டமான நபராக இருந்ததுடன், அவர்கள் அவரைக் காணும் போது பெரிதும் மனச் சஞ்சலத்திற்கு ஆளானது தெரிந்தது. அந்த வாட்டசாட்டமான இளைஞன் யாரென அவர்கள் என்னிடம் அடிக்கடி கேட்டு தொந்தரவு செய்ததும் என்னை மீண்டும் கடந்த காலத்தை நோக்கி இட்டுச் செல்கின்ற நினைவாகும். அது நான் மதிப்பளித்த வேடிக்கையாகக் கழித்த காலமாக இருந்ததுடன், இன்று அவ்வாறான வேடிக்கையானதும் உத்வேகம் மிக்கதுமான பணிச் சூழலொன்றை அனுபவிப்பது எப்போதாவது காணக் கிடைக்கின்ற காட்சியாகவே உள்ளது.

ஒரு காலகட்டத்தில், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அலுவலகத்திற்கு வெளியே ஃபிளவர் வீதியில் இலக்கம் 28ம் ஒழுங்கைக்கு அமைவிடம் மாறியது. அதிலிருந்து, எமது நிறுவனம் உண்மையாகவே விரிவடைந்ததுடன், பணிக்குழுவும் விரைவாக வளர்ச்சியடைந்தது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் தகவற் தொழில்நுட்ப நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் எனது வகிபாகத்தில், எனக்கு பணிக்குழுவோடு

பல சந்தர்ப்பங்களில், ஒன்றாகப் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது நிறுவனத்தின் நிருவாக உத்தியோகத்தராக இருந்த ஜீன் கொட்லிப்பும் நானும் ஒன்றாக இணைந்து ஒரு குழுவாக இயங்கினோம். நாம் சுற்றுலாக்கள், விளையாட்டு விழாக்கள் உட்பட பல நிகழ்வுகளை ஏற்பாடு செய்தோம். நாம் முதன் முறையாக பெலிஹுல் ஓயாவிலிருந்து ஜீனின் தோட்டத்திற்கு சுற்றுலா ஒன்றை மேற்கொண்டிருந்தோம். அப்போது இரவில் அதிக குளிர் காரணமாக எனது நெஞ்சு அடைத்துக் கொண்டு, சுவாசிக்க முடியாமற் போனது, அன்றைய தினம் நான் இறந்து போகக் கூடிய அளவுக்கு சிரமமாக இருந்தாலும், மறக்க முடியாத அனுபவமாக அமைந்தது. அவ்வாறே தேவின் புகழ்பெற்ற, 'நிர்வாணக் குளியல்' பற்றிய சம்பவமும், பின்னர் தேவினதும் ஷிமாலியினதும் காதலுக்கும் பெலிஹுல் ஓயா பயணத்தில் வித்திடப்பட்டது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் விரிவடையத் தொடங்கிய பின்னர், ஒவ்வொருவரும் வேலைப்பளு மிக்கவர்களானதுடன் பணிக்குழுவின் நட்புறவுகளை அதிகரிக்கக் கூடிய சுற்றுலாக்களையும் விழாக்களையும் ஏற்பாடு செய்வது சிரமமாக இருந்தது. பணிக்குழு என்ற வகையில் அவ்வாறான சுமுகமான சந்திப்புகளும் குறைந்து போயின. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஒரு நிறுவனம் என்ற வகையில் வளர்ச்சி கண்டது, அதன் ஆறு பல்வேறு பிரிவுகளும், சில அலுவலகங்களும் காணப்பட்டதுடன், அது ஒரு கூரையின் கீழுள்ள ஒரு நெருங்கிய அணியாகத் தொடர்ந்தும் செயற்படமுடியாத அனுபவமாகியது.

அமைப்பானது இப்போது குறிப்பிடத்தக்க அளவில் மிகப்பெரிய சக்தியாக வளர்ந்திருப்பது தொடர்பில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். வேறெந்த அரச சார்பற்ற நிறுவனமும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமளவிற்குச் செயற்படவில்லையென்றால் அது மிகையாகாது என நினைக்கின்றேன். பிரசைகளின் உரிமைகளை அடக்குவதற்கு முயற்சிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அவ்வாறான முயற்சிகளுக்கு எதிராக தனது நிலைப்பாடுகளைச் சுட்டிக் காட்டி அறிக்கைகளை வெளியிட்டு, நீதிமன்ற ரீதியான வழக்கு நடவடிக்கைகளைக் கோப்பிட்டு அல்லது சமூக வலையமைப்புகள் ஊடாக முன்னணி வகித்தது. தற்போதைய சமூக ஊடகப் பாவனையுடன், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தை விட அதன் தாக்கம் பெருமளவில் அதிகரிப்பதுடன் ஒட்டுமொத்தமாக சந்தேகமின்றி இலங்கை சிவில் சமூகத்திற்குள் மாற்றமொன்றை ஏற்படுத்தியுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் உருவான ஆரம்ப காலத்தில், இலங்கையில் உரிமை மீறல்கள் பொதுவான சம்பவங்களாக இருந்தன. பல வருடங்களாக மக்கள் அவர்களின் உரிமைகள் தொடர்பில் மேலும் அறிவூட்டப்பட்டுள்ளதுடன் இணையதளம் காரணமாக இப்போக்கு உலகளாவிய ரீதியில் இனங்காணப்பட்டுள்ளது. ஆயிரமாம் ஆண்டில் உலகளாவிய சந்ததி நிகழ்காலத்தில் இவ்வுரிமைகளை குறைவாகக் கருதினாலும், அது இலகுவான போராட்டமாக இருக்கவில்லை.

பெரும்பாலான அரச சார்பற்ற அமைப்புகளால் செய்ய முடிந்த அல்லது அச்சமின்றி பணியாற்ற முன்வந்த அளவை விடவும் அதிக அறிவூட்டலைச் செய்வதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சந்தேகமின்றி உதவி செய்துள்ளது.

நான் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் உறுப்பினராக இருந்தமை தொடர்பில் மிக்க மகிழ்ச்சியடைவதுடன், நான் அமைப்புடன் இருந்த 10 வருட காலமானது மிகவும் சுவாரஸ்யமானதும் திருப்திகரமான அனுபவங்களையும் கொண்ட காலகட்டமாக இருந்தது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எனக்கும் இன்னும் பலருக்கும் தொழில் ரீதியாகவும் தனிப்பட்ட ரீதியிலும் ஏற்படுத்திய தாக்கங்கள் பல.

கலாநிதி சரவணமுத்து அவர்களும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிக்குழுவும் கடந்த 25 வருடங்களில் அவர்கள் மேற்கொண்ட அற்புதமான பணியை தொடர்ந்தும் முன்னெடுப்பார்கள் என நான் எதிர்பார்ப்பதுடன் காலம் கனிந்துவரும் போது 50வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் பாக்கியம் கிடைக்கும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

---

**அல்தாஃப் ஹுசைன்**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் ஆரம்பத்திலிருந்தே பணிபுரிந்த முன்னோடிப் பணிக்குழு உறுப்பினராவார். தொடக்கத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகவும் பின்னர் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் தகவல் தொழில் நுட்பப் பிரிவின் பிரதானியாகவும் பணியாற்றினார். தனது பதவிப் பணிகளுக்கு அப்பால் சென்று நிறுவனத்தின் பல்வேறு விழாக்களையும் நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்வதற்குப் பொறுப்பாகச் செயற்பட்டார். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பல்வேறு பிரிவுகளிடையே நெருங்கிய உறவுகளை ஏற்படுத்தவும், விசேடமாக பங்களிப்புச் செய்தார். அவர் எப்போதும் மகிழ்ச்சியாகவே காணப்பட்டார். அலுவலகச் சூழலை எப்போதும் உற்சாகமாக வைத்திருப்பதற்கு அவர் பாரிய பங்களிப்புச் செய்தார்.

# சனநாயக ஆளுகைக்கான பங்களிப்பு



**தேவானந் இராமையா**

“வன்முறை அல்லது வன்முறையின் அச்சுறுத்தல், மிரட்டல் அல்லது துன்புறுத்தல், அல்லது வெறுப்புப் பேச்சு ஊடாக அவ்வாறான செயற்பாடுகளைத் தூண்டிவிடுகின்ற மற்றும் ஆக்கிரமிப்பு ரீதியான அரசியல் அறிக்கைகள், சனநாயக தேர்தல்களுடன் பொருந்துவதில்லை” ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பிற்கான கைநூல்.

கடந்த 25 ஆண்டுகளில் சனநாயக ரீதியான ஆளுகைக்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆக்கத் திறன்மிக்க பங்களிப்புப் பற்றி நான் மீட்டிப் பார்க்கின்றபோது, உண்மையிலேயே மேலும் முக்கியமானதும் அழுத்தங்கள் மிக்கதுமான பணியாக தேர்தல் வன்முறைச் செயற்பாட்டு கண்காணிப்பு மத்திய நிலையம் (சீஎம்ஈவீ) முன்னணி வகித்து மேற்கொண்ட பணிகள் இலங்கையின் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் மேம்பாடுபெற உதவியுள்ளது.

தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்காக, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், சுதந்திர ஊடக அமைப்பு மற்றும் அரசியல் வன்முறைக்கு எதிரான கூட்டமைப்புடன் இணைந்து 1997ல், தேர்தல் வன்முறை கண்காணிப்பு மத்திய நிலையம் தாபிக்கப்பட்டது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில், தேர்தல் வன்முறைக் கண்காணிப்பு மத்திய நிலையத்தில், 1998ல் இணைந்து கொண்ட எனக்கு, தேர்தல் வன்முறைக் கண்காணிப்பு மத்திய நிலையத்தின் மிக முன்னோடிப் பணியான 1999 ஜனவரியில் மிக இழிவான வடமேல் மாகாண மாகாண சபைத் தேர்தலை கண்காணிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அது என்ன மாதிரியான தேர்தலாக இருக்கும்? இலங்கையின் வரலாற்றில் வன்முறைமிக்க தேர்தல் அதுதான். பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறியவுடன் இளைஞனான எனக்கு இது தீயிலிருந்து கிடைத்த தீட்சையாகியது. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களில் மக்களின் உரிமையைக் கண்டிப்பாக உள்ளடக்கிய அத் தேர்தலை இரத்துச் செய்யுமாறு தேர்தல் வன்முறைக் கண்காணிப்பு நிலையம் கோரியது.

2021ல் இக்கட்டுரையை எழுதும் போது, இலங்கையில் அண்மைக்கால தேசிய தேர்தல்கள் பாரிய அளவில் சுதந்திரமானதும் நியாயமானவையும் என நான் நம்பிக்கையோடு சொல்லக் கூடியதாக இருப்பதுடன், இலங்கையில் தேர்தல் வன்முறைகளின் பயணத்தை மாற்றுவதில் மாற்றியமைக்கத்தக்க அழுத்தத்தை மேற்கொள்ள தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு மத்திய நிலையத்திற்கு ஆற்றல் கிடைத்துள்ளது. அபிவிருத்தித் தொழில்வாண்மையாளர்

என்ற வகையில் பணத்தால் குறிப்பாக உதவி வழங்கும் நிறுவனங்களின் பங்களிப்பு நிதி தொடர்பில், அவற்றின் தாக்கத்தை அளந்து பார்த்து உறுதிசெய்யுமாறும், அவ்வாறே பெறுமானங்களைச் சுட்டிக்காட்டுமாறும் என்னிடம் எப்போதும் கோரிக்கை விடுக்கப்படும். இங்கு தேர்தல் வன்முறைக் கண்காணிப்பு மத்திய நிலையம் மிகச்சிறப்பாக வெற்றியடைந்துள்ளது. அதன் தாக்கத்தை அளந்து பார்ப்பதற்கு ஒருவர் பலகாலமாக தேர்தல் வன்முறைச் செயற்பாடுகள் தொடர்பான தரவுகளை வரிசைப்படுத்த வேண்டும். வன்முறை நடவடிக்கைகள் பாரிய அளவில் குறைதல் அல்லது இல்லாமற் போதல் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் தொடர்பில் அல்லது தேர்தல் அரசியலின் பக்குவம் தொடர்பில் ஒரே அளவுகோல் என விவாதிப்பது எனது கருத்தல்ல என்ற போதும், அது ஒரு அளவுகோலாகும். தேர்தல் வன்முறைக் கண்காணிப்பு மேற்படி நிலையத்தின் பிரதான நோக்கமாக இருப்பதுடன் பெறுபேறுகளின் மூலம் வெற்றியைக் காட்டியுள்ளது.

இலங்கையில் சனநாயக ரீதியான ஆளுகைக்கான இடைத் தொடர்புள்ள அணுகுமுறையை எடுப்பதே மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் மூலோபாயக் கொள்கையாக அமைந்தது. தேர்தல் வன்முறைச் செயற்பாடுகள் கண்காணிப்பு மத்திய நிலையத்தின் ஒரு வழியாகவேனும், சட்டங்கள் மற்றும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள், மக்களுக்குச் சாதகமான வழக்குகளைத் தாக்கல்செய்தல், சமாதானம் மற்றும் மோதல்களுடன் பிரசைகள் ஊடக தொடர்புகளுக்கான ஆரம்பம் ஊடாக சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்கள் தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பங்களிப்புகளுடன், ஒட்டுமொத்தமாக மதிப்பிடப்படும் போது, சாதகமான தாக்கமே காணப்படுகின்றது. இவையனைத்தும் சுமார் 25 வருடங்கள் நிறைந்த அமைப்பொன்றிற்கே உள்ளன. அவ்வாறாயினும், இலங்கைக்கு சனநாயகத்தின் பூரண ஆற்றலும் அந்தஸ்தும் கிடைப்பதற்கு மேலும் பலவற்றை செய்ய வேண்டியுள்ளது. நான்கில் ஒரு பங்குதான் கிண்ணத்தில் நிறைந்திருக்கின்றது. இது தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர்காலத்தில் பாரிய பணியை மேற்கொள்ள நேரிடலாம்.

தேர்தல் வன்முறைக் கண்காணிப்பு மத்திய நிலையத்தின் தேர்தல் கண்காணிப்பாளராக எனது முதல் பணியாக தேசிய பொலிஸ் தலைமையகத்திற்குச் சென்று தேர்தல் வன்முறைத் தரவுகளை அட்டவணைப்படுத்துவது அமைந்தது. தேர்தல் வன்முறைக் கண்காணிப்பு மத்திய நிலையத்தில் பணிபுரியும் அதேவேளை, நான் அதன் தேசிய இணைப்பாளராக பதவி உயர்வு பெற்றேன், அக்காலத்தில் நான் அமைப்பின் அனைத்துப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளேன். தேர்தல்களுக்கிடையான காலத்தில், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் இருந்த நான் அமைதி மற்றும் மோதல் பகுப்பாய்வுப் பிரிவிலும் சோஷல் இன்டிகேட்டரின் அலுவல்களிலும் பணிகளில் ஈடுபட்டேன்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்/தேர்தல் வன்முறைக் கண்காணிப்பு மத்திய நிலையம் எனது முதற் தொழிலாக இருந்ததுடன், எமது தொழில் ரீதியான வாழ்க்கை வளருகின்ற பருவத்தை நான் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன்தான் கழித்தேன். இளம் உள்ளங்களைத் தயார்ப்படுத்தலும் சனநாயகத்தில் குடியுரிமை மற்றும் பிரசைகளின் பொறுப்புகள் தொடர்பான பெறுமானங்களை வளர்ப்பது தொடர்பில் எடுத்துக் கொண்டால், எந்தவொரு பல்கலைக்கழகத்தாலும், தொழில் ரீதியான தகைமைக்கு அல்லது பயிற்சி நிகழ்ச்சியாலும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் இணையாக முடியாது. எனக்கு மிகச் சிறந்த கல்வியையும் அனுபவத்தையும் அழித்த இடம் மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையமே. எனக்கு எப்போதோ தெரிந்து கொள்ளக் கிடைத்த மிகவும் அறிவார்ந்த, துணிச்சல் மிக்க மனிதர் குழுவான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினரிடமிருந்து எனக்கு பெரும் அனுகூலங்கள் கிடைக்கப் பெற்றதுடன் அவர்கள் எனக்கு ஆசீர்வாதமாக அமைந்தனர். இன்றுவரை அவர்கள் எனது நண்பர்களாகவும் ஆசான்களாகவும் உள்ளனர். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் வாழ்ந்த எந்தவொரு நபரிலும் நிலைத்திருக்கின்ற “சரா” என் மனதிலும் அவ்வாறே பதிந்துள்ளார்.

தேர்தல் வன்முறை கண்காணிப்பு மத்திய நிலையத்தில், எனது அனுபவங்களில் அர்ஜுன பராக்கிரம முக்கியமான பணியை ஆற்றினார். எனது நினைவுகள், நட்புகள், பெருமளவில் விஸ்கியுடன் விடியும் வரை செய்த அறிவுபூர்வமான உரையாடல்கள், நாட்டில் சில தொலைதூரப் பிரதேசங்களுக்கான விஜயங்கள், நான் மயிரிழையில் தப்பிய சம்பவங்கள் மற்றும் சிவில் யுத்தத்தின் உச்சக் கட்டங்களில் எமது பணிகள் ஆகியவை தொடர்பில் நான் ஒரு புத்தகத்தையே எழுதிவிட முடியும். அந் நினைவுகளும் அனுபவங்களும் விலை மதிக்க முடியாதவை என்பதுடன், நான் யாரென்பது தொடர்பில் பிரதான பகுதியாக அவை இன்னமும் எனது வாழ்வில் எதிரொலித்துக்கொண்டே இருக்கின்றன.

யாரும் ஒரு போதும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தை விட்டுச் செல்வதில்லை. ஒருமுறை நீங்கள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் தொடர்புற்றால் நீங்கள் அதன் மரபணுக்களில் ஒரு பகுதியாக மாறுவதுடன் அவ்வாறே நிலைத்திருக்கக் கூடும். குறைந்தபட்சம் எனக்கு அப்படித்தான் தோன்றுகின்றது. என்னைப் பொறுத்தவரை எனது இளமைக் காலத்தில், என்னால் போகக் கூடிய உயர்ந்த இடத்தைக் காணும் ஆற்றலை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எனக்கு வழங்கியது. அதற்கு நான் எப்போதும் நன்றியுடையவனாகின்றேன்.

---

**தேவானந் இராமையா (தேவ்)**

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தோடு (UNDP) தொடர்புடைய அபிவிருத்திப் பணியாளராவார். தற்போது அவர் (UNDP) பிரதி வதிவிடப் பிரதிநிதியாகப் பணியாற்றுகிறார். இதற்கு முன்னர், பல்வேறு நாடுகளில் (UNDP) சமாதான தூதுப் பணியில் செயற்பட்டு சர்வதேச அனுபவங்களைப் பெற்றுள்ளார். ஐக்கிய நாடுகளின் அமைப்போடு தொடர்பு கொள்வதற்கு முன்னர் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளராகப் பணிபுரிந்துள்ளார்.

# சோஷல் இன்டிகேட்டர் (Social Indicator) பங்களிப்பு சனநாயகம் தொடர்பான பரீட்சார்த்தம்



கலாநிதி
**பிரதீப் பீரிஸ்**

இலங்கையில் மக்கள் கருத்துக் கணிப்பிற்கான கட்டமைப்பொன்றை அமைப்பதன் அவசியம் தொடர்பில் கலாநிதி சரவணமுத்துவுக்கும் சில முன்னணி நிறுவனங்களின் அவரது நண்பர்களுக்குமிடையே நீண்டகாலமாக இடம்பெற்ற கலந்துரையாடல்களின் பெறுபேறாக 1999ல் சோஷல் இன்டிகேட்டர் (Social Indicator) தாபிக்கப்பட்டது. கனேடிய சர்வதேச அபிவிருத்தி உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் [Canadian International Development Assistance (CIDA)] செயற்பாட்டுப் பங்காளர் தரப்பான அரச ஆட்சி மற்றும் நிறுவனங்களை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் [Governance and Institutional Strengthening Programme (GISP)] மக்கள் கருத்துக் கணிப்புப் பிரிவொன்றை தாபிப்பதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திற்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்தது. அந் நிகழ்ச்சித்திட்டம் (GISP) நவீன உபகரணங்களைக் கொண்ட மக்கள் கருத்துக் கணிப்புப் பிரிவொன்றைத் தாபிக்க அடிப்படை மூலதனத்தை வழங்கியது. அந்நிறுவனம் நெகிழ்ச்சித் தன்மையோடு இடைவிடாது நிதி வழங்கிய காரணத்தால் சோஷல் இன்டிகேட்டர் மீது தனது புதிய கருத்திட்டத்தைப் பரீட்சித்துப் பார்க்கின்ற அலுவல்களை மேற்கொள்வதற்கு மேலதிகமாக இந்நாட்டின் முதல் இலாபமீட்டாத சுயாதீன மக்கள் கருத்துக் கணிப்பு நிறுவனமாகவும் மாற முடிந்தது.

அக்காலகட்டத்தில், மக்கள் கருத்துக் கணிப்பிற்கு முன்னோடிக் கட்டமைப்பொன்றை நிறுவுதல் என்பது, கலாநிதி சரவணமுத்து போன்ற ஒருவர் மட்டுமே முன்வரக் கூடிய துணிச்சல் மிக்க பரீட்சார்த்தமாகும். மக்கள் கருத்துக் கணிப்பிற்கு, அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் தேவைப்படுகின்ற மனித வளம் என்பன 1990களின் தசாப்தத்தின் பிற்பகுதியில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திற்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த நாட்டுக்குள்ளும் அரிதாகிப் போனது. எவ்வாறாயினும், தாம் நம்புகின்ற நிலைப்பாடு தொடர்பிலான ஆபத்தைத் தாங்கிக் கொள்வதிலுள்ள விருப்பமும், வலயத்திற்குள்ளும் அதற்கு அப்பாலும் அவருக்குள்ள

தொடர்பு வலையமைப்புடனும் இணைந்த அவரது தனிப்பட்ட கவர்ச்சியும் காரணமாக சோஷல் இன்டிகேட்டர் மீது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் சுயமான அலுவல்கள் ஆரம்பிக்கப்படுதல் போன்ற புதிய கருத்தொன்றுக்கான வழி பிறப்பிக்கப்பட்டது.

### இலங்கையின் மக்கள் கருத்துக் கணிப்புத் துறையில் சோஷல் இன்டிகேட்டரின் பங்களிப்பு

மனிலாவில் அமைந்துள்ள பிரபல மக்கள் கருத்துக் கணிப்பு நிறுவனமான சோஷல் வெதர் ஸ்டேஷன் [Social Weather Station - SWS] நிறுவனத்தால் சோஷல் இன்டிகேட்டருக்காக இணைத்துக் கொள்ளப்பட்ட முதலாவது ஆய்வுக் குழு பயிற்றுவிக்கப்பட்டது. செயற்பாடுகளை ஆரம்பித்த முதலாவது ஆண்டிலேயே மக்கள் கருத்துக் கணிப்பாளர்களின் புவியியல் ரீதியான சேர்க்கையான மக்கள் கருத்துக் கணிப்புகளுக்கான உலக நிறுவனத்துடன் [World Association for Public Opinion Research (WAPOR)] சோஷல் இன்டிகேட்டரும் இணைந்து கொண்டது. இவ் ஒத்துழைப்பின் ஊடாக சோஷல் இன்டிகேட்டருக்கு தொழில் ரீதியாக சட்டபூர்வமான தன்மை வழங்கப்பட்டதற்கு மேலதிகமாக அதன் பணிக்குழுவின் தொழில் ரீதியான அறிவை வளர்ப்பதற்கும் பெருமளவில் பங்களித்தது. அதிலிருந்து சோஷல் இன்டிகேட்டரின் ஆய்வுகளுக்கு ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசியா ஆகிய பிராந்தியங்களில் நடத்தப்பட்ட WAPOR அமைப்பின் நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்து கொண்டு புதிய விதிமுறைகள் பற்றிய கலந்துரையாடல்களிலும் மக்கள் கருத்துக் கணிப்பில் அதிநவீன தொழில்நுட்பத்தைப் பெறுவதற்கும் மாபெரும் வாய்ப்புக் கிடைத்தது. வெளிநாட்டுப் பயிற்சிகளுடனும் அனுபவங்களுடனும் கூடிய சோஷல் இன்டிகேட்டர் நிறுவனத்தால் இலங்கையில் மக்கள் கருத்துக் கணிப்புத் துறையின் புதிய கலாசாரத்தின் அடிப்படை மாற்றத்திற்கு வித்திட்டது. சோஷல் இன்டிகேட்டரின் ஆரம்ப காலமான 1999லிருந்தே, எண்ணிக்கை ரீதியானதும் தர ரீதியானதுமான ஆய்வு விதிமுறைகளைப் பயன்படுத்தி பாரிய எண்ணிக்கை உள்ளடக்கப்படும், விரிவான எடுத்துக்காட்டுகள் உள்வாங்கப்பட்ட ஆய்வுகள், அரச சேவைகளில் தரம் தொடர்பில் சேவை பெறுனர்களின் பிரதிபலிப்பைக் காட்டுகின்ற ஆய்வுகள் (Report Card Surveys) தேவைகளை மதிப்பிடுதல் மற்றும் இலங்கையில் சமாதானச் செயற்பாடு, ஊழல் மற்றும் சனநாயகம், ஆரம்பத் தேர்தல் மக்கள் கருத்துக் கணிப்புகள், அரசியலமைப்பு திருத்தங்கள், யுத்தத்திற்குப் பிந்திய காலத்தில் நல்லிணக்கமும் நிலைமாறு கால நீதி, கோவிட் 19 தொற்றின் பொருளாதார மற்றும் அரசியல் அழுத்தங்கள். சுனாமிக்கு பின் எழுந்திருத்தல், பால் மற்றும் பால் நிலை மீதான வன்முறைகள், சிறுவர் ஊழியம், எச்.ஐ.வி/எயிட்ஸ் மற்றும் தொழிற் சந்தை ஆய்வுகள் போன்றவை உள்ளடக்கப்பட்ட பல்வேறு வகைகளிலான பல துறைகளில் தேவை மதிப்பீடு, மேற்பார்வையும் மதிப்பீடுகளும், வரைப்படப்படுத்தல்களும் பாரிய எண்ணிக்கையில் நடத்தப்பட்டன.

சோஷல் இன்டிகேட்டர் ஊடாக கணிசமான அளவு தமதேயான ஆய்வுக் கற்கைகள் நடத்தப்படுவதுடன் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளைப் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) போன்றே தனியார் கம்பனிகள் மற்றும் பல்வேறு கல்விசார் நிறுவனங்கள் பலவற்றுடன் பலதரப்பட்ட துறைகளில் ஆய்வு ஒத்துழைப்பைப் பேணுகின்றது. குரலற்ற பெரும்பான்மைக்கு தமது அன்றாட வாழ்வில் தாக்கம் செலுத்தும் பிரச்சினைகள் தொடர்பில் தமது ஆர்வத்தை வெளிப்படுத்தும் ஊடகமொன்றை வழங்கி சோஷல் இன்டிகேட்டர் நாட்டின் சனநாயகத்தை வலுப்படுத்துகின்ற முதலாவது இலாபமீட்டாத மக்கள் கருத்துக் கணிப்பு நிறுவனமுமாகும். அப்போது தமது சேவை பெறுனர்களுக்கு அமைப்பு முறையற்ற மக்கள் கருத்துக் கணிப்புகளை நடத்துகின்ற வர்த்தக மட்டத்திலான ஆய்வு நிறுவனங்கள் சிலவும் இருந்தன. 2000ம் ஆண்டின் ஆரம்ப காலத்தில் சோஷல் இன்டிகேட்டர் பெரும் புகழ் பெற்றதுடன், தேசிய மற்றும் சர்வதேச ஊடகத்தின் தொடர்ச்சியான கவனத்திற்கும் உட்பட்டது. அப்போதிருந்த ஆட்சியாளர்கள் மற்றும் அரசியல் எதிர்கட்சிகளின் பாராட்டைப் போன்றே விமர்சனத்திற்கும் ஆளானது. இப்புகழ் உதவியளிக்கும் நிறுவனங்களிடையேயும் அபிவிருத்தி நிறுவனங்களிடையேயும் பெரும் ஆர்வத்தை ஏற்படுத்தியதுடன் பல்வேறு வகையான சுய நிகழ்வுகளுக்கு வித்திடுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு முன்னர், அவை பற்றி முன்னரை விட மக்கள் கருத்துக் கணிப்பு ஆய்வுகளைப் பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதில் சிவில் சமூக அமைப்புகளில், நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு மிக்க ஆர்வத்தை ஏற்படுத்திய புதிய பாதையொன்று திறக்கப்பட்டதுடன் தொழில்நுட்பம் மற்றும் கோட்பாட்டு ரீதியான அறிவின்றி பல அரச சார்பற்ற நிறுவனங்கள் மக்கள் கருத்துக் கணிப்பை

நடத்துவதில் ஒன்றிணைந்தனர். அரச சார்பற்ற அமைப்புகளைத் தவிர வர்த்தக மட்டத்திலான ஆய்வு நிறுவனங்கள் பலவும் சமாதானச் செயற்பாடு, சனநாயகம் மற்றும் அரச ஆட்சி போன்ற துறைகளில் மக்கள் கருத்துக் கணிப்புகளை நடத்த ஒன்றிணைந்தது.

**நாட்டிற்குள்ளேயும் அதற்கு அப்பாலும் சனநாயகக் கலந்துரையாடலில் காட்டப்படும் பங்களிப்பு**

மக்கள் கருத்துக் கணிப்புகள் நாட்டின் சனநாயகத்தை வலுப்படுத்தும் ஊடகமாகப் பயன்படுத்தலாம் என்ற தீவிரமான நம்பிக்கையிலேயே சோஷல் இன்டிகேட்டர் ஆரம்பிக்கப்பட்டது. சோஷல் இன்டிகேட்டரின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அதிநவீன மக்கள் கருத்துக் கணிப்பு முறைகளால் கொள்கைத் திட்டமிடுவோருக்கு மட்டுப்படுத்தப்பட்ட கால இடைவெளிக்குள் மிகச் சிறந்த துல்லியத் தன்மையுடன் மக்கள் எண்ணிக்கையின் பாரிய குறுக்கு வெட்டுத் தோற்றத்தில் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு ஏற்புடையதாக மக்கள் கருத்தைக் கிரகித்துக் கொள்வதற்கான ஆற்றல் திட்டமிடப்பட்டது. சோஷல் இன்டிகேட்டரால், 2001ல் சமாதானச் செயற்பாடு பற்றிய மக்களின் கருத்தியலும் மனப்பாங்கு மாற்றத்தைக் கைப்பற்றுவதற்கு அதன் பிரதானமான ஆய்வுக் கருத்திட்டமாகிய சமாதானம் தொடர்பான நம்பிக்கைக் குறிகாட்டி (Peace Confidence Index (PCI, 2001-2008) 2001ல் அமுல்படுத்தப்பட்டது. பின்னர், எட்டு வருடங்களாக PCI ஆய்வு இந்நாட்டில் மோதல் தீர்வுச் செயற்பாடு தொடர்பான மக்கள் கலந்துரையாடலில் பங்கேற்றது. கடந்த இருபது ஆண்டுக் காலப் பகுதியில், சோஷல் இன்டிகேட்டரால், ஆட்சியுடன் ஏற்புடையதாக நடத்தப்பட்ட பல்வேறு ஆய்வுகள், ஒவ்வொரு அரசாங்கங்களினாலும் வழங்கப்பட்ட சேவைகள் பற்றிய மக்கள் உரையாடலொன்றைத் தோற்றுவிக்கக் காரணமானதுடன் நிறுவன ரீதியான திருத்தங்கள் பற்றி நாட்டில் காணப்படுகின்ற விவாதத்தில் மக்களைத் தொடர்புபடுத்தும் மற்றும் அவர்களின் பங்களிப்பை வழங்கும் வழிவகையுமாகக் காணப்பட்டது. கடந்த 20 வருட காலத்திற்குள் சோஷல் இன்டிகேட்டரால் நடத்தப்பட்ட ஆய்வுகளில், அரசியல்வாதிகள், அடிப்படைக் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் நியுயோர்க் டைம்ஸூம் இக்கோனொமிஸ்ட் போன்ற சர்வதேச ஊடக நிறுவனங்களும் உள்ளிட்ட ஒட்டுமொத்த சர்வதேச மக்கள் அறிவூட்டப்பட்டனர். சோஷல் இன்டிகேட்டரில் தேசிய மற்றும் உலகளாவிய சாத்தியத் தரவுகள் பகுப்பாய்வில் தொடர்பு கொண்ட உள்நாட்டு, வெளிநாட்டு அறிஞர்கள் பெயர் ரீதியாக குறிப்பிடுவதாயின், பேராசிரியர் டொனல்ட் ஹோரோவிட்ஸ், பேராசிரியர் கிறிஸ்ட்டியன் சோக்கே. பேராசிரியர் மைக்கல் ஷுல்ஸ், பேராசிரியர் விலியம் மிஷ்லர், பேராசிரியர் அஷுட்டொஷ் வார்ஷ்னி, பேராசிரியர் ஜயதேவ உயன்கொட ஆகியோர் அவர்களில் சிலராவர்.

கட்டுரையைத் தயாரிப்பதில் உதவியளித்தமைக்காக மதிப்பிற்குரிய நன்றி.

**சகினா மொய்நுதீன்**
சிரேஷ்ட ஆய்வாளர், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்.

---

**கலாநிதி பிரதீப் பீரிஸ்**

கொழும்பு பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானம் மற்றும் மக்கள் கொள்கைகள் கற்கைகள் பிரிவில் சிரேஷ்ட விரிவுரையாளரும் பிரிவுத் தலைவருமாவார். அவர் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சோஷல் இன்டிகேட்டர் நிறுவனத்தின் முதலாவது பிரதானியுமாவார்.

# உள்ளூராட்சித் துறையில் மேற்கொண்ட இடையீடு



**ஸ்ரீயானி ருவனாரா விஜேசுந்தர**

மாறுபடுகின்ற அரசியற் சூழலில், மாறுகின்ற உத்தியோகத்தர் பொறிமுறை மற்றும் தங்கியிருக்கின்ற மக்கள் சமூகத்துடன் ஒரு நாட்டில் இரண்டரை தசாப்தங்களாக ஒரு அமைப்பு தமது விடயதானத்தில் செயற்படுவதன் மூலம் அதன் வெற்றி தெளிவாகின்றது.

மேலும் நடைமுறைச் சாத்தியமானதும் தகுதியும் வாய்ந்த நிலைபேறான வேலைத்திட்டமொன்றுக்கான திட்டத்தைத் தயாரிக்கும் மற்றும் தேசிய மட்டம் வரை கீழ் மட்டத்திலிருந்தான அர்ப்பணிப்பின் பிரவேசத்தை வலுப்படுத்தும் நோக்கில் (2006)ன் நடுப்பகுதியில், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் உள்ளூராட்சி நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கேற்ப, கிராமிய அபிவிருத்தி மற்றும் பிரதேச அபிவிருத்தியுடன் ஏற்புடைய பொறிமுறைகள் ஊடாகவும் எதிர்பார்க்கப்பட்ட மாற்றங்களை ஏற்படுத்துவதற்குத் தேவையான சூழல் உருவாகின்ற தேசிய அபிவிருத்தியின் மூலம், நிலைபேறான அபிவிருத்திக்கு வெற்றிகரமான அடிப்படையொன்றை உருவாக்குவது நிகழ்ச்சியின் பிரதான நோக்கமாக அமைந்தது.

உள்ளூராட்சி நிறுவனங்களில், இப்போது காணப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக சட்டரீதியாக பொறுப்புக் கூற வேண்டிய மூன்று பிரதான செயற்பாட்டு அரசாங்கக் கட்டமைப்புகளுடன் இந்நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பெறுபேறாக மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபை போன்ற கிராமிய அரசியல் நிறுவனங்களைப் போன்றே அரச சேவைகள் நிறுவனங்களின் பணிகள் மற்றும் கிராமிய வரி செலுத்துபவர்களிடையே புதியதொரு அறிவார்ந்த இரட்டைச் சேவைப் பொறிமுறைச் செயற்பாட்டை வலுப்படுத்துதல், கிராமிய அரசியல் நிறுவனங்களும் மக்களும் பிரதேசிய வரவுசெலவுத் திட்டச் செயற்பாட்டில் வெளிப்படைத் தன்மை மற்றும் பங்கேற்கின்ற அணுகுமுறையை உறுதிப்படுத்தல், கிராமிய வருமான முகாமைத்துவம் மற்றும் இடைக்காலச் சட்டங்களை உருவாக்குவதற்குத் தொழில்நுட்ப வசதிகளை வழங்குதல் என்பன இடம்பெற்றன. உள்ளூராட்சி நிறுவனங்கள் உரியவாறு செயற்படுவதற்கு உதவுகின்ற கட்டளைச் சட்டங்கள், சட்டங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் ஆணைகள் தொடர்பில், சபை உறுப்பினர்களினதும் உத்தியோகத்தர்களினதும்

அறிவை மேம்படுத்தலும் இற்றைப்படுத்தலும் கூட அதன்மூலம் மேற்கொள்ளப்பட்டன.

இச் செயற்பாடுகள் இப்போது காணப்படுகின்ற, 341 உள்ளூராட்சி நிறுவனங்களில் சுமார் 90 நிறுவனங்களில் உள்வாங்கப்பட்டுள்ளன. எமது இப்பங்களிப்பின் காரணமாக, பல நேர்மறையான மாற்றங்கள் ஏற்பட்டன. அம் மாற்றங்களை, சபைக்குள்ளே நடைமுறைப்படுத்தும் புதிய வரவுசெலவுச் செயற்பாட்டின் மூலம், பங்கேற்பு தீர்மானங்களை எடுக்கின்ற செயற்பாடு வரை வளர்ச்சியடைந்துள்ள பொறிமுறையின் ஊடாக இனங்காண முடிந்ததுடன் அதற்கு முன், நகர முதல்வர், தவிசாளர், மற்றும் செயலாளர்களால் மட்டுமே பங்கேற்கும் செயற்பாடாகவே அது இருந்தது.

உள்ளூராட்சிச் சபைகளின் அதிகாரப் பிரதேசங்களில், கிடைக்கக் கூடிய வளங்களைப் பயன்படுத்திக் கொண்டு, சபையின் வருமான அடிப்படையை மேம்படுத்துவதற்காக உசிதமான இடைக்காலச் சட்டங்களைப் பிறப்பித்துக் கொள்வதற்கு உதவியளித்தல், சபைகளில் பிரதான செயற்குழுக்களை உரியவாறு செயற்படுத்துவதைப் போன்றே, அதற்காக மக்கள் பங்கேற்பை வளர்த்தல், சபைகளில் மக்கள் காட்சிக் கூடங்களை அமைத்தல், மற்றும் மீளச் செயற்படுத்தல், சபைச் செயற்பாட்டையும் சபை அறிக்கைகளையும் பராமரிப்பதில் நேரடியான இடையீடு, சபை நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல், 'பெண் உறுப்பினர்கள் மூலம் சபையின் மேம்படுத்தப்பட்ட ஒழுக்கத்தையும் சபை உறுப்பினர்களுக்கான கௌரவத்துடன் கூடிய கலாசாரத்தையும் ஏற்படுத்துவதற்காக குறைந்தபட்ச அடிப்படை கட்டியெழுப்பப்படுதல் என்பன தெளிவாகக் காணக்கூடிய ஏனைய சாதகமான மாற்றங்களாகும்.

பயனுள்ள மாற்றத்தை வெளிப்படுத்திய இச் செயற்பாடுகளிடையே கிராமியப் பெண்களின் அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் அரசியல் செயற்பாட்டில் அவர்களின் இடையீட்டை அறிமுகப்படுத்துவதற்கும் ஒத்துழைப்பு வழங்கிய பொறிமுறையானது மேலும் கவர்ச்சிகரமான செயற்பாடாகும். 1931ல் சர்வசன வாக்கெடுப்பு அதிகாரத்தால் இலங்கைப் பெண்களுக்கு அரசியலில் பிரவேசிப்பதற்கான வாயில் திறக்கப்பட்டாலும், கடந்த நீண்ட எட்டு தசாப்த காலத்தில், அவர்களுக்கான சமத்துவமும் நீதியும் நிறைவேற்றப்படவில்லை. அதனால் அரசியலில் பெண்களின் உரிமகளைப் பாதுகாப்பதற்கான ஒத்துழைப்பு வழங்குவதையும் வலுப்படுத்தலையும் நோக்காகக் கொண்ட, உள்ளூராட்சி மட்டத்திலான 25% இட ஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்படுவதற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் உள்ளூராட்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஏனைய சிவில் சமூக அமைப்புகளுடன் இலங்கையின் அதிகமான பரப்பளவை உள்வாங்கிய பிரச்சார இயக்கத்தை அமுல்படுத்தியது.

இப்பரந்த இயக்கத்தின் பெறுபேறாக உள்ளூராட்சி தேர்தலில் பெண்களுக்குத் தேவையான 25% இட ஒதுக்கீடு சட்டரீதியான ஏற்பாடாக விதிக்கப்பட்டது. சட்டத்தைப் பின்பற்றுவதற்காக 'பெண்ணுக்கு வாக்களியுங்கள்.' இயக்கத்தை அமுல்படுத்தும் முன்னோடியான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், இலங்கையின் அரசியல் பயணத்தின் மிகச்சிறந்த முக்கிய இடத்தை அண்மிப்பதற்கு 'அவளுக்கான' தனது அரசியற் பாதையைத் திறந்தது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் வகிக்கப்பட்ட இம் முயற்சியானது இன்று வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு பாராட்டப்பட்டு வருகின்றது.

2011 உள்ளூராட்சி வாக்கெடுப்பின் போது உள்ளூராட்சி நிறுவனமொன்றில் உள்ளடக்கப்பட 4486 மொத்த உறுப்பினர்களில் 82 பெண் உறுப்பினர்கள் காணப்பட்டதுடன் இது 1.83% ஆகும். பெண்களுக்கான இட ஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக, 2018 உள்ளூராட்சித் தேர்தல் சிறந்த மகிழ்ச்சியான மாற்றத்தை ஏற்படுத்தியது. இவ்வாக்கெடுப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட 8,690 ஒட்டுமொத்த உறுப்பினர்களின் 1,926 (23.3%) வீதத்தினர் பெண் உறுப்பினர்களாவர். இது 2011ல் 1.83% வீதத்துடன் தனித்துத் தெரிகின்ற வளர்ச்சியாகும். இந்த சாதகமான பெறுபேற்றிற்கு போராட்டத்தில் இருந்த ஏனைய செயற்பாட்டாளர்கள், புகழ்பெற்ற பிரசைகள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் சமூகம் சார்ந்த அமைப்புகளுடன் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் உள்ளூராட்சி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பு ஆதரவு வழங்கியது.

எவ்வாறாயினும், 2020ன் முடிவில் இடம்பெற்ற அரசியல் மாற்றங்கள் காரணமாக, நாம் வலுப்படுத்திய பெண்களுக்கான 25% இட ஒதுக்கீடு தொடர்பான மதிப்பு மிக்க கவனம், ஒரு வகையில் சீர்குலைவுக்கு ஆளாகிக் காணப்படுவதைக் காண முடிகின்றது. அதனால் பெண்களின் அரசியல் உரிமைகளையும், அவ்விட ஒதுக்கீட்டைப் பாதுகாப்பதற்கும் ஏனைய சிவில் அமைப்புகளுடன், தொடர்ச்சியாக செயற்படுதல் அத்தியாவசியமானது என்பதை நாம் உணர்ந்து கொண்டு, அர்ப்பணிப்புடன் உள்ளோம். உள்ளூராட்சி சபைகளிலும் பாராளுமன்றத்திலும் குறைந்த பட்சம் 25 வீத பெண் பிரதிநிதித்துவத்தை நிலைநிறுத்துவதே இதன் தீவிர நோக்கமாகும்.

---

**ஸ்ரீயானி ருவனாரா விஜேசுந்தர**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளர். உள்ளூராட்சி நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம், வரவு செலவுத் திட்ட வெளிப்படைத் தன்மை தொடர்பில் பணிபுரிந்து வருகின்றார்.

# மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் இலங்கை அரசியலமைப்பியலும்



கலாநிதி
அசங்க வெலிக்கல

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் தனது 25 வருட நிறைவைக் கொண்டாடும்வேளையில், அது தான் பணியாற்றிய காலகட்டத்தில் இலங்கையின் அரசியலமைப்பை வடிவமைப்பதில் ஆற்றிய பங்கு குறித்து நினைவுகூர விரும்புகின்றேன். பரந்த அளவில் கருத்துருவாக்கம் செய்யப்படும் அரசியலமைப்புச்சட்டமும், நடைமுறையும் CPA தனது ஆராய்ச்சி, பரப்புரை மற்றும் முனைப்பெல்லைப் பணிகளினூடாகத் தாக்கம் ஏற்படுத்தியமை குறித்த வலுவான உரிமைக்கோரிக்கைகளுக்கான நிறுவன மற்றும் அறிவாதார முறையியல் ஆதிக்க விடயப்பரப்புகளாகும்.

எவ்வறாயினும், நான் CPA யுடன் எனது உறவு குறித்த சில தனிப்பட்ட நினைவுகூரல்களுடன் ஆரம்பிக்கவிரும்புகின்றேன். நான் 2000 மார்ச்சில் CPA யில் இணைந்துகொண்டாலும், அதனையடுத்த இரு தசாப்தகாலங்கள் வெளிநாடுகளில் கழிந்தபோதிலும், எனது தெடர்புகளை ஒருபோதும் துண்டித்தது கிடையாது. எனது சொந்தத் தனிப்பட்ட அபிவிருத்தி மற்றும் தொழில்சார் அபிவிருத்தி இந்த அமைப்பினதும், அதனுள் இருக்கும் சகபாடிகளினதும் அபிவிருத்தியோடு நெருக்கமாக இணைந்திருந்தன. பல சிறப்பான காலங்களும், மோசமான காலங்களும் இருந்தன. இந்த 25 வருடகாலத்தில் தீவிரத்தன்மை கொண்ட மோசமான காலங்களும் இருந்துள்ளன. உண்மையில், நான் வெளிநாட்டிலிருந்தவாறே எனது கல்விசார் வெளியீடுகள் அனேகமானவற்றை CPA யினூடாகவே பிரசுரித்துவந்துள்ளேன். நான் இதை எடின்பரோவிலிருந்து எழுதும்வேளையில், CPA அணிகளும், நான் பணிப்பாளராக விளங்கும் அரசியலமைப்பியல் சட்டத்துக்கான எடின்பரோ நிலையமும் எதிர்வரும் வருடங்களில் இலங்கையில் ஜனநாயகமயப்படுத்தல் மீது ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ள பேரார்வமிக்க ஆராய்ச்சிக் கருத்திட்டங்களில் இணைந்து பணியாற்றிக்கொண்டிருக்கிறோம்.

1999 இல் ஐக்கிய இராச்சியத்தில் பட்டதாரிச் சட்டக்கற்கைகளிலிருந்து நான் இலங்கைக்குத் திரும்பி வந்தேன். என்னுடைய தந்தையாரின் வழக்கறிஞராகிய ஏர்ட்லி செனவிரத்ன அவர்களின் கருணைமிக்க தலையீட்டின் காரணமாக நான் ரணில் விக்கிரமசிங்கவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில் இணைந்துகொண்டேன். ஜனாதிபதி குமாரதுங்க ஜனாதிபதித் தேர்தலை 1999 டிசம்பர் மாதத்துக்கு நிர்ணயித்திருந்தார். இப்பிரசார இயக்கத்தின்போது நான் பெரிதும் அப்பொழுது ஐக்கிய தேசியக் கட்சியின் இளைஞர் முன்னணிச் செயலாளராகவிருந்த அகிலவிராஜ் காரியவசத்துடன் பணியாற்றினேன். நாங்கள் நாடுமுழுவதும் இடம்பெறும் கூட்டங்கள் மற்றும் பேரணிகளில் பங்குபற்றுவதற்காகக் காரில் பிரயாணங்களை மேற்கொண்டிருந்தோம். மருதானையில் இறுதிப்பேரணி முடிவடைந்து பிரசாரத்தின் இறுதி இரவின்போது, குடிபானங்களுக்காக CH&FC அமைப்புக்குச் சென்றபோது, அடுத்த மேசையருகில் வருண கருணாதிலக்க, விக்டர் ஐவன் மற்றும் சிங்க ரணதுங்க ஆகியோர் இருந்தனர். நான் அவர்களை நலம் விசரித்துக்கொண்டிருந்தபோது, எமக்கு ஒரு பலத்த சத்தம் கேட்டது. அது அருகிலிருந்த மாநகரசபை மைதானத்தில் இடம்பெற்ற பொதுஜன முன்னணிப் பேரணிமீது LTTE நிகழ்த்திய தற்கொலைக் குண்டுத்தாக்குதல் சத்தமாகும். ஒருசில தினங்கள் கழிந்தநிலையில், ஜனாதிபதி சந்திரிகா உயிர்பிழைத்து மீண்டும் தேர்தலில் வெற்றியீட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கட்சியாகத் தொடர்ந்தநிலையில், நான் சட்டக் கல்லூரியில் நடந்த விரிவுரைகளில் கவனத்தைத் திருப்பினேன். சட்டத்தரணிகளுக்கான பரீட்சைக்குத் தோற்றும் எண்ணம் இருந்தது. 2000 ஜனவரியில் கொழும்பில் குமார் பொன்னம்பலத்தின் அரசியல் படுகொலை இடம்பெற்றது. அவரது மரணத்தின்பின் ஒருநாள் இரவு, சென் தோமஸ் பழைய மாணவர் நீச்சல் களரியில் மாலைப்பொழுதைக் கழித்துவிட்டு வீடுதிரும்பினேன். தூக்கம் வராமையால் மேலுருமொரு அரசியல் வன்செயல் அவலநிலைகுறித்த சில சிந்தனைகளை எழுதிக்கொண்டிருந்தேன். அதைப்பற்றிப் பெரிதாக எதையும் எண்ணிக்கொள்ளவில்லை. அது எனது மேசையில் கிடந்தது. பல்கலைக்கழக நண்பராகிய மஞ்சுக்க பெர்ணான்டோப்பிள்ளை ஜனாதிபதி தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்காக CMEV யில் இணைந்திருந்தார். அவர் ஒருநாள் எனது மேசையில் எனது கைப்பிரதி வரைபு கிடப்பதைக்கண்டு அதைத் தனது மேல் அலுவலரும், CPA யின் நிறைவேற்றுப் பணிப்பாளருமாகிய கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவிடம் காண்பிக்கவிரும்புவதாகச் சொன்னார்.

அந்தநேரத்தில் நான் சாராவை அறிந்திருக்கவில்லை. ஆயினும், ஒரு பழைய சென். தோமஸ் மாணவனாக சரவணமுத்து குடும்பத்தினரின் மரபுவழிக் கதைகள் குறித்தும், பல பரம்பரைகள் காலத்து இணைப்புகள் குறித்தும், அறிந்திருந்தேன். அதற்குப் பலவருடங்களுக்கு முன்னராக, பிரிட்டிஷ் கவுன்சிலில் இடம்பெற்ற ஒரு பாடசாலை விவாதத்தில் கலாநிதி சரவணமுத்து நடுவராகப் பணியாற்றியபோது, சென் தோமஸ் மாணவர்கள் பாணியிலும், விடயப்பொருள் காட்சியிலும் அதியுன்னதமான வெற்றிகரமான தோமியன் ஒருவர் எவ்வாறு தோற்றமளிப்பார் என்பது குறித்த ஒரு சிறிய திருவுருவக்காட்சி கிட்டியது. ஆகவே, சராவுடன் ஒரு சந்திப்பை ஒழுங்குசெய்து, குமார் பொன்னம்பலம் சம்பந்தமான எனது சிந்தனைகளைக் கலந்துரையாடும் மஞ்சுக்கவின் எண்ணத்துக்கு நான் மறுப்புத்தெரிவிக்கவில்லை.

சந்திப்பு மற்றும் உரையாடலின் இறுதியில் ஒரு வேலை விருப்பறிவிப்பு இடம்பெற்றது. அதை நான் ஏற்றுக்கொண்டேன். அந்த உரையாடல் அடுத்த இரண்டரை தசாப்தகாலங்களாக நான் ஆழமாகப் பழகி, அனுபவிக்கவுள்ள ஓர் உரையாடலாக அமைந்தது. அது அப்பொலோவின் அறிவும், சிந்தனைகளும், டயோனீசியஸின் அறிவார்வமும், தார்மீகப் பாரதூரநோக்கும், சொல்நயம்மிக்க ஐயுறவுவாதமும் கலந்த ஆர்வமூட்டும் இடைவிளைவாகவும் இருந்தது. நல்ல ஷம்பேன் மதுவின் முதல் சொட்டின் ருசியாகவும், கனவுபோன்ற ஷோப்பன் இரவிசைத்துணுக்கின் ஒருசில ஆரம்ப வரிகளை அல்லது Oakes shott போன்ற ஒரு தத்துவஞானியின் அல்லது எலியட் போன்ற கவிஞரின் கடினமான சொற்களின் பூரண முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள ஆரம்பித்தல் போலவுமிருந்தது. அது கிளர்ச்சியூட்டுவதாகவும், ஆட்கொள்வதாகவும் அமையும் ஓர் அனுபவமாகவிருந்தது. சட்டத்தொழிலின் அல்லது தேர்தல் அரசியலில் பிரவேசிக்கும் பாரதூரமான சிந்தனைகளுடன் நான் திரும்பிச்செல்லவில்லை என்பதையும், இலங்கையில் எனது வாழ்க்கைத்தொழில் CPA ஐத் தளமாகக்கொண்ட ஒன்றாக மாறியிருந்தது என்பதையும் இவ்விடத்தில் கூறுவது போதுமானதென்று எண்ணுகின்றேன். முதலில் பிரசுரமாகிய எனது செய்திப்பத்திரிகை ஆக்கம் பொன்னம்பலம் குறித்த எனது கட்டுரையாகும். திடசித்தம்வாய்ந்த சண்டே லீடர் பதிப்பாசிரியர், காலஞ்சென்ற லசந்த விக்கிரமசிங்கவுக்கு எடுத்த ஒரு தொலைபேசி அழைப்பின்மூலம் சரா இதற்கு வழியேற்படுத்தினார். இன்று இலங்கையில் ஆட்சிசெய்யும் அதிதீவிர வெகுஜன எதேச்சதிகாரிகள் அவரைக் கொலைசெய்தனர்.

2000 ஆம் ஆண்டில் நான் இணைந்துகொண்ட CPA சிறகுமுளைக்கும் பறவைக்குஞ்சைப் போலிருந்தது. கடந்த 25 வருடகாலத்தில் அரசியலமைப்புக்குறித்த அதன் அணுகுமுறை சம்பந்தமான இரு பரந்த கட்டங்களில் முதலாவது கட்டத்தில் இருந்தது. நான் அறிந்தவரையில், முதலாவது கட்டம் அது ஆரம்பித்த 1996 இலிருந்து யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியாகிய 2014 வரை வியாபித்திருந்தது. இரண்டாவது கட்டம் 2015 இல் ஆட்சிக்குழு மாற்றமடைந்ததிலிருந்து இன்றுவரை நீடிப்பதாகும். முதலாவது கட்டம் பனிப்போர் முடிவுற்ற காலப்பகுதியில் உயர்செல்வாக்கைப் பெற்ற தாராளவாத அரசியலமைப்புவாத மாதிரியை மரபுவழிச்சிந்தனையோடு ஏற்றுக்கொண்ட ஒன்றாக விளங்கியது. ஆயினும், அந்த ஏற்பு இலங்கையில் ஜனநாயகமயப்படுத்தலுக்கு அவசியமான விடயங்கள் குறித்த ஒரு சூழமைவு விளக்கத்தின்பேரிலேயே இடம்பெற்றது. பனிப்போருக்குப் பின்னரான பல்தேசிய தாராள அரசியலமைப்புவாத மாதிரி அரசியலமைப்பின் மேலாண்மை விரிவடையும் சர்வதேச மனிதஉரிமைகள் சட்டத்திலிருந்து பரிணமிக்கும் விஸ்தாரமான அடிப்படை உரிமைகள் சாசனம், வலுவான நீதிமுறைசார் மீளாய்வு, நான்காவது தூணாகவிளங்கும் அரசியல்மயமாக்குவதற்கெதிரான சட்டகம், மேலும் பொதுவாக லோக்கே, ரூஸோ, காண்ட், மாடிசன், ஜே.எஸ்.மில், ராவீஸ், டுவேர்க்கின், மற்றும் ஜோன் ஹார்ட் எலி என்போரின் ஆதார அரசியல் தத்துவம் என்பவற்றுக்கான அர்ப்பணவுணர்வுகளை வேண்டிநின்றது. இலங்கை இனத்துவரீதியில் பன்மைத்துவ மோதல்நிறைந்த சமூகமாகவிருப்பதால், இந்த விவாதத்தை முன்கொண்டுசென்ற இனத்துவத் தேசியவாதிகளின் பண்பும், நடத்தையும் அனேக சந்தர்ப்பங்களில் சங்கடநிலைமைகளை ஏற்படுத்தியபோதிலும், CPA யின் தாராளவாதிகள் நாட்டின் முன்னணி சமஷ்டிவாதிகளாக விளங்கினர்.

இதுவே, அப்பொழுது முதலாவது கட்டத்தில் CPA ஆதரித்து முன்னெடுத்ததும், எதிர்த்ததுமான சகல சீர்திருத்த முன்முயற்சிகளுக்கும் அடிப்படையாக விளங்கிய அரசியலமைப்புத் தத்துவார்த்தத்தின் ஆதாரமாகும். இத்தத்துவார்த்தமே பெரும்பான்மை இனத்துவ தேசியவாதம், ஒற்றையாட்சி என்பவற்றுக்கான CPA யின் எதிர்ப்பு, சிறுபான்மை இனத்துவத் தேசியவாதமாகிய தமிழீழ விடுதலைப் புலிகளின் கொலைகார இராணுவவாதத்துக்கு மாற்றுமருந்தாக, மனிதஉரிமைகளுக்காகச் செயலாற்றுதல் என்பவற்றுக்கு அடிப்படையாக அமைந்தது. இந்த அரசியலமைப்புத் தத்துவார்த்தத்தின் நியமவடிவிலான சித்தாந்தக்கூறுகளுக்கான அர்ப்பணிப்புணர்வு காரணமாகவே CPA தனது வெற்றிகளையும், சிலவேளைகளில தோல்விகளையும் சந்தித்தது. இங்கு ஒரு விபரமான பகுப்பாய்வுக்கான சந்தர்ப்பம் இல்லாதபோதிலும், இந்த இலட்சியத்தைநோக்கிய பயணத்தில் ஈட்டப்பெற்ற முக்கியமான வெற்றிகளில் CPA யின் பல பொதுநலன் வழக்குகளிலான வெற்றிகள், நோர்வே அனுசரணையுடன் இடம்பெற்ற சமாதானச் செயல்முறையில் அதன் பிரபலமான சிவில் சமூகப் பாத்திரம், ஐக்கிய நாடுகள் மேடைகள் உள்ளிட்டவகையில் அதன் செல்வாக்குமிக்க சர்வதேசப் பரப்புரை, அரச நிறுவனங்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகள் மற்றும் மேல் மாகாணத்துக்கு வெளியிலுள்ள சிவில் சமூகம் என்பவற்றுடனான முனைப்பெல்லை நிகழ்ச்சித்திட்டங்கள், தகவல் சுதந்திர சட்டவாக்கவரைபில் அதன் பாத்திரம், மொழிக்கொள்கைகளில் சீர்திருத்தங்கள், இலங்கையில் வேறு எந்தச் சிந்தனையாளர்களாலும் உருவாக்க முடியாமற்போன அர்த்தப்பொதிவுள்ள கொள்கைத்திசைமார்க்கமும், கல்விசார் அறிவுங்கெண்ட ஆராய்ச்சி வெளியீடுகள் என்பவை உள்ளடங்குகின்றன.

நியமத்துாய்மைக்கான அளவுகடந்த அர்ப்பணிப்புக்காரணமாக விளைந்த ஒரு குறிப்பிடத்தக்க தோல்வி, கடந்தகாலம் குறித்த கண்ணோட்டத்தில், விவாதத்துக்குரியவகையில், 2000 ஆம் ஆண்டில் அரசியலமைப்புச் சட்டமூலத்துக்கான CPA யின் எதிர்பார்ப்பாகும். அச்சட்டமூலம் நிராகரிக்கப்படுவதற்கான தீர்மானகரமான காரணம் CPA யின் எதிர்ப்பு இல்லாதிருக்கலாம். ஆயினும், அது அனேகமாக, நிச்சயமாகவே, வரலாற்றில் தவறான முடிவாகவே இருக்கக்கூடும். அரசியலமைப்பு அபிவிருத்தியில் இலங்கையின் பாதையும், அதன்பின்னரான ஜனநாயகத்தின் மீளெழுச்சியின் வீச்சுநெறியும், பின்னடைவுகளும் அச்சட்டமூலம் 2000 ஆம் ஆண்டில் நாட்டின் அரசியலமைப்பாக மாறியிருந்தால் பொருண்மைரீதியில் வித்தியாசமாக அமைந்திருக்கும்.

எவ்வாறாயினும், அந்த அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்ட ஒரு பாடம் மேலும் நடைமுறைத் தாற்பரியமும், குறைந்த நியமத்துாய்மையும் குறித்த 2015 க்குப் பின்னரான CPA யின் இரண்டாவது கட்டத்திலான அரசியலமைப்புவாதப் பரப்புரைகளுக்குப் பயன்பட்டது. இதன்கருத்து, இரண்டாம் கட்டத்தின்போது CPA யின் உள்மைய அரசிலமைப்புத் தத்துவார்த்தத்தின் அத்தியாவசியமான விழுப்பம் கைவிடப்பட்டது அல்லது விட்டுக்கொடுப்புக்கு உள்ளாகியது என்பதல்ல. அது தெளிவாகவே தனது

அடிப்படையான தாராளவாத, ஜனநாயகக் குணாம்சத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது. ஆயினும், அரசியலமைப்புத் தாராளவாதத்துக்குப் பல வடிவங்கள் உள்ளன. கடந்தகாலத்தில் இருந்ததைவிட, CPA யின் ஆளுகைத் தத்துவார்த்தம் நுட்பவேறுபாடுகளைச் சரியாக வேறுபடுத்துவதாகவும், இலங்கை அரசியலின் யதார்த்தநிலைமைகளால் கொணரப்படும் வரையறைகளுக்கு மேலும் பிரதிவிளைவு காண்பிப்பதாகவும் அமைந்துள்ளது அல்லது அவ்வாறு அமைந்துவருகின்றது. அது உண்மையில் முதிர்ச்சிபெற்றுவரும் ஓர் அமைப்பின் அடையாளமாகும். அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்டு, தன்னை இசைவாக்கம் செய்துகொண்டு, அரசியலமைப்புவாத மற்றும் பகிரங்கக்கொள்கை வடிவமைப்பில் அதன் பாத்திரம் மேலும் பயனுறுதிமிக்கதாகும் வகையிலான செயற்பாடாகும்.

ஆயினும், அதேவேளையில், அது அதன் கடந்த 25 வருடகாலத்தைத் தீர்மானித்ததும், அடுத்த 25 வருடகாலத்தைத் தீர்மானிக்கவிருப்பதுமான மிகவும் வித்தியாசமான உலக யதார்த்தங்களின் பிரதிபலிப்புமாகும். முதலாவது கட்டம் பனிப்போரில் மேற்குலகம் வெற்றிகண்டு, தாராள அரசியலமைப்புவாத ஜனநாயகமே உலகத்தில் மதிப்புவாய்ந்த விடயமென்று அனைவரும் ஏற்றுக்கொண்டவேளையில் இடம்பெற்றதாகும். அடுத்ததாக எழுச்சிபெற்று வருவதும், பனிப்போருக்குப்பின்னர் போட்டியிடும் சர்வாதிகாரக்குழுக்களின் மேலாதிக்கநிலையை வலுப்படுத்துவதுமான, எதிர்காலத்துக்குத் துர்க்குறியான சீனச் செல்வாக்குச் சூழல் உள்ளது. இதை எதிர்ப்பது CPA போன்ற அமைப்புகளின் நோக்கமாகவுள்ளது. இது இலங்கையில் அரசியலமைப்புவாத ஜனநாயகத்தின் பாதுகாப்புக்காக மேலும் (குறைவான இலட்சிய நோக்குடன்) அதிகரித்த, சொந்தநாட்டு நலன்பேணும் அணுகுமுறையே அவசியமாகின்றது. அது மூலோபாய அரசியல்குறித்த, அதிகரித்த விழிப்புணர்வு, கூட்டணிகளைக் கட்டியெழுப்புவதில் அதிகரித்த நாட்டுநலன் அடிப்படையிலான அணுகுமுறை மற்றும அரசியலமைப்பு ஜனநாயக உள்ளடக்கம்குறித்த மேலும் செப்பமான மீள்கருத்துருவாக்கம் என்பவை சம்பந்தமுற்ற விடயமாகும். அனைத்தையும்விட, ஒரு சீர்திருத்த அணுகுமுறை அரசியல் அதிகாரமற்றோர் விருப்புடன் ஈடுபடும் ஒலியெழுப்பும் துடிப்பாற்றல செயற்பாட்டைவிட, அரசியல் அதிகாரம்படைத்தோர் விருப்பத்துடன் மேற்கொள்ளும் செயற்பாடுகளினூடாகவே மாற்றம் இடம்பெறும் என்பதைப் புரிந்துகொள்ளுகின்றது. ஒட்டுமொத்தமாக நோக்கும்போது, இந்த மீள்சீராக்கல்களும், உறவு நெருக்கங்களும் அமைப்பு தனது பாத்திரம்குறித்த அணுகுமுறையில் (தீவிரமான வேறுபாடு இல்லாவிடினும்) கணிசமான வேறுபாடுகளை ஏற்படுத்துவனவாகும்.

என்னைப்பொறுத்தவரையில், இப்புதிய திசைமார்க்கத்தை வரவேற்று, ஊக்குவிப்பதோடு, அது அமைப்பின் மீளெழுச்சிக்கு உதவுமென்றும், இலங்கையின் அரசியலமைப்பு அபிவிருத்தியை ஆழமாக ஜனநாயகமயப்படுத்தி வடிவமைக்கும் திசையிலான நோக்கெல்லையை மேலும் விஸ்தரிக்குமென்றும் உறுதியாக நம்புகின்றேன். ஒரு மனிதனைப்போலவே, இளமைப்பருவத்தில் ஓர் அமைப்பும் இலட்சிய இலக்கியல்வாதத்தினால் வழிநடத்தப்படுவது ஏற்புடையது. ஆயினும், அதன் முதிர்ச்சி சீர்திருத்தத்தை யதார்த்தவாதத்துடனும், கோட்பாட்டை அதிகாரத்துடனும் கலந்து செயற்படும் அதன் ஆற்றலினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. CPA தனது 25 வருடகாலத்தைப் பூர்த்திசெய்யும் வேளையில், தார்மீக உயர்நிலையிலிருந்து போதிப்பதற்கும், தோல்வியடைந்த நோக்கங்களுக்காக வாதாடுவதற்கும், புனிதமான இலட்சிய இலக்கியல்வாத அரசியலில ஈடுபடுவதற்குமான காலம் முடிவடைகின்றது.

இப்பொழுது CPA தனது சாதனைகள்மீதும், நீதிகுறித்த சட்டம் மற்றும் அரசியலுக்கான அர்ப்பணிப்புகள் மீதும் கட்டியெழுப்புவதற்கும், சுதேச அரசியல் அதிகாரத்தைக் கையாளுவதில் அதன் எதிர்காலப்பாத்திரம் மற்றும் பொறுப்பு என்பவற்றைப் பாரதூரமாக நோக்குவதற்குமான காலம் வந்துள்ளது. இதுவே யுத்தத்துக்குப் பின்னரான இலங்கையில் அரசியலமைப்பு ஜனநாயகப்படுத்தலுக்கான ஒரேயொரு உண்மையான, சாத்தியவழியாகும். CPA இந்த நிகழ்ச்சிநிரலை எவ்வளவு சீரியமுறையில் முன்னெடுத்துச்செல்லும் என்பதே எதிர்காலத்தில் அதன் வெற்றி தோல்வியைவிட, அடுத்த 25 வருடகாலத்தில் அதன் இயைபுநிலையைத் தீர்மானிப்பதாக அமையும்.

---

**கலாநிதி அசங்க வெலிக்கல.**

எடின்பரோ பல்கலைக்கழகத்தின் சட்டக்கல்லூரியின் பகிரங்கச் சட்ட விரிவுரையாளரும், பகிரங்கச் சட்டத் துறைத் தலைவருமாவார். அவர் எடின்பரோ அரசியலமைப்புச் சட்ட நிலையத்தின் பணிப்பாளருமாவார். அவர் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆராய்ச்சி இணைப்புலமைக் கல்வியாளருமாவார்.

# 15 ஆண்டுகால சமூக ஊடக வகிபாகம்



**சஞ்சன ஹத்தொட்டுவ**

2006 நவம்பர் 28 ஆம் திகதி யதார்த்தக்காட்சிகள் (Ground views) வெப்தளத்தின் முதலாவது கட்டுரை வாகரையிலிருந்து ஒரு கண்ணோட்டத்தை வழங்கியிருந்தது. இது மரபுரீதியான அச்சு மற்றும் ஒலி, ஒளிபரப்பு ஊடகங்கள் காண்பிக்காத ஒரு விடயமாகும். இக்கட்டுரை ஒலிப்பண்பிலும், முனைப்பான முயற்சியிலும் யதார்த்தக்காட்சிகளைப் பிரதிநிதித்துவம்செய்து மேலும் பெருக்கமடையச் செய்ய முயலும் விடயங்களுக்கான அத்திவாரமாகும். ஆரம்பத்தில் ஒரு மும்மொழி வெப்தளமாகக் கருத்துருவாக்கம் செய்யப்பட்டு, விரைவிலேயே அது தமிழ் மற்றும் சிங்கள வாசகர்கள் முறையே தமது சொந்த மொழிகளிலான வெப்தளங்களைப் பார்வையிட விரும்புகின்றார்கள் என்னும் நிகழ்வுண்மையை வெளிக்கொணர்ந்த ஒரு செயற்பாடாக அமைந்தது. இலங்கையின் ஊடகங்களும், தகவல் உருவாக்க மூலங்களும், இனத்துவ மற்றும் மொழிரீதியில் ஆழமாகப் பிளவுண்டுகிடப்பதோடு, அவை பல தசாப்தகால சமூக-அரசியல் பிரிவினைகள் மற்றும் முறைமையான இனவாதம் என்பவற்றைப் பிரதிபலிக்கின்றன. சமூக ஊடகங்கள் மற்றும் கச்சிதமான தொலைபேசிகளின் (Smartphones) அறிமுகத்துக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்ட யதார்த்தக்காட்சிகளுக்குப் பின்னர், 2007 இல் விகல்பவும், 2008 இல் மாற்றமும் வெளியாகின. தனிப்பட்ட அல்லது கூட்டு அடிப்படையில் கணிப்பீடுசெய்யும்போது, இந்த மூன்று அரங்குகளும் அவை ஆரம்பித்த நாளிலிருந்து இன்றுவரை ஒரு தனிச்சிறப்பான குடியியல் ஊடக வாழிடவியல் முறைமையாகப் பரிணமித்துள்ளன.

தென்கொரியாவின் OhMyNews மற்றும் மலேசியாவின் Malaysiakini என்பவற்றின செல்வாக்கு மற்றும் உணர்வைப்பெற்றுக்கொண்ட யதார்த்தக்காட்சிகள் சுமார் மூன்று தசாப்தகால யுத்தத்துக்கு தடுக்கமுடியாதபடி ஓர் இரத்தம் சிந்தும் தீர்வைநோக்கிப் போய்க்கொண்டிருந்த ஒரு நாட்டில் ஆட்சி, ஜனநாயகம் மற்றும் மனிதஉரிமைகள் சம்பந்தமாக பிரஜைகளின் பத்திரிகையாளர்கள் வெளிக்கொணர்ந்த யதார்த்த உண்மைநிலை அறிக்கைகளைப் பயன்படுத்தத் தீர்மானித்தது. சலுகைகள் அல்லது பயம் காரணமாக, மரபுரீதியான அச்சு

மற்றும் ஒலி-ஒளிபரப்பியல் ஊடக அரங்குகள் அரசாங்கத்தை அல்லது ஆட்சியின் போக்கை அல்லது இராணுவ மிகைச்செயற்பாடுகளை விமர்சிக்கும் உள்ளடக்கங்களை, வெளியிடவில்லை அல்லது துணியவில்லை. தேசியப் பாதுகாப்புச் சட்டகங்களும், வன்செயல், தேசியவாதம் கலந்த அரசாங்கத்தின் கூற்றுகளும் ஊடகச் சட்டகங்களில் ஆதிக்கம் செலுத்தின. எதிரான கதைகள் அருமையாகவும், அணுகமுடியாதவையாகவுமிருந்தன. வடக்கு, கிழக்கு உள்ளிட்டவகையில், இலங்கை முழுவதையும் சேர்ந்த எழுத்தாளர்களின் ஆக்கங்களின் உள்ளடக்கங்களைச் சுதந்திரமாகப் பிரசுரிப்பதற்குக் கிட்டிய ஒரேயொரு அரங்கு உலகளாவிய வெப்தளம் மாத்திரமேயாகும். கண்கண்டகாட்சிகளின் சான்றுரைகள், யதார்த்தமான உண்மைநிலை அறிக்கைகள், சிவில் சமூகத்தின் விமர்சனப்பார்வைகள், வன்செயலுக்குச் சாட்சிபகரும் பல்லூடக உள்ளடக்கங்கள் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் எதிர்நோக்கிய வன்செயல், மனிதஉரிமைமீறல்கள் மற்றும் மோசமான நிலைமைகள் என்பவையே யதார்த்தக்காட்சியின் ஆரம்பகால வருடங்களில் ஆதிக்கம் செலுத்திய விடயங்களாகும். இந்த உள்ளடக்கம் முறையே விகல்ப மற்றும் மாற்றம் என்பவற்றில் வெளியிடப்படுவதற்காக சிங்களத்திலும், தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டது. பரஸ்பரநிலையாக, மாற்றம் அல்லது விகல்பவில் முதலில் பிரசுரிக்கப்பட்ட நீள்வடிவ இதழியல் உள்ளிட்டவகையிலான கதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு, யதார்த்தக்காட்சிகளில் பிரசுரிக்கப்பட்டன. ஊடக வெப்தளமொன்றுக்கான இலங்கையின் முதல் பதிப்புத்திருத்த மற்றும் சமூக ஈடுபாட்டு வழிகாட்டல்களை வெளிப்படுத்தும்வகையில், மூன்று வெப்தளங்களும் தனியாகவும், கூட்டாகவும் அடுத்தடுத்து ஆட்சிக்குவந்த அரசாங்கங்களின் நிலவும்நிலை மற்றும் சங்கடமான உண்மைகளை நிலைமாற்றமில்லாத வகையில் சவாலுக்குட்படுத்தும் விடயங்களைப் பிரசுரித்தன.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தில் CPA குடியியல் ஊடக முன்முயற்சிகள் சந்தித்த ஊடகத்துறைக்கான நல்ல உதாரணம். யுத்தம் முடிவடைந்து ஒருசில மாதங்கள் கழிந்தநிலையில் மெனிக்பாம் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் முகாமில் நிலவிய மனிதாபிமானமற்ற நிலைமைகள் குறித்த விடயங்களை யதார்த்தக்காட்சிகள் வெளிப்படுத்தியவிதமாகும். 2009 ஆகஸ்ட் 15ஆம் திகதி யதார்த்தக்காட்சிகள் இந்த முகாமில் இடம்பெற்ற குறிப்பிடத்தக்க வெள்ளப்பெருக்குச் சம்பந்தமான ஏழு புகைப்படங்களை வெளியிட்டது. நீர்வழிந்தோடல் மற்றும் துப்புரவு அகநிலையமைவுகள் இல்லாமை காரணமாக அங்கு வாழ்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் நரகத்துக்கொப்பான சூழ்நிலையைத் தாங்கிக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர். யதார்த்தக்காட்சிகளில் குறிப்பிடப்பட்டவாறு உள்நாட்டு அச்சு, ஒளிபரப்பு மற்றும் வெப்தள ஊடகங்கள் இந்தக் கதையை வெளியிடவில்லை. டெயிலி மிரர் பத்திரிகை மாத்திரமே BBC செய்தித்துணுக்கு ஒன்றை மீள்பிரசுரம் செய்தது. அன்று மெனிக்பாமில் நிலவும் சூழ்நிலைகுறித்து எந்த அரசாங்கச் செய்திப்பத்திரிகையோ, தொலைக்காட்சி நிலையமோ எதையுமே தெரிவிக்கவில்லை.

2008 இல் யதார்த்தக்காட்சிகள் சமூக ஊடக உள்ளடக்கத்துக்கான தெற்காசியாவின் முதல் முகநூல் மற்றும் டுவிட்டர் கணக்குகளை உருவாக்கியது. இது இந்த அரங்குகளைப் பயன்படுத்தும் சுயாதீனமான, புலனாய்வு ஊடகவியலுக்கான செழிப்பான சாத்தியவளத்தை உணர்ந்துகொண்டமையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். CPA யின் சமூக ஊடக முன்முயற்சிகள் ஏனைய வெப்தள மற்றும் இணையத் தொழில்நுட்பங்களுக்கு முன்னோடிகளாக விளங்கின. முதனிலை ஊடக நுகர்வு கச்சிதத் தொலைபேசிகளுக்கு நகருவதற்குப் பல வருடங்களுக்கு முன்னரே யுனிகோட் சிங்களத்தை அறிமுகம்செய்த முதல் ஊடக அரங்கு விகல்ப ஆகும். இதில் பக்க உள்ளடக்கம் சகல முன்னணித் தேடல் இயந்திரங்களிலும் சுட்டிநிலைப்படுத்தப்பட்டு, இடம்பெயர் வழிமுறைகள் அனைத்திலும் வழுவற்ற முறையில் செயற்படுத்தப்படக்கூடிய சாத்தியம் உள்ளது. நீண்ட வடிவ ஊடகவியலிலிருந்து கேலிப்பரிகாசம், உறவு ஊடாட்டநிலை, ஆழந்த ஈடுபாடு, பல்லூடக ஆக்கங்கள் வரையிலான டப்ளெட்டுகள் மற்றும் கச்சிதத் தொலைபேசிகளில் உள்ளடக்கத்தைக் காண்பிக்கும் அதியுன்னதநிலை வெப்அரங்குகளுடன் செயலாற்றுதல் வரையிலான விடயங்களில் CPA ஊடகங்கள் வெப், இணையம் மற்றும் சமூக ஊடகங்களின் சாத்தியவளங்களைச் சாதுரியமாகப் பயன்படுத்தி உள்நாட்டிலும், வெளிநாடுகளிலுமுள்ள பரந்த அளவிலான வாசகர்களைச் சென்றடைவதில் மரபுசார் ஊடகங்களைவிடப் பல வருடங்கள் முன்னணியில் திகழ்ந்தன. மேலும் CPA யின் சமூக ஊடக அரங்குகள் தன்னிச்சையான தணிக்கை, தீயநோக்கங்கொண்ட அரசு அல்லது அரச சார்பற்ற செயற்பாட்டாளர்களின் விஷமக் குழப்பங்களின் பின்னணியில் எவ்வாறு மீண்டெழும் துடிப்புள்ள சமூக ஊடக

அகநிலையமைவுகளைத் தாபிப்பது என்பதை எடுத்துக்காண்பிக்கின்றன.

அனைத்துமே எதிர்பார்த்தவாறு நடந்துவிடவில்லை. தீர்மானகரமான உள்ளடக்கத்தின் முனைப்பெல்லையை, அதிகரிக்கும் வகையிலான சமூக ஊடகங்களின் சாத்தியவளங்கள் விரைவாகவே இசைவாக்கம் செய்யப்பட்டு, வெறுப்பையும், வன்முறையையும் அதிகரிக்கும்வகையில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டன. இந்தக் களத்தில் CPA யின் சமூக ஊடக அணி 2014 இல் வன்முறை, பௌத்த தீவிரவாதம் முகநூலைக் கருவியாகப் பயன்படுத்தியமை குறித்த சான்றுகளைக் காண்பிக்கும் வகையிலான இலங்கையின் முதல் தீவிர ஆராய்ச்சியை மேற்கொண்டன. மியன்மாரில் அந்தவேளையில் இடம்பெற்ற நிகழ்வுகளையும் சரியாகப் பிரதிபலித்துக் காண்பித்தது. அதையடுத்த வருடங்களில் மேலும் இரண்டு அறிக்கைகள் வெளியாகின. இவை இன்னும் சில வருடங்களில் அத்திலாந்திச் சமுத்திரத்தின் இருபுறங்களிலும் அதிக நோக்கெல்லை மற்றும் அளவுகொண்ட வகையில் செய்தி வட்டங்களை வரைவிலக்கணம் செய்யவிருக்கும் முகநூல் அரங்கு துஷ்பிரயோகக் காரணிகளை ஆய்வுசெய்தன. இந்த உள்ளடக்க உருவாக்கம், வெப் அடிப்படையிலான இதழியல் சம்பந்தமான கணிசமான அளவிலான புதிது புனைதல்கள் மற்றும் அதேவேளையில் வன்முறை தீவிரவாதத்தில் ஆழமாகக் கவனம் செலுத்தும் வகையில் (சமூக) ஊடக வாழ்வியல் குறித்த முதனிலை ஆராய்ச்சி என்பவற்றின் இணைவு CPA யின் தனிச்சிறப்பான ஒன்றாகும். 2018 இல் அம்பாறை மற்றும் திகணவில் இடம்பெற்ற அச்சமூட்டும் வன்செயல்களுக்குப் பின்னர் முகநூலுக்கான திறந்த மடலொன்று வெளியிடப்பட்டமை அரங்குத் தீங்குகள்குறித்து எடுத்துரைக்கும்வகையில் இக்கம்பனியின் முதலாவது பிரதிவினைக்கு இட்டுச்சென்றது. இது ஒரு சுயதீனமான மனிதஉரிமைகள் தாக்கக் கணிப்பீட்டுக்கும் இட்டுச்சென்றது. இதற்குப்பின்னர் உலகம் முழுவதிலுமுள்ள முகநூலின் ஆக்கங்கள் மற்றும் அரங்குகுறித்த அணிகளுடன் இடம்பெற்ற தீர்மானகரமான ஈடுபாட்டுச் செயற்பாடுகள் காரணமாகத் தவறாக வழிநடத்தும் செய்திகள், தவறான செய்திகள் மற்றும் குரோதத்தைத் தூண்டும் உள்ளடக்கம் என்பவற்றுக்கெதிரான கம்பனியின் தொடரும் முயற்சிகளுக்கு வழியேற்பட்டது.

2002 இல் CPA யில் இணைந்துகொண்ட நான் 2020 நடுப்பகுதியில் முறைசார் வழிகளில் விலகிக்கொண்டேன். இந்த நிறுவனத்தில் கழித்த 18 ஆண்டுகளில் 13 வருடங்கள் நான் சமூக ஊடக அணியினரின் ஆராய்ச்சிகளையும், யதார்த்தக்காட்சிகளின் தினசரி செயற்பாடுகளையும் மேற்பார்வையிட்டேன். CPA யின் சமூக ஊடக அரங்குகளில் வழங்கப்பட்ட உள்ளடக்கம் இலங்கையின் ஜனநாயகச் சாத்தியவளத்தை மேலும் பூரணமாக ஈட்டிக்கொள்ள உதவுமென்று தீவிரமாக நம்பும் தனிநபர்கள் குழுவொன்றுக்குத் தலைமைதாங்குவது மிகவும் கௌரவமான ஒரு விடயமாகவிருந்தது. அதேவேளையில், இந்த நீண்டகால ஈடுபாடும், அனுபவமும் Ngozi Adichie தனிக்கதையொன்றின் அபாயம் என அழைத்த இலங்கையின் ஊடக நீளுரையாடல் இடர்வரவுகள் குறித்து எடுத்துக்காண்பிக்கின்றன. வளர்ச்சியுறும் அதிநவீன வினைத்திறன் மற்றும் தெளிவான மூலோபாய நோக்கம் என்பவற்றுடன் இடம்பெறும் இனவாதப்பிரசாரத்தின் வெற்றி பிளவுபடுத்தும் உள்ளடக்கத்தை அதிகஅளவில் வழங்குவதில் மாத்திரமன்றி, இராணுவமயமாக்கலும், இனவாதமும் சாதாரணமானவையென எண்ணவைக்கும் மனப்போக்கை உருவக்குவதிலுமாகும்.

ஜனநாயக வழிமுறைகளையும், நீளுரையாடல்களையும் அழித்தொழிக்கும் இந்தப் புற்றுநோயை எதிர்த்துப்போராடும் ஒரேயோரு வழி CPA யின் பணிப்பாணையாகிய ஆராய்ச்சி மற்றும் பரப்புரை நிகழ்ச்சித்திட்டங்களினூடகப் பகிரங்கக்கொள்கை விவாதங்களில் இடையீடுகளைச் செய்யும் முன்னார்வ நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகும். சமூக ஊடகங்களும், மூலோபாயத் தொடர்பாடலும் இப்பிரயத்தனத்தின் ஆணிவேராகத் திகழுகின்றன. அடுத்தபடியாக நிகழ்வது என்னவென்பதைப் பார்ப்பதற்கு நான் ஆவலுடன் காத்திருக்கின்றேன்.

---

**சஞ்ஜன ஹத்தொட்டுவ**

சமாதானம், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை வலுவூட்டுவதற்குத் தகவல் தொழில்நுட்பம் பயன்படுத்துவது பற்றிய ஆலோசகராகவும், நவீன ஊடக அறிவு, இணையச் செயற்பாடு, டிஜிட்டல் பாதுகாப்புப் பற்றிய பயிற்றுவிப்பாளராகவும் பணியாற்றினர். Ground views இணையத்தின் ஆரம்ப பதிப்பாசிரியராவார். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஊடகப் பிரிவின் பிரதானியாகவும் பணியாற்றினார்.

# துணிச்சல், தலைமைத்துவம் மற்றும் மேலும் பல



பவானி பொன்சேக்கா

இலங்கையில் மனித உரிமைகள், சமாதானம், நீதி மற்றும் சனநாயகத்தை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிப்புகளைச் செய்த 25 வருடங்களைக் கொண்டாடுகின்ற மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திற்கு இந்த ஆண்டு தனிச்சிறப்பு வாய்ந்தது. அது இலங்கையில் சட்டத்தின் ஆதிக்கம் துரிதமாக அழிவுக்கு உள்ளாகியும் உரிமைகளுக்கும் நல்லிணக்கத்திற்கும் அச்சுறுத்தலாகும் வகையில் அதிகாரவாதமும் இராணுவப் பாணியிலான ஆட்சிக்கு இட்டுச் செல்லும் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்கின்ற ஆண்டாகும். அவை புதிய சவால்களை தோற்றுவிப்பதுடன் பழையவற்றை மேலும் வலுப்படுத்துவதுடன் உலகளாவிய தொற்று நிலையில் மேலும் சிக்கலாகின்றது. தொற்று நிலைமையிலும் தீர்க்கப்படாத மோதல்களின் மத்தியிலும் தான் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் உறுதியாக எழுந்து நின்றதுடன் அரிதான காரணங்களுக்காக நீதியின் குரலையும் எழுப்பியது.

இந்த 25 ஆண்டுகளுக்குள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அரசியலமைப்புத் திருத்தங்கள், தேர்தல் திருத்தங்கள், நிலைமாறு கால நீதி, மொழியுரிமைகளிலிருந்து மேலும் பல கொள்கைப் பரிமாணங்களை உள்ளடக்கிய பல துறைகளில் அரசியற் கலந்துரையாடல்களை வளர்க்கின்ற மற்றும் அறிவூட்டும் கூர்மையான ஆராய்ச்சிகளையும் கருத்தியல்களையும் கட்டியெழுப்புவதைக் காண முடிந்தது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் இன்றியமையாததும் பல்வேறு வகையான நிபுணத்துவமும் கருத்துக்கள் மற்றும் மாற்று முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கும் போதும் தகவல் மதிப்பீடு, மக்கள் பங்கேற்பு செயற்பாடுகள், தேர்தல் கண்காணிப்பு, பிரசைகள் வெகுசன ஊடகம் மற்றும் பொதுமக்கள் உரிமைகளுக்காக வழக்குத் தாக்கல் செய்வதில் தெளிவானது. தொடர்ந்தும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பெரும்பாலும் மிரட்டல்களுக்கும் வேறு சவால்களுக்கும் முன்னே, எடுத்த நிலைபேற்றுத் தன்மையானதும், கொள்கை ரீதியாக நிலைத்த

கூட்டாட்சி சனநாயகத்தின் பெறுமதிகளும் கௌரவமும், சமத்துவம், சுதந்திரம் மற்றும் நீதிக்காக எழுப்பப்பட்ட நம்பகரமான குரலாக அங்கீகரிக்கப்பட்டன.

மக்கள் உரிமைகளுக்காக வழக்குத் தாக்கல் செய்வதில் காட்டிய பின்வாங்காததும் தைரியமான இடையீடுகளும் தனிப்பட்ட மட்டத்தில் அதன் மிகச் சிறந்த கவர்ச்சிகரமான குறிக்கோள் விளைவாகும். உத்தேச அரசியலமைப்புத் திருத்தங்கள், சட்டக் கொள்கைகள் மற்றும் அநீதிகளும் பாரபட்சங்களும் தொடர்பில் கடந்த இரண்டு தசாப்த காலத்திற்குள் தொடர்ச்சியாக இலங்கையில் நீதிமன்றத்திடம் சென்றதால், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வழங்கிய பங்களிப்பு உண்மையில் கௌரவிக்கத் தக்கது. இந்தத் துறையில் பங்களிப்பும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் பாதிப்பிற்கு ஆளான மக்களுக்கும் வழங்கிய ஒத்துழைப்பின் காரணமாக பிரசைகளின் நகர்வை மட்டுப்படுத்தும் அனுமதிப் பத்திர முறை போன்ற பிடிவாதமான பாரபட்சங்கள், பலவந்தமாக காணிகளிலிருந்து அகற்றப்படுதல், மற்றும் மொழியுரிமைகளின் அடிப்படையில் பாரபட்சங்கள் அகற்றப்படக் காரணமாகின. தேசிய பாதுகாப்பு அல்லது பொருளாதார செயற்பாடுகளின் மறைவில் காணிகளை கையகப்படுத்திக் கொள்வதற்கு ஒவ்வொரு அரசாங்கமும் எடுத்த முயற்சிகளுக்கும் சவால் விடுப்பதும் அதில் அடங்கியிருந்தன.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கடந்த கால பணிகளையும் சளைக்காத பண்பையும் மீளத் திரும்பிப் பார்க்கும் போது தீர்வொன்றைக் காண்பதற்கு, பல ஆண்டுகள், சில வேளை, சுமார் ஒரு தசாப்த காலம் கடந்த சில வழக்குகள் பற்றி குறிப்பிட வேண்டும். சம்பூரில் உடனடி அதி உயர் பாதுகாப்பு வலயத்தைப் பெயர் குறித்து சம்பூர் மக்களை இடம்பெயரச் செய்தலும் பின்னர், அப்பிரதேசத்தை அபிவிருத்தி வலயமாகப் பெயர் குறித்தல் தொடர்பில் இந்நிறுவனம் நீதிமன்றத்திடம் சமர்ப்பித்த மனுவை விசாரித்த பின்னர் இடம்பெயர்ந்து சென்ற அப்பிரதேச மக்கள் தமது வீடுகளுக்கு ஒரு தசாப்தத்தின் பின்னரே திரும்பிவர முடிந்தது. சட்டத்தின் ஆதிக்கத்தையும் அடிப்படை உரிமைகளையும் மூழ்கடிக்கக் கூடிய சட்டங்களையும் கொள்கைகளையும் சவாலுக்குட்படுத்தி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் நீதிமன்றத்திடம் மனுக்களைத் தாக்கல் செய்தது. வெற்றிகரமாக அமைந்த பல சவால்கள் காரணமாக வரையப்பட்ட சட்டங்களையும் கொள்கைகளையும் அதிகாரிகள் அகற்றிக் கொள்ள நேர்ந்தது.

பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் பின்னடைவுகளுக்கும் முன்னே சவால் விடுக்கின்ற ஆற்றலும் துணிச்சலும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வழக்குத் தாக்கல் செய்கின்ற அடிப்படை அம்சங்களாக விளங்குகின்றன. 2007ல் அப்போது பாதுகாப்புச் செயலாளரின் கட்டளையொன்றின் மீது கொழும்பும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் விடுதிகளில் இருந்த நூற்றுக் கணக்கான தமிழ் மக்கள் அகற்றப்பட்டமை அவ்வாறானதொரு சந்தர்ப்பமாகும். அவ்வாறான செயல்கள் மீண்டும் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு எம்மில் சிலர் இந்த தான்தோன்றித் தனமான நடவடிக்கையை சவாலுக்குட்படுத்துவதற்குத் தீர்மானித்தோம். அதன் பயனாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் கலாநிதி சரவணமுத்துவும் நீதிமன்றத்திடம் மனுவொன்றைச் சமர்ப்பித்ததால், அவ்வாறு அகற்றப்படுதல் நிறுத்தப்பட்டது. அது மனு தாக்கல் செய்யப்பட்டதன் நேரடிப் பெறுபேறாகும். இவ்வாறான பெறுபேற்றை அதிகாரவாத ஆட்சியின் உச்சக்கட்டத்திலும் கூட பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்ததே இதன் முக்கிய அம்சமாகும்.

இந்த நிறுவனம் இரண்டு தசாப்த காலத்துக்கும் மேலாக மக்களுக்காக வழக்குத் தாக்கல் செய்யும் வரலாற்றை மீளத் திரும்பிப் பார்க்கும் போது, அது இலங்கையின் வழக்குத் தொடரும் வாய்ப்புகள் மீது எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது? என்ற விடயமும் தோற்றம் பெறுகின்றது. இது எந்தளவுக்கு குறிக்கோள் விளைவாக அமைந்தது எனில் நிகழ்காலத்தில் மக்களுக்காக சமர்ப்பிக்கின்ற மனுக்களின் எண்ணிக்கையை நோக்கிப் பார்வையைச் செலுத்துவதன் மூலம் ஊகிக்க முடியும். எனினும் குறிப்பாக பாதுகாப்பு தொடர்பில், அச்சுறுத்தல் காணப்படுகின்ற நிலைமையொன்றின் கீழ், அதிகாரிகளுக்கு சவால் விடுப்பதற்காக எப்போதும் மனுவொன்றைத் தாக்கல் செய்வதில் ஆர்வம் செலுத்துவதில்லை.

இந்தத் தடைகளைக் கருத்திற் கொள்ளாது, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இத்துறையில் சளைக்காதிருப்பது, உதவி புரிபவர்களைப் போன்றே எதிர் தரப்பினரும் அங்கீகரிக்கக் காரணமாயிருந்தது. தண்டனையிலிருந்து விலக்களித்தலை எதிர்க்கவும், நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆதிக்கத்தை மேம்படுத்தவும், இந் நிறுவனத்தின் நீண்டகால அர்ப்பணிப்பு காரணமாக நீதிமன்றத்தில் மனுவொன்றைச் சமர்ப்பிப்பதற்கான பாதுகாப்பும் ஆற்றலும் உண்டென பெரும்பாலானவர்களிடையே ஓர் உணர்வை ஏற்படுத்துகின்ற கலாசாரத்தை உருவாக்குவதற்குக் காரணமானது என்பதை ஐயமின்றிக் குறிப்பிட முடியும்.

தொடர்ந்தும் பிரதானமான சட்ட ரீதியான சவால் விடும் பல சந்தர்ப்பங்களிலும் மனுக்களைத் தாக்கல் செய்வதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தொடர்ச்சியாக முன்வந்தது. அரசியலமைப்புச் சட்ட சூழ்ச்சி, (2018) இருபதாவது அரசியலமைப்புத் திருத்தம் (2020) மற்றும் துறைமுக நகரச் சட்டம் (2021) போன்ற மிக அண்மைக்கால சவாலுக்குட்படுத்தல்களில் பல்வேறு தரப்பினர் நீதிமன்றத்தின் முன் தோன்றினர். இக் குழுவினரிடையே இரண்டு தசாப்த காலங்களுக்கு அதிகமாக இடைவிடாது நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்த தரப்பினரில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் ஒன்று. சவால்களும் பின்னடைவுகளும் எவ்வளவு இருந்தாலும் அதிகாரத்தில் இருப்பவர்கள் எந்த அரசியற் கட்சியினராக இருப்பினும், அது அசைந்து கொடுக்காதிருந்தது. மக்களுக்காக வழக்குகளைத் தாக்கல் செய்வதில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனியாகக் கடந்த இருபது வருட பயணப் பாதை இப்போது பலர் இருக்கின்ற இடமாக மாற்றப்படுவதற்கு அவை காரணமாக அமைந்தன என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும் அந்தப் பாவனைகள், மக்களுக்காக வழக்குத் தாக்கல் செய்வதில் மாற்றமொன்றை ஏற்படுத்தக் கூடிய கருவியாக ஏற்றுக் கொள்ளுகின்ற வாய்ப்பினை அமைத்துக் கொள்வதற்குத் துணையாகின.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிலைபேற்றுத் தன்மையும் துணிச்சலும் இலங்கையிலும் அதற்கு வெளியேயும் தற்போதைய மற்றும் எதிர்கால சட்ட வல்லுனர்கள், நீதிபதிகள், கல்வியாளர்கள் மற்றும் வேறு துறையினரையும் அறிவூட்டுகின்ற இன்றியமையாத சட்டக் கோவையொன்றை உருவாக்குவதற்குக் காரணமாக அமையும்.

இப்போதைக்கு எம்மில் சிலர் மக்களுக்காக வழக்குத் தாக்கல் செய்து, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பல துறைகளுக்கு வழங்கியுள்ள பங்களிப்பை உள்ளடக்கிய நூலொன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். அது எம் அனைவரது வாழ்நாட்களைக் கடந்து செல்கின்ற மிகச் சிறந்த பணியின் உருவாக்கத்தை எப்போதும் நினைவுபடுத்துவதோடு தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் இடையீடு தொடர்பான தனித்துவமானதும் மிகச் சிறப்பான அறிவையும் பெற்றுத் தருகின்ற கோவையாக அமையும். இவையும் இன்னும் பல அனுபவங்களும், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் முதல் இருபத்தைந்து ஆண்டு பயணப் பாதையை உத்வேகம் மிக்கதாக மாற்றுகின்றன. அது பணிகளைப் பூர்த்தி செய்ததன் பின்னர், ஒரு தேனீர் கோப்பையை சுவைப்பதுடன் கட்டியெழுப்பப்பட்ட வாழ்நாள் முழுவதும் காணப்படுகின்ற நட்புடன் கூடிய மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வாயிலைக் கடந்து சென்ற நூற்றுக் கணக்கானோரின் பயணமாகும். பெரும்பாலானவர்களுக்கு அது மக்களின் வாழ்க்கையை மாற்றிய மற்றும் சட்டம் தொடர்பிலும் அரசியல் உரையாடல்களை அறிவூட்டியதுமான கனவுலகை நனவாக்கிய காப்பு இல்லமாகும். அவையனைத்தையும் விட மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனது நோக்கை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்லும் நிகரற்ற குழுவொன்றைக் கட்டியழுப்புவதில் பங்களிப்புச் செய்தது. இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் ஏற்றப்பட்ட தீச்சுடர் இன்னுமின்னும் பிரகாசமாக தனித்துவமான கருத்துகள், அளவற்ற வலிமை மற்றும் தன்னிகரற்ற தலைமையுடன் இன்னும் பல வருடங்கள நிலைத்திருக்கும்.

---

**பவானி பொன்சேக்கா**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சட்டப் பிரிவின் பிரதானியும் சிரேஷ்ட ஆய்வாளருமாவார். சட்டத்தரணி, காணிகள், நல்லிணக்கம், வடக்குக் கிழக்கு மக்களின் மனித உரிமைகள் உள்ளிட்ட பல விடயங்களில் நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இளம் மனித உரிமைகள் செயற்பாட்டாளராக விருதுகளைப் பெற்றுள்ளார்.

# உரிமைகளுடனும் கௌரவத்துடனும் சமாதானத்தை அடையும் போராட்டம்



**மிராக் ரஹீம்**

எதிர்பார்ப்பும் அதற்கான வாய்ப்பும் காணப்பட்ட சமயத்தில் தான் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சமாதானம் மற்றும் மோதல் பகுப்பாய்வுப் பிரிவில் ஆய்வாளராக நான் இணைந்து கொண்டேன். இலங்கையில் அரசாங்கத்திற்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையே 2002 பெப்ரவரி மாதம் போர் நிறுத்த ஒப்பந்தமொன்று கையெழுத்திடப்பட்டதுடன், நீண்ட காலமாக காணப்படும் இன மோதல்களுக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியிருந்தன. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் பேச்சுவார்த்தை ரீதியான தீர்வொன்றுக்காக முன்வந்த ஏனைய சிவில் சமூக அமைப்புகளும் சமாதானச் செயற்பாடுகளுக்கு ஒத்தாசை வழங்குவதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டன. இனப் பிரச்சினைக்கு நீடித்த தீர்வொன்றைத் தேடுவதென்பது சுதந்திரத்தின் பின்னர் இந்த நாடு முகங் கொடுத்த பாரதூரமான சவாலாக இருந்தது. யுத்தம் முடிவடைந்து ஒரு தசாப்தம் கடந்த போதும் நிலைமை அப்படியேதான் உள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் பேச்சுவார்த்தைச் செயற்பாட்டில் முதற் கட்டத்தில் (Track1) அந்த நாட்களில் உத்தியோகபூர்வ இராஜதந்திர அலுவல்களைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட சொற்பதம்) தொடர்புபட்டிருந்த பேச்சுவார்த்தையாளர்களுக்கும் ஏனையவர்களுக்கும் கொள்கை மாற்றங்கள் மற்றும் கருத்துகளை வழங்கும் ஆலோசனை கண்காணிப்பு வகிபாகத்தில் மிகச் சிறப்பான இடம் உரித்தானது. அதற்கு சமாதான செயற்பாடு தொடர்பில், மக்களிடையே விரிவான புரிந்துணர்வொன்றை ஏற்படுத்துவதற்கு, மக்கள் உரையாடலை ஏற்படுத்துவதற்கும் சர்வதேச மக்களுடனான கருத்தியல் பரப்புரைக்குமான பிரச்சாரத்தையும் செய்ய முடிந்தது. இவ்விடயத்திற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில், பெரும்பாலும் 2001 மட்டில், சமாதானம், மற்றும் மோதல் பகுப்பாய்வுப் பிரிவு என்ற பெயரில் விசேட பிரிவொன்று

நிறுவப்பட்டிருந்தது. முன்னர் போராட்ட இயக்கமொன்றாக இருந்து பின்னர் அரசியல் கட்சியாக செயலாற்றிய ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் (EPRLF) தலைவராக இருந்து பின்னர் சமாதான செயற்பாட்டில் இணைந்து கொண்ட ஆய்வாளரான கேதீஸ் லோகநாதன் அதன் பிரதானியாக இருந்தார். அவர் இனரீதியான மோதல்களுக்கு அரசியலமைப்பு ரீதியான தீர்வொன்றுக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் தீவிரமாக முன்வந்ததுடன் எல்.ரி.ரி.ஈ யை விமர்சித்தார்.

இப்பிரிவு மோதலுக்கு சமாதானத் தீர்வொன்றுக்காக முன்னிற்கும் விசேட பணிக்காக நிறுவப்பட்டது. உலகெங்கும் முன்னணிப் பல்கலைக்கழகங்களில் மோதல் தீர்வு மற்றும் பரிணாமம், புகழ்பெற்ற விடயமாகக் காணப்பட்ட காலத்தில் தான், இப்பிரிவு நிறுவப்பட்டது. நீடிக்கப்பட்ட மோதல்களும் கட்டமைப்பு ரீதியான வன்முறையும் காணப்பட்ட பல்வேறு சூழ்நிலைகளில் இவ் எண்ணக்கருக்களைப் பயன்படுத்துவது தொடர்பில், பேச்சுவார்த்தை நடத்திய ஆவணங்களின் சேகரிப்பொன்றும் இருந்தது. இவ்வெண்ணக்கருவை ஈடுபடுத்திக் கொள்ளும் அமைப்புகள் சமாதானம் தொடர்பில் பணியாற்றுகின்ற அரசசார்பற்ற அமைப்புகளின் இரண்டாவது பரம்பரையாகும்.

இப்பணியை நிறைவேற்றுவதற்காக எமது பிரிவு ஆய்வுகள் மற்றும் கருத்தியல் கருவிகள் பலவற்றையும் பயன்படுத்தியது. சமாதானச் செயற்பாட்டில், மனித உரிமைகளின் முக்கியத்துவம் மற்றும் ஏனைய சமாதானச் செயற்பாடுகளிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய பாடங்கள் போன்ற சமாதானத்துடன் தொடர்புடைய சிக்கல்கள் தொடர்பான ஆக்கபூர்வமான உள்ளடக்கத்துடன் கூடிய ‘சாம விமர்ஷ’ மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்ட சஞ்சிகையாகும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஏனைய பிரிவுகளுடன் ஒன்றாக ஒத்துழைப்புடன் தயாரிக்கப்பட்ட இச் சஞ்சிகை நாடு முழுவதும் பகிர்ந்தளிக்கப்பட்டது. தூரப் பிரதேசங்களில் நாம் பணிகளில் ஈடுபடுகின்ற போது, தமது பிரதேசத்தில் நூல் நிலையங்களிலோ அல்லது சமூகம் சார்ந்த அமைப்பொன்றில் அச்சஞ்சிகை வாசிக்கப்பட்ட மக்களின் பாராட்டை எம்மால் கேட்க முடிந்தது. போர் நிறுத்தக் காலத்தில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பல்வேறு மாவட்டங்களின் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பல்வேறு குழுவினருடன் பெற்றுக் கொண்ட அறிவையும் தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டு, அவர்களுக்கு தாம் வேலை செய்கின்ற பிரதேசத்தின் மக்களுடன் மேலும் விழிப்புடன் கலந்துரையாட முடிந்தது. எனினும் தெளிவாக இவ்வாறான வெளிவாரி செயற்பாடுகளுக்கு மேலும் அதிகமான அவதானத்தை செலுத்த வேண்டியிருந்தது.

இப்பிரிவு தேசிய மற்றும் பிரதேச மட்டங்களில் மோதலின் விசேட பரிமாணங்களை மிகச் சிறப்பாக இனங்கண்டு கொள்வதற்கு ஆய்வுகளை நடத்தியது. பிரதேச மட்டத்தில் பிணக்குகளைத் தீர்க்கும் பொறிமுறையொன்றை இனங்காண்பதற்கு சமூக மட்டத்திலான மோதல்களை எவ்வாறு விழிப்பது என்ற விசாரணையைச் செய்வதற்காக 2003ல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் என்னால் ஒருங்கிணைக்கப்பட்ட ‘வடகிழக்கு மற்றும் புத்தளத்தின் பிணக்குகளைத் தீர்க்கும் முறைசாரா வழிமுறை’ என்ற பெயரில் ஆய்வொன்றை நடத்தியது. 2005ல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பேராசிரியர் அஷுடொஷ் வர்ஷினியின் தலைமையில் சமூகத் தொகுப்புகள் மற்றும் தொடர்புகளின் அடிப்படையில் இன ரீதியான வன்முறைகளும் சகவாழ்வு தொடர்பான அவரது ஆய்வறிக்கையைப் பயன்படுத்தி சில நாடுகளை இணைத்துக் கொண்ட ஆய்வொன்றிலும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தொடர்புற்றது. அது இன ரீதியான ‘மோதல்கள்’ பல காணப்பட்ட இலங்கை போன்ற நாட்டுக்கு பெரிதும் பொருந்தும்.

சமாதானச் செயற்பாட்டுக்கு அழுத்தம் விடுக்கும் முயற்சியாக இப்பிரிவு பெரும்பாலான சமயங்களில் ஒரு சுற்றுச் சமாதானப் பேச்சுவார்த்தையின் பின்னர், பல வட்டமேசைப் பேச்சுவார்த்தைகளை ஏற்பாடு செய்தது. இந்த வட்டமேசைப் பேச்சுவார்த்தைகள் சிவில் சமூகப் பிரதிநிதிகள் அரசாங்கத்தின் பேச்சுவார்த்தைக் குழுவின் உறுப்பினர்களிடம் கீழ் மட்டத்திலான பிரச்சினைகள் மற்றும் ஏனைய பிரச்சினைகளை நேரடியாக சமர்ப்பிக்கக் கூடிய சந்தர்ப்பமாக அமைந்தது. இடைக்கால வேலைத்திட்டமும் இறுதி அரசியலமைப்புத் தீர்வொன்றும் பற்றிய கேள்விகளுக்கு மேலதிகமாக அதிகமான வலியுறுத்தல் மனித உரிமைகள் பற்றியே செலுத்தப்பட்டது. பல மீறல்கள் குறிப்பாக எல்ரிரிஈ யினரால் சிறுவர்-சிறுமியர் கடத்திச் செல்லப்படுதல் மற்றும் படைகளில் சேர்த்துக் கொள்ளப்படுதல், மற்றும் சிவில் மக்களைத் துன்புறுத்தல் போன்ற மனித உரிமைகள் பற்றிய விடயங்களைப் புறந்தள்ளியுள்ளதாக பெரும் கவலை இருந்தது. சிவில் சமூகத்தின் அழுத்தங்கள் (மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் உள்ளிட்ட சமாதான ஒத்துழைப்புக் குழுவின் வெளியீடுகள் போன்ற) மற்றும் சர்வதேச அழுத்தங்கள் காரணமாக மனித

உரிமைகள் பற்றிய அவதானத்தைச் செலுத்த நேர்ந்தது. சமாதானப் பேச்சுவார்த்தைகளில் மனித உரிமைகள் பற்றிய ஆலோசகராக இயன் மார்ட்டின் நியமிக்கப்பட்டதுடன் அதற்கேற்ப நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும் போர் நிறுத்த ஒப்பந்தமும் மனித உரிமைகளும் தொடர்ந்தும் மீறப்பட்டதுடன், அன்று எதிர்நோக்கிய நிலைமையின் பாரதூரமான தன்மையையும் உடனடி நடவடிக்கை எடுக்கும் தேவையையும் சில வட்ட மேசைப் பேச்சுவார்த்தைகளில் செயற்பாட்டாளர்கள் வலியுறுத்தியதால் பரபரப்பான நிலைமைகளும் ஏற்பட்டன.

சிலரிடத்தில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மாற்றுக் கருத்தேதுமின்றியே சமாதானச் செயற்பாட்டுக்காக முன்வருகின்றது என்ற கருத்தொன்று காணப்பட்டாலும் உண்மையான நிலைமை மேலும் சிக்கலானது. 2003 ஏப்ரல் மாதம் டோக்கியோ அனுசரணையாளர் மாநாட்டில் சிவில் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு கலாநிதி சரவணமுத்துவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டமை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சிவில் சமூகத்தில் சமாதானச் செயற்பாட்டின் அடிப்படைக் காரணியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பம் என்பதால், சிவில் சமூகத்திற்கு முக்கியமான படிக்கல்லாகும். எனினும் இந்த இடையீட்டின் நோக்கம் பேச்சுவார்த்தை மேசையில் அமர்வது மட்டுமல்ல. செயற்பாட்டின் மாதிரிக் கட்டமைபிலும் அதன் பெறுபேறுகள் மீதும் அழுத்தம் விடுப்பதே அதன் நோக்கமாகும். எப்போதும் குறிப்பாக, எல்ரிரிஈ மற்றும் ஏனையவர்களின் வெறுப்புக்கு சிரமமான செயற்பாடொன்றை மேலும் சிக்கலுக்குள்ளாக்குதல் என்ற கருத்தில் பின்தள்ளப்பட்டிருந்த, 'சிரமமான பிரச்சினைகள்' மீது அவதானம் செலுத்துவது, காரணமாக அமைந்தது. உதாரணமாக 2004 டிசம்பர் 26 சுனாமி அனர்த்தத்தின் பின்னர் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் போர் நிறுத்த சமயத்திலும் சுனாமி அனர்த்தத்தின் அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டு கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களின் மனப்பாங்கு தொடர்பான வட்டமேசை பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தியது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவமும் பங்கேற்பும் தொடர்பான பிரச்சினை அச் செயற்பாட்டின் பின்னடைவுக்கு ஏதுவாக அமைந்த அடிப்படைக் காரணமானது. 2005 நவம்பர் மாதம் அரசாங்கம் மாறிய பின்னரும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சமாதானச் செயற்பாடு தொடர்பில் கொள்கை வகுப்பாளர்களுடன், இணைந்திருந்தது. போர் நிறுத்தத்தை பேணிக் கொள்வதற்காக ஜெனீவாவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் பின்னர் அடுத்த வட்டமேசைப் பேச்சுவார்த்தைகள் சுற்றுக்கான நோக்கொன்றைச் சமர்ப்பிப்பதற்கான வட்ட மேசைப் பேச்சுவார்த்தையொன்று நடத்தப்பட்டதுடன் அதில் அரசாங்கப் பேச்சுவார்த்தைக் குழுவும் கலந்து கொண்டது.

நான் 2003ல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் எனது முதுமானிப் பட்டத்தின் கல்விப் பணிகளை ஆரம்பிக்கும் முன்னர் ஆறு மாத காலம் வேலை செய்வதற்காகவே இணைந்து கொண்டேன். அக்குறுகிய காலத்திற்கு, எனக்குள் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி உத்வேகத்தையும் திருப்தியையும் வேலைகள் பெற்றுத் தந்தன. அப்போது மத்திம வயதில் இருந்த எனக்கு, சகோதரத்துவத்துடன் கூடிய ஒத்துழைப்புச் சூழலில் பணியாற்றக் கிடைத்தமை மகிழ்ச்சியான அனுபவம். சரா மற்றும் கேதீஸ் ஆகிய இருவரும், 'கடினமான சந்தர்ப்பங்களுக்கு முகங்கொடுக்கச் செய்து' தமது பணிக்குழுவிற்கு வழிகாட்டலளிப்பது தொடர்பில் நம்பிக்கை வைத்தனர். அவர்கள் எம்மீது வைத்த எதிர்பார்ப்பு எமது நம்பிக்கையைக் கட்டியெழுப்பக் காரணமானது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எம்மில் பலருக்கு கற்றுக் கொண்டு வளர்ச்சியடைய சந்தர்ப்பத்தையும் இடத்தையும் வழங்கியது. வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் பயணிக்கும் போது நான் பௌதீக மற்றும் சூழல் அழிவும், பாரிய அளவிலான இடம்பெயர்வின் தாக்கமும், சமாதானத்தை எதிர்பார்த்து தமது வாழ்க்கையை மீளக் கரையேற்றுவதற்காக மக்கள் எடுக்கின்ற பிரயத்தனங்கள் என்பவற்றைக் காண முடிந்தது. எனது வாழ்க்கைப் பாதை தெளிவானது. எனது முதுமானிப் பட்டப் படிப்பை இயன்றளவு விரைவில் முடித்துவிட்டு மீண்டும் இலங்கைக்கு வந்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் இணைந்து கொள்ள வேண்டும் என்பது எனக்குள் தோன்றிய பிரதிபலிப்பாக இருந்தது. நான் எட்டரை வருடங்கள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் பணியாற்றினேன்.

சமாதானச் செயற்பாடு நெருக்கடிக்குள்ளாகிக் கொண்டிருந்த மற்றும் சுனாமி அனர்த்தம் ஏற்படுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் 2004 நவம்பர் மாதத்தில் நான் மீண்டும் வந்திருந்தேன். பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் 2006 ஜூலை மாதத்தில் பெரிய அளவிலான யுத்தமாக மாறியதுடன், நன்மையான எதிர்பார்ப்புகள் வீழ்ச்சியடைந்தன. 2006 ஆகஸ்ட்

11ம் திகதி கேதீசின் துன்பியலான படுகொலை உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் பலவற்றைக் காண முடிந்தது.

நாட்டில் காணப்பட்ட நிலைமையின் மீது, மாற்றுக் கொள்கைளுக்கான நிலையத்தின் குறிக்கோளை மாற்ற நேர்ந்தது. வன்முறை மக்கள் மீது ஏற்படுத்திய தாக்கத்தை ஆவணப்படுத்துதல் மற்றும் தகவல்களைத் தேடும் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கோருதல், மக்களின் தேவைகளுக்கான வழக்குகளைத் தாக்கல் செய்தல் மற்றும் யுத்தத்தை முடிக்குமாறு கோருதல் போன்ற விடயங்கள் மீது கவனம் செலுத்தியது. சில சந்தர்ப்பங்களில் ஏதேனுமொரு எதிர்பார்ப்பையும் தக்க வைத்துக் கொள்ள முடியாமற் போனது. அமைதி, விரக்தி, சுய தணிக்கை மற்றும் அச்சத்தை அழித்தலும் உரிமைகள் மற்றும் உயிரின் பெறுமதியைச் சுட்டிக்காட்டும் முயற்சிகளையே செய்தது. அச்சமும் அச்சுறுத்தல்களும் காணப்பட்ட சூழலில் கூட மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தொடர்ந்தும் தனது கருத்தை வெளியிட்டு போராட்டத் தரப்பினரின் செயற்பாடுகளுக்கு சவால் விடுத்தது.

2009 மே மாதம் யுத்தம் முடிவடைந்ததுடன் அப்பிரிவு பெரும்பாலும் சட்டம் மற்றும் அரசியலமைப்பு பிரிவுடன் நெருங்கிய ஒத்துழைப்புடன் ஏனைய விடயங்களான இடப் பெயர்வுகள், நிலைமாறுகால நீதி, காணிகள், மத மற்றும் இன வன்முறை உள்ளிட்ட பாரதூரமான விடயங்கள் பற்றி கவனம் செலுத்தவும் அதிலிருந்து மக்கள் முகங் கொடுக்க நேரிடும் நிலைமைகள் பற்றியும் கொள்கைப் பரிந்துரைகளை வழங்குதல், ஆய்வுகளை நடத்துதல் மற்றும் கருத்தியல்களை வெளியிடுதலைத் தொடர்ச்சியாக மேற்கொண்டது. கே. தேன்மொழி, சண்டுல கும்புக்கே, நைஜல் நுகவெல மற்றும் ஏனைய பணிக்குழு உறுப்பினர்கள் பலர் பிரிவை அழகுபடுத்தவும் அதன் பணிகளிலும் பங்களிப்புச் செய்தனர்.

அமைப்பின் நவீனமயப்படுத்தல் வேலைத் திட்டத்தில் ஒரு பகுதியாக இப்பிரிவு 2013ல் சட்டம் மற்றும் ஆய்வுகள் பிரிவில் இணைக்கப்பட்டது. சமாதானத்துடன் ஏற்புடைய பல விடயங்கள் தொடர்பில் குறிப்பாக நிலைமாறு கால நீதி தொடர்பான கருத்தியலை சமர்ப்பிப்பதில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இன்னமும் முன்னணியில் உள்ளது.

புதிய ஆயிரமாம் ஆண்டின் முதலாவது தசாப்தத்தை மீண்டும் திரும்பிப் பார்க்கும் போது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், வளர்ந்து வரும் தன்னிச்சைச் செயற்பாடுகள், இராணுவ மயமாக்கல் மற்றும் கருத்து வேறுபாடுகளை மிதித்தழித்தலின் முன்னிலையில் மக்கள் உரையாடல், சட்டத்தின் ஆதிக்கம் மற்றும் பாதிக்கப்பட்ட நபர்களினதும் மக்களினதும் உரிமைகள் மற்றும் கௌரவத்திற்கு மேலும் அதிகமான அங்கீகாரத்தைப் பெற்றுத் தருவதற்காக முன்னின்றது. நபர் மட்டத்தில் எமது சகபாடிகளுக்கிடையே காணப்பட்ட சகோதரத்துவமும், தமது பிரச்சினைகளை சமர்ப்பித்து அவற்றுக்கான நடவடிக்கை எடுக்காதிருப்பது தொடர்பில் எமக்கு சவால் விடுத்த பாதிக்கப்பட்டவர்களுடனும் மக்களுடனும் நேருக் நேர் பணியாற்றக் கிடைத்தமை எனக்கு ஒரு வலிமையாக அமைந்தது. பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளில், அடிப்படை விடயமாக இந்நிலைமை மேலும் சிறப்புற வேண்டும் எனவும் அதனை செய்ய முடியும் என்பதுமாகக் காணப்பட்டது. நாம் அனைவரும் மேலும் சனநாயக ரீதியான, நியாயமான பன்மைத்துவம் மற்றும் அமைதியான இலங்கையைக் கட்டியெழுப்ப மேலும் தீவிரமாகப் போராட வேண்டும்.

---

**மிராக் ரஹீம்**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளராக பணியாற்றியுள்ளார். மனித உரிமைகள், மறுசீரமைப்பு, காணிகள், இடம்பெயர்வுப் பிரச்சினைகள் மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பான ஆய்வாளர். சமாதான ஆய்வு தொடர்பில் பட்டப் பின்படிப்புப் பட்டத்தைப் பெற்றுள்ள இவர் காணாமற் போனோர்கள் தொடர்பான அலுவலகத்தின் ஆணையாளராகவும் பணியாற்றினார்.

# மாற்று மனிதர்களின் வேலைத் தளம்



**சந்திரிக்கா காடியவசம்**

நான் முதலில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தைப் பற்றி 1999ல் கணக்காளர்களுக்கான ஒரு வகுப்பின் நண்பியொருவரின் வாயிலாகவே கேள்விப்பட்டேன். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தேர்தல் கண்காணிப்புகளை நடத்துவதாகவும், கொள்கை வகுப்பு தொடர்பில் கவனத்துக்குரிய ஆய்வுகள் சார்ந்த நிறுவனம் எனவும் அவள் கூறினாள். 'மாற்றுக் கொள்கைகளுக்கான' என்ற பெயர் என்னில் ஓர் ஆர்வத்தை ஏற்படுத்தியது. நான் பிரதான நீரோட்டத்தை நம்பாத ஒரு நபராகையால் அது எனக்குப் பொருந்தியது. அவர்கள் யார் எனவும் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பற்றியும் எனக்கு ஆராயும் தேவையேற்பட்டது. பிற்காலத்தில் எனக்கு அதன் நிருவாகப் பிரிவில் இணைவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. சனநாயகம், நிருவாகம், மனித உரிமைகள், பன்மைத்துவம் போன்ற ஏனைய கவர்ச்சிகரமான வார்த்தைகளை என்னால் கேட்க முடிந்தது. அவ் வார்த்தைகள் எதனைக் கருதுகின்றன? மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஏன் கண்காணிப்பாளராக அழைக்கப்பட்டது? நான் செய்கின்ற விடயங்களைப் படிப்பதற்கு எனக்கு அதிக நேரம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் நான் கணக்கியலிலிருந்து, நூலகம்/ஆவணப்படுத்தல்துறைக்கு மாற விரும்புவதாக கலாநிதி சராவிடம் அறிவித்தேன். மேற்கூறிய பின்னணியிலிருந்து கொண்டே இவ்வேண்டுகோளை விடுத்தேன்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் உத்வேகம் மிக்கது. தனிச்சிறப்பானது. எமது வழக்கமான கருத்துகளுக்கு சவால் விடுத்து, கட்டமைப்புக்கு வெளியே சிந்திப்பவர்கள், எதையும் ஏன் என்று ஆராய்பவர்கள், ஏதேனுமொன்றை அவ்வாறில்லாதிருக்கும் காரணத்தை ஆராய்பவர்கள் உள்ள ஒரு குழுவாகும். பெரும்பான்மையால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதால் அல்லது எப்போதும் ஏதேனுமொன்று இடம்பெற்ற மாத்திரத்தில், அங்கு காணப்படுகின்ற நிலையை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. நாம் அந்த நிலைமைகளை நியாயப்படுத்துவதற்கான காரணங்களைக் கோரி நின்றோம். நாம் மூடத்தனங்களுக்கு அடிபணிவதோ அல்லது ஏமாற்றல்களுக்கு அகப்படுவதோ இல்லை. சனநாயக ரீதியான ஆட்சி, சமாதானம் மற்றும்

பன்மைத்துவம் ஆகிய எண்ணக்கருக்களின் கீழ் மேற்பார்வை செய்கின்ற மற்றும் விமர்சிக்கின்ற தகைமை பெற்ற ஆபத்துகள் தொடர்பில் அறிவிக்கக் கூடிய நிபுணர்கள் மற்றும் கூட்டாட்சி சிந்தனையாளர்களால் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் உருவாகியுள்ளது. பிரசைகளில் முன்னே விரிகின்ற நியாயமற்ற சம்பவங்கள் மற்றும் அடிப்படையற்ற கோட்பாடுகளை சவாலுக்குட்படுத்தி எதிர்பாராதவாறு எம் முன்னே வந்து சேரும் சட்டக் கொள்கைகளின் ஆபத்து தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எந்தவொரு அச்சமுமின்றி குரலெழுப்புவதாலேயே அது ஒரு செய்தியாளராகவும் உள்ளது.

சனநாயகம் எந்தளவுக்கு சிதைந்துவிடக் கூடியதும் சிறப்பு வாய்ந்ததுமாகும் என்ற விடயம், கண்காணிப்பு இல்லாவிடில் மனித உரிமைகள் எந்தளவு இலகுவாகப் பின்தள்ளப்படலாம் என்பதையும் அவ்வாறான கண்காணிப்புகளை பேணிக் கொள்வதற்காக எந்தளவுக்கு முயற்சிக்க வேண்டும் என்பதையும் இக் கருப்பொருட்களில் தேர்ச்சியில்லாத நான் கற்றுக் கொண்டேன். அவ்வாறான பணிப் பொறுப்பிற்காக எப்போதும் தயாராக இருக்க வேண்டுமாயின், அர்ப்பணிப்புடனிருப்பதும், தொடர்ச்சியாகக் கற்றலும் அவசியமாகும். குறிப்பிட முடியாத அளவிலான வெற்றிகளை நாம் பெற்றுள்ளதுடன், எனது தனிப்பட்ட விருப்பமான சந்தர்ப்பங்களைக் குறிப்பிடின், காணாமற் போனோர்களின் குடும்பங்களில், உறுப்பினர்களுக்கு பயன்படும் காணாமற் போனதற்கான சான்றிதழைப் பெறுதல், இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்காக பல தசாப்தங்களாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அடிப்படையில் செய்த போராட்டம், மொழிச் சமத்துவத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பு காரணமாக பெரும்பாலான தேர்தல் வன்முறைச் செயற்பாடுகளும் முறைகேடுகளும் படிப்படியாக அழிந்து போனதைக் குறிப்பிடலாம்.

அரசியலமைப்பைக் கட்டியெழுப்புதல், மனித உரிமைகள், சனநாயக ரீதியான தேர்தல் மறுசீரமைப்பு, நிலைமாறுகால நீதி, ஊடகச் சுதந்திரம், மற்றும் நிகழ்கால வெறுப்புப் பேச்சு போன்ற துறைகளில் பல வருடங்களாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆய்வறிக்கைகளையும் எண்ணிக்கையிலடங்காத கட்டுரைகள், சுருக்கமான விளக்கங்கள், தகவற் பத்திரங்கள், வெகுசன பல்ஊடகக் கிளிப்புகள் மற்றும் தரவுத் தொகுப்புகளுக்கான பங்களிப்பை வழங்கியுள்ளது. நூலகர் என்ற வகையில், இத்துறையில் தகவல்களைச் சேகரிப்பதற்குத் தேவையான ஆய்வாளர்கள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் அல்லது என்னால் பிரவேசத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வேறு மூலங்களிலிருந்து அவர்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குவதே எனது நோக்கம். எமது ஆராய்ச்சிகளை மூன்று மொழிகளிலும் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், புலம்பெயர் சமூகம் (டயஸ்போராக்கள்), கல்வியாளர்கள், சம வயது நண்பர்கள் மற்றும் தெரிந்து கொள்ள விரும்புகின்ற யாரும் பெற்றுக் கொள்ளலாம். இக்கருப் பொருட்களின் மீதான அறிவைத் தேடுவதற்கும் அதனைப் பெற்றுக் கொள்வதற்கும் ஒவ்வொரு ஆண்டிலும் நூற்றுக் கணக்கான மாணவர்கள் எமது நூலகத்தின் ஊடே பயணிக்கின்றனர். ஒவ்வொரு மாதமும் எமது அறிக்கைகள் மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களைக் கோரி, மின்னஞ்சல்கள், கடிதங்கள் மற்றும் தனிப்பட்ட அழைப்புகள் ஏராளமான எண்ணிக்கையில் கிடைக்கின்றன. பல வருடங்களாக பல இளைஞர் யுவதிகளின் அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கு மாற்றுக் கொள்கைக்கான நிலையத்துடன் தொடர்பு கொண்டுள்ளதுடன் பின்னர் புகழ்பெற்ற நிறுவனங்களுக்குச் சென்று இப்பொதுவான இலட்சியங்களுக்கு ஏற்ப பணியாற்றிச் செல்கின்றனர். சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட உலகளாவிய அமைப்புகள் ஒவ்வொரு ஆண்டும் ஆய்வுகளைப் பகிர்ந்து கொள்வதற்கும் எமது பணிகளில் ஒத்துழைப்புடன் பணியாற்றவும் எம்முடன் இணைந்து கருத்துகளைப் பரிமாறிக் கொள்கின்றன.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் விவரணத்தை வழங்கும் சர்வதேச ஊடகங்களில் ஒரு சில அல் ஜசீரா, பீபீசி, மற்றும் புளூம்பர்க் என்பனவாகும். பொதுவாக ஒரு வாரத்தில் எமது பணிகளைக் காட்டுகின்ற அல்லது எமது சிரேஷ்ட ஆய்வாளர்களுடனான நேர்காணல்கள் மேற்கொள்ளப்படும் பல தேசிய பத்திரிகைகள் எமக்குக் கிடைக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் ஒரு பக்கத்தில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தை தாக்குகின்ற ஊடகத்தினராலேயே எமது கண்டுபிடிப்புகள் இன்னொரு பக்கத்தில் மேற்கோள் காட்டப்படும். வேலைப்பளு மிக்க நாட்களில், மக்கள் தெளிவுபடுத்தல்கள் வரும்வரை காத்திருக்கையில், எனது மதிப்பிற்குரிய சகபாடிகள் தொலைக்காட்சியின் ஊடாக அறிக்கைகளை வெளியிட்டோ அல்லது வீதியில் நின்று எதிர்ப்பைத் தெரிவித்தோ நீங்கள் பார்க்காத விடயங்கள் மீது உங்கள் கவனத்தைச் செலுத்துகின்றார்கள். கவனத்திற் கொள்ளாது விடப்பட்ட ஏதேனுமொன்றை கருத்திற் கொள்ளுமாறு மாற்றுக் கொள்கைகளுக்கான

நிலையம் உங்களை துணிச்சலூட்டுகின்றது. நீங்கள் செவிமடுக்கின்றீர்களா?

சில சந்தர்ப்பங்களில் எங்கள் மீது விடுக்கப்படுகின்ற உடல் ரீதியான தாக்குதல்கள், துன்புறுத்தல்கள், சிறையடைப்புகள் அல்லது மரண அச்சுறுத்தல்கள்களுக்கும் முகங்கொடுக்க நேரிடுகின்றது. அரசியலமைப்புக்கு விரோதமான தீர்மானமொன்றைப் பற்றி கேள்வியெழுப்புதல், தேர்தல் சுதந்திரம் மற்றும் நியாயத்தை உறுதிப்படுத்தல், அல்லது சட்டமூலமொன்றை இரகசியமாக மேலே கொண்டு செல்வதற்கு முன்பாக ஆழமாக ஆய்வு செய்தல், சிறுபான்மையினருக்காக குரலெழுப்புதல் அல்லது தண்டனை விடுப்புக்கு எதிராக எழுந்திருத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் ஒவ்வொரு வருடமும் எனது நண்பர்கள் தமது புத்தாண்டு மற்றும் நத்தார் விடுமுறைகள், வார இறுதி விடுமுறைகள், பல இரவுகள் உள்ளிட்ட நீண்ட காலத்தை அர்ப்பணிக்கின்ற விதத்தை நான் வருடா வருடம் மிகுந்த மரியாதையோடு பார்த்துக் கொண்டிருக்கின்றேன். இந்த அணுகுமுறை அவர்களின் நெருக்கமானவர்களுக்கு நேர்கின்ற இழப்புகள் மற்றும் மன வேதனைகள் அளவற்றவை. அந்த வகையில் அவர்களும் சமூக நோக்கங்களுக்காக அர்ப்பணிப்புச் செய்தவர்கள் என்ற பாராட்டுக்கு உள்ளாக வேண்டியவர்கள் என நான் நினைக்கின்றேன். எந்தளவுக்கு வேலைப்பளு மிக்கதாக இருப்பினும், எமது ஆய்வாளர்கள் எப்போதும் வந்திருக்கின்ற யாரையும் ஆற்றுப்படுத்தவும், சம வயது நண்பருக்கு ஒத்துழைப்பு வழங்கவும் ஊடக விசாரணையொன்றுக்கு பதில் வழங்கவும் தயங்குவது இல்லை.

பெரும்பாலானவர்களுக்கு துணிச்சலற்ற இடங்களில் எனது நண்பர்கள் பதில் தேடி, பிரச்சினைகளைத் தேடி மற்றும் மக்கள் சில சந்தர்ப்பங்களில் கேட்க விரும்பாத கதைகளை மீண்டும் களத்திற்குக் கொண்டு வந்து, துணிச்சலாகப் பயணிக்கின்றனர். ஏனென்றால் இந்தக் கதைகள் பகிரங்கப்படுத்தப்படாவிடில் சில கதைகள் எப்போதும் புதைந்து போய்க் கிடக்கும். இல்லையேல், இனங்காண முடியாதவாறு உருக்குலைக்கப்பட்ட கதைகளாகக் காணப்படலாம். நாம் முன்னிற்கின்ற விடயங்களைத் தவறாக முன்வைத்தல், அர்த்தப்படுத்தல், கேலிக்குள்ளாக்குதல் மற்றும் முறையற்றவாறு பயன்படுத்துதல் என்பவற்றை நான் பல தடவைகள் பார்த்துள்ளேன். எனினும் தமது மேலாதிக்கம், போலியற்ற தன்மை மற்றும் துணிச்சலை காரணமாகக் கொண்டு மாற்றுக் கொள்கைக்கான நிலையம் தொடர்ந்தும் நிலைத்திருக்கும்.

காலம் கடக்கையில் நான் ஐ.எப்.ஆர்.சீ. நோக்கி இடம் பெயர்ந்ததாலும், போன கையோடு மீண்டும் வந்து, சுயாதீனமாக எழுதுவதில் ஈடுபட்டு, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் சேவைப் பிரிவிற்கான அறிக்கைகள் மற்றும் கருத்திட்ட முன்மொழிவுகளை எழுதவும், காலநிலை மாற்றங்கள் தொடர்பான முன்னணி அரச சார்பற்ற நிறுவனமொன்றுடன் பணியாற்றுவதிலும் ஈடுபட்டேன். டெய்லி மிரர், மற்றும் டெய்லி எப்.ரியுடன் எனது எழுத்தாற்றல் வளர்ந்தது. பின்னர் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் பகுதிநேர கடமைகளை செய்தவாறு, சுற்றுலாத் துறையில் நுழைந்தாலும், தனிப்பட்ட மற்றும் தொழில் நடவடிக்கைகளில் எனது நண்பர்களின் லிபரல்வாதம், கூருணர்வு மற்றும் நியாயமான சிந்தனைகள் எனும் பெறுமதிகளை எப்போதும் மனதில் வைத்துக் கொள்வேன்.

அவ்வப்போது சிலர் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தை நையாண்டிக்குட்படுத்துவதுடன் சிலவேளைகளில் அவர்கள் தற்செயலாகக் கேள்விப்படுகின்ற பொய்களை வெளியில் எடுத்து எங்களிடமிருந்து விளக்கங்களைக் கேட்டு இகழ்ச்சிக்கு உள்ளாக்குகின்றனர். ஆனால் அதற்கிடையே மீளத் திரும்பி தனது உறவினரின் வேலைக்கான விண்ணப்பத்தை உள்ளடக்க முடியுமா? என ஒரே மூச்சில் கேட்கின்றார்கள். அது அவர்களுக்கு ஒரு வேலை தேவை என்றதாலோ அல்லது எம்மோடு பணியாற்ற விரும்புவதாகவோ இருக்கலாம். எனினும் என்னை மன்னியுங்கள். உங்களால் அவ்வளவு இலகுவாக இதில் நுழைந்துவிட முடியாது. இது வித்தியாசமான இடம். இங்கே பணியாற்ற வேண்டுமாயின், நாம் முகங் கொடுக்கின்ற சவால்களைத் தாங்குவதற்கும் நாம் நம்புகின்ற விடயங்களுக்காகப் போராடுவதற்கும் எமக்கு திடமான நம்பிக்கை அவசியமாகும்.

அவ்வாறே நாம் செய்கின்ற விடயம் தொடர்பில் நாம் பெருமைப்படுகின்றோம்.

---

**சந்திரிக்கா காடியவசம்**

தற்போது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நூலகப் பொறுப்பாளராகப் பணியாற்றுகிறார். பல்வேறு துறைகளில் பத்திரிகைகளில் எழுதி வருகிறார். விலங்குகளை துன்புறுத்துவதற்கு எதிரான சமூகச் செயற்பாட்டாளர்.

# குரலற்றோர்களுக்காக எழுச்சி பெறல்



**இரோமி பெரேரா**

இலங்கையில் தனித்துத் தெரியும் மக்களுக்குச் சாதகமான வழக்கு நடவடிக்கைகள் பலவற்றுடன் அவ்வாறே, காலத்தின் பிரதான பிரச்சினைகள் பலவற்றைப் பற்றி ஆதரித்து வாதாடலுடன் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தொடர்புபடுகின்றது. எனக்கு மிகவும் தீர்மானமிக்க காலமொன்றில், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தலைமைத்துவம் வழங்கிய மாற்று ஆய்வுகள் மற்றும் ஆதரித்து வாதாடல் பட்டியலில் நகர மறுமலர்ச்சிக் கருத்திட்டத்தின் கீழ் 2013லிருந்து கொழும்பு நகர வறிய சமூகத்தில் மக்கள் அகற்றப்படுவதையிட்டு மேற்கொள்ளப்பட்ட பணிகளும் அடங்கும். மக்கள் அணுகுவதற்கு சிரமமான, அகற்றப்படுத்தல்களுக்கு எதிராக சிவில் சமூகத்தினதும் சர்வதேசத்தினதும் ஒத்துழைப்பைக் கட்டியெழுப்புவது மிகவும் கடினமான காலத்தில், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (வேலைப் பணிகளுக்காக அவரது உறுதிப்பாடு மற்றும் களைப்புத் தோன்றாத பண்பும் துணிவும் மிக்க மறைந்த விஜய் நாகராஜூடன்) அகற்றல்களை தொடர்ந்தும் ஆவணப்படுத்துவதற்கும், அவர்களின் வழக்கு நடவடிக்கைகளில், மக்களுக்கு உதவி வழங்கவும், இடம்பெறும் விடயங்கள் பற்றி அறிக்கையொன்றைத் தயாரிக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு வெளிப்பாடுகளை வழங்கவும், நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்தப் பணிகளில் அக்காலத்தில் அபிவிருத்தி உரையாடலுக்கு எதிர்க்கருத்தொன்றாகச் சேவையாற்றுவதுடன் அது இன்றும் மிக மிக ஏற்புடையதாக இருப்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

கொழும்பை ‘உலக மட்டத்திலான நகராமாக’ மாற்றியமைக்கும் அபிலாசையின் கீழ் அப்போதிருந்த பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரும் அதன் பின்னர் மாநகர மற்றும் மேல்மாகாண வலய அபிவிருத்தி அமைச்சர் நெறிப்படுத்தியதும் நடைமுறைப்படுத்தியதுமான மீள்குடியேற்ற நிகழ்ச்சியின் நோக்கம், கொழும்பில் குறைந்த வருமானம் பெறும் பிரதேசங்களில் அல்லது ‘தோட்டங்களில்’ 65,000 குடும்பங்களை அரசாங்கம் நிர்மாணித்த மாடி வீடுகளில் குடியேற்றுவதாக அமைந்தது.

நன்றாகத் திட்டமிட்டு, மக்கள் எதிர்ப்பின்றி அல்லது மிகக் குறைந்த எதிர்ப்புடன் செய்யக் கூடியதாக இருந்த, தலைநகரிலிருந்து பத்தரை இலட்சம் மக்களை அகற்றுதல், இராணுவத்தை ஈடுபடுத்தி நடத்தப்படுதல், இலங்கையின் யுத்தத்திற்குப் பிந்திய ஆட்சி, மற்றும் அபிவிருத்திப் பயணப் பாதை தொடர்பில் மிகச் சிறந்த நிதர்சனமாகும்.

தாக்கத்திற்கு ஆளான மக்களுக்கு எந்தவொரு நிவாரணமோ நீதியோ வழங்கப்படாததால், அவர்கள் எதிர்ப்புகள், நீதிமன்றங்கள், மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற பல்வேறு வகையான வழிகளில் எதிர்ப்புகளைத் தெரிவிக்க முயற்சித்தமை, சனநாயகத்தில் காணப்படுகின்ற நிலைமை தொடர்பான குறிகாட்டி மட்டுமல்ல நகரத்தில் அதன் வறிய நகர மக்களுக்குள்ள நிலையை எடுத்துக் காட்டுகின்றது. 'அலங்காரம்' என்ற போர்வையைப் போர்த்திக் கொண்டு வந்த விடயத்தின் அளவும் இயல்பும் அவ்வாறிருக்கையிலும், அது பற்றி பிரதான அலையின் ஊடகத்தில் மிகச் சொற்பமாகவே அறிக்கையிடப்பட்டதுடன் சிவில் சமூகத்துக்கும் பொது மக்களுக்கும் இடையேயும் மிகக் குறைவான புரிதலே இருந்தது.

2014ல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், வனாத்தமுல்லையைச் சேர்ந்த நான்கு குடியிருப்பாளர்களுக்கு அவர்களது காணிகள் தொடர்பில் போராடுவதற்கு உதவியளித்தது. நகர அபிவிருத்தி அதிகாரசபை, முறையான செயற்பாடொன்றைப் பின்பற்றாமல், தனிப்பட்ட காணிகளை கைப்பற்றியதும் அண்மித்த காணியொன்றில் நகர அபிவிருத்தி அதிகாரசபை நிர்மாணித்த மாடி வீட்டுத் தொகுதியில் 400க்கும் அதிகமான குடும்பங்களை பலவந்தமாக மீளக் குடியேற்றியமை 34ம் தோட்டத்தில் ஏற்பட்ட பிரச்சினையாகும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் தொடர்புறுதல் மற்றும் வழக்குத் தாக்கல் செய்த காலப்பகுதியில், அதிகாரிகளாலும் இராணுவ உத்தியோகத்தர்களாலும் அவர்கள் மீது விடுக்கப்பட்ட மிரட்டல்கள் மற்றும் துன்புறுத்தல்கள் காரணமாக மனுதாரர்களின் எண்ணிக்கை நான்கு பேர்வரை குறைந்தது. வழக்கின் இறுதித் தீர்ப்பு மிகச் சிறந்ததாக இல்லா விட்டாலும், அரசியல் ரீதியாக கடினமான காலப் பகுதியில் நீதிக்காக அவர்கள் செய்த போராட்டத்திற்கு உதவி வழங்க ஓர் அமைப்பு இருப்பதும் அவர்களுக்கு இடம்பெற்ற விடயம் பற்றி இப்போது அறிக்கையிடப்பட்டிருப்பதாலும், நான்கு மனுதாரர்களுக்கும் அது மிக முக்கியமாக அமைந்தது. சிவில் சமூக அமைப்புகளுடன் தொடர்பு இல்லாவிடினும், நகரத்தில் ஏனைய இடங்களில் இடம்பெறுகின்ற செயற்பாடுகளை அறிந்திருக்கின்ற ஏனைய துன்பத்துக்குள்ளான மக்களுடன் கூட்டிணைப்பைக் கட்டியெழுப்பிக் கொள்ளவும் எமக்கு இவ்வாறான உதவிகள் பயன்படும்.

மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பற்றிய மீள்பார்வையின் போது அதிலிருந்து முன்னோக்கி வந்த ஆதரித்து வாதாடல், பாதிக்கப்பட்ட மக்கள் மீதான அதிலுள்ள தாக்கங்களைக் காணக் கிடைத்தமை, என்பன நான் எப்போதும் பெருமைப்படுகின்ற விடயம். இவ்வாறான பணிகளை சரா போன்ற தலைமைத்துவத்தின் கீழ் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் போன்றதொரு அமைப்பால் மட்டுமே செய்ய முடியும் என்பதையும் நான் அறிவேன். நாம் செய்ய முயற்சித்த சில விடயங்கள், கடினமானதாகவும், சவால்களாலும் அடிபட்டுப் போயின. அரசியற் சூழல், மற்றும் பாதுகாப்புச் செயலாளரின் நேரடித் தலையீடுகள் காரணமாக வெளியிடுவதற்கான தகவற் சேகரிப்புகளும் சமர்ப்பிப்புகளும் மிகவும் கடினமாகவிருந்தன. ஆரம்ப ஆண்டுகளில் இப்பணிகளுக்கான நிதிகூட கிடைக்கவில்லை. எனினும் முன்னோக்கிச் செல்ல நாம் உறுதி செய்து கொண்டிருந்ததுடன், சரா அவ்வாறு செய்திருந்தால் அது முற்றாக நியாயமாக இருப்பினும், அவர் ஒருபோதும், எந்த வகையிலும் எம்மை பின்வாங்க இடமளிக்கவில்லை.

இந்தப் பணிகள் சோஷல் இன்டிகேட்டரின் தலைமைத்துவத்துடன் மேற்கொள்ளப்பட்டதுடன், யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் சனநாயகமும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு ஆய்வு போன்ற பிரதான ஆய்வுகள் உள்ளிட்ட பல ஆய்வுகள் ஒவ்வொரு வருடமும் இடம்பெற்றன. ஐந்தாம் ஒழுங்கையில் இருந்த சிறந்த குழுவைப் போன்றே இலங்கை முழுவதும் காணப்பட்ட களநிலைப் பணிக்குழு இல்லையேல், நாம் எதனையும் செய்திருக்க முடியாது. சோஷல் இன்டிகேட்டர் தலைமைத்துவத்தை எடுக்குமாறு என்னிடம் கோரிக்கை விடுக்கும் போது எனது வயது 25 அல்லது 26 ஆக இருந்ததுடன் என் மீது நம்பிக்கை வைத்து அப்பிரிவை வழிநடத்துவதற்கு எனக்கு இடமளித்த சோஷல் இன்டிகேட்டரில் என்னுடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

பல்கலைக்கழகப் பட்டம் பெற்று ஒரு மாதத்திற்கும் குறைவான காலப்பகுதியிலேயே நான் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தோடு தொடர்புறுகின்றேன். நான் பணியாற்றிய ஒன்பது வருட காலத்தில், எனது செயற்பாட்டில் பாரிய வடிவமைப்பொன்று இடம்பெற்றுள்ளது. குறிப்பாக நாட்டின் நிலைமை மிகவும் மோசமான தருணத்தில் நீதி மற்றும் சனநாயகத்திற்காக எழுந்திருந்த குழுவினருடன் பணியாற்றக் கிடைத்தமையையிட்டு நான் மிகவும் நன்றி செலுத்துவதுடன், பெருமைப்படுகின்றேன். பல வருடங்களாக பாரிய அரசியல் மற்றும் சமூக தீங்கு அல்லது மோதல் இல்லாத சந்தர்ப்பத்தில் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளவும் பிரச்சினைகளுக்காக முன்வருவது எவ்வளவு இலகுவானது என்பதையும் தீங்குகள் அதிகரிக்கும் போது முகங்கொடுக்க எத்தனை பேர் எஞ்சியிருக்கிறார்கள் என்பதையும் பல வருடங்களாக எம்மால் காணக் கூடியதாக இருக்கின்றது. எதிர்கால பயணப் பாதை பற்றியதும் இருபத்தைந்து ஆண்டுகளாகவும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மேற்கொண்ட நம்பமுடியாத பணியின் மீது இன்னும் பல விடயங்களை எவ்வாறு கட்டியெழுப்புவது என்பதைப் போன்றே, எதிர்கால பயணப் பாதையில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் ஒன்றாக நின்று வலிமை மிக்க சகபாடிகளைக் கட்டியெழுப்புதல் தொடர்பில் ஆராய்வதற்கு இந்த ஆண்டுவிழாவையும் இந்த சந்தர்ப்பத்தையும் பயன்படுத்த முடியும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

**இரோமி பெரேரா**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சோஷல் இன்டிகேட்டர் பிரிவுத் தலைவியாகவும், பல்வேறு விடயங்கள் தொடர்பிலான ஆய்வாளராகவும் பணியாற்றுகின்றார். சமூக செயற்பாட்டாளர். Bank Information center ஆலோசகராகவும் பணியாற்றுகின்றார்.

# சிறிய மனிதனின் - சிறிய புள்ளடியிலேயே ஜனநாயகம் தங்கியுள்ளது



**மஞ்சுல கஜநாயக்க**

நாம் சிறு வயதில் கண்ட கனவுகள் அவ்வளவு பன்மைத்துவமானவை அல்ல. அதில் பெரும்பாலானவை ஒரு போதும் அடைய முடியாத கனவுகளாகும். அவ்வாறே கண்ட கனவுகளில் மிகவும் சிறந்த கனவுகளும் இருக்காமல் இல்லை. நான் பல்கலைக்கழகத்துக்கு வந்த போது, பல்வேறு விவாத மேடைகள் மற்றும் தொலைக்காட்சித் திரைகளில் மிகவும் அழகாகவும், தவறின்றியும் ஆங்கில மொழியில் உரையாடும் ஒரு நபரால் ஈர்க்கப்பட்டு, அவரைப் பார்த்து இரசித்துள்ளேன். அவர் உதிர்க்கும் சொற்கள் மட்டுமன்றி, அவரது உடல் மொழியும் வசீகரமானது. அவ்வாறான மொழி ஆற்றலை முன்னெப்போதும் கேட்டதில்லை. எந்த தலைப்பாக இருந்தாலும், அவரது மொழி நடையும், அதன் அர்த்தபுஷ்டியும் எப்போதும் எம்மை உற்சாகப்படுத்தும். எமது வாழ்க்கையில் நீண்ட காலமாக கண்ட மிகவும் தெளிவான ஆங்கிலத்தில் புலமை பெற்ற அவரை பெரியோர் முதல் சிறியோர் வரை அனைவரும் ‘சரா’ என்றே அழைப்பார்கள். எப்போது நனவாகுமோ என்று தெரியாத போதிலும் சராவைப் போன்று ஆங்கிலத்தில் கதைக்க வேண்டும் எனும் கனவும் என்னுள் இருந்ததை எழுதாமல் விட முடியுமா ? அர்வி ரொபின்சன் அவர்களது கூற்றான “உங்கள் வார்த்தைகளுக்காக உலகம் காத்திருக்கிறது.” "The world is waiting for your words.''- Arvee Robinson" அது உண்மையிலேயே சராவுக்கு பொருத்தமான கூற்றாகும். அவ்வாறான சொற்களால் அலங்கரிக்கப்படும் அரிதான வாய்ப்பைப் பெற்ற கலாநிதி. சரவணமுத்து அவர்களால் நிறுவப்பட்ட மாற்றுக் கொள்கைகள் நிலையம் எமது தொழில் வாழ்க்கையின் ஆரம்பமும், எதிர்காலமும் அமைதியாக கொண்டாட வேண்டிய நனவான கனவாகும்.

1996 ஆம் ஆண்டில் உருவாக்கிய மாற்றுக் கொள்கைகள் நிலையத்துக்கு இன்று 25 ஆண்டுகள் பூர்த்தியடைகிறது. இலங்கையின் அரசியல் கலாச்சாரத்தின் மாற்றுப் பயன்பாட்டுக்காக மிகவும் குறைந்த வாய்ப்புகளே உள்ளன. சர்வஜன வாக்குரிமை கிடைத்த பின்னர் நாட்டில் நடைபெற்ற 74 தேர்தல்களில்

பெரும்பாலானவற்றின் முடிவுகள் இரண்டு தரப்பினருக்கு இடையில் மட்டுமே மாற்றமடைந்தன. ஒருவர் மாறி அடுத்தவர் என்ற முறையிலான அரசியலில் மாற்றுத் தெரிவுகள் தொடர்பாக சிந்திக்காத இந்த நாட்டின் வாக்காளர்கள் ஏனைய மாற்றுத் தெரிவுகள் தொடர்பிலும் கடும் மௌனம் காக்கிறார்கள். அவ்வாறான மாற்றுத் தெரிவுகளுக்கு எதிரான கொள்கைக்கு நிபந்தனையற்ற ஒத்துழைப்பு வழங்கும், தூங்கிக் கொண்டிருக்கும் சமூகத்தில் மாற்றுக் கொள்கைகள் நிலையம் உருவானமை தற்செயலான விடயமல்ல. தாமே உயர்ந்தவர் எனும் எண்ணத்திலிருந்து விடுபட்ட, இலங்கை அரசியல் களத்தில் ஏற்படும் மாற்றங்களை சரியாக புரிந்துகொண்ட சில செயற்பாட்டாளர்களின் தளராத முயற்சியின் பெறுபேறாகவே மாற்றுக் கொள்கைகள் நிலையம் அமைக்கப்பட்டது. அதற்கு ஊக்கமளித்த சரா, இலங்கை சிவில் சமூகத்தில் பதித்துள்ள வகிபாகத்தை குறிப்பிடுவது எனின் உலகில் சரா என்பவரைப் போன்ற ஒருவரே உள்ளார் என்று குறிப்பிடலாம்.

மாற்றுக் கொள்கைகள் நிலையம் உருவாகி 9248 நாட்கள் கடந்துள்ளன. நானும் இந்த முன்னோடியான அமைப்பின் இயங்குநிலை உறுப்பினராவேன் என்பதுடன், இன்றுடன் அந்த அமைப்பில் 5974 நாட்கள் பணியாற்றியுள்ளேன். யாராவதொருவர் இந்த அமைப்பின் கட்டமைப்பையும், பரம்பலையும் சுருக்கமாக விளக்குமாறு கேட்டால், 'பல வர்ணங்களில் மிளிரும் வானவில்' என்றே பதிலளிப்பேன். பல்வேறு வெளிப்படையான ஆற்றல்கள் மற்றும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டுள்ள சிந்தனையாளர்கள் மற்றும் சுறுசுறுப்பான செயற்பாட்டாளர்களின் சரணாலயம் போன்று அதன் மாற்றமுடைய கொள்கை மூலம் சமூகத்தின் வெளிப்படைத் தன்மையை காட்டுகிறது. தனிநபரின் நடத்தை வெளிப்படுத்தப்படாமல் எந்தவொரு அமைப்பும் நற்பெயர் அல்லது சமூக அங்கீகாரத்தை பெறுவதற்கான ஒரு வழி அதுவேயாகும். தம்ம பதத்தில் (பௌத்த சமய பாளி மொழி நூல்) "பட்டவி சமோ நோ விருஜ்ஜதி" அதாவது நிலத்தைப் போன்று நல்லதையும், கெட்டதையும் தாங்கிக்கொண்டு இருக்கும் பண்பு உன்னதமானதாகும்.

மாற்று கொள்கைகள் நிலையத்துக்கே உரிய தனித்துவம் என்ன? அது உண்மையிலேயே ஒன்றுக்கொன்று எதிரான விடயப்பரப்பு தொடர்பில் காட்டும் விமர்சன ரீதியான மற்றும் எல்லையற்ற பிணைப்பாகும். மோதலுக்குப் பின்னரான சமூகத்தில் கட்டாயமாக இருக்க வேண்டிய அரச மறுசீரமைப்பு செயன்முறை தொடக்கம் குடியரசில் வாழும் பிரஜைக்குரிய ஒரேயொரு ஆயுதமாக கருதக்கூடிய இறையாண்மை அதிகாரம் வரை பரந்துள்ள நிகழ்வுகளின் செயற்பாடுகளுடன் சமூகத்தில் முன்நிலையில் இருத்தல் மூலம் தனது பண்பை வெளிப்படுத்தும் ஒரு அடையாளப்படுத்தலாகும்.

தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டமை மாற்றுக் கொள்கைகள் நிலையம் தலைமைத்துவம் வகித்த விஷேட கூட்டுச் செயற்பாடுகளுக்கான ஆரம்பமாகும். அந்த அமைப்பின் உத்தியோகபூர்வ பெயர் தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையம் (தே.வ.க.நி – C.M.E.V) ஆகும்.

தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையம் 1997 ஆம் ஆண்டில் உதயமானது. அது வெறுமனே மேலுமொரு அமைப்பாக பதிவு செய்யப்பட்டதல்ல. பிரதிநிதித்துவ ஜனநாயகம் தொடர்பான மதிப்பீடுகள் ஏதுமின்றி தான்தோன்றித்தனமான அரசியல் சூழமைவில் உள்ள அரசியல் ஆதிக்கத்துக்கு விழுந்த பாரிய அடியாகவே அந்த நிலையத்தின் தோற்றம் அமைந்தது. அன்றிலிருந்து இன்று வரையான 24 ஆண்டுகளில் இந்த நாட்டின் வாக்காளர்களுக்கு இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு மூலம் வழங்கப்பட்டுள்ள பிரஜைகளின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையம் அனைத்து விதத்திலும் முயற்சியெடுத்துள்ளது. தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையத்துக்கு இன்னொரு தனித்துவமான அடையாளமும் உள்ளது. அதாவது மாற்றுக் கொள்கைகள் நிலையத்தின் நிறுவன கட்டமைப்பை தாண்டிச்சென்று மூன்று நிறுவனங்களின் ஏகோபித்த அங்கீகாரத்துடன் இயங்கி வருவதே அந்த சிறப்பான அடையாளமாகும். சுதந்திர ஊடக அமைப்பு (FMM) மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஆவண நிலையம் (INFORM) ஆகியவை அந்த ஏனைய இரண்டு அமைப்புகள் ஆகும். ஒரு நபருக்குரிய உரிமைகள் புறந்தள்ளப்படலாகாது எனும் ஜனநாயக அக்கறை கொண்ட பிரஜைகளின் மரியாதைக்குரிய சுனிலா அபேசேகர போன்ற பொதுநல போராளிகளும் தேர்தல்கள் கண்காணிப்பு நிலையத்தை ஆரம்பிப்பதற்காக தோள்கொடுத்தார்கள் என்பதனை பதிவு செய்தல் அவரைப் போன்ற மனித நேயம்மிக்க புரட்சிகரப் பெண்களுக்கு வழங்கும் கௌரவமாகும்.

தேர்தல்கள் வன்முறைகள் தொடர்பாக பரந்த கண்காணிப்பு செய்தல் மற்றும் வன்முறைகள் தொடர்பான தரவுகள், புள்ளிவிபரக் கோவையை

தொடர்ச்சியாக இற்றைப்படுத்துவதற்கு தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையம் முயற்சியெடுத்தது. இன்றும் அது எமது நிலையத்தின் ஒரு குறிக்கோளாகும். அதன் மூலம் பெருமளவான பல்கலைக்கழக சமூகத்தினரும், ஏனைய ஆய்வுகளில் ஈடுபடுவோரும் பயனடைந்து வருகிறார்கள். இருப்பினும், தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையத்தின் குறிக்கோளும், பணிப்பொறுப்புகளும் மிகவும் விரிவாக பரவலடைந்துள்ளது. அவ்வாறான புத்தாக்கமான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், தற்போது தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையம் உருவாக்கப்பட்ட பின்னணியை விமர்சன ரீதியில் ஆராய்ந்து பார்ப்பது காலத்தின் தேவையாகக் கருதுவதில் தவறேதுமில்லை.

1998 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்காக நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில், தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையம் தனது கண்காணிப்புப் பயணத்தை ஆரம்பித்தது. அதற்கு அப்பால் அதாவது 1999 ஜனவரி 25 ஆம் திகதி நடைபெற்ற வடமேல் மாகாண சபை தேர்தலும் உண்மையிலேயே தேர்தல் கண்காணிப்பாளர்கள் இமயமலை உச்சிக்கு ஏறுவது போன்ற களைப்பும், அச்சமும் நிறைந்த தேர்தலாக அமைந்திருந்தது. வடமேல் மாகாணத்தில் குளியாப்பிட்டிய நகரத்தின் மத்தியில் ஒரு தாய் நிர்வாணமாக நடந்து செல்லுமாறு அச்சுறுத்தப்பட்டதும் அந்த தேர்தலில் நடைபெற்ற கவலைக்குரிய சம்பவமாகும். அது மட்டுமன்றி, கடத்தப்படுதல் மற்றும் ஆட்களைப் படுகொலை செய்தல் வரையான சட்டவிரோத தேர்தல் பிரச்சாரத்தையும் முன்னெடுத்த அரச அனுசரணை பெற்ற குண்டர்களின் கருணையற்ற பார்வை தேர்தல் கண்காணிப்பாளர்கள் மீதும் விழுந்த பின்னணியிலேயே தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையம் ஆரம்பமானது. அக் காலத்தில் வடமேல் மாகாண சபை தேர்தல் பெறுபேறுகளை செல்லுபடியற்றதாக்குமாறு நீதிமன்றத்துக்குச் சென்று நீதியை கோரும் அளவுக்கு கலாநிதி சரவணமுத்து அவர்களிடமிருந்த துணிச்சலும், தைரியமும் எம்மை ஆச்சரியத்துக்கு உள்ளாக்கியது. தற்போதைய தலைமுறைக்கும் அந்த அச்சமற்ற போக்கு சொல்லித்தரும் பாடம் மிகவும் உன்னதமானதாகும். முன்மாதிரியானதாகும்.

2004 ஆம் ஆண்டில் தேர்தல்கள் ஆணையாளராக இருந்த தயாநந்த திஸாநாயக்க அவர்கள் தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையம் (CMEV) மற்றும் சுதந்திரமான, நியாயமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (PAFFREL) ஆகியவற்றுக்கு தேர்தல் கண்காணிப்புக்கான உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை (Accreditation) வழங்கியதுடன், அதற்கு முன்னரும், பின்னரும் தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையம் தேர்தல்கள் ஆணைக்குழு, ஸ்ரீ லங்கா பொலிஸ் மற்றும் அரசியல் கட்சிகள், ஏனைய தரப்பினருடன் விமர்சன ரீதியில் ஆனால் ஒத்துழைப்பு அணுகுமுறையுடன் செயற்பட்டு வருகிறது. அவ்வாறான அனைத்து கருமங்களின் போதும் தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையம் தனது முதலாவது சேவைநாடியாக இந்த நாட்டிலுள்ள வாக்காளர்களையே கருதுகிறது. சரியாகவும், எளிமையாகவும் சொல்வதாக இருந்தால், புகழ்பூத்த இராஜதந்திர ஆளுமையான வின்ஸ்டன்ற் லெனார்ட் ஸ்பென்சர் சேர்ச்சில் அவர்களது கூற்றைக் குறிப்பிடலாம். "ஜனநாயகத்துக்கு வழங்கும் அனைத்து உபகாரங்களினதும் மூலவேர் ஒரு சிறிய மனிதர், ஒரு சிறிய பென்சிலைப் பாவித்து, ஒரு சிறிய கூட்டுக்குள் சென்று ஒரு சிறிய கடதாசித் துண்டில் அடையாளமிடும் ஒரு சிறிய புள்ளடியிலேயே தங்கியுள்ளது. அதனைவிட வேறெந்த வகையிலுமான உள்ளடக்கம், விமர்சனம் அல்லது பரந்த விவாதத்தின் மூலம் அந்த எண்ணக்கருவின் முக்கியத்துவத்தில் எவ்வகையிலும் தாக்கம் செலுத்த முடியாது." என அவர் தெரிவிக்கிறார்.

தேர்தல் என்பது ஜனநாயகத்தின் பெருவிழா என சொல்லப்படுவது உண்மையானது என்ற போதிலும், தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையத்தின் ஆரம்ப காலத்தில் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தொடர்பாக சமூகம் கடுமையான நிலைப்பாட்டையே கொண்டிருந்தது. இருந்த போதிலும், நவீன தேர்தல் போக்குகளுக்கு மத்தியில் தேர்தல் கண்காணிப்பாளர் தொடர்பாகக் கிடைத்துள்ள கௌரவம், பொறுப்பு மற்றும் அக்கறையை இலகுவில் புறந்தள்ள முடியாது. அவ்வாறான சமூக மாற்றத்துக்காக சேர்ச்சில் தெரிவித்த சிறிய மனிதரின் ஆயுதத்தை கூராக்குவதற்கு சிவில் சமூக அமைப்புக்கள் எடுத்த முயற்சியின் ஒரு உயிருடனுள்ள சாட்சியாக தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையம் உள்ளது.

இந்த நிறுவனம் உள்நாட்டு, வெளிநாட்டு தேர்தல்கள் தொடர்பான ஆய்வு ரீதியான அவதானிப்புக்கு உள்ளாவதற்காக தாக்கம் செலுத்திய மேலும் இரண்டு காரணிகள் உள்ளன. அதாவது, வேகமாக மாற்றமடையும் புதிய ஊடக வெளியை சரியாக புரிந்து கொள்ளுதல் மற்றும் தேர்தல்கள் மறுசீரமைப்பு செயன்முறையின் களைப்பை பொருட்படுத்தாமல் நிறைவு செய்தல்

ஆகியவையே அவையாகும். தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையம் தேர்தல் காலத்தில் சமூக ஊடக வெளியை தேர்தல் முறைப்பாடுகளை அறிக்கை செய்வதற்கு பாவித்த முதலாவது கண்காணிப்பு அமைப்பாகும். தேர்தல் வன்முறை இடம்பெற்றவுடன் அதனை உடனடியாக உறுதி செய்வதன் ஊடாக ருவிற்றர் மற்றும் பேஸ்புக் உள்ளிட்ட சமூக ஊடகங்கள் மூலம் பெற்றுக்கொள்ளுவதில் ஆபத்து இருந்த போதிலும் தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையம் அதனை நீண்டகாலமாக வெற்றிகரமாகப் பாவித்து வருகிறது. அந்த புதிய ஊடகப் பயன்பாடு மற்றும் அது தொடர்பான தொழில்நுட்ப பாவனை தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையத்தின் ஆரம்ப காலத்தில் புதிய ஊடகங்கள் தொடர்பான நிபுணரான சஞ்ஜன ஹத்தொட்டுவ அறிமுகப்படுத்தினார். அது மட்டுமன்றி முறையான தேர்தல் கண்காணிப்புக்கு தேவையான விஞ்ஞான ரீதியான தரவு கட்டமைப்பை உருவாக்குவதற்கு கலாநிதி. அர்ஜுன பராக்ரம அவர்களும் பெரும் பங்களிப்பு வழங்கியிருந்தார்.

தேர்தல் கண்காணிப்பு என்பது தேர்தல் பிரச்சார காலத்தில் மட்டுமே இடம்பெறும் ஒரு செயற்பாடு அல்ல. தேர்தலின் நேர்மைத் தன்மையை அளவிட வேண்டும் எனின் கண்காணிப்பாளர்களின் பிரதிநிதித்துவம் ஆண்டு முழுவதும் இருத்தல் வேண்டும். அந்த குறிக்கோளுக்காகவே தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையம் தேர்தல் மறுசீரமைப்பு செயற்பாடுகளில் தலையீடு செய்கிறது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் பொதுமக்கள் நலன் சார்ந்த வழக்குகள் அதன் மூலம் மேற்கொள்ளப்படும் தலையீடுகளில் மிகவும் சிரமமான பணியாக இருக்கின்றன. வாக்கெடுப்பு நிலையத்தில் ஏதாவது முறைகேடுகள் இடம்பெற்றாலும், அந்த நிலையத்தின் வாக்கெடுப்பை மீண்டும் நடத்துவதற்கான உத்தரவை வழங்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணையாளருக்கு இருக்காத சந்தர்ப்பத்தில், அவ்வாறான வழக்குகளுக்காக இந்த அமைப்பை நெறிப்படுத்திய கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து அவர்களது முயற்சியின் பெறுபேறாகவே அந்த அதிகாரம் தேர்தல் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டது.

தனது மாற்றுக் கொள்கைகள் நிலையத்தின் வெள்ளி விழா கொண்டாட்டத்தின் போது தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையமும் தனது இருபத்திநான்காவது ஆண்டு நிறைவை மிகவும் பெருமையுடன் கொண்டாடுகிறது. அதற்காக தேர்தல் கண்காணிப்பு குழுவினர் பெருமையடைகின்றனர். வெயில், மழை, ஈ, நுளம்பு தொந்தரவுகள் மட்டுமன்றி, அரச பயங்கரவாதம், சட்டவிரோத ஆயுதக் குழுக்கள் மற்றும் உத்தியோகபூர்வமான அரச உதாசீனத்துக்கு மத்தியில் கூட நியாயமான, சுதந்திரமான தேர்தலுக்காக இன்றும் அவர்கள் காட்டிவரும் பேரார்வம் மற்றும் குறிக்கோளை அடையும் அளவுக்கு புண்ணியம் செய்துள்ளோம் என்பதனை பாரபட்சமின்றி பதிவு செய்வது பெறுமதியானதாகும். 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற வட மாகாண சபைத் தேர்தலின் போது அச்சுறுத்தப்பட்ட சில தேர்தல் கண்காணிப்பாளர்கள் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளுக்கு (உண்மையிலேயே நாம் அவர்களை அறிந்துகொண்டோம்) பயந்து போய் தேர்தல் பிரச்சார காலம் முழுவதும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு பருத்தித்துறை மற்றும் சுற்றியிருந்த அடர்ந்த காடுகளில் இருந்தார்கள் எனச் சொல்வது உலகில் உள்ள அனைத்து தேர்தல் கண்காணிப்பாளர்கள் காட்டிய தைரியத்துக்கு வழங்கக்கூடிய பரிசாகும்.

உலகம் போற்றும் புதிய தேர்தல் போக்குகளுடன் ஒப்பிடக்கூடிய வகையில் தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையம் இன்று தனது பணிப்பொறுப்பை விரிவுபடுத்தியுள்ளது. அது 2015 ஆம் ஆண்டில் அனைவரையும் உள்ளடக்கிய தேர்தல் செயன்முறை தொடர்பாக "Inclusive Election Process" பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தது. அதன்போது "Enabled Elections" எனும் பெயரில் அமைக்கப்பட்ட தன்னார்வ அணியுடன் இணைந்து மாற்றுத்திறனாளிகள் தேர்தலில் பங்கெடுத்தல் ஊக்குவிக்கப்பட்டது. அதற்கு இணையாக, தேர்தல் செலவு தொடர்பான கண்காணிப்பு இலங்கையின் அண்மைக்கால தேர்தல் வரலாற்றில் தேர்தல் கண்காணிப்பு செயன்முறையில் இடம்பெற்ற முக்கியமான தலையீடாகும். இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது (2019 ஆம் ஆண்டு) ஆரம்பிக்கப்பட்ட அந்த நாடு தழுவிய கண்காணிப்பு கடந்த (2020) பாராளுமன்ற தேர்தலின் போதும் மேற்கொள்ளப்பட்டது. நான்கு துறைகள் ஊடாக அரசியல் கட்சிகள் தாம் தேர்தல் பிரச்சாரக் காலத்தில் மேற்கொண்ட செலவுகள் தொடர்பாக சமர்ப்பித்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவு அறிக்கை உண்மையிலேயே தேர்தல் செலவை ஒழுங்குபடுத்துவதற்கான முயற்சியின் முன்னேற்றத்துக்கு ஏதுவாக அமைந்தது என்பது தெளிவான விடயமாகும்.

தற்போது பெண்கள் மற்றும் இளைஞர்களின் அரசியல் பிரதிநிதித்துவம், தேர்தல்

செலவுகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் முன்கூட்டியே வாக்களிப்பு உள்ளிட்ட தேர்தல் மறுசீரமைப்பு இயக்கத்தில் கட்டாயமாக இருக்க வேண்டிய அடிப்படைப் பண்புகள் தொடர்பாக பெரும்பாலானோர் வினைத்திறனான விடயங்களை முன்வைக்கும் பாங்கை தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையத்தினரான நாம் நிறைந்த மனதுடன் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த விடயங்கள் தொடர்பாக இலங்கையிலுள்ள ஏனைய தேர்தல் கண்காணிப்பாளர்களுடன் இணைந்து கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து இரண்டு தசாப்தங்களுக்கு முன்னரே பேசத் தொடங்கியிருந்ததே அதற்கான காரணமாகும்.

இன்றும் கூட அதன் உறுப்பினர்களான நாம் இலங்கையின் சிறந்த தேர்தல் கலாசாரம் தொடர்பாக நல்ல கனவையே காண்கிறோம். அண்மையில் மொனராகலை மாகாண நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அதற்கான மிக அண்மித்த எடுத்துக்காட்டாகும். பெஃப்ரல் அமைப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் பிரதான முறைப்பாட்டாளராக நாம் நல்கிய ஒத்துழைப்பின் காரணமாக பெற்ற வெற்றி இந்த நாட்டின் எதிர்கால தேர்தல் செயன்முறையின் போக்கை மாற்றுவதற்கான சவாலை வெற்றிகொள்வதற்கான உந்துசக்தியாக அமையும் என நம்புகிறோம். வாக்காளருக்கு உபசரிப்பு அல்லது இலஞ்சம் வழங்குவதன் மூலம் வெற்றிபெற்ற எந்தவொரு வேட்பாளரினதும் வெற்றி செல்லுபடியற்றதாக்கப்படும் என அந்த தீர்ப்பின் மூலம் சொல்லப்பட்டுள்ளது.

தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்ட போது முகங்கொடுத்த சவால்கள் தற்போது தீர்க்கப்பட்டுள்ளது என்பது உண்மையாகும். இருந்த போதிலும், வேறு பல சவால்கள் சுருளாகத் திரண்டிருப்பதும் தெரிகிறது. அவ்வாறான புதிய சமூக மற்றும் அரசியல் தயார்படுத்தலின் போது கலாநிதி. சரவணமுத்து அவர்களிடமுள்ள தூரநோக்கு தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையத்தின் பங்களிப்புடன் ஒன்றிணைகிறது. எனவே, இணை ஏற்பாட்டாளர்களாக முன்மாதிரியான ஒத்துழைப்பை நல்கிய உதய களுபத்திரண மற்றும் சீதா ரஞ்ஜனி ஆகியோரையும் இந்த வேளையில் நினைவு கூருகிறோம்.

நிறைவாக, மாற்றுக் கொள்கைகள் நிலையத்தின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு என்பது டொக்டர் சரா அவர்களது பொன்னான அறுவடை மற்றும் தளராத இலட்சியம் ஆகும். NGO இலங்கைக்கு எதற்கு? என்று இலங்கையின் அனைத்து சிவில் சமூக அமைப்புக்களிடமும் பெருமளவில் விடுக்கப்படும் கேள்விக்கான பதிலாக அமைந்துள்ளது எனவும் இங்கே பதிவு செய்கிறோம்.

The Paradoxical Prime Minister - Narendra Modi and His India எனும் தலைப்பிலான நூலை எழுதிய இந்தியரான சஷி தரூர் அவர்களது "The attack on institutions" எனும் கட்டுரையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள மாகாத்மா காந்தி அவர்களது கூற்றை நினைவூட்ட விரும்புகிறோம்.

The truest test of a democracy is in the ability of anyone to act as he likes"so long as he does not injure the life or property of anyone else"

டொக்டர் சரா அவர்களும் மாற்றுக் கொள்கைகள் நிலையத்தை கட்டியெழுப்பி, இந்த நாட்டு பிரஜைகள் ஜனநாயகத்தில் கூடுதலாக ஈர்க்கப்படுவதற்காக முயற்சித்துள்ளார். எமது காலத்தில் தாராளவாதியான ஒரு சமூக செயற்பாட்டாளரிடமிருந்து அதனைவிட வேறெதனையும் எதிர்பார்க்க முடியாது.

---

**மஞ்சுல கஜநாயக்க**

ஆய்வாளர், தேர்தல்கள் வன்முறை கண்காணிப்பு நிலையததின் "CMEV" தேசிய இணைப்பாளராகக் கடமையாற்றுகிறார். பல்வேறு பேசுபொருள்களின் விசேட கட்டுரைகளை எழுதிவருகிறார்.

# ஒப்பீடு செய்ய முடியாத ஊடக வகிபாகம்



**கலாநிதி**
**தேவநேசன் நேசையா**

நான் 35 ஆண்டு காலம் இலங்கையின் அரச சேவையில் இணைந்து பணியாற்றி 1995 ஏப்ரல் மாதம் எனக்கு 60 வயது பூர்த்தியடைந்த பின்னர் ஓய்வு பெற்றேன். ஓய்வு பெற்ற பின்னர் புலமைசார் விடயங்கள் மற்றும் கொள்கை ரீதியான விடயங்கள் தொடர்பாக அரச சார்பற்ற நிறுவனங்கள் சிலவற்றுடன் இணைந்து பணியாற்றுவற்கு எனக்கு அவகாசம் கிடைத்தது.

2004 ஆம் ஆண்டு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் இணைந்து சுமார் 10 ஆண்டு காலம் அங்கு பணியாற்றியதுடன் தொலைநோக்கு மற்றும் உறுதியான சுயாதீனம் தொடர்பான அதன் தெடர்ச்சியான அறிக்கை தொடர்பில் மிகவும் புரிந்துணர்வுடன் பணி புரிந்தேன். மிகவும் இடர் நிறைந்த பாதுகாப்பு நிலைமைகள் மத்தியிலும் ஏகாதிபத்திய ஆட்சிகளுக்கு துணிச்சலுடன் சவால் விடுப்பதற்கு எப்பொழுதும் தயார் என்பதனை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனது செயற்பாடுகள் மூலம் நிரூபித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல் மற்றும் காணாமல் ஆக்கப்படல் தொடர்பில் அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற தேவைப்பாடுகள் தொடர்பான முக்கிய விடயங்கள் தொடர்பாக வழக்குத் தொடுத்தல், விடயங்களைத் எடுத்துரைத்தல் மற்றும் ஆதரித்து வாதாடுதல் உள்ளிட்ட பெரும்பாலான துறைகளில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் புதிய பாதைகளின் ஊடாக பயணிப்பதற்கான பணிகள் தொடர்பில் நான் பெரிதும் மதிப்பளிக்கின்றேன். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் மக்கள் வெகுசன ஊடக இணையத்தளமான ‘கிரவுண்ட்விவ்ஸ்’ பற்றியும் நான் ஆளமாக புரிந்து வைத்திருந்தேன். இலங்கையில் வெளியாகும் சஞ்சிகைகளுள் ஒப்பீடு செய்ய முடியாதது என்ற கருத்தின் அடிப்படையிலேயே அது என்னால் எப்பொழுதும் தரப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டது.

நீண்ட காலமாக 'கிரவுண்ட்விவ்ஸ்' இணையத்தளத்தை வாசிக்கும் ஒரு வாசகனாக நான் மாறியதுடன் அதன் உள்ளடக்கத்துக்காகவும் நான் எனது பங்களிப்பினை வழங்கினேன். அதன் உள்ளடக்கத்துக்கு நிரந்தர பங்களிப்பு வழங்கிய ஏனையவர்களும் இருந்தார்கள். எமது பெரும்பாலான பங்களிப்புகளுக்கு பதில்குறி தெரிவிக்கப்பட்டதுடன் வாரங்கள் பல செல்லும் வரை அதில் உள்ள கருத்துக்களை பரிமாற்றம் செய்வதற்கான வழிகள் ஆரம்பிக்கப்பட்டன. நாட்டின் அரசியல் வாழ்க்கையினை மையமாகக் கொண்ட கருத்துக்களைப் பரிமாற்றிக் கொள்வதற்கான இவ் ஒன்றியத்தை நான் பெரிதும் பாராட்டுகின்றேன். எனது பெரும்பாலான பங்களிப்புக்கள் இலங்கைச் சமூகத்துடனும் அரசியலுடனும் தொடர்புபட்டதாக விளங்கியது. ஆகவே, நான் நீண்ட காலம் இலங்கைக்கு வெளியில் இருந்த காரணத்தால் 'கிரவுண்ட்விவ்ஸ்' இணையத்தளத்துடனான எனது தொடர்பினை பேணுவது சிக்கலான ஒரு விடயமாகக் காணப்பட்டதுடன் அது இடைநிறுத்தப்பட்டது. தற்போது எனக்கு 86 வயதாகிறது. தற்போது நாட்டுக்கு வெளியில் இருப்பதன் காரணமாக எனக்கு விடுபட்ட பல்வேறு விடயங்களுள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் 'கிரவுண்ட்விவ்ஸ்' முக்கிய இடம் வகிக்கிறது.

---

**கலாநிதி தேவநேசன் நேசையா**

ஒரு சிரேஷ்ட நிர்வாக உத்தியோகத்தர் ஆவார். முன்னாள் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் (விசேடமாக 1983 களில்), சுற்றாடல் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளராகப் பணி புரிந்துள்ளார். அமெரிக்கா ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற அவர் ஓய்வு பெற்ற பின்னர் மார்க நிறுவனத்தில் பணி புரிந்ததுடன் அதன் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் பணி புரிந்துள்ளார். 2004 முதல் 2014 வரை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் ஆலோசகர் ஒருவராகவும் பணி புரிந்துள்ளார்.

# நீங்கள் ஒருபோதும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தை விட்டு நீங்க மாட்டீர்கள்



கலாநிதி
குமாரவடிவேல் குருபரன்

2004 ஆம் ஆண்டு நான் உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றி சில மாதங்களுக்குப் பின்னர் ஒரு நாள் யாழ்ப்பாணம் ‘பெடரேஷன்’ ஒன்றியத்துடன் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இணைந்து ஏற்பாடு செய்யும் ஒரு ‘சமஷ்டி’ கருத்தரங்கிற்காக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதனை என்னால் காண முடிந்ததுடன் மிகவும் அண்மையில் பாடசாலை வாழ்க்கையை நிறைவு செய்த வயது குறைந்த ஓர் இளைஞனிடம் விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும். ஆயினும் அவர்கள் அந்த நிகழ்ச்சிக்கு அழைப்பு விடுத்தார்கள். என்னால் அந்த நிகழ்ச்சியின் போது பூரணமற்ற அரைகுறை விளக்கமுள்ள சில வினாக்கள் தொடுக்கப்பட்டது என்பதில் சந்தேகம் இல்லை. ஆயினும் அது கொழும்புப் பல்கலைக்கழகத்தின் அரசியலமைப்புச் சட்டம் தொடர்பான எனது எதிர்கால விரிவுரையாளரான திரு ரொஹான் எதிரிசிங்க அவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கு போதுமானதாக இருந்தது. ஒரு சிறிய இடைவேளைக்குப் பின்னர் நான் அது வரையில் என்ன செய்து கெண்டிருக்கின்றேன் என திரு ரொஹான் எதிரிசிங்க அவர்கள் என்னிடம் வினவியதுடன் அதிக காலம் செல்வதற்கு முன்னர் என்னை ஓர் உதவி ஆய்வு உத்தியோகத்தராக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் இணைத்துக் கொண்டார். அவ்வாறு தான் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடனான எனது தொடர்பு ஆரம்பிக்கப்பட்டது. அந்த நிறுவனம் தொடர்பாக நான் பிரமித்துப் போயிருந்தேன். என்னைச் சுற்றி இருந்த மிகப் பெரிய ஆளுமையினைக் கொண்ட ஜாம்பவான்கள் மத்தியில் நான் மிகச் சிறிய மனிதனாக தென்பட்ட போதும் தலைநகரின் ‘லிபரல்’ வகிபாகத்தின் இதயமாக விளங்கும் கருத்துக் களஞ்சியத்தின் ஒரு பங்காளனாக மாற்றமடையும் பாக்கியத்தை நான் அடைந்துள்ளேன் என்பது எனக்குப் புரிய ஆரம்பித்தது. நான் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் பல்வேறு விடயங்கள் பற்றிக் கற்றுக் கொண்டேன். வாசித்தேன், ஆய்வுகளை மேற்கொண்டேன், வளர்ந்து

விருத்தியடைந்தேன். எனது உத்தியோகபூர்வ தொடர்பு ஒரு வருடத்துக்கு மட்டும் வறையறுக்கப்பட்ட போதும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஏனைய பெரும்பாலான பணியாட்தொகுதியினர் போன்றே நீங்களும் ஒருபோதும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தை விட்டு நீங்க மாட்டீர்கள் - நான் கூட அதற்கு விதிவிலக்கு அல்ல. நானும் அவ்வாறு தான்.

ஆண்டுகள் பல கடந்து செல்லும் போது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் அதன் அரசியல் தொடர்பான எனது தொலைநோக்கு பரிணாமம் பெற்றுள்ள போதும் ஒரு விடயம் மட்டும் மாற்றம் பெறாது காணப்படுகிறது. அதாவது 25 ஆண்டுகள் கடந்துள்ள போதும் சராவின் தலைமையின் கீழ் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது அதிகாரத்தில் உள்ளவர்களை பொறுப்புக் கூற வைப்பதற்காகவும், 'லிபரல்' வகையின் அரசியலமைப்புச் சட்டம் தொடர்பான ஆராய்ச்சிக்காகவுமான கொழும்பு 'லிபரல்' கலந்துரையாடலின் கேந்திர நிலையமாகவும் இதயமாகவும் CPA காணப்படுகிறது என்பதாகும்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் என்பது கருத்துக் களஞ்சியத்திற்கு மேலதிகமான ஒன்று என்பதனை சமூகக் குறிகாட்டி, விபாஷா மற்றும் OUTREACH சேவைப் பிரிவு ஆகியன மூலம் சான்றுரைக்க முடியும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், விசேடமாக சரா மற்றும் ரொஹான் ஆகியோரை லிபரல்வாதி ஒருவரது உண்மையான பண்பு என நான் கருதும் (அது தம்மை லிபரல்வாதிகள் எனக் கூறிக் கொள்ளும் பலரிடம் கண்டறியக் கூடிய ஒன்று அல்ல) தமது கருத்து மற்றும் உபாயவழிமுறையுடன் தொடர்புடைய அல்லது தொடர்பற்ற பல்வேறு கருத்துக்களைக் கொண்ட நபர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குதல், நினைவுகூருதல் மற்றும் மேம்படுத்துவது குறித்து நான் அனுபவப்பட்டுள்ளேன்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தை தனது ஆரம்ப இருப்பிடமாகக் கொண்ட மற்றும் அதன் மூலம் பெற்றுக்கொண்ட முதிர்ச்சி மூலமாக உலகம் முழுவதும் அனுகூலமான முறையிலும் சிறந்த முறையிலும் பணியாற்றும் பல இளைஞர் யுவதிகளை நான் பார்த்துள்ளேன். கடந்த 25 ஆண்டுகளில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மூலம் பெற்றுத் தந்த தனிச் சிறப்பு வாய்ந்த பங்களிப்பு இதுவென நான் கருதுகின்றேன்.

எதிர்வரும் பல்லாண்டு காலத்துக்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இலங்கைக்கு மிகவும் வேண்டிய ஒரு நிறுவனம் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை. நெருக்கடிகள் நிறைந்த ஒரு காலகட்டத்தில் தற்போது நாம் வாழ்ந்து வருகின்றோம் எனக் கூறப்படுவது இன்று ஒரு சாதாரண நிலைமையாக மாற்றம் பெற்றுள்ளது. (எனது வாழ்நாள் பூராக நான் அதனை செவிமடுத்துள்ளேன்) ஆயினும் தற்போது உள்ளதைப் போன்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அடிப்படை லிபரல் பெறுமானங்கள் ஒரு போதும் அழுத்தத்துக்கும் தலையீட்டுக்கும் ஆளாகவில்லை என நான் நினைக்கின்றேன். இது அதிகாரத்தில் இருப்பவர்களால் மாத்திரம் மேற்கொள்ளப்படும் ஒரு விடயம் அல்ல. லிபரல் பெறுமானங்களுடன் தொடர்பற்றவர்கள் எனக் கருதும் பரந்துபட்ட சமூகத்தினராலும் லிபரலின் அடிப்படைக் கருப்பொருள் தாக்கத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் லிபரல் ஜனநாயகத்தை பல்வேறு கோணங்களில் நம்புகின்ற நபர்கள் எதிர்நோக்கும் சவால்களாக, இவ்வாறான நெருக்கடியான சூழ்நிலைகளின் போது லிபரல்வாதத்தின் அடிப்படை விடயங்களை மறந்து விடாமல் அதனை மக்கள் விரும்பும் ஓர் உரையாடலுக்கு ஏற்புடையதாக்கிக் கொள்வதற்காக மீண்டும் லிபரல் ஜனநாயகத்தை எவ்வாறு கருத்துருவாக்க முடியும் என்பது காணப்படுகிறது.

இவ்வாறு மீண்டும் சிந்தனை செய்து பார்க்கும் செயன்முறையின் பால் மிகத் தீவிரமாக எம்மை இணையச் செய்வதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திடம் ஒரு முக்கியமான கடமைப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது என நம்புவதுடன் அவர்கள் அவ்வாறு செய்வார்கள் எனவும் நான் எதிர்பார்க்கின்றேன்.

---

**கலாநிதி குமாரவடிவேல் குருபரன்**

ஒரு சட்டத்தரணி ஆவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்ட கற்கைப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளரும் அதன் பிரிவுத் தலைவராகவும் பணி புரிந்துள்ளார். தமிழ் சிவில் அமைப்புக்களின் ஒன்றியத்தின் சம நிறுவுனர் என்பதுடன் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு செயற்படும் Adayaalam centre for policy research இன் நிறுவுனரும் ஆவார்.



# மாற்றுவழி ஒன்றைத் தேடிச் சென்ற பயணம்

**சம்பத் சமரகோன்**

1996 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மாற்றுக் கொள்கைகளுக்களுக்கான நிலையம் தனது சுமைகள் நிறைந்த செயன்முறையின் 25 ஆண்டு நிறைவைக் கொண்டாடுவது தொடர்பில் அதன் பங்காளிகளில் ஒருவர் என்ற ரீதியில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். 1994 ஆம் ஆண்டு இடம்பெற்ற அரசியல் மாற்றத்தைத் தொடர்ந்து, 2 ஆண்டுகளின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட மாற்றுக் கொள்கைகளுக்களுக்கான நிலையமானது முழு உலக மக்கள் போன்றே இலங்கையில் வாழுகின்ற நாமும் கொவிட் பெருந்தொற்றை எதிர்கொண்டுள்ள இவ் வேளையில் தனது 25 ஆண்டு நிறைவை நினைவுகூருகிறது. ஆகவே பெருந்தொற்று நிலைமையிலும் கூட மாற்றுக் கொள்கைகளுக்களுக்கான நிலையம் முன்னிற்கும் ‘லிபரல் ஜனநாயக’ பெறுமானங்களைப் பாதுகாத்தல், அதனைப் பேணுதல் எம்மால் தட்டிக்கழிக்க முடியாத ஒரு பொறுப்பாக உள்ளது. அவ்வாறான ஜனநாயகப் பெறுமானங்களின் பெறுமதியினை இவ்வாறான துன்பியல்களின் முன்னே மிகவும் தீவிரமாக சமூகம் வேண்டி நிற்பது தன்னிச்சையாக இடம்பெறும் நிகழ்வாக காணப்படுகிறது. அவ்வாறே மீண்டும் ஒரு முறை ஜனநாயகம், மனித உரிமைகள், கருத்துச் சுதந்திரம் மற்றும் நீதி உள்ளிட்ட இலங்கை பூமி திரும்பத் திரும்பக் கோருகின்ற பெறுமானங்களை அடைந்து கொள்ளுதல் ஒரு கேள்விக் குறியாக உள்ள ‘இலங்கை அரசியலின் தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்ட போக்கு’ மூலம் அரச அதிகாரம் கொண்டு நடாத்தப்படும் ஒரு காலகட்டத்தில் தனது 25 ஆண்டு நிறைவை அனுஷ்டிப்பதற்கு நேரிடல் மற்றுமொரு விசேட அம்சம் ஆகும். அவ்வாறான ஒரு விசேட அம்சம் காரணமாக 1996 ஆம் ஆண்டை விடவும் மாற்றுக் கொள்கைகளுக்களுக்கான நிலையம் முன்னிற்கும் ‘புதிய லிபரல் ஜனநாயகப் பெறுமானங்கள்’ தேவையாக உள்ளதென்பது இலங்கைச் சமூகம் அன்றை விட இன்று உணரத் தொடங்கி உள்ளது. ஆகவே, ஒரு புலமைசார் சபை, ஆராய்ச்சி மற்றும் ஆதரித்து வாதாடும் ஒரு வேலைத்தளம் என்ற ரீதியில் மாற்றுக் கொள்கைகளுக்களுக்கான நிலையத்தின் மீது தற்போது நிலவும் சமூக அரசியல் சூழ்நிலையின் கீழ் இன்றியமையாத ஒரு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது

என்பது பற்றி 25 ஆவது ஆண்டு நிறைவு அனுஷ்டிக்கப்படும் இவ் வேளையில் நான் சிந்திக்கின்றேன்.

### கடந்தகால அனுபவங்களில் இருந்து சில துளிகள்

சமூக வானொலி சேவைகளுடன் இணைந்து தொலைதூரங்களில் அமைந்துள்ள கிராமங்களில் வேறு வகையில் கூறுவதாயின் ஒரு சிலரால் அழைக்கப்பட்ட 'எல்லைக் கிராமங்களில்' வாழும் சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் உரிமைகள் குழிதோண்டிப் புதைக்கப்பட்ட காரணத்தால் துன்பங்களை எதிர்கொண்ட மக்களின் குரல்களை ஓரளவுக்கேனும் சமூகத்துக்கு எடுத்துரைப்பதற்காக, இற்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன்னர், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஊடகப் பிரிவு ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தது. இணையம் பிரசித்தி பெறாது காணப்பட்ட ஒரு காலகட்டமாக இருந்தாலும் கூட தீர்வு காண்பதற்கு உதவக் கூடிய மக்களின் ஊடகப் பாவனைக்காக இச் செயன்முறை முன் நின்று செயற்பட்டது. அதற்கு மேலதிகமாக சம்பிரதாயபூர்வ ஊடகங்களில் வெளிவரும் மிகச் சிறப்பு வாய்ந்த உள்ளடக்கங்கள் மீது அவதானம் செலுத்தி அதில் காணப்படும் பிற்போக்கான போக்குகள் 'அனுகூலமான ஊடகக் கண்ணோட்டத்தில்' நின்று பகுப்பாய்வு செய்யப்பட்டன. விசேடமாக யுத்தம் நிலவிய காலங்களில் மக்களின் உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்கள் மற்றும் சிறுபான்மை மக்களின் உரிமைகள் தொடர்பில் சம்பிரதாயபூர்வ ஊடகங்கள் பாராமுகமாக இருப்பதனை கேள்விக்கு உட்படுத்தியது. அவற்றை ஆய்வுப் பத்திரங்களாக அச்சிடப்பட்ட பிரதிகள் வடிவில் சமூகமயப்படுத்த முடிந்தது. அவற்றுள் சில இலங்கைப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக இன்றும் கூட பயன்படுத்தப்படுவதனை நாம் மறந்துவிடக் கூடாது.

அவ்வாறான பல செயற்பாடுகளில் காணப்பட்ட அனுபவங்கள் மற்றும் போக்குகள் ஊடாக 'சமூக ஊடகம்' தொடர்பான ஒரு புதிய அனுபவம் இலங்கை ஊடகச் சமூகம் உள்ளிட்ட இலங்கைச் சமூகத்தின் மத்தியில் அறிமுகம் செய்வதில் முன்னணி வகிப்பதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஊடகப் பிரிவுக்கு முடிந்தமை பற்றி திரும்பிப் பார்க்கும் போது அது தனிச்சிறப்பு வாய்ந்த ஓர் அடையாளம் எனக் குறிப்பிடலாம். அதே நேரம் சமூகத்தில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்கும் செயன்முறைக்கு உதவுவதற்காக இணையத்துக்கான பிரவேசத்தை எவ்வாறு பயன்படுத்த முடியும்? என்பது ஏற்புடைய மக்கள் ஊடகத்தின் ஓர் அடிப்படைக் கருத்தாகக் காணப்பட்டது. இலங்கை முழுவதும் பெரும்பாலான சிவில் அமைப்புக்கள் மற்றும் ஊடகவியலாளர்களுடன் அவ்வாறான மக்கள் ஊடகத்தின் 'புதிய ஊடக' அனுபவம், பயிற்றுவித்தல் உள்ளிட்ட பல்வேறு முறைகள் ஊடாக பரிமாற்றப்பட்டன. அதனைத் தொடர்ந்து விசேடமாக சிவில் அமைப்புக்களில் அப்போது அவ்வளவு தூரம் கலந்துரையாடப்படாத அவ்வந்த அமைப்புக்களுக்குத் தேவையான 'ஊடக உபாய வழிமுறைகள்' தொடர்பான ஒரு கருத்தினை அவர்கள் மத்தியில் வளர்ப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இணைய பிரவேசத்தில் (ப்லொக், ஈமேல்) யுனிகோட் எழுத்துப் பாவனை பிரசித்தி பெற்றுக் காணப்படாதிருந்த ஒரு காலகட்டத்தில் எதிர்கால தொலைநோக்குடன் 'எதிர்காலம் யுனிகோட்' எனக் கூறுவதற்கு எம்மிடம் துணிவு காணப்பட்டது. அதன் அடிப்படையில் எமது அனைத்து விதமான இணையவழி வெளியீடுகள் 'யுனிகோட்' எழுத்துருவில் வெளியிடப்பட்டன. யுனிகோட் பாவனைக்காக முடியுமான அனைத்து படிமுறைகள் ஊடாகவும் இலக்கு சமூகத்தை நாம் அறிவூட்டினோம். இதன்போது இணையவழி ஊடகவியலாளர்களின் (எம்பர்டட் எழுத்து) ஏளனங்களுக்கு உட்படுத்தப்பட்டது. ஆயினும், அன்று நாம் திரும்பத் திரும்ப கூறிய விடயம் இன்று உண்மைப்படுத்தப்பட்டு அனைவரும் யுனிகோட் பாவனையின் பால் ஈர்க்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சி தரக் கூடிய ஒரு விடயம் ஆகும். அது இன்றியமையாத ஒரு நிலைமைக்கு மாற்றம் கண்டிருப்பது தொடர்பிலும் பலரது முயற்சியின் பயனாக சிங்களம் மற்றும் தமிழ் யுனிகோட் எழுத்துக்கள் மிகவும் அபிவிருத்தியடைந்த நிலையில் காணப்படுவது தொடர்பிலும் இன்று அதனை திரும்பிப் பார்க்கின்ற போது நாம் அனைவரும் மகிழ்ச்சியடையக் கூடிய நிலையில் இருக்கிறோம்.

### புதிய போக்குகள்

இலங்கையில் பரீட்சார்த்த ரீதியான ஒரு செயன்முறையின் பின்னர் 'மக்கள் ஊடகத்தை' அடிப்படையாகக் கொண்டு சிங்கள யுனிகோட் பாவனையுடன் 2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 'விகல்ப' இணையத்தளம் அதனது நீண்டகால செயன்முறையில் தனித்துவம் மிக்க ஓர் அடையாளம் ஆகும். 2007 ஆம் ஆண்டு 'ப்லொக்' இணையத்தளம் ஆரம்பமாவதற்கு முன்னர் Groundviews இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டமை மற்றும் அதனைத் தொடர்ந்து 2014 ல் தமிழ் மொழி மூல இணையத்தளமாக 'மாற்றம்' இணையத்தளம்

ஆரம்பிக்கப்பட்டமை ஊடகப் பிரிவின் மைல் கல்லில் ஒரு முக்கிய சந்தர்ப்பம் என்பதனை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் 25 ஆண்டு நிறைவு அனுஷ்டிக்கப்படும் இவ் வேளையில் குறிப்பிட விரும்புகின்றோம்.

அத்துடன் விசேடமாக அரச ஊடகங்களில் பொதுமக்கள் சேவை ஊடகப் பெறுமானங்களைக் கட்டியெழுப்புவதற்காக இலங்கையின் பிரதான ஊடக அமைப்புக்களுடன் இணைந்து “பொதுமக்கள சேவை ஊடகப் பாவனையினை” ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மிகவும் முற்போக்கான ஒரு படிமுறை ஆகும். அதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுள் பொதுமக்கள சேவை ஊடகம் தொடர்பான விழிப்புணர்வூட்டல், பயற்சி, உரையாடல் மற்றும் அது தொடர்பான பல்வேறு ஆய்வுப் பத்திரங்களைச் சமர்ப்பித்து அதனை யதார்த்தமாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட உழைப்பு தனித்துவமானதாக அமைந்தது. இதற்கான காரணம் யாதெனில், அரச ஊடகம் உள்ளிட்ட ஏனைய பல சம்பிரதாயபூர்வ ஊடகங்களில் இன்று ஏற்பட்டுள்ள துருவப்படுத்தலுக்கு ஏதேனும் ஒரு பதில் கிடைக்கப் பெற்றுள்ளமை ஆகும். ஆயினும் அதனை யதார்த்தமாக்குவதற்கு நம் அனைவராலும் இயலாது போனாலும் கூட அக் கருத்தில் பொதிந்துள்ள அனுகூலமான பெறுமானம் அன்றை விட மேலெழுந்து காணப்படுவதனை விசேடமாகக் குறிப்பிட வேண்டிய தேவை காணப்படவில்லை. அவ்வாறே தகவல் அறிவதற்கான உரிமையினை இலங்கையில் ஏற்படுத்துவதற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது ஏனைய அமைப்புக்கள் சிலவற்றுடன் இணைந்து மேற்கொண்ட முயற்சியானது தகவல் அறிவதற்கான உரிமை தொடர்பான சட்ட வரைவு வரை பயணித்தது. ஆயினும் அன்று காணப்பட்ட அரசியல் சமூகத்தில் உருவாகிய பல்வேறு நிலைமைகளின் மத்தியில் அதனை அன்று யதார்த்தமாக்குவதற்கு இயலாது போனாலும் கூட கடந்த 2016 ஆம் ஆண்டு தகவல் அறிவதற்கான உரிமையானது ஒரு சட்டமாக இலங்கையில் தாபிக்கப்பட்டது. அதற்காக ஓரளவு முன்னோடி செயற்பணியினை மேற்கொள்ள முடிந்தமையானது ‘ஜனநாயகம்’ எனும் அர்த்தத்தில் நாம் மாத்திரம் அல்லாது ஒட்டுமொத்த இலங்கைச் சமூகமும் பெற்றுக்கொண்ட தனிச் சிறப்பு வாய்ந்த ஒரு வெற்றி ஆகும்.

மக்கள் ஊடக செயற்பாட்டின் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு 2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ‘விகல்ப’ இணையத்தளம் 2009 ஆம் ஆண்டு யுத்தத்தின் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களின் மனித உரிமைகள் மீறப்படல் மற்றும் யுத்தம் ஏற்படுத்திய துன்பியல் வாழ்க்கை அனுபவம் பற்றி சிங்கள மொழி மூலமான தொடர்பாடலை மேற்கொண்டது. நாடு முழுவதும் யுத்தத்தின் அநாகரிகமான நடத்தைகளால் உணர்விழக்கச் செய்யப்பட்ட ஒரு யுகத்தில் குரலற்றுக் கிடந்த துன்பத்தின் மத்தியில் வாழ்க்கை நடாத்திய மக்களது குரலை தெற்கின் சகோதர மக்களிடையே முடிந்தளவு கொண்டு செல்வதற்கு எம்மால் முடிந்தது. மேலாதிக்க இராணுவத்தின் பல்வேறுபட்ட அழுத்தங்களின் மத்தியில் மக்களின் வேதனைகளைக் குணப்படுத்துவதற்கான தொடர்பாடல் செயற்பாட்டினை அப்போதிருந்த சம்பிரதாயபூர்வ ஊடகங்கள் கவனியாதிருந்த ஒரு காலகட்டத்தில் அச் செயன்முறை எம்மால் மேற்கொள்ளப்பட்டது. புகைப்படக் கருவி கண்ணில் பட்டதும் பதற்றம் கொள்ளும் வடக்கு கிழக்கில் இருந்த இராணுவம் மக்கள் ஊடக செயன்முறைக்கு பாரிய சவாலாக அமைந்தது. பலதரப்பட்ட கேள்விகள் தொடுக்கப்படலில் இருந்த பயங்கரம், யுத்தத்தின் கொடூரத் தன்மையினைப் பிரதிபலிக்கச் செய்தது. ஆயினும் எம்மால் தந்திரமாக சேகரிக்கப்பட்ட, பாதிக்கப்பட்ட அந்த மக்களின் இடர்கள் நிறைந்த அனுபவங்களை இந்த நாட்டு மக்களுக்கும் உலகிற்கும் எடுத்துரைப்பதற்கு எம்மால் முடிந்தது.

அது மாத்திரமல்ல, தெற்கின் பல்வேறு பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் மனிதர்கள் உள்ளிட்ட இயற்கை பற்றிக் கருதாது வகுக்கப்படும் கொள்கைகள் காரணமாக பல்வேறு வகையான பாதிப்புக்களுக்கு ஆளாகிய மக்களது குரல்களையும் நாம் இணைய வழி ஊடாக வெளியிட்டு வைத்தோம். காணொளிகள், புகைப்படங்கள் உள்ளிட்ட ஊடகங்கள் வாயிலாக நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி சேகரிக்கப்பட்ட அத்தகைய தகவல்கள் எமது இணையத்தள ஆவணக்காப்பகக் களஞ்சியத்தின் ஊடாக, இன்றும் கூட பலதரப்பட்ட நபர்களால் பயன்படுத்தப்படுகின்றன. இடர்கள் நிறைந்த உண்மையினை மேலெழுப்பிக் காட்டுகின்ற நூற்றுக் கணக்கான அவ்வாறான விவரணச் சித்திர நிகழ்ச்சிகள், பிரசைகள் பற்றிய கதைகள், குறுந் திரைப்படங்கள் போன்றே அரசியல் கருத்துப் பரிமாற்றங்கள் மற்றும் கலந்துரையாடல்களை மக்கள் இணையத்தளம் தயாரித்துள்ளது. அவற்றுள் பெரும்பாலான உள்ளடக்கங்கள் மேலாட்சி சம்பிரதாயபூர்வ ஊடகங்கள் உள்வாங்கிக் கொள்ளாத அல்லது புறக்கணிக்கும் உள்ளடக்கங்களாக காணப்படுகிறது. ஆயினும் மேலாட்சி கருத்துக்களினால் மூடி மறைப்பதற்கு முயற்சி செய்யும் துன்பத்துக்கு ஆளாக்கப்பட்ட

அத்தகைய குரல்களின் ‘அரசியல் அர்த்தம்’ மீது கவனம் செலுத்துதலானது இலங்கைத் தேசத்தை மிகவும் ஜனநாயக பூமியாக மாற்றுவதற்கு இன்றியமையாதது என்பது எமது நம்பிக்கை ஆகும்.

**மதிப்பீட்டுக்கு உட்படல்**

எமது ஊடக அவகாசத்தின் ஊடாக வெளிப்படுத்தப்பட்ட உள்ளடக்கங்கள் தொடர்பாக சர்வதேச அமைப்புக்களினதும் கவனம் ஈர்க்கப்பட்டது. ஐக்கிய அமெரிக்க குடியரசை மையமாகக் கொண்டு இயங்கும் ‘பிரீடம் ஹவுஸ்’ அமைப்பு 2020 ல் ‘இணையத்தள சுதந்திரம்’ தொடர்பாக வெளியிட்ட Freedom of the Net 2020 எனப்படும் ஆண்டறிக்கையில் Vikalpa, Groundviews. Maatram இணையத்தளங்கள் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறது.

“பல்வேறு உள்ளடக்கங்களை பொதுவாக Online ஊடாக பெற்றுக் கொள்ள முடியும். சமூக ஊடகங்கள், தொடர்பாடல் களம் மற்றும் ‘ப்லொக்’ ஆகியவற்றை இலகுவாகவும் பரந்தளவிலும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் ஊடக நிலத்தோற்றத்தை பல்வகைப்படுத்தி உள்நாட்டில் விவாதிப்பதற்கான வாய்ப்புக்களைத் திறந்து விடச் செய்கிறது. தகவல்களை தணிக்கைக்கு உட்படுத்தும் ஒரு வரலாறு மற்றும் அறிக்கையிடப்படும் காலப் பிரிவுக்குள் இணையத்தில் நடவடிக்கை மேற்கொள்ளும் ஊடகவியலாளர்களை இலக்காகக் கொண்டு இடம்பெறும் பயமுறுத்தல்களுள் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் இணையம் மூலம் பல்வேறுபட்ட தகவல் மூலங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வசதி காணப்படுகிறது.”

“பிரதான நீரோட்டத்தில் உள்ள ஊடகங்கள் மூலம் புறக்கணிக்கப்படுகின்ற மக்களால் உருவாக்கப்பட்ட உள்ளடக்கங்கள் Vikalpa, Groundviews. Maatram போன்ற இணையத்தளங்கள் ஊடாக வெளியிடப்படுகின்றன.”

காணாமல் ஆக்கப்படல், ஊடக அடக்குமுறை, மக்களின் காணி உரிமைகள் பறிக்கப்படல், இராணுவமயப்படுத்தல், அரசியல் கைதிகள் தொடர்பான பிரச்சினை, உள்நாட்டில் அகதிளாக்கப்பட்டோர், மலையக பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகள், 2009 யுத்தத்தின் பின்னர் இலங்கை முஸ்லிம் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை உள்ளிட்ட யுத்தத்திற்குப் பின்னர் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படல் போன்றே அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட துன்புறுத்தல்கள் மற்றும் பாகுபாடு காட்டுதல் போன்றவை தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துதல் மேற்குறிப்பிடப்பட்ட சூழ்நிலையில் எமது வேலைத்தளத்தின் ஒரு பிரதான செயற்பாடாக காணப்பட்டது. அந்த வேலைத்தளத்தில் காணப்பட்ட பிரதான அடையாளங்கள் அனைத்தையும் ஒரு மேடைக்கு கொண்டு வருவதற்கு எம்மால் முடிந்தது. அதுவே Unframed புகைப்படக் கண்காட்சி ஆகும். (htt://unframedsl.org) 2018 ஜனவரி மாதம் மக்களுக்காக திறந்து விடப்பட்ட Unframed புகைப்படக் கண்காட்சியானது இலங்கையின் பல மாவட்டங்களில் ‘யுத்தத்துக்குப் பின்னர் இலங்கையில் நீதிக்கும் வாழ்வுக்கும்’ எனும் தலைப்பினை அடிப்படையாகக் கொண்டு தனது அனுபவங்களை மக்களிடம் கொண்டு சென்றது. அக் கண்காட்சியினை அறிமுகம் செய்த போது நாம் இவ்வாறு எழுதி வைத்தோம்.

ஆகவே போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்குரிய நீதியினை வேண்டி ஒரே அணியில் திரண்டு செயற்படுமாறு இச் சந்தர்ப்பத்தில் நாங்கள் உங்களுக்கு யோசனை தெரிவித்துக் கொள்வதுடன், உங்களை வற்புறுத்தியும் கேட்டுக் கொள்கின்றோம். நீதி வேண்டுமென அன்புள்ளம் கொண்ட மேலும் ஆயிரக் கணக்கான அமைதி காக்கும் மக்களிடம் நாம் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். அவ்வாறான அன்புள்ளம் கொண்டவர்களுடன் இணைந்து நீதிக்காக போராடுவோம். இறுதி மூச்சு வரைக்கும் போராடுவோம். அன்றைய நாள் நீதியினதும் அன்பினது நற்செய்தி எம் காதில் ஒலிக்கும். நாகரிகமான ஓர் இலங்கைக்கான அந்த முயற்சியின் மீது எப்போதும் போன்றே இனவாதிகள் சமூக ஊடகங்கள் வாயிலாக பாரியதொரு தாக்குதலை மேற்கொண்டார்கள். அவ்வாறான தாக்குதலின் ஒரு நீடிப்பாக புதிய கலாசார வெளியீடுகள் மற்றும் சுதந்திரமாக கருத்துரை தெரிவிப்பதற்கான ஒரு களமாகக் காணப்பட்ட பேராதனை பல்கலைக்கழகத்தில் Unframed புகைப்படக் கண்காட்சி தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டது. நீதியினையும் வாழ்க்கையினையும் கோரி நிற்கும் புகைப்படங்கள் மற்றும் கருத்துக்களில் பொதிந்துள்ள உள்ளார்ந்த மனவெழுச்சி இனவாதிகளின் மனங்களில் ஏற்படுத்திய தாக்கம் காரணமாக அவ்வாறு தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டது என நாம் நம்புகின்றோம். ஆயினும் பெரும்பாலான இடங்களில் அன்புள்ளம் கொண்ட மனிதர்கள் நீதிக்கான போராட்டத்திற்கு நல்லாசி தெரிவித்தவர்களாக அப் புகைப்படங்களுடன் ஒன்றுகலந்தார்கள்.

அவ்வாறே ‘விகல்ப’ இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண்டுகள் கடந்து சென்றுள்ள இவ் வேளையில் எம்மைப் போன்றே இலங்கையில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் சமூக ஊடக மேடைகளை தமது முக்கியமான

ஓர் அவகாசமாக மாற்றி மிக வேகமாக செயற்பட்டு வருகின்றார்கள். சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி எண்ணிக்கையில் குறைவாக உள்ள சிறுபான்மை இன மக்களைத் துன்புறுத்துதல், தனிச்சிறப்பு வாய்ந்த அடையாளத்தைக் கொண்ட சமூகப் பிரிவினரைத் துன்புறுத்துதல் மற்றும் அவர்கள் மீது பாகுபாடு காட்டுதல் ஆகியன மிக வேகமாக விருத்தியடைந்து சென்றன. அதன் காரணமாக அவ்வாறு அழுத்தம் பிரயோகிக்கும் பிற்போக்கான செயற்பாடுகள் காரணமாக அது வன்முறைக்கு இட்டுச் சென்றது. மனித உயிர்கள் மட்டுமன்றி சொத்துக்களும் இழக்கப்பட்டது. அதற்கு சிலசமயம் அரசாங்கங்களின் ஆதரவும் கிடைத்ததாக கருதப்பட்டது. இணையத்தள அவகாசம் மற்றும் சமூக ஊடக மேடைகளுக்கு இலங்கையில் தடை விதிப்பதற்கும் சில சமயங்களில் ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். இந்த நிலைமையினைப் பகுப்பாய்வு செய்து சுமார் 2 ஆண்டுகள் இலங்கை முழுவதும் 19 அமைப்புக்களின் பங்களிப்புடன் பல்வேறு கலந்துரையாடல்கள் மற்றும் உரையாடல்கள் ஊடாக முதற் தடவையாக சமூக ஊடக வெளியீட்டினை வெளியிட்டு வைப்பதற்கு 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் எம்மால் முடிந்தது. (www.socialmedialank.org)

'பொறுப்புணர்ச்சியுள்ள சமூக ஊடகப் பாவனைக்கான வழிகாட்டித் தொடர்' எனும் தலைப்பில் சமூகமயப்படுத்தப்பட்ட அந்த வெளியீட்டின் அடிப்படைக் கருப்பொருள் பற்றி நாம் இவ்வாறு எழுதி வைத்தோம்.

'அரசாங்கங்கள் மற்றும் சமூக ஊடகக் கம்பனிகள் உள்ளிட்ட ஏனைய நிறுவனங்கள் சமூக ஊடகங்களை முறைகேடாகப் பாவித்தலைக் கட்டுப்படுத்துவதற்கு கடுமையான பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றன. அவ்வாறு செய்வதும் அபாயகரமானதாக அமைவதற்கான காரணம் யாதெனில், அதன் மூலம் ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் போலியான தகவல்கள் பற்றிய அச்சுறுத்தல்களை உதாரணமாக எடுத்து தனக்கே உரிய டிஜிடல் பிரச்சார பொறிமுறையினை உருவாக்குவதற்கு அல்லது புதிய சட்டங்களை உருவாக்கி தமக்கு எதிரான கருத்துக்களை மூடிமறைப்பதற்கான சந்தர்ப்பத்தினை உருவாக்க முடியும் என்பதனால் ஆகும்.

இந்த வெளியீடானது சமூக ஊடகங்களில் அல்லது சமூக ஊடகங்களைப் பொருத்த வரையில் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்தில் காணப்படும் மீறப்பட முடியாத முக்கியத்துவத்தினை இனம் காண்பதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சியாக உள்ளதுடன் ஒழுக்கவிழுமியம், முற்போக்குத் தன்மை, ஜனநாயகம், மனித உரிமைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதும் சமூகப் பொறுப்புள்ளதுமான சமூக ஊடகங்களை உற்சாகப்படுத்தலும் பலப்படுத்தலும் ஆகும்.."

பொறுப்புணர்ச்சி உள்ள சமூக ஊடகப் பாவனைக்காக அனைவருக்குமான டிஜிடல் எழுத்தறிவுடன் தகவல்களை சமூகத்துக்கு எடுத்துரைப்பதற்கான உரிமையினை உறுதி செய்து சமூக ஊடகங்களை எதிர்மறை ரீதியாக பயன்படுத்தக் கூடிய சாத்தியங்களைப் புறக்கணித்து, சமூக நீதி, மனித கௌரவம் உள்ளிட்ட மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட உயர்வான மானுட சமுதாயப் பண்பினை பாதுகாக்கும் சமூக ஊடக சமூகத்தை உற்சாகப்படுத்தல் அதனது முக்கிய நோக்கம் ஆகும்.

### புதிய சவால்கள்

கொவிட் பெருந்தொற்றைத் தொடர்ந்து இன்று உலகம் முழுவதும் கருத்துப் பரிமாற்றம் செய்தல், கலந்துரையாடல்கள், உரையாடல்கள் உள்ளிட்ட பெரும்பாலான செயற்பாடுகள் நிகழ்நிலை (ஒன்லைன்) முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ள ஒரு காலகட்டத்தில் இந்த வெளியீடு மீதும் தற்போது குறிப்பிடத்தக்க அளவு கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. இலங்கையில் சமூக ஊடகங்களுக்கான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் அடிக்கடி ஆட்சியாளர்கள் பக்கத்தில் இருந்து செவிமடுக்கக் கூடியதாக உள்ள ஒரு யுகத்தில் இதன் பெறுமதி உயர்வடையக் கூடும். அவ்வாறே சிவில் சமூகமும் பெருமளவு ஆர்வத்தினை தனது சமூக ஊடக மேடைகளுக்காக வழங்கி உள்ள ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறான ஒரு வெளியீடு அல்லது இவ்வாறான ஒரு வெளியீட்டின் முக்கியத்துவம், வெளியீட்டுச் சுதந்திரம், டிஜிடல் உரிமைகள் மற்றும் ஜனநாயக ரீதியில் எமது சமூகத்துக்கு பயனளிக்கக் கூடும். அதற்கு முன்னோடியாக இருப்பதற்கு முடிந்தமையும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனது 25 ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இச் சந்தர்ப்பத்தில் அதன் ஊடகப் பிரிவு மகிழ்ச்சியடையக் கூடிய ஒரு விடயம் ஆகும்.

அவ்வாறே சமூக ஊடக அறிவு, இணையவழிப் பாதுகாப்பு, போன்ற பாடங்கள் தொடர்பாக இலங்கையின் பிரதேச ரீதியில் செயற்படும் ஊடகவியலாளர்கள், சிவில் அமைப்பு செயற்பாட்டாளர்களை பயிற்றுவித்தலும் கடந்த காலங்களில் எம்மால் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஒன்லைன் ஊடகம் பற்றிய புதிய போக்குகள் தொடர்பான அறிவுள்ள ஒழுக்கவிழுமிய இணையவழி ஊடக செயற்பாட்டாளர் ஒருவரை உருவாக்குதல் அதன் அடிப்படைக் கருத்தாக அமைந்தது. ஒன்லைன் ஊடகம் தொடர்பாக உலகின் புதிய போக்குகள் மற்றும் எமது ஆராய்ச்சிகளை உள்நாட்டு மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்து அவர்களது இயலளவை விருத்தி செய்வதற்கு முயற்சி செய்தோம்.

அதன் போது கொழும்பை மையமாகக் கொண்ட மற்றும் கொழும்புக்கு வெளியில் உள்ள அமைப்புக்களுடன் இணைந்து அவர்களது செயற்பாடுகளுடன் தொடர்புடைய சமூக ஊடகங்கள் உள்ளிட்ட ஒன்லைன் அவகாசங்களைப் பயன்படுத்தல் தொடர்பான அறிவினை வழங்குவதற்கும் அந்த அமைப்புக்களுடன் வலைப்பின்னலை ஏற்படுத்தி செயற்படுவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. எவ்வாறாயினும் கடந்த காலங்கள் முழுவதும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பயிற்சிகளின் மூலம் கிடைக்கப்பெற்றுள்ள பயன்கள் தொடர்பாக தற்போதைய சமூக ஊடகப் பாவனை பற்றி அவதானிக்கின்ற போது எம்மால் அவ்வளவு தூரம் மகிழ்ச்சி கொள்ள முடியாதுள்ளது. ஆயினும் தனிப்பட்ட ரீதியில் பார்க்கின்ற போது சமூக ஊடகங்களினால் மாத்திரம் இவ்வாறான பிற்போக்குவாத போக்கு நீங்க மாட்டாது என நாம் நம்புகிறோம். இலங்கையில் ஊடகப் பாவனை, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் ஆகியன மீது துருவப்படுத்தப்படல் தாக்கம் செலுத்தி உள்ளது.

எவ்வாறாயினும் 2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படட 'விகல்ப' இணையத்தளத்தின் (www.vikalpa.org) வேலைத்தளம் பிரதானமாக இணையவழி வெளியாக அமைந்தது. அங்கு ஒன்லைன் ஊடக செயற்பாட்டில் உள்ள நவீன தொழில்நுட்பக் கருவிகளை உள்நாட்டு மொழிகளில் அறிமுகப்படுத்தல், அவற்றின் பயன்பாடு, உள்ளடக்கம் ஊடாக சமூகமயப்படுத்தலும் தனிச் சிறப்பு வாய்ந்த ஓர் அம்சம் ஆகும். அவ்வாறே எமது உள்ளடக்க உருவாக்கத்தின் போதான ஜனநாயகம், மனித உரிமைகள் தொடர்பான போராட்டங்களை மேம்படுத்துவதில் தலையிடுவற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. விசேடமாக கடந்த காலங்கள் முழுவதும் வெகுசன ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அநியாயங்களுக்கு நியாயம் வழங்குதல் தொடர்பான போராட்டங்களுக்கு பங்களிப்புச் செய்யப்பட்டது. சில சமயங்களில் நியாயத்தைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாடுகளை ஏற்பாடு செய்வதற்கும் முன் நின்றது. வடக்கிலும் சரி தெற்கிலும் சரி காணாமல் ஆக்கப்பட்டோர், காணிகளை இழந்தவர்களின் போராட்டங்களுக்கு பங்களிப்புச் செய்யப்பட்டது. தலை தூக்கி இருந்த இனவாதப் போக்குகளுக்கு எதிராக நிலவிய கூட்டுப் போராட்டங்களுக்கு நேரடியாக பங்களிப்புச் செய்தது. 2009 இல் ஓய்ந்த யுத்தத்துக்குப் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கில் பாதிக்கப்பட்ட மனிதர்களின் உரிமைகள் மீறப்படல் மற்றும் அரசியல், சமூக அபிலாஷை களை தனது ஊடக வெளியில் நாட்டுக்கும் உலகிற்கும் எடுத்துரைத்தது. சமூக ஊடக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்களை கைது செய்யும் போது, அவர்களுக்குரிய நீதிக்காக முன் வந்தது. குரலற்றுக் காணப்பட்ட பாதிக்கப்பட்ட மக்களுக்காக தனது ஊடக செயன்முறையினை முன்னெடுப்பதற்கு இயன்றளவு முயற்சி எடுக்கப்பட்டது. சில வேளைகளில் அச் செயற்பாடுகளின் போது விரக்தியுற்ற பாதுகாப்புப் பிரிவினரின் அச்சுறுத்தல்களுக்கும் ஆளாக நேர்ந்தது. எவ்வாறாயினும் அவ்வாறான சவால்களுக்கு மத்தியிலும் பானம, பதுளை, மொனராகலை, அம்பாறை போன்ற பிரதேசங்கள் முதல் வவுனியா, மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணம் வரையான கூட்டிணைந்த மக்கள் வெளிகளின் அகிம்சை வழிப் போராட்டம் 'விகல்ப' இணையத்தளத்தின் பிரதானமான ஒரு வேலைத்தளமாக காணப்பட்டது. நீதி, உரிமைகளைக் கோரி வீதிகள் முதல் தொலை தூர கிராமங்கள் வரை 'விகல்ப' மக்கள் ஊடக செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. அவ்வாறே 'விகல்ப ஊடகப் பாவனை' மனிதர்களின் உரிமைகளுக்கான போராட்டங்கள் மூலம் இடம்பெயராத ஒரு செயன்முறையாக அமைந்தது. அது மனிதர்களுடன் இணைந்து மனிதர்களின் அகிம்சைவழிப் போராட்டங்களின் போது தலையீடு செய்தல் முதல் தனது ஊடக செயற்பாட்டை முன்னெடுத்த ஒரு மக்கள் ஊடக செயன்முறை ஆகும். அதன் காரணமாகவே சமூக ஊடக வெளியில் கடுமையான அநாகரிகமான பயமுறுத்தல்கள் உள்ளிட்ட அழுத்தங்களுக்கு ஆளாகியது. சமூக ஊடகங்களுக்கு அப்பால் சென்று களத்தில் ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தல்களையும் மறக்க முடியாது. ஆயினும் மிகச் சிறந்த சமூகத்துக்கான ஊடக செயன்முறை காரணமாக 'விகல்ப' இணையத்தளம் விருதுகளைப் பெற்றுக் கொண்டது. அவ்வாறே Groundviews மற்றும் "மாற்றம்" சகோதர இணையத்தளத்தினாலும் விருதுகளைப் பெற முடிந்ததனையிட்டு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனது 25 ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இச் சந்தர்ப்பத்தில் அதன் ஊடகப் பிரிவு என்ற ரீதியில் நாம் பெரிதும் பெருமையடைகின்றோம்.

### மையப் பெறுமானங்கள்

எவ்வாறாயினும் 'விகல்ப' இணையத்தளம் மற்றும் ஊடகப் பிரிவுக்கு இவ்வாறான பல ஆண்டுகள் முழுவதும் அழுத்தம் பிரயோகிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட முடியுமாக இருந்த ஒரு பிரதான விடயத்தினை 25 ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்தின் போது கட்டாயம் எழுதி வைக்கப்படல் வேண்டும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் காணப்படும்

மையப் பெறுமானமே அதுவாகும். விசேடமாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் காணப்படும் வேலைக் கலாசாரம், சுதந்திரமாக கருத்துரைத்தல் மற்றும் சுதந்திர சிந்தனைக்கான சந்தர்ப்பம், விருத்தியடைந்த உள்ளக கலாசாரம் ஆகியன காரணமாக இவ் அனைத்து விடயங்களையும் இவ்வாறு மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அவ்வாறு இடம்பெறாது விடின் பிரதிபலன்கள் அற்ற 'வேலைகள் மட்டும்' மீதியாக இருந்திருக்கும். அவ்வாறில்லாது 'கூட்டிணைந்த மனித வெளிகளின்' உரிமைகளுக்காக தெரிபட்டு அதன் உட்புறத்தில் நின்று தனது ஊடக செயன்முறையினை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கப் பெறல் 25 வயதுடைய மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வயதில் அரைவாசிக்கும் மேல் செயற்பட்டுள்ள நான் மாசற்ற மனதுடன் பெருமையடைகின்றேன். அவ்வாறு இருந்தாலும் தற்போது எம் முன்னிலையில் பல சவால்கள் உள்ளன என நான் கருதுகின்றேன்.

2009 ஆம் ஆண்டு மே மாதத்துடன் நிறைவு செய்யப்பட்ட யுத்தம் முடிவடைந்து 12 ஆண்டுகள் நெருங்கி உள்ளது. ஆனாலும் யுத்தத்திற்கு நேரடியாக இறையாக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்கள் உள்ளிட்ட இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை நீதி நிலை நாட்டப்படவில்லை. யுத்தத்துக்குப் பின்னர் தெற்கின் சில பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைகள் காரணமாக பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு நீதி நிலைநாட்டப்படுவதாகத் தெரியவில்லை. அவ்வாறே சிலாபம், கட்டுநாயக்க, ரதுபஸ்வல உள்ளிட்ட பிரதேசங்களில் இடம்பெற்ற அமைதிவழி எதிர்ப்புப் போராட்டங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய நியாயம் வழங்கப்படவில்லை. இங்கு ஒருசில விடயங்கள் மாத்திரம் குறிப்பிடப்பட்டன. ஆகவே இலங்கையில் 'உள்ளக நீதி' நிலைநாட்டப்படுவதற்கான செயன்முறை தற்போது பின்னோக்கி பயணித்துள்ளதென்ற ஓர் உணர்வு நிலவுகிறது.

அவ்வாறே சமூக ஊடகத்துக்கான புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தும் முயற்சிகள் தொடர்பாக தற்போதைய அரசாங்கம் கூறி வருவதுடன் இலங்கையில் பெரும்பாலான ஊடகங்கள் தனது இனவாதப் போக்கினை மிகவும் கீழ்த்தரமான முறையில் காட்சிப்படுத்தி வருகின்றன. இவ் அனைத்து நிலைமைகளினாலும் மேலும் சுருங்கி விடுவது, ஜனநாயகம் ஆகும். மக்களின் கருத்துச் சுதந்திரம் ஆகும். ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது நாகரிகமடைந்த ஒரு சமூகத்துக்கு இன்றியமையாத ஜனநாயக விழுமியங்கள் ஆகும். ஆகவே இவ் அனைத்து அநீதிகள், பிரச்சினைகளை அணுகி நாகரிகமான முறையில் அமைந்த ஒரு பதிலைக் கண்டறிவதற்காக மக்கள் மற்றும் இலங்கையின் சிவில் அமைப்புக்கள் தந்திரோபாயமான முறையில் தலையீடு செய்தல் இன்றியமையாத ஒரு விடயம் ஆகும். ஆகவே, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் எமக்கு 25 ஆண்டுகால வரலாற்றை விடவும் பலம் மிக்கதாக ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாப்பதற்கும் அதனை மறுசீரமைப்பதற்குமான பங்களிப்பினை வழங்குதல் இன்றியமையாத ஒரு சவாலாக உள்ளது. அவ்வாறே இலங்கைச் சமூகம் திரும்பத் திரும்ப கோருகின்ற 'உள்ளக நீதி' யினை அடைந்து கொள்வதற்காகவும் ஆழமான மற்றும் பரந்துபட்ட ரீதியில் தலையீட்டினை மேற்கொள்வதும் எமக்கு இன்றியமையாதது ஆகும்.

"எமது நாட்டைப் போன்றே உங்களது நாட்டிலும் இனவாதத்துக்கு எதிரான போராட்டத்தின் மூலம் கற்றுக் கொள்ளக்கூடிய பாடம் என்னவெனில், இனவாதம் விமர்சன ரீதியாக பொறுத்துக் கொள்ள வேண்டிய ஒரு விடயம் அல்ல என்பதுடன் அது உணர்வுபூர்வமாக தோற்கடிக்கப்பட வேண்டிய ஒன்று என்பது ஆகும். அவ்வாறே மக்களின் மனித உரிமைகள் நிராகரிக்கப்படல் என்பது அது அவர்களின் மனிதத் தன்மைக்கு சவால் விடுத்தல் ஆகும்." என நெல்சன் மண்டேலா ஒரு முறை குறிப்பிட்டுள்ளார். நெல்சன் மண்டேலாவின் இக் கூற்று இலங்கைக்கு இன்றும் கூட பொருந்தமானதாகவே உள்ளது.


ஆகவே 'லிபரல் ஜனநாயக' விழுமியங்களுக்கான செயலூக்கமான தலையீடானது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கடந்த 25 ஆண்டுகளை விடவும் இன்றும் எதிர்காலத்திலும் புதிய தந்திரோபாய வழிமுறைகளுடன் இணைந்த ஓர் அத்தியாவசிய காரணியாக அமையும்.

---

**சம்பத் சமரகோன்**

'விகல்ப' இணையதளத்தின் பதிப்பாசிரியர். ஊடகவியலாளர். சிவில் சமூகச் செயற்பாட்டாளர்.

# ‘மாற்றம்’: மாற்றுக் கருத்தியலுக்கான இடமும் வேறுபட்ட ஊடகப்பாணியும்



**செல்வராஜா ராஜசேகர்**

1996ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்ட மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இந்த வருடம் வெள்ளி விழா காண்கிறது. இது, இலங்கையில் நல்லாட்சி மற்றும் முரண்பாடுகளைத் தீர்க்கும் செயற்பாடுகள் என்பவற்றை வலுப்படுத்துவதற்கான தேவை எழுந்துள்ளது என்ற திடமான நம்பிக்கையுடனும், இந்த செயல்முறையைக் கட்டியெழுப்புவதில் குடிமக்களும் முக்கியமான பங்கை வகிக்கவேண்டும் என்ற குறிக்கோளுடனும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

அத்தோடு, பொதுக் கொள்கைகள் தொடர்பில் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல், மாற்று வழிகளை இனங்காணல் மற்றும் அதை விரிவாக்குதல் குறித்த ஆய்வு மற்றும் அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை முன்னிலைப்படுத்திய பணிகளை மேற்கொண்டது. இருந்தபோதிலும், நாட்டில் நிலவிவந்த நிறக்குருட்டு ஊடக கலாசாரத்தினால் வெறுப்படைந்திருந்த மக்களின் மாற்று அபிப்பிராயங்களை - மாற்றுக் கருத்தியலை வெளிப்படுத்தக்கூடிய தளமொன்றிற்கான வெற்றிடமொன்று இருப்பதை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அடையாளம் கண்டது.

இந்த இடைவெளியை நிரப்பும் விதமாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் 2006ஆம் ஆண்டு சஞ்சன ஹத்தொட்டுவவின் தலைமையில் இணையத்தை அடிப்படையாகக் கொண்ட மக்கள் ஊடகமாக ‘Groundviews’ ஆங்கில இணையதளம் ஆரம்பிக்கப்பட்டது. இது இலங்கையில் முதலாவது ‘பிரஜைகளுக்கான ஊடக இணையதளம்’ ஆகும். அதன் தொடர்ச்சியாக ‘விகல்ப’ என்ற பெயரில் சிங்கள இணையத்தளமும் ஆரம்பிக்கப்பட்டது. ‘விகல்ப’ இணையத்தளம் தமிழ் மொழியில் அமைந்த சில கட்டுரைகளையும் வெளியிட்டது.

ஆனால், தமிழ் மொழியில் அமைந்த மாற்றுக் கருத்துக்களைக் கொண்ட காத்திரமான எழுத்தாக்கங்கள் மற்றும் படைப்புகளை வெளியிடுவதற்கான அவசியம் இருந்தபோதிலும், தமிழ் தளமொன்றின் குறைபாடு கண்டறியப்பட்டது.

இந்தப் பின்னணியில் 2014ஆம் ஆண்டு ஜுலை மாதம் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்துவின் ஆலோசனையுடனும் சஞ்சன ஹத்தொட்டுவவின் வழிகாட்டுதலுடனும் இலங்கையில் முதலாவது தமிழ் மொழியிலான பிரஜைகளுக்கான ஊடக இணையதளம் 'மாற்றம்' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், ஆட்சிமுறைமை, மனித உரிமைகள், கலை மற்றும் இலக்கியம் மற்றும் ஏனைய விடயங்கள் மீதான மாற்றுக் கருத்தியலை வேறுபட்ட படைப்பாற்றல் மற்றும் ஊடகப் பாணிகளின் மூலமாக தமிழ் மொழியில் வெளிப்படுத்துவதற்கு 'மாற்றம்' திடசங்கட்பம் கொண்டது. அதேசமயம், எல்லா சந்தர்ப்பங்களிலும் ஊடக ஒழுக்கநெறியின் அடிப்படையிலேயே செயற்படவும் 'மாற்றம்' உறுதிபூண்டது.

'மாற்றம்' வரித்துக்கொண்ட இந்த நெறிமுறைகளுக்கு அமைய கடந்த ஏழு வருடங்களுள் அது இணையதளத்தையும், மையநீரோட்ட ஊடகத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஊடகத்துறையில் பல்வேறு சாதனைகளைப் புரிந்துள்ளது. அவற்றுள் சிலவற்றை கீழே காணலாம்.

'மாற்றம்' ஆரம்பித்துவைக்கப்பட்ட அன்றே இலங்கை இணையத்தள பரப்பில் புதிய புரட்சியை ஏற்படுத்தியிருந்தது. அதுவரை தமிழ் மொழியில் மாத்திரமன்றி வேறெந்த மொழியிலும் உருவாக்கப்பட்டிராத 'மைக்ரோ' தளத்தினூடாக (Micro site - https://maatram.org/unfinishedwar) மக்களின் பிரச்சினைகளை புதுப் பாணியில் வெளிகொண்டுவந்திருந்தது. போர் ஓய்ந்து 5 வருடங்கள் கடந்திருந்த நிலையில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 'மாற்றம்', "முடிவுறாத யுத்தம்" என்ற தலைப்பில் அந்தத் தளத்தை வெளியிட்டிருந்தது. பல சவால்களுக்கு மத்தியில் களத்துக்குச் சென்று மக்களின் இடம்பெயர்வு, காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் எதிர்நோக்கிவரும் இன்னல்கள், இராணுவமயமாக்கம், காணி அபகரிப்புகள் குறித்து மல்டிமீடியா வடிவில் சாட்சியங்களுடன் கூடிய கட்டுரைகளை வெளியிட்டிருந்தது.

இலங்கையில் இன்று இணையத்தளத்தில் ஒரு கட்டுரையை / படைப்பை வெளியிடுவதற்கு பல்வேறு முறைமைகள் காணப்பட்டுகின்ற போதிலும் அவற்றுக்கெல்லாம் முன்னோடியாக இந்த 'மைக்ரோ' தளம் காணப்படுகிறது.

**குரலற்றவர்களின் குரலாக**

சமூகத்தில் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளாகும் பால்புதுமையினர், முஸ்லிம் தனியாள் சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள், போரினால் பாதிக்கப்பட்டவர்கள் என 'மாற்றம்' பல்வேறு தரப்பினரின் குரல்களுக்கு தனியிடத்தை வழங்கியே வந்துகொண்டிருக்கின்றது. குறிப்பாக, 200 வருடங்களுக்கும் மேலாக இலங்கையின் பொருளாதாரத்தைத் தாங்கிப் பிடித்துவரும் மலையகத் தமிழர் சமூகமானது தேசிய நீரோட்டத்தில் இருந்து நீண்டகாலமாகவே விலக்கி வைக்கப்பட்டுள்ளது குறித்து தொடர்ந்து காத்திரமான வகையில் கேள்வி எழுப்பிக்கொண்டே வருகிறது.

வெறுமனே அம்மக்களின் பிரச்சினைகளை நுனிப்புல் மேயாமல் ஆழமாக ஆராய்ந்து எவ்வாறு ஆட்சிக்கு வரும் அத்தனை ஆட்சியாளர்களினாலும், அவர்களை ஆள்வதாகக் கூறிக்கொள்பவர்களாலும் தொடர்ந்து ஏமாற்றப்படுகிறார்கள் என்பதை வெளிச்சம் போட்டு காட்டியிருக்கிறது. குறிப்பாக, தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடுவதாகக் கூறிக்கொண்டு தொழிற்சங்கங்களால் வருடமொன்றுக்கு கோடிக்கணக்கில் வசூலிக்கப்படும் சந்தாப் பண விவரத்தை தகவல் அறியும் உரிமை சட்டத்தைப் பயன்படுத்தி 'மாற்றம்' அம்பலப்படுத்தியிருந்தது https://maatram.org/?p=7654.

அதேபோல, இலங்கையில் தேயிலை உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டு 150 வருட நிறைவு கொண்டாட்டம் 2017ஆம் ஆண்டு இடம்பெற்றபோது பரம்பரை பரம்பரையாக உழைத்து தேயிலைச்செடிகளுக்கு உரமாகிக் கொண்டிருக்கும் ஒரு தொழிலாளி கூட அழைக்கப்படாமை குறித்து 'மாற்றம்' விசேட கவனத்தை செலுத்தியிருந்தது. இது தொடர்பாக வெளியிடப்பட்ட படைப்புகளுள் "வலிச்சா வெளக்கெண்ணதான் மருந்து" என்ற புகைப்படக் கட்டுரை (https://maatram.org/?p=6260) உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச அளவிலான இணைய இதழ்களிலும் வெளியாகி அதிக கவனத்தைப் பெற்றிருந்தது.

இலங்கையில் ஒட்டுமொத்த தேயிலைப் பயிர்செய்கை நிலத்தில் 70 சதவீதம் பெருந்தோட்டமாகவும் 30 சதவீதம் சிறுதோட்டங்களாகவும் இருக்கிறது. ஏற்றுமதி வருமானத்தைப் பொறுத்தவரை, 75 சதவீதமான தேயிலை ஏற்றுமதி வருமானம் 99.9 சதவீதமான சிங்களவர்களை உரிமையாளர்களாகக் கொண்ட 30 சதவீதமான சிறுதோட்டங்களில் இருந்துதான் வருகிறது. 25 சதவீதமான வருமானம் 70 சதவீதமாக இருக்கும் பெருந்தோட்டங்களில் (99.9 சதவீதமான மலையகத் தமிழர்கள்) இருந்து வருகிறது. எனவே, மலையகத் தமிழர்களை தொடர்ச்சியாக கூலிகளாக வைத்திருப்பது, வருமானத்தை முடக்குவது, வாழ்வாதாரத்தை அப்படியே வைத்திருப்பது இதன் பின்னால் இருக்கும் பாரிய அரசியல் சித்தாந்தமாகும். 'மாற்றம்' இது குறித்து அவதானம் செலுத்திவருவதுடன் மலையக தோட்டத் தொழிலாளர்களையும் சிறுதோட்ட உடமையாளர்களாக்குவதற்கான கருத்தாடலை உயிரோட்டத்துடன் வைத்திருக்கவும் செய்கிறது.

முஸ்லிம் தனியாள் சட்டத்தால் பாரபட்சமாக நடாத்தப்படுபவர்களின் குரல்களுக்கு - அந்தச் சட்டம் திருத்தப்படவேண்டும் என்ற தேவைப்பாடு குறித்து ஊடகங்கள் பெரிதாக

கண்டுகொள்ளாத காலப்பகுதியில், அதற்கான இடத்தை 'மாற்றம்' வழங்கியிருந்தது, வழங்கிக் கொண்டிருக்கிறது. "MMDA: நீதியைத் தேடும் பெண்கள்" என்ற தலைப்பில் முஸ்லிம் தனியாள் சட்டத்தால் பாதிக்கப்பட்ட 12 பெண்களின் நேர்க்காணல்கள் (வீடியோ - https://maatram.org/?p=5248) 'மாற்றம்' தளத்தில் வெளியாகியிருந்தது. அதுவரை எந்த ஒரு ஊடகத்திலும் பாதிக்கப்பட்ட பெண்களின் குரல்கள் வெளியாகியிருக்கவில்லை. இந்த வீடியோப் பதிவுகள் வெளியாகியதன் மூலம் / பெண்களின் குரல்களை செவிமடுத்ததன் மூலம் முஸ்லிம் தனியாள் சட்டம் திருத்தப்படவேண்டும் என்ற அழுத்தம் இன்னும் வலுவடைந்தது என்று கூறலாம்.

**காணாமலாக்கப்பட்டோரின் கதைகளுக்கான இடம்**

கடந்த 7 வருடங்களாக 'மாற்றம்' வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுடைய உறவுகளுடன் பயணித்தே வந்திருக்கிறது. அவர்கள் எதிர்நோக்கும் இன்னல்களை பல்வேறு வடிவில் பதிவுசெய்துவந்திருக்கிறது. சர்வதேச தினம், ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், ஞாபகப்படுத்தல்கள் என அவர்களுடனேயே பயணித்துக்கொண்டிருக்கும் 'மாற்றம்', நீதியை அடைவதற்கான நீண்ட போராட்டத்தில் எந்தவித விட்டுக்கொடுப்புகளுக்கும் இடமில்லாமல் பாதிக்கப்பட்டவர்களின் பக்கமே இருக்கும். கடந்த ஏழு வருடங்களாக காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதிவேண்டி எண்ணற்ற படைப்புகளை 'மாற்றம்' வெளியிட்டிருக்கிறது. அவற்றுள் குறிப்பிட்டுக் கூறக்கூடிய, அதிக கவனத்தைப் பெற்ற சில பதிவுகள்:

காணாமலாக்கப்பட்டவர்களுடைய ஞாபகார்த்தமாக இருக்கும் பொருட்களைக் கொண்டு, 2017ஆம் ஆண்டு "உறவுகளும் நினைவுகளும் (பாகம் 01 - https://maatram.org/?p=5937 மற்றும் பாகம் 02 - https://maatram.org/?p=5975)" என்கிற தலைப்பில் வெளியாகிய படைப்பு பல்வேறு தரப்பினரின் கவனத்தை ஈர்த்தது. தங்களுடைய அன்புக்குரியவர்கள் வரும்வரை அவர்கள் பயன்படுத்திய, அவர்களுடைய நினைவுகளை சுமந்திருக்கும் பொருட்களுடன் வாழ்ந்துகொண்டிருக்கும் உறவுகளுடைய ஆழ் மன இடுக்குகளில் இறுகிக் கிடக்கும் வலிகளை வெளிக்கொணர்ந்த பதிவு இது. இந்தப் பதிவு Groundviews தளம் உட்பட சர்வதேச தளங்களிலும் வெளியாகியிருந்தது.

இறுதிப் போரின்போது காணாமலாக்கப்பட்ட தனது பேரன் எங்கிருக்கிறான் என்பதை அறிவதற்காக வயது முதிர்ச்சியையும் பாராது





பல்வேறு போராட்டங்களுக்குப் போய்வந்த வயோதிபத் தாய் ஒருவர் மாற்றத்துடன் பகிர்ந்தவற்றை Virtual Reality முறை மூலம் பார்க்கக் கூடிய 360 வீடியோ வடிவில் (https://maatram.org/?p=7089) 'மாற்றம்' பதிவுசெய்திருந்தது. "நான் செத்த பிறகு பேரனை யார் ஐயா தேடுவாங்க" என்று கண்ணீர் கறையேறி கருப்பு வளையங்களைக் கொண்டிருந்த அந்தத் தாய் கேட்டது இன்னும் நினைவிருக்கிறது. இன்று அந்தத் தாய் உயிரோடு இல்லை. மக்களின் பிரச்சினைகளை குறிப்பாக காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் எதிர்நோக்கிவரும் இன்னல்களை வர்சுவல் ரியலிட்டி முறை மூலம் பார்க்கக் கூடிய வகையில் 360 வீடியோ வடிவில் 'மாற்றம்' தளமே இலங்கையில் முதல் தடவையாக பதிவுசெய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அதேபோல, இனம், மதம், பிரதேசம் பாராது காணாமலாக்கப்பட்டிருக்கும் தங்களுடைய உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்துகொள்வதற்காக காத்திருப்பவர்களின் வலியுணர்வில், கண்ணீரில், எதிர்பார்ப்பில் எந்த வித்தியாசமும் இல்லையென்பதை பதிவுசெய்வதற்காக, "ஒரு கேள்வி, இரு மனிதர்கள், ஒரே வலி" (https://maatram.org/?p=8065) என்ற புகைப்படக் கட்டுரை 2019ஆம் ஆண்டு வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான சர்வதேச தினமன்று வெளியாகியிருந்தது. இந்தக் கட்டுரையும் அனைவருடைய கவனத்தைப் பெற்றதுடன், பல தளங்களிலும் பிரசுரமாகியிருந்தது.

### கிடைக்கப்பெற்ற அங்கீகாரம்

இவ்வாறு 'மாற்றம்' பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பலதரப்பட்ட மக்களின் பிரச்சினைகளை வெளிகொண்டு வருவதற்கு களமமைத்து கொடுத்த காரணத்தினால் சர்வதேச தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் (International Association of Tamil Journalists) விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது.




பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் மக்களுக்குச் சரியான தகவல்கள் சென்றடைய வேண்டும் என்ற அவாவுடனும் துணிவோடும், அர்ப்பணிப்போடும் ஊடகப்பணியாற்றி வருபவர்களுக்கு, அவர்களை மாண்பேற்றும் வகையில் சர்வதேச தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் அதன் ஆசிரியருக்கு இந்த விருது கிடைக்கப்பெற்றது.

மக்களின் மாற்றுக் கருத்தியலுக்கு இடமளிப்பது, வேறுபட்ட படைப்பாற்றல் மற்றும் ஊடகப் பாணிகளின் மூலம் அவற்றை வெளிப்படுத்துவது, எல்லா சந்தர்ப்பங்களிலும் ஊடக ஒழுக்கநெறியின் அடிப்படையிலேயே செயற்படுவது என தான் வரித்துக்கொண்ட நெறிமுறைகளைக் கடைபிடிப்பதன் ஊடாக 'மாற்றம்' இலங்கை ஊடகத்துறையில் அடைந்திருக்கும் உச்சத்தையிட்டு பெருமிதம் கொள்கிறது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் 25 வருட நிறைவை பூர்த்தி செய்திருக்கும் இவ்வேளை அதன் குறிக்கோள்களை அடைவதில் மாற்றமும் கடந்த ஏழு வருடங்களாக தன்னுடைய பங்களிப்பை அளித்துவந்திருக்கிறது என்பதையிட்டு திருப்தியடைவதோடு 'மாற்றம்' மனமகிழ்வு கொள்கிறது.

நிறுவனமயப்பட்ட ஊடகத்துறையுடன் ஒப்பிடுகையில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் 'மாற்றம்'ஆனது மக்களின் மாற்றுக் கருத்தியலுக்கு இடம்கொடுப்பது மாத்திரமே தலையாய கடமையாகக் கொண்டு செயற்படுகின்றது. இதற்கான சூழலை ஏற்படுத்தித் தந்த பணிப்பாளருக்கு நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் 'மாற்றம்' பெருமிதம் கொள்கிறது.

---

**செல்வராஜா ராஜசேகர்**

ஆய்வாளர்/ஊடகவியலாளர், சிவில் சமூகச்செயற்பாட்டாளர், மாற்றம் இணையத்தின் ஆசிரியர்

# ஜனநாயகத்திற்கும் சர்வாதிகாரத்திற்கும் இடையேயான பாதுகாப்பு அரண்



ராதிகா குமாரசுவாமி

புராதன கிரேக்கத்திலிருந்து, அன்டோனியோ கிரம்ஸி வரையிலான சகல மாபெரும் சிந்தனையாளர்களும் துடிப்பான சிவில் சமூகம் ஒன்று இல்லாமல் பிரதிநிதித்துவ ஜனநாயகம் கருமப்படமுடியாதென்றும், அர்ப்பணவுணர்வுகொண்ட பிரஜைகளில்லாமல் துடிப்பான சிவில் சமூகமொன்று இருக்கமுடியாதென்றும் வாதிட்டுள்ளனர். உரிமைகள் குறித்த விழிப்புணர்வுகொண்ட, பிரக்ஞைமிக்க, தன்முனைப்பான குடிமக்கள் சில சந்தர்ப்பங்களில் ஜனநாயகத்துக்கும், சர்வாதிகாரத்துக்குமிடையிலான அடிதாங்கியாகவுள்ளனர்.

ஆயுதமோதல் மற்றும் அதற்குப்பின்னரான கடந்த சில தசாப்தங்களாக இலங்கை ஜனநாயகத்துக்கான பாரிய சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளது. 1990 களிலிருந்து, மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் (CPA) எமது ஜனநாயக நிறுவனங்கள் மற்றும் கட்டமைப்புகளின் பாதுகாவலனாக விளங்கி, இலங்கையில் துடிப்பான பிரஜைகளின் பாத்திரத்தை வகித்துவந்துள்ளது.

அவர்கள் இப்பாத்திரத்தை வகித்த முதனிலை வழிகளுள் ஒன்று வழக்குத்தொடரலாகும். CPA இலங்கை உயர் நீதிமன்றத்தில் எமது காலத்தின் அதிமுக்கியமான வழக்குகள் சிலவற்றில் சம்பந்தமுற்றுள்ளது. யுத்தகாலத்தின்போது சட்டவிரோதமாகத் தமிழ்க் குடிமக்களை வெளியேற்றியமை, 2018 “சதிப்புரட்சியின்போது” பாராளுமன்ற உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகள் மீறப்பட்டமை என்பவற்றுக்கெதிராகத் தொடுக்கப்பட்ட சில வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் ஆக்கபூர்வமன தீர்ப்புகளுக்கு வழிசெய்தன. அன்றிருந்த சூழ்நிலைகளின் பிரகாரம் உயர் நீதிமன்றம் வேறு பல வழக்குகளில் எதிர்மறையான தீர்ப்புகளையே வழங்கியது. ஆயினும், CPA யின் பரப்புரை காரணமாக, இந்த விவகாரங்கள் பொதுமக்கள் அரங்கில் வெளிவருவது உறுதிசெய்யப்பட்டது. அவர்கள் செய்திப்பத்திரிகைகளின் தலையங்கத்துக்கு எதிர்ப்பக்கங்களிலான அபிப்பிராய எடுத்துரைப்புகளிலும், விழிப்புணர்வை அதிகரிக்கும் செயலமர்வுகளிலும் இப்பிரசாரங்களை முன்னெடுத்தனர். அவற்றின் விளைவாக, ஜனநாயகம் குறித்த நீளுரையாடல் மிகவும் மோசமான காலப்பகுதிகளிலுங்கூட உயிரோட்டம் மிக்கதாகவிருந்தது.

CPA இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று வேண்டுமென்று வலியுறுத்திய ஒரு சில அமைப்புகளில் ஒன்றாக விளங்குகின்றது. யுத்தநிறுத்தக் காலப்பகுதியிலிருந்து, CPA பெரும்பான்மை மக்களின்

நலன்களைப் பாதுகாக்கும் அதேவேளையில், ஆட்புலச் சிறுபான்மையினங்களின் உரிமைகளை வழங்கும் வகையிலான மாற்று அதிகாரப்பகிர்வுப் பொதிகளை வகுத்தமைத்துவந்துள்ளது. யுத்தம் முடிவடைந்தபின்னர், அரசாங்கம் அதிகாரப்பகிர்வில் அக்கறையிழந்ததாகக் காணப்பட்டபோதிலும், நலன்பிரதிநிதிகளின் சமீபத்திய கூற்றுக்கள அதிகாரப்பகிர்வின் அடிப்படையிலான ஓர் அரசியல் தீர்வே முன்செல்வதற்கன ஒரேயொரு வழியாகும் என்பதைக் காண்பிக்கின்றன. CPA யினாலும், அதற்கு முன்னரான ICES அமைப்பினாலும் போடப்பட்ட அத்திவாரம் வரவிருக்கும் ஏதாவது பேச்சுவார்த்தைகளுக்கான அறிவாற்றல் அடிப்படையை வழங்கும்.

2000 ஆம் ஆண்டில், நீலன் திருச்செல்வத்தின் மறைவுக்குப் பின்னர், CPA அரசியலமைப்புக் குறித்த கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்களுக்கான பிரதான நிலையமாகியது. நிறைவேற்று ஜனதிபதி முறைமை, தேர்தல் செயல்முறையின் குணாம்சம், மற்றும் அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகளின் உள்ளடக்கம் குறித்த தீவிரமான கருத்துப்பரிமாற்றங்கள் இடம்பெற்றன. அடிப்படை உரிமைகளும், சுதந்திரங்களும் மேலும் அதிகரிக்கப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டதோடு, இந்த விவகாரங்கள் குறித்த நீளுரையாடலும், விவாதமும் அனேக சந்தர்ப்பங்களில் மிகவும் முன்னேற்றகரமான அபிவிருத்தி நிலையிலிருந்து மேற்கொள்ளப்பட்டன. முன்னணி அரசியலமைப்பு வழக்கறிஞர்களும், நீதித்துறை எழுத்தாளர்களும் இந்த உரையாடலில் பங்கேற்றனர். அரசியலமைப்புக் கட்டமைப்புகளை கட்டிடக்கலை வரைபடங்களுடன் தொடர்பிணைப்புச் செய்வதுபோன்ற ஆக்கபூர்வமான வழிமுறைகள் உறவுப்பாலங்களை உருவாக்கியதோடு, வழமையான சுற்றுவட்டங்களுக்கும்பப்பால், ஒரு தலைப்புக் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கும் வகையில் புதிய கற்பனை மார்க்கங்களையும் ஏற்படுத்தியது.

கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து ஒரு தாராளவாத ஜனநாயகச் சமூகத்தின் தளத்திலிருந்து கட்டியெழுப்பப்படும், ஆராய்ச்சியிலும், கொள்கைவகுப்பிலும் முன்னிலையில் விளங்கக்கூடிய ஒரு நிலையத்தை உருவாக்கும் இலட்சியத்தைக் கொண்டிருந்தார். CPA யில் பயிற்றுவிக்கப்பட்ட பல தனிநபர்கள் இன்று வேறு தொழில்சார் பதவிகளில் உள்ளனர். அவர்கள் தாம் பணியாற்றுமிடங்களில் ஒரு தாராளவாதச் செயல்முறையையும், அதிக ஜனநாயகத்துடன்கூடிய ஒழுக்கநெறிகளையும் வலியுறுத்துகின்றனர். இன்று இறுக்கமான தீர்மானங்களினூடாக சமூகங்களை வழிநடத்தும் பலம்வாய்ந்த மனிதர்களின் சக்திமிக்க எதிரோட்டங்களின் பின்னணியில், தீர்க்காலோசனை ஜனநாயகத் தத்துவம் முன்னெடுக்கும் ஒத்துழைப்பு மற்றும் கலந்தாலோசனை அணுகுமுறைக்குப் பல வழிகளிலும் நிச்சயமாகவே சவால்கள் காணப்படுகின்றன. மாற்றுநிலை, அதிகாரவாத, அதீத பொதுஜனவாத நீளுரையாடல்கள் மத்தியதர வர்க்கத்தினரைக் கவர்ந்துள்ள இத்தருணத்தில், கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவின் இலட்சியம் குடைசாய்க்கப்பட்டு. நேரடித் தாக்குதலுக்கும் உள்ளாக்கப்படுகின்றது. CPA யின் மகத்தான பங்களிப்பு தாராளவாத விழுமியங்களை உயிருடன் வைத்திருப்பதும், விட்டுக்கொடுப்புகளைச்செய்ய மறுப்பதும், இலங்கையின் அரசியல் வலயத்தில் தாராளவாத ஜனநாயகத்தைப் பராதீனப்படுத்த முடியாத பணிக்குறியாக வைத்திருப்பதுமாகும்.

CPA குறுகிய தேசியவதம மற்றும் அடிப்படைவாதம் என்பவற்றுக்குச் சவாலாக விளங்கும இலங்கைக்கான நவீன, மதச்சார்பற்ற, அனைத்தையும் உள்ளீர்க்கும் இலட்சியக் காட்சியையும் முன்வைத்தது. இந்த மரபுகளின் மிகைகள் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்துடன் ஒப்புநோக்கி, அதன் மீறல்களாக நோக்கப்பட்டன. CPA அமைப்பில் அடிப்படை உரிமைகளை மீறும் கலாசார நடைமுறைகள் சகித்துக்கொள்ளப்படுவதில்லை. அவர்களின் பரந்த உலகநோக்கு, உலகம் முழுவதும் காணப்படும் பரந்தகன்ற கூட்டணிகள் மற்றும் சிவில் சமூகச் செயற்பாட்டு வலையமைப்புகளுடனான உறவிணைப்புகளை ஏற்படுத்திக்கொள்வதைச் சாத்தியமாக்கியுள்ளது. அத்தோடு எமது காலத்தின் மிக முக்கியம் வாய்ந்த விவகாரங்கள் சம்பந்தமான அகில ரீதியிலான கலந்துரையாடல்கள் மற்றும் கருத்துரையாடல்களில் பங்கேற்பதையும் சத்தியமாக்கியுள்ளது.

மிகவும் இருண்ட காலப்பகுதிகளில் CPA தலைவர்களும், பதவியினரும், புத்திஜீவிகள் மற்றும் செயற்பாட்டாளர்களும் பாரிய சனசமூகத்தை தமது அலுவலகங்களிலும், இல்லங்களிலும் வரவேற்றனர். அவர்களின் விருந்தோம்பல் வலையமைப்புகளைத் திரட்டி வலுப்படுத்தி, இலங்கை தரிசித்த மிகவும் மோசமான நாட்களின்போது பலருக்கும் வலிமையை வழங்கியது. ஆற்றலளிப்பவர் மற்றும் பாதுகாவலர் என்னும் இப்பாத்திரம் பலராலும் பெரிதும் பாராட்டப்பட்டதோடு, அது இப்பிரளயக்காலங்களின் பதிவுகள் எழுதப்படுகையில் வரலாற்று நூல்களில் பதிவுசெய்யப்படும்.

---

**ராதிகா குமாரசுவாமி**

ஒரு சட்டத்தரணியாவார். இலங்கை அரசியலமைப்புச் சபையின் உறுப்பினராகவும் பணியாற்றினார். ஆயுத மோதல்களின்போது சிறுவர்களைப் பாதுகாத்தல் பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் விசேடப் பிரதிநிதியாகவும் பணியாற்றியுள்ளார்.



# “விபாஷா” மொழிபெயர்ப்புத் திட்டம்

**எஸ். சிவகுருநாதன்**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி.) தனது பணிகளில் 25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது. அதன் அடைவுகள் குறித்து பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். 1996 முதல் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் சவால்களுக்கும் மத்தியிலேயே மா.கொ.நி. தனது குறிக்கோள்களை நிறைவேற்றி வருகின்றது. இலங்கையில் நிலவும் மிகவும் சிக்கலான சமூக /அரசியல்- பொருளாதாரப் பின்னணியில் 25 ஆண்டுகள் தொடர்ச்சியாகச் சேவை செய்வது சுலபமான காரியம் அல்ல. 1983 முதல் 2009 வரை சுமார் 30 ஆண்டுகள் இலங்கை ஒரு கொடூரமான போர்ச்சூழலை எதிர்நோக்கியபோதும், கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நியாயத்தையும் வலியுறுத்தி மா.கொ.நி. பல்வேறு நடவடிக்கைகளில ஈடுபட்டு வந்துள்ளது.

யுத்தம் ஏற்படுவதற்கான பல அடிப்படைக் காரணங்கள் இருந்தன. யுத்தம் நிகழ்ந்து கொண்டிருந்தபோது, அனைத்து விடயங்கள் குறித்தும் இடையீடு செய்ய முடியாவிட்டாலும், அரசியலமைப்பு விவகாரங்கள், மனித உரிமை மீறல்கள், சமாதானம், நல்லிணக்கம், ஊடகச் சுதந்திரம், தேர்தல் வன்முறை கண்காணிப்பு, மலையக மக்கள் எதிர்நோக்கும் வாழ்க்கை அவலங்கள், மொழி உரிமை - மொழிபெயர்ப்பு என்பன குறித்து மா.கொ.நி. அர்ப்பணிப்புடன் செயலாற்றியது. இவற்றுள் மொழிபெயர்ப்பு சார்பாக அது ஆற்றிய பங்களிப்பை 25ஆண்டு பூர்த்தியடையும் இவ்வேளையில இங்கு நினைவுகூருவது சாலவும் பொருந்தும். ஆரம்பத்திலிருந்தே சகல தொடர்பாடல்களும் சிங்களம்- தமிழ்-ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிட வேண்டும் என்பதை மா.கொ.நி. குறிக்கோளாகக் கொண்டிருந்ததைப் பாராட்ட வேண்டும்.

நாம் ஒரு பன்மைத்துவ நாட்டில் வாழ்ந்தாலும்,1956 முதல் இங்கு சிங்கள மொழிக்கு மாத்திரமே முக்கியத்துவம் வழங்கப்பட்டது. சிங்களம் மாத்திரம் அரசககரும மொழியாகச் சட்டத்தில் ஏற்றுக்

கொள்ளப்பட்டது.1988க்குப் பின்னர் தமிழ் மொழியும் ஆட்சி மொழியாக அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்பட்டாலும் நடைமுறையில் உரிய நடவடிக்கைகள் மனப்பூர்வமாக எடுக்கப்படவில்லை.

எமது நாட்டிலே, தகுதிவாய்ந்த மொழிபெயர்ப்பாளர்களுக்குள்ள தட்டுப்பாடு சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் அதிக அளவில் உணரப்பட்டன. அன்று மொழிபெயர்ப்பிற்கென எந்த ஒரு தரநியமங்களும் பேணப்படவில்லை. அதே சமயம் எதுவிதமான உத்தியோகபூர்வ சான்றிதழ்களோ,பொறுப்புக்கூறலோ இருக்கவில்லை. இந்த நிலைமையானது இலங்கையின் பன்மொழி பல்லின அமைப்பிலே சமூகங்கள் மத்தியில் மேலும் விரிசலை ஏற்படுத்தியிருந்தது. இனங்களுக்கிடையே பயன்மிக்க தொடர்பாடலைத் தடுத்தது.

இலங்கையின் ஊடகத் துறையில், ஒரே ஊடக நிறுவனத்தைச் சேர்ந்த சிங்கள-தமிழ்-ஆங்கில வெளியீடுகள் முற்றிலும் வெவ்வேறுபட்ட கருத்துக்களை பிரதிபலிப்பதுடன் தங்களுக்கிடையே எந்தவிதமான கருத்துப் பரிமாற்றத்திலும் ஈடுபடவில்லை. இதனை ஆய்வுகள் பகிரங்கப்படுத்தியுள்ளன. பல்கலைக் கழகங்களில்கூட, இரு மொழிப் புலமைத்துவம் கடந்தகால நிகழ்வாகவே இருந்தது.

இந்நிலையிலேயே 2002ல் போர் நிறுத்த ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்ட பின்னர், இருமொழி ஆற்றல் கொண்டோருக்கு மொழிபெயர்ப்பைக் கற்பிப்பதற்கு "விபாஷா" என்ற பெயரில் ஒரு கருத்திட்டத்தை மா.கொ. நி. ஆரம்பித்தது. இத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு கலாநிதிகள் பாக்கியசோதி சரவணமுத்து - அர்ஜுன பராக்கிரம ஆகிய இருவரும் ஆணிவேராகத் திகழ்ந்தனர்.

அண்மையில் களனி-யாழ்ப்பாணம்-சப்ரகமுவை பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பு மட்டத்தில் மொழிபெயர்ப்பிற்கான கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டாலும்,2002ல் அத்தகைய கற்கை முயற்சிகள் இருக்கவில்லை. எனவே, இலங்கையில் முதன்முதலில் சிங்களம்-தமிழ், ஆங்கிலம்-சிங்களம், ஆங்கிலம்-தமிழ் ஆகிய துறைகளில் மொழிபெயர்ப்புக் கற்கை நெறிகளை நான்கு ஆண்டுகளாக இலவசமாகக் கற்பித்த பெருமை மா.கொ.நிலையத்தையே சாரும்.

ஒரு மொழிபெயர்ப்பு மரபையும் கோட்பாட்டையும் தோற்றுவிப்பதற்கு "விபாஷா" நிகழ்ச்சித் திட்டம் உருவாக்கப்பட்டது. இலங்கையில் மும்மொழிகளுக்கிடையே பரஸ்பர வளர்ச்சியை ஊட்டிவளர்த்தல் இத்திட்டத்தின் மற்றுமோர் குறிக்கோளாக அமைந்தது. மொழிபெயர்ப்பு ஆர்வலர்களின் நெறிமுறைசார் அறிவினை "விபாஷா" விருத்திபெறச் செய்து நாடு முழுவதும் மொழிபெயர்ப்புக் கல்வியில் ஆர்வம் கொண்டவர்களுக்கு அதனைப் பயின்று சான்றிதழைப்பெறும் வாய்ப்பை வழங்குவதையும் "விபாஷா" குறிக்கோளாகக் கொண்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தில் கொழும்பு-பேராதனை-களனி-ருகுனு பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்களும் மூத்த விரிவுரையாளர்களும் சுதந்திரமாகச் செயற்படும் ஏனைய மூத்த மொழிபெயர்ப்பாளர்களும், பங்களிப்புச் செய்தார்கள். பாடநெறியில் கற்பித்தார்கள்.

இந்த டிப்ளோமா பாடநெறியின் சிறப்பம்சம், அது முற்றிலும் இலவசமாக வழங்கப்பட்டமையாகும். இதனால் இப்பாடநெறிக்கு மிகத் தகுதியானவர்களை தெரிவு செய்வதில் நாம் பெரிதும் அக்கறை காட்டினோம். இதற்கு இனம், பால்நிலை, மாவட்டப் பிரதிநிதித்துவம், மொழிபெயர்ப்பு அனுபவம், மொழித்தேர்ச்சி,கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் போன்றவை அளவுகோல்களாகக் கருத்திற்கொள்ளப்பட்டன. குறைந்த வசதிகள் கொண்ட பிரதேசங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. அதேசமயம், பால் சமநிலையையும், பிரதான இனங்களின் பிரதிநிதித்துவத்தையும் பேணுவதற்கு சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.

ஒரு வருட டிப்ளோமா கற்கை நெறி அமுலாக்கப்பட்டது. பரீட்சைகள் நடத்தப்பட்டு தகுதிவாய்ந்த மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இம்மாணவர்களில் பலர் இன்று அரச-அரச சார்பற்ற நிறுவனங்களில் மொழிபெயர்ப்பு - உரைபெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

டிப்ளோமா கற்கை நெறி கொழும்பில் நடத்தப்பட்டதோடு, இரண்டாம் மொழியாக சிங்களத்தையும் தமிழையும் கற்பிப்பதற்கான "விபாஷா" பிராந்திய மையங்கள் திஸ்ஸ மாராமை, காலி, குருநாகலை, கண்டி, அநுராதபுரம், வவுனியா ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்பட்டன. இம்மையங்களில் மொழிபெயர்ப்பு- இரண்டாம் மொழிகள் தொடர்பான சிறு நூல்நிலையங்களும் இயங்கின. இவ்விடங்களில் மொழி பெயர்ப்பு-இரண்டாம் மொழி, கலை இலக்கியம் சார்ந்த கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. இவற்றில் சிறப்பாக இளைஞர்கள் யுவதிகள் வருகை தந்து தமது பங்களிப்பை நல்கினர். அன்று போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருந்தாலும் யாழ்ப்பாணம்-மன்னார்-மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் நிலவிய போக்குவரத்து

கட்டுப்பாடுகள் - கெடுபிடிகள் காரணமாக இப்பிரதேசங்களில் "விபாஷா" பிராந்திய மையங்கள் அமைக்கப்படவில்லை.

ஒரு மொழிபெயர்ப்பாளர்கள் குழுமத்தை பயிற்றுவிக்கும் நோக்கோடு ஆறு துறைகளில் மொழிபெயர்ப்பு தொடர்பான டிப்ளோமா பாடநெறி ஒழுங்கமைக்கப்பட்டது. இப்பாடநெறி பின்வரும் துறைகளில் ஒழுங்கு செய்யப்பட்டது.

1. கலையும் மானுடவியலும்
2. வணிக முகாமைத்துவமும் கணக்கியலும்
3. பொதுப்பாடத் துறைகள் (தொடர்பாடல் கற்கை நெறி உட்பட)
4. சட்டமும் பொது நிர்வாகமும்
5. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
6. சமூக விஞ்ஞானங்கள்

மேற்குறிப்பிட்ட பிரிவுகளை ஆறு மைய நிபுணத்துவ அலோசனைக் குழுக்கள் பிரதிநிதித்துவப்படுத்தின. இத்துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 52 கல்விமான்கள் "விபாஷா" நிகழ்ச்சித் திட்டத்தில் இணைந்து பணியாற்றினார்கள். மேற்படி ஆறு துறைகளில் சிறந்த மொழிபெயர்ப்புகளை உள்ளடக்கி ஆறு கைநூல்கள் சிங்களம்-தமிழ் ஆகிய மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டன. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை "விபாஷா" என்ற பெயரில் மும்மொழிகளை உள்ளடக்கிய ஒரு செய்தி மடல் வெளியிடப்பட்டது. இது டிப்ளோமா கற்கை நெறி மாணவர்களுக்கும், போதனாசிரியர்களுக்கும், இலங்கையின் பொது நூலகங்களுக்கும் இலவசமாக விநியோகிக்கப்பட்டன. "விபாஷா" பிராந்திய மையங்களிலும் வாசிப்பிற்கு வைக்கப்பட்டன. மொழிபெயர்ப்புக் கற்கை நெறியை ஒரு தனித்துவமான துறையாக நியாயப்படுத்துமுகமாக மொழிபெயர்ப்புப் பண்பாட்டை மேம்படுத்துவதற்கும், தொழில்சார் மொழிபெயர்ப்பாளர்களை உருவாக்குவதற்கும், அவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களை வழங்குவது அவசியம் என்றும் கருதப்பட்டது. அதுமாத்திரமன்றி, மக்களுக்குக் கிடைக்கக்கூடிய மொழிபெயர்ப்புக்களின் தரத்தையும் அளவையும் அதிகரிக்கும் நோக்கோடு "விபாஷா" கருத்திட்டம் செயற்பட்டது. அதே சமயம் நாடு பூராவும் மொழிபெயர்ப்புக் கோட்பாடு மற்றும் செயற்பாடு தொடர்பான கலந்துரையாடலைப் பேணுவதும் மொழிபெயர்ப்புப் பண்பாட்டை உருவாக்குவதற்கு அவசியமானது. இவ்விடயத்தில் மா.கொ.நி. வழங்கிய பங்களிப்ப இலங்கையின் மொழிபெயர்ப்பு வரலாற்றில் பொன்எழுத்துக்களால் பொறிக்கப்படும்.

---

**எஸ். சிவகருநாதன்**

சிரேஷ்ட உரைபெயர்ப்பாளர் - மொழிபெயர்ப்பாளர். சிவில் சமூகச் செயற்பாட்டாளர். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலைய "விபாஷா" நிகழ்ச்சித் திட்டத்தின் பயிற்சி ஆலோசகராகக் கடமையாற்றினார்.

# இலங்கை வாழ் மக்களுக்காகவே இருபத்தைந்து வருடப் பெரும்பணி



எஸ்.ஜி. புஞ்சிஹேவா

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தான் கடந்த இருபத்தைந்து வருடங்களாகவே ஏச்சுப் பேச்சுகள், கோபங்கள், வெறுப்பு ஆகியவற்றுக்கு ஆளான அரச சார்பற்ற அமைப்புகளிடையே முன்னணியில் உள்ளது. அவ்வமைப்பு அரசாங்கத்தின் நடவடிக்கைகளைத் தீவிரமாகக் கேள்விக்குட்படுத்தியதே அதற்கான காரணம் என நான் நினைக்கின்றேன். அது மேலோட்டமாகத் தெரிகின்ற காரணமே. அதற்கான கொள்கைகளை வழங்கும் முன்னோடிக்கு தமிழ்ப் பெயரொன்றிருப்பது மேலோட்டமாகத் தெரியாத காரணம். அது பாக்கியசோதி சரவணமுத்து என்ற பெயராகும். அரசுக்குச் சார்பான ஊடகங்கள், மதவாத, இனவாதப் பிரிவுகள் அவர்களது பிரச்சாரங்களால் ஏமாந்த குழுவினர், அத் தமிழ்ப் பெயரையும், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் என்ற பெயரையும் பார்த்த மாத்திரத்தில் கோபத்தில் கொந்தளிக்கின்றனர். அரசாங்கங்களின் நியாயமற்ற சட்டவிதிகள், தீர்மானங்கள் என்பவற்றுக்கு எதிராகச் செயற்படுவதால், அரசாங்கங்கள் அதனை எதிர்ப்பதை எதிர்பார்க்க முடியும். ஆனால் ஏனையவர்கள் அதனை எதிர்ப்பதற்கு அது அரசாங்கத்திற்கு எதிராக இருப்பது காரணமில்லையென்றால், அதில் உள்ள பெயர் ஊர்களையே எதிர்க்கின்றனர். அதன் பணிகளை ஏற்றுக் கொள்ளவோ எதிர்ப்பதற்கோ, அவை பற்றி ஆராய்வது இல்லை. சுருக்கமாகச் சொன்னால், அந்நிறுவனத்தில் அதிகமான சிங்களவர்கள், தமிழ் முஸ்லிம்களோடு சேர்ந்து ஒன்றாகச் செய்யும் செயல்கள். அப்பணிகள் அனைத்தும் வெளிப்படையானவை. கலாநிதி சரவணமுத்து அவர்களின் பெயர் தொடர்பில் சிலர் எதிர்த்தாலும், அந்தப் பெயரைக் கொண்டுள்ள நபரை எதிர்ப்பதற்கு ஏதேனும் காரணம் உள்ளதா? என்பது சந்தேகத்திற்கு இடமானது. ஏனென்றால் அவர் அமைப்பிற்கு வரும் பணத்தைக் கொண்டு பெறுமதியான வாகனமொன்றை வாங்கி, தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டு, அவரது பயணங்களைப் போய்வருவதில்லை. தனிப்பட்ட ரீதியில் அமைப்புப் பணத்தில் தங்கியிருக்கவும் இல்லை. அமைப்பினுடைய வரவு செலவில் அதிக சம்பளம் பெறுபவரும் அல்ல. ஆனால் அரசாங்கத்தின் சமமான சம்பள அளவுகளை விட அதிக சம்பளம் பெறுகின்ற ஊழியர் குழுவொன்றிருப்பது

உண்மையாகும். அவர்களின் பணியானது கொள்கைகளுடன் ஒன்றிணைந்தது. பணிகளின் பெறுபேறுகளும் கூட்டாக அமைந்தவையே. தனிநபர்களுக்கு அவசியமான பணிகளைக் காட்டிலும் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட பணிகள் பிரதானமானவையாக உள்ளன. எமது சமூகத்திலுள்ள பழக்கவழக்கங்களோடு அவ்வாறானதொரு அமைப்பைக் கட்டியெழுப்புவது மிகவும் கடினமான விடயம். பெரும்பாலான நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுவது தெளிவாகிறது. ஆனாலும் பாரிய அளவிலான பணத்தைச் செலவழித்து சொற்பமான பெறுபேற்றை சமூகத்திற்கு வழங்குகின்ற என்.ஜி.ஓ.க்களுக்கே உரித்தான பணிகள் இல்லாமலும் இல்லை.

கடந்த இருபத்தைந்து வருடங்கள் முழுவதும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், நாட்டில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் ஆய்வு மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது என்பதற்கான பல ஆதாரங்கள் உள்ளன. ஒரு விடயத்தைப் பற்றிய சமூக, அரசியல், சட்ட நிலைமைகளைத் தெளிவுபடுத்தி உருவாக்கப்பட்ட படைப்புகளும் எழுத்தாவணங்களும் அளவற்றவை.
மிகப் பெரிய அளவில் செலவு செய்து அப் புத்தகங்களை மக்களிடையே இலவசமாகப் பகிர்ந்தளித்துள்ளதால், பெற்றுக் கொண்ட பணம் விரயமாக்கப்படவில்லை என்பதைப் பாராட்டியாக வேண்டும்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தை பொதுவாகப் பார்க்கும் போது ஏற்பட்ட சில கருத்துகளே மேலே குறிப்பிடப்பட்டன. அடுத்து குறிப்பிட்ட துறைகள், மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தழுவி மேற்கொள்ளப்பட்டவை பயனளித்துள்ளனவா என்பதை ஆராய்ந்து பார்ப்போம்.

**சமஷ்டி முறை**

பெயரைக் கேட்ட மாத்திரத்தில் அரவம் தீண்டியதைப் போலத் தோன்றும் சமஷ்டி முறை பற்றிய கருத்துக்கள் பற்றி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் உரையாடல்களும், மாநாடுகளும் நாடு முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்டன. யுத்தத்திற்கும் இரு தரப்பினரதும் வன்முறைச் செயற்பாடுகளுக்குமான ஒரு தீர்வாகவே இத் தீர்வு முன்மொழியப்பட்டது.

உலகின் பாரிய எண்ணிக்கையிலான முன்னணி நாடுகள் இன்று, சமஷ்டி முறையைத் தமது ஆட்சியில் மிக வெற்றிகரமான முறையில் பயன்படுத்தியுள்ளன. அம்முறையை ஆய்வு செய்து, அதன் முன்னேற்றகரமான பண்புகளைத் தழுவி வெற்றிகரமான ஆவணக் கட்டமைப்பொன்றின் மூலம் மக்களை அறிவூட்டுவதற்குப் பிரமாண்டமான நிகழ்ச்சித் திட்டமொன்றைப் பயன்படுத்தின. ஏதேனும் உணர்வுபூர்மான துறைகள் தொடர்பில் தீர்மானங்கள் எடுப்பதை அந்தந்த இனங்களுக்கு ஒப்படைக்கப்படுமாறும் அரச அதிகாரம் பிரதான ஆட்சியிடம் ஒப்படைக்கப்படுமாறும், அம் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அவ்வாறான அதிகாரங்கள் இருந்த போது, அதிகாரத்தைப் பறித்துக் கொள்வதற்கும் ஆயுதப் போராட்டமொன்றில் ஈடுபடுவதற்கும், தனியான இராச்சியம் ஒன்றை அமைப்பதற்கும் அவசியம் ஏற்படாது என்பது உலகில் சுமார் நூறு நாடுகளின் அனுபவமாகும். எனினும் அரசாங்கத்தினதும், இரண்டு, மூன்று ஆயுதக் குழுக்களின் உச்சக்கட்ட எதிர்ப்பினாலும் அறிவுபூர்வமான இராஜதந்திர விதிமுறைகள் வன்முறைக்கு அடிபணிந்தன. அதற்கு இணக்கம் தெரிவித்த தமிழ்க் குழுக்களையும் அடக்கிய பிரபாகரன் தனியான இராச்சியத்திற்கென்றே ஆயுத மோதலைத் தீவிரப்படுத்தினார். அத் தருணத்தில், இராஜதந்திர உத்திகள் ஊடாக யுத்தத்தைத் தவிர்த்துக் கொள்ள முடிந்த போதும், பிரபாகரனின் தீவிரவாதக் கருத்துகளுக்குச் சமமான கருத்துகளைக் கொண்டிருந்த 'சிங்கள பௌத்தர்கள்' சிலர் யுத்தத்தையே உயர்வானதாக மாற்றியமைத்தனர்.

இங்கு அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கையாண்ட தரப்பு சட்டங்களை விதிப்பதன் மூலம் பயங்கரவாதத்தை தடுக்க முடியும் என்றே நினைத்தது. அதனால் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவசரகாலச் சட்டத்தை விதித்துக் கொண்டது. அதனை மேலும் வன்மையாக்குவதற்காக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தது. ஆரம்பத்தில் அது தமிழ்ப் புலிகள் இயக்கத்தை அழிப்பதற்குக் கொண்டு வரப்பட்டது எனக் கூறப்பட்டு ஒரு வருடத்தின் பின்னர், அது பொதுவான சட்டக் கட்டமைப்பின் சட்டமாக மாற்றப்பட்டது. அத்துடன் என்ன நடந்தது? பயங்கரவாதம் தடுக்கப்படுவதற்குப் பதிலாக அது நூறு மடங்காக உக்கிரமடைந்தது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பின்னர், புலிகள் இயக்கத்தின் அனைத்து பயங்கரவாதச் செயல்களும் ஆரம்பமாயின. அதனைப் பயன்படுத்தியே அவர்கள் பயிற்சியும் பெற்றனர். அச்சட்டத்தின் பின்னர், புலிகள் இயக்கத்தின் கடற் புலிகள், சிறுவர் படைகள், உருவாக்கம், மகளிர் படை, தற்கொலைப் படைக் குழுக்கள், வான்வழித் தாக்குதல் குழுக்கள், போன்றவை நிறுவப்பட்டன. சமஷ்டி முறையொன்று தொடர்பில் இராஜதந்திர ரீதியில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கலொன்றின் கீழ், அவ்வாறான நிலைக்குச் செல்வதற்கு மிகச் சொற்பமான வாய்ப்புகளே அவர்களுக்கிருந்தன. தீவிரமான எதிர்ப்புகளுக்கு முகங்கொடுப்பதற்கே அவ்வாறானதொரு நிலை வளர்ச்சி பெற

முடியும். சமஷ்டி முன்மொழிவுகளின் வரலாற்று ரீதியான துல்லியத் தன்மையை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இப்போது நிரூபித்து விட்டது. எதிர்காலத்தில் நாம் ஒன்றாக இருப்பது அவசியமாயின், சமஷ்டி முறையானது மாற்றங்களுடனேனும், பயன்படுத்தப்பட வேண்டும். இன்று யுத்தத்தின் வெற்றியோடு எமது பிரச்சினையின் தொடக்க நிலைக்கு வந்திருப்பது, அரச ஆட்சியாளர்களைப் போன்றே, ஏனைய போராட்டக் குழுவினரும் வெட்கப்பட வேண்டிய விடயம். அந்த அறிவே எதிர்கால யுத்தங்களைத் தடுப்பதற்கும் அவசியமாகின்றது.

### மொழியுரிமை

சமூக வாழ்விற்கு அத்தியாவசியமான காரணியாக அமைவது மொழியாகும். அதிலே பிரசை என்ற வகையில் முன்னேற்றத்திற்காக தாய்மொழியைப் பாவிக்கின்ற உரிமை அடிப்படையானது. தனது தாய்மொழி அடக்கப்படுகின்ற போது பிரசை தரம் குறைந்த மனிதராக சட்டத்தினாலேயே சித்திரிக்கப்படுகின்றார். எமது நாடு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், சிங்கள, தமிழ் பொது மக்கள் இரண்டாம் தர மனிதர்களாயிருந்தனர். அரசாட்சி ஆங்கிலத்தில் இருந்தது. அரசின் அனைத்து காரியாலய அலுவல்களும் ஆங்கில மொழியிலேயே இடம்பெற்றன. ஆங்கிலத்திலன்றி, உயர்கல்வியைப் பெற முடியாது. சுகாதார சேவை நடவடிக்கைகளும் அவ்வாறேயிருந்தன. சிங்களத்திலோ, தமிழிலோ நீதி நிலைநாட்டப்படவில்லை. அப்போது சிங்கள அல்லது தமிழ்ப் பொது குடிமகன், இயல்பாகவே இரண்டாம் தரத்திற்குத் தள்ளப்படுகின்றான். இந்த நிலையை மாற்றியமைப்பதற்கு, 1956ல் அரசாங்கத்தின் வீழ்ச்சியிலிருந்து வாய்ப்பொன்று உருவானது. ஆனாலும் முற்றாக மொழிக்கான நீதி நிறைவேறவில்லை. சிங்கள மொழி அரசகரும மொழியாக நிறைவேற்றப்பட்டதுடன் தமிழ் பிரசை மீண்டும் இரண்டாம் நிலைக்கு மாறினார். மேலே குறிப்பிட்ட அனைத்துத் துறைகளிலும் சிங்களம் பிரதான மொழியாயிற்று. அரசாட்சி, காரியாலய அலுவல்கள், உயர் கல்வி, சுகாதார சேவைகள் ஆகியன சிங்களத்தில் இடம்பெற்றன. அப்போது தமிழ்ப் பிரசைக்கு நாட்டின் பூரண சுதந்திரத்தின் பயனை அனுபவிக்க இயலாமற் போனது. மொழியுரிமை இல்லாதொழிக்கப்பட்டதன் மூலமே எமது நாட்டின் நீண்டகால யுத்தத்திற்கு அடித்தளமிடப்பட்டது. ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற தேசிய ரீதியில், இணைந்து கொண்ட தமிழ் மக்கள் பின்னர், சிங்கள மொழி ஆதிக்கத்திற்குக் கீழ்ப்படிய நேர்ந்ததுடன், ஏற்படக் கூடிய சிந்தனைகள் எவ்வாறானவை என்பதை நினைத்துப் பார்க்க முடியாமற் போனது பெரும் துன்பியலுக்கு வித்திட்டது.

பிந்திய காலத்தில் அதாவது 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தத்துடன், தமிழ் மொழியும், அரசகரும மொழியாக அரசியலமைப்பால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் தமிழ் மொழியில் ஆட்சி நடத்துவதற்கு அவசியமான ஏனைய வசதிகளை வழங்க வேண்டுமென்பதை அனைத்து அரசாங்கங்களும் பொருட்படுத்தவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மொழிப் பாவனை பற்றிய ஆய்வை நடத்தியது. நாடு முழுவதும் திரிந்து, அது பற்றிய தரவுகளையும் நிதர்சனங்களையும் கண்டறிந்து வெளியிட்டது. அதற்குத் தேவையான மனப்பாங்குகளை மாற்றுவதற்காகச் செயற்பட்டது. அவ்வாறான பாரிய ஆராய்வொன்றை அரசாங்கத்தைத் தவிர ஓர் அமைப்பால் செய்யக் கூடியதாக இருப்பது ஆச்சரியமானது. அதில், தமிழ் மொழி மீது மட்டுமல்லாமல் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில், சிங்கள மொழி மீது அப்பிரதேசங்களில் காட்டப்படுகின்ற அலட்சியம் பற்றியும் விடயங்கள் வெளியாயின. அப்போது சுமார் 40 பிரதேசச் செயலக மட்டங்களில் இருமொழி (சிங்களம்-தமிழ்) நிருவாகம் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்நிருவாக மாவட்டங்களுக்குச் சென்று செய்த ஆய்வுகளில் அதற்குத் தேவையான உத்தியோகத்தர்களும் உபகரணங்களும் போதுமான அளவில் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது வெளிவந்தது. அந்த விசாரணைகளின் பின்னர் தான் பாரிய எண்ணிக்கையிலான அரச நிறுவனங்கள் சிங்களத்திலும் தமிழிலும் தகவல்களை வெளியிடத் தொடங்கின. (எ-டு: நுகர்வோர் அதிகாரசபை, மருந்துகள் ஒழுங்குறுத்தல் அதிகாரசபை) தேசிய அடையாள அட்டை பற்றிய பிரச்சினை உயர் நீதிமன்றம் வரை சென்ற பின், இரண்டு அரசகரும மொழிகளில் தகவல்கள் குறிப்படப்பட ஆரம்பிக்கப்பட்டது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் தலையீட்டின் பின்னரே சிறிய தண்ணீர்ப் போத்தலின் விலை உறுதிப்படுத்தப்பட்டது.

### தேர்தல் வன்முறை கண்காணிப்பு

இந்த நாட்டை சொர்க்கபுரியாக மாற்றுகின்ற முறைகளே எமது நாட்டில் அரசாங்க அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக முன்வைக்கப்படுகின்ற தேர்தல் விஞ்ஞாபனங்களில், குறிப்பிடப்படுகின்றன. எனினும் அதிகாரம் கிடைத்த பின்னர், அவ்வொவ்வொரு கட்சியும் இரண்டு விதமாக வன்முறையைப் பயன்படுத்தியது உண்மை. அவ்வதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தேர்தலுக்கு முன்னரும் தேர்தலின் போதும், பல்வேறு பலவந்தங்களையும் வன்முறைச் செயற்பாடுகளையும் பயன்படுத்திக் கொண்டன. அதில் ஒன்று. தேர்தலின் பின்னர் வன்முறை நின்றுவிடவில்லை. அதன் வடிவம் மாறியது. பொலிசார், இராணுவத்தினர், குண்டர்கள்,

பாதாள உலகத்தினரை ஈடுபடுத்தி வன்முறையில் ஈடுபட்டுள்ளார்கள் என்பது பிரசித்தமான ஒன்று. அவசாரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பவற்றைப் பயன்படுத்தி 'சட்டரீதியான' வன்முறையில் ஈடுபட்டன.

இலங்கையில் முதன் முறையாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தான், தேர்தல் வன்முறைச் செயற்பாடுகளை பிரபலமாக்கியது. அவ்வாறு பிரச்சாரப்படுத்தப்பட்டதால் அவை படிப்படியாகக் குறைந்தன என்பது உண்மையாகும். அப்பணி மிகச் சிறப்பான மட்டத்தில் நடத்தப்பட்டதால் வன்முறையாளர்கள் வேறு வழிகளைத் தேடிக் கொள்ள நேர்ந்தது.

**தகவல் அறியும் உரிமை**

ஆட்சி நடத்தப்படும் முறையை குறிப்பிட்டு வைக்கும் கடிதங்கள், ஆவணங்கள் போன்றவையே தகவல்கள் எனப்படுகின்றன. ஆட்சியாளர்களை பொதுமக்களே நியமிக்கின்றனர். ஆட்சிக்குத் தேவையான பணத்தை வரியின் ஊடாக பொதுமக்களே வழங்குகின்றார்கள். எனவே ஆட்சி நடத்துவது தொடர்பான தகவல்களின் உண்மையான உரிமையாளர்கள் பொதுமக்களேயாவர். எனினும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்தே, தகவல்களை வழங்காதிருப்பது ஒரு சட்டமாக மாறியிருந்தது. சுருக்கமாகச் சொன்னால், தகவல்களுக்கான உரிமையை ஆட்சியாளர்களும், உத்தியோகத்தர்களும் கைப்பற்றி வைத்திருந்தனர்.

இவ்வநீதி பற்றி இலங்கையின் அரச சார்பற்ற அமைப்புகள் நீண்ட காலமாகப் போராட்டத்தில் ஈடுபட்டன. அது சுமார் பத்துவருடங்கள் நீடித்தது. எவ்வாறாயினும் அப்போராட்டங்களின் பிரதிபலனாக 2016 தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் உரிமையை மக்களுக்கு வழங்கும் சட்டமொன்று நிறைவேற்றப்பட்டது. அத்துடன் தகவல்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பில், மக்களை அரச சார்பற்ற நிறுவனங்களே அறிவூட்டின. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், சர்வோதய, ட்ரான்ஸ்பேரன்ஸ இன்டர்நஷனல், ஆகிய அமைப்புகள் அது தொடர்பில் முன்னோடிகளாகப் பணியாற்றியுள்ளன. பொது மக்களைப் போன்றே அரச உத்தியோகத்தர்களையும் சில வருடங்களாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அறிவூட்டி வந்தது. தேவையான புத்தகங்கள், இத்தியாதிகளைப் போன்றே பயிற்சியையும் வழங்கியது. அலுவலகமொன்றை அமைத்து, நாடு முழுவதும் மக்களுக்கு தகவல்கள் வழங்கப்பட்டதுடன், அது பற்றிய மதிப்பீடுகளையும் கண்காணிப்புகளையும் செய்து பொது மக்களுக்கு அளவற்ற ரீதியில் ஒத்துழைப்பு வழங்கியது.

**சட்டரீதியான சில வெற்றிகள்**

பிரச்சினைகள் எழுந்த சந்தர்ப்பங்களில், அவற்றுக்கு சட்டரீதியான தீர்வுகளைத் தேடுவதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எப்போதும் முன்வந்துள்ளது. மேலே குறிப்பிட்டவாறு தேசிய அடையாள அட்டை சிங்களத்திலும் தமிழிலும் காணப்படாததால், தாம் யாழ்ப்பாணத்திற்குச் சென்ற போது அடையாள அட்டை சிங்களத்தில் மட்டும் காணப்பட்டதால் சிரமங்களுக்கு முகங்கொடுத்த மாணவரொருவரால் உயர்நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதன் பின்னர் அடையாள அட்டை அரசகரும மொழிகள் இரண்டிலும் எழுதப்பட்டது.

கடந்த யுத்த காலத்தில், கொழும்பு விடுதிகளை சுற்றிவளைப்பதால் ஏற்பட்ட சர்வதேச அபகீர்த்தி அதற்கு எதிராக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் உயர் நீதிமன்றத்தில் வைத்த கோரிக்கையால் தவிர்க்கப்பட்டது.

மருந்துகளை ஒழுங்குறுத்தும் அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு மருந்துகளின் விபரங்கள் ஆங்கிலத்தில் மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தன. உயர்நீதிமன்றத்திற்கு வழங்கியுள்ள வாக்குறுதிக்கு ஏற்ப, எதிர்காலத்தில் அத்தியாவசிய மருந்துகளின் விபரங்கள் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளிலும் பெறலாம்.

இவ்வாறு பாரிய அளவிலான நீதிமன்றத் தீர்ப்புகளை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பெற்றுக் கொண்டுள்ளது. அவை அனைத்தும் சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய அனைத்து இனத்தினரதும் அனைத்து மதத்தினரதும் நன்மைக்காகவே மேற்கொள்ளப்பட்டன.

---

**எஸ்.ஜி. புஞ்சிஹேவா**

ஒரு சட்டத்தரணியாவார். மனித உரிமைகள் செயற்பாட்டாளர். தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் ஆரம்ப ஆணையாளர்களில் ஒருவர். இலக்கியம் உட்பட பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ள பிரபல எழுத்தாளராவார்.



# CPA தொடர்பான எனது நினைவுகள்

**விமல் பிரனாந்து**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆரம்பம் முதல் இன்று வரை அதனோடு எனக்கு மிகவும் நட்புறவான ஒரு தொடர்பு இருக்கிறது. அது ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்தில் நானும் சிவில் அமைப்புத் துறையில் ஒரு செயற்பாட்டாளராக செயற்பட்டுவந்தேன். அதற்கு 25 ஆண்டுகள் பூர்த்தியாவது மிகவும் மகிழ்ச்சி தரக் கூடிய ஒரு விடயம் என்பதுடன் அதன் நிமித்தம் ஏதேனும் எழுதுமாறு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டமையும் மகிழ்ச்சி தரக்கூடிய ஒரு விடயம் ஆகும். CPA இன் வரலாறு மற்றும் அது ஆற்றிய பணிகள் பற்றி ஏனைய நபர்கள் முறைசார்ந்த ரீதியில் எழுதுவார்கள். ஆகவே அதன் ஆரம்ப காலகட்டம் பற்றி எனக்கு தற்போது ஞாபகத்திற்கு வரும் அனுபவங்கள் சிலவற்றைச் சொல்வதற்கு இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

அது சந்திரிக்கா குமாரதுங்கவின் அரசாங்கம் பதவி ஏற்ற ஆரம்ப காலகட்டம் ஆகும். அக் காலகட்டத்தில் மனித உரிமைகள் தொடர்பாகவே சிவில் சமூக அமைப்புக்கள் கூடுதல் கவனம் செலுத்தியன. 1977-78 களில் பதவி வகித்த யூஎன்பி அரசாங்கத்தின் கீழ் இடம்பெற்ற காணாமல் ஆக்கப்படல் தொடர்பாக வழக்குத் தொடுத்தல் போன்ற செயற்பாடுகள் இடம்பெற்றன. நான் அப்போது தொடர்பினைப் பேணி வந்த அமைப்பு ஜனநாயகத்தை வென்றெடுப்பதற்கான இயக்கம் (MDDR) ஆகும். நான் அதன் அமைப்புச் செயலாளராக செயற்பட்டேன். சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா அதன் சட்டப் பிரிவை வழிநடாத்தியதுடன் மேலும் சட்டத்தரணிகள் பலர் எம்முடன் பணியாற்றினார்கள். எனது ஞாபகத்திற்கு அமைய 1989ல் காணாமல் ஆக்கப்படல் தொடர்பாக நூற்றுக்கும் மேற்பட்ட வழக்குகள் MDDR இன் தலையீட்டுடன் தொடரப்பட்டது. மேலும் வடக்கின் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றிய கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. யுத்தத்திற்கு எதிரான நிலைப்பாட்டில் நடவடிக்கை மேற்கொள்ளும் பல்வேறு அமைப்புக்கள் காணப்பட்டதுடன் சில சந்தர்ப்பங்களில் அவை கூட்டாக இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டன.

அவ்வாறு தான் CPA உடனான ஆரம்பம் அமைந்தது. கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தில் அதற்காக பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றதுடன் பாக்கியசோதி சரவணமுத்து, ஜயதேவ உயன்கொட, ரொஹான் எதிரிசிங்க, அர்ஜுன பராக்ரம போன்றோர் அவ்வாறான கலந்துரையாடல்களில் பங்குபற்றியதாக ஞாபகத்தில் உள்ளது. கொழும்பின் உயர்நிலை சமூகத்தைச் சேரந்த நபர்கள் சந்திக்கும் சில இடங்களில் அடிக்கடி சில சந்திப்புக்கள் இடம்பெற்றமை நினைவிற்கு வருகிறது. இக் குழுக்களுக்கு இடையிலான உரையாடல்களில் ஒரு விசேட அம்சம் காணப்பட்டது. பொதுவாக அதுவரை நடைமுறையில் இருந்த அமைப்புக்களின் சட்டகத்துக்கு அப்பால் செல்லும் மற்றும் பொதுவான அறிஞர்களின் கலந்துரையாடல்களுக்கு அப்பால் செல்லும் மாறுபட்ட ஒரு பணிக்காக அவர்கள் தயாராவது தென்பட்டது.

இப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் ஒரு செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டதுடன் அது வத்தளை பிரதேசத்தில் உள்ள ஒரு ஹோட்டலில் இடம்பெற்றது. அதற்கு எனக்கு எவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டது என ஞாபகம் இல்லை. முன்னர் குறிப்பிடப்பட்டவர்கள், சாள்ஸ் அபேசேகர, ஒஸ்ரின் பிரனாந்து போன்ற சிலரும் அதில் பங்கேற்றார்கள். ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து ஒஸ்ரின் பிரனாந்து நிர்வாக சேவை ஒதுக்கீட்டுக் குழாமிற்கு இடமாற்றம் செய்யப்பட்டு பணிகள் ஏதும் ஒப்படைக்கப்படாது இருந்தார்.

இச் செயலமர்வு கனேடிய பயற்றுவிப்பாளர்கள் சிலரால் மேற்கொள்ளப்பட்டது. அவர்கள் இதனை மிகவும் செயற்திறனுடனும் சுறுசுறுப்பாகவும் மேற்கொண்டமையால் அது பற்றி நன்கு நினைவில் உள்ளது. கலந்து கொண்ட எங்களிடம் வினாக்கள் தொடுத்து 'ப்ளிப் சாற்களில்' (Flip Chart) பதில்களைக் குறித்து வைத்து காட்சிப்படுத்தினார்கள். அவ்வளவு தூரம் வெற்றிகரமாக கலந்துரையாடல் ஒன்று நிகழ்த்தப்படுவதை நான் அதற்கு முன்னர் பார்த்ததில்லை. எமது மூளைகள் முழுவதிலும் கருத்துக்களை உருவாக்குவதாக உணர்ந்தேன். CPA இன் பணிகள் ஆரம்பம் முதல் தரமானதாகவும் தொழில்வாண்மை உள்ளதுமாக அமைந்தது என்பதனையே நான் இங்கு குறிப்பிட வேண்டிய தேவை உள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், CPA அதன் பெயரில் பொதிந்து காணப்படும் பிரகாரம் நடைமுறையில் உள்ள பிரச்சினைகளுக்கான மாற்றுத் தீர்வு யோசனைகளை முன்வைப்பதனை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டது. அது அப்போது காணப்பட்ட அமைப்புக்களை விடவும் மாறுபட்ட ஓர் அமைப்பாகக் காணப்பட்டது. அதனோடு தொடர்புடையவர்களாகக் காணப்பட்ட பெரும்பாலானோர் கலாநிதிப் பட்டம் பெற்றவர்களாகவே இருந்தார்கள். சட்டம், கொள்கை வகுத்தல், அரசியல், சமூக விஞ்ஞானம் போன்ற பல்வேறுபட்ட விடயங்களுடன் தொடர்புடைய நிபுணர்கள், திறமையான ஆராய்ச்சியாளர்கள் போன்றே பயிற்றுவிப்பாளர்களும் அவற்றில் உள்ளடங்கி இருந்தார்கள். ஒருசிலர் வெளிநாடுகளில் கடமை புரியும் அதே நேரம் இதனது பணிகளிலும் ஈடுபாடு கொண்டார்கள். அர்ஜுன பராக்ரம மிகச் சிறந்த ஒரு பயிற்றுவிப்பாளர் என்பது நினைவில் உள்ளது. சிறந்த இளம் கல்விமான்கள் சிலரும் இவர்களது பணிகளுடன் இணைந்து செயற்பட்டதுடன் பின்னர் அவர்கள் தத்தமது துறைகளில் ஒளிர்விடும் நபர்களாக மாற்றம் பெற்றார்கள்.

CPA தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டமை விசேட முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயம் ஆகும். தேர்தல் கண்காணிப்பு பணிகள் பற்றி இலங்கை அவ்வளவு தூரம் பழக்கப்பட்டிருக்கவில்லை. தேர்தல் சட்டம் மூலம் அல்லது அரசால் தேர்தல் கண்காணிப்புக்கு அங்கீகாரம் வழங்கப்படவில்லை. இன்றும் கூட சட்டத்தில் அதுபற்றிக் குறிப்பிடப்பட்டாலும், அது ஓர் உரிமையாக உறுதி செய்யப்படவில்லை. ஆகவே, அதன் பிரகாரம் அன்று இருந்த நிலைமை பற்றி சிந்தனை செய்து பார்த்தல் அவ்வளவு கடினமான ஒன்றல்ல. சுனிலா அபேசேகர பிரதிநிதித்துவம் செய்த 'இன்போம்' (INFORM) நிறுவனம், சுதந்திர ஊடக இயக்கம், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆகியன இணைந்து 'தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையத்தை' (CMEV) ஆரம்பித்தலானது தேர்தல் கண்காணிப்புத் துறையில் ஒரு முக்கியமான முன்னோக்கிய பாய்ச்சலாக கருதப்படுகிறது. அர்ஜுன பராக்ரமவால் அதன் போது ஒரு முன்னணி பணி மேற்கொள்ளப்பட்டது.

முதன் முறையாக தென் பகுதி சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் இணைந்து வடக்கில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் கண்காணிப்பினை மேற்கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் பற்றிய அனுபவங்கள் சிலவற்றை குறிப்பிடுவது இங்கு முக்கியம் பெறும் என நினைக்கின்றேன்.

யாழ்ப்பாணத்தின் கட்டுப்பாட்டை இராணுவம் கைப்பற்றி சில நாட்கள் சென்ற பின்னர் வடக்கின் உள்ளூராட்சித் தேர்தல் நடாத்தப்பட்டது. அதன் போது யாழ்ப்பாணம்

முற்றுமுழுதாக இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்படல் மற்றும் சிவில் நிர்வாகம் நிலைநாட்டப்பட்டுள்ளது என்பதனைக் எடுத்துக் காட்டுதல் ஆகியன அரசாங்கத்தின் தேவையாகக் காணப்பட்டது. ஆயினும் அங்கு சிவில் செயற்பாடுகளுக்கு இடமளிக்கப்படவில்லை. தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) தவிர்ந்த தேர்தலில் களமிறங்கிய அனைத்துக் கட்சிகளும் LTTE இற்கு எதிராக அரசின் பாதுகாப்புப் படையினருக்கு ஆதரவு வழங்கும் ஆயுதக் குழுக்களாகவே காணப்பட்டன. தீவுகளின் கட்டுப்பாடு டக்ளஸ் தேவானந்தாவின் EPDP இயக்கம் வசம் காணப்பட்டது. இத் தேர்தல் எவ்வாறு அமையும் என்பது பற்றி முன்கூட்டியே உணரக் கூடியதாக இருந்தது. தெற்கின் சிவில் சமூகத்தினர் மத்தியிலும் இத் தேர்தல் பற்றி பேசப்பட்டு வந்தது.

தேர்தல் கண்காணிப்பு தொடர்பான கருத்து தெற்கின் சிவில் அமைப்புக்களுடன் கதைக்கின்ற போது தட்டிக்கழிக்கக் கூடிய ஒரு பதில் தான் கிடைக்கப்பெற்றது. 'யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடாத்தக் கூடிய ஒரு நிலைமை காணப்படவில்லை. இது அரசாங்கத்தை ஊதிப் பெருக்கிக் காட்டுவதற்கான ஒன்று' என அவர்கள் அதற்கு பதில் அளித்தார்கள். நாம் கொழும்பில் இருந்து கொண்டு எதைப் பேசினாலும் பயனற்றது எனவும் வடக்கு மக்களைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களை அறிந்து கொள்ளல் முக்கியமானது என்பது எனது கருத்தாக இருந்தது. சுனிலா அபேசேகரவுடன் இது தொடர்பாக பல வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டதாக நினைவில் உள்ளது. எவ்வாறாயினும் பின்னர் தேர்தல் கண்காணிப்புக்காக பலரை இணங்க வைப்பதற்கு முடிந்தது. MDDR உடன் தொடர்புடைய சுமார் 20 பேர் அதில் பங்கேற்றார்கள். மேலும் பல அமைப்புக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் நபர்கள் சகிதம் மிகப் பெரிய ஒரு குழு தயாரானதுடன் வடக்குடன் தொடர்புடைய நபர்கள் ஏற்பாட்டு பணிகளின் போது உதவி செய்தார்கள். எனது நண்பரான எஸ்.சிவகுருநாதன், அவரது நண்பர்களான பேராசியரியர் சிவச்சந்திரன் மற்றும் அவரது துணைவியாரான (திருமதி சரோஜா சிவச்சந்திரனின்) உதவியும் கிடைக்கப் பெற்றது.

பெப்ரல் நிறுவனத்தில் உள்ளவர்களுக்கும் புறம்பான தொடர்புகள் காணப்பட்டன. யாழ்ப்பாணத்தில் இருந்த அருட்தந்தை ஜெயகுமார் போன்ற கத்தோலிக்க அருட்தந்தைமார்கள் மற்றும் யாழ்ப்பாண ஆயர் ஆகியோரின் உதவியும் கிடைத்தது. தற்போது கனடாவில் வசிக்கும் ஆதவன், ஊவா சமூக நிலையத்துடன் இணைந்து செயற்பட்ட செனவிரத்ன போன்றவர்களும் எமது குழுவில் உள்ளடங்கி இருந்தார்கள்.

அத் தேர்தலுக்குப் பொறுப்பாக அப்போது உதவித் தேர்தல் ஆணையாளராகப் பணியாற்றிய மஹிந்த தேசப்பிரிய செயற்பட்டதாக ஞாபகம் உள்ளது. யாழ்ப்பாண அரசாங்க அதிபர் தெரிவத்தாட்சி அலுவலராக கடமை புரிவதனை நிராகரித்து பதவியை இராஜினாமா செய்தார். ஆனாலும் சிவில் பிரசை ஒருவர் என்ற ரீதியில் அவரும் தேர்தல் பணிகளுடன் இணைந்து கொண்டார். நாங்கள் யாழ்ப்பாணம் சென்ற போது அங்கு மிகவும் கஷ்டமான ஒரு சூழ்நிலை காணப்பட்டது. அரசாங்கம் பெரும்பாலான பண்டங்களுக்குத் தடை விதித்திருந்ததன் காரணமாக பொருட்களுக்கு பாரியளவு தட்டுப்பாடு நிலவியது. பொது வசதிகள் மிகவும் பலவீனமடைந்து காணப்பட்டது. பாரிய எரிபொருள் தட்டுப்பாடு நிலவியது. பெட்றோல் இருக்கவில்லை என்பதுடன் வாகனங்கள் மண்ணெண்ணெய் மூலம் இயங்கின. எமது பணிகளுக்காக உதவி செய்த இலங்கை திருச்சபையின் அருட்தந்தை ஒருவர் அவரது பச்சை நிற கார் வண்டியையும் வான் வண்டியையும் எமக்கு வழங்கி உதவி செய்தார். யுத்தம் காரணமாக தமது பெற்றோரை இழந்த பிள்ளைகளைப் பாதுகாக்கும் நிறுவனம் ஒன்றை நடாத்தும் அருட்தந்தை ஒருவர் பற்றி எனக்கு ஞாபகம் உள்ளது. அப் பிள்ளைகளுள் சிலர் உள ரீதியாக பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் (trauma) ஏனைய பிள்ளைகளுடன் வன்முறையாக நடந்து கொள்வதாகவும் அவர் எம்மிடம் கூறினார். பின்னர் அவர் வெளிநாடு சென்றார். யாழ் ஆயர் அவர்கள் மிகவும் புத்திசாதுர்யமான அரசியல் புரிந்துணர்வுடைய ஒருவராக இருந்தார். அவர் LTTE இயக்கத்துக்கு ஆதரவு வழங்காத போதும் ஏனைய பெரும்பாலான மதகுருமார்கள் LTTE இயக்கத்துக்கு ஆதரவு வழங்குவதாக ஒரு கருத்து நிலவியது. அது எங்களுக்கும் புலப்பட்டது.

எமது குழு பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் பல குழுக்களாகப் பிரிந்து பல்வேறு பிரதேசங்களில் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டதுடன் நான் ஊர்காவற்றுறையில் கண்காணிப்பு பணிகளுக்காக புறப்பட்டேன். எஸ்.ஜீ.புஞ்சிஹேவா, நிமல் புஞ்சிஹேவா, சுனிலா அபயசேகர போன்றோர் யாழ்ப்பாண நகரத்தைக் கண்காணித்தார்கள். தேர்தல் தொடர்பான மிகவும் தெளிவான ஒரு காட்சியினை பெற்றுக்கொள்வதற்கு எம்மால் முடிந்ததுடன் கண்காணிப்பின் பின்னர் ஓர் அறிக்கையினை வெளியிட்டோம். யுத்தத்துக்கான அரசியல் தீர்வு ஒன்றுக்காக

முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளின் போது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எம்முடன் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இணைந்து பணியாற்றியது.

'Stop the war' இயக்கம் எனது ஞாபகத்தின் பிரகாரம் அவ்வாறான ஒரு நிகழ்ச்சித்திட்டமாக அமைந்தது. " 'Stop the war' Don't be the first to start the war" என்பதே எமது கோசமாக காணப்பட்டது. (யுத்தத்தை உடனடியாக நிறுத்தவும். அதனை மீண்டும் அரம்பிப்பதற்கும் காரணமாக இருக்க வேண்டாம்) அதனோடு சிவில் அமைப்புக்கள் மட்டுமன்றி மக்கள் கட்சி போன்ற அரசியல் கட்சியினரும் இணைந்தார்கள். கொழும்பில் இருந்து வவுனியா சென்ற யுத்ததத்துக்கு எதிராக புகையிரத வண்டியும் விசேடமாக குறிப்பிடப்பட வேண்டிய ஒரு நிகழ்ச்சித்திட்டம் ஆகும்.

பதுளை மானெல் ரத்நாயக்காவும் அக் காலகட்டத்தில் யுத்ததத்துக்கு எதிரான இயக்கத்தின் ஒரு பிரதான செயற்பாட்டாளராக இருந்தார். பாரிய கூட்டங்கள், பேரணிகளை ஏற்பாடு செய்வதற்கான ஓர் அபூர்வ ஆற்றல் அவரிடம் காணப்பட்டது. எனது ஞாபகத்தின் பிரகாரம் CPA அமைப்பின் பணிக்குழாத்தினர் இவ்வாறான செயற்பாடுகளில் அவ்வளவு தூரம் ஈடுபாடு கொள்ளாத போதும் கலாநிதி சரவணமுத்து அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களுடனும் இணைந்து செயற்பட்டார். நாம் நிறுவன ரீதியாக ஒன்றிணைந்து மேற்கொண்ட பணிகளும் காணப்பட்டன. ஒரு முறை CPA இன் வழிகாட்டலில் பல்வேறு மாவட்டங்களில் தொடர் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் அவை மனித உரிமைகள் மற்றும் ஜனநாயம் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களாக காணப்பட்டதென நான் நினைக்கிறேன். ஏனைய பிரதேசங்களில் அவர்கள் அப் பணியினை தனியாக மேற்கொண்ட போதும் யாழ்ப்பாணத்தில் நடாத்த முடியவில்லை. அதனை ஏற்பாடு செய்யும் பணிகளை நாம் பொறுப்பேற்றோம். அதனை மிகவும் வெற்றிகரமாக நடாத்துவதற்கு முடிந்ததுடன் TNA உறுப்பினர்கள் கூட அதில் பங்கேற்றார்கள்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் இருபத்தைந்து ஆண்டு காலம் பாரிய சவால்களுக்கு மத்தியில் பயணித்த துணிச்சல் மிக்க பயணம் ஆகும். வன்முறைகள் இடம்பெற்ற காலத்தில் கூட சளைக்காது, ஆட்டம் கொள்ளாது செயற்பட முடிந்தது. அத்துடன் வழக்குத் தாக்கல் செய்தல் ஆகியன மூலம், அப்போதிருந்த அரசாங்கங்களுக்கு ஒரு சிவில் அமைப்பு என்ற ரீதியில் சவால் விடுத்த பல சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

தற்போதைய இலங்கையின் அரசியல் நிலைமை கடந்த காலங்களை விட முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. சமூகமும் பெருமளவு மாற்றம் கண்டுள்ளது. கொவிட் பெருந்தொற்று எமக்கு மட்டுமன்றி முழு உலகுக்கும் ஒரு சவாலாக மாறி உள்ளது. ராஜபக்ஷ குடும்ப ஆட்சி மற்றும் அது பயணிக்கும் திசை ஆகியன தற்போது இலங்கையில் காணப்படும் மற்றைய பிரதான பிரச்சினை ஆகும். தற்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் அமைச்சரவையின் அங்கத்தவர்களாக உள்ளார்கள். உலகின் பல கட்சி பாராளுமன்ற ஜனநாயகம் நடைமுறைப்படுத்தப்படும் எந்தவொரு நாட்டிலும் இவ்வாறான உதாரணங்கள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. தேர்தலில் போட்டியிடாத பசில் ராஜபக்ஷ திடீரென நாட்டின் நிதி அமைச்சராக மாறினார்.

இவை பாரதூரமான ஒரு விடயமாக உள்ள போதும் அதற்காக அவ்வளவு பதில் தெரிவிப்பு சிவில் சமூகம் சார்பில் காணக் கிடைக்கவில்லை. இது பற்றி பாரதூரமான ஒரு கலந்துரையாடல் ஏற்படுத்தப்படல் வேண்டுமென நான் நினைக்கின்றேன். அதே போன்று எதிர்காலத்தில் நாம் மேற்கொள்ளும் அனைத்து செயற்பாடுகளின் போதும் சிங்களம், தமிழ், முஸ்லிம் ஆகிய அனைவரினதும் பங்களிப்பு மிகவும் முக்கியமான ஒரு விடயம் என்பதை விசேடமாகக் குறிப்பிடுதல் வேண்டும். நாம் செயற்பட்ட காலகட்டத்தை விடவும் தற்போது அது இன்றியமையாத ஒரு விடயமாக உள்ளது. தொடர்ந்தும் எதிர்கால சவால்களுக்கு வெவ்வேறு தீர்வு காணுதல் செல்லுபடியாகாது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தற்போதைய நெருக்கடிகளுக்குரிய மாற்று வழிகளைக் கண்டறிய பிரார்த்தனை செய்கிறேன்.

---

**விமல் பிரனாந்து**

தொழில் ரீதியாக ஓர் ஆசிரியர் ஆவார். இலங்கை ஆசிரியர் சங்கத்தின் அமைப்புச் செயலாளராகப் பணிபுரிந்தார். MDDR நிறுவனத்தின் ஓர் ஆரம்ப காரணகர்த்தாவும் சிவில் சமூக செயற்பாட்டாளரும் ஆவார். இலங்கையில் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களை தாபிப்பதில் முன்னோடியாக செயற்பட்ட ஒருவர்.

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பல்வேறு சந்தர்ப்பங்கள் கமராக் கோணங்களில்



1997ம் ஆண்டு நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டமொன்று கலாநிதி. பா. சரவணமுத்து, கலாநிதி ஜயதேவ உயன்கொட, கலாநிதி ஷெல்ட்டன் வனசிங்க, சுனில் பஸ்ட்டியன், ரொஹான் எதிரிசிங்க, பிரட்மன் வீரக்கோன் மற்றும் திருமதி. சயரினி சிறிவர்தன



சசி மெண்டிஸ், கமல் நிஸ்ஸங்க, லயனல் குருகே - 1997ம் ஆண்டு இலக்கம் 32/3, ஃபிளவர் வீதி அலுவலகத்தில்



சுந்தரி த அல்விஸ், சாவித்திரி தேவி இராமையா 1997ம் ஆண்டு ஃபிளவர் வீதி அலுவலகத்தில்



1997 உள்ளூராட்சி தேர்தலின் பின்னர் கலாநிதி அர்ஜுன பராக்கிரமவால் நெறியாளப்பட்ட பணிக்குழு செயலமர்வொன்று.
சசி மென்டிஸ், லயனல் குருகே, கமல் நிஷ்ஷங்க, உதய இதிரிமான்ன, அல்தாப் ஹுசைன், சாவித்திரி, உதித்த, தேவி உள்ளிட்ட குழுவினர்



1997 உள்ளூராட்சித தேர்தலின் பின்னர் கலாநிதி அர்ஜுன பராக்கிரம அவர்களால் நெறியாளப்பட்ட பணிக்குழு செயலமர்வில் கலந்து கொண்ட தேவி, சாவித்திரி, உதித்த, சுந்தரி, அல்தாஃப்



தேஷினி, மேனக்கா, தில்ஷிக்கா ஜயமஹா, ஜீன் கொட்லீஃப் - 32/3 ஃபிளவர் வீதி அலுவலகத்தில் 1998



உள்ளூராட்சி தேர்தல் யாழ்ப்பாண மாவட்டம் - 1998
தேர்தலின் பின்னர் CMEV யால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட சுனந்த தேசப்பிரிய, வருண கருணாதிலக்க, கலாநிதி பா. சரவணமுத்து மற்றும் கலாநிதி அர்ஜுன பராக்கிரம



1999 வடமேல் மாகாணத் தேர்தலில் குண்டர்களால் பலவந்தமாக வாக்குப் பெட்டிகள் நிரப்பப்படும் சந்தர்ப்பம். தேர்தல் உத்தியோகத்தர்கள் ஒருபுறம் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். CMEV கண்காணிப்பாளரொருவரின் கமராக் கண்ணுக்குள் சிக்கிய குறிப்பு.



ஆதிவாசிகளின் உரிமைகள் பற்றிய கலந்துரையாடல் 1999ல் தம்பானையில் இடம்பெற்றது. ஆதிவாசிகளின் தலைவர் ஊறுவர்கயே வன்னிலா அத்தோவுடன் கலாநிதி பா.சரவணமுத்து, அன்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் பணியாற்றிய சமித்த ஹெட்டிகே, லயனல் குருகே, சர்தா அல்விஸ், விஜயன், சிவகுருநாதன், நுவன், சிசிர ஆகியோர்



1999 ல் இலக்கம் 32/3 , பிளவர் வீதியில் அமைந்த அலுவலகத்திற்கு வருகை தந்த ஊறுவர்கயே வன்னிலா அத்தோவுடன் கலாநிதி சரவணமுத்து



விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையிலான சமாதான ஒப்பந்தத்தின் போது இடைக்கால நிர்வாகம் பற்றி சிவில் சமூகம் கருத்துத் தெரிவித்த வேளையில், பத்மினி ராஜதுரை, கலாநிதி பொன்னா விக்னராஜா, ஜனாதிபதி சட்டத்தரணி டெஸ்மன்ட் பிரனாந்து, விசாக்கா தர்மதாஸ, சாந்தி சச்சிதானந்தன், கலாநிதி ஜயம்பத்தி விக்ரமரத்தின ஆகியோர்



2002 ல் ஒருங்கிணைந்த செயலணி - முதலாவது வரைபட கூட்டத்தில் பங்குபற்றிய கேதீஸ் லோகநாதன், மிலிந்த மொரகொட, கலாநிதி சரவணமுத்து, ரவூப் ஹக்கீம், ஜீ.எல்.பீரிஸ், பர்கோஃப் இன் நோபட் ரூபஸ்



இலங்கையின் நிதிச் சமஷ்டியும் அரசியலமைப்பு சீர்திருத்தங்களும் பற்றிய கருத்தரங்கு - 2003.04.07
சுனில் பஸ்ட்டியன் மற்றும் கலாநிதி ஷெல்ட்டன் வனசிங்க




மனித உரிமைகளும் சமாதான நடவடிக்கைகளும் பற்றிய சிவில் சமூகத்தின் கருத்துக்கள் தொடர்பான ஆய்வு அறிக்கைக் கலந்துலையாடல் 2003.03.11ல் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றது. கனடாவின் ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தரப் பிரதிநிதி இயன் மார்ட்டின், கலாநிதி பா.சரவணமுத்து, பேராசிரியர் கௌரவ பொப் ரே - மெல்போர்ன் சட்ட பீடம் - இலங்கை மன்றக் கல்லூரி



சமாதானமும் அபிவிருத்தியும் - டோக்கியோ கலந்துரையாடலுக்கான மார்க்கம் - நிமல்கா பிரனாந்து, கிங்ஸ்லி றொட்ரிகோ - 2003.04.26



கல்வியும் ஊடகமும் பற்றிய ரைட்டன் செயலமர்வு - நெறிமுறை முகாமைத்துவம் - கலாநிதி ரதிக்கா குமாரசுவாமி



மொனராகலை, விபுலானந்த தமிழ் வித்தியாலயத்தில் இடம்பெற்ற சமூகத் தலைவர்களின் சந்திப்பு - கலாநிதி பா.சரவணமுத்து - 2003.10.11



மொனராகலை, கொட்டியாகலை வித்தியாலயத்தில் இடம்பெற்ற சிவில் சமூகக் கூட்டம் - சுனந்த தேசப்பிரிய - 2003.08.15




இலங்கையின் அரசியலமைப்பு விவகாரங்கள் பற்றிய கருத்தரங்கு - நிக்கலஸ் ஹேஸம் - தென்னாபிரிக்காவின் நெல்சன் மெண்டலாவின் சட்ட ஆலோசகர்
கலாநிதி பா.சரவணமுத்து, பேராசிரியர் சுஜித் சவுத்ரி, பேராசிரியர் மிக்கிசென் - 2003.03.26




இலங்கையின் நிதி சமஷ்டிவாதமும் அரசியலமைப்பு விவகார மறுசீரமைப்புகளும் பற்றிய கருத்தரங்கு -2003.04.07
கலாநிதி ஜயம்பத்தி விக்ரமரத்ன, ரொஹான் எதிரிசிங்க, பேராசிரியர் செரில் சோண்டர்ஸ், அசங்க வெலிக்கல மற்றும் ஜொலி சோமசுந்தரம்



சமஷ்டி பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் செயலமர்வு - பிரவுன் பீச் ஹோட்டல், நீர்கொழும்பு
எஸ்.ஜீ. புஞ்சிஹேவா, எஸ். சிவகுருநாதன், சிரால் லக்திலக்க - 2005





சமஷ்டிவாதம் பற்றிய தேசிய மாநாடு, பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபம் - 2006.02.06



கொழும்பு ஹில்ரன் ஹோட்டலில் நடந்த இடைக்கால நிர்வாகம் பற்றிய அரசினதும் விடுதலைப் புலிகளினதும் முன்மொழிவுகள் பற்றிய கலந்துரையாடலில் பங்குபற்றிய கலாநிதி பா.சரவணமுத்து, ஆர்.சம்பந்தன், ரொஹான் எதிரிசிங்க, குமார் பொன்னம்பலம்

2003.11.07




வெளிப்படைத்தன்மை பற்றிய இலக்குக் குழுக் கலந்துரையாடல்

2003.05.19 - கௌரி பொன்னையா




வெளிப்படைத்தன்மை பற்றிய இலக்குக் குழுக் கலந்துரையாடல்

2003.05.19-சஞ்சன ஹத்தொட்டுவ



வெளிப்படைத்தன்மை பற்றிய இலக்குக் குழுக் கலந்துரையாடல் - பிரட்மன் வீரக்கோன் - 2003.05.19




அறிவு, மனப்பாங்கு மற்றும் நடைமுறை பற்றிய ஆய்வு அறிக்கையைச் சமர்ப்பித்தல் பற்றிய கருத்தரங்கு, கலாநிதி க்வெண்டொலின் பெவஸ், ஏஈடி நிறுவனத்தின் முன்னாள் உதவி நிகழ்ச்சித்திட்ட அதிகாரி, ஜெஃப்ரி லுன்ஸ்டெட் - இலங்கை மற்றும் மாலைதீவுகள், கலாநிதி பா.சரவணமுத்து - மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர், கிம் ஸே. டிரைடர் - நிறுவன பிரதானி, இலங்கை ஏஈடி நிறுவனம், பேராசிரியர் வில்லியம் மிஷ்லர் - அரிசோனா பல்கலைக்கழகம், கலாநிதி பிரதீப் பீரிஸ் - மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சோஷல் இண்டிகேட்டர் பிரிவின் துறைத் தலைவர்.



சாள்ஸ் அபயசேக்கர



பேராசிரியர் ஜயதேவ உயன்கொட



ரொஹான் எதிரிசிங்க

# 1996

## 1996 முதலாவது பணிப்பாளர் சபை

### 25 ஆண்டு ப

பணிப்பாளர் சபை

திரு. சார்ள்ஸ் அபயசேக்கர

திரு. சுனில் பஸ்ட்டியன்

திருமதி அனுஷா குமாரசுவாமி

திரு. மொஹமட் சமீர் கரீம்

திருமதி சாகரிக்கா தெல்கொட

மினோலி டி சொய்சா

திரு. சுனந்த தேசப்பிரிய

கலாநிதி சுகன்யா தேவராஜன்

திரு ரொஹான் எதிரிசிங்க

திரு திஸ்ஸ ஜயதிலக்க

திருமதி சகுந்தலா கதிர்காமர்

கேதீஸ்வரன் லோகநாதன்

ஃபராஹ் மிஹ்லா



சுனில் பஸ்ட்டியன்



சயாரினி சிறிவர்தன



பிரட்மன் வீரகோன்



நிறைவேற்றுப்பணிப்பாளர் 1996 கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து



பேராசிரியர் சந்திரகுப்த தேநுவர



அரித்த விக்ரமசிங்க



சந்தன லால் சில்வா



மினோலி டி சொயிஸா

## ணிப்பாளர் சபை

திரு. ஃபாயிஸ் மொஹிதீன்

பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம

கலாநிதி தினுஷா பண்டித்தரத்ன

திருமதி கௌரி பொன்னித்

திருமதி ஜீன் சாமுவேல்

திருமதி சயரினி சிரிவர்தன

அனுஷா ஸ்டெனிஸ்லஸ்

பேராசிரியர் சந்திரகுப்த தேநுவர

பேராசிரியர் ஜயதேவ உயன்கொட

கலாநிதி ஷெல்டன் வனசிங்க

திரு. பிரட்மன் வீரகோன்

திரு. அரித்த ஆர். விக்ரமநாயக்க

திரு. அரித்த விக்ரமசிங்க

திரு. ஜாவிட் யூசுப்

# 2021

## தற்போதைய பணிப்பாளர் சபை



தினுஷா பண்டித்தரத்ன



சுகன்யா தேவராஜன்



மருத்துவர் மொஹமட் சமீர் கரீம்



நிறைவேற்றுப்பணிப்பாளர் 2021
கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து

# 25 வருட பயணத்தின் நிகழ்கால பங்குதாரர்கள்

வெள்ளி விழா (2021, ஜூன் 17ஆம் திகதியின் படி)



லயனல் குருகே



திலுபா அத்துலவன்ச



ஹுசந்தா ஹேமாலி



கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து
நிறைவேற்று பணிப்பாளர்



தாரணி அரவிந்த்



மஞ்சுள கஜநாயக



சுஜித் குமார



நாலக பிரியதர்ஷன



ப. விஜயன்



எஸ்.எச்.எம். ஷிப்ராஸ்



பி.பி.ஜே. பெரேரா
பிரதம தொழிற்பாட்டு உத்தியோகத்தர்



நிரோஷா சுபாஷினி



அப்துல் வாஹிட் அஸிராஜ்



சத்துரங்க சந்தருவன்



அயுத்யா கஜநாயக



ரெபேக்கா டேவிட்



தில்கி மதுஷிகா



ஏ.எம்.எம். விக்டர்



மினொலி டி சொய்சா



மா. கிருஷ்ணமூர்த்தி | ஜயாபுரி ரமேஷ் | பவானி பொன்சேகா | ஸ்ரீயானி விஜேசுந்தர | அஷோக ஹேரத



சுந்தரம் கமலாதேவி | சம்பத் சமரகோன் | செல்வராஜா ராஜசேகர் | சுமேத குமார் | நாலக சமரகோன்



சகினா மொய்னுதீன் | லுவி கனேசதாசன் | மு. பிரதீபன் | லஹிரு கிதலகம | ச. காடியவசம்



ஹர்ஷினி அமரசிங்க | ஹிரந்த இசுரங்க | நதீகா விட்டாச்சி | உவின் திசாநாயக்க | இனோகா பெரேரா



நிவேதா ஜெயசீலன் | குஷ்மிலா ரணசிங்க | சார்யா சமரகோன் | ப்ரனித் வீரசிங்ஹ | நிரோஷன் கலுவாராச்சி



நல்லாட்சியும் ஜனநாயகமும் பற்றிய அனைத்துப் பல்கலைக்கழகங்களின் விவாதம் - ஊடகச் செயலமர்வு, கலாநிதி ரோஹன லக்ஷ்மன் பியதாச, கலாநிதி ஆரியரத்ன அத்துகல, கலாநிதி சுனில் விஜேசிறிவர்தன, சுனந்த தேசப்பிரிய உட்பட பல்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர்களும் தோன்றிய புகைப்படம் - 2005.10.30




நல்லாட்சியும் ஜனநாயகமும் பற்றிய அனைத்துப் பல்கலைக்கழகங்களின் விவாதம் - பங்குபற்றிய கல்வியியலாளர்கள்: கலாநிதி பா.சரவணமுத்து, சரித்த ஹேரத் மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் - 2005.10.30



சமஷ்டி கருத்தியல் - தேசிய கருத்தரங்கு, பேராசிரியர் ஜயதேவ உயன்கொட, கலாநிதி நேசையா
பண்டாரநாயக்க கருத்தரங்கு மண்டபம் - 2006.02.06.




யாழ். பொது நூலகம்- சயிரினி சிறிவர்தன - 2006.02.16




அனைத்து பாடசாலைகளுக்கிடையிலான பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டம் - லயனல் குருகே - பசறை - 2006.09.30



அனைத்து பாடசாலைகளுக்கிடையிலான பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டம் - மஞ்சுள கஜநாயக்க - பசறை - 2006.09.30




மாகாண சபைகளுக்கு 20 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு அனைத்து மாகாண சபைகளும் சமர்ப்பித்த சுருக்கமான முன்மொழிவுகளையிட்டு இடம்பெற்ற செயலமர்வு - ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, சட்டத்தரணி எஸ்.ஜீ. புஞ்சிஹேவா, மத்திய மாகாண சபை முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, அமெரிக்கத் தூதுவர், கலாநிதி பா.சரவணமுத்து, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தென் மாகாண சபை முதலமைச்சர் சான் லால் டி சில்வா மற்றும் ரொஹான் எதிரிசிங்க 2008.5.28




Power Sharing of CPA Book - நூல் வெளியீட்டு விழாவில் பங்குபற்றியோரிடையே ரவூப் ஹக்கீம், ரணில் விக்ரமசிங்க மற்றும் மங்கள சமரவீர – 80 Club ஹோட்டலில்



Power Sharing of CPA Book - நூல் வெளியீட்டு விழாவில் பங்குபற்றியோரிடையே திஸ்ஸ ஜயதிலக்க, அநுஷா குமாரசுவாமி, பிரட்மன் வீரக்கோன், சந்திரா ஜயரத்ன, சுனேத்திரா பண்டாரநாயக்க, ஊஷா சரவணமுத்து, குமுதினி சரவணமுத்து ஆகியோர் - 80 Club ஹோட்டலில்



Power Sharing of CPA Book - நூல் வெளியீட்டு விழாவில் பங்குபற்றியோரிடையே ஒஸ்ரின் பிரனாந்து, சஞ்சன ஹத்தொட்டுவ, விசாக்கா தர்மதாச ஆகியோர் - 80 Club ஹோட்டலில்



தென்னாசியப் பிராந்தியத்தின் வெளிப்படைத்தன்மைவாய்ந்த வரவு-செலவு ஆய்வின் பெறுபேறுகளைச் சமர்ப்பித்தல் - சினமன் கிரான்ட் ஹோட்டலில்
2010.11.24 - கலாநிதி ஷெல்ட்டன் வனசிங்க, கருஜயசூரிய



விருந்தினரிடையே எரான் விக்ரமரத்ன - சிறியானி விஜேசுந்தர



கலாநிதி பா.சரவணமுத்துவிற்கு - பிரஜைகள் சமாதான விருது வழங்கப்பட்ட விழா
இலங்கை மன்றக் கல்லூரி - 2011.02.28



ஜனநாயகம் பற்றிய ஆய்வுகள் - உத்தியோகத்தர்களின் நிகழ்ச்சித்திட்டம் -2015
கலாநிதி பா.சரவணமுத்து மற்றும் சகினா மொயுனுடீன்



நுவரெலியா அல்பெயின் ஹோட்டலில் இடம்பெற்ற உள்ளூராட்சி அதிகார சபை செயலமர்வின்போது சிறியானி விஜேசுந்தர - 2014.05.20



காலியில் இடம்பெற்ற புதிய அரசியலமைப்பிற்கான கலந்துரையாடலில்
பேராசிரியர் உப்புல் அபேரத்ன





அதிகாரத்தின் பயணப் பாதை பற்றிய கண்காட்சி - 2015.09.16 லயனல் வெண்ட் கலையரங்கு - 3வது மாதிரி







நுவரெலியா மொக்காவத்த பேருந்தோட்டப் பகுதியின் பொது மக்களுக்கு முகவரிகளை வழங்குவதற்கு முன்னர், கலாநிதி பா.சரவணமுத்து தொடக்க விழாவில் பங்கு கொள்கிறார் -2016.03.05



நுவரெலியா மொக்காவத்த பேருந்தோட்டப் பகுதியின் பொது மக்களுக்கு முகவரிகளை வழங்கும் வைபவம் -2016.03.05




பசறை பிரதேசத்தில் முகவரிகளை வழங்குதல் - 2016


The Centre for Policy Alternatives (CPA) &
the Vibhavi Academy of Fine Arts (VAFA)
invites you to

**உண்மை to සත්‍යය**

*Truth to Truth*

Commemorating the International Day for the Right to the Truth concerning Gross Human Rights Violations and for the Dignity of Victims on 24th March

The exhibition opens with a panel discussion on the Right to Truth on

***24th March 2016 at 4.30 pm***

It will thereafter be open from

***25th – 28th March***
***10 am – 7 pm***

**JDA Perera Gallery**
**No. 46, Horton Place**
**Colombo 7**

VIBHAVI ACADEMY OF FINE ARTS

20 YEARS CPA 1996-2016



Truth to Truth ஓவியக் கண்காட்சியில் பங்கு பற்றிய பவானி பொன்சேக்கா, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, பேராசிரியர் சந்திரகுப்த தேநுவர



அனைத்து அமைச்சுக்களிலும் மொழிக் கணக்காய்விற்காக அரசகரும மொழிகள் அமைச்சும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டபோது, ரஞ்சித் உயன்கொட, மேலதிகச் செயலாளர் உவைஸ், கலாநிதி பா.சரவணமுத்து மற்றும் லயனல் குருகே - 2016



மொழிக் கணக்காய்வின் பின்னர் லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் பங்குபற்றியோர் - கலாநிதி பா.சரவணமுத்து, நெதர்லாந்துத் தூதுவர், அன்றைய அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன், முன்னாள் அரசகரும மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார, சட்டத்தரணி எஸ்.ஜீ.புஞ்சிஹேவா உட்பட்ட பிரமுகர்கள் - 2017




கலாநிதி அசங்க வெலிகல - ஹர்சான் குமாரசிங்கத்தின் "Road to Temple Trees" என்ற நூல் வெளியீட்டின்போது ஓரியன்ட் கிளப்



ஹம்பாந்தோட்டையில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றப் பெண் பிரதிநிதிகளின் மாவட்ட மாநாடு - 2017



அரசாங்கத்திற்கு எதிரான சதி பற்றிய வழக்கு விசாரணையில் வெற்றியீட்டிய பின்னர், ஆய்வு மற்றும் ஆதரித்து வாதடல் அணி - இடமிருந்து வலமாக - விரான்கொரெயா, ஜெஹுசா குரெசட் தம்பையா, பவானி ஃபொன்சேக்கா, ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி கனகஈஸ்வரன், மொஹான் பாலேந்திரா, எம்.ஏ.சுமந்திரன், எர்மிசா ரீகல், இன்சிரா ஃபாலிக்




பூகோள ஜனநாயகம் பற்றிய அறிக்கை வெளியிட்டபோது, ஒத்துழைப்பு - இன்டர்நெஷனல் ஐடியா நிறுவனம், கலாநிதி பா.சரவணமுத்து, பேராசிரியர் ரத்னஜீவன் ஹூல் - 2019 கொழும்பு



ஜனாதிபதித் தேர்தலை அவதானிப்பதற்கு சர்வதேச தேர்தல் அவதானிப்பாளர்கள் என்ற வகையில் ஒன்றிணைந்த சுதந்திரமான தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பு (ANFREL) உட்பட இந்த அவதானிப்பு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்த தரப்பினரது கலந்துரையாடலின் இறுதியில் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுடனும் ஏனையோருடனும். இடமிருந்து வலமாக - பேராசிரியர் கப்பில் சேஸ்தா - NEOC நேபாளம், சீ. தொடாவத்தை - சுதந்திர ஊடக இயக்கம், மஹிந்த தேசப்பிரிய - முன்னாள் தவிசாளர் - தேர்தல் ஆணைக்குழு, மஞ்சுள கஜநாயக்க - தேசிய இணைப்பாளர் - (CMEV), உதய களுபத்திரண - (INFORM) நிறுவனம், பேராசிரியர் ரத்னஜீவன் ஹூல் - முன்னாள் உறுப்பினர் தேர்தல் ஆணைக்குழு, கலாநிதி பா.சரவணமுத்து - நிறைவேற்றுப் பணிப்பாளர் - மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், ரோஹன ஹெட்டியாரச்சி - நிறைவேற்றுப் பணிப்பாளர் - பஃவ்ரல் அமைப்பு, சீ.சவரிமுத்து - பொருளாளர் - பஃவ்ரல் அமைப்பு - 2019.11.16




2020 ஆகஸ்ட்டில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலின்போது, தேர்தல் பரப்புரை ஆகுசெலவு பற்றி இலங்கை பூராவும் இடம்பெற்ற கண்காணிப்புப் பெறுபேறுகளின் வெளியீடு தொடர்பான ஊடகக்கலந்துரையாடல் - சீதா ரஞ்சனி, உதய களுபத்திரன, மஞ்சுள கஜநாயக்க, கலாநிதி பா.சரவணமுத்து, ஏ.எம்.என்.விக்டர்




2021 நவம்பர் 15ஆம் திகதி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையப் பணிப்பாளர் சபையின் கௌரவத் தவிசாளர் பேராசிரியர் சந்திரகுப்த தேநுவர "தேயிலைச் சாயம்" என்ற புகைப்படங்கள் அடங்கிய நூலை வெளியிட்டு வைக்கின்றார்.



தேயிலைச்சாயம் புகைப்படக் கண்காட்சியின் மாணவர்களும் ஏற்பாட்டு அணியினரும்



FNF அநுசரணையின் கீழ் தகவல் அறியும் உரிமையும் ஊடகப் பயன்பாடும் பற்றிய கருத்தரங்கின்போது பங்குபற்றிய உரைஞர்கள் - இடம் இருந்து வலமாக டில்ருக்ஷி ஹந்துன்நெத்தி, லக்ஷ்மன் குணசேக்கர, கலாநிதி பா.சரவணமுத்து, காஞ்சன தசநாயக்க, பேராசிரியர் ரொஹான் சமரஜீவ, 2021 ஜனவரி 21 கொழும்பு ரேணுக்கா ஹோட்டல்




FNF அனுசரணையின் கீழ் தகவல் அறியும் உரிமையும் ஊடகப் பயன்பாடும் தொடர்பான கருத்தரங்கின்போது சிரேஷ்ட ஊடகவியலாளர் நாலக்க குணவர்தன உரையாற்றுகிறார்.



தேர்தல் மறுசீரமைப்புச் சட்டத் திருத்தம் பற்றிய பாராளுமன்ற செயற்குழுவிற்காக, தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான மத்திய நிலையத்தினால் தயாரிக்கப்பட்ட முன்மொழிவுகளை, மேற்படி பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தவிசாளர் அமைச்சர் தினேஷ் குணவர்தனவிடம் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பா.சரவணமுத்து ஒப்படைத்தார் -2021 ஆகஸ்ட்

# மாற்றுவழியொன்றைத் தேடிச் செல்லும் நீண்ட பயணத்தின் ஆரம்பம்



**மஹிந்த ஹத்தக்க**

இருபத்தைந்து வருடங்கள் எனப்படுவது மனித வரலாற்றில் ஓர் சிறிய இடைநிறுத்தம் மட்டுமே. எனினும் இலங்கையில் கடந்த இருபத்தைந்து வருடங்களானவை - அதன் வரலாற்றில், சமூக, பொருளாதார, மற்றும் அரசியல் ரீதியிலான பல்வேறு விடயங்கள் தொடர்பில், தீர்மானமிக்கதொரு மைல்கல்லாகும். நாட்டில் முப்பது வருடங்கள் காணப்பட்ட ஆயுத மோதல்கள், அரசியற் சிந்தனைகளைப் போன்றே, யுத்தம் முடிவடைந்து ஒரு தசாப்தத்திற்கும் மேலான காலம் கடந்துள்ள போதும், அவை, மக்களுடைய வாழ்வில் ஏற்படுத்திய அதிர்வுகளும் பாதிப்புகளும் இன்னமும் கடந்து போய்விடவில்லை. அவ்வாறானதொரு யுகத்தில் இருபத்தைந்து வருடங்களைப் பூர்த்தி செய்திருக்கும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தை சவால் மிக்கதும் அவ்வாறே புதிய பாதைகளைத் திறக்கும் வழிகாட்டியாகவும் இனங் காணலாம்.

உலகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டதைப் போன்றே, சட்டம், நியாயம், நீதியை மதித்தல் என்பவற்றை தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக கால் தூசாகக் கருதிய ஒரு யுகத்தில் மனித நேயத்திற்காகவும் மானிடம் மீதான மதிப்பிற்காகவும், முன்வருவதும் நாகரீகமான சமுதாயமொன்றில் காணப்பட வேண்டிய அடிப்படைப் பண்புகளை மக்கள் மயப்படுத்துவதற்கு முயற்சி எடுத்தலும் உண்மையிலேயே சவால் மிக்கதும் ஆபத்தானதுமான பணியாகும். அவ்வாறான பணியைத்தான் கடந்த இருபத்தைந்து வருட காலத்திற்குள், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் நிறைவேற்றுவதற்கு தன்னை அர்ப்பணித்தது என நான் நினைக்கின்றேன்.

தேசிய இறையாண்மைக்கும் பொருளாதார சுபீட்சத்திற்குமான புதிய பயணப் பாதையொன்றை மக்களுக்கு திறந்து வைக்கும் நோக்கில், ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து மீண்டு, சுதந்திரத்தைப் பெற்று ஏழு தசாப்தங்கள் கடந்துள்ள போதும் எமக்கு அவையனைத்தும், தொடுவானத்திற்கு அப்பாலுள்ள ஆசைகளுடன் கூடிய எதிர்பார்ப்புகளாக மட்டுமே இருந்துள்ளன. கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, நாட்டு மக்களால்

தாம் விரும்பியவாறு ஆட்சியாளர்களைச் சுதந்திரமாக நிறைவேற்றப்பட்ட சட்ட விதிகளுக்கு ஏற்ப, தேர்ந்தெடுக்கக் கூடிய வாய்ப்பு உரித்தாகி இருந்தாலும், அதனை மீண்டும் திரும்பிப் பார்க்கும் போது, சுதந்திரமான வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல்வாதிகள் மக்களின் நலனைக் கட்டியெழுப்பி கச்சிதமான சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதில் கவலையளிக்கின்ற வகையில் தோல்வியடைந்துள்ளனர். கொள்கை ரீதியான அரசியலுக்குப் பதிலாக சந்தர்ப்பவாத சுயநலமிக்க செயல்முறைகளில் ஈடுபட்டதால் இலங்கை மக்கள் முன்னொரு போதும் இல்லாதவாறு, பிளவுபட்டுள்ளனர். மக்களின் அடையாளத்தையும், நாகரீகத்தையும் சுட்டிக் காட்டுகின்ற, மதம், இனம் மற்றும் மொழி என்பவற்றை, அதற்கு முற்றிலும் மாறுபட்ட கொடூரத்தையும், மிலேச்சத்தனத்தையும் வெளிப்படுத்துகின்ற குறிகாட்டிகளாக மாற்றியமைப்பதற்கு, ஒவ்வொரு மக்கள் பிரிவினருக்கும் உரித்தான அரசியல்வாதிகள், வழிகாட்டியுள்ளனர். முப்பது வருட யுத்தம் அதன் ஒரு வெளிப்பாடு மட்டுமே.

எம்மாலேயே உருவாக்கப்பட்டு, வளர்க்கப்பட்டுள்ள இந்த மோகத்திலிருந்தும் இருளிலிருந்தும் மீள்வதற்கான வழிவகையொன்றை வெளிப்படுத்திக் கொள்ள எம்மால் இயலாமற் போனது உண்மையில் துர்பாக்கியமே. பெரும் எதிர்பார்ப்புகளுடன், சுதந்திரமான வாக்களிப்பால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற தலைவர்களும் அரசியற் குழுக்களும், அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் அவையனைத்தையும் மறந்துவிட்டு சுய முன்னேற்றம் மற்றும் வாக்குறுதிகளை வழங்கி, தாம் பெற்றுக் கொண்ட அதிகாரத்தைத் தமது பாரம்பரியமாக மாற்றிக் கொள்வதில் முன்னிற்பது, எமது துரதிர்ஷ்டவசமான அனுபவமாகும். அதனால், நாம் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தைக் காட்டிலும், அதற்கு முன்னர் இருந்த நிலைமை சிறந்தது என பெருமூச்சு விட நேர்ந்துள்ளது. விண்ணை முத்தமிடும் கட்டிடங்களையும் அதிவேக வீதிகளையும் வடிவமைத்தாலும், மேலும் வேகமாக படுகுழியை நோக்கிச் செல்கின்றோம். அபிவிருத்தியின் பெயரால் பெற்றுக் கொண்ட கடனை அடைக்க முடியாமல் தெற்காசிய நாடுகளில் மிக வறிய நாடு எனக் கருதப்படும் பங்களாதேஷிடமும் கையேந்தி நிற்க வேண்டியிருப்பதைக் கொண்டு விழுந்துள்ள படுகுழியின் அளவை எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது.

இரத்தம் சிந்தாமல், கணிசமான அளவு நிதி வளத்துடன் கூடிய சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்ட எம்மால் அன்றிருந்த வாழ்க்கை நிலையைக் கூட பேணிச் செல்ல முடியாமற் போனது ஏன் என்பது பற்றி முன்னணி அரசியலில் கலந்துரையாடலுக்கு உட்படவே இல்லை எனலாம். அரசியலை தமக்கேயுரிய சுபீட்சத்தை நோக்கிச் செல்லும் பயணத்தின் சாதனமாக மாற்றிக் கொண்டுள்ள அரசியல்வாதிகள், தமது செயற்பாடுகளுக்கும் கொள்கைகளுக்குமிடையிலான பொருத்தமின்மையையும் குறைபாடுகளையும் தேசீயம், இனப்பற்று மற்றும் மதம் போன்ற திரைகளைக் கொண்டு மறைக்க முயற்சித்தார்கள். நவீன அறிவுபூர்வமான அறிவையும் விதிமுறைகளையும் இனவாதத்தைச் சுமந்து கொண்டு ஏனைய மக்கள் பிரிவினரின் அடிப்படை உரிமைகளைக் கூட அடக்கும் சிந்தனைகளைக் கொண்டு புறந்தள்ளி விடுகின்றனர். அவர்கள் அக்காரணங்களை கடந்த காலத்தில் இருந்ததாகச் சொல்லப்படும் பெருமையால் நியாயப்படுத்துகிறார்கள். இங்கு நான் உலகப் புகழ்வாய்ந்த விஞ்ஞானியைப் போன்றே, உயர்மட்ட அரசியல் பகுப்பாய்வாளரான அம்ரித்யா சென் அவரது Argumentative Indian என்ற புத்தகத்தில் மேற்கோள் காட்டப்பட்டு மகாகவி ரவீந்திரநாத் தாகூரின் சில வரிகளை நினைவுபடுத்த முடியும். “நாம் மனிதனின் படைப்பொன்றைப் புரிந்து கொள்ளும் போதும், அனுபவிக்கும் ஒவ்வொரு தருணத்திலும், அது எந்தப் பிரதேசத்திலிருந்து வந்திருந்தாலும் அது எம்முடையதேயாகும். வேறு நாடுகளில் கவிஞர்களையும், கலைஞர்களையும், எம்முடையவர்களே என ஏற்றுக் கொள்ளும் போது, நான் மனித நேயம் தொடர்பில் பெருமைப்படலாம். மனிதனின் மிகச் சிறந்த படைப்புகள் என்னுடையதேயான மாசற்ற பாரம்பரியம் என்பதை உணர இடமளியுங்கள். அதனால், மேலைத்தேய கல்வி முறையால் எமது நாட்டுக்கு தீங்கு ஏற்படும் என மேலைத்தேயத்தை மறுத்து கோஷங்கள் எழும்போது எனக்குள்ளே ஆழ்ந்த சோகம் உருவாகின்றது.”

எண்பதுகளின் தசாப்தத்திலிருந்து, இந்நாட்டில் தீவிரமடைந்த முரண்பாடுகளைப் புரிந்து கொள்வதற்கும் தீர்வுகளைத் தேடுவதற்கும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், உலகின், குறிப்பாக மேலை நாடுகளின் சமூக விதிமுறைகளால் உருவாக்கப்பட்ட தரங்களை ஏற்புடையதாக்கிக் கொள்வதற்கு முயற்சித்த போது தாகூர் இந்திய சூழலில் விபரித்த நிலைக்குச் சமமான எதிர்ப்புத் தோன்றியது. மனித உயிர்கள் மட்டுமல்ல, மனிதத் தன்மையையும் அழிவுக்குட்படுத்தி, வடக்கு கிழக்கில் நீண்டு செல்லும் யுத்தத்திற்கு சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்ட அரசியற் தீர்வொன்றை முன்மொழியும் கருத்தொன்றையும் வேலைத் திட்டமொன்றையும் மேம்படுத்துவதற்கான மாற்றுக் கொள்கைகளுக்கான வெளியீடான ‘சாம விமர்ஷி’ முன்வந்த போதும் மேலைத்தேயத்தை

அடியொற்றிய தீர்வுகளை முன்வைக்கும் தேசத் துரோக முயற்சியாகவே அது கருதப்பட்டது. அக்கருத்தியலைப் போன்றே அதனை உருவாக்கிய நபர்கள் மீதும் தேசத் துரோகக் குற்றச்சாட்டு விடுக்கப்பட்டது.

இன, மத, மொழி ரீதியான பன்மைத்துவங்கள் காணப்படும் மேலைநாடுகள் கூட்டாட்சி அரசாங்க முறையின் மூலம் அப்பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு, அமைதியையும் சுபீட்சத்தையும் அடைந்த விதத்தை இலங்கை மக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எடுத்துக் கொண்ட முயற்சியை உண்மையிலேயே பாராட்ட வேண்டும். அரசைக் கட்டியெழுப்பும் சவால் என்ற பெயரில் ஐக்கிய அமெரிக்காவில் கூட்டாட்சி அரசொன்றை உருவாக்குவதற்கு ஏதுவான கட்டுரைகளின் தொகுப்பு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலைய வெளியீடாக சிங்களத்தில் பிரசுரிக்கப்பட்டது இந்த நாட்டின் கொள்கை வகுப்பாளர்களின் அவதானத்திற்கு உள்ளாகியிருக்குமாயின், ஜெனீவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக் கூட்டங்கள் பற்றி அச்சம் கொள்ளக் காரணம் ஏதுமில்லை.

தேசியவாத பித்தினால் அல்லலுறும் தீவிரவாதிகளை ஆற்றுப்படுத்துவதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறைகளையும் சர்வதேச தரங்களையும் கவனத்திற் கொள்ளாது, சட்டங்களை வகுக்கின்ற போது, அதற்கு எதிராக நீதிமன்றத்திலும், ஏனைய தளங்களிலும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எழுப்பிய குரல், இருண்ட அரசியல் பயணப் பாதையின் ஆபத்துகளைச் சுட்டிக் காட்டுவதற்காக ஏற்றி வைக்கப்பட்ட தீபத்தைப் போன்றது. சில முயற்சிகளுக்கு நீதிமன்றத்தைப் போன்றே, சர்வதேச மக்களின் அங்கீகாரமும் ஆசியும் கிடைத்ததெனினும், ஆட்சியாளர்கள் அவற்றைக் கருத்திற் கொள்ளாத சந்தர்ப்பங்கள் பல. பிரபலமான அலை எதுவாக இருந்தாலும், நீதி நியாயத்திற்காக எழுந்திருப்பதே முக்கியமானது. ஆட்சியாளர்களும் அவர்களது சகபாடிகளும், எந்தவகையான அச்சுறுத்தல்களையும் மிரட்டல்களையும் விடுத்தாலும், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், தவறுகளுக்குச் சவால் விடுக்கவும், சரியான நியாயமான பாதையைக் சுட்டிக் காட்டுவதற்கும், ஒருபோதும் பின்வாங்கியதில்லை. அவ்வாறான துணிச்சலான படிமுறைகளை எடுக்கும் போது தனிப்பட்ட ரீதியில் நேரக்கூடிய ஆபத்துகளைப் பொருட்படுத்தவுமில்லை.

கடந்த இருபத்தைந்து ஆண்டு காலத்தில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் செய்த அனைத்து விடயங்களும் எதிர்பார்த்த நோக்கத்தை அடையப் போதுமானதாக இருக்கவில்லை. ஆனால் அவை அனைத்தையும் நியாயமான சமூகத்தை உருவாக்குவதற்கும், சட்டத்தையும் ஒழுங்கையும் பேணிச் செல்வதற்கான சரியான அரசியற் கட்டமைப்பொன்றைத் தயாரித்துக் கொள்ளவும் எடுக்கப்பட்ட படிமுறையொன்றின் அசைக்க முடியாத தூண்களாகக் கருத முடியும். குறுகிய சந்தர்ப்பவாத அரசியல் நோக்கங்களைக் கொண்டவர்களுக்கு தீங்கானதாகத் தோன்றினாலும், மனிதத் தன்மைக்கு மதிப்பளிக்கும் நியாயமான சமூகமொன்றை எதிர்பார்த்தும், அதற்காக அர்ப்பணிப்புடனும் இருப்பவர்களுக்கும் அம்முயற்சிகள் உறுதியான கருத்தியல் ரீதியானதும் நடைமுறை ரீதியானதுமான ஓர் அடிப்படையாகும்.

அரசியல் ரீதியாக சரியான நியாயமான சமூகமொன்றை உருவாக்குவதற்கான கருத்தியல் ரீதியான அடிப்படையொன்றைத் தயாரிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சி எப்போதும் உத்வேகத்தைத் தருகின்ற ஒரு பணியாக இருந்ததில்லை. தீவிரவாதிகளின் கர்ஜனைகளுக்கும், ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளுக்கும் எப்போதும் அது இரையானது. அதனாலேயே, ஆட்சியாளர்களின் சினத்தால், சிலர் நாட்டை விட்டுச் செல்லவும், மேலும் சிலர் எதிர்பாராத வகையில் உயிரை விடவும் நேர்ந்தது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அச் சவால்களுக்கு சளைக்காமல் முகங்கொடுத்தது. சரியான நியாயமான சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் பயணப் பாதையையும் கருத்தியலையும் எடுத்துச் சொல்வதற்காக எடுக்கப்பட்ட முயற்சியைப் போன்றே அதன்மீதான உறுதிப்பாட்டையும் வலிமையையும் பாராட்ட வேண்டும். எவ்வாறாயினும், லியோ டோல்ஸ்டோய் சுட்டிக் காட்டுகின்றவாறு, அநீதி ஆட்சி செய்யும் சமூகமொன்றில், நியாயத்தையும் உண்மையையும் மதிக்கின்ற மக்கள் சிறையில் வாழ வேண்டும் என்பது அவர்களுக்கு முன்மாதிரியாக இருந்திருக்கலாம்.

---

**மஹிந்த ஹத்தக்க**

சிரேஷ்ட மொழிபெயர்ப்பாளர். சிவில் சமூக செயற்பாட்டாளர். ஊடகவியலாளர். பல நூல்களின் நூலாசிரியர். ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்கான இயக்கத்தின் செயலாளர்.

# சட்ட ரீதியான பாதச் சுவடுகள்



சட்டத்தரணி
**விரான் கொரெயா**

கடந்த இரண்டு தசாப்த காலத்திற்குள் நான் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் ஆரம்பிக்கப்பட்ட அல்லது தலையீடு செய்த மாபெரும் தேசிய, பொதுமக்கள் மற்றும் முறைமை சார்ந்த முக்கியத்துவம் மிக்க பல வழக்கு நடவடிக்கைகள் சார்பில் தோற்றியுள்ளேன். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் இணைந்த இத் தொழில்வாண்மை சார்ந்த தொடர்பானது  சட்டமா அதிபர் திணைக்களத்தில் ஒரு சட்டத்தரணியாக ஆரம்பிக்கப்பட்ட எனது தொழில்வாண்மைச் சேவையினை நிறைவு செய்து மீண்டும் தனியார் சட்டத்தரணி ஒருவராக எனது சேவை ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப நாட்களில் ஏற்பட்டது. சட்டமா அதிபர் திணைக்களத்தில் நான் ஒருசில ஆண்டுகள் அரச சட்டத்தரணியாக சேவையாற்றினேன்.

ஆரம்பம் முதல் எனது மனதைக் கவர்ந்த விடயம் யாதெனில், நீதியான, ஜனநாயக மற்றும் லிபரல் சமூகம் ஒன்றின் தேவைப்பாட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் தேசிய, பொதுமக்கள் மற்றும் முறைமைப்படுத்தப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் போது சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்காக நிலவிய பாரிய இடைவெளியைப் பூர்த்தி செய்வதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பின் நிற்காது என்பது ஆகும். அதன் பயனாக நிறைவேற்றுப் படிமுறைகள் மற்றும் அடிப்படை உரிமைகள், வாக்குரிமை, நீதிமன்ற சுயாதீனம் மற்றும் உரிய முறையிலான லிபரல் முறைமை, ஜனநாயக மற்றும் அனைவரும் உள்ளடங்கும் தொலைநோக்குடன் ஏற்புடையவாறு கட்டமைக்கப்பட வேண்டிய பாதுகாப்பான அரசியலமைப்புச் சட்டத்தை உயர் நீதிமன்றத்தின் உரிய அவதானத்துக்கு முன்னிலைப்படுத்தி தேவைப்படும் வகையில சட்ட ரீதியான பரிசீலனைக்கு உட்படுத்த முடிந்தமைக்குக் காரணம் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அர்ப்பணிப்பேயாகும்.

கீழே காட்டப்படுவது கடந்த பல வருடங்களில் நான் ஒரு சட்டத்தரணி என்ற ரீதியில் ஆஜரான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் தொடரப்பட்ட / தலையீடு செய்த முக்கியத்துவம் மிக்க வழக்குகள் ஆகும்.

1. SCFR 217/2007 தமிழ் நபர்களை கொழும்பில் அமைந்துள்ள தனியார் 'லொட்ஜ்'களில் இருந்து அகற்றுதல் மற்றும் தமிழ் நபர்கள் கொழும்பின் எந்தவொரு பகுதிக்கும் உள்நுழைதல், குடியிருப்பதனைத் தடுத்தலை

சவாலுக்கு உட்படுத்திய வழக்கு.

2. **SCFR 453/2011** 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஒழுங்கு விதிகளை சவாலுக்கு உட்படுத்திய வழக்கு.
3. **SCSD 6/2012** மற்றும் **SCSD 15/2012** வாழ்வெழுச்சி சட்ட வரைவின் அரசியலமைப்புத் தன்மையினை சவாலுக்கு உட்படுத்தல்.
4. **CA Writ 283/2014** பொரளை வனாத்தமுல்ல '34 தோட்டத்தில்' ஒரு குழுவினரால் தாம் குடியிருக்கும் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டு, நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்ட மாற்று வீடுகளில் குடியிருக்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் விடுக்கப்பட்ட உத்தரவை சவாலுக்கு உட்படுத்தி தொடுக்கப்பட்ட வழக்கு.
5. **SCSD 24/2017** மாகாண சபைத் தேர்தலை பிற்போடுவதற்குக் காரணமான 20 ஆவது திருத்தம் என பெயரிடப்பட்ட அரசியலமைப்புத் திருத்தத்தை சவாலுக்கு உட்படுத்திய வழக்கு.
6. **SCFR 353/2018** எட்டாவது பாராளுமன்றத்தின் பதவிக் காலம் நிறைவடைவதற்கு முன்னர் அதனைக் கலைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியினை சவாலுக்கு உட்படுத்திய வழக்கு.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வழக்கு நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும் போது கடந்த காலத்திற்குள் என்னுடன் பணியாற்றிய நபர்களிடம் (விசேடமாக கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, ரொஹான் எதிரிசிங்க, கலாநிதி அசங்க வெலிகல, பவானி பொன்சேகா மற்றும் லுவி கணேஷன் உள்ளிட்ட) நான் அவதானித்த ஓர் அரிதான பண்பு யாதெனில், நீதிமன்றத்தில் ஒரு விடயத்தை சமர்ப்பிப்பதற்குப் பொருத்தமானது எனத் தீர்மானிக்கும் போது அந்த விடயம் அல்லது விடயங்கள் யாரோ ஒருவரால் எவ்வாறு ஏற்றுக் கொள்வது போன்ற ஏனைய விடயங்களை விட அது அரசியலமைப்பு மற்றும் சட்ட ரீதியான அடிப்படைகளின் கீழ் காணப்படுகிறதா? என்பதற்கு முக்கியத்துவம் வழங்குதல் ஆகும். விசேடமாக இந்த இலட்சியம் அப்போது அதிகாரத்தில் இருப்பது யார் என்பது பற்றி சிந்திக்காது சளைக்காது மாற்றமின்றி இருப்பது ஆகும். அதன் பிரகாரம் கடந்த இரண்டு தசாப்த காலத்திற்குள் ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங்கங்களுக்கும் எதிராக அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சட்டத்தின் ஆட்சி தொடர்பாக விசேட முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பாக பலதரப்பட்ட வழக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது ஒரு சட்டத்தரணி என்ற ரீதியில் நான் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சார்பில் தோற்றியுள்ளேன். இவ் அனைத்து விடயங்களின் போதும் ஏதேனும் ஓர் அரசியல் கட்சி அல்லது குழுவின் அரசியல் தேவைப்பாடுகள் அல்லது தனிப்பட்ட பாதுகாப்புக் காரணமாக உள்ள மோதல்கள், நீதியான, லிபரல் ஜனநாயக சமூகம் ஒன்றின் தேவைப்பாடுகளை ஒடுக்கி வைப்பதற்கான ஓர் உந்துதல் எச் சந்தர்ப்பத்திலும் இடம்பெறவில்லை எனக் கூறுவதற்கு இயலாதிருப்பின் அப் பண்பினை மதிப்பீடு செய்வதற்கு என்னால் இயலாது போனதாக அமையக் கூடும்.

நாட்டு மக்களின் அறிவுடைமையின் போதாத தன்மை மற்றும் தேடுதலின் குறைபாடு காரணமாக நாட்டு மக்களது மனங்களில் சில சமயங்களில் விதைக்கப்பட்ட பிழையான உணர்வுகளின் விளைவாக பலம் மிக்க தீய சக்திகள் மற்றும் அவர்களது வியூகங்கள் மூலம் தொடுக்கப்படும் கேவலப்படுத்தும் விதமான தாக்குதல்கள் தொடர்பாக தேவையற்ற விதமாக அவதானம் செலுத்தாது (தேசத் துரோகிகள் என நியாயமற்ற விதமாக கண்டனத்துக்கு ஆளாக்கப்பட்டோர்) சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதிக்காக சளைக்காது தோற்றுவதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அர்ப்பணிப்புக்கு நான் மதிப்பளிக்கின்றேன்.

இது தொடர்பாக அரசியலமைப்புச் சட்டம், சட்டத்தின் ஆட்சி என்பவற்றைப் பாதுகாப்பதற்கும், கட்டியெழுப்புவதற்காக வழக்குத் தாக்கல் செய்யும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மேற்கொண்ட பணி இலங்கை மக்களின் நலனுக்காக எடுக்கப்பட்ட அத்தியவசியமான, துணிச்சலான, கொள்கை அடிப்படையிலான மற்றும் உண்மையாகவே நாட்டுப் பற்றுள்ள பங்களிப்பு ஆகும் என நான் கருதுகின்றேன்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனது இருபத்தைந்து ஆண்டுகால பயணத்தின் தனிச் சிறப்பு வாய்ந்த ஒரு கட்டத்தை தாண்டுகின்ற இச் சந்தர்ப்பத்தில் நான் கலாநிதி சரவணமுத்து மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிக்குழுவினருக்கு இலங்கை மக்களுக்காக தொடர்ந்தும் சேவையாற்றுவதற்கான இலட்சியத்துடன் கூடிய பயனுள்ள ஓர் எதிர்காலம் உருவாவதற்காக பிரார்த்தனை செய்கிறேன்.

---

**விரான் கொரெயா**

உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் தொடர்பாகத் தோற்றும் ஒரு முதல்நிலை சட்டத்தரணி ஆவார்.

# அதிகார சக்தியின் பலத்தையும் பழமைவாத மனநிலை கொண்ட தன்னிச்சையாட்சியையும் தகர்த்தல்



**பேராசிரியர்**
**ஜயந்த செனவிரத்ன**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் 25 வருடப் பூர்த்தியை முன்னிட்டு இச்சிறு குறிப்பினை எழுதக் கிடைத்ததையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். கடந்த 25 வருட காலத்தில் இந்த நிறுவனத்தால் எடுக்கப்பட்ட துணிச்சல்மிக்க செயற்பாடுகளால் பூரிப்பு அடைந்தவன் என்ற வகையில், சமாதானத்தைக் கட்டியெழுப்பும் விடயத்தில் கல்வி உலகிற்கு வழங்கிய பங்களிப்பு தொடர்பாகவும், சில சந்தர்ப்பங்களில் வளவாளராகச் செய்யப்பட்டுள்ள எனக்கு சிவில் சமூகத்தின் முன்னேற்றம், மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் சமாதானத்திற்காக மிகவும் நேர்மையாகச் செயற்பட்டுள்ள ஒரு நிறுவனத்திற்கு ஆசி வழங்கக் கிடைத்திருப்பது மகிழ்ச்சியை தருகிறது.

ஜான் போல் லெடராக் (John Paul Lederach) சமாதானத்தைக் கட்டியெழுப்பும் கூர்ங்கோபுரத்தின் உச்சியில் (Track 1) நின்று செயற்பட்ட மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், அரசுக்கும், அரசு இனத்துவக் கொள்கை ஒன்றை அறிமுகம் செய்வதற்கும் பெரிதும் பங்காற்றியுள்ளது. இதையொட்டி தங்கள் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் சிவில் சமூகத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருப்பதை புதிதாகச் சொல்வது அவசியமற்றது. அதேபோல், இந்த நிறுவனத்தின் சகல வெளியீடுகளையும் மும் மொழிகளிலும் பிரசுரிக்க எடுத்த முயற்சியை நாம் நன்றியுணர்வுடன் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

அரசாங்கம் மிக வேகமாக அரசியல் மற்றும் சமய ரீதியாக எதேச்சதிகாரத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்தப் பயணத்திற்கான விதை தூவல் 1970களின் முதற் கூற்றில் தொடங்கப்பட்டது. சமீபத்தில் அல்ல. முன்னொருபோதும் இல்லாதவாறு இந்த எதேச்சதிகார ஆட்சிக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி, எல்.ரீ.ரீ.ஈ மற்றும் தீவிரவாத ஜிஹாத் முஸ்லிம் அமைப்புகளின் ஆயுதப் போராட்டங்கள் இன்னொரு எதேச்சதிகாரப் போக்கில் வன்முறையாக பதிலளிக்க எடுத்த முயற்சியை எடுத்துக் காட்டுகின்றன. ஆயினும், இறுதியில் அரசாங்கத்தின் அரசியல் மற்றும் மத எதேச்சதிகாரம் மேலும் நிலைநிறுத்தப்பட்டதேயொழிய வேறு எதுவும் நிகழவில்லை. அன்று பிரித்தானிய அரசியல்வாதியான எக்டன் பிரபுவின் பிரபலமான கூற்றாக கருதப்பட்ட "அதிகாரம் ஊழலுக்கு வழிகோலும், முழு அதிகாரம் முழு ஊழலுக்கு

வழிகோலும்" என்பதை இன்றைய காலகட்டத்தில் வெளிப்படையாக காணமுடிகின்றது.

அரசாங்கத்தின் இந்தப் பயணத்தை கட்டுப்படுத்த முயற்சி செய்த ஏதாவதொரு சிவில் அமைப்பு இருக்குமென்றால், அதில் முன்னிலை வகிப்பது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் என்பதற்கு மாற்றுக்கருத்து கிடையாது. உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் எடுக்கப்பட்ட அத்தகைய முயற்சிகள் காரணமாக அதன் தலைமைக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டபோதிலும், அதைக் கண்டு துவண்டு போகாத வலிமை மனித உரிமைகள், ஜனநாயகம் அதேபோல் சமாதான விரும்பிகள் அனைவருக்கும் பெரும் ஆசுவாசமாக அமைந்தது. இதனால் மக்கள் ஜனநாயகத்தின் பெறுமதி பற்றி ஆழமான புரிந்துணர்வைப் பெற சந்தர்ப்பம் கிடைத்தது மாத்திரமன்றி, சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் எங்களைப் போன்றவர்களுக்கு எல்லையற்ற உத்வேகம் கிடைத்தது. கடந்த இரண்டரைத் தசாப்த காலத்தில் அடக்குமுறையை கட்டவிழ்த்த அரசாங்கங்கள் அந்தப் போக்கினையும், தொடர்பான சட்டங்களையும் மறுபரிசீலனை செய்வதற்கும், எதிர்க்கட்சி அதனை சாதகமாக பயன்படுத்திக் கொள்வதற்கும், நல்லாட்சிக்கு அவசியம் எனக் கருதும் உறுதியான நகர்வுகளுக்கான கதவுகளும் திறக்கப்பட்டன. ஆனால், அது சாத்தியமாகவில்லை. எதிர்க்கட்சியும் இனவாதம் மற்றும் ஜனநாயக விரோத கற்பனையில் மூழ்கி கனிகளை மட்டும் தேடிக் கொண்டிருந்ததால் அரசாங்கத்தை இந்த துரதிஷ்டத்திலிருந்து மீட்கத் தவறியது.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையிலுள்ள பெரும்பாலான சிங்கள பௌத்தர்கள் அரச அதிகாரத்தில் கொண்டிருந்த அதீத பேராசைக்குக் காரணம் அரசாங்கத்தை கைப்பற்றி விட வேண்டும் என்ற நோக்கம்தான். அவர்கள் தம் மார்க்க அறிஞரின் போதனைகளுக்கு மாறாக ஈயாமை - குரோதம் - மோகம் போன்றவற்றையே உயர்வெனக் கருதினர். அதனால் குறிக்கோளற்ற எதிர்க்கட்சி உருவானது. ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சமாதானம் போன்ற விடயங்களில் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்பதில் எதிர்க்கட்சியும் குழப்பத்தில் இருப்பதை காணமுடிகிறது. எனவே, பாராளுமன்றத்திற்கு வெளியில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் போன்ற நிறுவனங்களின் வலிமையாலேயே இந்த இடைவெளியை நிரப்ப முடியும் என்பது திண்ணம். எதிர்க்கட்சியின் இந்த துடிப்பற்ற நிலை தன்னிச்சையாட்சியின் தான்தோன்றிதனம் கோலோச்சுவதை அனுமதிப்பதாகவே உள்ளது. நாட்டிலுள்ள வெகுஜன ஊடகங்களும் அரசின் கருத்தியலோடு ஒன்றித்துப் பயணிப்பதால் அவை ஒருபோதும் சுதந்திர ஊடகங்களாகமாட்டா.

மதம் பற்றியும் சொல்வதற்கு ஏதுமில்லை. அறமும் வழிபாடும் முற்றிலும் தடம் மாறியுள்ள தருணம் இது. இந்த தடம் மாறலுக்கு அரசாங்கத்தின் ஆசிர்வாதமும் கிடைத்துள்ளது. வழிபாடு எனப்படுவது பலதரப்பட்ட மாய மந்திரங்கள், நன்னடத்தை, படிநிலை அமைப்பு, நாட்டாரியல், மூடநம்பிக்கை மற்றும் பல்வேறு பிரிவினைகளாலான மனிதனின் உண்மையான வாழ்க்கையை பிரதிபலிக்கின்றது. நாம் எந்தளவுக்கு மதங்களுக்கிடையிலான நல்லுறவு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தினாலும் அவை அறிவுக்கு எட்டாத வரையில் அறத்தைப் புரிந்து கொள்வதற்குத் தடையாகவே இருக்கும். மக்கள்தம் மறுஉலக வாழ்க்கையில் கொண்டுள்ள அச்சம் இதுபோன்ற நம்பிக்கைகளுக்கு காரணமாக அமையலாம். அல்குர்ஆனில் "மறுவுலக வாழ்வை விற்று இவ்வுலக வாழ்வை விலை கொடுத்து வாங்குபவர்கள்" பற்றி சொல்லப்பட்டுள்ளது.

(சூரா அல் பகரா 88) இந்த வாசகம் அனைத்து மதங்களுக்கும் பொதுவானது. ஆகவே இந்த அதிகார சக்தியின் பலத்தை தகர்ப்பதாலும் பழமை மனநிலை கொண்ட தன்னாட்சி அதிகாரத்தை தகர்ப்பதாலும் மட்டுமே புதிய நாகரீகம் தோற்றம் பெறும். ஆனால் மதம் அதனை அனுமதிப்பதாக இல்லை. தங்களுடைய அரசியல் அபிலாசைகளை அடைந்து கொள்வதற்கு மதத்தை உச்சமாக பயன்படுத்தும் நாடு இலங்கை மட்டுமல்ல. அரசியல், இன மற்றும் மதத்தின் கலவையாக மாறியுள்ள, நாம் காணும் இந்த பண்பற்ற தேசிய இயக்கங்கள், தமது இனம் அல்லது மக்களின் அரசியல் தலைவிதிக்கு மதத்தையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. அதனால் மனித அடையாளத்தின் மூலமாக மதத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அரசியல், பொருளாதாரம், சட்ட மற்றும் சமூக - கலாசாரத் தளங்களில் மதத்தை முதன்மைப்படுத்துமாறும் இந்த அடிப்படைவாதிகள் வலியுறுத்தி வருகின்றனர். எமது நாட்டில் தற்போது நிகழ்ந்து கொண்டிருப்பதும் இது தான். ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சமாதானத்தை அவர்கள் வெறுக்கின்றனர். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இத்தகைய சூழமைவிலேயே தனது எதிர்கால பணிகளைத் தொடர வேண்டியுள்ளது.


பண்பாடுள்ள மறுமலர்ச்சியை ஏற்படுத்தி நீதியான சமுதாயத்தை உருவாக்குவதற்காக கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தலைமையில் துணிச்சலாக பணி செய்ய வாழ்த்துகின்றேன்.

---

**பேராசிரியர் ஜயந்த செனவிரத்ன**

களனிப் பல்கலைக்கழகத்தின் தத்துவத்துறையின் முன்னாள் பேராசிரியர். சிவில் சமூகச்செயற்பாட்டாளர். சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கும் நல்லிணக்கத்திற்குமான மையத்தின் பணிப்பாளர்.

# பொதுமக்கள் நன்மைக்காக வழக்காடும் வகிபாகம்
# விமர்சன ரீதியான ஒரு பார்வை



**விக்டர் ஐவன்**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், மக்களின் உரிமைகள் அல்லது ஜனநாயக நிறுவன முறைமையை மேலும் முறைமைப்படுத்துவதற்காக பல வழக்குகளை தாக்கல் செய்வதில் முன்னின்று செயற்பட்ட ஒரு நிறுவனமாகும். சில சமயங்களில் அதற்குத் தேவையான துணிச்சலையும் குறைவின்றி வெளிப்படுத்திய ஒரு நிறுவனமாகவும் அதனைக் குறிப்பிடலாம். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆரம்பிக்கப்பட்டு இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவடைவதனை முன்னிட்டு, அந்த அமைப்பின் செயற்பாடுகளில் நான் பெரிதும் விரும்பும் ஓர் அங்கமாக கருதக்கூடிய பொது மக்கள் நலனுக்காக அல்லது அரசியலமைப்பை முறைமையானதாகவும் ஜனநாயக ரீதியானதாகவும் மாற்றும் குறிக்கோளுடன் அந்நிறுவனம் பேணிவந்த வழக்கு தாக்கல் செய்யும் கொள்கை தொடர்பாகவே கருத்துக்களைத் தெரிவிக்க தெரிவு செய்துள்ளேன்.

சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே இலங்கையின் அரசியலமைப்பில் பாரிய சிக்கல் நிலவுகின்றது எனவும், அந்த சிக்கல்களுக்கு ஆட்சியாளர்களின் அறியாமை மற்றும் செருக்கு தாக்கம் செலுத்தியுள்ளது எனவும் கூறலாம். ஆட்சியியலின் முதன்மையான மூன்று தூண்களாக கருதப்படும் சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை ஆகியவற்றுக்கு இடையில் இருக்க வேண்டிய சமமான தன்மை வீழ்ச்சியடைதல், அந்த நிறுவனங்களைச் சூழ்ந்துள்ள ஊழல் போன்ற காரணிகளும் இந்த நிலைமைக்கு தாக்கம் செலுத்தியுள்ளன.

அதன் காரணமாகவே, 'பொதுமக்களுக்கு நன்மையளிக்கும் வழக்குகள்' என்ற விடயத்தினை இலங்கைக்கு விசேட முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகக் கருதலாம். அவ்வாறு வழக்கு பேசும் சம்பிரதாயமானது சமூகத்தின் முன்னேற்றத்துக்குக் காரணமாக அமைகின்ற அதேவேளை, அரசியல் மட்டம் அதாவது நிறைவேற்றுத்துறை

மற்றும் சட்டவாக்கத்துறையின் சிந்தனைப் போக்கின் முன்னேற்றத்துக்கும் காரணமாக அமைகிறது. அதனை விடவும், நீதித்துறையின் நோக்கை கூர்மைப்படுத்துவதற்கும் ஏதுவாகின்றது. இந்தியா போன்ற ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது, இலங்கையில் இந்த விடயத்தில் தலையீடு செய்வோரின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அவற்றுள் முதன்மையான நிறுவனமாக செயற்படுவதனை கவனத்திற் கொள்ள முடியும். அந்த நிலையம் பெருமளவு வழக்குகளை தாக்கல் செய்துள்ளதுடன், சில வழக்குகள் சமூகத்துக்கு நன்மையான பெறுபேறுகளையும் பெற்றுக் கொடுக்க ஏதுவாகியுள்ளன. இருப்பினும் நான் இங்கு அது தொடர்பாகவன்றி, அந்த விடயப்பரப்பு தொடர்பாக இலங்கையில் காணக்கூடியதாகவுள்ள நான் காணுகின்ற பாரதூரமான வரையறைகள் தொடர்பாகவே உரையாட எதிர்பார்க்கிறேன்.

நான் காணும் முதலாவது விடயம் யாதெனில் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட வேண்டிய முதன்மையான பிரச்சினைகளுள் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்படாதுள்ள பெருமளவான பிரச்சினைகள் உள்ளன என்பதாகும். எனவே அவற்றுக்கிடையில் காணப்படுகின்ற ஆட்சியியல் தொடர்பில் மிகவும் பாரதூரமான அல்லது கடுமையாக தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற பிரச்சினைகளைத் தெரிவுசெய்து, முதலில் அவற்றை நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்வது அவசியமாகும். இருப்பினும் நீதிமன்றத்துக்கு பிரச்சினைகளைக் கொண்டு செல்லும் போது முன்னுரிமை ஒழுங்குக்கு ஏற்ப மிகவும் முக்கியமான மற்றும் முதன்மையான பிரச்சினைகள் முதலில் எடுக்கப்படுவதான நிலைமையும் காண்பதற்கில்லை. அதன் காரணமாக குறைந்தளவு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் மேலெழுந்து, கூடுதல் முக்கியத்துவம் வழங்க வேண்டிய விடயங்கள் மழுங்கடிக்கப்படும் ஒரு நிலைமையை காணக்கூடியதாகவுள்ளது. அதற்கான உதாரணங்களாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

### சொத்துக்களை கொள்ளையடிக்க இடமளித்தல்

1978 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தை அடிப்படையாகக் கொண்ட சொத்துக்களை கொள்ளையடிக்கும் முறைமை இடம்பெற்று வருவதனை தெளிவாகக் காணலாம். இது முழுமையாகவே சட்டத்துக்கு முரணான முறையாகும். இதற்குரியதான சட்டம் சோல்பரி அரசியலமைப்பிலேயே காணப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பாக 72 அல்லது 78 ஆம் ஆண்டு அரசியலமைப்புகளில் சட்டங்கள் இயற்றப்படவில்லை. அதன் காரணமாக இந்த விடயத்தில் தாக்கம் செலுத்துவது சோல்பரி அரசியலமைப்பின் ஏற்பாடுகள் என (13.3.இ) அந்த இரண்டு அரசியலமைப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. பாராளுமன்ற உறுப்பினர் அல்பர்ட் சில்வா தொடர்பான வழக்கின் தீர்ப்பு அந்த விடயம் தொடர்பான ஒரு முன்னுதாரணமாகும். 1977 ஆம் ஆண்டு தேர்தலில் காலி தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் அல்பர்ட் சில்வா அவர்களுக்கு எதிராக அதற்கு முன்னர் அந்த தொகுதியில் உறுப்பினராக இருந்த டபிள்யு. தஹநாயக்கா தேர்தல் மனுவொன்றினை சமர்பித்தார். அல்பர்ட் சில்வாவின் பெயரில் அரசிடமிருந்து பெறப்பட்ட மண்ணெண்ணை அனுமதிப்பத்திரம் இருப்பதன் காரணமாக அவர் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படுவதற்கான உரிமை இல்லை எனும் வாதத்தை தஹநாயக்க அவர்கள் முன்வைத்தார். அந்த வாதத்தை ஏற்றுக்கொண்ட அப்போதிருந்த முன்னாள் பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோன் தலைமையிலான நீதியரசர்கள் குழாம் அல்பர்ட் சில்வா அவர்களது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வறிதாக்கினார்கள். அதன் பின்னர், ஜே.ஆர். ஜயவர்த்தன கம்புறுப்பிட்டி தொகுதியில் இருந்த உறுப்பினரை பதவியிலிருந்து இராஜினாமா செய்யுமாறு ஆலோசனை வழங்கி, அந்த வெற்றிடத்துக்கு அல்பர்ட் சில்வா அவர்களை நியமித்தார். அது நாட்டின் ஆட்சியாளரால் மேற்கொள்ளப்பட்ட பாரதூரமான சட்டவிரோத செயல் மட்டுமன்றி, நீதிமன்ற தீர்ப்பு வழங்கப்பட்ட போது மிகவும் அகங்காரத்துடன் நீதிமன்றத்தையும் அவமதித்து, அந்தத் தவறை தொடர்ந்தும் செய்வதற்காக பின்பற்றப்பட்ட தவறான, தான்தோன்றித்தனமான கொள்கையாக கருதப்படலாம்.

அதன் பின்னர், 2000 ஆம் ஆண்டிலும் இது போன்றதொரு பிரச்சினை எழுந்தது. பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன அவர்களுக்கு சொந்தமான ஔடத கம்பனி அரசுடன் கொடுக்கல் வாங்கல் செய்தது எனும் குற்றச்சாட்டின் அடிப்படையில் டிலான் பெரேரா தாக்கல் செய்த வழக்கில் ராஜித சேனாரத்ன குற்றவாளியாக்கப்பட்டு, அவரது பதவி வறிதாக்கப்பட்டது. இதன் போது ஜே.ஆர். ஜயவர்த்தன செய்த அதே தவறினை ரணில் விக்ரமசிங்கவும் செய்து, ராஜித சேனாரத்ன அவர்களை தேசிய பட்டியல் உறுப்பினராக பாராளுமன்றத்துக்கு நியமித்தார்.

தற்போது இலங்கையில் அமுலில் உள்ள அரசியலமைப்பு பாரதூரமான வகையில் நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பதாகக் கூறலாம். நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கத்துறை மற்றும் நீதித்துறை ஆகியவற்றுக்கு இடையிலான சமநிலைத் தன்மை முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதுடன், விசேடமாக நிறைவேற்றுத்துறை மற்றும் சட்டவாக்கத்துறை ஊழலால் நிறைந்து அழுகிப்போன நிலையில் காணப்படுவதாகக் கூறலாம். 1978 இல் இருந்து ஜனாதிபதிகள் அரசாங்க கட்சி உறுப்பினர்களுடன் இணைந்து அணிதிரண்டு மேற்கொள்ளும் சட்டவிரோத சொத்துக் கொள்ளையானது அந்த நிறுவன முறைகள் இரண்டிலும் உருவாகியுள்ள அழுக்கு நிறைந்த நிலைமைக்கு பிரதான காரணமாக உள்ளது எனலாம். இது நாடு வங்குரோத்து அடைவதற்கான ஒரு முக்கிய காரணமாக அமைந்துள்ளது என்பதுடன், நாட்டின் திறைசேரிக்குச் செல்ல வேண்டிய பிரதானமான வருமான வழிகள் இழக்கப்பட்டு அவை ஜனாதிபதிகளின் அல்லது ஜனாதிபதிகளை சுற்றி அணி திரண்டுள்ள மக்கள் பிரதிநிதிகளின் சட்டைப்பைகளுக்குள் செல்லும் முறைமை அதன் காரணமாக உருவாகியுள்ளது என்றும் கூறலாம். அது ஒரு புறம் நிறுவன முறைமையை முழுமையாகவே ஊழல் நிறைந்த நிலைக்கு இட்டுச் சென்றுள்ளதுடன், மறுபுறமாக சட்டத்துக்கு இருக்கும் அங்கீகாரம் முழுமையாகவே சீர்குலைந்து ஆட்சியியல் மற்றும் நாட்டின் பொருளாதார செயன்முறை சிக்கல் நிறைந்ததாக மாறுவதற்குக் காரணமாக அமைந்தது எனவும் கூறலாம்.

இந்தப் பிரச்சினைக்கு சமூகத்தில் போதுமானளவு கவனம் கிடைக்காமை தொடர்பில் ஒரு பிரஜையாக, விமர்சகராக எனக்குள் ஒரு பெரிய கேள்வி உள்ளது. சமூகத்தில் மட்டுமன்றி விசேடமாக அரசியலமைப்பு ரீதியான தவறுகளை திருத்தம் செய்வதற்காக முன்நிற்கும் நிறுவனங்கள் கூட அந்த பாரதூரமான பிரச்சினைகளை முழுமையாக கவனத்திலெடுக்காமல் இருப்பதாகக் கூறலாம். மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு வழக்குத் தீர்ப்புகளிலும், அதாவது, அல்பர்ட் சில்வா வழக்கிலும், ராஜித சேனாரத்ன வழக்கிலும் இலங்கையின் உயர் நீதிமன்றம் மக்கள் பிரதிநிதிகளின் ஊழல் தொடர்பான தவறுகளின் போது காட்டப்பட்ட அக்கறையின்மை தொடர்பாக கடுமையான விமர்சனம் உள்ளது. பாராளுமன்ற ஒழுக்கநெறி தொடர்பான அந்த விடயம் தொடர்பில் பாராளுமன்றம் வேண்டுமென்றே சட்டத்தை விதிக்காமலிருக்கும் கொள்கையை பின்பற்றுதல் தொடர்பில் இந்த வழக்கு தீர்ப்புகள் இரண்டிலும் பாராளுமன்றம் கடுமையான குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருப்பதாகவும் கூறலாம். அந்த விடயம் தொடர்பான இவ்வாறான நிலைமை இருக்கும் போதுகூட அனைத்து அரசியல் கட்சிகளும் அந்தப் பாரதூரமான பிரச்சினையை முழுமையாக உதாசீனப்படுத்தியுள்ளதனை தெளிவாகக் காணலாம்.

அத்துடன், இலங்கையின் அரசியல் முறையிலுள்ள தவறுகள் தொடர்பாக அக்கறை காட்டும், வழக்கு தாக்கல் செய்வதன் மூலம் அவற்றை திருத்தம் செய்வதற்காக அக்கறை காட்டும் நிறுவனங்கள் கூட அந்த பாரதூ ரமான பிரச்சினை தொடர்பாக உரிய கவனம் செலுத்தாமை மற்றும் நீதிமன்றத்துக்குச் சென்று தேவையான மாற்றங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை அரசியலமைப்பின் கொள்ளையடிக்கும் தன்மையின் தொடர்ச்சியான இருப்புக்கு காரணமாக உள்ளது.

### கட்சித் தாவலுக்கு இடமளித்தல்.

எனது இரண்டாவது விமர்சனம் பொதுவாக சட்டத்துறை சமூகத்துக்கும், இவ்வாறான விடயங்களுக்காக முன்வரும் சட்டத்தரணிகளுக்கும், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திற்கும் உரியதாகும். அரசியலமைப்பை மீறுதல் என்பது 1948 ஆம் ஆண்டிலிருந்தே இலங்கையில் இடம்பெறும் தவறாகும். உண்மையிலேயே காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வரும் ஆளுங்கட்சிகள் அரசியலமைப்பினை மீறும் செயற்பாட்டினை ஒரு விளையாட்டாகக் கொண்டுள்ளன என்றும் சொல்லலாம். நிறைவேற்றுத்துறை, பாராளுமன்றம், நீதித்துறை ஆகிய மூன்றும் கூட்டாக அரசியலமைப்பை மீறிய சந்தர்ப்பங்களும் உள்ளன. அத்துடன், இந்த ஆட்சியியல் யாப்பின் மிகவும் முதன்மையான பண்பை முழுமையாக மீறும் வகையிலான செயற்பாடுகள் இடம்பெற்றிருப்பதாகவும் சொல்லலாம். உதாரணமாக சந்திரிக்கா குமாரத்துங்கவின் ஆட்சிக்காலத்தில் தனக்கு மூன்றில் இரண்டு அதிகாரம் இல்லாத குறையை நிவர்த்தி செய்வதற்கான முயற்சியாக தான் கட்டுப்படுத்தக்கூடிய பிரதம நீதியரசரை நியமித்து நீதிமன்றத்தின் ஒத்துழைப்புடன் அரசியல் யாப்பு மீறப்பட்டதனைக் கூற முடியும்.

அரசியலமைப்புக்கு அமைவாக பாராளுமன்ற உறுப்பினரொருவர், உறுப்புரிமையை இழக்காமல் கட்சித் தாவல் செய்ய முடியாது. அது இந்த அரசியலமைப்பின் உறுதித்தன்மையை பேணுவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதான தூணாக கருதப்படலாம். இருப்பினும்,

1999 இல் சரத் அமுனுகம உள்ளிட்ட 5 பேர் அரசாங்கத்துடன் இணைந்த போது ஐக்கிய தேசியக் கட்சி அவர்களது பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை நீக்கிய போது, அவர்கள் நீதிமன்றத்தை நாடினார்கள். அதன்போது நீதிமன்றம் அந்த ஐந்து உறுப்பினர்களினதும் பாராளுமன்ற உறுப்புரிமையை பாதுகாக்கும் பாங்கினை பின்பற்றியது. அதனை மிகவும் தந்திரோபாயமானதும், கபடமானதுமான முறையில் வழங்கப்பட்ட தீர்ப்பாகக் கருதலாம். கட்சி முறையான ஒழுக்காற்று விசாரணை நடத்தாமல் அவர்களது பாராளுமன்ற உறுப்புரிமை நீக்கப்பட்டது எனும் அடிப்படையில் மட்டுமே அதன் போது ஆராய்ந்து பார்க்கப்பட்டது. அவர்கள் கட்சி தாவிய போது இடம்பெற்ற அரசியலமைப்பு மீறல் மற்றும் ஆட்சியியலில் ஏற்படுத்திய திரிபுபடுத்தல் முழுமையாக உதாசீனப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக பாராளுமன்ற உறுப்புரிமையை இழக்காமல் அரசாங்க கட்சியுடன் இணைந்து கொள்ளக்கூடிய கபடத்தனமான முறைமை நிறுவப்பட்டது. இதுவும் இன்று வரை அரசியல் யாப்பு மறுசீரமைப்புக்காக நீதிமன்றத்துக்கு செல்வோரின் கவனத்துக்கு உள்ளாகாத பாரதூரமான விடயம் எனக் கருதப்படலாம்.

**சிங்கராசா வழக்கு தீர்ப்பு ஏற்படுத்திய திரிபுபடுத்தல்**

சிங்கராசா வழக்கு தீர்ப்பு ஏற்படுத்தியுள்ள திரிபானது சீர்செய்யப்பட வேண்டிய பிறிதொரு பாரதூரமான தவறாக கருதப்படுகிறது. இலங்கையில் உள்ள அதியுயர் நீதிமன்றத்தில் கூட நியாயத்தை பெற முடியாமல் போன சந்தர்ப்பத்தில் ஜெனீவா மனித உரிமைகள் குழுவுக்கு தனக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக முறைப்பாடு செய்வதற்கு அல்லது வழக்கை தாக்கல் செய்வதற்கான வாய்ப்பு சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சமவாயத்தின் கீழ் இலங்கை பிரஜைகளுக்கு கிடைத்த மிகவும் முக்கியமான உரிமையாகக் கருதலாம். அதன் மூலம் நீதிமன்றத்தைப் பாவித்து பிரஜைகளின் உரிமைகளை மீறுவதற்கான இயலுமை வரையறுக்கப்பட்டுள்ளது. அது நாட்டு மக்களுக்கு இருக்க வேண்டிய மிகவும் பெறுமதியான உரிமையாகும்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சமவாயத்தின் செல்லுபடியாகும் தன்மை தொடர்பான சிங்கராசாவின் வழக்கு நடைபெறும் போது இரண்டு உயர் நீதிமன்ற வழக்குத் தீர்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன. அதில் ஒன்று நீதியரசர் கலாநிதி ஏ.ஆர். பீ. அமரசிங்க அவர்களால் வழங்கப்பட்டது. (Wickramatunga Vs Anurudha Ratwatte, Minister of Power and Energy SC f/R 228/96 SCM 7th November 1997). அது தொடர்பான பிறிதொரு வழக்கு தீர்ப்பு நீதியரசர் கலாநிதி மார்க் பெர்ணான்டோ அவர்களால் வழங்கப்பட்டது. (Weerawansa Vs Attorney General and others 2001 Sri Lanka LR at page 387-408) உயர் நீதிமன்றத்தால் முன்னர் வழங்கப்பட்ட தீர்ப்பு தள்ளுபடி செய்யப்பட்ட பின்னரே, முன்னர் வழங்கிய தீர்ப்புக்கு முரணான தீர்ப்பு வழங்கப்பட வேண்டும். இருப்பினும் சிங்கராசா வழக்கு தீர்ப்பின் போது அந்த முன்னைய இரண்டு வழக்கு தீர்ப்புகள் தொடர்பிலும் எந்த மட்டத்திலும் ஆராய்ந்து பார்க்கப்படவில்லை. அத்துடன், இந்த வழக்கை விசாரிக்கும் உரிமை பிரதம நீதியரசர் சரத் நந்த சில்வாவுக்கு இருக்கவில்லை. நான் உள்ளிட்ட ஜெனீவா மனித உரிமைகள் குழுவில் வழக்கு தாக்கல் செய்த பெரும்பாலானோர் பிரதம நீதியரசர் சரத் நந்த சில்வாவுக்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்திருந்தனர். மனித உரிமைகள் குழு அந்த வேளையில் வழங்கிய மூன்று தீர்ப்புகளில், இரண்டு தீர்ப்புகள் சரத் நந்த சில்வா தொடர்பாகவே வழங்கப்பட்டிருந்தன. அதன் காரணமாக அந்த முறைமையை சீர்குலைக்கும் விருப்பத்துடன் இருந்த நபராக அவரை கருதலாம். அது தனது வழக்கை தானே விசாரிப்பதற்கு சமமானதாகும். (Judicature Act 49.3) பிரதம நீதியரசர் சரத் நந்த சில்வா தனது பாதுகாப்புக்காக செய்த அந்தத் தவறை சீர் செய்வதற்கான முயற்சியை இதுவரையில் எவரும் மேற்கொள்ளவில்லை.

**2015 அரசியல் யாப்பு மறுசீரமைப்பின் மட்டுப்பாடுகள்**

2015 ஆட்சி மாற்றத்துடன் மேற்கொள்ளப்பட்ட அரசியல் யாப்பு மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டம் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற, இலங்கையின் அரசியல் யாப்பு தொடர்பான மிகவும் மோசமான அனுபவம் என்றே நான் கருதுகிறேன். எமது நாட்டின் அரசியல் கோட்பாட்டாளர்கள் எவ்வளவு சிறுபிள்ளைத்தனமானதும், முட்டாள்தனமாதுமான நிலையில் இருக்கிறார்கள் என்பதனை அந்த மறுசீரமைப்பு செயற்பாடானது மிகத் தெளிவாக சுட்டிக் காட்டுகிறது. அரசியல்வாதிகள் ஏன் அவ்வாறு இருக்கிறார்கள் என்பதனை புரிந்து கொள்வது அந்தளவு சிரமமான விடயமல்ல. புலமைசார் அர்த்தத்துடன் பார்க்கின்ற போது அனைத்து பிரிவுகளும் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. அது விமர்சன ரீதியான

அறிவின் வீழ்ச்சியாக கருதப்படலாம். அந்த நிலை அரசியல்வாதிகள் தொடர்பிலும் தாக்கம் செலுத்துவதாகக் கூறலாம். இருப்பினும் அரசியல் கோட்பாட்டாளர்களின் கண்கள் குருடாகியிருப்பது மிகவும் துரதிர்ஷ்டவசமானதாகும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இந்த முட்டாள்த்தனமான மறுசீரமைப்பு செயற்திட்டத்தின் ஆலோசனை பணிப்பொறுப்பை ஆற்றியிருந்தது.

நன்றாக ஆராய்ந்து பார்க்கும் போது தெரியவரும் விடயம் என்னவென்றால், 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் மற்றும் அது சார்ந்ததாக ஏற்பட்ட துரதிர்ஷ்டவசமான சம்பவங்களுக்குக் காரணமாக அமைந்தது 2015 ஆம் ஆண்டில் ஏற்படுத்திய முட்டாள்தனமான அரசாங்க மறுசீரமைப்பு செயற்திட்டமாகும். உதாரணமாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இரத்து செய்ய வேண்டுமென்பது 2015 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட முதன்மையான கோரிக்கையாக இருந்தது. அந்த கோரிக்கையில் உள்ளடங்கியிருந்த சட்டரீதியான அடிப்படை, 'நிறைவேற்று ஜனாதிபதி சட்டத்தை விட உயரத்தில் இருத்தலாகாது' எனும் விடயமாகும் எனக் கருதலாம். உலகில் நாகரீகம் வளர்ச்சியடைந்த ஒரு நாட்டில், அரச தலைவர் சட்டத்துக்கு மேலே இருக்க முடியாது. இலங்கையின் ஜனாதிபதி சட்டத்துக்கு மேலே இருந்தது மட்டுமல்லாது பாரிய அளவிலான மனித உரிமை மீறல்கள் மற்றும் உரிமை மீறல்களுக்கும் அந்த அதிகாரம் பாவிக்கப்பட்டது என்றும் கூறலாம். அந்த நிலைமையை மாற்றவேண்டும் என்பதே சமூகத்தின் அப்பாவித்தனமான எதிர்பார்ப்பாக இருந்தது. இருப்பினும் இந்த ஒட்டுமொத்த மறுசீரமைப்பு செயற்திட்டத்தில் மக்களை ஏமாற்றும் அல்லது மாயாஜால வித்தையே இருந்தது. ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யும் இயலுமையை வழங்குவதற்காக 19 ஆவது திருத்தத்தில் செய்யப்பட்ட ஏமாற்று ஏற்பாடுகள் அதற்காக காட்டக்கூடிய உதாரணமாகும். அதன் மூலம் 18 ஆவது திருத்தம் மற்றும் அதற்கு முன்னர் இருந்த "ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியாது" எனும் சட்டம் மாற்றம் செய்யப்பட்டதாக பெருந்தொனியில் சொல்லப்பட்டது. அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது ஜனாதிபதிக்கு எதிராக, ஜனாதிபதியின் செயலாளர் அல்லது சட்ட மாஅதிபர் எதிராளியாக்கப்பட்டு வழக்கு தாக்கல் செய்யலாம் என்றே அதன் மூலம் சொல்லப்பட்டது. இருப்பினும், அதன் மூலம் மக்கள் ஏமாற்றப்பட்டார்கள்.

உண்மையிலேயே ஜனாதிபதியை சட்டத்துக்கு கீழே வைப்பதற்கு அவ்வாறான எளிமையான ஏற்பாடுகளால் இயலாது. ஜனாதிபதியை சட்டத்துக்கு கீழே கொண்டு வருவதாயின், ஜனாதிபதி செய்யும் எந்தவொரு சட்ட விரோத செயற்பாட்டின் போதும், அதனை வலுவிழக்கச் செய்யும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு இருத்தல் வேண்டும். இருப்பினும், 19 ஆவது திருத்தத்தில் அவ்வாறான அதிகாரம் நீதிமன்றத்துக்கு வழங்கப்படவில்லை. அந்த பொய் காரணமாகவே மீண்டும் 20 ஆவது திருத்தத்தை மிக இலகுவாக கொண்டுவரக்கூடிய இயலுமை ஏற்பட்டது.

ஆட்டைக் கட்டும் கயிற்றில் மாட்டைக் கட்டிவைக்க முடியாது. அது போலவே, மாட்டைக் கட்டும் கயிற்றால் யானையைக் கட்டி வைக்கவும் முடியாது. அதன் போது வேண்டுமென்றே மக்கள் ஏமாற்றப்பட்டனர். அதற்காக செலுத்த வேண்டியேற்பட்ட இழப்பீடானது மிக மிகப் பெரியதாகும்.

### தேர்தல்கள் ஆணைக்குழுவின் மட்டுப்பாடுகள்

உலகில் பெருமளவு தேர்தல்கள் ஆணைக்குழுக்கள் உள்ளன என்று சொல்லலாம். தேர்தல்கள் ஆணைக்குழுக்கள் உள்ள அனைத்து நாடுகளிலும் கட்சிகளின் உள்ளக ஜனநாயகம் இருக்கிறதா என்பதனை ஆராய்ந்து பார்க்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என சொல்லலாம். அத்துடன் கட்சிகளின் நிதியை பரீட்சிக்கும் அதிகாரம் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அல்லது தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அல்லது அவை இரண்டுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அண்டை நாடான இந்தியாவில் மட்டுமன்றி பங்களாதேஷ், நேபாளம் போன்ற நாடுகளில் கூட கட்சி நிதி தொடர்பான கடுமையான சட்டங்கள் உள்ளன. கட்சி நிதிக்கு உதவி வழங்கக்கூடிய முறை தொடர்பாக கடுமையான வரையறைகள் உள்ளன. அத்துடன், கட்சிகளுக்கு அல்லது வேட்பாளர்களுக்கு கிடைக்கும் பண உதவி மற்றும் தேர்தல் நிதி தொடர்ச்சியாக கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் முறைமைகள் காணப்படுகின்றன. இருப்பினும் இலங்கையின் தேர்தல்கள் ஆணைக்குழுவானது அந்த அதிகாரங்கள் எதுவும் கிடைக்காத வகையிலேயே உருவாக்கப்பட்டுள்ளது.

1977 ஆம் ஆண்டு வரை தேர்தல் செலவுகள் தொடர்பில் கடுமையான சட்டங்கள் இருந்தன. 77 ஆம் ஆண்டு வரையும் தேர்தலின் போது ஒரு வேட்பாளர் ஒரு தேர்தல் தொகுதிக்காக செலவிடக்கூடிய ஆகக்கூடிய பணத்தொகை 5,000 ரூபாவாக இருந்தது. அதனை விடவும் கூடுதலாக செலவு செய்திருந்தால் அவரது பாராளுமன்ற உறுப்புரிமையை நீக்கக்கூடிய இயலுமை

இருந்தது. அவ்வாறே, போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் தேர்தல் முடிவடைந்த பின்னர் தமக்கு கிடைத்த பணம் மற்றும் அவற்றை செலவிட்ட முறை தொடர்பான அறிக்கையை தேர்தல்கள் திணைக்களத்துக்கும், கணக்காய்வாளர் நாயகத்துக்கும் வழங்க வேண்டியிருந்தது. அது நீக்கப்பட்டமையானது இலங்கை அரசியல்வாதிகள் ஊழல் பேர்வழிகளாவதற்கான பிரதான காரணமாக அமைந்தது. ஜனாதிபதி தேர்தலின் போது இரண்டு பிரதான வேட்பாளர்களில் ஒருவர் சராசரியாக மூன்று பில்லியன் ரூபா பணத்தை செலவிட்டதாக அண்மையில் கணக்கிடப்பட்டுள்ளது. இரண்டு பிரதான வேட்பாளர்களும் இவ்வளவு பாரிய பணத்தொகையை எவரிடமிருந்து பெற்றார்கள்? கறுப்புப் பணம் வைத்திருப்பவர்களே இவர்களுக்கான பிரதான கொடையாளர்களாவர். பெரும்பாலும் போதைப்பொருள் போன்ற வர்த்தகங்களுடன் தொடர்புடையவர்களாவர். அதன் மூலம் நாட்டின் ஜனாதிபதியை கொள்வனவு செய்வதற்கான ஆற்றல் கறுப்புப் பணம் வைத்திருப்போருக்கு வழங்கப்பட்டிருப்பதாகக் கருதலாம்.

அரசியலமைப்பை மாற்றம் செய்வதற்கு எடுத்த முயற்சியில் கூட இவ்வாறான பாரதூரமான விடயங்களுக்கு விடை காண்பதற்கு அரசியல்வாதிகள் முயற்சி எடுக்கவில்லை என்பதுடன், அந்த அரசியல் யாப்பு மறுசீரமைப்பு செயற்திட்டத்தின் போது மதியுரைஞர்களாக செயற்பட்ட சட்ட அறிஞர்களும் அந்த அடிப்படை பிரச்சினைகளில் கை வைக்காமல் தவிர்க்கும் கொள்கையை பின்பற்றியிருப்பது தெரிய வருகிறது. ஏன் அவ்வாறு நடந்தது? உண்மையிலேயே 2015 ஆம் ஆண்டில் விசாரணை செய்யும் அதிகாரத்துடன், ஜனாதிபதி புரியும் சட்டத்துக்கு முரணான எந்தவொரு செயலையும் இரத்து செய்யும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டிருந்தால் கோட்டாபய மட்டுமன்றி எவருமே சர்வாதிகாரத்தை செலுத்துதல் மிகவும் சிரமமானதாக அமைந்திருக்கும். அவ்வாறு நடந்திருந்தால், ஜனாதிபதி இன்று செய்யும் சட்டத்துக்கு முரணான செயற்பாடுகளை செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கும். நீதிமன்றத்துக்கு கிடைத்த அதிகாரத்தை மீளப்பெறுவதற்கு நீதிமன்றம் வாய்ப்பளிக்காது என்பதே அதற்கான காரணமாகும்.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன 1982 ஆம் ஆண்டில் மோசடியான சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தை நீடித்ததன் ஊடாக ஒட்டுமொத்த அரசியல் யாப்பிலும் திரிபுபடுத்தலை மேற்கொண்டார். அந்த ஏற்பாடு இப்போது அரசியல் யாப்பில் உள்ளது. இன்றும் எந்தவொரு ஜனாதிபதியும் அவ்வாறே பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தை சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் நீடிக்கலாம். இந்தியாவில் பிரதமாராக இந்திரா காந்தி இருந்த காலத்தில் பாரிய அரசியல் யாப்பு திரிபுபடுத்தல் இடம்பெற்றது. இருப்பினும் இந்திரா காந்தி ஆட்சியிலிருந்து விலகியவுடன் அவரால் செய்யப்பட்டிருந்த திரிபுபடுத்தல் முழுமையாக நீக்கப்பட்டது. இந்திராவின் காங்கிரஸ் கட்சியினரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள். அமெரிக்காவில் ஒருவர் இரண்டு தடவைக்கு மேல் ஜனாதிபதியாக இருக்க முடியாது எனும் சம்பிரதாயத்தை ஜனாதிபதி ஐசன் ஹவர் மீறிய போது அவ்வாறான தவறை இன்னொருவர் புரிய முடியாத வகையிலான அரசியல் யாப்பு திருத்தத்தின் மூலம் சீர் செய்யப்பட்டது. அதுவரை அவ்வாறான சம்பிரதாயத்துக்காக முன்னின்ற நபர்கள் தொடர்பில் கூட நாம் இலங்கையில் கேள்விப்படவில்லை.

2015 ஆம் ஆண்டில் ஏற்படுத்திய அனைத்து மாற்றங்களும் மீண்டும் மண்வெட்டியால் திருப்பி போடக்கூடிய வகையில் எளிமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசியல் யாப்பு முறைப்படி மாற்றம் செய்யப்பட்டிருந்தால் அதனை மீண்டும் தலைகீழாக மாற்றுவது சிரமமானதாக அமைந்திருக்கும். உண்மையிலேயே 2015 ஆம் ஆண்டில் பெரும் பொய்யே இடம்பெற்றது. அதனை மக்களுக்கு இழைத்த பாரிய மோசடியாக கருதலாம். 2020 தேர்தல் பெறுபேறுகள் அதற்கு கிடைத்த தண்டனையாகக் கருதலாம்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனது 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் வேளையில் நாட்டின் அரசியல் யாப்பு தொடர்பாக இடம்பெற்றுள்ள பாரதூரமான தவறுகள் மற்றும் தவறவிடுதல்கள் தொடர்பாக விமர்சன ரீதியாக விடயங்களை ஆராயும் நிலைக்கு வர வேண்டும்.

---

**விக்டர் ஐவன்**

சிரேஷ்ட ஊடகவியலாளர். “ராவய” பத்திரிகையின் ஆரம்பப் பதிப்பாசிரியர். 25 ஆண்டுகளுக்கும் அதிகமாக மேற்படி பதவியை வகித்துள்ளார். அரசியல் திறனாய்வாளர். சிவில் செயற்பாட்டாளர். சமூக அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பல முக்கிய நூல்களை இயற்றி வெளியிட்டுள்ளார்.



# புதிய இலங்கையின் மாற்றுக் கொள்கைகள்

சட்டத்தரணி
**கே.டப்ளியு. ஜனரஞ்சன**

இலங்கையின் இனவாத மற்றும் தீவிர தேசியவாத கருத்தியலைக் கொண்ட வெளியீடுகள் மற்றும் அவர்களது பலதரப்பட்ட அமைப்புக்களுக்கு அக் கருத்தியலை அடிப்படையாகக் கொண்டு தனது அரசியல் கொள்கைகளைக் கட்டியெழுப்பியுள்ள அரசியல் இயக்கங்கள் மற்றும் கட்சிகளுக்கு மாத்திரமல்ல சாதாரண சுயபுத்தியுள்ள நாட்டின் பொதுமக்களுக்குக் கூட அரச சார்பற்ற அமைப்பு என்பது நடுச்சாமத்தில் காணுகின்ற ஒரு கெட்ட கனவாகவே விளங்குகிறது. 'என்ஜீஓ' என அவர்கள் உச்சரிக்கின்ற விதம் கூட அவைகள் பற்றி அவர்களுக்கு உள்ள வெறுப்புணர்வினை எடுத்துக் காட்டுகிறது. ஆயினும், ஓர் அடிப்படையில் இருந்து இவை ஒன்றுக்கொன்று முரண்பட்ட அரச சார்பற்ற அமைப்புக்கள் மீது எதிர்ப்பினை வெளியிடுவதும் இல்லை.

தேசியவாத சக்திகளுக்கு அரச சார்பற்ற அமைப்புக்கள் என்பது தமது கருத்தியலுக்கு எதிரான பலமான பன்மைவாத எதிரி ஆகும். இந்த வகைக்குள் மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட ஏனைய இடதுசாரிக் கட்சிகள் மற்றும் அவற்றைச் சுற்றி கட்டியெழுப்பப்பட்டுள்ள தேசிய மக்கள் சக்தி போன்ற சிவில் அமைப்புக்களின் புத்தி ஜீவிகள் போன்றே செயற்பாட்டாளர்களையும் சேர்க்க முடியும். அரச சார்பற்ற அமைப்புக்கள் என்பது லிபரல்வாத அல்லது புதிய லிபரல்வாத கருத்தியலை நாட்டில் பரப்புகின்ற இடதுசாரிகளுக்கு எதிரான ஒரு கருத்திட்டம் என்ற சிந்தனையின் பயனாகவே அவர்களின் எதிர்ப்பு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

தேசியவாத அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புக்களுக்கு அரச சார்பற்ற அமைப்புக்கள் என்பது தமது அரசியல் அதிகாரத்துக்கு சவால் விடுக்கும் அரசியல் ரீதியான ஓர் எதிரி ஆகும். சாதாரண மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் பற்றிய வெறுப்புணர்வு அத்தகைய திறன்மிகு காரணங்களினால் முன்வைக்கப்படவில்லை என்பதும் இங்கு மனதைக் கவரும் ஒரு காரணியாக அமைகிறது. அவர்களுக்கே உரித்தான கருத்துக்கள் காரணமாக அன்றி வெறுமனே மேற்குறிப்பிடப்பட்ட சில சக்திகள் மூலம் சமூகத்தின் மத்தியில் விதைக்கப்பட்டுள்ள பிரசித்தமான "என்ஜீஓ" எதிர்ப்பு கருத்தியலை அரைகுறையாக பற்றிக் கொள்ளல்

காரணமாகவே அவர்களிடம் தெளிவற்ற தன்மை ஏற்படுத்தப்பட்டுள்ளது. என்ஜீஓ எதிர்ப்புக்குரிய நாட்பட்ட காரணங்களையோ எதிர்மறையான காரணங்களையோ பொருந்தச் செய்ய முடியாத அளவுக்கு எந்தவொரு ஏற்றுக்கொள்ளக் கூடிய வாதமும் அவர்களிடம் உள்ளதாக தென்படாத காரணத்தினாலேயே அவ்வாறு சொல்கிறேன். இங்கு கவலையான விடயம் என்னவெனில், இலங்கையின் சிங்களம்-ஆங்கிலம் தேசிய நாளிதழ்களின் பிரதான பதிப்பாசிரியர்களுள் பொரும்பாலானோரை சுமாராக சந்தித்துள்ள எமக்கு அவர்களையும் இங்கு குறிப்பிடப்பட்ட 'சாதாரண மக்கள்' என்ற வகுதிக்குள் தான் உள்ளடக்க முடியுமானதாக உள்ளதென்பது எமக்குப் புரிந்துள்ளது. நாட்டின் பிரதான ஊடகங்கள் மூலம் வெளியிடப்படும் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு எதிரான கருத்துக்களுக்கான ஒரு காரணமாக பதிப்பாசிரியர்களிடம் காணப்படும் புலமை ரீதியான வறுமையினை இங்கு குறிப்பிட்டுக் காட்ட முடியும்.

அரச சார்பற்ற அமைப்புக்கள் மூலம் முன்வைக்கப்படும் பன்மைத்துவ யோசனைக்கான பிரவேசம் காரணமாகவே தேசியவாத கருத்தினைக் கொண்ட குழுக்கள் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தலுக்கான அடிப்படையாக அமைந்துள்ளது. அதற்கு மேலதிகமாக ஜனநாயக ரீதியிலான அரச நிர்வாக அடிப்படைகளை பாதுகாத்தல், நீதி நிர்வாகத்தை நிலைநாட்டல், சிறுபான்மை இனங்கள் மற்றும் மதக் குழுக்களை அரச நிர்வாகத்தில் பங்கு கொள்ளச் செய்தல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல், நீதிமன்ற சுயாதீனம் போன்ற தரநியமங்களும் இப் பன்மைத்துவ பிரவேசத்தில் உள்ளடங்கி உள்ளது. இவ் அமைப்புக்களை லிபரல் மற்றும் புதிய லிபரல்வாத எதிர்தரப்பு பிரிவினராக இடதுசாரிகளுக்கும் அவ்வாறான கட்சிகளுடன் பின்னிப் பிணைந்துள்ள தேசிய மக்கள் சக்தி போன்ற சிவில் முன்னணிகளும் நோக்குகின்றன. அதன் பிரகாரம் தனக்கும் தனது தாய் நாட்டுக்கும் எதிரான ஒரு சூழ்ச்சி எப்பொழுதும் அரச சார்பற்ற அமைப்புக்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகிறது என இங்கு குறிப்பிடப்பட்ட அனைவரும் கூடுதலாக அல்லது குறைவாக எண்ணுகிறார்கள்.

இலங்கையில் இனரீதியான மோதல்கள் நிலவிய காலத்தில் மேற்கத்திய ஏகாதிபத்தியத்தின் முகவர்கள், எல்ரீரீஈ இயக்கத்தின் நலன் விரும்பிகள் மற்றும் உதவி செய்பவர்கள், தேசிய பாதுகாப்பினை பலவீனப்படுத்துபவர்கள், இலங்கை தொடர்பாக பிழையான ஒரு காட்சியினை உலகிற்கு பெரிதுபடுத்திக் காட்டுபவர்களாகவே அரச சார்பற்ற அமைப்புக்கள் கருதப்பட்டன. 1996ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் இனரீதியான மோதல் இடம்பெற்ற காலங்களில் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய பௌதீக ரீதியான அச்சுறுத்தல்களை பஞ்சமின்றி எதிர்கொண்டது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துக்கும் அதன் செயற்பாட்டாளர்களுக்கும் எதிரான கருத்தியல் ரீதியிலான ஊடகத் தாக்குதல்கள் முதல் கூட்டங்களைக் குழப்புதல், மரண அச்சுறுத்தல்கள் உள்ளிட்ட பலதரப்பட்ட துன்புறுத்தல்களுக்கு ஆளாக நேர்ந்தது.

2009 யுத்தம் முடிவடைந்தது முதல் இன்று வரை அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு எதிராக உருவாகிய மேற்குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டுக்களை இலகுபடுத்துவதற்கு அவற்றை முன்வைக்கும் நபர்கள் தயாராக இல்லை என்பது தெரிகிறது. இன்றும் கூட அரச சார்பற்ற அமைப்புக்கள் பெரும்பான்மை தேசியவாதத்துக்கு எதிரானவையாகவே கருதப்படுகிறது. எனவே தேசிய பாதுகாப்பில் மிகவும் பலம் வாய்ந்த ஒரு தேசிய அரசுக்கு எதிரானவர்கள் என கருதப்படுகிறது. இவ்வாறு மிக நீண்ட காலமாக அரச சார்பற்ற அமைப்புக்கள் என்பது சமூகத்தின் பெரும்பான்மைவாத தரப்பினரால் மற்றுமொரு மாற்றானாக கருதப்படுவதாகத் தென்படுகிறது. எதிர்காலத்திலும் அது அவ்வாறு தான் அமையப் போகிறது. துரதிர்ஷ்டவசமாக, அரச சார்பற்ற அமைப்புக்களின் உள்ளக உரையாடல் களங்களில் இன்றும் கதைப்பதற்கு நேர்ந்துள்ள ஒரு சவாலாக இக் குற்றச்சாட்டுக்களுக்கு பதில் வழங்குவதற்கான ஒரு குழுவாக செயற்படுவதற்கு ஏன் தன்னால் முடியாமல் உள்ளது என்பதாகும். குற்றம் சுமத்துபவர்களுக்கு வழங்குவதற்கு மிகத் தெளிவான பதில்கள் காணப்படுகின்ற போதும் அரச சார்பற்ற அமைப்புக்களினால் அதனை சுட்டிக்காட்ட முடியாதுள்ளமைக்கான காரணம் என்ன? பொதுவாகக் கூறுவதாயின் 'ஆம், நாங்கள் என்ஜீஓ காரர்கள் தான், அதனால் என்ன?' என்பது போன்ற பதிலை வழங்குவதற்கு ஏன் அவர்களால் முடியாமல் உள்ளது?

2015 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த அரசாங்கத்திலும் 2015-2019 அரசாங்க காலத்திலும் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு அமெரிக்காவில் இருந்து பாய்ச்சப்பட்ட மில்லியன் எண்ணிக்கையான டொலர்கள் பற்றி பல்வேறு புள்ளிவிபரங்கள் இக் கட்டுரையாளரும் கலந்து கொண்ட பலதரப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தேசியவாதிகளால் முன்வைக்கப்பட்டதனை செவிமடுக்கக் கூடியதாக இருந்தது. விசேடமாக 2015 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்த தேசப் பற்றுள்ள அரசாங்கத்தை தோற்கடிப்பதற்கு

இவ்வளவு தொகைப் பணத்தை அமெரிக்கா செலவு செய்ததாகவும், அப்போதிருந்த அமெரிக்க இராஜாங்க செயலாளர் அதனை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும், அப் பணத் தொகையில் இவ்வளவு மில்லியன்கள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எனப்படும் அமைப்புக்கு கிடைக்கப் பெற்றதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்ற சந்தர்ப்பங்களில் அப் பணத் தொகைகளில் எவ்வளவு சதவீதம் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும்? வெறுமனே சமூக மற்றும் நிவாரண உதவி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மாத்திரம் ஈடுபடுத்தும் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு நிதி கிடைக்கப் பெற்றுள்ளமை பற்றி அறிவீர்களா? என வினவப்பட்ட போது அதனைக் குறிப்பிட்ட நபர்கள் அவ்வாறான ஒன்று பற்றி அறிந்திருந்ததாகக் கூறவில்லை. அவர்களது மனங்களில் ஊசலாடுவதெல்லாம் இலங்கைக்கு பாய்ச்சப்பட்டதாக சொல்லப்படும் மில்லியன் கணக்கிலான அமெரிக்க டொலர்கள், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், பாக்கியசோதி சரவணமுத்து ஆகியோர் உள்ளடக்கப்பட்ட ஒரு சமன்பாடு பற்றி மட்டும் தான். இதன் மூலம் புலப்படுவது என்னவெனில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பற்றிய மிகைப்படுத்தப்பட்ட அபிப்பிராயமாகும்.

2015 ல் ஆட்சியில் இருந்த அரசாங்கத்தை தோற்கடிப்பதற்காக அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு மில்லியன் கணக்கான டொலர்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக சொல்லப்படும் போது அதன் உட்கருத்து மிகவும் தெளிவானதாகவே உள்ளது. அதாவது அது அரசாங்கத்தின் ஜனநாயக விரோத, சிறுபான்மை இனங்களுக்கு எதிரான, மனித உரிமைகளுக்கு எதிரான, நீதிமன்ற சுயாதீனத்துக்கு எதிரான, சட்டத்தின் ஆட்சிக்கு எதிரான நிகழ்ச்சி நிரலுக்கு எதிரான பலமானதொரு செயற்பாடு அரச சார்பற்ற அமைப்புக்கள் மூலம் காட்டப்பட்டுள்ளது என்பதாகும்.

2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த அரசாங்கத்தின் மானுட தரநியமங்களுக்கு எதிரான கருத்துக்களுக்கு, கருத்தியல் ரீதியாக எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு, அப்போதிருந்த, எதிர்க்கட்சிகளுக்கு ஒரு தூரநோக்கு அல்லது வேலைத்திட்டம் காணப்படாத ஒரு சந்தர்ப்பத்தில், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கே அப் பணியினை மேற்கொள்ள வேண்டிய நிலை உருவாகியது. அப்போது எதிர்க்கட்சியாக இருந்து தற்போதும் எதிர்க்கட்சியாகவே உள்ள அரசியல் கட்சிகளுக்கு அன்று போல இன்றும் இந்த மானுட தரநியமங்களுக்காக திடமாக முன் நிற்பதற்கான திறமை காணப்படாதிருந்தமையினை / காணப்படாதுள்ளமையினை புதிதாகச் சொல்லி வைக்க வேண்டியதில்லை. உதாரணமாக போலி இராணுவ வீரர்கள் போன்றே மரண தண்டனை பற்றி தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் அடிக்கடி குறிப்பிடும் பிற்போக்குவாத கருத்துக்கள் போன்றே சிறுபான்மை இனங்களின் உரிமைகள் தொடர்பாக மற்றும் மானுட பால்நிலை திசையமைப்புக்கள் பற்றி மக்கள் விடுதலை முன்னணி போன்ற கட்சிகள் அடிக்கடி குறிப்பிடும் பிற்போக்குவாத கருத்துக்களைக் குறிப்பிட முடியும்.

அவ்வாறான ஒரு பின்னணியில் ஏன் அரச சார்பற்ற அமைப்புக்கள் காணப்படுகின்றன? என்பது பற்றி கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து இவ்வாறு தெளிவுபடுத்துகின்றார். ‘அவை காணப்படுவதற்கான காரணம், நாடுகளால் நிறைவேற்றப்பட வேண்டுமென ஆரம்பத்தில் கருதப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு நாடுகளால் முடியாது போனதனாலும் ஒருசில நாடுகள் அவ்வாறான பணிகளை நிறைவேற்றாமல் இருப்பதே ஆகும் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டி உள்ளது. பல்வேறு சந்தர்ப்பங்களில் பாதுகாப்பாளர்களினதும் வழங்குனர்களினதும் நிலையில் இருந்து கொள்ளைக்காரர்களின் நிலைக்கு பயணம் செய்துள்ள நாடுகளை உள்ளடக்கிய ஓர் உலகில் அரச சார்பற்ற அமைப்புக்கள் ஒரு சூழ்ச்சி அல்ல அவை ஒரு தேவைப்பாடாகவே உள்ளன.' (என்ஜீஓ பேய், சமூகவியலாளர்கள் சங்கம், 1997)

‘லிபரல் ஜனநாயக’ இலங்கைக்காக முன் நிற்கும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பிரவேசமானது பொதுவான அர்த்தத்தில் பார்க்கும் போது ஒரு பிரமுகர் பிரவேசம் ஆகும். அதனது ஆரம்ப தலையீடு மாற்றுக் கொள்கைகளை வகுத்தலும் ஆய்வுகளை மேற்கொள்ளலும் அத்தகைய துறைகளுக்குத் தேவையான தலையீடுகளை மேற்கொள்ளலும் ஆகும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தை இதுவரை காலமும் அனைத்து வெளிவாரி அமைப்புக்கள் மூலம் உருவாகும் பலதரப்பட்ட சவால்களுக்கு மத்தியில் பாதுகாப்பாக நடாத்திச் செல்வதற்கான பலம்மிக்க காரணமாக அமைந்தது இத்தகைய பிரமுகர் தன்மை என்பது புலப்படுகிறது.

மேற்குறிப்பிடப்பட்ட தேசியவாத, இடதுசாரி அரசியல் மற்றும் சமூக அமைப்புக்கள் போன்றே அவ்வாறான நபர்களை உள்ளடக்கிய தற்போதைய அரசாங்கத்திலும் ஒரு மாற்றானாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மாற்றம் பெற்றமைக்கான காரணம் யாதெனில் பன்மைத்துவ பிரவேசத்துடன் மானுட தரநியமங்களை மண்ணில் நிலைநாட்டுவதற்காக அது காட்டும் புலமை ரீதியிலான மற்றும் அறிவு சார்ந்த தலையீடு காரணமாக அமைகிறது என நான் நினைக்கிறேன். ‘மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தாபிக்கப்பட்டதற்கான காரணம் யாதெனில்,

இலங்கையில் நல்லாட்சியை ஏற்படுத்தல் மற்றும் மோதல்களை தவிர்ப்பதற்காக நிறுவனங்களை மற்றும் அவற்றின் ஆற்றலளவை கட்டியெழுப்புவதற்கான அவசர தேவை உள்ளதாகவும் அதன் போது பக்கச்சார்பற்ற சிவில் சமூக குழுக்களுக்கு முக்கியமானதும் ஆக்கபூர்வமானதுமான பங்களிப்பு உள்ளதாகவும் பலமாக நம்புவதாக' தம்மைப் பற்றி அறிமுகம் செய்யும் போது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் குறிப்பிடுகிறது.

சமூகத்தின் அடிமட்ட வலைப்பின்னல் பணிகளை விடவும் அவ்வாறான ஒரு பிரவேசம் சமூகத்தின் அறிவு மட்டங்கள் மீது பாரியளவு தாக்கம் விளைவிக்கிறது. அது நீண்டகாலத்துக்கு நிலைத்திருக்கும். இவ்வாறான புலமைப் பிரவேசம் தமக்கு உண்மையிலேயே ஒரு சவாலாக அமைவதன் காரணமகவே பலரும் தயக்கம் காட்டுகிறார்கள்.

மறுபுறத்தில் அரசியலமைப்பு உருவாக்கச் செயன்முறை தொடர்பாக விழிப்புடன் இருத்தல் மற்றும் மாற்றுக் கொள்கைகளைத் தயாரிக்கும் செயன்முறையானது சாதாரண அரச சார்பற்ற அமைப்புக்களின் கைக்கு எட்டிய தூரத்தில் காணப்படவில்லை. அதற்குத் தேவையான புலமை சார்ந்த ஒரு சம்பிரதாயம், வேலை செய்யும் உளப்பங்கு, அர்ப்பணிப்பு, நிதிப் பலம் சாதாரண தரத்தில் காணப்படும் அரச சார்பற்ற அமைப்புக்கள் பலவற்றிடம் காணப்படவில்லை. அந்த இடைவெளியை பூர்த்தி செய்வது இருபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்யும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் ஓரளவுக்கு நாட்டுச் சூழல் தொடர்பான அரச சார்பற்ற அமைப்புக்களும் ஆகும் எனக் குறிப்பிடுவது ஓர் அநீதி அன்று.

2019 நவம்பர் மாதத்துக்குப் பின்னர் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் உள்ளிட்ட சமூகத்தில் ஜனநாயக கருத்தியல் கடமைப் பொறுப்பினை மேற்கொள்ளும் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு உள்ள சவால்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 2015 இற்கு முன்னர் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு விரோதமான எதிர்ப்பாளர்களில் முக்கியமாகக் கருதப்பட்ட நபர் தற்போது நாட்டின் தலைவராக உள்ளார். அரச சார்பற்ற அமைப்புக்களைத் தனது மாற்றானாகக் கருதியவர்கள் இன்று அரச பொறிமுறையின் முக்கியமான இடங்களில் உள்ளார்கள். 2015-2019 காலப் பகுதியில் பெறப்பட்ட அனைத்து விதமான ஜனநாய ரீதியிலான வெற்றிகளும் பின் நோக்கி நகர்த்தப்பட்டு வருகிறது. நல்லிணக்க செயன்முறை, ஜனநாயகமயப்படுத்தல் செயன்முறையின் மைல்கல்லாக தாபிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம் போன்ற பொது நிறுவனங்கள் அதன் அடிப்படை நோக்கத்துக்கு எதிரான சிந்தனை உள்ள நபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அரச சார்பற்ற அமைப்புக்களின் செயலகத்தின் பொறுப்பு அவ்வாறான அமைப்புக்களின் பரம எதிரிகளில் ஒருவரான ஆவேசமாக நடந்து கொள்ளும் பல்கலைக்கழக ஆசிரியர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரச சார்பற்ற அமைப்புக்களை கடுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான அரசியலமைப்பு உருவாக்கம் வெகு சீக்கிரம் வரவுள்ளது. புதிய அரசியலமைப்புச் சட்டம் கொண்டுவரப்படும் என சொல்லப்படுகிறது. 2015 இற்கு முன்னர் ராஜபக்ஷ ஆட்சியின் போது நியமிக்கப்பட்ட அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக் குழு அறிக்கையில் அவ் அமைப்புக்களின் கழுத்தில் கட்டி இறுக்கும் பரிந்துரைகளைச் சமர்ப்பித்த விஜித ஹேரத் போன்ற இடதுசாரித் தலைவர்கள் எதிர்க்கட்சி மக்கள் கருத்துருவாக்கத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

நாட்டின் பிரதான எதிர்க்கட்சியாக உள்ள ஐக்கிய மக்கள் சக்தியும் அதன் தலைவரும் அரச சார்பற்ற அமைப்புக்களுக்காக முன் வருவார்கள் என நம்புவதற்கு முடியாதுள்ளது. அவர்களும் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு எதிரானவர்கள் தான். ஆகவே நாம் பயணம் செய்யவுள்ள சமுத்திரம்  மிகவும் கொந்தளிப்பானதாகவே காணப்படுகிறது. சவால்கள் முன்னரைப் போலவே தான் உள்ளன.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் செயற்பாடு இவ்வாறான ஒரு காலகட்டத்தில் முன்னரை விடவும் சமூகத்துக்கு இன்றியமையாத ஒன்றாக காணப்படுகிறது.

---

**கே.டப்ளியு. ஜனரஞ்சன**

சட்டத்தரணி, சிரேஷ்ட ஊடகவியலாளர், கார்ட்டுன் கலைஞர், ராவய பத்திரிகையின் முன்னாள் பதிப்பாசிரியர், இலங்கை கலைப் பேரவையின் உறுப்பினர், 'அநிந்தா' பத்திரிகையின் தற்போதைய ஆசிரியர்.

# மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் சமூக வகிபங்கும்



பேராசிரியர்
**ஏ.எம். நவரத்ன பண்டார**

**1. அறிமுகம்**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இந்த ஆண்டில் தனது 25ஆவது அகவையை நிறைவு செய்கின்றது. அரசின் கொள்கையாக்கத்திற்கு மாற்றுக் கொள்கைகளையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் முன்வைத்து 25 ஆண்டுகளை நிறைவு செய்வது எளிதல்ல. அரசு சாரா தளத்தில் இயங்கும் ஒரு சிவில் அமைப்பாக மட்டுமன்றி அதையொத்த பணிகளை நிறைவேற்றும் ஏனைய நிறுவனங்களுக்கும் ஏற்புடைய ஒரு சொல்லாடலுக்கு வித்திட நான் இதனை ஒரு வாய்ப்பாக கருதுகிறேன்.

**2. சிவில் சமூகத்தை அடையாளம் காணல்**

நாம் சிவில் சமூகத்தை மூன்று விதமாக அடையாளம் காணலாம். அரசு உருவாவதற்கு முன்னர் காணப்பட்ட இயல்பான சமூகம் அதில் முதலாவது. அரசியல் சித்தாந்தத்தில் இதுபற்றிய கலந்துரையாடலை முன்வைத்தவர் ஜோன் லொக். அவருடைய கூற்றுப்படி, நல்லதையும் கெட்டதையும் பகுத்து அறிவதற்கு மனிதன் கொண்டிருந்த இயல்பான ஆற்றல் மனிதனை வழி நடத்தியதால் அரசு உருவாவதற்கு முன்னர் பண்பாடுள்ள சமூகம் நிலவியது. மனசாட்சிப்படி தாம் விரும்பாததை மற்றவர்களுக்கு செய்யாதிருக்க மக்கள் இயல்பாகவே தூண்டப்பட்டதால் அனைவராலும் வாழ்வையும் சொத்துகளையும் சுதந்திரத்தையும் அதேபோல உரிமைகளையும் துய்க்க முடிந்தது. இவ்விதமாக இயற்கைச் சட்டம் உருவாகி அதன் வழி பிறந்த ஒரு சமூகம் உருவானது. ஜோன் லொக் இதனை சிவில் சமூகம் என அழைத்தார்.

லொக் கூறுவதுபோல, சிவில் சமூகம் உருவான பின்னரே அரசு உருவானது. சமூகத்தின் தேவைகள் சிக்கலானதையடுத்து, தொடர்ச்சியாக சிவில் சமூகத்தால் மட்டும் பிரச்சினைகளைத் தீர்க்க இயலாதென

மக்கள் உணர்ந்தனர். இதற்குத் தீர்வாக அவர்கள் கருத்தொருமிப்புடன் ஓர் ஆட்சியாளரை நியமித்துக் கொண்டார்கள். அரசின் உருவாக்கம் அவ்வாறு அமைய, அதுவரை நிலவிய இயற்கைச் சட்டம் முறையாக தொகுக்கப்பட்டு பிரச்சினைகளை தீர்ப்பதற்காக ஆட்சியாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவ்வாறு கட்டமைக்கப்பட்ட அரசுக்கு, அதுவரை காணப்பட்ட சிவில் சமூகத்தை அரசினுள் ஈர்த்து அதனை முன்னோக்கி நகர்த்திச் செல்ல வேண்டியாயிற்று. இயற்கைச் சட்டத்தை பாதுகாத்தவாறு மக்களின் சொத்துகள், வாழ்வு, சுதந்திரம் போன்றவற்றுக்கு தடையேற்படுத்தாதவாறு முரண்பாடுகளை தீர்க்கும் நடுநிலை தீர்ப்பாளர் வகிபங்கு அரசுக்கு ஒப்படைக்கப்பட்டது. அந்த வகையில் அரசு எனப்படுவது நியதிச்சட்ட முறையாக வரையறுக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டிருக்கும் ஒரு நிறுவனமாகும். இந்த ஒழுங்கில் அரசு சிவில் சமூகமாக மாறியது. ஆகவே, அரசு எனப்படுவது சிறந்த சிவில் சமூகத்தை அரசியல் ரீதியாக ஒருங்கிணைப்பதாகும். இது இரண்டாவது வகை அடையாளம் காணல்.

அரசு எனப்படுவது சிவில் சமூகம் என வியாக்கியானம் செய்யப்பட்ட போதிலும், கால ஓட்டத்துடன் அரசு அந்த வகிபங்கிற்கு முரணாகச் செயற்பட்டு ஆட்களின் சுதந்திரம், சொத்துகள் மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, அவற்றுக்கு இடையூறு விளைவிக்கும், கட்டுப்பாடுகளை விதிக்கும் அதிகாரத்தாராக மாறியது. இதன் விளைவாக சமூகத்தவர்கள்தம் சிவில் சமூகத்தை பாதுகாப்பதற்காகவும், சமூகத்தின் சீர்மியத்தை பாதுகாப்பதற்கும் சமூக அமைப்புகளை உருவாக்கினர். இது அலெக்சிக் டி டொக்வில் மற்றும் தோமஸ் பேன் ஆகிய இருவரால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களின் ஒரு கலவை. அரசு உருவாவதற்கு முன்னர் நிலவிய சிறந்த சமூகம் மற்றும் அதன் நியமங்களை பாதுகாத்தல் இந்த அமைப்புகளின் பொறுப்பாக மாறுவதால் சமூக அமைப்புகள் சிவில் சமூகமாக அடையாளப்படுத்தப்பட்டன. சிவில் சமூக அமைப்புகள் அரசினின்று அன்னியப்பட்டு நிற்பதால் அரசு சாரா துறையைச் சார்ந்து விடுகின்றன. எனவே அவை அரசசார்பற்ற நிறுவனங்களாக அறியப்படுகின்றன. அரசு சாரா துறையில் தனியார் இயக்கங்களும் அடங்குவதால் சிவில் சமூக அமைப்புகள் என்பதே இவற்றை அறிமுகம் செய்வதற்கான மிகச் சிறந்த சொற்பிரயோகமாக இருக்க முடியும்.

### ૩. அரச கொள்கை வகுப்பு

இருபதாம் நூற்றாண்டளவில், கட்டுப்படுத்துவதாக அல்லாமல் கொள்கைகளை ஆக்குவதன் மூலம் சமூக பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழிகாட்டுதல் அரசின் கடமையாக மாறியது. சமூகப் பிரச்சினைகள் சிக்கலானவை, அவற்றைத் தீர்ப்பதற்கு ஞானம் எனப்படும் அறிவியலின் தேவையும் அவசியம். அதற்கு காரணம். அரசு, வணிகம் மற்றும் சந்தை போன்ற துறைகளுக்கு தர்க்க ரீதியான ஓர் அமைப்பு அவசியம் என்பதை கைத்தொழில்மயமாக்கல் உணர்த்தியது. தத்துவஞானிகள் “உலகம் புதிர்களால் நிரம்பியது. அறிவு மற்றும் சரியான காரணத்தை நிறுவுவதன் மூலமே அவற்றுக்கு தீர்வு காண முடியும்” எனக் கூறினர். சார்ல்ஸ் மேனாட் கேன்ஸ் இக்கருத்தினை பொருளாதாரத்தை முதன்மைப்படுத்தி விளக்கினார். அவர் உளவுத் தகவல்களை ஒழுங்குபடுத்தல் (organized intelligence) வாயிலாக பிரச்சினைகளைத் தீர்க்க வழிகாட்ட வேண்டுமென வலியுறுத்தினார். சந்தையால் அல்லது தனிப்பட்ட அல்லது சிவில் முயற்சியால் இதைச் சாதிக்க முடியாது. அந்த ஆற்றல் அரசுக்கு உண்டு என்பதை அவர் சுட்டிக்காட்டினார். எனவே, இருபதாம் நூற்றாண்டில் கொள்கைகளை உருவாக்குவதனால் பிரச்சினைகளை தீர்க்கும் யுகத்திற்கு அரசு நகர்ந்தது.

சமூகப் பிரச்சினைகளை இலக்கு எதுவுமின்றி இருட்டில் துழாவுவதுபோல தீர்க்க முடியாது. அதற்கு நீண்டகாலம் அவசியம். ஆகவே அவற்றைத் தீர்ப்பதற்கான நீண்டகால மூலோபாயங்களாக அறியப்படும் அரச கொள்கைகள் ஆக்கப்பட வேண்டும். இது அரசிடம் ஒப்படைக்கப்படும் பொறுப்பாகவும், இருபதாம் நூற்றாண்டில் கால் பதிக்கும்போது அரசுடன் தொடர்புபட்ட முக்கிய பேசுபொருளாகவும் இது காணப்பட்டது. உளவுத் தகவல்களை ஒழுங்கமைப்பது இலகுவானதல்ல. அவை கிரமமாக சேகரிக்கப்பட்டு, தர்க்கரீதியாக பகுப்பாய்வு செய்யப்பட்டு, மாற்றுத் தீர்வுகளைக் கண்டறிந்து அவற்றுக்கிடையில் இணக்குவிப்புகளைச் செய்து மிகச்சிறந்த நடைமுறைச் சாத்திய மாற்றீட்டைத் தெரிவுசெய்ய வேண்டும். இந்த வகையிலேயே ஒரு கொள்கையை ஆக்க முடியும். உளவுத் தகவல்களை ஆய்வு ரீதியாக திரட்டுதல், களஞ்சியப்படுத்தல். அதேபோல நுணுகி ஆராயும் ஓர் அரசின் தேவையை இருபதாம் நூற்றாண்டளவில் உணர முடிந்தது. அதற்குக் காரணம் பிரச்சினைகளுக்கான சூழமைவு மாறுபட்டதாகவும் விரிவானதாகவும் பிரச்சினைக்கு உரியதாகவும் இருக்கின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட படிமுறையில் கொள்கை வகுப்புச் செயற்பாட்டை ஆரம்பிக்கும் அரசு பல வழிகளில் சமூகத்தின் மீதான

இடையீட்டை ஆரம்பிக்கின்றது. பொருளாதாரக் கொள்கை, கல்விக் கொள்கை, சுகாதாரக் கொள்கை, வெளியுறவுக் கொள்கை போன்றவற்றால் நலன்புரி அரசு உருவாகி அதனாலான இடையீடும் விரிவடையத் தொடங்கியது. இதனால் அதிகாரக் குழுக்களும், வர்த்தக நிறுவனங்களும் அரச அதிகாரம் கையாளப்படுவதில் இடையீடு செய்யத் தொடங்கின. ஆகவே அரசின் அதிகாரம் மென்மேலும் அதிகரித்தது. இதன் விளைவாக சிவில் சமூகத்தைக் கொண்டியக்குவதற்காக அரசிடம் ஒப்படைக்கப்பட்ட முதலாவது பொறுப்பினை அரசு தவறவிடும் நிலை உருவானது.

ஜனநாயக சமூகங்களில் சிவில் சமூகங்கள் சார்பாக முன்னிலைப்படுவதற்கு சமூகத்தால் பல்வேறு தன்னார்வ அமைப்புகள் உருவாக்கப்பட்டன. அரசு தனி நபர் சுதந்திரம், சொத்துக்கள், உரிமைகள் போன்றவற்றை பறிக்கும்போது அவற்றுக்காக இடையீடு செய்யும் சிவில் அமைப்புகள் படிப்படியாக உருவாகின. சமூகத்தில் அங்கம் வகிப்பவர்கள் அரசின் இடையீடு இல்லாமல் ஏனைய அங்கத்தவர்களோடு இணைந்து தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதை எல்லாச் சமூகத்திலும் காணலாம். சுதந்திரமான ஒரு சமூகத்தில் சிவில் அமைப்புகள் அதற்காக முன் வருவதோடு அரசு தனது இடையீட்டால் சுதந்திரத்திற்கு அழுத்தம் கொடுக்க ஆரம்பித்தால் அதனைக் கட்டுப்படுத்துவதற்கும் இத்தகைய அமைப்புகள் உருவாக்கப்படும். இவ்வாறான சிவில் அமைப்புகளின் பணிகளை அரசு சார்பற்ற அமைப்புகளென அறியப்படும் நிறுவனங்கள் நிறைவேற்றி வருகின்றன.

நல்ல பண்புகளை அடிப்படையாகக் கொண்ட பண்பாடுடைய சமூகமென அறியப்படுகின்ற சிவில் சமூகத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு நவீன ஜனநாயகத்தில் இந்த அமைப்புகளிடமே ஒப்படைக்கப்படுகிறது. இதனாலேயே ஐக்கிய நாடுகள் அமைப்பின் சாசனத்தில் அரசு சார்பற்ற அமைப்புகள் அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன் சமூக பொருளாதார மற்றும் அபிவிருத்தி சார் பொறுப்புகளையும், மனித உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பின் நிமித்தமும் அவை இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

### 4. சிவில் சமூகமும் பண்பாடற்ற சமூகமும்

நாம் சிவில் சமூகம் என்ற சொற்பிரயோகத்தை ஜோன் லொக் தெளிவுபடுத்திய பண்பாடுடைய சமூகம் என்ற கருத்திலேயே கையாளுகின்றோம். பண்பாடுடைய சமூகத்திற்குப் பதிலாக பண்பாடற்ற சமூகத்தை (uncivil society) போஷிக்கும் அமைப்புகளையும் சமூகத்தில் காணலாம். பெரும்பாலும் அதிகாரக் குழுக்கள் ஆட்சியாளர்களுடன் இணைந்து அதிகாரத்திற்காக சமூகத்தைப் பிளவுபடுத்தும், இனவாதத்தையும் மதவாதத்தையும் வளர்த்துவரும் அமைப்புகளையும் சமூகத்தில் காணலாம். இவை அரசிலிருந்து அன்னியப்பட்டு நிற்பதால் அரசு சார்பற்ற அமைப்புகளென அழைக்கப்படுகின்றன. அவற்றை சிவில் சமூகங்கள் என அறிமுகம் செய்ய முடியாது. ஏனென்றால், அவை சிவில் எனப்படுகின்ற பண்பாடுடைய சமூகம் சார்பாக அல்லாமல் பண்பாடற்ற சமூகம் சார்பாக முன்னிலைப்படுகின்றன.

சமூகத்தின் பொதுநலன் கருதி மனித நாகரிகத்தின் எதிர்கால இருப்புக்குத் தேவையான சுதந்திர கருத்தாடல், ஜனநாயகம் மற்றும் உரிமைகளுக்கான கருத்தாடல்களை முன்கொண்டு செல்பவை சிவில் சமூக அமைப்புகள் என அறியப்படுகின்றன. பண்பாடு இன்மையையும் ஒழுக்கமின்மையையும் வளர்க்கும் நிறுவனங்கள் உண்மையான சிவில் சமூக அமைப்புகளாகமாட்டா. அவை வேறு வடிவத்தில் அரசாங்கத்தின் நீட்சியாக அல்லது அதிகார நாட்டமுடைய சமூகத்தைத் தவறாக வழிநடத்தி சமூகத்தின் பண்புடைமையை அழித்து விடுகின்றன. அதேபோல், அரச அதிகாரத்தை தான்தோன்றித்தனமாக கையாளும் சர்வாதிகார, பிடிவாதப் போக்குடைய ஆட்சியாளர்கள் சார்பாக வெளிப்படுகின்றன.

ஒழுக்கத்திற்காக முன்னிலைப்படுகின்ற சிவில் சமூக அமைப்புகளிடம் பல பொறுப்புகள் ஒப்படைக்கப்படும். அரச கொள்கைகள் உருவாக்கப்படும்போது சமூகத்தின் பொதுப் பிரச்சினைகளை மறந்து பக்கச்சார்பாக கொள்கைகள் வகுக்கப்படுவதை தவிர்ப்பது தேவையாக உள்ளது. அவற்றுக்கு மாற்றான கொள்கைகள் பற்றிய உரையாடலை சமூகத்தில் ஏற்படுத்த வேண்டும். அரச கொள்கைகள் வாயிலாகவும் மக்களின் வாழ்வியலில் தலையிடலாம். அதாவது, அரச கொள்கைகளால் அமைக்கப்படுகின்ற மூலோபாய நகர்வுகள், மக்களின் வாழ்வு, சொத்துகள் மற்றும் சுதந்திரத்தில் இடையீடு செய்வதால் மக்களின் சுதந்திரமும் உரிமைகளும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன. அத்தகைய கொள்கைகளுக்கான மாற்றுக் கொள்கைகளை வகுப்பதற்கும் அவற்றுக்கான உண்மையான மக்கள் அபிப்பிராயத்தை கட்டியெழுப்புவதற்குமான பொறுப்பு சமூக அமைப்புகளிடம் ஒப்படைக்கப்படும்.

கொள்கைகள் வகுக்கப்படும்போது சமூகத்தின் நாகரிகமும் ஒழுக்கமும் கட்டாயமாக பாதுகாக்கப்பட வேண்டும். கொள்கைகளுக்கும்

நாகரீகம் உண்டு. கொள்கைகளை வகுக்கும்போது சமூக நாகரிகத்துடன் அவை ஒத்துப்போக வேண்டும். கொள்கைவியலை அறிமுகப்படுத்திய பேராசிரியர் ஹரல்ட் லாஸ்வெல் 1950களில் இது பற்றி கலந்துரையாடியுள்ளார். அவருடைய Politics: who, what, when, how என்ற நூலில் அதற்கான கருத்துக்களை முன்வைத்துள்ளார். அவர் அரசியலின் முக்கிய பணி கொள்கை வகுத்தல் எனக் குறிப்பிட்டுள்ளார். கொள்கை ஒவ்வொன்றும் சமூகத்திற்கு ஏதாவது கிடைப்பதை தீர்மானிக்கின்றது. அது என்ன, யாருக்கு கிடைக்கின்றது, எவ்வாறு கிடைக்கின்றது, எப்போது போன்ற விடயங்களை கொள்கைகள் தீர்மானிக்கின்றன. அந்த வகையில் லாஸ்வெல், ஈற்றில் அரசியல் கொள்கைகள் வாயிலாக சமூக அதிகாரப் பரவலாக்கத்தை தீர்மானிக்கும் காரணியாக மாறுவதை நோக்கினார். இது, கொள்கைகள் சமூக பொருளாதார, கலாசார மற்றும் அதிகாரத்தில் செல்வாக்கு செலுத்தும் விதத்தை விபரிக்கின்றது. அரச கொள்கை வகுப்பாளர்கள் கலாசாரக் காரணிகள் ஊடாக சமூகத்தின் பண்பாட்டுசார் அங்கீகாரத்தையும் அனுசரிக்க வேண்டும் என்பதை அவர் சுட்டிக்காட்டினார். அத்தோடு, கொள்கை ஆக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் அறிவை புலன்களால் உணரும் உளவியல் ரீதியான காரணிகள் பற்றியும் லாஸ்வெல் கலந்துரையாடியுள்ளார். கொள்கைகளால் பயனடையாதோர் பற்றி பேசுவதற்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டலும் இதில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு யாருக்கு கிடைக்கின்றது மாத்திரமன்றி யாருக்கு கிடைக்கவில்லை, யாருக்கு அதிகமாக கிடைக்கிறது போன்ற சமூக அநீதி பற்றிய விடயமும் முக்கியமானது. ஒரு சில கொள்கைகளை வகுக்கும்போது சமூகத்திலுள்ள சில குழுக்கள் அதில் கவனம் பெறாத சந்தர்ப்பங்கள் அதிகமென்றே கூற வேண்டும். ஏழை மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்ட கலாசாரங்கள் மற்றும் சிறுபான்மை இனங்கள் ஒருசில கொள்கை வகுப்பாளர்களின் கண்ணுக்குத் தெரிவதில்லை. எனவே, அரசாங்கம் கொள்கையை வகுத்த பின்னர் அதனால் அதிகமாக பயனடைவோர், குறைவாக பயனடைவோர் மற்றும் எதையும் பெறாதவர்கள் போன்ற கோணங்களில் அதை அணுகக்கூடிய சமூக குழுக்கள் முன்னிலையாகும் பொறுப்பிலிருந்தும் சிவில் சமூகங்கள் விடுபட முடியாது.

கொள்கை என்பது நொடிப்பொழுதில் தீர்மானிக்கக் கூடிய ஒன்றல்ல. அவை நீண்ட காலமாக ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு தீர்மானிக்கப்பட வேண்டும். சமூகத்திலுள்ள சில பிரச்சினைகளுக்கு படிப்படியாகவே தீர்வுகளை முன்வைக்க வேண்டும். சில பிரச்சினைகள் மிகவும் சிக்கலானவை. அனைத்தையும் ஒன்று திரட்டி, ஓர் ஆவணமாக தயாரிப்பதால் அவை கொள்கைகளாக மாறிவிடுவதில்லை. சமூகத்தில் பலதரப்பட்ட தரப்புகள் உள்ளன. எனவே, குறிப்பிட்ட ஒரு காலத்தின் பின்னரே அனைவரின் தேவைகளையும் அறிய முடியும். இதனால் கொள்கையாக்கத்தில் இடையீடு செய்வதற்கு சிவில் சமூகங்கள் கொண்டுள்ள சமூகப் பொறுப்பு மிகப் பெரியது.

**5. சிவில் சமூக அமைப்புகளின் சமூகப் பொறுப்பு**

சிவில் சமூக அமைப்புகள் பரந்தளவிலான பொறுப்புகளைக் கொண்டுள்ளன. அரசு உருவாகும்போது காணப்பட்ட பண்பாடுடைய சமூகம், இயற்கைச் சட்டங்களால் கட்டியெழுப்பியிருந்த வாழ்வு, சொத்துகள், உரிமைகள் சுதந்திரம் போன்றவற்றின் அடிப்படைகளை பாதுகாக்க வேண்டும். அவற்றை அரசின் ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்ற வேண்டும். ஏலவே, குறிப்பிடப்பட்ட பண்பாட்டை முன்னெடுத்துச் செல்லும் வாக்குறுதியின் பேரில் அரசு உருவானது. ஜோன் லொக் என்பவருக்கு முன்னதாக அரசின் ஆரம்பம் பற்றிப் பேசிய தோமஸ் ஹொப்ஸ் கூற்றுப்படி, சமூகத்தில் சமாதானத்தைக் கொண்டுவரும் வாக்குறுதியுடன் அரசு உருவாகியுள்ளது. (peace promised state) நெருக்கடிகள் காணப்படுகின்ற சமூகத்திற்கு சமாதானத்தைக் கொண்டுவரும் வாக்குறுதியுடன் அரசு உருவானதாக அவர் வாதிட்டுள்ளார். அதையடுத்தே ஜோன் லொக் சுதந்திரம், வாழ்க்கை மற்றும் சொத்துக்கள் தொடர்பான வாக்குறுதிகளை குறிப்பிடுகின்றார். அந்த வகையில் அரசின் கடமையாகவுள்ள சமாதானம், வாழ்க்கை, சொத்துகள் மற்றும் சுதந்திரம் போன்றவற்றை அடிக்கடி நினைவூட்டி அரசுக்கும் சுதந்திர பிரஜைக்கும் இடையிலான தொடர்பினை பேணிக் கொள்வதும் சமூகங்களின் பொறுப்பாகும்.

ஏற்கனவே குறிப்பிட்டுள்ளதை போல சிவில் சமூகங்களின் பொறுப்புகளை சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொண்டுள்ளதால், ஐக்கிய நாடுகள் அமைப்பு அவற்றை வலுப்படுத்த பாரிய பங்கினை ஆற்றியுள்ளது. அதன் யாப்பில் பொருளாதார மற்றும் அங்கத்துவ சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அரசு சார்பற்ற அமைப்புகளையும் இணைத்துக்கொண்டு, சமூகப் பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண இன்றளவில் பலமான அடித்தளத்தை சிவில் சமூக அமைப்புகளுக்கு அமைத்துக் கொடுத்துள்ளது. இதனால் உலகிலுள்ள பண்பாடுடைய ஒவ்வொரு சமூகமும் சிவில்

அமைப்புகளை ஏற்றுக்கொண்டுள்ளன. அதேபோல், ஜனநாயகம், மனித உரிமைகள், சிவில் சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள சமூகங்களும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளன.

அலசிஸ் டீ டொக்வில் என்ற அரசியல் எழுத்தாளர் ஆயிரத்து எண்ணூறுகளில் பிரான்சிலிருந்து அமெரிக்காவுக்குச் சென்று அங்கு பல பிரதேசங்களில் உலாவி நூல் ஒன்றை எழுதியுள்ளார். அவர் அதில் அமெரிக்கர்கள் தமது அயலாருடன் பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக தன்னார்வ அமைப்புகளை நிறுவி, அரசாங்கத்தின் உதவியோ இடையீடோ இல்லாமல் செயற்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். ஒரு நபர் பல அமைப்புகளில் பங்கு வகிப்பதால் சிவில் சமூக அமைப்புகளின் வலையமைப்பினால் சமூகம் வழி நடத்தப்படுவதை அவதானித்த டொக்வில் "அமெரிக்கா ஒரு தேகங்களின் கூட்டு (nation of joiners) என அழைக்கப்பட வேண்டும் என்றார். அவர் அவதானித்த சிவில் சமூகத்தை சமகாலத்தில் பல்வேறு மக்களாட்சியிலும் காண முடியும். அரசின் இடையீடு இல்லாமல் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் ஒரு செயன்முறை இச் சமூகங்களில் உண்டு. புதிய தாராளவாத கருத்தாடலின் வருகையைத் தொடர்ந்து மக்கள் செல்வத்தை தேடுவதற்காக அடுத்தவனை முந்திச் செல்ல முயன்று தனித்துவிடப்பட்டவர்களாக, தத்தமது குடும்பங்களுக்குள் வரையறுக்கப்பட்ட மனிதர்களாக ஆகிவிட்டதால் சமூகமும் பலவீனமடைந்திருப்பதை சமீப காலமாக அவதானிக்க முடிகின்றது. அமெரிக்கச் சமூகத்திலும் இதனைக் காணலாம். எனவே, தற்போது சிவில் சமூகத்தை மீண்டும் வலுவூட்டுவதும், அதற்கென பிரஜைகளின் பங்கேற்பை அதிகரிக்கத் தேவையான இடையீட்டைச் செய்வதும் சிவில் சமூக அமைப்புகளின் பொறுப்பாக மாறியுள்ளது. அரசாங்கத்தில் தங்கியிருக்காது சிவில் சமூகம் தமது பிரஜை அமைப்புகளை இணைத்துக்கொள்ளுமானால் இக்காலத்தில் நிலவிக் கொண்டிருக்கும் பெருந்தொற்றைச் சமாளிக்கத் தேவையான பலத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை கோவிட் எமக்கு உணர்த்தியுள்ளது. சிவில் சமூகத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதில் சிவில் அமைப்புகள் மீறமுடியாத பொறுப்பினைக் கொண்டிருப்பதை இது சுட்டிக்காட்டுகின்றது.

நலனோம்பலில் தங்கியிருக்காது தத்தமது ஆற்றலைக் கட்டியெழுப்பி வலுவூட்டுவதற்கான வாய்ப்பினைப் பெற சிவில் சமூக அமைப்புகள் கடந்த காலத்தில் எமது நாட்டில் அதிகளவில் பங்காற்றியிருப்பதை, சிவில் சமூகத் தொடர்புகள் ஊடாக நகரும் அபிவிருத்திச் செயற்பாடுகளை நோக்கும்போது தெரிகிறது. அரசாங்கம் அதிகாரத்தை விஸ்தரிக்கும் நோக்கத்துடன் அபிவிருத்தியை நாடிச் செயல்படுகிறது. கொழும்பில் உள்ள அதிகாரத்தை கிராமத்திற்குக் கொண்டு செல்ல அபிவிருத்தி பயன்படுத்தப்படுகிறது. அதைச் செய்யும்போது கிராமத்தின் சிவில் நடவடிக்கைகள், கலாசார தொடர்புகள் தகர்க்கப்படுகின்றன. அரசு இவ்வாறே தனது அதிகாரத்தை சமூகத்திற்கு கொண்டு செல்கிறது. இன, கலாசார மற்றும் மத கட்டுமானங்கள் அனைத்தையும் சிதைத்தவாறே அரசு பயணிக்கும். ஆகவே, அரசு கலாசாரம், சமூகம் மற்றும் மக்களுடன் பல்வேறு முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்கிறது. ஆதலால், அதற்கு எதிராக மக்களை வலுவூட்ட வேண்டிய தேவை எழுகிறது. அதற்கான பொறுப்பும் சிவில் சமூகங்களையே சாரும்.

### 6. இலங்கையும் சிவில் சமூக அமைப்புகளும்

எமது நாட்டில் சிவில் அமைப்புகளுக்கு பிரித்தானிய காலனித்துவ ஆட்சிவரை நீண்ட வரலாறு உண்டு. சமய மறுமலர்ச்சி இயக்கங்களாக முதல் சிவில் அமைப்புகள் தொடங்கப்பட்டன. பௌத்த பரம விஞ்ஞானார்த்த சங்கம், இந்து மற்றும் முஸ்லிம் கல்வி நிறுவனங்கள், மது ஒழிப்பு இயக்கம், ஆங்கிலம் படித்தவர்கள் மற்றும் உள்நாட்டு வியாபாரிகள் சங்கம் அத்துடன் அரசியலமைப்புச் சீர்திருத்த இயக்கங்கள் என்பன முதல் அரசசார்பற்ற நிறுவனங்களின் பட்டியலில் அடங்குகின்றன. அதன் பின்னர் தொழிலாளர் இயக்கங்களும், இடதுசாரி கட்சிகளும் உருவாகி பொது மக்களை ஒழுங்குப்படுத்தின. 1930களில் நலன்புரி அரசின் தோற்றத்தையடுத்து மக்கள் அரசையும், அரசியல் இயக்கங்களையும் நோக்கத் தொடங்கினர். இதன் விளைவாக அரசு சார்பற்ற அமைப்புகளின் எழுச்சி மழுங்கிப்போனது. மதக் குழுக்கள்தம் மத பரப்புரைக்காகவும், மதம் சார்ந்த நோக்கங்களுக்காகவும் சில நிறுவனங்களை ஆரம்பித்த போதும், சமூக அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு 1960களில் சர்வோதயம் அமைப்பு உருவாகும் வரை சிவில் சமூகத்தின் நோக்கங்களை முதன்மையாகக் கொண்ட அரசு சார்பற்ற அமைப்புகள் இலங்கையில் இயங்கவில்லை. 1971இல் உருவான கிளர்ச்சியால் சிவில் உரிமைகள் மீறப்பட்டபோது ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பு (Civil Rights Movement) உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் 1990களில் மீண்டும் சிவில் உரிமைகள் மீறப்பட்ட சம்பவங்கள் அரங்கேறின. இக்காலப்பகுதியில் அன்னையர் சங்கத்தின் பணிகள் குறிப்பிடத்தக்க

வெளியை பூர்த்தி செய்துள்ளன. இலங்கையில் 1980களின் தொடக்கத்திலிருந்து 1990கள் வரை அரசின் இடையீட்டுடன் பாரியளவில் உரிமைகள் மீறப்பட்டன. இதனால் மனித உரிமைகள் பற்றிய கருத்தாடல்களும், இடையீடு செய்யும் சிவில் அமைப்புகளும் உருவாகின. இலங்கையில் அரசு சார்பற்ற துறைக்கு ஜனசவிய திட்டத்தால் பாரிய ஊக்கம் கிடைத்தது. அதேபோல், மனித உரிமை மீறல்கள், யுத்தம், இனப்பிரச்சினை போன்றவற்றால் அரசும் பயங்கரவாதிகளுக்குச் சமமாக நிலை குன்றியதால் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சமாதானம் போன்ற காரணங்களுக்காக சமூக அமைப்புகள் உருவாகின. இவை ஊடாகவும் அரச கொள்கைகளும் மூலோபாயங்களும் கேள்விக்கு உட்படுத்தப்பட்டன.

என்னுடைய அவதானிப்பின்படி அரசின் கொள்கைகளை கேள்விக்கு உட்படுத்தி மாற்றுத் தீர்வுகளை தேடுவதற்கான காலம் உருவானபோதுதான் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தொடங்கப்பட்டது. கடந்த காலத்தில் இந்த நிலையம் சமூக ரீதியில் பல இடையீடுகளைச் செய்துள்ளது. அதிகாரப் பரவலாக்கம், அரசியலமைப்புச் சீர்திருத்தம், மனித உரிமைகள் மற்றும் அரசியலமைப்பை பாதுகாக்கும் விடயத்திலும் அதன் பங்கு உண்டு. அரசியலமைப்பு மீறப்பட்ட சந்தர்ப்பங்களிலும் இந்த நிலையம் நீதிமன்றத்தை நாடியது. இவ்வாறு பல பரிமாணத்தில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் செயற்பட்டு வந்துள்ளது.

இலங்கையில் தனக்குள்ளே இருக்கும் சிவில் மனிதன் பற்றி பிரஜைகளுக்கு சரியான புரிதல் இல்லை. உறக்கத்தில் இருக்கும் சிவில் மனிதனை எழுப்புவது கடினமானது. அரசு பலவழிகளால் இவர்களை தனது பிடிக்குள் சிக்கவைத்துள்ளது. காலனித்துவ காலத்தில் சிவில் சமூகங்களின் தோற்றத்தை ஆராய்வோமானால் அவை சமய ஆர்ப்பாட்டங்களுடன் இணைந்திருந்தன. சமய ஆர்ப்பாட்டங்கள் ஊடாக பிரசன்னமான சிவில் அமைப்புகள் காலனித்துவத்திற்கு எதிராகவும் செயற்பட்டன. பௌத்த சமய மறுமலர்ச்சி, மது ஒழிப்பு இயக்கம் போன்ற அமைப்புகள் தோன்றின. அதன் பின்னர் இடதுசாரி இயக்கங்களின் வருகையைக் காணமுடியும். சுதந்திரம் காணும்போது அரசின் இடையீடு தீவிரமானது. இதனால் மக்கள் அரசு சார்பான போக்கு (statists) உடையவர்களாக மாறினார். அனைத்தையும் சரியாக செய்வது அரசுதான் என்ற சிந்தனையில் அவர்கள் இருப்பதையே இது காட்டுகிறது. இங்கு அரசு சிவில் சமூகத்தை தேசத்துரோக, மேற்கத்திய அடிவருடி மற்றும் அந்நிய நாட்டு ஏகாதிபத்திய உபாயங்களுக்காக தெரிபடுவதாக அடையாளப்படுத்தியது. இதனாலேயே 'என்.ஜீ.ஓ காரர்கள்' என்பது நிந்தனை செய்யும் விதமாக முத்திரை குத்தப்பட்டுள்ளது. இது வேண்டுமென்றே செய்யப்பட்டுகிறது.

### 7. சிவில் சமூகமும் இலங்கை அரசும்

இங்கு நாம் அரசு என்ற சொல்லைப் பயன்படுத்தினாலும் அரசின் சார்பாக இவற்றை கட்டுப்படுத்தும் ஒவ்வொரு நகர்வும் பிரமுகர்களால் இல்லாவிட்டால் ஆட்சியாளர்களினால் முன்னெடுக்கப்படுகிறது. இவர்கள் சிவில் சமூக அமைப்புகளை போட்டி நிறுவனங்களாகவே கருதுகின்றனர். 1971 ஆண்டுக் கிளர்ச்சி முதற்கொண்டு அரசின் ஒருசில இடையீடுகளால் உரிமைகள் மீறப்பட்டபோது மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பு (CRM) உருவானது. அப்போதைய ஆட்சியாளர்கள் இது போன்ற அமைப்புகளை பகையாளிகளாகவே நோக்கினர். போர் நிலவிய காலத்திலும் இந்த நிலையில் எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லை. போரினால் மனித உரிமைகள் மீறப்பட்டன. இதைக் குறிப்பிடும் போதெல்லாம் போரை அரசியல் ஆயுதமாக்கி, இந்த மோதல் சிங்களவர்களின் அரச அதிகாரத்திற்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள போர் என்பதைச் சுட்டிக்காட்டி, சிவில்சமூக அமைப்புகள் அதற்குச் சார்பாகவே முன்னிலைப்பட்டுள்ளன என்பதை சமூக மயப்படுத்த அரசு முயற்சித்தது. அதனால் சமூகத்தில் சிவில் சமூக அமைப்புகள் பற்றிய தேவையில்லாத அச்சம் உருவானது. இலங்கை போன்ற நாடுகளில் அரசு சிவில் சமூகத்தை தமது ஆதரவாளராக அன்றி பகைவராகவே நோக்குகிறது. ஆசியாவில் பல நாடுகளின் நிலையும் இதுதான். ஆயினும், போர் நிலவிய காலத்தில் சிவில் சமூகங்களின் பங்களிப்பின்றி வடக்கிலும் கிழக்கிலும் செயல்பட அரசு தவறியதால் அவற்றுக்கு வேலை செய்யும் வாய்ப்பு கிடைத்தது. சிவில் சமூக அமைப்புகள் இயங்குவதற்கு அரச நிறுவனங்களால் நிதி உதவி அளிக்கப்பட்டது. சேவா லங்கா, வேர்ல்ட் விஷன், சர்வோதயம் போன்ற நிறுவனங்கள் அப்பகுதிகளில் இயங்கின. இலங்கைவாழ் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய யாராவது இருக்க வேண்டும் என்பதால் அரசும் எல்.ரீ.ரீ.ஈ யும் அதை அனுமதித்தன. ஆகவே அரசு சிவில் சமூகத்தின் உதவியைப் பெற்றது. நிகழ்காலத்திலும் அபிவிருத்தித் துறையில் பணியாற்ற இவ்வாறு உதவிகள் பெறப்படுகின்றன. பிரதேச உத்தியோகத்தர்களும் மாவட்டச் செயலாளர்களும் சிவில் சமூகங்கள் ஊடாக பல கருமங்களை ஆற்றி வருவதைக் காணலாம்.

பொதுவாக அரசு சிவில் சமூகத்தை தனது பங்காளராக நோக்க விரும்புவதில்லை. ஜனசவிய திட்டம் அமுலிலிருந்த காலத்தில் சர்வோதயத்திற்கு கொடுக்கப்பட்ட தொல்லைகளை அதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். சர்வோதயம் போன்ற நிறுவனங்களின் மிக நீண்டகால சமூகச் செல்வாக்கு மற்றும் நுணுக்கமான வேலைத்திட்டங்களால் அவற்றின் பணிகள் சிறப்பாக உள்ளன. இருப்பினும் பிரேமதாசாவின் காலத்தில் சர்வோதயம் பல கெடுபிடிகளைச் சந்தித்தது. அது இந்த நாட்டில் சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் நிறுவனங்களுக்கு அவகாசம் இல்லை என்பதை உணர்த்தியது. ஆனால், சமூகத்தை பண்பற்றதாக மாற்றி அநாகரீகத்தைப் பரப்பும் அமைப்புகளுக்கு அவகாசம் உண்டு. அதேபோல், இனவாதம், சமய முரண்பாடுகளை உருவாக்கும் அமைப்புகளைக் கண்டு அரசாங்கம் மௌனம் சாதிக்கின்றது.

#### 8. எதிர்காலச் சவால்கள்

சிவில் சமூக அமைப்புகள் இதுபோன்ற சவால்களுக்கு மத்தியில் உபாயத்துடன் செயற்படவேண்டும். தேவையான பலம் வாய்ந்த பொருளாதார அத்திவாரம் இல்லாததால் சமூக அமைப்புகள் தமக்கேயான ஒரு பொருளாதார அத்திவாரத்தை அமைத்துக் கொள்வது பற்றி சிந்திக்க வேண்டும். இத்தகைய அமைப்புகளின் கூட்டு அதற்கான ஆரம்பம் எனலாம். ஏனைய சீர்மிய நாடுகளில் நடைபெறுவதைப் போல அரசு இந்த அமைப்புகளுக்கு நிதி அளிப்பைச் செய்ய வேண்டும். இந்த நாட்டில் அது ஒரு போதும் நிகழாது. ஆகவே, சிவில் சமூக அமைப்புகள் தமது சுயாதீன இருப்பு பற்றி சிந்திக்க வேண்டும்.

சுயாதீன நிதி வளங்கள் இருக்க வேண்டியது அவசியமாகும். அதேபோல, சிவில் சமூகங்களுக்கிடையில் பலமான கூட்டுறவு மலர வேண்டும். இங்கு பல அமைப்புகள் தனித்தனியாகவும், போட்டி மனப்பான்மையுடனும் செயற்படுகின்றன. இவை இணைந்து பொதுவானதொரு வேலைத்திட்டத்தைத் தயாரித்து, ஓர் அமைப்பாக செயற்படுமானால் வலிமையுடன் இயங்கலாம். ஒரே நோக்கத்திற்காக பலவழிகளில் செயற்பட்டாலும் அவற்றின் பெறுமதி சரிநிகராக இருப்பதால் மூலோபாயத் திட்டமும், கூட்டாண்மையும் கட்டியெழுப்பப்பட வேண்டும். அது சாத்தியமாகாத பட்சத்தில் இலங்கை போன்ற நாடுகளில் இயங்குவது கடினம்.

அனேகமான சிவில் அமைப்புகள் கொழும்பை மையம் கொண்டிருப்பதும், ஒரே குழுவுடன் மட்டும் இணைந்து பணியாற்றுவதும் தற்போது இலங்கையிலுள்ள சிவில் அமைப்புகளின் பலவீனம் எனலாம். இதில் தவறு இல்லாதபோதும் சமூகத்தின் அடித்தட்டு வரை பணிகள் விரிவடைய வேண்டியது அவசியம். சிறந்த சமூக வலையமைப்பும் இன்றியமையாதது. சர்வோதயம் போன்ற நிறுவனங்கள் பாரிய வலையமைப்பைக் கொண்டுள்ளதை உதாரணமாக கூறலாம். இது மிகவும் சிறந்தது. ஏனைய நிறுவனங்கள் அதைப்பற்றி சிந்திக்காமைக்கு காரணம், அந்தந்த காலப்பகுதியில் நிலவிய ஆட்சியின் அழுத்தத்தால் அவை பாரிய வலையமைப்பை தவிர்த்து செயற்பட்டுள்ளன. இவ்வாறு செயற்படுவதால் நெருக்கடியான ஒரு நிலை உருவாகும்போது தனித்துவிடப்படுவதையும், கொழும்புக்கு மட்டுப்படுத்தப்படுவதையும் தவிர்க்க முடியாது. இந்நிலைமையை மாற்றுவதற்கு நிறுவனங்கள் ஒற்றுமையை வளர்க்க வேண்டியது அவசியமாகும். மேலும், பெரும்பாலான நிறுவனங்கள் உள் வாரியாக மூடிய நிலையில் காணப்படுகின்றன. எனவே, அவை வெளிப்படையாக வேலை செய்வது குறித்து சிந்திக்க வேண்டும். பல நிறுவனங்களில் வெளிப்படைத்தன்மை இல்லை. அந்நிறுவனங்கள் ஜனநாயகம் பற்றி பேசினாலும் அவற்றில் உள் ஜனநாயகத்திற்கான அவகாசம் குறைவென்றே சொல்ல வேண்டும். சில சந்தர்ப்பங்களில் அவற்றின் செயற்பாடுகள் அரசியல் கட்சிகளை ஒத்திருக்கும். உள்வாரியான தலைமை அங்கத்தவர்களை மீறி முடிவுகள் எடுப்பதோடு வெளிப்படையாக பேசும் ஜனநாயகம் உள்ளே இருப்பதில்லை. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இடையிலும் விமர்சனங்களும் நெருக்கடிகளும் ஏற்படுவதுண்டு. சில அங்கத்தவர்கள் விலகிச் சென்ற பின்னர் தாம் முன்னர் பிரதிநிதித்துவப்படுத்திய நிறுவனத்தை விமர்சிப்பதுண்டு. இதுபோன்ற நெருக்கடிகளைத் தீர்த்து வெளிப்படைத் தன்மையை பேணிக் கொள்ளுதல், பொருளாதாரத்தில் சுயாதீனம் அடைதல் என்பன அவற்றின் தொடர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது. மேலும், அடித்தட்டு சமூகத்துடன் சிறந்த தொடர்பைப் பேண வேண்டும். அபிவிருத்தியை முன்னிட்டு செயற்படும் பல நிறுவனங்கள் கிராமம் தோறும் வேலை செய்து பொதுமக்களுடன் பிணைப்பையும் உறவையும் கட்டியெழுப்பியுள்ளன. அந்த முன்மாதிரியை பிற நிறுவனங்களும் பின்பற்ற வேண்டும்.

சில அமைப்புகள் அரசாங்கத்தை விட ஒருபடி மேல் நின்று பிரஜைகளுக்கான கொள்கைகளை வகுக்கும் செயற்பாட்டில் இடையீடு செய்கின்றன. உதாரணமாக புதிய அரசியலமைப்புக்கான உரையாடல் தொடங்கப்பட்ட போதும், தகவல் அறியும் சட்டம் போன்ற மிகச் சிறந்த சட்டங்கள் கொண்டுவரப்பட்ட போதும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும்,

அத்தகைய வேறுசில நிறுவனங்களுமே பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தின. எனினும், அந்நிறுவனங்கள் பிரஜைகளின் நம்பிக்கைக்கு பாத்திரமாகாமல் இருப்பதற்குக் காரணம், மக்கள் அரசின் கருத்தியலை தீவிரமாக பிரதிநிதித்துவம் செய்கின்றனர் என்பதேயாகும். அரசுடன் நேரடியான தொடர்பு இல்லாவிட்டாலும்கூட மக்கள் அரசின் கருத்தியலை பிரதிபலிக்கின்றனர். அரசின் கருத்தியலை அடிப்படையாகக் கொண்ட எண்ணக்கருக்களை நாள்தோறும் மக்கள் மனங்களில் ஆழப் பதிய வைக்கும் செயலை வெகுஜன ஊடகங்கள் கலை, கல்வியின் ஊடாக முன்னெடுத்து பிரஜைகளை அரசுடன் கட்டிவைத்திருக்கும் அனுதின செயலை அரங்கேற்றுகின்றன. ஆகவே, இந்தக் கருத்தியலுக்கு மாற்றான ஒரு கருத்தியலை முன்னெடுக்கும் வெகுஜன ஊடகங்களும் சமூக ஊடகங்களும் கலை மற்றும் கலாசார அம்சங்களை கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்த வேண்டியது முக்கியமானது.

எம் நாட்டவர்களுக்கு குடியுரிமை, அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் பற்றிய சரியான புரிதல் இல்லை. அரசு பிரஜைகளுக்கு வழங்கிவரும் சேவைகள் பற்றி நான் ஒரு ஆய்வை மேற்கொண்டேன். அரசு மக்களுக்கு சேவைகளை வழங்கும் பல சந்தர்ப்பங்கள் காணப்படுகின்ற போதிலும் மக்களிடம் அதற்கான புரிதல் இல்லை. நான் அந்த ஆய்வில், கிராமிய மக்கள் குழுவொன்றிடம் மக்களுக்கான சேவைகளை வழங்கும் ஐந்து அரச நிறுவனங்களை குறிப்பிடுமாறு கேட்டபோது 75 சதவீதமானோர் சர்வோதயம் என்று பதிலளித்தனர். அதாவது அவர்கள் சர்வோதயத்தை ஓர் அரச நிறுவனமாகவே அறிந்துள்ளனர்.

அரிஸ்டோட்டில் குடியுரிமை பற்றி குறிப்பிட்டுள்ள ஒரு கூற்றில் "நீங்கள் இங்கு பிறந்துள்ளதால் பிரஜை ஆகிவிட மாட்டீர்கள். இங்கு பிறந்த வெளிநாட்டவர்களும் இருக்கிறார்கள், அடிமைகளும் இருக்கிறார்கள். உங்களுக்கும் அவர்களுக்கும் இடையில் என்ன வேறுபாடு இருக்கிறது? உங்களுக்கு நகரத்தின் ஆட்சி பற்றிய முடிவுகளை எடுப்பதிலும், நீதிமன்ற நடவடிக்கைகளிலும் பங்கு உண்டு." குடியுரிமை என்பது பிறப்பு பற்றியதல்ல. தமக்குரிய அரசியல் மற்றும் சமூகப் பொறுப்புகளை தன்வசப்படுத்தலாகும். எமது நாட்டு மக்களுக்கு இந்தப் புரிதல் இல்லை. அரசின் அரசியல் சமூக செயற்பாட்டிலும், கொள்கை ஆக்கச் செயற்பாட்டிலும் பங்கு பெற வேண்டியது பிரஜைகளின் பொறுப்பு. இது இயல்பாக நிகழாது. அதை அவர்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். அவர்கள் உறக்கத்தில் இருக்கிறார்கள். உறக்கத்திலிருந்து அவர்களை எழுப்பி மனசாட்சிப்படி நடந்து கொள்ளும் தர்க்க ஜீவிகளாக மாற்ற வேண்டும். கடந்த காலத்தில் பல்வேறு சிவில் அமைப்புகள் மக்கள் மத்தியில் இந்தப் புரிதலை ஏற்படுத்தின. எமது நாட்டில் பெரும்பாலும் அரசியல் முரண்பாடுகள் ஊடாகவே இந்த புரிதல் ஏற்படுகிறது. இடதுசாரி இயக்கங்கள் நீண்டகாலமாக முன்னெடுத்த பகிஷ்கரிப்பு, பொது மக்களை ஒன்று திரட்டியதனூடாக பிரஜைகளின் பொறுப்புகளை அறிமுகப்படுத்திய சந்தர்ப்பங்களும் உள்ளன. அதிலும் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான வேலைத்திட்டங்கள் இருப்பதால் அதில் பங்கு கொள்ளாது சுயாதீனமாக அவதானிக்கும் புரிதலை ஏற்படுத்த வேண்டியது மிக மிக அவசியம். அரசுக்கு அப்பாலுள்ள சிவில் சமூகத்தை நோக்குவதற்கு மக்களைத் தயார் செய்ய வேண்டும். "சுதந்திர மனிதன்" உருவாக்கப்படுவது ஜனநாயகத்திற்கு இன்றியமையாதது. பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் அதன் வழியாக அரசுக்கு அழுத்தம் பிரயோகித்தல், இதுவே எமக்குரிய ஜனநாயகம். குடியுரிமை தானாக வந்து விடாது. அதைக் கட்டியெழுப்ப வேண்டும்.

"மனிதன் இயல்பாகவே சமூகப் பிராணி" - ஜோன் லொக். "பாலர் பருவத்தில் அந்த சமூகப் பிராணி உறக்கத்தில் உள்ளது. உறக்கத்தில் உள்ள பிராணியை எழுப்ப வேண்டும். கல்வி அந்தப் பணியை செய்கிறது" - ரூஸோ. குடியுரிமை பற்றிய எண்ணக்கருவை போதிப்பதால் மட்டும் குடியுரிமை என்றால் என்ன என்பதன் நடைமுறை புரிதல் ஏற்பட்டுவிடாது. அதற்கு சமூகப் போராட்டம் தேவை. வாழ்க்கை அனுபவங்கள் மற்றும் முரண்பாடுகளால் மனிதனின் புரிந்துணர்வு கூர்மையாகிறது. அதற்கு ஒரு கருத்தாடல் இருக்க வேண்டும். அந்தவகையில் சிவில் சமூகத்திற்கும் பொறுப்பு உள்ளது. சமூகக் கற்பித்தல், விழிப்புணர்வு மற்றும் கருத்தியலொன்றை முன்னெடுத்துச் செல்லுதல் போன்றவற்றை சிவில் சமூகம் நிறைவேற்ற வேண்டும். தொடர்ச்சியாக இந்த கருத்தாடலை முன்னெடுக்க வேண்டும்.

சிவில் சமூக அறிவாளிகளுக்கு மாற்றுக் கருத்துகளை வளர்க்கும் பொறுப்பு உள்ளது. அதேபோல், தொடர்ச்சியாக நிதிப் பலத்தை தேடுவதற்கு கூட்டிணைப்பின் ஊடாக திட்டங்களை ஆரம்பிக்கலாம். சிவில் சமூக அமைப்புகள் ஓர் உடன்பாட்டுடன் தமக்கான நிதியைத் திரட்டக்கூடிய சுயாதீன மார்க்கங்களை நாடவேண்டும். சந்தையில் இயங்கும் ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும். சில தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு அதன் வழியாக மூலதனத்தைத் திரட்டலாம். சிவில் சமூக அமைப்புகள் சுயமாக இயங்குவதற்கான பலத்தை கட்டியெழுப்புவது அவசியம்.

கொடைகளுக்கான கதவுகள் மூடப்படும் வாய்ப்பு உள்ளதால் எல்லா நேரங்களிலும் கொடைகளில் தங்கியிருப்பது இடர் வரவுக்கு வழிவகுக்கும். கொடைகள் நிறுத்தப்பட்டவுடன் இதுவரையில் முன்னெடுத்த கொள்கை சார்ந்த பணிகளை நிறுத்த முடியாது. ஆகவே, தற்கால சூழமைவில் சிவில் சமூகங்கள் சுயமாக எழுந்து நிற்பது மிகவும் அவசியம்.

சிவில் சமூக அமைப்புகளின் பணிகள் நாட்டின் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டுத் தளத்திற்கும் விரிவடைய வேண்டியது மிக மிக அவசியம். அதன் வழியாக மக்களை இணைத்துக் கொண்டு அவர்களுடன் வேலை செய்வதால் நம்பிக்கையை வெல்ல முடியும். சமூகம் எப்போதும் அரசியல் சாயை கொண்டதல்ல. சமூகத்தின் அடித்தளத்தில் அரசியல் அல்லாத, அந்தந்த இனக்குழுக்கள் சுயமாக சிந்திக்கும், அதேபோல் அவர்களை வழிநடத்தும் கலாசாரக் காரணிகள் உள்ளன. சமூகத்தின் தொடர்ச்சி அந்தக் கலாசாரத்தின் மீளுருவாக்கத்திலேயே தங்கியுள்ளது. இதில் சிவில் சமூகத்தின் கவனம் குவிக்கப்படாதுள்ளது. அனேகமான அமைப்புகள் மேல் தளத்தில் மட்டுமே இயங்குகின்றன. அடித்தட்டு வரை ஊடுருவிச் செல்வதில்லை. இதற்கு புதிய நுணுக்கங்களை உருவாக்க வேண்டும். லத்தீன் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் சிவில் அமைப்புகள் கொடைகளை மட்டும் நம்பிச் செயல்படுவதில்லை. இந்தியாவிலுள்ள மிகப்பெரிய அரசசார்பற்ற வலையமைப்பின் செயற்பாடுகளை கொடைகள் மட்டும் தீர்மானிப்பதாக தெரியவில்லை.

பிறநாடுகளில் அரசசார்பற்ற துறைக்கு சந்தை ஊடாகவும் கொடை வழங்கப்படுகிறது. எமது நாட்டில் அப்படியானதொரு சந்தை இல்லை. எனவே, தமது சுய பலம் பற்றி சிந்தித்து தன்னுடைய நிறுவனங்களை கொண்டு நடத்த வேண்டும்.

தற்போது மிகப்பெரிய அளவில் கொடைகள் கிடைப்பதில்லை. அதனால் புதிய வழிகளைத் தேடுதல், மூலோபாயங்களை வகுத்தல், பிரதான நிறுவனங்கள் இணைந்து வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல் போன்ற அடிப்படையான சவால்களை சிவில் சமூக அமைப்புகள் எதிர்கொண்டுள்ளன. குறிப்பாக, ஏற்பட்டுள்ள கோவிட் நெருக்கடியால் அரசுத் துறை, தனியார் துறை அதேபோல அரசு சார்பற்ற அமைப்புகளுக்கும் பல்வேறு சவால்கள் காணப்படுவதால் மேற்கூறிய விடயங்களில் கூடுதலான கவனத்தைக் குவிக்க வேண்டும்.

---

**பேராசிரியர் ஏ.எம். நவரத்ன பண்டார**

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரச அறிவியற் துறையின் சிரேஷ்ட ஓய்வுநிலைப் பேராசிரியர். பேராதனைப் பல்கலைக்கழக கலைப் பீடத்தின் முன்னைநாள் பீடாதிபதி. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளம்கலை - முதுகலைப்பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்து, இங்கிலாந்தின் யோர்க் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்டத்தைப் பெற்றார். தேசிய ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்ட அலகின் (NIPU) ஆரம்ப உறுப்பினர்.

# உரிமைகளுக்காக எழுந்திருப்பதற்கு எமது மனங்களை தயார்ப்படுத்திய நிறுவனம்



நிமல்கா பிரனாந்து

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அதன் 25வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் சந்தர்ப்பத்தில் வாழ்த்துச் செய்தியொன்றை எழுதுவதற்கான அழைப்புக் கிடைத்தமை எனக்கு மகிழ்ச்சியாகவும் கௌரவமாகவும் உள்ளது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் என்றால் என்ன? அதற்கான பதில்கள் பல இருக்கலாம். சில பதில்கள் நேர்மறையானவையாக இருக்கக் கூடியதுடன் சில பாதகமாக அமைவதற்கும், அரச சார்பற்ற நிறுவன எதிர்ப்புடன் கூடிய அச்சம் நிறைந்த சூழலில் எதிர்க்கின்ற மனப்பாங்கைக் கொண்டிருக்கவும் வாய்ப்புள்ளது. மனித உரிமைகளைப் பாதுகாக்கும், வளர்க்கும் மற்றும் சனநாயக ரீதியான அடிப்படைக் கோட்பாடுகளைப் பாதுகாக்கின்ற பயணத்தில், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் இணைப் பங்குதாரராக நெருக்கமாகப் பணியாற்றுகின்ற வரப்பிரசாதம் எனக்கு உரித்தானது. அது ஏன்? சிலர் விளக்கமளிக்கின்றவாறு, அவ்வாறு நாம் எதேனுமொரு பாரிய சர்வதேச சூழ்ச்சியொன்றின் முகவர்கள் என்பதாலா? இல்லையேல் எமது அறிவையும் அனுபவத்தையும் விமர்சன ரீதியான மக்களுக்காக அர்ப்பணிப்புச் செய்வதற்கும் இளம் கல்வியியலாளர்களாகவும் செயற்பாட்டாளர்களாகவும் நாம் அன்று எடுத்த தீர்மானத்தினாலா? வாழ்க்கையில் மாற்று வழிகளைத் தேடுவதில் நாம் எடுத்துக் கொண்டு அறிவுபூர்வமான தெரிவுகள் ஊடாக காணப்படுகின்ற முறையை மறுதலிக்கின்ற நிலைமைக்கு உறுதியாகவே எம்மை மாற்றிக் கொண்டுள்ளோம். அந்தப் பயணத்தில் அது எமது தாய் நாட்டின் சிவில் செயற்பாட்டுக்காகப் புதிய கோணத்தைப் பரீட்சிப்பதற்காகத் தேர்ந்தெடுத்தது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் விசேட அடையாளமாகின்றது.

இலங்கையில் சிவில் யுத்தம் உச்சக் கட்டத்தில் இருந்த போது தனிப்பட்ட ரீதியிலும் அமைப்பாகவும், நாம் சந்தித்துக் கொண்டோம். ஆயிரக் கணக்கிலான மக்களுக்கு அவர்களது வாழ்விடங்களை இழக்கச் செய்கின்ற, உயிரிழக்கச் செய்யப்படுகின்ற மற்றும் காணாமல் ஆக்கப்படுகின்ற ஆயுத மோதலின் முடிவைக் காணக்கூடிய ஒரு நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் எடுத்துக் கொண்ட சமாதானத் தளமொன்றில் நாம் சந்தித்துக்

கொண்டோம். விடயங்களை ஆராய்ந்து பார்ப்பதற்கும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் நாம் ஒன்றாகப் பயணித்தோம். ஆதரித்து வாதாடுதலும் ஆய்வுகளும் தொடர்பிலான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிகள் எப்போதும் மக்களுடைய தகவல்களின் அடிப்படையிலேயே அமைந்திருந்தன. பிரதான ஆராய்ச்சி ஒழுங்குமுறைகளுக்கு ஏற்றதாகவும், ஆயுதக் குழுக்களிடமிருந்தோ அரசிடமிருந்தோ எந்தவொரு தரப்பினரிடமிருந்தோ வருகின்ற அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள் மத்தியிலும் கூட, அச்சமின்றி பாதிக்கப்பட்டவர்களைத் தேடிச் செல்வதில் அர்ப்பணிப்புள்ள பணிக்குழுவொன்று கிடைப்பதற்கான அதிர்ஷ்டத்தை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பெற்றுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் தலைமைத்துவம், மனித உரிமை மீறல்களின் போது பாதிக்கப்பட்டவர்களுடன் இருக்கின்ற நோக்கையும் பணிப் பொறுப்பையும், நிபந்தனைகளின்றி வடிவமைக்கின்ற இயக்கமொன்றின் அனுபவங்களின் மூலம் வராதிருப்பினும், இலங்கையின் சனநாயக அமைப்பிலும் அரங்குகளிலும் பிரக்ஞைபூர்வமான பிரசையாக இணைந்து கொண்டதால் தான் அது அப்படியாக முடிந்தது. எமது இனிய நண்பர், லசந்த 2009ல் படுகொலை செய்யப்பட்டதுடன் கட்டியெழுப்பப்பட்ட சுதந்திர அரங்கின் ஐந்து ஏற்பாட்டாளர்களில் கலாநிதி சரவணமுத்துவும் ஒருவர். சனநாயக மற்றும் மனித உரிமைகள் சார்ந்த பிரச்சினையொன்றின் போது, “சரா” ஒருபோதும் முன்வைத்த காலை பின்வைப்பதில்லை. அவர் அந்த சக்தியை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திற்கு வழங்கியிருந்தார்.

பிரதான நீதிமன்ற நடைமுறைகளில் இடையீடு செய்வதன் ஊடாக சட்டங்கள் மற்றும் கொள்கைகளை வளர்ப்பதற்கு முயற்சி எடுப்பதன் ஊடாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் 25 வருட நிலைப்பாட்டின் மூலம் அது இலங்கையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும் எமது உரிமைகளுக்காக எழுந்திருப்பதற்கும் எமது உள்ளங்களைத் தயார்ப்படுத்தும் நிறுவனமாக மாறியுள்ளது. மக்களைத் தமது இருப்பிடங்களிலிருந்து அகற்றி, அவர்களைக் கொழும்பிலிருந்து வெளியேறுமாறு அரசு கட்டாயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பம் எனக்கு நன்றாக நினைவிருக்கின்றது. அப்பிரதேசத்தைப் பார்ப்பதற்கு பவானியும் நானும் விரைவாக அங்கே சென்றோம். எம்முடைய மக்கள் முகங் கொடுக்க வேண்டியிருக்கின்ற இன்னல்களையும் பலத்த அவமானங்களையும் நாம் பார்த்தோம். மறுநாளே, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், அடிப்படை உரிமைகள் வழக்கொன்றை தாக்கல் செய்து இடைக்காலத் தடையுத்தரவொன்றைப் பெற்றுக் கொண்டது.

கடந்த 25 வருடங்களுக்குள், இலங்கையில் மனித உரிமைகள் துறையிலும் சட்டத்தின் கட்டுப்பாட்டிலும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மேற்கொண்ட பங்களிப்பிலும் தூண்டுதலிலும் கலந்து கொள்ளக் கிடைத்தமை பற்றி நான் பெருமைப்படுகின்றேன்.

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் எமது இடையீடுகள் காரணமாக மிரட்டல்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டு 2021 மார்ச் 21ம் திகதி நாம் வெளியிட்ட கூட்டமைப்புக் கடிதமொன்றின் மூலம் கலாநிதி சரவணமுத்துவின் அர்ப்பணிப்பு பிரதிபலிக்கின்றது. ‘இலங்கையில் சுதந்திரத்தை தோல்வியுறச் செய்வதற்கும் கடந்த காலத்தில் மேற்கொண்ட அல்லது நிகழ்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் நீதியை நிறைவேற்றும் மற்றும் வகைபொறுப்புக் கூறும் வலிமையான முறையொன்றைக் கட்டியெழுப்புவதற்காகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் மனித உரிமைப் பாதுகாப்பாளர்களாக நாம் எமது இலட்சியங்களையும் இலக்குகளையும் நோக்கிய அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையைப் பற்றிய பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டாலும், இல்லாவிடினும், இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாப்பிற்காக எமது நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக நடத்த வேண்டும் என்பதும் நடத்துகிறோம் என்பதுமே எமது கருத்து.’

இந்த நாட்டின் அதிகாரிகளும் வலதுசாரி சக்திகளுக்கு முகங் கொடுத்து, துணிச்சலாகவும் அடிபணியாத, அமைப்பாக உங்களுடைய நிலைப்பாட்டை வலுப்படுத்தி வளர்த்து உயர் அடிப்படைக் கோட்பாடுகளைப் பாதுகாத்த நிறுவனமாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தை மாற்றியது தொடர்பில் கலாநிதி சரவணமுத்துவிற்கும், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அர்ப்பணிப்புள்ள கடந்தகால மற்றும் நிகழ்காலப் பணிக்குழுவிற்கும் நான் வணக்கம் செலுத்துகின்றேன்.

---

**நிமல்கா பிரனாந்து**

சட்டத்தரணி, பெண் உரிமை தொடர்பான செயற்பாட்டாளர். International Movement Against all forms of Discrimination and Racism, women's forum for peace ஆகிய அமைப்புகளின் தலைவராவார். ARENA அமைப்பின் முன்னாள் உறுப்பினர்.

# முன்னுதாரண சமூகப் பாத்திரம்



**சந்திரா ஜயரத்ன**

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) 25 ஆவது ஆண்டு நிறைவுத் தருணத்தில், அது சமூகப் பெறுமதி சேர்ப்புத் தேடல் பயணத்தில் தொடர்ந்து உத்வேகத்துடன் முன்செல்லும்வேளையில், எனது பாராட்டுக்களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

CPA இன்னமும் இளமைப்பருவத்திலேயே உள்ளது. ஆயினும் அது அதை உருவாக்கிய சிற்பி, கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து (சரா) அதற்கென ஏற்படுத்திய குறியிலக்குகளை ஈட்டிக்கொள்வதற்கும் அதிகமான அளவில் சாதித்துள்ளது. சரா, சிவில் சமூக வரலாற்றில் இப்பெருமைமிக்க தருணத்தை உங்களுடனும், CPA யின் ஏனைய நலன்பிரதிநிதிகளுடனும் பகிர்ந்துகொள்ளுகின்றேன்.

சரா, தனிப்பட்ட முறையில் உங்களுக்கும் எமது வாழ்த்துக்கள். கடந்த 25 வருடகாலத்தில், CPA தனது வரலாற்றுப் பதிவேடுகளில் ஈட்டியுள்ள தனிச்சிறப்புவாய்ந்த சாதனைகளை யதார்த்தமாக்க உதவிய தங்கள் சிந்தனைத் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவத் தலைமைத்துவம் என்பவற்றை நான் கண்டுணர்ந்து போற்றுகின்றேன். நீங்கள் இதயத்தில் பெரிதாக மதிக்கும் விழுமியங்களை வாழ்ந்து, பாதுகாத்து, உடல் ஆரோக்கியம் மற்றும் ஆற்றல் விழிப்புணர்வு என்பவற்றைப் பெற்று வாழ்வீர்களாக! நீங்கள் ஒரு வழிகாட்டும் தலைவராக, இந்த அர்ப்பணிப்புணர்வை சமூகத்தில் எஞ்சியுள்ளோருக்கும் பரிந்துரைசெய்து பின்வருமாறு கூறியுள்ளீர்கள்: "நாம் ஒரு சமூகமென்ற வகையிலும், பிரஜைகளென்றவகையிலும், இந்த நாட்டில் மேன்மைமிக்க, மதிப்பார்ந்த, பெறுமதியான விடயங்களுக்கு எம்மை அர்ப்பணித்துக்கொள்ளாவிடில், எமக்குத் தேசபக்தி, தேசியநலன் அல்லது பொதுநலன் குறித்துப் பேசுவதற்கு உரிமையில்லை. நாம் செயற்பட வேண்டும்".

CPA நாட்டிலுள்ள அதியுயர் பல்துறைப்புலமை, ஏனையோரைவிட வேறுபடுவதற்குத் துணிச்சல், சூழலுடன் மாற்றமுறுதல், விழுப்பம் மற்றும் தொழில் மகத்துவம் போன்ற விழுமியங்களையும் பின்பற்றும் சிவில் சமூக அமைப்பாகும். அது இலங்கையின் சிவில் சமூக அமைப்புகள் துறையிலுள்ள ஒப்புவமையில்லாத ஒரு பாத்திரமாதிரியாகும்.

கடந்த 25 வருடகாலமாகத் தங்களின் ஆற்றல்மிக்க தலைமைத்துவத்தின்கீழ் CPA ஈட்டிக்கொண்ட கூட்டாண்மைப் பண்புகள்: வெளிப்புறச் சக்திகளின் சவால்கள் எவையாகவிருந்தபோதிலும், இலட்சிய உறுதியும், உள்மைய விழுமியங்களின் பிரகாரம் வாழுதலும் வேறுபடுவதற்கான துணிச்சலும், ஏனைய சிவில் சமூக அமைப்புகள் தவிர்த்து ஒதுங்கிக்கொள்ள விரும்பும் விடயப்பரப்புகளினுள் பிரவேசித்தலும். மிக அண்மையில் இடம்பெற்ற விடயம் புதிய நிதிச் சட்டத்துக்குச் சவால் விடுத்தமை.

நிகழ்கால சமூக, அரசியல், பொருளாதார மற்றும் சூழல் இயக்கவியல் சூழமைவில், சமூகத்தின் மற்றும் தேவைகளுக்கேற்றவகையில், இசைவாக்கம் ஏற்படுத்திக்கொண்டு புதிய மூலோபாயங்களைச் செயற்படுத்தி, பல்துறை அறிவு மற்றும் நெகிழ்ச்சியுடன் செயலாற்றுதல்.

பெரிதாகப் போற்றும் ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி, உரிமைகள், சுதந்திரங்கள், உண்மை, நீதி, ஒப்புரவு, சமத்துவம் மற்றும் நல்லாட்சி விழுமியங்கள் குறித்த நிலைப்பாடுகளில் சகல சந்தர்ப்பங்களிலும் பிரதி விளைவுகள், பதிலடிகள் எவையாகவிருப்பினும் உறுதியாக நிற்றல்.

மனிதவள அபிவிருத்திக்கும், அணிகள் அபிவிருத்திக்கும் அர்ப்பணவுணர்வு - CPA க்கு ஆதரவு வழங்கும்வகையில் சமமான அளவில் பல்துறை அறிவு மற்றும் தொழில் மகத்துவம் வாய்ந்த ஓர் அணியை அபிவிருத்திசெய்தமை. இவர்கள் தமது ஆற்றல் மற்றும் அர்ப்பணவுணர்வு காரணமாக CPAயில் இருந்த காலத்திலும், வெளியே வேறு பொறுப்புவாய்ந்த பதவிகளிலும் பிரகாசித்துள்ளனர்.

நலன்பிரதிநிதிகளுக்குச் சேவைசெய்யும் வகையில் மூலவள இடைவெளிகளை நிரப்புவதற்கு, ஊடகத் தொடர்பாடல்களினுள் இடம்பெற்ற மூலோபாய இடையீடுகள் காண்பிப்பதுபோன்று, ஆக்கபூர்வமான, புதிதுபுனைதல் குணவியல்புகள், பிரதான பிரவாக ஊடக விருப்புத்தெரிவுகள் இல்லாத நிலையிலும் அவை, அதிகம் அபிவிருத்தியுறாத நிலையிலும் Ground views மற்றும் அதன் இரு தாய்மொழிச் சமூக ஊடக வெளியீடுகளான “மாற்றம்” மற்றும் “விகல்ப” மூலம் ஆரம்பிக்கப்பட்ட முன்முயற்சிகளைப் பலரும் வரவேற்றனர்.

கூர்மைவாய்ந்த பரப்புரை, விவாதம் மற்றும் பொதுநலன் வழக்காடலினூடாக, ஆட்சியிலிருந்த குழுக்களின் சவால்களை மூர்க்கமாகச் சுதந்திரம்பேணும் துணிச்சலுடனும், பயமின்மையுடனும் எதிர்கொண்டமை. இது அதிகாரம் மற்றும் எதிர்நிலைக் கருத்தாளர்களின் பரிணமிக்கும் சாத்தியவளப் பழிவாங்கல்கள் குறித்த சிவப்புக்கொடிகள் தென்பட்டவேளைகளிலும் இடம்பெற்ற விடயங்களாகும்.

ஒரு சமூக, அரசியல், பொருளாதார சூழமைவில் மூலோபாய மற்றும் பொதுக்கொள்கைப் பகுப்பாய்விலும், ஆராய்ச்சியிலும் ஆற்றல்களை வெளிப்படுத்தும் வகையிலும், எதிர்கால இலட்சியக் காட்சியிலும், பிரதான விவகாரங்களை இனங்காணுவதிலும், உருவத்தைவிட உள்ளடக்கத்துக்கு முன்னுரிமை வழங்குவதிலும் மற்றும் இடர்வரவுகளை இனங்காண்பதிலும் ஒரு “முன்னணிச் சிந்தனையாளர் அமைப்பாக” விளங்கியமை.

இடர்நிலைமைகளில் மூலோபாய மதியுரை, மூலவள ஆதரவு மற்றும் பாதுகாப்பு வழங்கும் உயர்மட்டத்திலான, பன்முகத்துறைகளைக்கொண்ட தொடர்புநிலை நபர்களும், நிறுவனங்களும் உள்ளடங்கும் ஒரு பரந்த சர்வதேச வலையமைப்பு.

பரப்புரை மற்றும் சமர்ப்பணங்களிலான மேன்மைநிலை - உயர் தரம், தாக்கம் மற்றும் கூர்மைவாய்ந்த ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ்மொழிப் பரப்புரையும், சமர்ப்பணங்களும்.

பெறுமதிவாய்ந்த ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுத்தரவுகளுடன்கூடிய, பரந்த தரவுத்தளத்தைக்கொண்ட ஓர் அறிவு மற்றும் தகவல் கருவூலம்.

பின்வரும் குறிகாட்டிகளின் அடிப்படையிலமைந்த "சிந்தனையாளர் தாக்கக்" கணிப்பீடுகளுடன்கூடிய, நிலைமாற்றமில்லாத, உயர்தரத்திலான செயலாற்றப்பணிவிளைவுகள்.

மூலவளக் குறிகாட்டிகள் - மனித வளங்களையும், நிதி வளங்களையும் பெற்றுக்கொள்ளும் ஆற்றலும், கொள்கை வகுப்பாளர்களுடன் அமையும்.

பயன்பாட்டுக் குறிகாட்டிகள் - ஊடகங்கள் மற்றும் கொள்கைமீது செல்வாக்குச் செலுத்துவோருடன் மதிப்புநிலை. பணிவிளைவுக் குறிகாட்டிகள் - கொள்கை முன்மொழிவுகள், கருத்துகள், வெளியீடுகள், மாநாடுகள், சுருக்க அறிவிப்புகள் போன்றவை.

தாக்கக் குறிகாட்டிகள் - முதனிலையாக, ஒரு சிந்தனையாளரின் பணி உண்மையில் எவ்வாறு கொள்கைமீது செல்வாக்குச் செலுத்தியுள்ளது என்பதைப் பிரதிபலிப்பது.

கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவின் தலைமைத்துவத்தின்கீழ் இயங்கும் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் இத்தகைய சகல குறிகாட்டிகளிலும் முதன்மைநிலை கொண்டதாகக் கணிப்பீடுசெய்யப்பட்டு, மதிப்பு நிலையளிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்புவமையற்ற ஆற்றல்களுக்காக மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் இலங்கையில் சிவில் சமூகத்தின் பாத்திரமாதிரியாகப் பிரசித்திபெற்றுள்ளதோடு, சர்வதேச சிந்தனையாளர் அரங்கிலும் மிகச் சிறந்தவற்றோடு போட்டியிடும் நிலையை எட்டியுள்ளது.

கடந்த 25 வருடகால சமூகப்பெறுமதி சேர்ப்புக்காக நன்றிதெரிவிப்பதோடு, மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் அடுத்த 25 ஆண்டுகளிலும் அதேவிதமான மதிப்பை ஈட்டிக்கொள்ளவேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

---

**சந்திரா ஜயரத்ன**

இலங்கை வர்த்தகப் பேரவையின் முன்னாள் தவிசாளர். சிவில் சமூகச்செயற்பாட்டாளர்.

# மக்கள் இயக்கத்தின் செயற்பணியை நிறைவேற்றியது



குமுதினி சாமுவேல்

1990 களில் இனங்களுக்கிடையிலான நீதி மற்றும் சமத்துவத்துக்கான இயக்கத்தினால் (MIRJE) உணர்வூட்டப்பெற்ற மரபை CPA முன்கொண்டு சென்றது. அந்தவேளையில், அரசியலமைப்புச் சீர்திருத்தம், ஜனநாயகம் மற்றும் பீதியிலிருந்து சுதந்திரம் என்பவற்றுடன்கூடிய சமாதானம் என்பவையே சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களின் இடிதாங்கிகளாகவிருந்தன. “தேசிய விவகாரம்” என அழைக்கப்பட்டதற்கு ஒரு நீண்டகால, நிலைத்தகவுள்ள தீர்வைத் தேடும்வகையில் 1992/93 இல் ஒரு புதிய அரசியலமைப்புக்கான ஒரு வரைபு மூலமுன்மாதிரியை உருவாக்கும் வகையில் MIRJE முன்னெடுத்த பணியை CPA முன்னெடுத்துச் சென்றதென்றே நான் நம்புகின்றேன்.

1996 இல் அது தாபிக்கப்பட்ட காலத்திலிருந்தே CPA அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கான தனது பரப்புரையில் நிலைமாற்றமின்றி இருந்துள்ளதோடு, ஒரு வலுவான பன்மைத்துவ ஜனநாய கலாசாரம், பல்கலாசாரக் குடிமக்கள், மனிதஉரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கான மரியாதை என்பவற்றை வலியுறுத்திவந்துள்ளது. இவை நிரந்தர சமாதானம் மற்றும் அனைவரையும் தழுவிநிற்கும் ஜனநாயகம் என்பவற்றுக்கான தேடலின் அடிப்படை விடயங்களாகும். அரசியலமைப்புக்கான திருத்தங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள், அதிகாரப்பகிர்வு மற்றும் சமஷ்டி என்பவை உள்ளிட்ட வகையில் அரசியலமைப்புச் சட்டம் மற்றும் நடைமுறை குறித்த CPA யின் பகுப்பாய்வு, பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டிணைவு என்றவகையில் அரசியலமைப்புப் பாதுகாப்பு, அரசியலமைப்பு மற்றும் தேர்தல் சீர்திருத்தம் குறித்த எமது பணிகளில் மிகவும் உதவிக்கரமாக அமைந்திருந்தது. ஒரு வீச்சான விவகாரங்களில் CPAயின் பகுப்பாய்வு மற்றும் அறிவு சம்பந்தமான ஆக்கங்கள் குறித்தும் நாம் CPA யின் பணிகள் குறித்தும் பாராட்டுதல்களைத் தெரிவித்துவந்துள்ளோம். இந்த விடயங்கள் அச்சு, செவிப்புல-கட்புல ஊடகங்களுக்குப் பரவிச்சென்ற

அதேவேளையில், 'அதிகாரத்தின் நடைக்கூடம்' எனப்படும் கலைச்சிருஷ்டியின் புதிதுபுனைதலான சமர்ப்பணம் குறித்து நாம் விசேடமாகக் குறிப்பிடவேண்டும். அது இலங்கையின் அரசியலமைப்பின் பரிணாமம்குறித்த புதிய நுண்ணறிவுகளை எமக்கு வழங்கியது. இச்சீர்திருத்தச் செயல்முறைகளின் காலத்தில் பால்நிலைச் சமத்துவத்துக்கும், பால்நிலை நீதிக்கும் நாம் விடுத்த அழைப்புகளுக்கும் CPAயின் ஆதரவு கிட்டியது.

ஊடகங்கள் கண்காணிப்பு, இணைய ஆட்சி, பேச்சுச் சுதந்திரம் மற்றும் வேறுபடும் அபிப்பிராயம் எனபவற்றுக்கான CPAயின் பணியும், அதன் பிரஜைகள் இதழியல் நுழைவாயில்களான யதார்த்தக்காட்சிகள் (Ground views) மற்றும் விகல்ப என்பவை பீதி மற்றும் பயத்தினால் பணிவுற்றுச் செயற்படும் ஊடகங்கள் நிறைந்த அரசியல் கலாசாரத்தில், ஒரு பரந்த வீச்சிலான அபிப்பிராயங்களுக்குப் பெரிதும் அவசியமான வாய்ப்பு உருவாகியுள்ளமை குறித்து விசேடமாகக் குறிப்பிடவேண்டும்.

சுதந்திரமான, நீதியான தேர்தல்களை உறுதிசெய்யும் வகையில் அவற்றுக்கு வலுவளிப்பதன் முக்கியத்துவம் 1990 களின் குடிமக்கள் செயற்பாடுகளின் மேலுமொரு தீர்மானகரமான அம்சமாக விளங்கியது. CMEV அலகை உருவாக்கியதன் மூலம் CPA இப்பொழுது இதற்கு இணைவு முழுமை வழங்கியுள்ளது. அது தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்கும் அப்பால் செல்லும்வகையில், குறிப்பாக உள்ளூராட்சி அதிகாரசபைகள் மட்டத்தில், பெண் அங்கத்தவர்களுக்கான விசேட கவனிப்புடன் தெரிவுபெற்ற பிரதிநிதிகளுடன் பணியாற்றி வருகின்றது. இப்பணியில் CMEV பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைவுடன் இணைந்து செயற்படுவதோடு, நாட்டின் மகளிர் குழுக்களால நீண்டகாலப் போராட்டங்களினூடாக வென்றெடுக்கப்பட்ட பெண்களுக்குரிய பங்கைப் பாதுகாத்து, வலுப்படுத்துவதற்கான எமது பிரயத்தனத்துக்கு ஆதரவு வழங்கிவருகின்றது.

1980 களில் பல்வேறு மக்கள் இயக்கங்கள் தேய்வடைந்து வருகையில், பொருண்மை நீளுரையாடல்களிலும் நடைமுறை இடையீடுகளிலும் குறிப்பாக மனிதஉரிமைகள் மற்றும் ஜனநாயக நியமங்களைப் பாதுகாப்பதில் நிலவும் இடைவெளிகளை நிரப்பும்வகையில் CPA பணியாற்ற முன்வந்தது. CPA கடந்த 25 வருடகாலங்களில் சாதித்த விடயங்கள், அதன் இலட்சியக்காட்சி மற்றும் அது மேற்கொள்வதற்குத் தயங்காத ஆக்கபூர்வமான மற்றும் அரசியல் ரீதியில் தீர்மானகரமான பிரதிவிளைவுகள் குறித்து நான் CPA ஐப் பாராட்டுகின்றேன். காலங்களுக்கும், அரசியல் தேவைகளுக்கும் உகந்தவகையில் அது ஆக்கபூர்வமாகப் பரிணமிப்பதற்கான தொடர்ச்சியான வலிமை கிட்டவேண்டுமென்று நான் வாழ்த்துத் தெரிவிக்கின்றேன்.

---

**குமுதினி சாமுவேல்**

இலங்கையின் பெண்கள் இயக்கத்திலும் போருக்கு எதிரான இயக்கத்திலும் ஒரு செயற்பாட்டாளராவார். பெண்களின் உரிமைகளுக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் செயற்பட்டு வருகிறார். பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டிணைவின் செயற்பாட்டாளராவார்.

# அரசியலமைப்புவாதத்தை மக்கள் மயப்படுத்தல்



**கலாநிதி**
**ஜயம்பதி விக்கிரமரத்ன**

இலங்கையின் சனநாயக ஆட்சி தொடர்பில் பணியாற்றுகின்ற சிவில் சமூக இயக்கங்களிடையே தலைமைத்துவம் பெறுகின்ற மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் 25வது ஆண்டு விழாவிற்காக ஓரிரு வார்த்தைகளைக் குறிப்பிடக் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரியது.

சுமார் இருபத்தைந்து ஆண்டுகளாக (நூற்றாண்டின் காற்பகுதி) மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மேற்கொண்ட பணி மிகப் பெரியது. பல்வேறு வகையானது. அதனது மக்கள் கொள்கைகள் பற்றிய விடயங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் இலங்கையின் மக்கள் கொள்கையை மாற்றுவதில் பங்களித்த விதத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது. அவ்வாறு செய்யப்பட்ட நற்காரியங்கள், செயலமர்வுகள், கலந்துரையாடல்கள் மற்றும் அச்சு இலத்திரனியல் ஊடகத்தின் ஊடாக வெளியிடப்பட்டன. அவ்வாறே அவ்விடயங்கள் பல சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் அமைந்திருந்த காரணத்தால் பரந்த அளவிலான வாசகர்கள் குழுவொன்றைக் கைப்பற்ற முடிந்ததன் பாராட்டு அவர்களுக்கு உரித்தாக வேண்டும்.

இலங்கையின் அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் குறிப்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வழங்கிய பங்களிப்பிற்காக எனது வாழ்த்துக்களை உரித்தாக்க வேண்டும். அவர்கள் முன்மொழிந்த பரிந்துரைத்த பல திருத்தங்களை இதுவரை அடைய முடியாவிட்டாலும் அவற்றை மறைத்து வைக்க இடமளிக்காமல், உயிரோட்டத்துடன் பேணிக் கொள்ள அவர்களால் முடிந்தது.

அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் மிக முக்கியமான பங்களிப்பு அரசியலமைப்புவாதத்தை (Constitutionalism) மக்கள் மயப்படுத்தியது என நான்

நினைக்கின்றேன். அரசியலமைப்பொன்று நிறைவேற்றப்பட்ட பின்னர், அதனை நீதிமன்ற ஆராய்விற்கு இடமளிக்காமலும், அடிப்படை உரிமைகளையும் பொருத்தமற்ற ஏற்கனவேயுள்ள சட்ட ஏற்பாடுகளை அவ்வாறே நிலைத்திருக்கச் செய்வதற்கு இடமளித்தும் அரசியலமைப்பை திருத்தாது அதற்குப் பொருத்தமற்ற சட்டங்களை குறிப்பிட்ட பெரும்பான்மையால் நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்திற்கு இடமளிப்பதாலும் 1972ம் ஆண்டு அரசியலமைப்பும் 1978ம் ஆண்டின் அரசியலமைப்பும், அரசியலமைப்பின் உன்னதத் தன்மை என்ற அடிப்படைக் கோட்பாட்டிலிருந்து வெளியேறி விட்டன.

அரசியலமைப்பில் 19வது திருத்தத்தைக் கொண்டுவரும் வரை 1978ம் ஆண்டு அரசியலமைப்பிலிருந்து வழக்குத் தொடரப்பட முடியாத தண்டனையிலிருந்து விலக்களிக்கும், பலம்பொருந்திய பதவியொன்று ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்தது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தொடர்ந்தும் இப்பிரச்சினையைத் தோற்றுவித்ததுடன் அரசியலமைப்பின் உன்னதத் தன்மையை அதன் ஆரம்ப வாசகங்களுக்கு மட்டுப்படுத்தாது யதார்த்தமாக வேண்டும் என்ற இணக்கத்தை ஏற்படுத்துவதில் பங்கேற்றது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இன ரீதியான சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கின்ற தேவையைச் சுட்டிக்காட்டுவது அரசியலமைப்புத் திருத்தத்தில் சாதகமான பங்களிப்பை வழங்கிய மேலுமொரு துறையாகக் காணப்படுகின்றது. அடிப்படையில் பல்வேறு வகையான மக்களால் அரச அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள முடியாமற் போவதாலேயே இன ரீதியான மோதல்கள் இடம்பெறுகின்றன. பெரும்பாலான பெரும்பான்மைச் சமூகக் குழுக்கள், ஆரம்பத்தில் எண்ணிக்கை ரீதியில் சிறிய அளவிலான மக்கள் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்காக விடுக்கின்ற கோரிக்கைகளைக் கூட எதிர்க்கின்றனர். சிலர் விரைவாகவோ அல்லது காலம் கழித்தோ பிரிந்து பிளவுபடுவதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கத்தை மீளக் கட்டமைக்கும் தேவையை ஏற்றுக் கொள்வதுடன் மேலும் சிலர் தன்னிச்சையாக அவ்வாறே செய்வதை எதிர்த்து மோதலைத் தொடர்ந்தும் நடத்திச் செல்வதற்கோ அல்லது பிளவுபட்டு பிரிந்து செல்வதில் பங்கேற்கின்றனர். பெரும்பான்மைச் சமூகத்திற்கு அரச அதிகாரம் தொடர்பில் அவர்களுக்குள்ள ஏகபோக அதிகாரத்தை கைவிடுவதற்கு உணர்த்துவது இலகுவான காரியமல்ல. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சமமான கருத்துகள் உள்ள வேறு அமைப்புகளுடனும் நபர்களுடனும் இணைந்து அப்பெரும் பணிக்கு தோள் கொடுக்க முன்வந்தது.

நீதிமன்ற ரீதியிலான இடையீடு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சனநாயக ஆட்சியில் மேற்கொண்ட மேலுமொரு பங்களிப்பாகும். அது அரசியலமைப்புக்குப் பொருந்தாத சட்டங்களைப் போன்றே, நிறைவேற்றதிகாரத்தின் அரசியலமைப்புக்கு எதிரான நடவடிக்கைகளையும் தொடர்ச்சியாக எதிர்த்து வந்தது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கடந்த வெற்றிகளுக்கு வாழ்த்துத் தெரிவிக்கின்ற அதேவேளை, எதிர்வரும் காலங்களிலும் சமூக நியாயத்தை உறுதிப்படுத்துகின்ற அரசியலமைப்பு ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தும் அவசியம் மீதான அவதானம் செலுத்தப்படும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

---

**கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன**

அரசியலமைப்புகள் தொடர்பான சட்ட வல்லுனர். அரசியலமைப்பு ஆய்வுகள் தொடர்பான நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.

# சிவில் சமூகத்தின் வகிபாகம் பிரச்சினைகளும் சவால்களும்



பேராசிரியர்
**உப்புல் அபேரத்ன**

நவீன சனநாயக சமூகங்களின் குடிமக்களை வலுப்படுத்துகின்ற பெரும் பணி சிவில் அமைப்புகளுக்கு உரித்தாகியுள்ளது. சந்தை மற்றும் அரசுக்கு மத்தியில் அமைந்துள்ள பொதுவான பகுதியை சிவில் சமூகம் என அழைக்கலாம். இதில் தொடர்புறுபவர்கள் தமது சுய விருப்பின் பேரில் இணைந்து கொள்வது இப் பொதுவான பகுதியில் உள்ளவர்களிடமிருக்கும் விசேட அம்சமாகவுள்ளது. குறித்த அத் தொடர்பு ஒவ்வொருவரின் தனிப்பட்ட இயல்பை அடிப்படையாகக் கொண்டே இடம்பெறுகின்றது. தனிப்பட்ட ரீதியில் தொடர்புபட்டாலும், பொதுவான பிரச்சினைகளையே சிவில் சமூகத்தினர் கலந்துரையாடுகின்றனர். ஒரு சிவில் சமூகத்திற்கு சனநாயக ரீதியான கட்டமைப்பிற்குள் செய்யக் கூடிய சில பணிகள் உள்ளன. சமூகத்தின் குரல் அற்றோரின் குரலை மக்களிடையே கேட்கச் செய்வது அதில் ஒன்று. குறிப்பாக சமூகத்தில் ஒதுக்கப்பட்டுள்ள மக்கள் குழுக்களின் கருத்துகளுக்கான செவிமடுப்பு அரச கொள்கை வகுப்புச் செயற்பாட்டில் இடம்பெறாமை, கொள்கை வகுப்பு தொடர்பில் நவீன உலகத்திலுள்ள பாரதூரமான பிரச்சினைகளில் ஒன்றாக விளங்குகின்றது. அவ்வாறே பொதுவான பகுதியில் இருக்கின்ற சிலருக்கு பொதுவான விடயங்கள் பற்றிப் பேசுவதற்கான கால அவகாசத்தைப் பெற்றுக் கொள்வது சிரமமாகி உள்ளது. ஏனெனில் வாழ்க்கைச் சுமையால் தங்கிவாழும் மனிதர்களையே அவர்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். ஏன் இவர்களின் குரலைக் கேட்க வேண்டும்? இவர்களுக்கான வசதிவாய்ப்புகளை வழங்குவது எவ்வாறு என்ற பெரும் பொறுப்பு சிவில் சமூக அமைப்புகளிடம் அளிக்கப்பட்டுள்ளன. இப்பணியில் சில வழிகளில் சிவில் அமைப்புகளால் இடையீடு செய்ய முடியும்.

- பொதுவாக பொதுவிடயங்கள் தொடர்பில் மனிதர்களின் புரிந்துணர்வை உயர் மட்டத்திற்கு மேம்படுத்தி சமூகத்தில் கொழுந்து விட்டெரியும் பிரச்சினைகள் மீது மக்களின் அவதானத்தைச் செலுத்துதல்.

- அவ்வாறே குரல் அற்றவர்களுக்கு குரலை அளித்தல்,
- சிவில் சமூகத்தில் சிதறிக் கிடக்கின்ற குழுக்கள் ஒன்றிணைவதற்கான ஒரு தளத்தை அமைத்தல்,
- கொள்கை தொடர்பான ஆலோசனைப் பணிகளில் ஈடுபடல்.

இவ்விடயங்களை சிவில் சமூகஅமைப்பு மிக வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியும். இலங்கையின் சிவில் சமூகம், தொடர்பில் கலந்துரையாடும் போது குற்றச்சாட்டுகளும் உள்ளன. சிவில் சமூக அமைப்புகளெனப்படும் இக்குறிப்பிட்ட நிறுவனங்கள், யோகிகளைப் போன்று காணப்பட்ட போதும் அவர்கள் யோகிகள் அல்லர். ஒருவகையில், இந்நிறுவனங்கள், மக்களிடையே மானுட ரீதியான ஊக்குவிப்புகளால் உந்தப்படுகின்ற மனிதர்கள வழங்கும் அன்பளிப்புகளை நுகருகின்ற பயனாளிகள் என்றே அழைக்கப்படுகின்றனர். அல்லது பயனாளிகள் குழுவொன்றாக மாறுகின்றனர் என்ற விமர்சனம் காணப்படுகின்றது. ஒரு வகையில் பொருள் கொள்ளும் போது, இலங்கையில் காணப்படுகின்ற பெரும்பாலான அரச சார்பற்ற அமைப்புகள் தொடர்பில் இது நியாயமான விமர்சனம் என நான் எண்ணுகின்றேன். ஏனெனில், 1970ம் தசாப்தத்தின் பின்னர் 80/90ம் தசாப்தங்களில் சமூகத்தில் சில சிறப்புச் சலுகைகள் கொண்ட குழுவொன்றின் வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காக சிவில் அமைப்புகளை உருவாக்கிக் கொள்ளப்பட்டமை மிகப் பிரபலமான ஒன்றாக மாறியிருந்தது. குறித்த அவ்விமர்சனங்களை சில அமைப்புகளோடு ஒப்பிட முடிந்தாலும் மாற்றுக் கொள்கைகளுக்கான அமைப்பின் செயற்பாடு மிக வித்தியாசமான வடிவத்தில் இருக்கின்றது என்பது எனது கருத்தாகும்.

### தீர்மானகரமான சமூக இடையீடுகள் சில

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கடந்த காலம் முழுவதும் இலங்கையின் சனநாயக ரீதியான வாய்ப்பை விரிவாக்குவதற்காக குறிப்பிடத்தக்க அளவு இடையீடு இடம்பெற்றுள்ளது. சமூக நீதி, நியாயம் தொடர்பான பிரச்சினைகளிலும், துணிச்சலாக முன்வந்து அப்பிரச்சினைகளில் இடையீடு செய்த முறை வரவேற்கத்தக்கது. குறிப்பாக இலங்கையில் அரசாங்கத்தின் அல்லது அரசாளச் செய்கின்ற சிற்சில ஆட்சிமுறைகள் சனநாயக விரோத கட்டளைச் சட்டங்களைக் கொண்டு வந்து பொது மக்களின் கருத்துகளையும் எண்ணங்களையும் அடிபணியச் செய்து அதிகாரவாத ஆட்சிமுறையொன்றைக் கட்டியெழுப்புவதற்கு எடுக்கப்பட்ட பிரயத்தனங்களுக்குப் பாரிய அளவில் எதிர்ப்புத் தெரிவித்து, இடையீடு செய்த அமைப்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தை இனங்காண முடியும். அந்த வகையில் எடுத்துக் கொண்டால், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பதவி வகிக்கும் ஆட்சிக்கு துணிச்சலாகச் சவால் விடுத்த அமைப்பாக அரசியல் அறிஞர் என்ற வகையிலும் இந்நாட்டின் சனநாயகம் மற்றும் நீதி தொடர்பில் சிந்திக்கின்ற பிரசையாகவும் எனக்கு ஒரு மதிப்பு உள்ளது.

அது தொடர்பில் சில விடயங்களைத் எடுத்துக் காட்டுவதாயின், முதலில் மக்கள் பணம் அரசாங்கத்தால் துஷ்பிரயோகம் செய்ய முயற்சிக்கப்படும் சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட இடையீடுகளை முதலில் குறிப்பிட வேண்டும். குறிப்பாக “திவி நெகும” சட்டம் போன்ற சட்ட மூலங்கள் ஊடாக அப்பாவி மக்களால் சமுர்தி வங்கிகளில் சேமிக்கப்பட்ட நிதியை துஷ்பிரயோகம் செய்ய முயற்சிக்கும் சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்பட்ட இடையீடுகளை நாம் காலத்துக்கேற்ற இடையீடுகளாகவே கருதுகின்றோம். அவ்வாறே அண்மைக்கால - கடந்த கால உதாரணங்களை எடுத்துக் கொண்டால், துறைமுக நகரச் சட்டம் தொடர்பில், இந்த அமைப்பு மேற்கொண்ட இடையீடும் முக்கியமானது. அவ்வாறான இடையீடுகள் இல்லாதிருப்பின் அரசியல் ரீதியாக மக்களுக்குரித்தாக வேண்டிய தமது மக்களின் அலுவல்களைக் கட்டுப்படுத்துவதற்காக உள்ள சுயநிர்ணய உரிமை முற்றாக எம்மிடமிருந்து பறிக்கப்பட்டு அரசாங்கத்தின் அனுசரணையுடன், அனர்த்த ரீதியான முதலாளித்துவம் தோன்றலின் இரையாக மாறுவதற்கு பெருமளவில் வாய்ப்பு இருந்தது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட இடையீடுகள் மிகவும் பாராட்டுக்குரியன. அவ்வாறே அரசியலமைப்பிற்காக முன்மொழியப்பட்ட இருபதாவது திருத்தம் போன்ற மிக மோசமான கட்டளைச் சட்டங்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்திற்குச் சென்று சவால் விடுத்ததும் முக்கியமான செயலாகும்.

### இலங்கையில் நீதிமன்றம் சுயாதீனமானதா?

உண்மையில் நீதிமன்றத்தின் கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்வது தொடர்பில் இடையீடு செய்யப்படுகின்றதா என்ற கேள்வி என்னிடம் இருக்கின்ற போதே, அது தொடர்பில் என்னிடம் சில அறிவுபூர்வமான விமர்சனங்கள் இருக்கின்ற போதிலும் அவ்வாறான நீதிமன்ற ரீதியிலான இடையீடொன்று இல்லாவிடில் இருபதாவது திருத்தத்தின் மூலம் பரிந்துரைக்கப்பட்ட தன்னிச்சையான ஆட்சிமுறையொன்றுக்கான வழிகாட்டலுக்குக் கொண்டு செல்லப்பட்ட அச் சனநாயக விரோத செயற்பாட்டை ஓரளவுக்கு நிறுத்த முடியாமற் போயிருக்கலாம். அதனால் CPA அமைப்பு இத்துறை தொடர்பில் மேற்கொண்ட இடையீடு மிகச் சிறப்பானது.

அவ்வாறே சில அரச சார்பற்ற நிறுவனங்கள் தாம் முன்னிற்கின்ற நிலைப்பாடுகளை சந்தர்ப்பத்திற்கேற்றவாறு மாற்றிக் கொள்கின்ற சந்தர்ப்பங்களையும் நான் பார்த்திருக்கின்றேன். குறிப்பாக இந்நாட்டில் வாழுகின்ற பன்முகச் சமூகக் குழுக்கள் ஒன்றாக வாழக்கூடிய அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளக் கூடிய விதிமுறையொன்றை எவ்வாறு தயாரிப்பது என்பது இந்நாட்டில் காணப்படுகின்ற கொழுந்து விட்டெரியும் பிரச்சினையாகும். நாம் அனைவரும் அனைத்துச் சமூகத் தளங்களும் ஒன்றாக வாழக் கூடிய அரசியல் மற்றும் சமூகக் கொள்கையொன்றை இலங்கைக்காக எவ்வாறு உருவாக்குவது என்ற பிரச்சினையை எடுத்துக் கொண்டால், அது தொடர்பில் CPA நிறுவனம் செய்த இடையீடுகளும் மிகவும் முக்கியமானவை. சில அமைப்புகளுக்கு அந்தத் தைரியம் இல்லாமற் போய் அவை சிதைந்து போகையில் இதனை பாதுகாத்துக் கொள்வதற்கான துணிச்சல் இருந்த காரணத்தால் அவ்வாறே இடைவிடாது இவ்விலட்சியங்களுக்காக முன்வருவதாலும் நான் அதனை மதிக்கின்றேன்.

அலன் போதிவ்வின் கருத்துகள் வாயிலாகச் சொல்வதாயின் 'இந்த யுகத்தில் காணப்படுகின்ற பாரதூரமான பிரச்சினைகளின் ஒன்றாக சமூக நீதியும் நியாயமும் தொடர்பாக பேசுகின்ற சமூகக் குழுக்களால் கைப்பற்ற முடியாது எனச் சிந்திக்கின்றவற்றைக் கைப்பற்றிக் கொள்வதற்கான துணிச்சல் பெரும்பாலான சிவில் சமூக அமைப்புகளிடமிருந்து நழுவிச் சென்றுள்ளது, என்பது எம்முன்னுள்ள பாரதூரமான சவால்களில் ஒன்று, 2005லிருந்து அவ்வப்போது இலங்கையின் சிவில் சமூக நிறுவனங்கள் இந்தச் சவாலுக்கு இரையானது. CPA நிறுவனம் தொடர்பில் கருதுகின்ற போது நியாயமான நீதியுடனான சமூகமொன்றுக்காக முன்னிற்கின்ற துணிச்சலை மதித்தாக வேண்டும்.

இந்த அமைப்பு கொள்கை ஆலோசனைகளுடன் மட்டுப்படாமல், அதற்கு அப்பால் சென்று சிற்சில சமூக இடையீடுகளை மேற்கொண்டுள்ளது. உள்ளூராட்சி நிறுவனங்களை வலுப்படுத்தும் நிகழ்ச்சியின் ஆலோசகராக பணியாற்றியமை எனக்கிருக்கின்ற ஒரு அனுபவமாகும். உள்ளூராட்சி நிறுவனங்களில் காணப்படும் சட்டம் தொடர்பில் உள்ளூராட்சி நிறுவன உறுப்பினர்களுக்கும் மக்களுக்கும் புரிதல் இல்லை. அவ்வாறான சந்தர்ப்பத்தில், அப்புரிதலை உயர்த்தி, உள்ளூராட்சி நிறுவனங்களை வலுப்படுத்த சில இடையீடுகளைப் புரிந்ததுடன், அதில் சமூகத்திற்கு முக்கியமான சில நூல்க ளைப் பிரசுரித்தது மட்டுமின்றி கிராமத்திற்கு கிராமம் சென்று உள்ளூராட்சி நிறுவனங்களை வலுப்படுத்துவதற்காக பல்வேறு நடைமுறை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

## CPA **முன்னிலையில் காணப்படுகின்ற பிரச்சினைகளும் சவால்களும்.**

இந்நாட்டில் பல சிவில் சமூக அமைப்புகள் உள்ளன. சமாதானம், அதிகாரப் பகிர்வு, நீதி நியாயம், பன்மைத்துவ கலாசாரவாதத்திற்காக முன்னிற்கின்ற சில சிவில் அமைப்பு நிறுவனங்களுக்கு அவ்விலட்சியங்களில் தொக்கி நிற்கின்ற துணிச்சலில்லாத தன்மையை இனங்காண முடியும். இத் துணிச்சல் இல்லாத காரணத்தாலேயே சிவில் சமூகத்தால் கட்டியெழுப்பப்பட்ட நற் சனநாயக இலட்சியங்கள் அவர்களாலேயே சில சந்தர்ப்பங்களில், வெறிச்சோடிப் போகச் செய்வதற்கு முன்வந்த மாவோவாத வார்த்தைகளில் குறிப்பிடுவதாக இருந்தால், 'சில எலிகள் இருக்கின்றன என்பதை' இனங்காணலாம். எலிகள் எனப்படுபவை கப்பலில் விபத்தொன்று இடம்பெறும் போது பெருமளவில் குழப்பமடைகின்ற ஒரு பிரிவாகும். இதனை சிவில் சமூகம் தொடர்பில் எடுத்துக் கொண்டால் தேசிய அரசியல் மட்டத்தில் ஏற்படுகின்ற இம் மாதிரியுடன் எலிகள் போல ஆட்டம் காணும் சில சிவில் சமூகங்கள் உள்ளன. மிக நீண்ட காலமாக சமாதானம் மற்றும் அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தலுக்காகப் பேசிய சில அமைப்புகளும் சில அறிஞர்களும் கூட, தங்களால் அதற்கப்பால் பயணிக்க முடியாது என நினைத்து, துணிச்சலை உடைத்தெறியும் நிலைமைகள் உள்ளன. அத் துணிச்சலைத் தகர்ப்பதோடு நியாயத்திற்கான கலந்துரையாடல்கள் ஓரிரு இரவுகளில் தலைகீழாக மாறுகின்ற நிலையை சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் சந்தர்ப்பவாதமாகவே நான் பார்க்கின்றேன். சமூக நியாயத்திற்காக முன்னிற்பதாக நினைப்பவர்களின் உள்ளே, உச்ச இனவாத, மத ரீதியான பித்துப்பிடித்த உணர்வுகள் உள்ளன. அவர்கள் பொது சந்தர்ப்பங்களில் மதரீதியான சகவாழ்வு, சமூக நீதி, இன ரீதியான ஒற்றுமை போன்ற விடயங்களைக் கலந்துரையாடினாலும், தனிப்பட்ட வாழ்க்கையில் அச்சந்தர்ப்பவாத சார்பு நிலையை வெளிப்படுத்துகின்றனர்.

ஒரு நிதர்சனத்தைக் குறிப்பிடுவதாயின், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தாலேயே, ஏற்பாடு செய்யப்பட்ட சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல், உள்ளூராட்சி நிறுவனங்களை வலுப்படுத்தல் போன்றவை தொடர்பான செயலமர்வொன்றில் வளவாளர்களுக்காகக் கிடைத்த பணத்தையும் எடுத்துக் கொண்டு மாலை கொழும்புக்கு வந்து 18வது அரசியற் திருத்தத்திற்குச் சார்பாக மிகவும் வெட்கக் கேடான முறையில் முன்னின்ற வளவாளர்களும் இருந்ததாக எமக்கு நினைவிருக்கின்றது. அர்ப்பணிப்புள்ள மனிதர்களுடன், இந்தப் பயணத்தை எவ்வாறு பயணிப்பது என்பது சிவில் சமூகம் முகங் கொடுக்கின்ற சவாலாகும். சிவில் அமைப்புகளுடன் பணியாற்ற வருகின்ற அனைவரும்

அர்ப்பணிப்புள்ளவர்கள் அல்ல. குறிப்பாக இலங்கையின் கல்வியில் தேர்ந்த அறிஞர்கள் என்பவர்கள் ஒரு வகையில், பாசாங்கு குணமுள்ள குழுவினராவர். அவர்கள் எப்போதும் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதால் தமக்கு என்ன கிடைக்கும் என்பதை மட்டுமே சிந்திக்கின்றனர். அதனால் இலங்கையில் சிவில் அமைப்புகளுக்கு வளப் பங்களிப்பை அளிப்பவர்களில் இலட்சியத்துடனான அர்ப்பணிப்பு தொடர்பில் சிக்கல்கள் உள்ளன.

சிவில் சமூகங்கள் தொடர்பில் உறுதியற்ற அச்சமொன்று அரசாங்கத்தாலும், அரசாங்கத்திடமிருந்து சிற்சில சிறப்புச் சலுகைகளைப் பெறுகின்ற புத்திஜீவிகள் எனக் கூறிக்கொள்ளும் பிரகிருதிகளாலும் உருவாக்கப்படுகின்றன. எம்மால் பார்க்கக் கூடியதாக உள்ள இராணுவத்தையும் பொலிசையும் தவிர, அரசாங்கத்துடன் இணைந்த மேலுமொரு கருத்தியற் தளம் உள்ளது. மக்களை அணுகக் கூடிய ஊடக நிறுவனங்களுடன் அந்தக் குழுவினருக்குத் தான் இடமுள்ளது. மக்களிடையே கருத்துகளை உருவாக்குவதும் அவற்றை விநியோகிப்பதற்குமான வாய்ப்பு அரசாங்கத்திடமே உள்ளது. இல்லையேல் அரசாங்க ஊடகங்களுக்கும் அரசாங்க அனுமதி பெறுகின்ற ஊடகங்களுக்குமே அவ்வாய்ப்பு உள்ளது. சிவில் சமூக அமைப்புகள் வெளிநாடுகளிலிருந்து பணத்தைப் பெறுகின்ற, வெளிநாட்டுத் தேவைகளுக்காக முன்னிற்கின்ற, இந்நாட்டின் கலாசாரத்தை சீரழிக்கின்ற நாட்டின் ஒருமைப்பாட்டை அழிக்கின்ற குழுவாக இந்த ஊடக நிறுவனங்கள் ஊடாகத்தான் சமூகமயப்படுத்தப்படுகின்றன. சிவில் சமூக அமைப்புகளிலும் இந்தச் சிக்கல் ஓரளவுக்குக் காணப்படுகின்றது. எதிர்காலத்தில் CPA போன்ற சிவில் சமூக அமைப்புகளின் நிலைப்பாடு தொடர்பில் சிந்திப்பதாயின் மாற்று ஊடக வாய்ப்புகளை மேலும் பயனுள்ளதாக எவ்வாறு பயன்படுத்துவது என்பது தமது மூலோபாயங்களைத் தயாரித்துக் கொள்ளும் போது பாரதூரமாக சிந்திக்க வேண்டிய ஒரு விடயமாக உள்ளது. சமூக நீதி, நியாயம் தொடர்பான செய்தியை சமூகமயப்படுத்துவதற்காக பல்வேறு சமூக வலையமைப்புகளைப் பயன்படுத்த முடியும். எந்த வகையிலான விமர்சனங்கள் விடுக்கப்பட்டாலும் மாற்று ஊடகம் மக்களை மேலும் இலகுவாக அணுகுவதற்கும் தகவல்களைப் பெறுவதற்கும் உள்ள ஊடகமாகச் செயற்படுவதே அதிலுள்ள நன்மையாகும். மூலோபாயங்களைத் தயாரிக்கின்ற போது, இதுபற்றிக் கவனம் செலுத்துவது மிக முக்கியமாகும். சிவில் சமூகம் தொடர்பான ஏகபோக ஊடக உலகத்தில் கட்டியெழுப்பப்பட்டுள்ள சாதகமற்ற பூச்சுகளும், சித்தரிப்புகளும் பல்வேறு கற்பனைகளைத் தவறானவை என உணர்த்துகின்ற பொறிமுறையொன்றின் தேவை தீவிரமாகக் காணப்படுகின்றது. அவ்வாறு நடக்காவிடில் சிவில் சமூக அமைப்புகளால் செயற்பாட்டு ரீதியாக முன்னோக்கிச் செல்வதில் சிரமம் ஏற்படுத்தப்படும். அவ்வாறே சிவில் சமூக அமைப்புகள் தனது வளவாளர்களைத் தேர்ந்தெடுக்கும் போது மிகவும் கவனமாகச் செயற்படுவது முக்கியமானது. இவ்வாறான நிறுவனங்களில் பணியாற்றிக் கொண்டு ஏற்புடைய செய்தியை சமூகத்திற்குக் கொண்டு செல்வதற்காக வருகின்ற புத்திஜீவிகள் எனக் கூறிக் கொள்ளும் குழு, இலட்சியத்திற்காக அர்ப்பணிப்புச் செய்கின்ற குழுவா இல்லையா என்பதை ஆராய்ந்து பார்க்காமல் சேவையைப் பெற்றுக் கொள்வது சனநாயகரீதியான சிவில் சமூக வாய்ப்பினை அழிப்பதற்குக் காரணமாகலாம். இவ்வாறானவர்கள் சிவில் சமூக வேலைகளின் போது, ஒரு கருத்தியலுக்காகவும் தனிப்பட்ட உலகத்தில் வேறொரு கருத்தியலுக்காகவும் முன்வருவார்களாயின், இவ்வாறான நிறுவனங்கள் கொண்டு செல்கின்ற செய்தியின் தனித்துவம் அந்த இடத்திலேயே அழித்தொழிக்கப்பட்டுவிடும். சிவில் சமூக அமைப்புகளில் உள்ள சவால்கள் இருவகைப்படும். ஒருபுறம் அடக்குமுறை ஆட்சி, காணப்படுவதுடன், இன்னொரு புறம், சிவில் சமூகங்களுடன் தொடர்புபட்டு பணியாற்றுகின்ற செயற்பாட்டாளர்களிடமுள்ள போலியான தன்மை காணப்படுகின்றது. இவை இரண்டிற்குமிடையே சிறந்த சமநிலையைப் பேணிக் கொள்வதை சிவில் சமூக அமைப்புகளின் முன்னிலையில் உள்ள சவால்களாக இனங்காண முடியும்.

எவ்வாறாயினும் இறுதியாகப் பொருள் கொள்ளும் போது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மூன்று தசாப்தங்களுக்கு அண்மித்த காலத்தைக் கைப்பற்றிக் கொண்டு சிறந்த சமூக அரசியல் மற்றும் கலாசார சுற்றுச் சூழலொன்றை உருவாக்கிக் கொள்வதற்காக மேற்கொள்ளும் பணியில்இன்னும் எதிர்காலத்திலும் இந்த சமூகப் பராமரிப்பை கொண்டு நடத்துவதற்கான துணிச்சல் கிடைக்கின்ற வகையில் எமது வாழ்த்துகளை சேர்க்கின்றோம்.

---

**பேராசிரியர் உப்புல் அபேரத்ன**

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானம் தொடர்பில் விசேட இளமானி பட்டம் மற்றும் தத்துவ முதுமானிப் பட்டத்தையும் பெற்றுள்ள உப்புல் அபேரத்ன பெங்களூர் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானம் தொடர்பில், முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞான கல்விப் பிரிவின் தலைவருமாவார்.



# வெள்ளி விழாவிற்கு நல்வாழ்த்துக்கள்

**விசேட வைத்திய நிபுணர்**
**வின்யா ஆரியரத்ன**

ஒரு அமைப்பின் அர்த்த பூர்வமான பெறுமதிகள் மீது அர்ப்பணிப்புடன் இருப்பதும், சவால்கள் மிக்க நிலைமைகளில், நீதி மற்றும் சனநாயகத்திற்காக தொடர்ச்சியாக முன்னிற்பது எம்மைப் போன்ற இனத்திற்கும் அரசியலுக்கும் மத்தியில் இலகுவானதல்ல. இனங்கள், மதங்கள், வகுப்புகள், மொழி அடையாளங்களிடையே வார்த்தைகளால் விளக்க முடியாதவாறு இணைந்துள்ளதும் அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் பாதுகாப்பதற்கும் அவ்வாறான பிரிவினைகளைப் பயன்படுத்தும் பின்னணியில், மேலாதிக்க அரசியல் கருத்தியலினதும் தேசியப் பிரகடனத்தில் காணப்படுகின்ற நிலைமைக்கு சவால் விடுப்பதும் சொல்ல முடியாத அளவிற்கு சிரமமானதும், ஆபத்தானதுமாகும். அதிகாரத்திலிருந்து பல்வேறு அரசாங்கங்களின் கீழ், பெரும்பாலும் காணப்பட்ட அவ்வாறான சவால்களின் முன்னே நிமிர்ந்து நின்று, நாட்டில் சனநாயகம் மற்றும் உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் குறிக்கோள்களுக்குப் பங்களிப்புச் செய்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவும் சனநாயக ரீதியான இலட்சியங்களையும் மனித உரிமைகளையும் உறுதிப்படுத்துவதில் பங்களித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமை வகித்த பொதுசன ஐக்கிய முன்னணி 1994ல் இலங்கையில் நீண்டகால சிவில் மோதலுக்கு, பேச்சுவார்த்தை வழியிலான அரசியற் தீர்வொன்று, முன்னர் இடம்பெற்ற மனித உரிமைத் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் உயர் வகைபொறுப்பு மற்றும் அரசாங்கத்தின் ஊழல்களை முடிவுக்குக் கொண்டுவருவதை உறுதிப்படுத்துகின்ற வலிமையான மனித உரிமைத் தளமொன்றின் மீதே அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டது. இந்த வாக்குறுதிகளுக்குக் கிடைத்த மிகப் பெரிய புகழ் காரணமாக கூட்டமைப்பிற்கு அவர்களுக்கு முன் பதினேழு ஆண்டுகள் நாட்டை ஆண்ட அரசாங்கத்தைப் புரட்டிப் போட முடிந்தது. இலங்கையில் உயிரோட்டமான சனநாயக நிலப்பரப்பொன்றுக்கான புது யுகம் உதிக்கும் என்பது பிரபலமான எதிர்பார்ப்பாக இருந்தது. அவ்வாறான பின்னணியில் அழுத்தங்களுடனான சிவில்

சமூக இடையீடொன்றின் தேவை பெரிதாக உணரப்பட்டது. அந்த நோக்கத்தின் கீழ் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் உருவாகியது. பிரதானமான சனநாயக ஆட்சி, சமாதானம் மனித உரிமைகள் ஆகிய துறைகளில் ஆய்வுகளையும் ஆதரித்து வாதாடல் மூலம் அரச கொள்கை வகுப்பில் பங்கேற்று முன்னர் குறிப்பிட்ட இலட்சியங்களை வலுப்படுத்துவதற்காக 1996ல் நிறுவனப்பட்டதுடன் தாராளமய சனநாயகத்தைக் கட்டியெழுப்புவது அதன் நிறுவன ரீதியான நோக்கமாக இருந்தது.

சனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாடாக அமைப்பு என்ற வகையில் அவர்கள் நம்புகின்ற விடயங்களை வளர்ப்பதற்கும் பாதுகாப்பதற்குமான உறுதியையும் நிலைத்த அர்ப்பணிப்பையும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அதன் ஆரம்பத்திலிருந்தே வெளிப்படுத்தியது என்பதைக் குறிப்பிடுதல் முக்கியமானது. சவால்மிக்க நிலைமைகளின் கீழும் அவர்கள் தமது பணியிலிருந்தும் அர்த்தமுள்ள விழுமியங்களிலிருந்தும் எந்தவகையிலும் திசைமாறிப் போகவில்லை. இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக செயற்பாட்டின் மூலம் பொது மக்கள், அறிஞர்கள், செயற்பாட்டாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், அரசியல்வாதிகள், மற்றும் சாதாரணப் பிரசைகளிடையே, இலங்கையின் பெரும்பான்மைவாத எல்லைகளுக்கு அப்பால், சனநாயகம் தொடர்பான குறிக்கோளை விரிவாக்க மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பங்களித்தது என்பதில் ஐயமில்லை. அதற்கிடையே, சமூகம் சார்ந்த அமைப்புகள், உள்ளூராட்சி அதிகாரிகள் மற்றும் ஏனைய சிவில் சமூக பங்குதாரர்களுடன் கைகோர்த்துச் செயற்படும் போது, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் காட்டிய நெகிழ்ச்சித் தன்மை காரணமாக அடிமட்டத்தில் சனநாயகத்திற்கும் உரிமைகளுக்குமான அங்கீகாரத்தின் வெளிப்படைத் தன்மை அர்த்தபூர்வமாக உயர்த்தப்படக் காரணமாகியுள்ளது. அதுமட்டுமன்றி தமது பங்குதாரர்களின் ஆற்றல்களை பாரிய அளவில் வளர்க்கவும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் உதவியளித்துள்ளது.

சுயாதீன, பக்கச்சார்பற்ற அமைப்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், இலங்கையின் இன மோதலுக்கு அரசியலமைப்பு ரீதியான அதிகாரப் பகிர்வு பற்றிய விரிவான ஆய்வுகள், மக்கள் உரையாடல்கள் மற்றும் பிரமாண்டமான ஆதரித்து வாதாடல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதுடன், அது தொடர்பில் ஆக்கபூர்வமாக மாற்றுக் கொள்கைகள் பலவற்றில் பங்களிப்புச் செய்துள்ளது. அது தவிர, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் முன்னணி வகித்த பிரதானமாக மனித உரிமைகளை இலக்காகக் கொண்ட மக்கள் சார்ந்த வழக்கு நடவடிக்கைகள், அவர்கள் செயற்பட்ட காலம் முழுவதுமாக தனித்துத் தெரிந்த நிலையில் காணப்பட்டன. ஒருங்கிணைக்கப்பட்ட தேசிய முறையொன்றில் மனித உரிமைகள் மற்றும் சனநாயக விழுமியங்களைப் பாதுகாப்பதும் நிறைவேற்றுச் செயற்பாடுகளின் சட்ட ரீதியான தன்மையை மதிப்பீடு செய்வதும் ஒரு நாட்டினது நீதிமன்றத்தின் மிகச்சிறந்த அர்ப்பணிப்பாக இருக்கின்ற காரணத்தால், அரசியலமைப்புத் திருத்தங்களில் அரசாங்கத்தின் சட்டங்களில் மற்றும் முக்கிய சந்தர்ப்பங்களில், அரசாங்கத்தின் தீர்மானங்களுக்கு சவால் விடுக்கும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நடவடிக்கைகள் மூலம் மக்களது இறையாண்மையை உறுதிப்படுத்துவதில், நாட்டின் அரசியலமைப்பு வரலாற்றில் மாற்றமொன்றை ஏற்படுத்துகின்ற வகையில் பங்களிப்பைச் செய்தது. அந்நிலையில் சிரிசேன ஜனாதிபதியின் ஆளுங் காலத்தில், நல்லிணக்கம் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பிற்காகவும், மக்கள் கருத்துக் கணிப்பொன்றை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில், சராவுடனும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடனும் ஒன்றாகப் பணியாற்றுகின்ற வரப்பிரசாதம் எனக்குக் கிடைத்தது.

இலங்கையின் பன்மைத்துவத்துடன் கூடிய சனநாயக சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பின்வாங்காத அர்ப்பணிப்பு, அண்மைக் காலத்தில், சிவில் சமூக இடையீடுகளின் மிகப் பெறுமதிவாய்ந்த அத்தியாயமாக இனங்காணப்பட வேண்டிய ஒன்றாகும். இலங்கையில் சனநாயகம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேலும் வளர்ப்பதற்கும் இன்னும் பல ஆண்டுகள் உயிரோட்டமுள்ள சிவில் சமூக செயற்பாட்டுக்கும் அவர்களின் பாராட்டுக்குரிய சேவையை நடத்திச் செல்வதற்கு சராவிற்கும், அர்ப்பணிப்புடன் கூடிய அவர்களது குழுவினருக்கும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திற்கும் நான் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்குகின்றேன்.

---

**கலாநிதி வின்யா ஆரியரத்ன**

சர்வோதய இயக்கத்தின் தலைவர். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சமூக மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர். சிவில் சமூகச் செயற்பாட்டாளர். சமூக சுகாதாரம் தொடர்பிலான விசேட வைத்திய நிபுணர். பல்வேறு துறைகளின் ஊடாக கட்டுரைகளையும் புத்தகங்களையும் வெளியிட்டுள்ளார்.

# சிவில் சமூகவெளியின் தலைமைத்துவம்



**டினேஷா டி சில்வா விக்ரமநாயக்க**

ஆசியா பவுன்டேஷன் சார்பில் மாற்றுக் கொள்கைகள் நிலையத்தின் (CPA) 25 ஆவது ஆண்டு நிறைவில் எனது பாராட்டுக்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன். 1996 இல் அதன் ஆரம்ப காலத்திலிருந்தே CPA அமைப்புக்கு ஆதரவு வழங்குவதைப் பெரும் கௌரவமாக எண்ணுகின்றோம். கொழும்புப் பல்கலைக்கழகத்தின் இளம் விரிவுரையாளர்கள் குழுவொன்று, முன்னார்வமான, சுயதீனமான முறையில் பகிரங்கக்கொள்கை மீது கவனம் செலுத்தும் ஒரு புதிய அமைப்புக்கு ஆதரவு வேண்டி, அப்பொழுது வதிவிடப் பிரதிநிதியாக விளங்கிய எட்வேர்ட் அன்டேர்சனிடம் வேண்டுகோள் விடுத்தது.

1996 செப்டெம்பரில் பவுன்டேஷன் வழங்கிய ஆரம்பக்கொடையுடன் CPA தாபிக்கப்பட்டு, வளர்ந்து, எவரும் எதிர்பார்த்திராத வழிகளில் விரிவாக்கம் பெற்று, ஆராய்ச்சி மற்றும் பரப்புரையூடாக பகிரங்கக்கொள்கை வகுத்தலுக்கு பங்களிப்புச்செய்யும் இலங்கையின் பிரதான சிவில் சமூக அமைப்பாக மாறும் வகையிலான பயணத்தில் முன்சென்றது. அந்தவேளையில் ஆசியா பவுன்டேஷனின் நிகழ்ச்சித்திட்ட அலுவலர் என்றவகையில் நான் CPA யின் ஆரம்பத்துக்கு இட்டுச்சென்ற கலந்துரையாடல்கள் மற்றும் கொடை ஆவணப்படுத்தல்களில் மிகவும் நெருக்கமாகச் சம்பந்தமுற்றிருந்தேன். பவுன்டேஷன் CPA "கொள்கை விவாதத்தை ஊக்குவிக்கவும், இலங்கைக்கு முக்கியமான விவகாரங்களில் கொள்கை வகுப்போருக்கு உள்ளீடுகளை வழங்கவும்" ஏற்பாடுசெய்த முதல் தொகுதி கருத்தரங்குகள் / செயலமர்வுகளுக்கு ஒரு சிறிய கொடையை வழங்கியது. பவுன்டேஷன் வழங்கும் அனைத்துக் கொடைகள் விடயத்திலும்போலவே, இப்புதிய அமைப்பு தனது வெளியீடுகளையும், அறிக்கைகளையும் பரந்த அளவில் சந்தைப்படுத்துவதனூடாக " நிலைபேறானதன்மையை ஈட்டிக்கொள்ளுமென்னும்" நம்பிக்கை எதிர்பார்ப்பில் நாம் விதப்புரைகளை மேற்கொண்டோம். ஆகவே,

தற்போதைய வதிவிடப் பிரதிநிதியென்ற வகையில் எனக்கு முன்னர் பதவி வகித்தவர்களாகிய எட் அன்டேர்சன், மார்க் மெக்கென்னா, நிலான் பேர்ணான்டோ மற்றும் ஆசியா பவுன்டேஷனின் சிரேஷ்ட தலைமைத்துவம் என்போரின் சார்பில் கடந்த 25 வருடகாலத்தில் CPA ஈட்டிக்கொண்ட மகத்தான வெற்றியை நான் பெருமித உணர்வோடு கண்டுணர்ந்து அங்கீகரிக்கின்றேன்.

CPA தாபிக்கப்பட்டு சிறிது காலத்தின்பின்னர், 1997 இல் வடமேல் மாகாண சபைத் தேர்தல் அதன் அரசியல் வன்முறை மற்றும் முன்னெடுப்பின்போது என்றுமில்லாத வகையிலான தேர்தல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் என்பவற்றுடன் CPA யின் உத்தேச பணி நிகழ்ச்சித்திட்டத்தில் குறுக்கீடுசெய்தது. அதன் பணிப்பாணை மற்றும் அரசியல் வன்செயல் விவகாரங்களின் தீவிர முக்கியத்துவம் என்பவற்றின் பின்னணியில் CPA மீண்டும் எங்களின் ஆதரவை வேண்டிநின்றது. தேர்தல் வன்செயல் கண்காணிப்பு முன்முயற்சிக்கு ஆதரவு வேண்டியது. இந்த இடர்வரவான முன்மொழிவை வேறு எந்தக் கொடையாளரும் ஏற்றுக்கொள்ளவிரும்பாத சூழ்நிலையில், ஆசியா பவுன்டேஷன் CPA சுதந்திர ஊடக இயக்கத்துடனும், அரசியல் வன்முறைக்கெதிரான பிரசார இயக்கத்துடனும் பங்குடைமையாக தேர்தல் வன்செயல் கண்காணிப்பு நிலையத்தை (CMEV) நிறுவுவதற்கு ஆதரவு வழங்கியது. வன்செயல் நிறைந்த அந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது CMEV நாளாந்த அடிப்படையில் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் தகவல்களை வெளியிட்டது. அதன்பின்னர், இடம்பெற்ற சகல தேர்தல்களிலும் அது அவ்வாறே செயற்பட்டது. CPA இந்தச் செயற்பாட்டு நிகழ்வுக்குப்பின்னர் வெறுமனே ஓர் அறிக்கையைத் தயாரிக்கும் கல்விப்புலமைசார் நடவடிக்கையாக அமைந்துவிடக்கூடாதென்று மிகத்தீவிரமாக எண்ணியது. அது தேர்தல் தொகுதியிலுள்ள வாக்காளர்கள் அறிவுசார் தெரிவுகளை மேற்கொள்ள உதவும்வகையில் தேர்தல் செயல்முறையினுள் ஒரு பொருண்மை உள்ளீடாக விளங்கவேண்டுமென்று விரும்பியது. இந்த முன்னார்வச் செயற்பாடு அவர்களின் சகல பணிகளிலும் ஆராய்ச்சி / பகுப்பாய்வு மற்றும் விதப்புரைகள் குறித்த இடையீடுகளை வழங்கி CPA அமைப்பை இலங்கையின் ஏனைய சிவில் சமூக அமைப்புகளிலிருந்து வேறுபடுத்திக் காண்பித்தது.

கடந்த இரண்டரை தசாப்த காலங்களாக அதன் தனிச்சிறப்புவாய்ந்த வெளியீடுகள் மற்றும் சிந்தனையைத் தூண்டும் செயலமர்வுகள் / கருத்தரங்குகளுக்கு மேலதிகமாக, பவுன்டேஷன் பல்வேறு சந்தர்ப்பங்களில் CPA ஒரு “ஜனநாயக நிறுவனங்கள் கண்காணிப்பு” வெளியீட்டைக் கொணரவும், சட்டத்தீர்ப்புகள் குறித்துக் கண்காணித்து அறிக்கையிடவும், சட்டஉதவி வழங்கவும், மூலோபாயப் பொதுநலன் வழக்காடல்களில் ஈடுபடவும் ஆதரவு வழங்கியுள்ளது. ஆயினும், நாம் ஆதரவளித்த, மிகவும் நிலைமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களிலொன்று பிலிப்பீன்ஸுக்கு கலாநிதி சரவணமுத்து ஓர் அவதானிப்பு விஜயத்தை மேற்கொண்டு, அங்குள்ள நீண்டகால ஆசியா பவுன்டேஷன் கொடை பெறுநராகிய சமூக காலநிலை அவதானிப்பு நிலையத்துடன் (SWS) அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்கு வழியேற்படுத்தியமையாகும். நிறைவேற்றுப் பணிப்பாளராக கலாநிதி மஹ மஹங்கஸ் அவர்களுடனும், SWS அணியினருடனும் இடம்பெற்ற இடைவிளைவுகள் CPA யின் சொந்தச் சமூகப் பகுப்பாய்வு மற்றும் ஆராய்ச்சி யதார்த்த அமைப்பான சமூகக்காட்டியை (Social Indicator) உருவாக்குவதற்கு இட்டுச்சென்றது. இதனூடாக CPA பொதுமக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புகளை நடத்தவும், இலங்கையில் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மதிப்பாய்வுகளை நடத்தவும் இயலுமையைப் பெற்றுக்கொண்டது.

இலங்கையில் நெருக்கடிகள் கடந்த மூன்று தசாப்தகால அரசியல் தலைமைத்துவ நெருக்கடிகள் மற்றும் ஜனநாயகத்துக்கும், ஆட்சி முறைக்கும் அச்சுறுத்தல்கள் நிறைந்த ஒன்றாக இருந்துள்ளது. CPA சுயாதீனமான கருத்துரைகள், சட்டப்பகுப்பாய்வு மற்றும் மீளாய்வு, தீர்மானகரமான பொதுநலன் வழக்காடல்கள் என்பவற்றில் சம்பந்தமுற்று, சிவில் சமூக வாய்ப்புவெளியில் தலைமை ஸ்தானத்தை ஏற்று, வளர்ச்சியுற்று, பரிணமித்துள்ளது. அது ஜனநாயக ஆட்சிமுறை, முரண்பாட்டு நிலைமாற்றம் மற்றும் மனித உரிமைகள் ஆகிய துறைகளிலான விடயப்பரப்புகளில் ஒரு பக்கச்சார்பற்ற, சக்திமிக்க குரலாகவும் மாறியுள்ளது. மிகவும் முக்கியமாக, அரசியல்மயமாக்கல், தனிப்பட்ட சலுகைகள் மற்றும் ஊழல் நிறைந்த ஒழுக்கப்பண்பு மனிதர்களின் நடத்தையைத் தீர்மானிக்கும் பின்னனியில்

CPA ஒரு நியாயம், சுயாதீனம் மற்றும் வகைப்பொறுப்பின் புத்துயிர் வழங்கும் குரலாக விளங்கிவந்துள்ளது. CPA மிகவும் கடினமான காலப்பகுதிகளில் தனது நிலைப்பாட்டில் உறுதியாகவும், விட்டுக்கொடுப்பின்றியும் செயலாற்றியுள்ளது. அது எண்ணற்ற தேசிய மற்றும் சர்வதேச இளைஞர், யுவதிகளுக்கான மதிப்புவாய்ந்த பயிற்சிக்கூடமாக இருந்துள்ளது. இங்கு இவர்கள் அர்ப்பணிப்பு மற்றும் உணர்வுமிக்க தலைமைத்துவத்தின் வழிகாட்டலில் அனுகூலமடையும் வாய்ப்புகளைப் பெற்றுக்கொண்டனர். ஆசியா பவுன்டேஷன் அமைப்பிலுள்ள நாங்கள் CPA யின் தாபிதம் மற்றும் அபிவிருத்தியில் வகித்த சிறிய பாத்திரம் குறித்துப் பெருமிதம் கொள்வதோடு, கலாநிதி சரவணமுத்து மற்றும் CPA யின் சகல பதவியினருக்கும் எமது வாழ்த்துக்களையும் தெரிவித்து, எதிர்காலத்தில் பல தசாப்த காலங்களுக்கு அவர்களின் முக்கியமான பணி தொடர்வதற்கான வலிமையும் தைரியமும் கிட்டவேண்டுமென்றும் பிரார்த்திக்கின்றோம். எமது திடமான பங்குடைமை இலங்கையில் நல்லாட்சி மற்றும் வகைப்பொறுப்பை முன்னேற்றும் வகையில் ஆழமாகி, வளர்ச்சியுறுமென்றும் எதிர்பார்க்கின்றோம்.

---

**டினேஷா டி சில்வா விக்கிரமநாயக்க**

ஆசியா பவுன்டேஷன் நிறுவனத்தின் தற்போதைய இலங்கை வதிவிடப் பிரதிநிதி. இலங்கைத் தேசிய பொருளாதார கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்ட அணித்தலைவராகவும், Foundation's Washington D.C. அலுவலகத்தின் உதவிப்பணிப்பாளராகவும் பணியாற்றுகிறார். பொருளாதாரக் கட்டுப்பாடு, சட்டத்தின் ஆட்சி, நீதிக்கான அணுகுமுறை, மோதல் தீர்வு ஆகிய துறைகளில் ஆர்வமும் அனுபவமும் கொண்ட அவர் பொருளாதாரத் துறையில் ஜோர்ஜ் ரவுன் பல்கலைக்கழகத்தின் (University of Georgetown) முதுகலைஞர் பட்டதாரியாவார். கொலம்பியா பல்கலைக்கழகத்தில் (University of Columbia) பட்டப்பின் படிப்புப் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

## லிபரல் ஜனநாயக மாற்றுவழி ஒன்றுக்காக



# சளைக்காமல் போராடிய இருபத்தைந்து ஆண்டுகள்

**சட்டத்தரணி**
**சுதர்ஷன குணவர்தன**

ஏன் ஒரு மாற்றுவழி தேவைப்படுகிறது? தற்போதுள்ள உடன்பாடு போதாதுள்ளதன் காரணமாகவே ஒரு மாற்றுவழி தேவைப்படுகிறது.

காலனித்துவ ஆட்சியாளர்களிடம் சுதந்திரம் பெற்ற பின்னர் இலங்கை காலனித்துவத்துக்குப் பின்னரான ஒரு தேசிய கொள்கையினைக் கட்டியெழுப்புவதற்கான போராட்டத்தில் ஈடுபட்டது. ஒருபுறமாக காலனித்துவத்தின் எசமானரால் கட்டியெழுப்பப்பட்ட நிறுவன முறைமையும், மறுபுறமாக உருவாகி வரும் போட்டித் தன்மை வாய்ந்த தேசிய அபிலாசைக்கும் இடையில் சுழன்றவாறு இக் கொள்கை கட்டியெழுப்பப்படுகிறது.

இவ்வாறு கட்டியெழுப்பப்பட்டு வந்த தேசிய கொள்கை போதியதாக அமையாததன் காரணமாக அதற்கான ஒரு தேசியவாத மாற்றுவழி தெற்கில் இருந்தும் வடக்கில் இருந்தும் முன்வைக்கப்பட்டது. இத்தகைய மாற்றுவழிகளுக்கு இடையிலான போட்டியின் காரணமாக இனங்களை அடிப்படையாகக் கொண்டு நாடு துருவப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டது. இதற்குரிய மாற்றுவழியாக காலனித்துவத்துக்குப் பின்னரான தேசியக் கொள்கையினை விமர்சனத்துக்கு உட்படுத்தி சோஷலிசம் எனப்படும் மற்றுமொரு மாற்றுவழி முன்வைக்கப்பட்டது. அதன் மூலம் வரப்பிரசாதங்களை இழந்த வகுப்பினருக்கு நன்மைபயக்கும் விதமாக சமூக கட்டமைப்பினை மீண்டும் தயாரிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டது. தேசியவாத மாற்றுவழி மிகவும் பலமானதாக அமைந்ததன் காரணமாக பிந்திய காலகட்டத்தில் சோஷலிச மாற்றுவழி குறித்த தேசியவாத மாற்றுவழிக்குள் மூழ்கிச் சென்றமையினைக் காணக் கூடியதாக இருந்தது.

தோல்வியடைந்து செல்லும் அங்கீகரிக்கப்பட்ட தேசியக் கொள்கையானது வெறுமனே விமர்சிப்பதற்கு அப்பால் சென்று மாற்றுக் கொள்கைகள் தொடர்பான ஓர் உரையாடலை முன்னெடுக்கும் நோக்குடன் இற்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 'மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்' உருவாகியது.

1994 ஆம் ஆண்டு மக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் வெற்றியினைத் தொடர்ந்து ஜனநாயக வெளி விரிவடைந்ததுடன் சிவில் சமூக அமைப்புக்கள் மிகவும் ஊக்கத்துடன் தமது வகிபாகங்களை ஆற்றி அரசாட்சி

தொடர்பான தலையீடுகளை மேற்கொள்ள ஆரம்பித்தது. அப்போதிருந்த முன்னணியில் இருந்த அமைப்புக்கள் மற்றும் அவற்றின் முக்கிய செயற்பாட்டாளர்களிடம் காணப்பட்ட பொது மரபுரிமையாக இடதுசாரி சோஷலிச சம்பிரதாயம் விளங்கியது. வட மாகாணத்தை மையமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட சிவில் சமூக இயக்கம் மீது தமிழ் தேசியவாதத்தின் ஆதிக்கம் கிடைக்கப் பெற்றிருந்தது. அதற்குப் பதில் தெரிவிக்கும் வகையிலான ஒரு தேசியவாத சிவில் சமூக இயக்கம் தெற்கில் கட்டியெழுப்பப்பட்டது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சோஷலிச அல்லது தேசியவாத மாற்றுவழிக்குப் பதிலாக லிபரல் ஜனநாயக அடிப்படையில் அமைந்த ஒரு மாற்றுவழிக்காக செயற்பட்டது. இலங்கை எனும் நாடு மற்றும் சமூகம் இன்று எதிர்நோக்கும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய பன்மைத்துவம் மற்றும் பொறுமை ஆகியவற்றின் அடிப்படையில் மாற்றுவழி ஒன்றைக் கட்டியெழுப்பும் உரையாடலை இருபத்தைந்து ஆண்டு காலத்திற்குள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மேற்கொண்டது.

அரச நிர்வாகத்திற்கு அடிப்படையாக லிபரல் ஜனநாயகம் எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கான அடிப்படைகள் எமது அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆயினும் எமது கல்வி, மதஸ்தாபனங்கள், ஆட்சியாதிக்க சம்பிரதாயத்தின் அடிப்படையிலேயே அது கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

லிபரல் பெறுமானங்களை ஏற்றுக்கொள்ளாத சமூக சக்திகள் மற்றும் லிபரல் ஜனநாயக பெறுமானங்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட அரசியலமைப்பு ஆகியவற்றுக்கு இடையில் அடிக்கடி கருத்து வேற்றுமைகள் ஏற்படுகின்றன. 2001 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட 17 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் போன்றே, 2015 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தம், ஆகியன இரண்டாவது குடியரசு அரசியலமைப்பினை மேலும் ஜனநாயகப் பண்புகள் கொண்டதாக மாற்றியமைப்பதற்காக சிவில் சமூகம் சார்பில் எழுப்பப்பட்ட அபிலாஷைகளின் வெளிப்பாடு எனக் கருத முடியும். முறையே 2010 ல் மற்றும் 2019 ல் 18 ஆம் மற்றும் 20 ஆம் திருத்தங்கள் மூலம் அந்த முயற்சினைத் தற்காலிகமாக பின்னோக்கி நகர்த்துவதற்கு பிற்போக்குவாத மற்றும் ஆட்சியாதிக்க சக்திகளுக்கு முடிந்த போதும், மேற் குறிப்பிடப்பட்ட திருத்தங்கள் மூலம் பிரதிபலிக்கும் பண்பட்ட நீதிக்கான சமூகம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கான ஒரு அளவுகோலாக அது மாற்றம் பெற்றுள்ளது. அத்தகைய பண்பாடுகளை வளர்த்தெடுப்பதற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் மையப்படுத்தப்படுத்தப்பட்ட ஒரு வகிபாகம் மேற்கொள்ளப்பட்டது.

அரசியலமைப்பு மூலம் மக்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. ஆயினும், அரசியலமைப்புத் துறையால் அத்தகைய உரிமைகளுக்கு முரணான சட்டங்கள் மூலம் அங்கீகரித்துக் கொள்ளப்படின் அல்லது நிறைவேற்றுத் துறையால் அத்தகைய உரிமைகளை மீறும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படின், மேற் குறிப்பிடப்பட்ட உரிமைகள் அர்த்தமற்றதாக அமையும். ஆகவே இதன் போது மக்களிடம் உள்ள பரிகாரம் யாதெனில், உத்தேசிக்கப்பட்டுள்ள குறித்த சட்டம் வரையப்படுகின்ற சந்தர்ப்பத்தில் உயர் நீதிமன்றத்தில் அதனை சவாலுக்கு உட்படுத்துதல் மற்றும் குறித்த நிறைவேற்றுத் துறையின் குறித்த செயற்பாட்டை உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்துதல் ஆகும். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக பதவியில் இருந்த அனைத்து அரசாங்கங்களினாலும் எடுக்கப்பட்ட அரசியலமைப்புக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் சவால் விடுத்து மக்களது உரிமைகளை பாதுகாப்பதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தலையீட்டினை மேற்கொண்டுள்ளது. அத்தகைய சவால்களின் பயனாக பெற்றுக்கொள்ளப்பட்ட உறுதியான ஒருசில வழக்குத் தீர்ப்புகள் தற்போது நீதிமன்றத்தால் சட்ட ரீதியான அதிகாரங்களாகவும் மாற்றப்பட்டுள்ளன.

இலங்கையில் உருவாகி வரும் இன ரீதியான தேசியவாத உரையாடலுக்கு முரணாக தேசிய ஒற்றுமை மற்றும் அபிவிருத்திக்கான ஒரு மாதிரியாக மையத்தில் அதிகாரத்தைப பகிர்ந்தளித்தல் மற்றும் முனையத்துக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தலை அடிப்படையாகக் கொண்ட 'சமஷ்டி கருத்தியலை' முன்கொண்டு செல்லல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு முக்கியமான சம்பிரதாயம் ஆகும்.

இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக அதிகாரங்கள், பொலிஸ் அதிகாரங்கள் மற்றும் நிதி அதிகாரங்களை பகிர்தல் தொடர்பாக, விரவான ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அக் கலந்துரையாடலை வெறுமனே ஆங்கில மொழிக்கு மாத்திரம் வரையறுக்காமல் பெரும்பான்மை மக்களுக்குத் தெளிவாக விளங்கக் கூடிய சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளிலும் நடாத்துவதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பாடுபட்டது. அவ்வாறே இனங்களுக்கு இடையில் நீதி மற்றும் சமத்துவத்தை மேம்படுத்துவதற்காக அரச கரும மொழிக் கொள்கையை உரியவாறு நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவத்தைப் புரிந்து, அதற்காக தொடர்ச்சியான தலையீடுகளை மேற்கொண்டது.

இணையவழி பிரசித்தி பெறத் துவங்கியதனைத் தொடர்ந்து அதுவரை 'எனலொக்' யுகத்தில் இருந்த பல்லூடக தொடர்பாடல் ஊடகங்களை

ஒரே டிஜிடல் மேடைக்குக் கொண்டு வருதல் ஆரம்பமாகியது. அச்சிடப்பட்ட எழுத்துக்கள், செவிப்புல ஊடகம், கட்புல ஊடகம் போன்றே செவிப்புல கட்புல ஊடகத்தையும் ஒரே இணையத்தளத்தில் முன்வைப்பதற்கு கிடைக்கப் பெற்ற இப் புதிய ஆற்றலினை முன்கூட்டியே இனம் கண்டு அதன் மூலம் உரிய பலனை அடைந்து கொள்வதை, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் சாதிக்க முடிந்தது. Groundviews இணையத்தளம் அதனது பிரதானமான ஒரு பிரதிபலன் ஆகும். தனித் தனியாக இணையத்தளங்களின் பலப் பரீட்சையினை உடைத்தெறிந்து ட்விட்டர், முகநூல், வட்ஸ்எப் போன்ற சமூக ஊடக வலைப்பின்னல் ஊடகங்கள் பிரசித்தமடைந்து சென்ற போது அவற்றுள் உரிய இடத்தினைப் பெற்றுக் கொள்வதற்கும் Groundviews இணையத்தளத்திற்கு முடிந்தது. அந்த வகையில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பற்றிய நம்பிக்கை மிகுந்த ஒரு நிலையம் 'வேர்ச்சுவல்' அவகாசத்திற்குள் கட்டியெழுப்பப்பட்டது.

வன்முறை மற்றும் மோசடிச் செயற்பாடுகளினால் மாசடைந்து நம்பகத் தன்மை இழந்து போயிருந்த தேர்தல் முறையினை மறுசீரமைப்பதற்காக தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் எனப்படும் "சீ.எம்.ஈ.வீ " ஐக் கட்டியெழுப்புவதற்கு முன் நின்றமையானது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முக்கியமான ஒரு பணி ஆகும். தொழில்வாண்மை ரீதியாக வாக்களிப்பினைக் கண்காணித்தல், அத்தகைய கண்காணிப்பின் உதவியுடன் பரிந்துரைகள் உள்ளடங்கிய அறிக்கைகளை வெளியிடல், நியாயமான வாக்களிப்பினை நடாத்துவதில் உள்ள தடைகளை சட்ட ரீதியாக சவாலுக்கு உட்படுத்தி நீதிமன்ற ரீதியிலான முன்மாதிரிகளை கட்டியெழுப்புதல், சட்டம் மற்றும் நிறுவன மறுசீரமைப்புக்குப் பங்களிப்புச் செய்தல் ஆகியன அத்தகைய பணிகளில் உள்ளடங்கும். சுமார் இரண்டு தசாப்த காலம் தேர்தல் திணைக்களம் மற்றும் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கண்காணிப்பு அமைப்பாக கருதப்படும் இரண்டு சிவில் சமூக அமைப்புக்களுள் ஒன்றாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் காணப்படுகிறது.

மேற் குறிப்பிடப்பட்ட அனைத்து பங்களிப்புக்களுள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் நான் காணும் தனிச் சிறப்பு வாய்ந்த முக்கியத்துவம் யாதெனில், மாற்றுக் கொள்கைகள் தொடர்பான வெறுமனே கல்வி நிறுவனம் ஒன்றுக்கு தன்னை வரையறுக்காமல் அத்தகைய கொள்கைகளை எமது மண்ணில் யதார்த்தமாக்குவதற்காக ஏனைய சிவில் சமூக அமைப்புக்களுடன் இணைந்து பொதுவான ஒரு முன்னணியாக செயற்படுவதற்காக தலையீட்டினை மேற்கொள்ளல் ஆகும். விசேடமாக 2009 ஆம் ஆண்டு 'சுதந்திரமான அரங்கு' எனப்படும் சிவில் சமூக அரங்கைக் கட்டியெழுப்புவதில் அதன் அழைப்பாளராக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து அவர்களால் மேற்கொள்ளப்பட்ட தலையீடு வரலாற்றுச் சிறப்பு மிக்கது ஆகும்.


நாட்டில் மறுசீரமைப்புக்களைக் கொண்டு வருவதற்காக அரசியல் சமூகத்தினருடன் வெளிப்படையாக ஓரணியில் நின்று செயற்பட வேண்டுமென மாற்றுக் கொள்கைககளுக்கான நிலையம் நம்பிக்கை கொண்டது. ஆட்சிக்கு வரும் எந்தவொரு அரசாங்கமும் ஜனநாயக ரீதியலான மறுசீரமைப்புக்களைக் கொண்டு வரும் போது அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குதலும், எந்தவொரு அரசாங்கத்தினாலும் ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படும் போது, அது தொடர்பாக வெளிப்படையாகவே எதிர்ப்புத் தெரிவிப்பதற்கும் அதற்கு சக்தி இருந்தது. அரசியல் கட்சிகள் மற்றும் அவற்றின் தலைமையுடன் நெருங்கிப் பணியாற்றிய போதும், கொள்கை ரீதியாக எதிர்ப்பினை வெளியிட வேண்டி இருப்பின், தாமதமின்றி தனது எதிர்ப்பினை வெளிக்காட்டுவதற்கு மாற்றுக் கொள்கைககளுக்கான நிலையம் இரண்டு முறை சிந்தித்துப் பார்க்கவில்லை. 'இறுதி முடிவு எனப்படும் அந்தத்தினால் பாதை நியாயப்படுத்தப்படும்' எனும் கூற்றினைப் பின்பற்றுவதற்கு விரும்பிய இடதுசாரிகளில் இருந்து தோற்றம் பெற்ற சிவில் சமூக அமைப்புக்களில் இருந்து மாற்றுக் கொள்கைககளுக்கான நிலையம் மாறுபடுவது 'பாதையே அந்தம்' என்பதாக அவ் அமைப்பு நம்பிக்கை கொண்டதனால் ஆகும். அநீதியின் போது கூட அமைதியாக இருந்து நடுநிலைமையினைப் பாதுகாப்பதற்கு முயற்சி செய்யும் போலியான அமைப்புக்கள் மத்தியில் அநீதி இழைக்கப்படுகின்ற போது நடுநிலைமை வகிக்காது, ஆயினும் தனது சுயாதீனத்தைப் பாதுகாத்து பக்கச்சார்பின்றியும் நோக்கத்தின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளும் ஒரு தேசிய சிவில் அமைப்பு தொடர்பான சிறந்ததொரு முன்மாதிரியினை மாற்றுக் கொள்கைககளுக்கான நிலையம் நிறுவியுள்ளது.

---

**சுதர்ஷன குணவர்தன**

முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர், 'ரைட்ஸ் நவ்' கலெக்டிவ் ஃபோ டிமொக்ரசி' இணை அழைப்பாளர், சுதந்திரத்துக்கான அரங்கு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர், முன்னாள் அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், சட்டத்தரணி. சிவில் சமூக செயற்பாட்டாளர்.

# ‘சமாதான நோக்கு’ ஊடாக CPAஐ சந்தித்தல்



பிரிட்டோ பிரனாந்து

சிங்கள மொழியில் “மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்” என அழைக்கப்பட்ட போதும் CPA என்றே அது மிகவும் பிரபல்யம் அடைந்தது. பெரும்பாலும் எல்லோராலும் CPA என அழைக்கப்படுகிறது.

‘சமாதான நோக்கு’ சஞ்சிகை கிடைக்கப் பெற்றதைத் தொடர்ந்து CPA பற்றி நான் அறிந்து கொண்டேன். அரசியல் பணிகளில் ‘நவ சமசமாஜக் கட்சி’ செயற்பாட்டாளராக ஈடுபட்ட எனக்கு இந்த சஞ்சிகை பேருதவியாக இருந்தது. ஏதேனும் ஒரு விடயம் தொடர்பாக பலதரப்பட்ட அறிஞர்களின் கருத்துக்களை சாராம்சப்படுத்தி அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படும் ஒரு முக்கியமான பணியினை இந்த சஞ்சிகை மேற்கொண்டது. ஆகவே ஏதேனும் ஒரு விடயம் பற்றி ஆழமாக கற்றுக் கொள்வதற்கு இது பெரிதும் உதவி புரிந்தது.

இச் சஞ்சிகை மூலம் CPA பற்றி கேள்விப்பட்டுள்ள போதும் அதன் பிரதானிகளுடன் ((சரா, பவானி, லயனல் போன்றோர்) நெருங்கிப் பழகுவதற்கு 2012 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்ட சுதந்திரத்துக்கான மேடை தொடர்பான பணிகளின் போதே வாய்ப்புக் கிடைத்தது. கலாநிதி சரவணமுத்து (சரா) ஊடாக சுதந்திரத்துக்கான மேடையில் CPA இன் பிரதிநிதித்துவம் நிகழ்ந்தது. அவர் அங்கு பிரதான பேச்சாளராக இருந்தார். கஷ்டமான அப்போதைய காலகட்டத்தில் (2012 - 2015) CPA அமைப்பு ‘சுதந்திரத்துக்கான மேடை’க்கு அத்திவாரமாக அமைந்தது. இன்றேல் ஒரு ஜாம்பவனாக அமைந்தது.

நாங்கள் ‘காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களின் கூட்டு’ என்ற ரீதியில் பல்வேறு செயற்பாடுகளில் (வீதிகளில் இறங்கிப் போராடுதல்) ஈடுபட்டோம். பல குடும்பங்களுடன் இணைந்து வீதியில் இறங்கி நாங்கள் சவால் விடுத்தோம். ஆனாலும் ஆட்சியில் உள்ள எல்லா அரசுகளும் ஏதாவதொரு சட்டத்தைக் (சமூகத்துக்கு

பாதக விளைவை ஏற்படுத்தும்) கொண்டு வரும் போது பெரும்பாலும் அதனை சட்ட ரீதியாக சவாலுக்கு உட்படுத்துவதற்கு CPA எப்பொழுதும் முன்வந்தது. அத்தகைய சவால் ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங்கங்களுக்கும் ஒரு தலைவலியாக இருப்பது உண்மையான ஒரு விடயம் ஆகும். அதே போன்று அரசாங்கங்களின் அவ்வாறான செயற்பாடுகள் தொடர்பாக ஆகக் குறைந்தது ஒரு வெளியீட்டினை முதன் முதலில் ஆக்குவதற்கு CPA இற்கு துணிச்சல் இருந்தது. பெரும்பாலும் அந்த வெளியீடு பாரியதொரு மாற்றத்துக்கு காரணமாக அமையாத போதும் அரசாங்கங்களின் அத்தகைய மானுட விரோத செயற்பாடுகளுக்கு தனிப்பட்ட ரீதியில் அல்லது ஓர் அமைப்பாக இருந்து எதிர்ப்பினை வெளியிடுவதற்கான தேவை இருந்த அனைவருக்கும் தைரியத்தையும் ஊக்கத்தினையும் வழங்கியமை ஓர் உண்மை ஆகும்.

நீதிமன்ற முறைமை தொடர்பாக, சட்டத்தின் ஆட்சி தொடர்பாக, எத்தகைய விரக்தி நிலைமை காணப்பட்ட போதும் இவ்வாறான சவால்களை விடுப்பது அத்தியவசியமானது ஆகும். CPA அமைப்பு அதனை ஒரு தேவகாரியமாக நிறைவேற்றுதலானது பாதிக்கப்பட்ட நபர்கள், ஏனைய செயற்பாட்டாளர்கள் சார்பில் நிறைவேற்றப்படும் ஒரு பொறுப்பாகவே நான் கருதுகின்றேன். 25 ஆண்டுகள் என்பது ஒரு குறுகிய காலம் அல்ல. அரசியல் கட்சிகள், அமைப்புக்களில் உருவாகும் பல்வேறுபட்ட பிளவுகள் பற்றி நோக்குவோமாயின் ஓர் அமைப்பாக 25 ஆண்டுகள் தொடர்ச்சியாக நிலைத்து நிற்பது மிகப் பெரிய ஒரு விடயம் ஆகும்.

CPA இற்கு அறிவுரை கூறும் அளவுக்கு நாம் அதற்குப் பொருத்தமானவர்கள் அல்ல. அதற்கான முதிர்ச்சியும் நம்மிடத்தில் இல்லை. ஆயினும் ஒரு யோசனையினை முன்வைக்க விரும்புகின்றேன். அரசாங்கங்களின் அநீதிகளுக்கு எதிரான வெளியீடுகள் மூலம், நீதிமன்றத்தில் சவால் விடுக்கும் அதேநேரம் அதனைச் சுற்றி ஏனைய அமைப்புக்கள், செயற்பாட்டாளர்களை ஒன்றிணைக்கும் ஓர் ஊடகமாக அதனைப் பயன்படுத்தி ஒரு பொதுவான கூட்டுச் செயற்பாடு வரை அதனை விருத்தியடையச் செய்வதற்கான தேவைப்பாட்டை முன்கொண்டு செல்வதற்காக மேற்கொள்ள வேண்டிய பணி தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படுமாயின், நன்றாக இருக்கும். இச் சந்தர்ப்பத்தில் விசேடமாக சிறுசிறு விடயங்களை விடவும் கூட்டிணைந்த ஒரு மக்கள் செயற்பாடே தேவையானதாக உள்ளது. வழக்கு ஒன்றைக் கூட அவ்வாறான ஒன்றுக்கு தொடக்கமாகக் கொள்ள முடியும். விசேடமாக மனித உரிமைகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளும் சிவில் அமைப்புக்களின் ஒரு கூட்டிணைவு இச் சந்தர்ப்பத்தில் அத்தியாவசியமானதாக உள்ளது. விசேடமாக மனித உரிமை அமைப்புக்களை நாட்டைக் காட்டிக் கொடுக்கும் தேசத் துரோகிகள் என கடந்த காலங்களில் விசேடமாக தென் பகுதியில் பரப்பப்பட்ட கருத்து இன்னும் முழுமையாக சமூகத்தை விட்டு அகன்று செல்லவில்லை. அதனால் தான் மார்ச் - செப்டம்பர் மாதங்களில் ஜெனீவா நினைவில் வரும் போது இந்தத் துரோகமான நாட்டைக் காட்டிக் கொடுக்கும் கதைகள் வெளியே வருகின்றன. ஆனாலும் அதனை சிங்கள பௌத்த தேசியவாதத்தினால் தான் மூடி மறைக்க முயற்சி செய்கிறார்கள்.

அதன் காரணமாகவே CPA போன்ற 25 ஆண்டு கால வரலாற்றையும் அனுபவத்தையும் கொண்ட ஓர் அமைப்பாக தற்போது மேற்கொள்ளப்படும் முக்கியமான பணிகளுக்கு மேலதிகமாக இத்தகைய கூட்டிணைவை உருவாக்குவதற்குத் தலைமை தாங்குவதாயின் அது ஒரு பெரிய விடயம் தான். ஆகவே வெள்ளி விழாக் காணும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

---

**பிரிட்டோ பிரானாந்து**

காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களின் கூட்டமைப்பின் இணை நிறுவுனர். தற்போது அதன் தலைவராகப் பணியாற்றுகிறார். சிவில் சமூகச் செயற்பாட்டாளர். சுதந்திரத்திற்கான அரங்கின் ஓர் அழைப்பாளர்.

# மாற்றீட்டிற்கான - மாற்றுவழி

UVA SHAKTHI FOUNDATION
ඌව ශක්ති පදනම
ஊவா சக்தி நிறுவனம்
USF
"Let us foster neo Lankans through Friendship"

ஊவா சக்தி நிறுவனம்

இலங்கை மக்களுக்கு மாற்றீடுகளையேயன்றி மாற்று வழிகள் தெரியாது. தமது தேவைக்குச் சமமான அல்லது மாற்றீட்டைப் பயன்படுத்திக் கொள்வதே பொதுவாக மக்களின் எண்ணமாக இருக்கிறதேயன்றி, அதற்கு முற்றிலும் மாறுபட்ட அல்லது மாற்றுவழியைத் தேடிக் கொள்வதற்கு முயற்சிப்பதாக இல்லை. இதனாலேயே மனிதர்கள் தமது உரிமைகளின் அளவைப் போன்றே கடமைகளின் வகிபாகத்தையும் உணராமலும் அதனை தெரிந்து கொள்ளாததுமான நிலைமைக்கு மாறியுள்ளனர்.

ஒட்டுமொத்தமாக மக்களின் கல்வியறிவு உயர் மட்டத்தில் காணப்பட்டாலும், தர்க்க ரீதியான அறிவு, அரசியல், சட்ட ரீதியான அறிவு மற்றும் தேர்தல் தொடர்பான அறிவு மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. இவ்வாறானதொரு சூழலில் மக்கள் பெரும்பாலும் அனுபவிக்கின்ற சமத்துவமற்ற நிலைமைகளைச் சமப்படுத்துவதும் அவர்களின் தர்க்க ரீதியான அறிவை வளர்ப்பதும் உண்மையிலேயே இந்த யுகத்தின் அவசியமாக உள்ளது.

எந்தவொரு பேரிடரின் போதும், நெருக்கடியின் போதும் சிக்கல் நிறைந்த நிலைமைகளிலும் தேவையான அளவு தீர்வுகள் காணப்படலாம். ஆனால், அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வருவதாயின் நெருக்கடிகளைக் கருப் பொருளாகக் கொண்ட பாரிய இயக்கமொன்று அவசியமாகின்றது. எனினும் அவ்வாறான இயக்கமொன்று சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு உருவாவதும் இல்லை. அதற்கென மாறுபட்ட மாற்று வழியிலான தலைகீழான நோக்கொன்று அவசியம். அவ்வாறே அவ்வாறான இன்றியமையாத கருத்தொன்று திடீரென ஒரு குழுவிற்குள் தோன்றுவதும் இல்லை.

அதற்குச் சிறப்பு வாய்ந்த அனுபவங்களும் அவ்வாறே அறிவுபூர்வமான பயிற்சியும் அவசியம். அவ்விடைவெளியை நிரப்பும் அவசியம் இற்றைக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் ஒருவரின் மனதில் உதித்தது.

பாக்கியசோதி சரவணமுத்து எனும் அவரால் இலங்கை மக்கள் மாற்றிச் சிந்திக்கக் கூடிய பாதையொன்று இருப்பதை வலியுறுத்துவதற்குத் தேவையான பொறிமுறையொன்றை நோக்காகக் கொண்டு 1996ம் ஆண்டில் 'மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்' உருவாக்கப்பட்டது.

கலை, அழகியல், கலாசாரம் என்பவற்றை முதன்மையாகக் கொண்ட மனித நேயம் நிறைந்த, அவ்வாறே அனைவரையும் சமமாகக் கருதும் உன்னதமான நோக்கங்களை அடையும் 'எதிர் வகிபாகத்தை' மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஊடாக நடைமுறையில் கட்டியெழுப்பி கடந்த இருபத்தைந்து வருடங்கள் முழுவதுமாக இலங்கையர்கள் பெற்ற வெற்றிகள் பல.

இங்கு ஒரு கவலைக்கிடமான நிகழ்வு நினைவுக்கு வருகின்றது. அதாவது, இருநூறு வருடங்களாக இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில், தமது வியர்வையையும் உழைப்பையும் அர்ப்பணித்து, தமது கலாசாரப் பரிமாணங்களையும், விழுமியங்களையும் இந்தத் தேசத்தில் வேரூன்றச் செய்து, நிகழ்காலத்திலும் பல்வேறு துறைகளில் நாட்டின் பொருளாதாரத்தை வலுவுறச் செய்கின்ற, எனினும், இருநூறு வருடங்கள் முழுவதுமாக இரண்டாந் தரமாகக் கருதப்படுகின்ற தோட்டப்பகுதி மக்களின் உரிமைகள் புறக்கணிக்கப்படுகின்றன. அவர்களுக்குக் குறிப்பிட்டதொரு முகவரி இருக்கவில்லை. அந்த நிலைமையை முடிவுக்குக் கொண்டுவந்து, அவர்களுக்கு நிரந்தர முகவரியை அளிப்பது அவர்களின் அபிமானத்தை உயர்த்தும் ஒரு உத்தியாக அமைந்தது. ஊவா சக்தி மன்றத்தால் ஆரம்பிக்கப்பட்ட 'எமக்கும் ஓர் முகவரி உண்டு' என்ற சமூக இயக்கத்தில், தோட்டப் பகுதி மக்களுக்கான சட்டரீதியான நிலைமைகளை சமநிலைப்படுத்துவதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வழங்கிய தொழில்நுட்ப ரீதியான ஒத்துழைப்பு பாராட்டப்படக் கூடியது எனக் கூற வேண்டும். அதன் நேரடிப் பெறுபேறாக தோட்டப் பகுதி இளம் சமூகத்தில் நீண்டகாலமாக மறைந்து கிடந்த கலை மற்றும் அழகியற் கருத்துகள் பிரதிபலிக்கப்பட்டு அவர்கள் அனுபவித்த தோட்டத்து வாழ்க்கையின் பாதிப்புகளையும், துன்ப துயரங்களையும் கமரா வில்லைகளின் ஊடாக சமூகத்திற்கும் அவ்வாறே உலகத்திற்கும் வெளிச்சம் போட்டுக் காட்ட முடிந்தது.

இங்கு மிகச் சிறந்த உதாரணமாக பிரஜைகளுக்கான மொழி உரிமையைப் பாதுகாப்பதன் மூலம் அடிப்படை உரிமைகளுக்காக முன்வருதல், பொது மக்களின் அடிப்படைக் கட்டமைப்புகளைப் போன்றே உரிமைகள் மீறப்படுகின்ற கட்டளைச் சட்டங்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நீதிமன்ற ரீதியிலான நடவடிக்கைகள், மாகாண சபையின் அதிகாரத்தை பூரணமாக அமுலுக்குக் கொண்டு வரவும், அதிகாரத்தைப் பகிர்வதன் மூலம் சிறந்த ஆட்சி முறையொன்றை ஏற்படுத்தவும், நுகர்வோர் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட இடையீடுகள், நியாயமான மக்கள் தேர்தல் செயற்பாட்டை நீரூபிப்பதற்கான இயக்கங்கள், உள்ளூராட்சி நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்திற்கான கொள்ளளவை அதிகரித்தல் என்பன சிறப்பு வாய்ந்தவை.

ஊடகச் சுதந்திரத்திலுள்ள சமூக சனநாயகத்திற்காக முன்வருதல், மக்களிடையே படிப்படியாக மழுங்கிப் போய்க் கொண்டிருக்கும், அழகியல் உணர்வுகளைத் தட்டியெழுப்புதல் மற்றும் பொதுவான கலாசார ரீதியான மனிதனைக் கட்டியெழுப்புவதன் மூலம் அமைதியான சகவாழ்வுடன் கூடிய புதிய இலங்கையரை உருவாக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி போன்றவற்றின் ஊடாக 'மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்' என்ற மாபெரும் விருட்சத்தின் அடையாளம் இலங்கையின் வரலாற்றில் பொறிக்கப்பட்டு விட்டது.

இங்கு குறிப்பிட்ட ஒட்டுமொத்த செயற்பாடுகளுக்குமாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பல பிரிவுகளினூடாக நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தியது. மக்கள் பங்கேற்பு நிகழ்ச்சிகள், சாம விமர்ஷி - சமாதான நோக்கு ஆகிய சஞ்சிகைகளின் ஊடாகக் கட்டியெழுப்பப்பட்ட சமூக மாற்றத்திற்கான சிவில் அரசியற் கலந்துரையாடல், அரசியலமைப்புச் சீர்திருத்தங்களில் மேற்கொள்ளப்பட்ட இடையீடுகள், தகவல் அறியும் உரிமையைச் சட்டமாக மாற்றுவதில் பங்களிப்பு என்பன அவற்றிடையே மிக முக்கியமானவை.

வன்முறைகளற்ற நியாயமான தேர்தலொன்றை நடத்துதல், வாக்காளர்கள் தமது வாக்கினைப் பயன்படுத்துதல் மற்றும் வகைபொறுப்பை உறுதிப்படுத்துவதற்காக கண்காணிப்புச் செயற்பாட்டில் பங்கேற்கச் செய்தல், சனநாயக ரீதியான பங்கேற்பை வலுப்படுத்தல் தேர்தற் சீர்திருத்தச் செயற்பாட்டில் இடையீடு செய்தல் ஆகிய அணுகுமுறைகளின் மூலம் உள்ளூராட்சியில் பெண்கள் மற்றும் இளைஞர்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தையும் தீர்மானங்கள் எடுக்கும் உரிமையையும் மேலும் உறுதியாகப் பேணிச் செல்ல இயன்றுள்ளது.

இக் கடினமான பயணத்தில் வடக்கு மாகாணத்தின் முதலாவது உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெற்ற காலத்தில் மறக்க முடியாத பல நினைவுகள் எம்மிடமுள்ளன. இவ்வுள்ளூ ராட்சித் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து புதிய உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கான ஒழுங்குபடுத்தப்பட்ட விதிமுறைகளும் உத்திகளும் ஊடாக, உள்ளூ ராட்சிச் சட்டமானது, சபையில் அமரும் செயற்பாட்டிலிருந்து வரவுசெலவைத் தயாரித்து மக்களுக்குப் பொறுப்புக் கூறும் மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படும் அணுகுமுறையை அறிமுகப்படுத்தியதுடன், பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்களில், அது உறுதியாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேச சபைத் தவிசாளர்களிடையே மிக இளவயதுத் தவிசாளர் பருத்தித்துறை பிரதேச சபையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், அவர் அரசியல் ரீதியான எந்தவொரு புரிந்துணர்வையும் பெற்றிராத இளைஞராவார். உறுப்பினர்களின் ஆற்றலை அதிகரித்ததன் பெறுபேறாக தனது நான்கு வருட பதவிக்கால நிறைவுக்கு முன்னரே, இத் தவிசாளர், வடக்கு மாகாணத்தின் புகழ்பெற்ற உள்ளூராட்சிப் பிரதானியாக மாறியமை சிறப்பம்சமாகும்.  அவ்வாறே வடக்கு தெற்கு உள்ளூராட்சி நிறுவனங்கள் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதும் இரு பகுதிகளினது உள்ளூராட்சி நிறுவனங்களில் பல மாற்றங்களை ஏற்படுத்த ஏதுவாயின. நாட்டின் பல்வேறு உள்ளூ ராட்சி நிறுவனங்களிடமும் உள்ள அதிகாரத்தின் ஊடாக மக்கள் நலனுக்காக சட்டவாக்கம் தொடர்பில் உள்ளூராட்சி உறுப்பினர்களையும் உத்தியோகத்தர்களையும் பயிற்றுவித்தமை முக்கிய விடயமாகும்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை சமூகமயப்படுத்தி, அதனூடாக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலும், நிலைமாறுகால நீதியை நிறைவேற்றுவதிலும் சவாலுக்கு மத்தியில் ஒத்துழைப்பு வழங்க முடிந்தமை தொடர்பில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

எனினும் பணிப்பொறுப்பு முடிந்து விடவில்லை. மக்களது சிந்தனைகளை மாற்றத்திற்கு உள்ளாக்கத் தேவையான தலைமைத்துவத்தையும் பங்களிப்பையும் வழங்கக் கூடியும் வழங்க வேண்டியும் உள்ளது. மனிதனுக்கு கற்பிக்க முடியாது. ஆனால் சிந்திக்கத் தூண்டலாம்.

தொடர்ச்சியான பிரசைகள் செயற்பாட்டில், சாதகமான ஆட்சியொன்றுக்காகக் குரலெழுப்பும் ஊவா சக்தி மன்றத்தின் நண்பர்களின் இதயபூர்வமான வாழ்த்துக்கள்!

---

**ஊவா சக்தி நிறுவனம்**

ஊவா மாகாணத்தை மையமாகக் கொண்ட சிவில் சமூக அமைப்பாகும். இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கும், அபிவிருத்திக்கான சமவாய்ப்பை வென்றெடுப்பதற்கும் செயற்பட்டு வருகிறது.  பாடசாலைகளுக்கிடையே மாணவ-மாணவியர் பரிமாற்றம், உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள், மொழி உரிமைக்கான நிகழ்ச்சித் திட்டங்கள், பிரஜைகள் சபைகள், தகவல் அறியும் உரிமைக்கான நிகழ்ச்சித் திட்டங்கள், தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள், பெருந்தோட்ட மக்களுக்கு முகவரிகளை வழங்குதல் மற்றும் “தேயிலைச் சாயம்” புகைப்படக் கண்காட்சிக்கான பங்களிப்பைச் செய்துள்ளது.

# மாற்றுக் கொள்கைகளுக்காகத் துணிவுடன் கருமமாற்றுதல்



ஷெரீன் அப்துல் சரூர்

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் (CPA) தனது 25 ஆவது ஆண்டுநிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில், இந்த வாழ்த்துக்குறிப்பை எழுதுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். CPA அமைப்புடனான எனது முதல் ஊடகச்செயற்பாடு காலஞ்சென்ற கேதீஷ் லோகநாதன் மூலமாக ஏற்பட்டதாகும். அது நாம் நல்லாட்சிக்கு தமிழில் மிகவும் பொருத்தமான ஒரு சொல்லைத் தேடிக்கொண்டிருந்த தருணமாகும். அன்றிலிருந்து நான் மிகுந்த மதிப்புணர்வுடன் ஆட்சி சம்பந்தமாக மிகவும் இன்றியமையாதவகையில் ஒலிக்கும் குரலாக CPA யின் கணிசமான வளர்ச்சியை அவதானித்து வந்துள்ளேன்.

கடந்த 25 வருடகாலமாக CPA பாரதூரமான சவால்களுக்கும், தனிப்பட்ட இடர்வரவுகளுக்கும் முகங்கொடுத்து, இடம்பெயர்ந்தோர், காணாமல்போனோர் போராட்டங்கள், மனித உரிமை மீறல்கள், தண்டனைப் பயமின்மைக் கலாசாரம், வகைப்பொறுப்புக் கூறுவதை உறுதிசெய்தல், சட்டத்தின் ஆட்சி, அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்து அரசியலமைப்பை மதித்துப்போற்றுதல் மற்றும் மாற்றுக்கொள்கைகளை முன்னெடுத்தல் போன்ற விடயங்களில் தைரியமாகச் செயலாற்றியுள்ளது. பாரபட்ச நடைமுறைகளுக்கெதிராக நேரடியான சட்டச்சவால்களை ஏற்படுத்துவதனூடாகவும், துஷ்பிரயோகங்களை ஆவணப்படுத்தி, அறிக்கைகளை வெளியிடுவதனூடாகவும், கருத்தொருமைகொண்ட சிவில் சமூகத்தையும், செயற்பாட்டாளர்களையும் அணிதிரட்டுவதனூடாகவும் மற்றும் உள்நாட்டு மற்றும் சர்வதேச பரப்புரையை வினைத்திறனுடன் மேற்கொள்வதனூடாகவும் அது இவற்றைச் சாதித்துள்ளது.

CPA நடைமுறைச் சவால்களுக்கெதிராக வீரியத்துடன் எழுந்துநின்று துடிப்பான சிவில் சமூக செயற்பாடுகளின் நோக்கெல்லையை விரிவுபடுத்தி, பிரஜைகளின் இலத்திரனியல் சஞ்சிகை, மாற்றுப் பிரஜைகளின் ஊடகங்கள், தேர்தல் கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வுகளை மேற்கொள்வதற்கான

கைக்கருவிகள் என்பவற்றைத் தாபித்துள்ளது. 2007 ஆம் ஆண்டில் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் தற்போதைய ஜனாதிபதி கேட்டாபய ராஜபக்ஷ கொழும்பு மாநகரத்துக்கு வருகைதரும் மற்றும் நிரந்தரமாக வதிவோரல்லாத சகல தமிழ்மக்களையும் வெளியேற்றுவதற்கு மேற்கொண்ட வெறுப்பூட்டும் நிகழ்வை நிறுத்துவதற்கு CPA தைரியமாகவும், வெற்றிகரமாகவும் செயலாற்றியது. இது எனது நினைவில் ஒரு தனிப்பெரும் துணிச்சல்மிக்க சாதனையாகப் பதிந்துள்ளது. இவ்வாறு இலங்கையின் ஐக்கியத்தைப் பாதுகாக்கும் வகையில் இடம்பெற்ற இந்த விடயம்குறித்து முழுத்தேசமும் நன்றி பாராட்டுதல்வேண்டும்.

2009 இல் யுத்தம் முடிவடைந்தபோதிலும், பல்லாயிரக்கணக்கான மக்கள் காணாமல்போயுள்ளனர். யுத்தத்தினால் பாதிப்புற்ற ஜனசமூகங்கள் உண்மையைத் தேடவும், நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ளவும், நீதியை நிலைநாட்டவும் மேற்கொள்ளும் பிரயத்தனங்கள் ஒடுக்கப்படுகின்றன. மரணங்களுக்காகத் துக்கம் அனுஷ்டிக்கும் உரிமையும் மறுக்கப்படுகின்றது. இத்தகைய சூழலில் வகைப்பொறுப்புக்கூறுவதனூடாகவும், அர்த்தமுள்ள நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதனூடாகவும் கடந்தகாலத்தவறுகளுக்குத் தீர்வுகாணுமாறு அரசுக்கு அழுத்தம் பிரயோகிப்பதில் CPA நிலைமாற்றமின்றி முன்னணியில் நிற்கின்றது.

முக்கியமான அபிப்பிராயம் உருவாக்குவோராகவும், அரசியலமைப்புச் சட்டவல்லுநர்களாகவும், சட்டப் பகுப்பாய்வாளர்களாகவும், சிருஷ்டிகரமான விமர்சகர்களாகவும் சமூக முன்னணிச் செயற்பாட்டாளர்களாகவும் மற்றும் முக்கியமாக, சமகாலச்சமூகத்தில் திடசித்தம் படைத்தோராகவும், ஏனையோர் தேடிச்செல்லும் நபர்களாகவும் பரிணமித்துள்ள இளைஞர், யுவதிகளை வலுவூட்டும் ஒரு சூழலைப் பெற்றுக்கொண்டமைக்கு கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவுக்கும், CPA அமைப்புக்குமே நன்றிபாராட்டுதல் வேண்டும்.

ஆட்சியிலிருந்த எந்த அரசாங்கமுமே CPA அமைப்பை விரும்பியது கிடையாது. தற்போதைய அரசாங்கமும் இந்த அமைப்பின் பாதையில் தடைக்கற்களையே ஏற்படுத்துகின்றது. சிவில் சமூக அமைப்புகளின் கழுத்தைநெரிக்கும் கொடூரமான சட்டங்கள் விரைவில் இயற்றப்படவுள்ள நிலையில், ஜனநாயகம் பின்னடைவுகண்டு, சிவில் நிர்வாகம் அதிகரித்த இராணுவமயப்படுத்தலை நோக்கிச்செல்லும் நிலையில் ஏனைய சிவில் சமூக அமைப்புகளும், செயற்பாட்டாளர்களும் CPA யின் தலைமைத்துவம் ஒரு வலுவான எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுக்குமென்று நம்புகின்றனர். கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவின் ஆற்றல்மிக்க தலைமைத்துவத்தின்கீழ் CPA தொடர்ந்தும் எழுந்துநிற்குமென்றும், நம்பிக்கைக்குரிய கூட்டாளியாகத் தொழிற்படுமென்றும் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றேன். சிவில் சமூகமும், மனிதஉரிமைகள் பாதுகாவலர்களும், தீவிரமாகப் பாதிப்புற்ற ஜனசமூகங்களும் ஐக்கியப்படுதல் அவசியமாகும்.

CPA அமைப்புக்கு எமது நன்றிகளும், பாராட்டுக்களும் உரித்தாகட்டும்! நல்லதிர்ஷ்டம் கிட்டுவதற்கான இதயபூர்வமான நல்வாழ்த்துக்கள்!

---

**ஷெரீன் அப்துல் சரூர்**

சமாதானம் மற்றும் பெண்களின் உரிமைகள் தொடர்பான செயற்பாட்டாளர். மன்னார் பெண்கள் அபிவிருத்தி சம்மேளனத்தின் நிறுவுனர்.

# LGBTIQ சமூகத்தின் சார்பில் தோற்றுதல்

EQUAL GROUND

## EQUAL GROUND

EQUAL GROUND இன் முக்கிய குறிக்கோள், இலங்கையில் வாழும் வளர்ந்தவர்களுக்கிடையேயான (வயது வந்தவர்களுக்கிடையிலான) தன்பாலீர்ப்பின பாலியல் உறவுகளை குற்றமற்றதாக்குவதும் இலங்கையின் தண்டனைச் சட்டக்கோவையின் 365 மற்றும் 365அ பிரிவுகளை ரத்து செய்வதாகும். LGBTIQ சமூகத்திற்கான சம உரிமைகளை பெற்றுக் குற்றவியல் ஒழிப்புக்கான எங்கள் போராட்டத்தில், எமக்கு ஆதரவான கூட்டாளிகளின் வலையமைப்பைக் கொண்டிருப்பது மிக முக்கியமானதாகும். இது சம்பந்தமாக, 2004 ஆம் ஆண்டில் EQUAL GROUND ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து எமது அமைப்பிற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் /Centre for Policy Alternatives (CPA) ஆதரவு வழங்கியும் வலிமையின் நிலையான ஆதாரமாகவும் இருந்து வருகிறது.

கடந்த 25 வருடங்களாக இலங்கையில் இயங்கி வரும் ஒரு சிவில் சமூக அமைப்பாக, இது இலங்கையில் உள்ள LGBTIQ சமூகம் உட்பட ஓரங்கட்டப்பட்ட குழுக்களின் பாகுபாட்டிற்கு எதிராக தொடர்ந்து ஒரு வலுவான குரல் கொடுக்கின்ற அமைப்பாக இருந்து வருகிறது. CPA ஆனது நல்லாட்சி, ஜனநாயகம், சமாதானத்தை உருவாக்குதல் மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு ஆகியவற்றின் பெறுமானங்கள் மீது கட்டமைக்கப்பட்டுள்ளதுடன் இவை அனைத்தும் அதன் செயல்பாட்டு வடிவம் முழுவதிலும் எடுத்துக்காட்டுகின்றன. CPA நிறைவேற்றுப்பணிப்பாளர், கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து மற்றும் அவரது குழுவினர EQUAL GROUND இன் நிகழ்வுகள் மற்றும் கலந்துரையாடல்களில் மும்முரமாகப் பங்கேற்று, எங்கள் அமைப்பின் திறனை வலுப்படுத்தவும் உதவவும் ஆக்கபூர்வமாக பங்களித்துள்ளனர்.

CPA இன் நோக்கங்களில் ஒன்று, இலங்கை அரசு, பாராளுமன்றம், பிற கொள்கை வகுக்கும் அமைப்புகள் மற்றும் நிறுவனங்களுக்கு ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சமூக நீதியை வலுப்படுத்தி, பாதுகாக்கும் நோக்கில் ஆக்கபூர்வமான கொள்கை மாற்றங்களை முன்மொழிவதாகும். இந்த நோக்கத்திற்காக, ஆக்கபூர்வமான கொள்கை மாற்றங்களுக்காக வாதிடுவது, முடிவெடுப்பவர்களின் பரப்புரை மற்றும் பொதுக் கருத்தை வடிவமைப்பதில் இந்நிலையத்தின் முயற்சிகள் அனைத்தும் பாராட்டத்தக்கவை. இந்த விஷயத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளில் ஒன்று என்னவென்றால், CPA சமர்ப்பித்த ஐக்கிய நாடுகள் சபையின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச கட்டுறுத்தலுக்கு / United Nations International Covenant on Civil and Political Rights, UN-CCPR, அதன் பரிந்துரைகளில் ஒன்றாக இலங்கையில் வாழும் LGBTIQ சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதை உறுதி செய்யத் தேவையான சட்டச் சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டியுள்ளது.

மேலும், CPA இன் ஆராய்ச்சியும் பொதுக் கொள்கை துணைவலுகொடுத்தலும், EQUAL GROUND உட்பட, மற்ற சிவில் சமூகம் அமைப்புகளுக்கும் மனித உரிமைகள் அமைப்புகளின் முயற்சிகளுக்கும் மேலும் உதவியது. அத்துடன் பொதுக் கொள்கை பற்றிய அவர்களின் தொடர்ச்சியான ஆய்வு மற்றும் பல்வேறு தலைப்புகளில் ஆராய்ச்சியைப் பரப்புதல், இதே போன்ற துறைகளில் பணிபுரியும் மற்ற நிறுவனங்களுக்கு தங்கள் முயற்சிகளை உருவாக்கி விரிவாக்குவதற்கு அடித்தளமிட்டது.

இதில் மிக முக்கியமானது என்னவென்றால், CPA ஆனது அரசியல்வாதிகள், உள்ளூர் மற்றும் சர்வதேச அரசு சாரா நிறுவனங்கள், பலதரப்பு அமைப்புகள் போன்ற பிற பங்குதாரர்களுடன், பொது விஷயங்களில் பயனுள்ள மற்றும் சரியான நேரத்தில் கொள்கை மற்றும் சமூக நீதி உரையாடல்களில் ஈடுபடுவதற்கு முன்னணியில் உள்ளது. EQUAL GROUND பல சந்தர்ப்பங்களில் இந்த விவாதங்களின் ஒரு பகுதியாக இருந்திருக்கிறது, மேலும் எங்கள் கருத்துக்களையும் பரிந்துரைகளையும் எப்போதும் மிக உயர்ந்த கவனத்துடனும் மரியாதையுடனும் ஏற்றுக்கொள்வது குறிப்பிடத்தக்கது. CPA மனித உரிமைகள் மற்றும் சமூக நீதியின் பரந்த எல்லைக்குள் LGBTIQ உரிமைகளை ஒருபோதும் ஒதுக்கி வைக்கவில்லை என்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ஆரம்பத்தில் இருந்தே, இந்த நிலையம் தனது வேலை வரம்பில் இருந்து எந்தவித ஓரங்கட்டப்பட்ட குழுவையும் விட்டுவிடாமல், முக்கியத்துவத்தை அங்கீகரித்ததுடன், இலங்கையில் உள்ள LGBTIQ சமூகத்திற்கான சமத்துவத்திற்கும் உரிமைகளுக்கும் எப்போதும் துணைவலுகொடுத்தல் முயற்சிகளின் அதே ஆர்வத்தை வலியுறுத்தியது.

சமத்துவத்தையும் சமூக நீதியையும் தனித்திருந்து அடைய முடியாது. பல வருடங்களாக CPA வுடன் கூட்டணி அமைத்ததில் EQUAL GROUND பெருமிதம் கொள்கிறது. மேலும் எதிர்காலத்தில் அனைத்து முயற்சிகளும் வெற்றியடைய இந்நிலையத்துக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், அதேவேளை எதிர்வரும் நாட்களில் தொடர்ந்தும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறோம்.

---

EQUAL GROUND

என்பது, இலாபத்தை நோக்கமாகக் கொண்டிராத அமைப்பாகும். இலங்கையின் Lesbian, Gay,Bisexual, Transgender, Intersex and Questioning/Queer (LGBTIQ) சமூகத்தின் பொருளாதார, சமூக கலாசார, சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்காக இவ்வமைப்பு செயற்படுகிறது. இது 2004ல் உருவாக்கப்பட்டது. எமது நாட்டில் மேற்படி நோக்கங்களுக்காகச் செயற்படும் அமைப்புகளில், இதுவே பழமையானது. LGBTIQ சமூகத்தைச் சார்ந்த ஆட்களின் மன நலம், பொருளாதார, சமூக, அரசியல் வலுவூட்டல், சுகாதாரம் கல்வி, வீட்டு வசதிகள் என்பவற்றிற்கு உள்ள உரிமையையும், சட்டரீதியான பாதுகாப்பை வென்றெடுப்பதற்கும் இவ்வமைப்பு இயங்கி வருகிறது.

# "தொலைநோக்கிற்கு அப்பாற் செல்லும் புலமைத்துவம்"



**ஒஸ்ரின் பிரனாந்து**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடனான எனது தொடர்பு அமைப்பின் துவக்கத்திலிருந்து தொடர்கிறது. கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவுடன் நான் வளர்த்துக் கொண்ட தனிப்பட்ட தொடர்பு காரணமாகவே அது ஆரம்பமாகியது. நான் அதனை நினைவு கூருகின்ற போது அவ்வாறான ஒரு தொடர்பின் வளர்ச்சிக்கு ஏனைய ஒரு பின்னணியும் இருந்ததனை ஏற்றுக் கொள்ள வேண்டி உள்ளது. எண்பதுகளின் நடுப் பகுதியில் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளராக விசேடமாக வடக்கு கிழக்கு மாகாணங்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான எனது தொடர்பு மூலம், அரசியலமைப்பினை தயாரித்தல், புனர்வாழ்வு, ஆளுகை, சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், மனித உரிமைகள் போன்ற நோக்கங்களின் ஊடாக செயற்பட்டு வந்த செல்வி ராதிகா குமாரசுவாமி, கலாநிதி ஜயதேவ உயன்கொட, கலாநிதி ரொஹான் எதிரிசிங்க போன்றவர்களுடன் எனக்கு தொடர்பு ஏற்பட்டது. அவர்கள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தை தாபிப்பதற்கு முன்னோடியாக செயற்பட்ட நபர்கள் ஆவார்கள். அவர்களது தொடர்பு மற்றும் அவர்களுடன் பணியாற்றுவதன் மூலம் ஒன்றுசேர்ந்த அறிவு என்னிடம் ஒரு மறுமலர்ச்சியினை ஏற்படுத்தியதுடன் அது எனது இரசனையின் ஆரம்பம், அறிவு விரிவாக்கம் மற்றும் மனப்பாங்கு விருத்திக்கு காரணமாக அமைந்தது.

அவ்வாறான நன்மைகளை நான் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மூலம் அடைந்து கொண்டேன். மிகவும் பரந்த உணர்வுடன் நான் அதற்குரிய பெறுமானத்தை வழங்குகின்றேன். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எமது சமூகத்துக்கு ஆற்றிய சேவையினை ஒருவர் மதிப்பீடு செய்யும் அளவுக்கு ஏற்பவே அது அவ்வாறு அமைகிறது. "மனித உரிமைகளுக்குப் பாரியளவில் முன்னுரிமை வழங்கி ஜனநாயக ஆட்சி மற்றும் சமாதானம் தொடர்பான துறைகளின் ஆய்வுகள் மற்றும் ஆதரித்து வாதாடும் செயற்பாடுகள் மூலம் அரச கொள்கை தயாரிப்புக்குரிய சிவில் சமூகத்தின் பங்களிப்பினைப் பலப்படுத்தல்" என்பதாகவே மாற்றுக் கொள்கைகளுக்கான

நிலையம் தனது தொலைநோக்கினை புரிந்து கொள்கிறது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் நிறைவேற்றப்பட்ட கடமைப் பொறுப்புக்கள், சமூக, அரசியல், சட்ட ரீதியான உரிமைகள், அரச நிர்வாகத்துக்கான தேவைப்பாடுகள் போன்ற துறைகளுக்காக வழங்கப்பட்ட பாரியளவிலான சேவைகள் ஆகியவற்றைப் பரீட்சிக்கின்ற போது விசேடமாக மக்கள் நேய சட்ட நடவடிக்கைகள் மற்றும் அரச நிறுவனங்களைக் கட்டியெழுப்புவதற்கான பங்களிப்பின் போது அது உயிரோட்டமானதாக அமையும். இத் துறையில் ஏனைய அனைத்து அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு அப்பால் அது சிறப்பாக உள்ளதென நான் நம்புகிறேன். ஏற்கனவே பதவியில் இருந்த அரசாங்கங்களின் சட்டம் இயற்றும் பணிகள் தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆரம்பித்த அல்லது தொடர்புபட்ட வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் அரச நிர்வாக மற்றும் உரிமைகள் துறையில் மேற்கொண்டுள்ள வெளியீடுகள், மேற் குறிப்பிடப்பட்ட கூற்றினை உறுதி செய்வதற்கான சான்றுகளாக உள்ளன.

சிவில் சமூகத்தின் ஒரு பங்களிப்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இதனை ஆரம்பித்த போதும் சில சமயங்களில் தாபிக்கப்பட்ட நிறுவனங்களை சவாலுக்கு உட்படுத்துதலாகவே அவற்றுக்கு பிழையான பொருள்கோடல் கொள்ளப்பட்டது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனது தொலைநோக்கின் வெளியீட்டுக்கு அப்பால் சென்றுள்ளதா என ஒருவருக்கு வினா எழுப்ப முடியும். “ஆம், நாட்டின் நன்மைக்காக அவ்வாறு செய்யப்பட்டது” என நான் பதில் கூறுவேன். அது கட்டியெழுப்பப்பட்ட சூழ்நிலையில் தலைமைத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்கான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வெற்றி, எனது பதிலுக்கான காரணத்தை முன்வைத்தல் மற்றும் விளக்கமளித்தல் ஆகியவற்றில் பொதிந்துள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது தாபிக்கப்பட்ட ஒரு புலமைச் சபை ஆகும். அது எந்தவொரு இனத்தவருக்கும், அரசியல் கட்சிக்கும் மதக் குழுவுக்கும் அல்லது அவ்வாறான ஏனைய எவருக்கும் சார்பாக, உறவினை ஏற்படுத்திக் கொள்வதில்லை. கொள்கை தயாரிப்பாளர்கள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு வழிகாட்டுவதற்காக புலமைச் சபை மூலம் சமூகக் கொள்கைகள், அரசியல் மூலோபாயம் போன்ற தலைப்புக்கள் தொடர்பாக சுயாதீன ஆராய்ச்சிகள் மற்றும் ஆதரித்து வாதாடுதல் மூலம் அவ்வாறான செயற்பாடுகள் ஊடாக பெறப்படும் முடிவுகள் வெளியிடப்பட வேண்டும். அரச அல்லது தனிப்பட்ட அல்லது ஏனைய எந்தவொரு நிறுவனத்தினதும் செயற்பாடுகள் அல்லது மக்களது வாழ்வில் செல்வாக்குச் செலுத்தும் செயற்பாடுகள் பற்றி அவர்கள் கலந்துரையாடுதல் வேண்டும்.

அரச, தனியார் துறை, இராணுவம் மற்றும் சிவில் சமூகத்தின் ஊடாக அனுபவத்தைப் பெற்ற நபர்கள், கொள்கை, சட்டம், அரசியல், சமூகப் பிரச்சினை போன்றவை தொடர்பாக செயற்படும் இந்தியா இதற்கு சிறந்ததொரு முன்மாதிரி ஆகும். அவர்கள் மிகவும் தீவிரமாக நேர்மையாக செயற்படுவதுடன் சவால்களுக்கு அஞ்சுவதில்லை. கூட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகளை நடாத்துதல், அறிக்கைகள், ஆய்வுகளை வெளியிடுதல், அரச மற்றும் தனியார் அமைப்புக்களை விமர்சித்தல் மற்றும் இராணுவ நடவடிக்கைகளை மீளாய்வு செய்தலையும் அவர்கள் மேற்கொள்கின்றார்கள். சீனாவுடன் அரசியல் எதிரி நிலைமை காணப்பட்ட போதும் அங்கீகாரத்துடன் கூடிய புலமைச் சபை ஊடாக இந்திய புத்தி ஜீவிகளுடனான இடைச் செயற்பாட்டுக்கு சீனாவின் புத்தி ஜீவிகளுக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது பற்றி குறிப்பிடுவது கவர்ச்சிகரமான ஒன்றாக உள்ளது. இது இலங்கையும் வளர்த்தெடுக்க வேண்டிய ஒரு பாடமாக அமையக் கூடும் என்பதுடன இந்தியாவின் நிலைமைக்கு நெருங்குவதற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் தனது பணிகளை விரிவாக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

கொள்கை மீளாய்வு மற்றும் அரச நிர்வாகத்தின் போது அரச பொறுப்புக் கூறலுக்கு பங்களிப்புச் செய்வதற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது சட்டங்களை வகுத்தல், கொள்கை வகுத்தல், தாபன கட்டமைப்பு முகாமைத்துவம் போன்றவை தொடர்பாக விழிப்புடன் செயற்படல் வேண்டும். ஒருபுறமாக சமூகப் புரிந்துணர்வைக் கட்டியெழுப்புவதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் நீதிமன்றம் மூலமான தலையீட்டினைப் பெற்றுக் கொள்வதற்குப் பொருத்தமானவாறு நீதிமன்றங்களுக்கு பிரச்சினைகளை சமர்ப்பித்தல் வேண்டும். இதற்காக அறிவு சார்ந்த மற்றும் பிரயோக ரீதியாக அதே இடத்தில் மேற்கொள்ளப்படும் ஆழமான கற்கை மற்றும் ஆராய்ச்சிகள் அவசியம் ஆகும். விசேட நிபுணர்களை ஈடுபடுத்தி அவ்வாறான ஆராய்ச்சிகளை நடைமுறைப்படுத்தும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பகுப்பாய்வு செய்யப்பட்ட முடிவுகளை பின்னாய்வு செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்துகிறது. அதன் தலையீடுகள் காரணங்களுடனான சமர்ப்பணங்களாக அமைதல் இங்கு உறுதி செய்யப்படுகிறது. அவ்வாறான சமர்ப்பணங்கள்

அசௌகரியங்களை ஏற்படுத்துகின்ற போது விசேடமாக அரசாங்கத்தின் நிலைக்கு சவால் விடுக்கும் சந்தர்ப்பங்களில் அதன் மூலம் மகிழ்ச்சிகரமான ஒரு சூழல் கட்டியெழுப்பப்படுவதில்லை. அதன் மூலம் சட்டங்களை வகுக்கும் மற்றும் நிர்வாக நிறுவனங்களுடன் மோதல்களை ஏற்படுத்தும். ஆகவே சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு பலம் வாய்ந்த நம்பகத் தன்மையுடைய ஓர் உணர்வு அவசியமாக உள்ளது.

மொத்தத்தில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பாரியளவில் பாராட்டுக்கும் கௌரவத்துக்கும் ஆளாகியுள்ள நிலையில் ஜனநாயகம், பன்மைத்துவவாதம், சட்டத்தின் ஆட்சி, மானுட மற்றும் மனிதாபிமான பாதுகாப்பு ஆகியவற்றைப் பேணுவதற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் தலையீடு சிலவேளை விமர்சனத்துக்கும் கண்டனத்துக்கும் ஆளாகிறது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் முன்னணிகள் பலவற்றின் போது ஜனநாயகம் மற்றும் ஜனநாயக பெறுமானங்களைப் பாதுகாத்தது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் மிகவும் விரிவான முறையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்ற 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பான பிரச்சினையை என்னால் சுட்டிக் காட்ட முடியும். அதிகாரப் பகிர்வு தொடர்பாக விசேடமாக வெளியீடுகள் மற்றும் ஆவணங்கள் தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பங்களிப்புக்கு அரசாங்கத்தின் பங்களிப்பினை தோல்வியடையச் செய்ய முடியும். சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், மனித உரிமைகள் போன்றவைகளில் கூட மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பல வெளியீடுகளை எம்மால் உதாரணமாக எடுத்துக் கூற முடியும்.

ஜனநாயகத்தை உறுதி செய்வதற்கான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் மற்றுமொரு அங்கமாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையத்தைக் கட்டியெழுப்புதல் பிரதிபலிக்கின்றது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் அரசியல் வன்முறைச் செயற்பாடுகளுக்கு எதிரான கூட்டமைப்பு ஆகியன இணைந்து 1997 ல் அது தேர்தல்கள் தொடர்பான வன்முறைச் செயற்பாடுகளைக் கண்காணிக்கும் சுயாதீனமான மற்றும் பக்கச்சார்பற்ற ஓர் அமைப்பாக தாபிக்கப்பட்டதுடன் தேர்தல் ஆணைக்குழு மற்றும் ஏற்புடைய ஏனைய அமைப்புக்களுடன் இணைந்து அது பயனுள்ள ஒரு சேவையினை நிறைவேற்றியது. அதன் ஊடாக ஆற்றிய சேவை ஜனநாயகத்துக்கான ஓர் ஊக்கியாக நான் கருதுகின்றேன். அவ்வாறே தகவல் சேகரிக்கும் எந்தவொரு முக்கியமான வெளிநாட்டு அமைப்பும் (ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற) மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திடம் ஆலோசனை பெறுவதிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு இடமளிக்காமைக்கான காரணம் யாதெனில், உரிமைகள் தொடர்பில் பங்களிப்புச் செய்வதற்கான அதன் ஆற்றல் பற்றி அறிந்து வைத்துள்ளமையினால் ஆகும். இங்கு எதிர்கால இருப்பினையும் உறுதி செய்கின்ற விதமாகவே மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் இளைஞர் அணி வடிவமைக்கப்பட்டுள்ளதனை என்னால் அவதானிக்க முடிந்தது.

பிரதானமான ஒரு சிவில் சமூக அமைப்பாக இருபத்தைந்து ஆண்டு காலம் நிலைத்திருத்தல் மூலம் அதன் இருப்பு சமூகத்துக்கு மற்றும் சர்வதேசமும் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு நிலைமைக்கு மாற்றம் பெற்றுள்ளமை பாரிய ஒரு வெற்றியாக கருதப்படுகிறது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனது ஐம்பதாம் ஆண்டு நிறைவை அனுஷ்டிப்பதனை எம்மில் பலருக்கு காணக் கிடைக்காது போகக் கூடும் என்றாலும் அது செயற்படும் விதத்துக்கு அமைய பலம் வாய்ந்த ஓர் எதிர்காலம் பற்றி எம்மால் எதிர்வுகூறக் கூடியதாய் உள்ளது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திற்கு எனது மேலான நல்லாசிகள்!

---

**ஒஸ்ரின் பிரனாந்து**

முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர். கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர். ஓர் அரச உத்தியோகத்தராக பாதுகாப்புச் செயலாளர் பதவி உள்ளிட்ட பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். இந்திய உயஸ்தானிகராகவும் பதவி வகித்துள்ளார்.

# தாராளவாதத்திற்கு எதிரான அடிப்படைக்குச் செல்வதைத் தவிர மாற்று வழியில்லை!



**பேராசிரியர்**
**சரித்த ஹேரத்**

எனக்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் நேரடியான தொடர்பு இருக்கவில்லை. அதாவது அவர்களுடைய நிறுவனத்தின் பணிகளோடு தொடர்பேதும் இல்லை. கடந்த காலத்தில் அவர்களுடைய பணிகளோடு தொடர்புபட்டதாக எனக்கு ஞாபகத்தில் இல்லை. ஆனால் அதனோடு தொடர்புடையவர்களுடன், அடிக்கடி அரசியல் உரையாடல் இருந்தது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இருபத்தைந்து வருடப் பூர்த்தியைக் கொண்டாடுவதன் நிமித்தம், நான் உள்ளேயிருந்து பார்க்கின்ற ஒரு நபராக அல்லாமல் வெளியிலிருந்து பார்க்கின்ற ஒரு நபரின் (Outsiders Approach) பார்வைக் கோணத்திலேயே கருத்துகளைத் தெரிவிக்கின்றேன்.

இலங்கையில் 1977ல் ஆரம்பமான அரசியல் இயக்கங்கள் தோல்வியுற்று, பிரதான அலையின் அரசியலில் புதிய அரசியல் வாய்ப்புகளுக்கு 1994ல் வழிகிடைத்தது. சனநாயக ரீதியான வாய்ப்பை உருவாக்கிய திருப்புமுனையாக 1994ன் பொதுத் தேர்தலைக் கருத முடியும். அவ் வாய்ப்பானது எமது சமூகத்தின் பல கோணங்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. திறந்த சந்தை முறையின் கீழ் உருவான பொருளாதாரம் ஓரளவிற்கு மீண்டு அரசுடன் இணைக்கப்பட வேண்டும் என்ற எண்ணக்கரு மேலெழுந்தமை பிரதானமான காரணமாக இருந்தது. எண்ணக்கரு ரீதியாக 77 - 94 வரையில் காணப்பட்ட சந்தையை முதன்மையாகக் கொண்ட தாராளமய எண்ணக்கருவிலிருந்து சமூகம் சனநாயகத்தை நோக்கிச் சாய்ந்ததாக இதனைக் கருத முடியும்.

முற்றாக சந்தையை முதன்மையாகக் கொண்ட, அரசு மிகச் சிறிதாகக் குறுகியிருந்த முறையே 77 - 94 வரையிலுமே காணப்பட்டது. தொன்னூற்று நான்கில் இடம்பெற்ற அரசியல் வெற்றியில் அதற்கு எதிரான கருத்தொன்று காணப்பட்டது. அதாவது, அரசாங்கத்தின் தலையீடு சந்தையோடு சமமாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற எண்ணக்கரு. 77 முதல் 94 வரை இருந்த அரசாட்சியில் காணப்பட்ட பாரிய சனநாயகச் சீர்கேட்டுக்கு எதிராக அமைந்தமை, இரண்டாவது முக்கிய விடயமாகும். அதுவரையிருந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் பாரிய சனநாயகச் சீர்கேடு காணப்பட்டது. புதிய அரசியலமைப்பொன்றைக் கொண்டு வருதல், அதனூடாக நிறைவேற்று ஜனாதிபதி முறையை உருவாக்குதல், நீதிமன்றத்தை முற்றாகக் கட்டுப்படுத்தல், அதன் பின்னர் 83 கறுப்பு ஜூலை

என அழைக்கப்பட்ட தமிழ் மக்கள் மீதான தாக்குதல் மற்றும் அதில் அரசாங்கத்திற்கிருந்த தொடர்பு அம்பலமாகுதல், 88 - 89 மாகாண சபை முறையை மிகப் பாரதூரமான பலவந்தத்தின் ஊடாக பாராளுமன்றத்திற்குக் கொண்டு வருதல், அதற்கு எதிராக பாரிய மக்கள் எழுச்சியொன்று 89ம் ஆண்டில் தோற்றம் பெறல் போன்ற விடயங்களை இக்காலகட்டத்தில் இடம்பெற்ற சனநாயகச் சீர்கேட்டின் நிதர்சனங்களாகச் சுட்டிக் காட்ட முடியும். இச் சனநாயகத்துக்கு விரோதமான பயன்பாடுகள் மீதான எதிர்ப்பும் 94ம் ஆண்டு வெற்றியில் இருந்தது. வேறுவிதமாகக் குறிப்பிட்டால், புதிய சனநாயகத்திற்கான வாய்ப்பு பற்றிய எதிர்பார்ப்பொன்று அதில் காணப்பட்டது. மூன்றாவதாக, குறிப்பாக இலங்கையில் தென்பகுதி இளைஞர்களின் எழுச்சியால் ஏற்படுத்தப்பட்டிருந்த அழுத்தமும் வடபகுதி அரசியல் அழுத்தமும் என்ற இரண்டுக்கும் தீர்வுகளைக் கொண்டு வர வேண்டும் என்ற கருத்தும் 94ம் ஆண்டு அரசாங்கத்தில் காணப்பட்டது.

### தாராளவாத சிந்தனைக் கூடம்

இவ்வாறானதொரு பின்னணியிலேயே மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் உருவாகின்றது. 77ல் ஆரம்பமான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் சனநாயக விரோதத் தன்மை, இனங்களுக்கிடையில் மோதல், பாரதூரமான முறையில் உருவாக்கப்பட்ட சந்தை முறையுடன் தாராளமய முறை தீவிரமாக அடிபணியச் செய்யப்படலாம் என்பதைக் கண்டு, அதனை ஓரளவுக்கு கோட்பாட்டு ரீதியில் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் கூடிய சிந்தனைக் கூடமாகவே (Think Tank) நான் அதனைப் பார்க்கின்றேன். இதிலே தொடர்புற்ற சில முதன்மையானவர்கள் அப்போது காணப்பட்ட லிபரல் கட்சியுடனும் நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தவர்கள் என்பது உண்மை. உண்மையிலேயே இதன் வேர் அதுவாகத்தான் இருந்தது. அப்போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசியலில் ஈடுபட்டிருந்தவர்களாகவும், குறிப்பாக சமூக சனநாயக மாதிரிக்குள் அரசாங்கம் செயற்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தவர்கள் என்ற வகையிலும் நாம் அவ்வாறே புரிந்து கொண்டோம்.

அதன் பின்னர் பல்வேறு பரிமாணங்களின் ஊடாக செயற்படுகின்ற, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தைப் போன்ற வேறு நிறுவனங்கள் பலவும் கொழும்பு நகரில் தோன்றின. அதில் சமூக விஞ்ஞானிகள் சங்கமும் ஒன்று. எனினும் அவையனைத்தையும் விட வலுவாக தமது தாராளமயக் கொள்கைகளுக்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் செயற்பட்டது. அது, சட்டரீதியான வலயம், கோட்பாட்டு ரீதியான வலயம் மற்றும் கொள்கை ரீதியான வலயம் (Legal domain, Theoretical domain and Procedural domain , Policy domain) ஆகிய மூன்று வலயங்களிலும் செயற்பட்டது. எனினும் சமூக ரீதியான வலயத்திற்குள் (Social domain) அதன் செயற்பாடு அவ்வளவு வலுவானதாக இருக்கவில்லை. அது குறிப்பாக வலியுறுத்தப்பட வேண்டிய விடயம். (They are working on those three domain" But not in the Social domain) அதனால் அது எப்போதும் கொழும்பை மையமாகக் கொண்டது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசியலிலிருந்து பார்க்கின்ற போது எமக்கு அது 'வேற்றூர்காரனாகவே' தோன்றியது.

சமூக வலயத்திற்குள், மனிதர்களின் அடித்தட்டுப் பிரச்சினைகளுடன் செயற்படுகின்ற ஒரு குழுவினராக அல்லாமல் தாராளமயம், சந்தை முறை, சட்டங்களும் கொள்கைகளும் போன்றவை பற்றி கலைச்சொற் பதங்களைப் (Technical vocabulary) பாவிக்கின்ற பெரும் கல்வி நோக்குடன் கூடிய நிறுவனமாகவே தோன்றியது. நிகழ்காலத்திலும் அதில் மாற்றமேதும் இல்லை. அதனைக் கோடிட்டு அடையாளப்படுத்தினால், நான் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சமூக சனநாயக வலயத்திற்குள்ளின்றி, கோட்டுக்கு அப்பால் தாராளமய, சட்டரீதியான, தொழில்நுட்ப வலயத்திற்குள்ளேயே மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், உள்ளது.

எனினும் அவர்கள் விடயங்களின் அடிப்படையில் செயற்பட்டார்களே தவிர இலங்கைச் சமூகத்தில் காணப்படுகின்ற, பாரபட்சமிக்க எதிர்ப்புகளிலிருந்து (Prejudism) விலகியிருந்தமை அவர்களிடமிருந்த சிறப்பம்சமாகும். மொழி, இனம் அல்லது சாதியை அடிப்படையாகக் கொண்ட பாரபட்சங்கள் இலங்கையில் காணப்படுகின்ற பல சிந்தனைக் கூடங்களில் தனித்துத் தெரிகின்ற அம்சங்களாகவுள்ளன. இவற்றிலிருந்து விலகிய மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், மிகத் திறமையான, அறிவுபூர்வமான இளம் சந்ததியொன்றை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்தது.

எனது வயதையொத்த சமகாலத்தவரான அசங்க வெலிக்கல, சஞ்சன ஹத்தொட்டுவ, பவானி பொன்சேக்கா, பிரதீப் பீரிஸ், போன்றவர்களை தாம் ஈடுபட்டிருந்த துறைகளில் பிரமாண்டமானவர்களாக கட்டியெழுப்புவதற்கு இந்நிறுவனம் துணை செய்தது.

CPA யின் ஆய்வுகள், நீதிமன்றத்தின் முன்னிலையில் வழக்குத் தாக்கல்கள் என்பவை அத்தியாவசியமானதுடன் பிரதீப் பீரிஸ், லயனல் குருகே போன்றவர்கள் மேற்கொண்டு வந்த, 'சோஷல் இன்டிகேட்டர்' இயக்கமும் மிகச் சிறந்த தீர்வு ரீதியான தலையீடுகளைக், குறிப்பாக தேர்தல்களின் போது மேற்கொண்டன. அவ்வாறே சிறந்த பல வெளியீடுகள் பிரசுரிக்கப்பட்டன. அதற்கேற்ப கடந்த 25 ஆண்டுக் காலத்திற்குள், இலங்கை அரசியலில் தாராளமயத்தின் கோட்பாட்டு அடிப்படைக்குப் பாரிய சேகரிப்பொன்றைச் செய்த நிறுவனமாக அதனைப் பெயரிட முடியும்.

### சனநாயகம் தொடர்பிலான எல்லை

சனநாயகம் தொடர்பில் ஆர்வம் காட்டுகின்றதும் செயற்படுகின்றதுமான நிறுவனமாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பயன்பாடு தொடர்பில் என்னிடம்

விசேடமான கண்காணிப்பொன்றுள்ளது. அது சற்று விளக்கமளிக்கப்பட வேண்டிய விடயமாகும். சனநாயகம் தொடர்பில் இரண்டு கோட்பாட்டு அணுகுமுறைகள் உள்ளன. அதாவது செயல்முறை ரீதியான சனநாயகம் (Procedural Democracy) மற்றும் கூட்டு சனநாயகம் (Associational Democracy). சனநாயகம் தொடர்பில் CPA யின் கருத்து அல்லது அணுகுமுறையானது முற்றிலும் செயல்முறை ரீதியான சனநாயகமாகும். (Procedural Democracy) இங்கு ஒரு கணக்காய்வின் போது உள்ளவாறு ஓர் உடன்பாடு (Compliance) பரிசோதிக்கப்படுகின்றது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இலங்கையில் சனநாயகம் தொடர்பில் அரசியற் கணக்காய்வொன்றைச் செய்ய (A political audit) முனைந்தது. ஆனால் சனநாயகம் பற்றிய ஏனைய பரிமாணம் அதாவது சமூக இணக்கப்பாடுகளைக் கட்டியெழுப்பும் கூட்டு சனநாயகம் அவர்களின் பார்வையில் அகப்படவில்லை. எனவே CPA, யில் சனநாயகம் அரை வேக்காட்டு (Half bake) நிலையிலேயே உள்ளது. அது செயல்முறை ரீதியான சனநாயகத்தில் வல்லவனாக இருந்தாலும் அதனால் மிகச் சொற்பமான தாக்கத்தையே கூட்டு சனநாயகத்தின் மீது ஏற்படுத்த முடியும்.

அவர்களின் தெரிவுகள் தொடர்பில் தேவைப்பட்டால் இவ்விமர்சனத்தைத் தொடர்ந்தும் நீடிக்க முடியும். 1994ல் ஐக்கிய தேசியக் கட்சி இரண்டு சந்தர்ப்பங்களில் அதிகாரத்துக்கு வந்தது. எனினும் ஸ்ரீ.ல.சு.க. அரசாங்கம் அதிகாரத்தில் இருந்த போதும், ஐ.தே.க. அரசாங்கம் அதிகாரத்தில் இருந்த போதும் CPA ல் சனநாயகம் தொடர்பான கொள்கை சமமாக இருக்கவில்லை. ஸ்ரீ.ல.சு.க. அரசாங்கம் அதிகாரத்தில் இருக்கின்ற போது அதன் செயற்பாடுகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட துரிதமான தலையீடுகளை மறுபுறத்தில் காணக் கிடைக்கவில்லை. தமது அரசியல் தர்மத்திற்குப் பொருந்துகின்ற கட்சியொன்று அதிகாரத்திற்கு வரும்போது அதற்கு ஆதரவளிப்பதில் அவர்களுக்குள்ள உரிமையை நான் எதிர்க்க மாட்டேன். என்றாலும், சனநாயகம் தொடர்பில் காட்டப்படுகின்ற விரிவான மாதிரியானது, அதன் பயன்பாட்டில் அவ்வாறு பரந்துபட்டதாக இல்லாமலிருப்பதையே நான் வலியுறுத்துகின்றேன்.

பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க தொடர்பில் எழுந்த நெருக்கடியை இது தொடர்பான சிறந்த நிதர்சனமாக வழங்கலாம். எனது புரிதலுக்கு ஏற்ப, சிராணி பண்டாரநாயக்கவை பதவியிலிருந்து விலக்கியது, அரசியலமைப்பிற்கு ஏற்ப, (தொழில்நுட்ப ரீதியாக) சரியானது எனினும், அரசியல் ரீதியாக அது சரியானது அல்ல. அவ்வாறே சிராணி பண்டாரநாயக்கவை மீண்டும் பதவியில் அமர்த்தியது அரசியல் ரீதியாகச் சரியானது அல்ல. அவ்வாறே சிராணி பண்டாரநாயக்கவை மீண்டும் பதவியில் அமர்த்தியது அரசியல் ரீதியாகச் சரியாக இருந்தாலும், தொழில்நுட்ப ரீதியாக அது தவறானது. எனினும், முதற் கட்டத்தில் பெருங் குரலெழுப்பிய மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இரண்டாம் கட்டத்தில் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

அவர்களுடைய தலையீடுகளின் விளைதிறன் மீது மேற்கொள்ளப்படும் அழுத்தம் எவ்வாறானது என்பதை, கூட்டு சனநாயகம் தொடர்பில் CPA காட்டும் அவதானம் வரையறைக்குள்ளானதை சட்டவாக்கச் செயற்பாடுகளில் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளைக் கொண்டு புரிந்து கொள்ள முடியும்.

### சட்டவாக்கச் செயற்பாடுகள்

78ம் ஆண்டு அரசியலமைப்பிற்குப் பதிலாக புதிய அரசியலமைப்பொன்றைத் தயாரித்தல் தொடர்பான கருத்து 1994ல் தீவிரமாக முன்வைக்கப்பட்டதுடன் 2000, 2001, 2004, 2010, 2015 என்ற வகையில், மீண்டும் மீண்டும் தோன்றியது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் தொடர்ந்தும் இந்த அவசியத்திற்காக முன்வந்தது. எனினும் அவர்கள் இந்த பிரச்சினைக்கு தொழில்நுட்ப ரீதியான தீர்வையே தேடினார்கள். அரசியலமைப்பு எனப்படுவது, எளிமையானதொரு ஆவணம் அல்ல. அது மிகவும் சிக்கல் வாய்ந்தது. இந்த சிக்கலான ஆவணத்தை சட்டமூலமாக்குவது தொடர்பிலேயே CPA யின் கவனம் செலுத்தப்பட்டது. அதற்காக வெளிநாட்டு நிபுணர்களை இணைத்துக் கொண்டு, அதனை வெல்ல முயன்றது. ஆனால் அம்முயற்சி கீழ்மட்டத்துடன் தொடர்புபட்டது அல்ல. பொதுமக்களின் கருத்துடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் கீழ்மட்டத்தில் அல்லது கூட்டுத் தளத்தில் தனது முயற்சியை உறுதிப்படுத்த அவர்களால் இயலவில்லை. இதுவரை 94 - 2000 வரையான கலந்துரையாடலிலிருந்து தயாரித்த சட்டமூலமும் 2015 - 2019 காலத்தில் தயாரிக்கப்பட்ட சட்டமூலமும் என இரண்டு சட்டமூலங்களாக எம்மிடம் உள்ளன. எனினும் நோக்கத்தை அடைய முடியாதுள்ளது.

அவ்வாறே அக்காலகட்டத்தில் 17, 18, 29, 20 ஆகிய பாரதூரமான நான்கு அரசியலமைப்புத் திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்நான்கு சந்தர்ப்பங்களிலும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அவற்றுக்குச் சார்பாகவோ எதிராகவோ கருத்தியல் ரீதியாகவும் வழக்குத் தொடருதல் ரீதியிலும் 17க்குச் சார்பாகவும்,18க்கு எதிராகவும், மீண்டும் 19க்குச் சார்பாகவும், 20க்கு எதிராகவும் என்ற வகையில் பாரிய அளவில் இடையீடு செய்தது. எனினும் இவ்வனைத்து இடையீடுகளும் முன்னர் குறிப்பிட்டதைப் போன்றே செயல்முறை ரீதியான சனநாயகம் சார்பிலேயே இடம்பெற்றன. கீழ்மட்டத்திற்கு அவற்றினால் இடம்பெறக்கூடிய தாக்கம் சொற்பமானது.

சமூக விடயங்கள் மீதான பார்வைக் கோணம் தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கொண்டிருக்கும் தாராளவாதக் கருத்தும், நான் கொண்டுள்ள சமூக சனநாயகக் கருத்தும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவை. உதாரணமாக, அரசியலிலிருந்து மதத்தையும், இனத்தையும் வரலாற்றையும் அகற்றிவிட்டு அதனை முற்றாகத் தரவுகள் மீதான அடிப்படையாகக் கருதுவது

தாராளவாதத்தின் முயற்சி. ஆனால் அதனைச் செய்ய முயற்சிக்கும் போது சமூக மரபுகள் யாவும் சிதைந்து போய்விடும். தாராளவாதிகளுக்கு தரவுகளைத் தவிர இம்மரபுகள் மீது நம்பிக்கை இல்லை. ஒருமுறை நான் எனது கட்டுரையொன்றில் இவ்வாறு விளக்கினேன். தாராளவாதிகள் சிந்தனைக்கு ஏற்ப, அனைத்து மனிதர்களும் ஒரே சமமானவர்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் சமமான உரிமைகள் உள்ளதுடன், அனைவரும் சட்டத்திற்கு ஏற்பவும் சமமானவர்கள். எனினும் எமது சமூகத்தில் பணியாற்றுகின்ற போது அது அந்த அளவுக்கு எளிமையானதாக இல்லை என்றே தெரிய வருகிறது. சில மக்கள் குழுவினர் ஏனைய மக்கள் குழுவினரை விடவும் அந்நிலப்பரப்பில் பழைமையானவர்கள். சில குழுக்களின் பின்பற்றல்களும் நம்பிக்கைகளும் வித்தியாசமானவை. சமூக விஞ்ஞான ரீதியாகப் பார்க்கும் போது தெரிகின்ற அச்சித்திரம், தரவுகளுக்கு ஏற்றவாறு பார்க்கும் போது தெரிவதைப் போல எளிமையானது அல்ல. உதாரணமாக, 'வடமத்திய மாகாணத்தில் காணக் கிடைக்கின்ற மரங்கள்' என்ற அறிமுகத்தில் அனைத்தின மரங்களும் உரித்தாக மாட்டாது. அதற்கேற்ப ஸ்ரீமகா போதியும் கூட வடமத்திய மாகாணத்தில் இருக்கின்ற அரச மரம்தான். ஆனால் ஒரு குறிப்பிட்ட இனத்தின் கலாசாரத்திலும் நாகரீகத்திலும் இந்த மரம் பெரிதும் தொடர்புபட்டுள்ளது. வடமத்திய மாகாணத்தில் ஸ்ரீ மகா போதிக்கு சமூக மரபில் விசேடமான இடம் உள்ளதைப் போன்றே யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் போது ஏனைய கட்டிடங்களை விட, நல்லூர் கோவிலுக்கு சமூக மரபில் தனியான மதிப்பு உள்ளது. இனங்கள் தொடர்பிலான பிரச்சினையும் அவ்வாறானதே. வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் தாம் சிங்களவர்களைக் காட்டிலும் அப்பிரதேசங்களில் தொன்மையான குடிமக்கள் என்றே சிந்திக்கின்றனர். தெற்கிலே சிங்களவர்கள், ஏனைய இனத்தினரை விட தாமே தெற்கின் வாரிசுகள் என்று சிந்திக்கின்றனர். ஆனால் அனைவரும் சமமானவர்கள் எனச் சிந்திக்கும் வெறும் தாராளவாதத் தர்க்கத்தில் இவை எதுவும் அகப்படுவதில்லை. சமூக மரபுகள் மீதான தர்க்கத்திற்குச் செல்லும் போதுதான் அவை தென்படுகின்றன. என்னுடைய புரிதலுக்கு ஏற்ப, சமூக மரபுரீதியான நோக்கை அகற்றிவிட்டு தாராளவாத தரவுரீதியான அடிப்படையில் ஏதேனுமொரு சமத்துவத்தை நம்புகின்ற இடத்திற்தான் இந்த CPA போன்ற அமைப்புகள் தவறிழைக்கின்றன.

### எடுக்க வேண்டிய வழிவகை எது?

தத்துவவியலில் நேர்மறை அணுகுமுறை (Positivistic approach) மற்றும் விமர்சன ரீதியான அணுகுமுறை (Critical approach) என இரு நிலைகள் காணப்படுகின்றன. ஒரு விடயத்தை 'மரங்கள் எல்லாம் சமமானவை' என்றவாறு தரவு ரீதியாக நோக்குதல் நேர்மறை அணுகுமுறை எனப்படும். ஆனால் சமூகம் பயணிக்கின்ற போக்கினை இவ்வணுகு முறையிலன்றி, விமர்சன ரீதியான அணுகுமுறையிலேயே இனங்காண முடியும். எம்மைப் போன்றவர்களுக்கு எப்போதும் CPA போன்ற அமைப்புகள் ஒரு பகுதியை மறந்துவிட்டுச் செல்வதாகவே தெரிகின்றது. அவர்கள் தவறவிட்ட சமூக சனநாயக, மரபுரீதியான, கலாசார வலயத்திற்குள் பணியாற்றுவதற்கான பெரும் வாய்ப்பு உள்ளது. ஆனால் 'உலகத்தில் பிரச்சினையுள்ளது, எம்மிடம் பதில் உள்ளது' என்ற தாராளவாதப் பார்வையிலிருந்து விலகி 'உலகத்தில் பிரச்சினையுள்ளது, அவற்றுக்குப் பல்வேறு பதில்கள் உள்ளன' எனச் சிந்திக்க முடிந்தால் மட்டுமே அதற்குள் அடியெடுத்து வைக்க முடியும்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கடந்த 25 வருட காலத்திற்குள் பணியாற்றிய சிறப்புமுன்னுதாரணத்தின் (Pardigm) ஊடாகச் செல்லக் கூடிய அதிகபட்ச தூரத்தைச் சென்றுள்ளது என்பது எனது கருத்து. முன்னர் செய்த விடயங்களையே மீண்டும் மீண்டும் செய்வதைத் தவிர அவ்வலயத்திற்கு தொடர்ந்து செல்லக் கூடிய எதிர்காலப் பயணமொன்று இல்லை. அதன் எல்லை எந்தளவுக்குத் தெளிவானதாக அடையாளமிடப்பட்டுள்ளது எனில் இப்போது காணப்படுகின்ற மேலாதிக்க அதிகாரத்தின் முன்னே இலங்கையின் தாராளவாதம் தீர்மானமிக்க முறையில் தோல்வியடைந்துள்ளது. ரணில் விக்கிரமசிங்கவின் தோல்வி, அதனைப் பிரதிநிதித்துவம் செய்த அரசியல் முகாமின் தோல்வியையே அடையாளப்படுத்துகின்றது. ஒரு கருத்தியலாக தாராளவாதம் தோல்வியுற்றதைப் போன்றே தமது வலயத்தின் அரசியற் கருத்திட்டம் தோல்வியடைந்திருப்பதையும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆழமாகக் கருத்திற் கொள்ள வேண்டும் என்றே நான் முன்மொழிகின்றேன். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இவ்விடத்திலிருந்து முன்னோக்கிச் செல்ல வேண்டுமாயின் அது புதிய அணுகுமுறையொன்றுக்கு அதாவது தாராளவாதத்திற்கு எதிரான அடிப்படையொன்றுக்குச் செல்ல வேண்டும் என்பதே எனது ஆலோசனை.

---

**பேராசிரியர் சரித்த ஹேரத்**

தற்போதைய பாராளுமன்றத்தின் ஓர் உறுப்பினர். "கோப்" தெரிவுக் குழுவின் தவிசாளர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தத்துவத் துறையின் முன்னாள் பேராசிரியர். வெகுஜன ஊடக அமைச்சின் முன்னாள் செயலாளராகவும் ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். தேசிய சுற்றாடல் அதிகார சபையின் முன்னைநாள் தவிசாளராவார்.

# இருபத்தைந்து ஆண்டு ஐந்தொகை மற்றும் எதிர்கால சவால்கள்



**சிரால் லக்திலக**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் மிகவும் நெருக்கமாக செயற்பட்ட நபர் என்ற வகையில், நான் அந்த நிறுவனத்தை மிகவும் சிரமமான நிலையிலும், இலங்கையின் அரசியல் - சமூக ரீதியான புதிய கருத்துக்களின் பரம்பல் மற்றும் ஈர்ப்பை விரிவாக்குவதற்காக மிகச்சிரமமான செயற்பாட்டை முன்னெடுத்துவரும் அமைப்பாகவே பார்க்கிறேன். அதாவது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் என்பது இலங்கையில் லிபரல் சிந்தனையை பிரதிநிதித்துவம் செய்யும் ஆய்வுகளுடன் தொடர்புடையதாக செயற்பட்டுவரும் ஒரு நிறுவனமாகும். லிபரல் சிந்தனை இலங்கையில் அமுல்படுத்தப்படுவதில்லை. அது சமூகமயப்படுத்தப்படவுமில்லை. இலங்கையில் கூடுதலாக இடதுசாரி தேசியவாதமே வேரூன்றிப் போயுள்ளது. இடதுசாரி தேசியவாதம் நிலவும் நாட்டில் - விசேடமாக பார்க்கும் போது சிங்கள சமூகத்தில் - லிபரல் சிந்தனையை முன்னெடுப்பது மிகவும் சிரமமான விடயமாகும். அந்த சிரமமான நிலைமைகளுக்கு மத்தியில் இந்த நிறுவனம் இருபத்தைந்து ஆண்டுகளாக ஆற்றிய பணிகள் தொடர்பில் நான் மிகவும் மகிழ்ச்சியடைவதுடன், அந்த நிறுவனத்துக்கு எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன்.

**கொள்கை வகுத்தலை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்களுக்கு மத்தியில் CPA நிறுவனத்தின் வகிபாகம் மற்றும் தாக்கம்**

இடதுசாரி தேசியவாதம் வேரூன்றிப் போயுள்ள சமூகத்தில் லிபரல் சிந்தனைக்கு ஏற்ப

கொள்கை வகுத்தல், கொள்கைகளை முன்மொழிதல், கொள்கைகளை அமுல்படுத்துதல் அல்லது அதற்கான கொள்கைகளை முன்மொழிதல் கூட மிகவும் சிரமமானதாகும். அவ்வாறான சூழமைவில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் முகம் கொடுக்கும் ஓர் பிரதான சவாலாக இருப்பது அதுவோர் அரச சார்பற்ற நிறுவனமாக இருப்பதேயாகும். இலங்கையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக முன்னர் கூறிய இடதுசாரி தேசியவாத சிந்தனையில் NGO எனும் பெயரால் அடையாளப்படுத்தப்படுகிறது. சாதாரண சமூகம் NGOக்களை சந்தேகக் கண்கொண்டே பார்க்கின்றது. NGO என்பது இலங்கையின் இறைமை, இலங்கையின் மரபுரிமைகள், இலங்கையின் இயல்பான சிந்தனைகளுக்கு எதிரான எண்ணக்கருக்களை உருவாக்கும், அதேவேளை வெளிநாட்டு நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்படும் பகுதியாகவே கருதப்படுகிறது.

இவ்வாறான பின்னணியில் 25 ஆண்டு காலமாக நிறுவனத்தின் குறிக்கோளை அடைவதற்காகப் பின்வாங்காமல் தைரியமாக செயற்படுதல் தொடர்பாக கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து அவர்களுக்கு எமது பாராட்டுகள் உரித்தாகின்றன. அவரது மனோதிடம் மற்றும் அர்ப்பணிப்பின் காரணமாகவே அந்த நிறுவனம் நிலைத்திருக்கிறது.

இரண்டாவதாக அவர் உயர் முதலாளித்துவ சமூக வர்க்கத்தைச் சேர்ந்தவராவார். அந்த வர்க்கம் சாதாரண சமூகத்துடன் இணையாமை காரணமாக, அவர் அந்த வர்க்கத்தைச் சேர்ந்தவராக கருதப்படுகிறார். தவறுதலாகவேனும் அவர் இந்த சாதாரண சமூகத்தில் வாழ்ந்திருந்தால், அவரால் இந்த செயற்பாட்டில் தொடர்ச்சியாக ஈடுபடுதல் சிரமமான விடயமாக இருந்திருக்கும். மூன்றாவதாக இலங்கையில் இரண்டு வகையான அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளன. அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட அமைப்புக்கள் அதில் ஒரு வகையாகும் என்பதுடன், மற்றைய வகை கொள்கை வகுப்பு தொடர்பாக கலந்துரையாடும் அரச சார்பற்ற நிறுவனங்களாகும். இலங்கையின் இடதுசாரி தேசியவாதத்தின் நச்சுச் செடியாக இருப்பது கொள்கைகள் தொடர்பாக கதைக்கும் அமைப்புக்களே தவிர அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாக வேலை செய்யும் அமைப்புகள் அல்ல. அதன் காரணமாக கொள்கை வகுப்புக்காக முன்னிற்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கே NGO லேபல் உரிய வகையில் ஒட்டப்படுகிறது. அதன் அர்த்தத்தை பார்க்கும் போது மீண்டும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் லிபரல் கொள்கை தொடர்பாக கதைக்கும் அமைப்பு என்ற வகையில் சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளது. அத்துடன், அதன் தலைவர் தமிழ் இனத்தவராக இருப்பதும் இன்னொரு விசேடமான விடயமாகும். அவரை தமிழ் இனத்தைச் சேர்ந்தவர் என கருதுவதற்கு நான் விரும்பவில்லை. அவர் இலங்கையராவார். இருந்த போதிலும் அவரது இனம் தமிழ் என்ற காரணத்தால் இந்த பிரச்சினை மேலெழுவதில் தாக்கம் செலுத்தியுள்ளது.

70 களின் பிற்பகுதியில் இலங்கையில் அரச சார்பற்ற அமைப்பு எண்ணக்கரு வெளியே வந்த போதிலும், அது உண்மையிலேயே பன்முகப்படுத்தல் அல்லது Decentralization எனும் எண்ணக்கருவிலேயே கட்டியெழுப்பப்பட்டது. அதன் நான்காவது மாதிரியாகவே அது அமைகிறது. அதில் முதலாவது நிர்வாக பன்முகப்படுத்தலாகும் (Deconcentraion). இரண்டாவது அதிகாரத்தை பிரதிநிதித்துவம் செய்தலாகும். மூன்றாவது அதிகாரப் பகிர்வு ஆகும். நான்காவது தனியார் மயப்படுத்தலாகும். அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அரச கொள்கைகளை வகுப்பதற்கான வகிபாகம் உள்ளது எனும் பேசுபொருள் தனியார்மயப்படுத்தலிலேயே உருவானது. இந்த எண்ணக்கரு நாட்டில் கடுமையான சவாலுக்கு உட்பட்டுள்ளது.

இலங்கையின் அரசியல் மிகவும் மையப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. அரசஆட்சி முறை மாற்றத்தின் பின்னர் காலனித்துவ நிர்வாகத்தின் விளைவாக ஜனநாயகக் கட்டமைப்புக்கு உரிமை

கோரும் நாட்டில், மன்னராட்சி போன்று மையப்படுத்தப்பட்ட நிர்வாகத்தை நம்புவது அவ்வளவு புதுமையானதல்ல. எனவே மையப்படுத்தப்பட்டே அனைத்து அதிகாரங்களும் வைத்திருக்கப்பட வேண்டும் என நம்பும் சமூகத்தில் பன்முகப்படுத்தல் எண்ணக்கரு தொடர்பாக கவனம் செலுத்துதல் மிகவும் சிரமமான விடயமாகும். அதில் நிர்வாக பன்முகப்படுத்தல் மற்றும் அதிகார பிரதிநிதித்துவம் செய்வதில் மட்டுமே ஓரளவுக்காவது ஆகக் குறைந்த வாய்ப்பு நிலவுகிறது. இருப்பினும் மாகாண சபைகள் ஊடாக அதிகாரத்தை பகிர்ந்து கொள்வதற்கு சிங்கள சமூகம் ஒருபோதும் தயாராக இல்லாத பின்னணியில் அரச சார்பற்ற அமைப்புக்களும் அந்த எண்ணக்கரு ரீதியான சட்டகத்தினுள் முன்வரும் போது நாம் முன்னர் குறிப்பிட்ட முத்திரை குத்துவதற்கு மேலதிகமாக எண்ணக்கரு ரீதியான எதிர்ப்பு எழுவதுடன், அது சவால்மிக்க நிலையாக இருத்தல் மிகவும் சாதாரணமான விடயமாகும்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இயல்பாகவே சிந்தனையில், செயலில், நிர்வகித்தலில் மற்றும் அதன் அடிப்படை நிறுவன ரீதியான தன்மையும் இலங்கை சமூகம் நம்பும் இடதுசாரி தேசியவாதத்துக்கு எதிராக செயல்படும் ஒரு அமைப்பாகும். அவ்வாறான அமைப்பை 25 ஆண்டுகள் இயக்கி வருதல் என்பதே பாராட்டத்தக்க ஒரு விடயமாக கருதப்படுகிறது.

**கொள்கை வகுப்பு நிறுவனங்களால் பிரஜைகளின் நம்பிக்கையை வெற்றிகொள்ள முடியாமை தொடர்பான சவால்.**

இந்த நாட்டிலிருந்த லிபரல் வாதிகளால் கூட லிபரல் சிந்தனையை சமூகமயப்படுத்த முடியாமல் போனது. டட்லி சேனாநாயக்க தொடக்கம் ஐக்கிய தேசிய கட்சியின் ஜே.ஆர். ஜயவர்த்தன வரையான தலைவர்களால் தமது அரசியலில் லிபரல் வாதத்தை கட்டியெழுப்ப முடியாமல் போயிற்று. அது பழைய இடதுசாரி இயக்கம் போன்றதாகும். மனிதர்கள் அதில் வாழ்ந்த போதிலும், அதனை அவர்கள் தழுவிக் கொள்ளவில்லை. பிரதான அரசியல் போக்கு அந்த கருத்தியலுக்காக முன்நிற்காமையே அதற்கான பிரதான காரணமாகும். அதற்கான பிரஜைகள் இலங்கையில் இருக்காமையே அரசியல் போக்கில் தோன்றாமையின் அர்த்தமாகும். இலங்கையில் பிரஜைகள் அன்றி வாக்காளர்களே இருக்கிறார்கள். இந்த நாட்டில் சிவில் சமூகம் இல்லை என்பதுடன், சிவில் வாய்ப்புக்கள் கூட வாக்காளர்களாலேயே நிரப்பப்பட்டுள்ளது. குடும்பம் மற்றும் அரசுக்கு இடையில் உள்ள வாய்ப்புக்களை நாம் சிவில் வாய்ப்புகளாக கூறுவோமாயின் அதிலும் வாக்காளர்கள் மட்டுமே இருக்கிறார்கள். எழுபது ஆண்டுகளாக பிரஜைகளாக செயற்படக்கூடிய செயற்பாட்டாளர்களை எம்மால் உருவாக்க முடியாமல் போயுள்ளது. நாம் கூட சிவில் சமூக செயற்பாட்டாளர்களாக வருகை தந்ததன் பின்னர் கட்சி அரசியலுடன் இணைந்து கொண்டவர்களே. பெரும்பாலான அமைப்புகளும் அவ்வாறானவையே. சமூகத்திலுள்ள பெரும்பாலான அமைப்புகளும் பெரும்பாலும் அரசியல் கட்சிகளுடன் இணைந்தே செயற்படுகின்றன. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கூட பெரும்பாலும் ஐக்கிய தேசிய கட்சியுடன் நெருக்கமாக செயற்படும் கொள்கைசார்ந்த அமைப்பு என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். அவ்வாறான நிலைமையில் மீண்டும் சவால்கள் தோன்றுகின்றன.

பிரஜைகள் அல்லாதோரிடம் பிரஜைகள் நிகழ்ச்சி நிரலை ஒப்படைத்தல் சிரமமானதாகும். அதனை புரிந்துகொள்ள மாட்டார்கள். கொள்கைகளை வகுக்கும் சட்டவாக்கத்துறையின் பங்காளர்கள் லிபரல் கொள்கையை நம்பவில்லை என்பதுடன், லிபரல்வாதிகளாக முன்னிற்கும் பெரும்பாலானோர் பழைய இடதுசாரிகளாவர். பெரும்பாலும் அவர்கள் சமூக ஜனநாயகவாதிகள் ஆவர். இந்த சிக்கல் நிறைந்த சிந்தனையிலேயே இலங்கையின் லிபரல் சிந்தனைவாதம் புதைந்து போயுள்ளது. அவ்வாறான நிலைமையில் மனிதர்கள் லிபரல் சிந்தனை என்னவென்று வெளிப்படுத்துவதில்லை. எதிர்காலத்தில்

வரவிருக்கும் பொருளாதார வீழ்ச்சிக்கான பதிலும் லிபரல் சிந்தனையில் மட்டுமே உள்ளது. இந்த நாட்டில் லிபரல் சிந்தனைவாதத்தை சிக்கல் நிலைக்கு ஆளாக்கியவர் ரணில் விக்கிரமசிங்கவே. லிபரல் சிந்தனை மற்றும் Conservative சிந்தனை ஆகியன இரு வகையான விடயங்களாகும். இலங்கையின் சில சமூக தரப்பினர் Conservative என்பதனை லிபரல்வாதம் என்றே நினைக்கிறார்கள். அது தவறானதாகும். விசேடமாக லிபரல் சிந்தனையின் பொருளாதார பகுதி, Conservative வாதத்தின் பொருளாதார நீட்சியாக இருந்த போதிலும், புதிய லிபரல்வாதத்தின் பொருளாதாரம் போன்ற ஒரு பகுதியல்ல. இருப்பினும் மக்கள் இதனை லிபரல் சிந்தனையின் பகுதியாகவே நினைக்கிறார்கள். இவ்வாறான சிக்கலான பின்னணியில் லிபரல் சிந்தனையானது பட்டைதீட்டாத இரத்தினக் கல்லாக இந்த நாட்டில் இருப்பதாக இறுதி ஐந்தொகையில் நாம் காண்கிறோம்.

**புதிய கொள்கைகள், எண்ணக்கருக்களை சமூக மயப்படுத்துதல் மற்றும் அவற்றின் தாக்கம்**

அந்த எண்ணக்கரு நிறுவன மயப்படுத்தப்பட்டுள்ளதா? எனும் விடயத்தின் அடிப்படையிலேயே இவ்வாறான அமைப்புகளால் பல ஆண்டுகளாக கலந்துரையாடப்பட்ட கொள்கை ரீதியான விடயங்கள் சமூக மயப்படுத்தப்பட்டுள்ளதா? என்பது தீர்மானிப்படுகிறது. 25 ஆண்டுகளாக CPA நிறுவனம் பல்வேறு எண்ணக்கருக்கள் / அதிகாரப் பகிர்வு, லிபரல் உரிமைகள், சட்டத்தின் ஆதிக்கம் போன்ற பல விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளது. இவ்வாறான எண்ணக்கருக்கள் சமூகத்துக்கு விடுவிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு எண்ணக்கருக்கள் விடுவிக்கப்பட்டமை மூலம், அந்த எண்ணக்கருக்களின் வெளிப்படுத்தல்களை (Visibility) பேணக்கூடியதாக இருந்தது. இருப்பினும், அவை நிறுவன மயப்படுத்தப்பட்டுள்ளனவா? எனும் வினா எழுப்பப்பட்டால் அவ்வாறு இடம்பெறவில்லை என்றே கூற வேண்டியுள்ளது. CPA போன்ற நிறுவனங்கள் மட்டுமன்றி நாம் கொண்டுள்ள கருத்துக்கள் நிறுவன மயப்படுத்தப்பட்டுள்ள முறை தொடர்பாக பார்க்கும் போது நாம் திருப்தியடைய முடியாது. இருப்பினும் அதிகாரப் பகிர்வு போன்ற சிற் சில கலந்துரையாடல்கள் இவ்வாறான சிறிய தீவில் இயங்குநிலையில் இருப்பதற்கு CPA போன்ற அமைப்புகளின் அமைதியான போராட்டங்களின் பெறுபேறுகளே காரணமாகும்.

ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது CPA நிறுவனம் மற்றும் நான் தொடர்பு கொண்டு செயற்பட்ட பெரும்பாலான நிறுவனங்களில் காணப்பட்ட பொதுவான பண்பு யாதெனில் அவர்களுக்கு கிடைத்த வளங்களின் அளவுக்கு ஏற்ற வகையில் அவர்கள் ஆக்கபூர்வமாக செயற்படாமையே ஆகும். அவர்களின் தந்திரோபாயங்கள் தவறானவையாகும். உதாரணமாக கடந்த காலத்தில் குமார் ரூபசிங்க அவர்களுக்கு கிடைத்த பெருமளவு பணம் விமல் வீரவன்ஸ போன்ற ஒரு நபருக்கு கிடைத்தது என வைத்துக்கொண்டால் விமல் வீரவன்ஸ இந்த நாட்டையே பிடித்திருப்பார். CPA நிறுவனம் மற்றும் ஏனைய பெரும்பாலான அமைப்புகளிடம் பெருமளவு வளங்கள் உள்ள போதிலும், அவர்கள் ஆகக்குறைந்த தந்திரோபாயத்தையே பயன்படுத்துகிறார்கள். அது, அந்த செயற்பாட்டாளர்களின், மனித வளங்களை பாவிக்கும் தலைவர்களிடம் உள்ள சிக்கலாகும். இவ்வாறான நிறுவனங்கள் தொடர்ந்து செயற்படுவதில் அவ்வாறான சவால்கள் காணப்படும். இருந்த போதிலும், இலங்கைக்கு லிபரல் சிந்தனை இன்றியமையாததாகும். அதில் CPA அமைப்பை கருத்தோவியமாக வரைவதாக இருந்தால் மூக்கு மட்டம் வரை கடலில் மூழ்கிய மனிதன் லிபரல் கொடியை தூக்கிப் பிடித்துக்கொண்டு இருப்பது போன்ற சித்திரத்தையே வரைய வேண்டியிருக்கும் என நான் கருதுகிறேன்.

**சமூக பணிப்பொறுப்புக்காக கவனம் செலுத்த வேண்டிய புதிய அளவீடுகள்**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் என்பது அரசியல் கலப்பற்ற

அல்லது அரசியல் சாராத ஒரு அமைப்பு அல்ல. அது அரசியல் அமைப்பாகும். தமக்கேயுரிய சிந்தனையைக் கொண்டுள்ள அந்த சிந்தனைக்கு ஏற்ப கொள்கைகளை கட்டியெழுப்பல் மற்றும் அந்த கொள்கைகளை பிரகடனப்படுத்துவதற்கு முயற்சியெடுக்கும் அமைப்பாகும். அதுவோர் அரசியல் ரீதியான செயற்பாடாகும்.

எனது கருத்தின்படி அரசியல் கட்சி மற்றும் CPA அமைப்பு ஆகியவற்றுக்கிடையில் வித்தியாசம் இல்லை. இருப்பினும் CPA நிறுவனம் இடைநடுவில் தொங்கிக்கொண்டு ஊசலாடுகிறது. தாம் சுயாதீனமான, அரசியல் சார்பற்ற அமைப்பு எனக் காட்டுவதற்கு முயற்சியெடுத்து, அரசியல் குறிக்கோளுக்காக செயற்படுகின்றமையே அதற்கான காரணமாகும். இந்த நிறுவனம் நாட்டின் சூழமைவுக்கு ஏற்ற வகையில் அரசியல் அமைப்பாகும். அரசியல் அமைப்பாக செயற்படுதல், தமது சிந்தனையில் கொள்கைகளை உருவாக்குதல் போன்றவை அரசியல் எனின் அரசியல் தன்மையுடனேயே செயற்பட வேண்டியிருக்கும். அந்த பகுதி CPA நிறுவனத்துக்கு இல்லை. ஆங்கிலத்தில் உரையாடும் கொழும்பு நகருடன் மட்டுப்படுத்தப்பட்ட குழுவினரே CPA நிறுவனத்துடன் இருக்கின்றனர். அந்த குழுவினருக்கு சாதாரண மனிதர்களின் விருப்பு வெறுப்புக்கள் தெரியாது. மனிதர்களின் வியர்வை வாசம் தெரியாதோர் அரசியல் தந்திரோபாயங்களை சிந்திப்பது சிரமமானதாகும். இந்தப் பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்கான இயலுமை இந்த நிறுவனத்துக்கு இருக்கிறதா? என்பது எனக்குத் தெரியாது. இருப்பினும், CPA நிறுவனம் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கின்ற போது, பெருமளவில் நாடு முழுவதிலுமுள்ள தனியார் பாடசாலைகள் ஊடாக உருவாக்கப்படும் ஆங்கிலத்தில் சிந்திக்கும், கதைக்கும் சமூகத்தை இணைத்துக் கொள்ளுதல் வேண்டும். அவர்களில் பெரும்பாலானோர் சாதாரண வகுப்பைச் சேர்ந்த பெற்றோரின் பிள்ளைகளாவர். அவர்களுடன் வேலை செய்வதாக இருந்தால் எதிர்காலத்திற்கான வாய்ப்பு கிடைக்கும். தற்போதுள்ள அணுகுமுறையில் முன்னேறிச் செல்வது சிரமமானதாக இருக்கும் என்றே நான் கருதுகிறேன்.

அத்துடன், கலாநிதி சரவணமுத்து அவர்களைத் தவிர அரசியல் ரீதியாக சிந்திக்கக்கூடிய பாத்திரங்கள் இந்த அமைப்பில் உருவாக்கப்படவில்லை. வரலாற்றைப் பார்க்கும் போது ரொஹான் எதிரிசிங்க மற்றும் அஸங்க வெலிக்கல போன்ற சிலர் இருந்த போதிலும் வேறெந்த பாத்திரங்களும் அங்கு இல்லை. இந்த நாட்டிற்கு பௌத்த மதத்தை கொண்டுவந்த போது மகிந்த தேரர் 'பௌத்தம் இங்கு நிலைத்திருக்க வேண்டுமெனின், உள்ளூர்வாசி ஒருவர் துறவறம் பூண வேண்டும்.' என தெரிவித்திருந்தார். இருப்பினும் சாதாரண சிங்கள சமூகத்துடன் தொடர்புடைய லிபரல்வாதி ஒருவரை உருவாக்குவதில் திரு. சரவணமுத்து உள்ளிட்ட அந்த கருத்துக்காக பாடுபடுபவர்கள் தோல்வியடைந்துள்ளனர். லிபரல் சிந்தனையுடனான சாதாரண சமூகப் பாத்திரத்தை உருவாக்க முடியுமாயின் எதிர்காலத்திலும் செயற்பட முடியும். கொள்கைகளை 'சந்தைப்படுத்தி' சமூகமயப்படுத்த வேண்டும். கொள்கைகளை 'சந்தைப்படுத்துவதாயின்' அந்த கொள்கைகளுக்கு உரியதான சாதாரண வகுப்பினருடன் உறவாடுதல் இன்றியமையாததாகும்.

சமூகப் பங்கேற்பு நிகழ்ச்சித் திட்டப் பிரிவு எனும் பெயரில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் உள்ள பிரிவு ஒரு ஆபரணமாக மட்டுமே உள்ளது. அது சிறு பிரயோகமாக மட்டுமே உள்ளதாக நான் காண்கிறேன். அதில் உண்மையான குறிக்கோள்கள் பிரதிநிதித்துவம் செய்யப்படவில்லை. சுதேச புலமையாளரை உருவாக்குதல் CPA நிறுவனத்துக்கு உள்ள பிரதான சவாலாகும். சிங்களத்தில் சிந்திக்கும், தமிழில் சிந்திக்கும், தேவையாயின் முஸ்லிம்களின் மனப்பாங்குடன் சிந்திக்கும் சாதாரண மக்களுடன் வாழ்ந்துவரும், சுதேச புலமையாளர் உருவாக்கப்பட வேண்டும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

சமூகமயப்படுத்த நினைக்கும் குறிக்கோளை அடைய வேண்டும் எனின் அவ்வாறான ஒருவரையாவது உருவாக்க வேண்டும். அது இலகுவான விடயமாக இருக்காது. சிங்கள சமூகத்துக்கு வெளியே வாழும் ஒரு நபருக்கு லிபரல் கருத்தியலை தாங்கிக்கொள்வது இலகுவானதாகும். இருப்பினும் சிங்கள சமூகத்தில் இருந்துகொண்டு இடதுசாரி தேசியவாத அழுத்தத்தில் கரைந்து போவதற்கான வாய்ப்புகள் அதிகமானதாகும்.

**கருத்திட்ட மனப்பாங்கிலிருந்து விடுபட்டு செயற்பட வேண்டிய தேவை**

கருத்திட்ட மனப்பாங்கே பெரும்பாலும் சாதாரண மக்கள் இவ்வாறான கொள்கை வகுக்கும் நிறுவனங்களிலிருந்து விலகி நிற்பதற்கான காரணமாக அமைந்துள்ளது. ஒரு விதமான இயக்கமாகவே வெளிநாட்டு கருத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. உலகிலுள்ள செல்வந்த நாடுகள் தமது மொத்த தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு ஒன்று அல்லது இரண்டு வீதத்தை நன்நோக்கத்துடன் வேலை செய்யும் விடயங்களுக்காக முதலீடு செய்கின்றன. அவற்றை பெற்றுக்கொள்ளும் ஏனைய இடைத்தரகு நிறுவனங்களும் உள்ளன. அவை நாடுகளுக்கு வெளியிலோ அல்லது அந்த நாடுகளுக்குள்ளேயோ இயங்கும் நிறுவனங்களாகும். அவ்வாறான பல்வேறு தரப்பினர் எமது நாட்டைப் போன்ற நாடுகளுக்கு கருத்திட்டங்களை அறிமுகம் செய்கின்றன. இருப்பினும் அத்திட்டங்களை கொண்டுவரும் எந்தவொரு அலுவலருக்கும் அந்த திட்டங்களின் மூல அடிப்படைச் சாரம் தொடர்பான புரிதலோ அல்லது அதன் குறிக்கோள் தொடர்பான பொறுப்போ இருப்பதில்லை. தமக்கு வழங்கப்பட்ட Overall Objectives அமைய திட்டங்கள் அமுலாகிறதா? அது தொடர்பான Indicators முழுமையடைந்துள்ளதா? இல்லையா? போன்றவை தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதே அவர்களது கடமையாகும். அவர்கள் சாதாரண மனிதர்களை செஸ் விளையாட்டில் விளையாடப்படும் காய்கள் போன்றே நினைக்கிறார்கள். இருப்பினும் மனிதர்கள் செஸ் விளையாட்டில் உள்ள காய்கள் அல்ல. ஏதோ வகையில் விளையாட்டுக் காயாக இருந்த போதிலும் கூட அவை ஒரே இடத்தில் இருப்பதில்லை. அங்கும் இங்கும் சஞ்சரிக்கும். அந்தத் தன்மையை புரிந்து கொள்வதற்கு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு திட்டப் பணிப்பாளர்களுக்கு ஆற்றல் இல்லை. உரிய பணத்தை ஒதுக்கி குறித்த காலம் நிறைவடைந்த பின்னர் திட்டத்துக்கு உரிய impact மற்றும் outcome எனும் ஏதாவது பொய்யை எழுதுதல் மற்றும் மேலிடத்துக்கு அனுப்புதலையே அவர்கள் செய்கிறார்கள். அந்த செயன்முறையை நாம் Dragonology என்றே கருதுகிறோம். அது உலகம் முழுவதும் பரந்துள்ள பாரிய இயக்கத்தின் ஒரு பகுதியாகும். இருப்பினும் லிபரல் கொள்கை இலங்கையில் அமுல்படுத்தப்படுதல் என்பது ஏற்கனவே கூறிய Dragonologyகளின் பகுதியல்ல. அது உண்மையிலேயே மனிதர்களுக்கு தேவையானதாகும். இந்த நிலையை மாற்ற முடியாமல் போனமையானது கருத்திட்ட மனப்பாங்கில் காணப்படுகின்ற கடுமையான மறைப் பெறுபேறாகும். அதனை சமூகம் புரிந்து கொண்ட பின்னர் அவ்வாறான திட்டங்களை சமூகம் நம்பாது.

**சில கொள்கைகள் அமுல்படுத்தப்படும் போது தேசிய சூழமைவை புரிந்து கொள்ளாமை**

மேலும் பெரும்பாலான திட்டங்கள் இந்த நாட்டின் சூழமைவுக்கு அமைய அமுல்படுத்தப்படாமையும் சிக்கலான நிலையாகும். எளிமையான ஒரு உதாரணத்தை பார்ப்போம். Secularism அல்லது மதச் சார்பின்மை எனும் எண்ணக்கரு எவ்வாறு உலகில் உருவானது ? அது தேவாலயங்களை மையமாகக் கொண்ட ஐரோப்பிய சமூகத்தில் தேவாலயங்களுக்கு எதிராகவும், மன்னருக்கு எதிராகவும் உருவான எண்ணக்கருவாகும். அந்த எண்ணக்கருவை முழுமையாக இலங்கையின் சூழமைவுக்கு கொண்டு வர முடியாது. அந்த எண்ணக்கரு

இந்தியாவில் வேறு அர்த்தத்தை வெளிப்படுத்தியுள்ளது. இருப்பினும் இலங்கையில் உள்ள லிபரல் வாதிகள் அந்த எண்ணக்கருவை அந்த முறையிலேயே, அதாவது ஐரோப்பிய சூழமைவிலேயே இந்த நாட்டில் பதிய வைக்க முயற்சித்தல் துரதிர்ஷ்டவசமானதாகும்.

சமூக மற்றும் பொருளாதார உரிமைகள் எனும் கருத்தாடலும் அவ்வாறானதே. எனக்குத் தெரிந்த வகையில் CPA நிறுவனம் அதற்கு எதிரானதாகும். இருந்த போதிலும், நாட்டில் ஒரேயடியாக மேற்கொள்ள முடியாத விடயங்களை பெயர்ப் பலகையாகக் கொண்டு வருவதன் மூலம் கிடைக்கும் பயன் என்ன? என நான் கேட்கிறேன். இரண்டு துருவங்களிலுள்ள இருவகையான பிரச்சினைகளையே நான் இங்கு குறிப்பிட்டேன். இவ்வாறான விடயங்கள் விரிவாக கலந்துரையாடப்பட்டு, ஆய்வு செய்து முன்வைக்கப்பட வேண்டிய கொள்கைகளாகும். அவற்றை முழுமையாகவே பேச வேண்டிய தேவையில்லை. இது தொடர்பாக நாம் இந்தியாவிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பல விடயங்கள் உள்ளன. லிபரல் எண்ணக்கரு சமூக சூழமைவுக்கு அமைய எவ்வாறு கொண்டு வரலாம் என அம்பேத்கார் போன்ற அறிஞர்களிடமிருந்து கற்றுக்கொள்ளலாம். அவை தொடர்பாக தெரியாத கிளிகள் இலங்கையில் இருப்பதுடன் அந்த கிளிகள் செய்யும் சேதம் லிபரல்வாதியாக இருப்பதனை விடவும் பாரதூரமானதாகும். அதிகாரப் பகிர்வு போன்ற பேசுபொருள் தொடர்பாகவும் அதனையே கூற வேண்டியுள்ளது. அதிகாரப் பகிர்வு போன்ற விடயம் தொடர்பாக இற்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன்னரே நாம் பேசிய எண்ணக்கருக்கள் இன்று உலகளவில் மாற்றமடைந்துள்ளன. இலங்கையிலும் சூழமைவு ரீதியிலும், எண்ணக்கரு ரீதியிலும் மாற்றமடைந்துள்ளது. 1987 - 90 காலப்பகுதியில் அதிகாரப் பகிர்வு, தமிழ் தேசிய பிரச்சினை தொடர்பாக உரையாடிய கோணத்தில் இன்று உரையாட முடியாது. அவை பெரும்பாலும் மாற்றமடைந்துள்ளன. அந்த மாற்றங்கள் தொடர்பாக அறியாத கருத்திட்டவாதிகள், லிபரல்வாதிகள் இந்த எண்ணக்கருக்களுக்கு செய்யும் சேதமானது அந்த எண்ணக்கருக்களுக்கு எதிராக இருத்தல், எண்ணக்கரு தொடர்பாக கதைக்காதிருப்பதனை விட மிக மோசமானதாகும். எனவே இந்த மாற்றங்கள் தொடர்பாக புரிந்து கொள்ளும் தன்மையின் அடிப்படையில் அதற்காகப் பாவிக்கப்படும் தந்திரோபாயங்கள் எந்தளவு தூரம் சாதாரண இலங்கை வாக்காளர்களுக்கு நெருக்கமடைகின்றது என்ற இரண்டு காரணங்களின் அடிப்படையில் இந்த கருத்தியலின் வெற்றி, தோல்வி அல்லது நிலைத்திருக்கும் தன்மை தீர்மானிக்கப்படுகிறது.

---

**சிறால் லக்திலக்க**

ஒரு சட்டத்தரணி. அரசியல் செயற்பாட்டாளர். முன்னாள் மாகாண சபை உறுப்பினர். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் ஆலோசகராகக் கடமையாற்றினார். கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை பட்டதாரியாவார். மோதல் கற்கை பற்றிய பட்டப்பின்படிப்பு பட்டதாரியாவார். பல சிவில் சமூக அமைப்புக்களின் செயற்பாட்டாளராகப் பணியாற்றியுள்ளார்.

# சனநாயகம் மற்றும் மனித சுதந்திரத்திற்காக பாராட்டத்தக்க பணியை நிறைவேற்றியது



**சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க**
**இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் 25வது பிறந்த தினத்தில் நான் இச் செய்தியை மிக்க மகிழ்ச்சியுடன் அனுப்புகின்றேன்.

இலங்கையில் சனநாயகத்தினதும் சனநாயக ரீதியான நிறுவனங்களினதும் உரிய செயற்பாட்டிற்கான பிரதான மேற்பார்வைக் குழு என்ற வகையில், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், தனித்து நின்று முக்கியமான பணியொன்றை நிறைவேற்றியது.

அதன் இருபத்தைந்து வருட பயணத்தில், சனநாயகம் மற்றும் மனித சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான அதன் நோக்கங்களில், தனித்துத் தெரியும் வெற்றியை அது பெற்றுக் கொண்டது. அது, அதன் தேர்தல் வன்முறைச் செயற்பாட்டுக் கண்காணிப்பு மத்திய நிலையத்தின் மூலம் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை உறுதிப்படுத்தும் துறையிலும், அரசாங்கங்களுக்கு எதிரான சட்டரீதியான போராட்டங்கள் உள்ளிட்ட மக்களுக்குச் சாதகமான பல சட்டச் செயற்பாடுகளில் ஈடுபட்டும், ஊழல் நடைமுறைகள் பற்றிய சம்பவங்கள் அல்லது நீதிமன்றத்தின் சுயாதீனத்திற்கு எதிரான தண்டனையிலிருந்து விலக்களிக்கும் வகையில் அரசாங்கங்கள் செயற்பட்ட சந்தர்ப்பங்களைப் போன்றே, நாட்டில் அனைத்துப் பிரசைகளின் நீதி, நியாயத்தை உறுதிப்படுத்தும் சட்ட நடவடிக்கைகளை எடுக்கும் போதும் அவ்வாறே நடந்து கொண்டது.

இலங்கையின் அரசியலமைப்புச் சட்டம் தொடர்பிலும் அவ்வாறே, இன ரீதியானதும் மதரீதியான சிறுபான்மைக்கு எதிராக வன்முறை மற்றும் அநீதி தொடர்பான பிரச்சினைகளுக்கு ஏற்புடைய விடயங்கள் தொடர்பிலும், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பரவலாகச் செயற்பட்டது.

ஊடகச் சுதந்திரம் மற்றும் தகவல் அறியும் உரிமை தொடர்பில் பல செயற்பாடுகளிலும், வெற்றிகரமாக நிலையம் ஈடுபட்டது.

முன்னணி ஊடகங்களால் கருத்திற் கொள்ளப்படாத அல்லது அரசின் பல்வேறுபட்ட அச்சுறுத்தல்கள் காரணமாக தடைக்குட்பட்ட விடயப் பரப்புகள் தொடர்பில், தகவல்கள் மற்றும் அறிவுசார் கருத்துகளைப் பகிர்ந்தளித்தும் கலந்துரையாடல்களை வளர்த்தும், இலங்கையின் மூன்று பிரதான மொழிகளிலும் உள்ள மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் புகழ்பெற்ற இணையத் தளமான 'கிறவுண்ட் வீவ்' தனித்துத் தெரியும் வெற்றியைக் கைப்பற்றியது. அவர்களின் பயணப் பாதையில் பல்வேறுபட்ட அரசாங்கங்களால் விடுக்கப்பட்ட பல சவால்களுக்கு முகங்கொடுக்கப்பட்டதைக் கருத்திற் கொள்ளும் போது, எமது நாட்டில் சனநாயகம் வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்படும் போது, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பெற்றுக் கொண்ட வெற்றி பாராட்டப்படும்.

அவர்களது அரிய அர்ப்பணிப்புக்கும் துணிச்சலுக்கும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆரம்ப பணிப்பாளருமான பீ.சரவணமுத்துவிற்கும் அவரது பணிக்குழுவினருக்கும் பங்குதாரர்களுக்கும், எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களை உரித்தாக்குகின்றேன்.


உங்களுடைய நல் ஆரோக்கியத்திற்கும், தொடர்ச்சியான வெற்றிகளைப் போன்றே, சனநாயகம் மற்றும் சுதந்திரத்திற்கான உங்களுடைய போராட்டங்களின் போது முகங்கொடுப்பதற்காக அழைக்கப்படுகின்ற அதிகாரிகளின் கோபத்திலிருந்து நீங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் நான் பிரார்த்திக்கின்றேன்.

---

**சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஐந்தாவது நிறைவேற்று ஜனாதிபதியாவார். அதேசமயம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவியாவார்.

# ஒன்றிணைந்து அல்லது எதிர்த்து செயற்படுவதற்கான பலம்



**ரணில் விக்ரமசிங்க**
இலங்கையின் முன்னாள் பிரதமர்

எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் நீடித்த ஆயுதப் போராட்டத்துக்கு மத்தியில், மோதல் மற்றும் அரசாட்சி ஆகியவற்றுக்கு மிகவும் அபிவிருத்தியடைந்த மாற்றுவழிக் கொள்கைகளை மேம்படுத்தும் நோக்கில் 1996 ஆம் ஆண்டு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. அது அரசியல் ஆய்வுகள், ஆதரித்து வாதாடுதல் ஆகிய செயற்பாடுகள் மிகச் சிறிய எண்ணிக்கையிலான அமைப்புக்கள் சிலவற்றால் மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட ஒரு சூழலில் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து மற்றும் அவரது சகாக்கள் சிலரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட துணிச்சல் மிக்க ஓர் இயக்கம் ஆகும். இவ்வாறான ஓர் ஆரம்பத்தின் ஊடாக அவர்கள் “ஆயுதங்களுக்கு மத்தியில் சட்டம் அமைதி பெறும்” எனும் ஊகத்திற்கு சவால் விடுத்து நீதி நிர்வாகத்தினை பாதுகாப்பதற்கு மற்றும் விருத்தி செய்வதற்காக செயற்பட்டார்கள்.

அவர்களது கனேடிய சகாக்களைப் போன்று பொருளாதார மற்றும் சமூக ரீதியிலான கொள்கைகள் மீது கவனம் செலுத்துவதற்குப் பதிலாக இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தை மிகவும் தொல்லைகள் நிறைந்த ஒரு துறைக்கு, அதாவது அரசியல், அரசியலமைப்பு மற்றும் சட்டம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பாக தமது இயக்கத்தை வழிநடாத்தினார்கள். அப்போதைய கால கட்டத்தில் ஏனைய அமைப்புக்கள் மூலம் தவிர்க்கப்பட்ட விவாதத்துக்கு உட்பட்ட அரசியல் தலைப்புக்கள் மற்றும் விளிம்புநிலை சட்டப் பிரச்சினைகள் பலவற்றுக்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் முகம் கொடுத்தது. பயங்கரவாதத்தைக் கண்டிப்பதற்கும் மனித உரிமை மேம்பாட்டுக்காகவும் அவர்களது நடவடிக்கைகளை விரிவுபடுத்தினார்கள் என நான் உறுதியாகக் கூற முடியும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மோதல் தவிர்ப்பு தொடர்பான எண்ணக்கருவினை வளர்த்தல் மற்றும் இலங்கையின் பிரதான நீரோட்டத்தில்

அரசியலின் போதான மோதல் தவிர்ப்புக்கான முறைமைகளை உள்ளடக்குவதற்கான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடாத்துதல் இங்கு மிகவும் முக்கியம் பெறுகிறது.

மோதல் தவிர்ப்புக்கு மேலதிகமாக அதிகாரப் பகிர்வு, மனித உரிமைகள், ஊடகச் சுதந்திரம், தேர்தல் கண்காணிப்பு, தேர்தல் வன்முறைச் செயற்பாடுகளைத் தடுத்தல், அரசியலமைப்பு சீர்திருத்தம் மற்றும் நிலைமாறு கால நீதி ஆகியன தொடர்பாக காலத்தை விட மிகவும் முன்னோக்கிச் சென்ற ஜனநாயக ரீதியிலான கருத்துக்கள், பெறுமானங்கள் மற்றும் மாதிரிகள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் விருத்தி செய்யப்பட்டுள்ளன. கடந்த இருபத்தைந்து ஆண்டு காலத்திற்குள் இலங்கையின் அரசியலில், தனது அமைப்பு மேற்கொண்ட முற்போக்கான கடமைப் பொறுப்பு தொடர்பாக பெருமையுடன் மற்றும் வெற்றி உணர்வுடன் திரும்பிப் பார்ப்பதற்கு இன்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துக்கு முடியுமென நான் நம்புகிறேன்.

எந்தவொரு சுயாதீன அரசியல் இயக்கமும் செயற்படும் வகையில், சகல சந்தர்ப்பத்திலும் எந்தவொரு பிரச்சினை தொடர்பாகவும் தனது அரசியல் நிலைப்பாட்டுக்கு அமைய ஓர் அரசியல் இயக்கத்துடன் அல்லது அதற்கு எதிராக செயற்படுவதற்கான சுயாதீனம் மற்றும் ஆற்றல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திடம் காணப்பட்டது. நான் அரசியலில் ஈடுபாடு கொண்ட காலத்திற்குள் நான் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் இணைந்து செயற்பட்ட பல சந்தர்ப்பங்கள் இருந்ததைப் போன்றே ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கு எதிராக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சட்ட நடவடிக்கைகளை எடுத்த பல சந்தர்ப்பங்களும் இருந்தன. ஒத்துழைப்பு காணப்பட்ட துறைகளுள் 2001 சமாதான செயன்முறை, ஊடகச் சுதந்திரம், தகவல் அறிவதற்கான சட்டம், குற்றவியல் அவமதிப்புச் சட்டத்தை நீக்குதல், சுயாதீன ஆணைக்குழுக்கள், 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு நட்டயீடு வழங்குதல் போன்றன உள்ளடங்கும். அரசியலமைப்புச் சபையின் வழிநடாத்தல் குழுவுக்கு, விசேடமாக தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனது பெறுமதி மிக்க சேவையினை வழங்கியது. அத்தகைய முயற்சியின் போது கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து அவர்களின் இன்றியமையாத பங்களிப்பு தொடர்பாக மற்றும் அவரது உற்சாகம் நிறைந்த அரசியல் புத்திக் கூர்மை தொடர்பாக நான் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் பாராட்டுதலும் வேண்டும்.

"பிரான்சியப் புரட்சி இடம்பெற்ற கால கட்டத்தில் நீங்கள் என்ன செய்தீர்கள்?" என 18 ஆம் நூற்றாண்டின் பிரதான அரசியல் சிந்தனையாளர்களுள் ஒருவரான 'அபே செய்யஸ்ஸிடம்' (Abbe Sieyes) வினவிய போது "நான் தப்பித்து விட்டேன்" என்பதாக அவர் பதில் வழங்கினார். மிகவும் கஷ்டமான ஒரு கால கட்டத்தில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தப்பித்துக் கொள்வதற்குப் பதிலாக மேலதிகமான பல பணிகளை மேற்கொண்டது. உண்மையிலேயே அவர்கள், நாம் மிகவும் நேசிக்கும் அரசியல் மற்றும் சிவில் சுதந்திரத்தை பாதுகாக்கும் நிறுவனங்களைப் பலப்படுத்தும் உயிர்நாடியாகச் செயற்பட்டார்கள்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துக்கு எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் எதிர்வரும் ஆண்டுகளில் அவர்கள் மேலும் பல வெற்றிகளை நினைவு கூருவார்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

---

**ரனில் விக்ரமசிங்க**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் முன்னாள் பத்தாவது பிரதமர் ஆவார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் என்பதுடன் தற்போதைய பாராளுமன்றத்தின் உறுப்பினர் ஆவார்.



# மேற்கொண்ட பணிகள் மிகச்சிறப்பானவை

எம்.ஏ. சுமந்திரன்

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) கால்நூற்றாண்டு நிறைவுவேளையில், நாட்டுக்கு அவர்கள் ஆற்றிய மகத்தான, தனிச்சிறப்புவாய்ந்த சேவைகளுக்காக எனது பாராட்டுதல்களையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவிக்க விரும்புகின்றேன். இந்த 25 வருடகாலம் முழுவதும் நான் CPA யுடன் மிகநெருக்கமாக இணைந்திருந்தமையால் குறிப்பாக மகிழ்ச்சியடைகின்றேன்.

நான் முதன்முதலாக சராவை (கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து) கொழும்புப் பல்கலைக்கழகத்தில், CEPRA அலுவலகத்தில் (CEPRA, CPA யின் முன்னோடியாகும்) ரொஹான் எதிரிசிங்கவுடன் சந்தித்தேன். 1996 இல் CPA தாபிக்கப்பட்டவேளையில் ஆராய்ச்சி, பரப்புரை மற்றும் பொதுநலன் வழக்காடல்கள் போன்ற கைக்கருவிகளுடன் கொள்கை மற்றும் ஆட்சி விவகாரங்களைக் கையாண்ட அத்தகைய வேறு தனியதார்த்த அமைப்பொன்று இருக்கவில்லை. உண்மையில், 25 வருடங்கள் கடந்தநிலையில், இன்றுங்கூட CPA அமைப்புக்கு இணையான ஒன்று இல்லாதநிலையே காணப்படுகின்றது.

CPA யுடனான எனது உறவு பிரதானமாக அதன் வழக்காடல் பிரயத்தனங்களுடன் இணைவு பெற்றிருந்தது. எனது வாழ்க்கைப்பணியின் ஆரம்பகாலத்தில் CPA தனது ஏனைய சட்டவுரைஞர்களுடன் என்னையும் ஒருவராக நியமித்திருந்தது. பொதுநலன் சாாந்த வழக்காடல்களில் எனது ஈடுபாடு CPA யின் ஈடுபாட்டுடன் பின்னிப்பிணைந்திருந்தது என்று கூறினால் அது மிகையாகாது. பல திருப்புமுனையான வழக்குகளில் CPA வெற்றிபெற்றது. அவற்றுள் பலவற்றில் நான் அவர்களின் சட்டவுரைஞராகச் செயற்பட்டமை எனக்குப் பெரும் கௌரவமான விடயமாகும். இந்த மகத்தான வெற்றிகளுள் மிகத்துலாம்பரமாகத் தெரியும் ஒன்று 2007 ஜூன் மாதத்தில் அப்போது பாதுகாப்புச் செயலாளராகவிருந்த கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தரவின்பேரில் கொழும்பிலிருந்து தமிழர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமைக்கு எதிர்ப்புத்தெரிவித்து, அதைத்

தடுத்து நிறுத்துவதற்கு CPA யும், சராவும் உயர்நீதிமன்றத்தில் செய்த அடிப்படை உரிமைமீறல் விண்ணப்பமாகும். செய்திப்பத்திரிகை அறிக்கைகளை மாத்திரம் சான்றாகவைத்து, இந்த நிகழ்வு இடம்பெற்ற ஒருசில மணித்தியாலங்களினுள் உயர் நீதிமன்றத்திற்கான விண்ணப்பம் சட்டத்தரணி மொஹான் பாலேந்திராவினால் சமர்ப்பிக்கப்பட்டது. இது சமர்ப்பிக்கப்பட்ட அன்றைய தினமே நான் திறந்த நீதிமன்றத்தில் இதற்குத் துணையாதரவு வழங்கினேன். உயர்நீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புவாய்ந்த இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பித்து, சட்டவிரோத வெளியேற்றங்களை உடனடியாக நிறுத்துமாறும், பஸ்கள் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டோரை மீண்டும் கொழும்புக்கு அழைத்துவருமாறும் அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டது. இது அன்று பிரதமராகவிருந்த ரத்னசிறி விக்கிரமநாயக்க அரசாங்கத்தின் இந்தச்செயல்குறித்து பாராளுமன்றத்தில் பகிரங்க மன்னிப்புக்கோர வைத்தது. CPA யின் இத்தகைய பல தனிச்சிறப்பான செயற்பாடுகள் இலங்கைச் சட்டத்தின் ஒரு பகுதியாகவே மாற்றமுற்றன. இவை இலங்கைப் பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாத்து, முன்னேற்றுவதிலும், அரசின் வகைப்பொறுப்பை முன்னேற்றுவதிலும் பிரத்தியட்சமான தாக்கங்களை ஏற்படுத்தின.

பொதுநலன் வழக்காடல்களுக்கு மேலதிகமாக, CPA நாட்டில் கொள்கைவகுத்தல் மற்றும் ஆட்சிச் செயல்முறைக்குப் பங்களிப்பு வழங்குவதனூடாக வேறுபல வழிகளிலும் சிறப்பாகச் செயலாற்றியது. CPA யின் பல வெளியீடுகள் பாரிய பொதுமக்களின் வாழ்வுக்குச் செழுமையூட்டியுள்ளன. குறிப்பாக, "இலங்கையில் அதிகாரப்பகிர்வு, 1926-2008 காலப்பகுதியிலான அரசியலமைப்பு மற்றும் அரசியல் ஆவணங்கள்" வெளியீடு, இலங்கையில் தமிழ் தேசிய விவகாரம் சம்பந்தமான முக்கியமான ஆவணங்களின் தொகுப்பாகும். இது அரசியல் தீர்வொன்றைத் தேடும் முயற்சியில் மதிப்புவாய்ந்த ஓர் ஆவணமாகும்.

CPA நாட்டின் தேசிய வாழ்வுக்குத் தொடர்ந்தும் பங்களிப்பு வழங்கவேண்டுமென்று நான் வாழ்த்துரை வழங்குகின்றேன்.

---

**எம்.ஏ. சுமந்திரன்**

தற்போதைய பாராளுமன்றத்தின் உறுப்பினராவார். மனித உரிமைகள் மற்றும் அரசியலமைப்பு விவகாரம் பற்றிய முதன்மை சட்டத்தரணியாவார்.

# “அனைவருக்கும் நீதி” குறித்த இடையறாத தேடல்



ரவூப் ஹக்கீம்

“சுதந்திரத்துக்கான எந்த இலகுவான வழியும் இல்லையென்பதை நாம் விளங்கிக்கொள்ளுகின்றோம். நாம் எவருமே தனியாகச் செயற்பட்டு வெற்றியை ஈட்டிக்கொள்ளமுடியாது என்பதை நன்கறிவோம். ஆகவே, தேசிய நல்லிணக்கத்தை அடையவும், தேசத்தைக் கட்டியெழுப்பவும் ஒரு புதிய உலகத்தின் உதயத்துக்காகவும் நாம் ஐக்கியப்பட்ட மக்களாக ஒன்றிணைந்து பணியாற்றுதல் வேண்டும். அனைவருக்கும் நீதி கிடைக்கட்டும்!” - நெல்சன் மண்டேலா

மேற்கூறியவாறான நெல்சன் மண்டேலாவின் வார்த்தைகள், சுதந்திரத்துக்குத் தொடர்ச்சியான, நிலைமாறாத போராட்டம் அவசியமென்பதால் அது இலகுவாக ஈட்டிக்கொள்ளப்படக்கூடிய ஒன்றல்ல என்னும் தத்துவத்தை எடுத்துவிளக்குகின்றன. அவை கடந்த 25 வருடகாலத்தில், மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) அனைவருக்கும் நீதியைத் தேடும் அதன் இடையறாத பணியில் குரலற்றோரின் குரலாக விளங்குவதில் அதன் பரிணமிக்கும் சாதனைகளை மிகச்சிறந்த முறையில் பிரதிபலிப்பவையாகவுள்ளன.

இலங்கையில் உரிமைகளுக்கும், சுந்திரத்துக்குமான ஒவ்வொரு போராட்ட வடிவமும் CPA யின் பரந்த வலையமைப்புகள் மற்றும் மனிதஉரிமைகளுக்கான முன்னுரிமையுடன் ஒரு தாராளவாத, ஜனநாயகத் தேசத்துக்கான இலட்சியம் என்பவற்றின்கீழ் பாதுகாப்பைப் பெற்றுவந்துள்ளது. இந்த ஆதாரமான நம்பிக்கையைத் தமது வாழ்க்கையின் இலட்சியமாகவும், குறியிலக்காகவும் அமைத்துக்கொள்வதிலும், மனிதகுலத்தின் நலன்களுக்காக அதன் விளைவுகளை ஏற்றுக்கொள்வதிலும் முன்னோடியாக விளங்கும் சிலர் உள்ளனர். CPA அமைப்பும், அதன் தலைவர்களும் மற்றும் அணிகளும் இதை நிரூபித்துள்ளார்கள்.

CPA ஆழமான வகையில் திருப்திகரமான இந்த 25 வருடங்களை நினைவுகூர்ந்து கொண்டாடும் இந்தச் சந்தர்ப்பத்தில் திடசித்தம்படைத்த நிறைவேற்றுப்பணிப்பாளரும், எனது நண்பருமாகிய கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து இந்த அமைப்பின்மீது ஏற்படுத்தும் தீர்மானகரமான தாக்கம்குறித்து நான் ஆழமான நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். வெளிப்படையான, முன்னேற்றகரமான சாதனைகள், தைரியம் மற்றும் அர்ப்பணிப்புணர்வு சம்பந்தமாக நான் செல்வி. பவானி பொன்சேகா மற்றும் CPA யின் தற்கால மற்றும் முன்னாள் சகபாடிகளுக்கும், CPAயின் தனிச்சிறப்புமிக்க முகாமைத்துவச்சபை அங்கத்தவர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

CPA யின் மதிப்புமிக்க சட்டக்கல்விமான்களாகிய ரொஹான் எதிரிசிங்க (தாபகப் பணிப்பாளரும், CPA யின் சட்டப்பிரிவுத் தலைவரும்) மற்றும் அசங்க வெலிகல ஆகியோருக்கு அவர்களின் சிறப்புவாய்ந்த அறிவாற்றல் பங்களிப்புக்காகவும், மரபுநிலையாகத் தொடரும் பணிகளுக்காகவும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். CPA செயற்பாடுகளின் நிலைமாற்றமின்மை மற்றும் உறுதி, விசேடமாக அது மனிதஉரிமைகள் பாதுகாப்புக்கு வழங்கும் முதலிடம் என்பவற்றிலிருந்து நானும் தனிப்பட்ட ரீதியில் உணர்வுபெற்றுள்ளேன் என்பதைச் சொல்லவேண்டிய அவசியமில்லை.

நிகழ்காலத்தில் பெரும்பான்மையினவாத அரசியல் பெரும்பான்மையின் வாக்குகளை மாத்திரம் பெற்றுக்கொள்ளும் கீழ்த்தரமான தந்திரங்களால் புரையோடிப்போயுள்ள நிலையில், இனத்துவ மற்றும் வேறுரீதியில் பல்வகைமையினராகிய சிறுபான்மை மக்களும் அனேக சந்தர்ப்பங்களில் போக்கிடமற்றோராக, தொடர்தாக்குதலுக்குள்ளாகித் திகைத்துநிற்கின்றனர். இத்தகைய சந்தர்ப்பங்களில் எந்தக் குறிப்பிட்ட இனத்துவ சமூகத்தையோ, வர்க்கத்தையோ அல்லது நலன்குழுக்களையோ பிரதிநிதித்துவம் செய்யாத CPA ஒருமைப்பாட்டைத் தெரிவிக்கவும், வெகுஜனங்களின் பக்கத்தில் நிற்பதற்கும், நீதிக்காக முன்னிற்கும் நிலைப்பாட்டை எடுத்துவந்துள்ளது. அது நீதி, நல்லாட்சி மற்றும் நல்லிணக்கத்தைத் தேடும் “மக்களையே” பிரதிநிதித்துவம் செய்வதாக உரிமைக்கோரிக்கையை முன்வைக்கின்றது.

சிவில் சமூகத்தையும், பகிரங்கக்கொள்கை வகுத்தமைப்பையும் வலுப்படுத்துவதற்கான CPA யின் பரப்புரையும், மனிதஉரிமைகளின் காவலனாக அதன் கருமப்பாடும் பலருக்கும் அனுகூலங்களை ஏற்படுத்தியுள்ளது. பலவருட காலங்களாக CPA முன்னெடுத்துச்சென்ற பணிகளின் மிகச்சிறந்த விளைவுகளை பரப்புரைகளின் எண்ணிக்கையிலும், நீதி, நல்லாட்சி மற்றும் ஜனநாயகத்துக்கான தேடலில் நீதிமன்றத்துக்குக் கொண்டுசென்ற மனிதஉரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் வழக்காடல்களிலும் காணலாம். CPA நீதி, மனிதஉரிமைகள், நல்லாட்சி மற்றும் ஜனநாயகத்துக்குப் போராடியதைப்போலவே, ஓர் அர்த்தமுள்ள ஜனநாயக அரசை ஈட்டிக்கொள்வதில் சமாதானம் மற்றும் நல்லிணக்கமே இன்றியமையாத வழிகள் என்பதில் தொடர்ந்தும் நம்பிக்கைகொண்டுள்ளது என்பதைத் தெரிவிப்பதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அப்படிகள் ஆக்கபூர்வமான வழிகளில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகையில், அவை சந்தேகமின்றி இலங்கை அரசாங்கம் சகல பிரஜைகளுக்குமான நியாயமான கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான நினைவூட்டிகளாகவும், இலங்கையின் அரசியலமைப்பில் உள்ளடக்கம் பெற்றுள்ள மனிதஉரிமைகளையும், மதச்சுதந்திரங்களையும் பெரிதாக மதிப்பதற்கான உந்துதலாகவும் விளங்கும்.

சகல ஜனசமூகங்களினதும் மேன்மைக்காக CPA யின் துடிப்பான செயற்பாடுகள் மேலும் பல வருடங்களுக்கு வெற்றிகரமாக நிறைவேறவேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

---

**ரவூப் ஹக்கீம்**

ஒரு சட்டத்தரணி. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பின் தலைவரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமாவார். முன்னாள் அமைச்சராவார்.

# இணங்கியும் இணங்காமலும் வந்த ஒரு பயணம்



எரான் விக்ரமரத்ன

மோதல் தவிர்ப்பு மற்றும் ஜனநாயக ரீதியிலான அரச நிர்வாகத்துக்காக மாற்றுக் கொள்கைகளை முன்வைப்பதற்காக அரச கொள்கைத் துறையில் உற்சாகமானதும் தலையீட்டு ரீதியிலுமான ஒரு நிறுவனமாகவே 25 ஆண்டுகளுக்கு முன்னர் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தாபிக்கப்பட்டது. இந்த 25 ஆண்டுகளில் தொடர்ந்து நீடித்த யுத்தம் மற்றும் சிவில் சமூகம் ஒன்றின் இருப்புக்குத் தேவையான, கருத்து வேற்றுமைகள் நிலவிய மற்றும் அவற்றுக்கு வரையறுக்கப்படாத, காலப் பிரிவுகள் பலவற்றை இலங்கை அனுபவிக்க நேர்ந்தது. அரசியலமைப்பு மற்றும் சட்ட மறுசீரமைப்பு, மனித உரிமைகளைப் பாதுகாத்தல், ஆதரித்து வாதாடுதல் மற்றும் மக்கள் ஊடகம் ஆகிய துறைகளில், சிவில் சமூக சூழலில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் திடமான ஒரு கடமைப் பொறுப்பினை நிலைத்து நின்று நிறைவேற்றி வந்துள்ளது. மக்கள் நேய சட்ட நடவடிக்கைகள், பரப்புரைகள் உள்ளிட்ட பரந்துபட்ட இயலளவினை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னிடம் ஒன்றுதிரட்டிக் கொண்டுள்ளதுடன் அதன் மூலம் மேலான கொள்கை உரையாடல் முதல் அடி மட்டத்திலான அமைப்பு வரை பலம் பொருந்தச் செய்தல் மற்றும் அழுத்தம் கொடுப்பதனை மேற்கொண்டுள்ளது.

ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் செயற்பாட்டின் மிக முக்கியமான சந்தர்ப்பமாக, 2018 ஆம் ஆண்டு அரசியலமைப்பு நெருக்கடி நிலைமையின் போது நீதிமன்ற செயன்முறை தொடர்பாக அது நிறைவேற்றிய கடமைப் பொறுப்பு விளங்குகிறது. அதில் ஆரம்பமாகி அநீதிகளுக்கு எதிராக முறைப்பாடுகளைச் சமர்ப்பித்தல் மற்றும் இலங்கையின் அரசியலமைப்பினை இறுக்கமான முறையில் பாதுகாக்கும் விதமாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனது தலையீட்டினை ஆதரித்து வாதாடுதல், செயற்படு நிலை மற்றும் மக்கள் ஊடகவியலாளருக்கான பணி ஆகியவற்றைத் தொடர்ந்தும்

மேற்கொண்டு வருகிறது. கொள்கைகள் மற்றும் அவற்றின் தர்க்க ரீதியான நிலை தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் காலத்துக்குக் காலம் பொதுமக்களுக்கும் சட்டம் இயற்றுபவர்களுக்கும் தெளிவுபடுத்தியது. விசேடமாக தனது சமூக ஒப்பந்தம் மற்றும் சிவில் பொறுப்பு தொடர்பான உணர்வினை மீண்டும் உயிர்ப்பிப்பதனைக் காணக் கூடியதாக உள்ள இளைஞர்கள் உள்ளிட்ட சாதாரண மக்களுடன் உயர் தரத்தினைக் கொண்ட கொள்கை உரையாடல் பிரதேசமயப்படுத்தலுக்கான அதன் பங்களிப்பு காரணமாக அதன் முயற்சிகள் போற்றப்பட வேண்டியவைகள் ஆகும்.

என்னைப் போன்ற சட்டம் இயற்றுபவர்களுக்கு இத்தகைய பங்களிப்பு விசேடமாக ஏற்புடையதாக உள்ளது. நாம் எப்பொழுதும் இணங்க வேண்டுமெனக் காணப்படாத போதும், விஞ்ஞான ரீதியிலான ஆய்வின் போது பெரும்பாலான மூலங்கள் மற்றும் எதிர்கால குறிகாட்டிகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஜனநாயக ரீதியிலான பொதுமக்கள் உரையாடலை நிராகரிப்பதற்கு முயற்சிக்கும் சக்திகளுடன் ஜனநாயக ரீதியிலான பெறுமானங்கள் மற்றும் அதற்கான நிறுவனங்கள் அதிகளவு அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் ஒரு சூழ்நிலையில் எம்மை வரைவிலக்கணப்படுத்தும் பெறுமானங்களைப் பாதுகாக்கும் எமது போராட்டத்தின் போது நாமும் ஒரு திரும்பற் புள்ளியில் இருப்பதாக உணர்கின்றோம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் போன்ற சிவில் சமூக அமைப்புகளுக்கு பாரியதொரு கடமைப் பொறுப்பு உள்ளது என்பதுடன் அவ்வாறான அமைப்புகள் இன்றியமையாததாகவும் உள்ளது. 25 ஆண்டு நிறைவின் போது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துக்கு பின்னால் நின்று செயற்பட்ட அனைவருக்கும் வாழ்த்து தெரிவிப்பதற்கு இதனை ஒரு சந்தர்ப்பமாகக் கொள்வதுடன் எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள கடமைப் பொறுப்புக்கள் தொடர்பாக எனது மேலான நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இணங்கிச் செல்வதற்கும் இணங்காதிருப்பதற்கும் உள்ள உரிமையினை பாதுகாப்பதற்கு மற்றும் ஜனநாயக ரீதியிலான இலங்கையினை உறுதி செய்வதற்கு இணங்கி, இணங்காது மற்றும் எதிர்த்து எமது உரையாடலை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வோம்.

---

**எரான் விக்ரமரத்ன**

முன்னாள் அமைச்சர். தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்.


# மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் / அடிப்படை உரிமை மனுக்கள்

- உத்தேச நிதிச் சட்ட மூலத்துக்கு எதிராக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் தாக்ககல் செய்யப்பட்ட மனு - (SC SD 28/2021)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்ட மாஅதிபர் - அரசியலமைப்பின் இருபதாம் திருத்தம் தொடர்பான வழக்கு (SC SD 03/2020)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்ட மாஅதிபர் - எட்டாவது பாராளுமன்றத்தைக் கலைத்தல் மற்றும் ஒன்பதாவது பாராளுமன்றத்துக்கான தேர்தலை 2020 ஜுன் மாதம் 20 ஆம் திகதி நடாத்துவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தி சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை உரிமை விண்ணப்பம்
- சுனில் ரத்நாயக்காவுக்கு மன்னிப்பு வழங்குவதற்காக எடுக்கப்பட்ட தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தி சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை உரிமை விண்ணப்பம்
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்ட மாஅதிபர் - அரசியல் பழிவாங்கல் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட ஒரு சில அதிகாரங்களை சவாலுக்கு உட்படுத்தி சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை உரிமை விண்ணப்பம் (SC FR 32/2020)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்ட மாஅதிபர் - அரசியலமைப்பின் இருபதாவது திருத்தம் தொடர்பான வழக்கு (SC FR 199/2019)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்ட மாஅதிபர் - பாராளுமன்றம் கலைக்கப்பட்டதை சவாலுக்கு உட்படுத்தி சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை உரிமை விண்ணப்பம் (SC FR 353/2018)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்ட மாஅதிபர் - மங்கள சமரவீர மற்றும் மேலும் இருவர் (SC FR 34/2018) பவானி பொன்சேகா மற்றும் மேலும் நால்வர் (SC FR 34/2018)
- உதய பிரபாத் கம்மன்பில எதிர் சட்ட மாஅதிபர் (மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தலையீட்டாளர் மனுதாரர் என்ற ரீதியில்)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்ட மாஅதிபர் - இருபதாவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பான வழக்கு (SC SD 24/2017)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் கபீர் ஹாஷீம் மற்றும் ஏனையோர் - உயர் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை உரிமை விண்ணப்பம் No. 54/2016
- சஞ்சீவ சுதத் பெரோரா மற்றும் மேலும் இருவருக்கு எதிர் கௌரவ மைத்திரிபால சிறிசேன (SCFR67/2016) தேசியக் கீதத்தின் தமிழாக்கம் பற்றிய அடிப்படை உரிமைகள் விண்ணப்பம்.
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்ட மாஅதிபர் - தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 291 தொடர்பாக திருத்தம் (SC SD 28/2015)

- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்ட மாஅதிபர் - (SC SD 7/2017)
- 2013 ஆம் ஆண்டு நவம்பர் 4 ஆம் திகதி விசாரிக்கப்பட இருந்த ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் அரசியலமைப்புச் சட்டத் தன்மையினை சவாலுக்கு உட்படுத்தி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் சமர்ப்பிக்கப்பட்ட மனு
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்ட மாஅதிபர் (ஒதுக்கீட்டுச் சட்டமூலம்) - (SC SD 19/2013)
- அருணாசலம் குணபாலசிங்கம் மற்றும் மேலும் 1473 பேர் எதிர் ஏ.சிவஸ்வாமி மற்றும் மேலும் இருவர் - மேன்முறையீட்டு நீதிமன்றம் (ரீட்) 125/2013
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் மேலும் ஒருவர் எதிர் டீ.எம். ஜயரத்ன மற்றும் ஏனையோர் - சிறிசேன (SC FR 23/2013)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்ட மாஅதிபர் (ஒதுக்கீட்டுச் சட்டமூலம்) - (SC SD 15/2012)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்ட மாஅதிபர் (திவிநெகும சட்டமூலம்) - (SC SD 6/2012)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்ட மாஅதிபர் (திவிநெகும சட்டமூலம் (2)) - (SC SD 15/2012)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்ட மாஅதிபர் (திவிநெகும சட்டமூலம் (1)) - (SC SD 3/2012)
- விநாயகமூர்த்தி கோகிலம்பாள் எதிர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ (SC FR 309/2012) அடிப்படை உரிமை மனு ஒன்றைத் தாக்கல் செய்வதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் உதவுதல்
- கே.கே.பி.ஆர் அமரசிங்க எதிர் கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் - மேன்முறையீட்டு நீதிமன்றம் (ரீட்) 156/2012 – ரீட் விண்ணப்பம் ஒன்றைத் தொடுப்பதற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் உதவுதல்
- அப்துல் மஜீட் அப்துல் பரீட் எதிர் சந்திரபிரபாலினி கிருஷ்ணகோபால் மற்றும் ஏனையோர் - மேன்முறையீட்டு நீதிமன்றம் (ரீட்) 135/2012 - ரீட் விண்ணப்பம் ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் உதவுதல்
- ஜோவிதா அருளானந்தம் எதிர் கொழும்புப் பல்கலைக்கழகம் (SC FR 40/2012) அடிப்படை உரிமை மனு ஒன்றைத் தொடுப்பதற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் உதவுதல்
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்ட மாஅதிபர் (நகர மற்றும் அரச திட்டமிடல் சட்டமூலம் (1) - (SC SD 3/2011)
- எம்.ஏ. சுமந்திரன் எதிர் ஆர்.பி.ஆர். ராஜபக்ஷ மற்றும் ஏனையோர் (காணிச் சுற்றறிக்கை தொடர்பான மனு) (SC FR 494/2011) மற்றும் (ரீட்) 620/2011
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ஏனையோர் - (SC FR 453/2011)
- எம்.எம்.எம்.சம்பத் குமார எதிர் கட்டுநாயக்க பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி - 265/2011 மற்றும் ஏனைய சுதந்திர வர்த்தக வலய வழக்குகள் - SC FR 266 267 268 269 270 271 272 273 274 346 347 348/2011
- கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து எதிர் மஹிந்த தேசப்பிரிய (SC FR 251/2011)
- கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து எதிர் மஹிந்த தேசப்பிரிய (SC FR 161/2011)


- மரியதாஸ் பெசில்ராஜ் எதிர் கோட்டாபய ராஜபக்ஷ SC FR 387/2011 மற்றும் நவந்துறை ஏனையோர் அடிப்படை உரிமை விண்ணப்பங்கள் SC FR387 388 389 391 396 395 407 408 399 397 398 402 405 406 400 401 384 385 392 393 414/2011
- மாவை சோமசுந்தரம் சேனாதிராஜா எதிர் கோட்டாபய ராஜபக்ஷ (வடக்கில் பதிவு செய்தல்) (SC FR 73/2011)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்ட மாஅதிபர் (உள்ளூராட்சி திருத்தச் சட்ட மூலம் தொடர்பான மனு - (SC SD 10/2010)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்ட மாஅதிபர் - (SC SD 05/2010)
- அன்ரன் ஜூட் எதிர் ஓமந்தை முகாம் நிலையப் பொறுப்பதிகாரி (SC FR 389/10)
- குணரத்னம் மனிவானம் எதிர் டீ.எம். ஜயரத்ன மற்றும் ஏனையோர் (SCFR விண்ணப்ப இலக்கம் 393/2010
- அமிதா பிரியந்தி நிலையம் எதிர் பொலிஸ் மாஅதிபர் (SC FR 155/10)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் தேர்தல் ஆணையாளர் - (SC FR 111/10)
- அழகியவன்ன எதிர் ரூபவாஹினி - (SC FR 73/10)
- இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு - (SC FR 367/09)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் பாதுகாப்பு அமைச்சர் - (SC FR 457/09)
- ஜயலத் ஜயவர்தன எதிர் சட்டமா அதிபர் - (SC FR 396/09)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்டமா அதிபர் - (SC FR 578/2008)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் தயானந்த திசாநாயக்க - (SC FR 378/08)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்டமா அதிபர் - (SC Ref: No.1/2008)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் வெகுசன ஊடக மற்றும் தகவல்துறை அமைச்சர் - (478/2008)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் - (SC FR 351/2008)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் சட்டமா அதிபர் - (SC FR 359/2008)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் பாதுகாப்பு அமைச்சர் - (SC FR 424/07)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் பாதுகாப்பு அமைச்சர் - (218/07)
- மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் பொலிஸ்மா அதிபர் - (SCFR 177/2007)
- கந்தஸ்வாமி ராசலிங்கம் எதிர் பொலிஸ்மா அதிபர் - (219/2007)
- குணாமுத்து எதிர் சட்ட மாஅதிபர் -

**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையப் பிரசுரங்களின் ஒரு சில...**













































VALUES AND ATTITUDES SURVEY ON
70 YEARS OF INDEPENDENCE
IN SRI LANKA
TOPLINE REPORT
1948
70
2018
FEBRUARY 2019
CENTRE FOR POLICY ALTERNATIVES – SOCIAL INDICATOR



PEACE CONFIDENCE INDEX (PCI)
2001 - 2004
SOCIAL INDICATOR
CENTRE FOR POLICY ALTERNATIVES


PEACE CONFIDENCE INDEX (PCI)
2005 - 2008
SOCIAL INDICATOR
CENTRE FOR POLICY ALTERNATIVES



SURVEY ON DEMOCRACY IN POST-WAR SRI LANKA
TOP LINE REPORT | JULY 2011
SOCIAL INDICATOR – CENTRE FOR POLICY ALTERNATIVES


LIVING IT DOWN: LIFE AFTER RELOCATION IN COLOMBO'S HIGH RISES
A SURVEY OF HOUSEHOLDS RELOCATED BY THE URBAN REGENERATION PROJECT
IROMI PERERA
CENTRE FOR POLICY ALTERNATIVES
NOVEMBER 2016



POTENTIAL FOR PEACE
SOCIAL INDICATOR - CENTRE FOR POLICY ALTERNATIVES
2004



THE NEED
FOR PRISON REFORMS
IN SRI LANKA
CENTRE FOR POLICY ALTERNATIVES
JUNE 2020



SURVEY ON DEMOCRACY IN POST-WAR SRI LANKA
TOP LINE REPORT | JULY 2011
SOCIAL INDICATOR – CENTRE FOR POLICY ALTERNATIVES



An Opinion Survey
on the
LLRC Report



POLITICAL SOLUTIONS
MILITARY SOLUTIONS
KARUNA FACTOR
INDIA & SRI LANKA
THE BUDGET
TAMILNADU
13TH AMENDMENT
EASTERN PROVINCE
PEACE CONFIDENCE INDEX
NOVEMBER 2008



CONSUMPTION & PERCEPTIONS OF MAINSTREAM & SOCIAL MEDIA
IN THE WESTERN PROVINCE
TOP LINE REPORT
SOCIAL INDICATOR
CENTRE FOR POLICY ALTERNATIVES
JANUARY 2016



சமாதானம் பற்றிய யாழ்ப்பாணத்தின் தோற்றப்பாடு
சோஷல் இண்டிகேட்டர்
ஒக்டோபர் 2002



Assessment of Eastern Province Recovery
The Public Perspective
2010
SOCIAL INDICATOR-CENTRE FOR POLICY ALTERNATIVES



Broadening gender:
Why masculinities matter
Attitudes, practices and gender-based violence in four districts in Sri Lanka
care
partners for prevention


ඡන්දය දෙන ස්ථානයට
வாக்கெடுப்பு நிலையத்துக்கு
TO THE POLLING STATION
PRESIDENTIAL ELECTION 2015
PRE ELECTION OPINION POLL
TOP LINE REPORT
SOCIAL INDICATOR - CENTRE FOR POLICY ALTERNATIVES
DECEMBER 2014



පුරවැසි
කතිකාවතකට
පෙරවදනක්
ලයනල් ගුරුගේ



LAND IN THE EASTERN PROVINCE
POLITICS, POLICY AND CONFLICT
Bhavani Fonseka and Mirak Raheem
Centre for Policy Alternatives
May 2010


Reporting on Human Rights in Sri Lanka
A handbook for media professionals



උගත් පාඩම් හා ප්‍රතිසන්ධානය පිළිබඳ කොමිසමේ නිර්දේශ
(LLRC)
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය



இலங்கையில் தமிழ் மொழி உரிமைகள்


LIVING IT DOWN: LIFE AFTER RELOCATION IN COLOMBO'S HIGH RISES
A SURVEY OF HOUSEHOLDS RELOCATED BY THE URBAN REGENERATION PROJECT
IROMI PERERA
CENTRE FOR POLICY ALTERNATIVES
NOVEMBER 2016



භාෂාව සහ මනුෂ්‍යත්වය
එස්. පී. පුංචිහේවා
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය



DEMOCRACY IN POST-WAR SRI LANKA
TOP LINE REPORT
OCTOBER 2014



LIVING IT DOWN: LIFE AFTER RELOCATION IN COLOMBO'S HIGH RISES
A SURVEY OF HOUSEHOLDS RELOCATED BY THE URBAN REGENERATION PROJECT
IROMI PERERA
CENTRE FOR POLICY ALTERNATIVES
NOVEMBER 2016



Accounting
Procedures for Pradeshiya Sabha
Governance Programme
Centre for Policy Alternatives
Colombo 07
USAID
CPA



විභාෂා


THE NINETEENTH AMENDMENT TO THE CONSTITUTION
CONTENT AND CONTEXT
EDITED BY ASANGA WELIKALA



THE EIGHTEENTH AMENDMENT TO THE CONSTITUTION
SUBSTANCE AND PROCESS
EDITED BY ROHAN EDRISINHA AND ARUNI JAYAKODY
CENTRE FOR POLICY ALTERNATIVES



A NEW DEVOLUTION SETTLEMENT FOR SRI LANKA
August 2016
Proceedings and Outcomes, Conference of Provincial Councils
Edited by Asanga Welikala
Centre for Policy Alternatives www.cpalanka.org


A Brief Guide on the Draft Legislation to Establish an Office on Missing Persons
Centre for Policy Alternatives
July 2016


TRANSITIONAL JUSTICE IN SRI LANKA
Moving Beyond Promises
Edited By
Bhavani Fonseka



Reforming Sri Lankan Presidentialism
Provenance, Problems and Prospects



Victim-Centred Transitional Justice in Sri Lanka: What Does It Really Mean?
DISCUSSION PAPER
BHAVANI FONSEKA AND JOANNA NAPLES-MITCHELL
CENTRE FOR POLICY ALTERNATIVES – SOCIAL INDICATOR



නව ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවක ජනතා සිහිනය සහ යථාර්ථය


තොරතුරු අයිතිවාසිකම පිළිබඳ තොරතුරු
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රයේ ප්‍රකාශනයකි



VOTE
ඡන්දය
ඔබේ බලයයි !



20 YEARS
CPA
1996-2016
The Idea of Constitutional Incrementalism
CPA Working Papers on Constitutional Reform No.14, January 2017
Asanga Welikala



The Need for Accountability in Sri Lanka's Criminal Justice System
A Glance at Seven Emblematic Cases
Centre for Policy Alternatives
March 2019



FORCED EVICTIONS IN COLOMBO
THE UGLY PRICE OF BEAUTIFICATION
CENTRE FOR POLICY ALTERNATIVES
APRIL 2014


CPA
Centre for Policy Alternatives
Brief Guide II
Structures to Deal with COVID-19 in Sri Lanka: A Brief Comment on the Presidential Task Force
April 2020



CORRIDORS OF POWER: DRAWING AND MODELLING SRI LANKA'S TRYST WITH DEMOCRACY



An Opinion Poll on Peace
Peace Confidence Index (PCI)
Top-Line Results
May 2006
Social Indicator
Also In This Wave...



ශ්‍රී ලංකාවේ පෙඩරල් අදහසෙහි ගමන් මග
(1926-2005)
ලයනල් ගුරුගේ
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය


ශ්‍රී ලංකාවේ ජනවාර්ගික ගැටලුව සහ විසඳුම්



சமாதான நோக்கு
2020
பொதுத் தேர்தலும் அதன் பின்னரும்...


An Analysis of the Local Government Budget Process in Sri Lanka
Ben Fowler
Sriyanie Wijesundara
Manjula Gajanayake
Governance Programme
Centre for Policy Alternatives
Colombo 07
USAID
SOCIAL INDICATOR-CENTRE FOR POLICY ALTERNATIVES



ගැටුම් සමථනය සහ බුදුදහම
ලයනල් ගුරුගේ
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය



ක්‍රිශාන්ති කුමාරස්වාමි ඝාතන නඩුව සහ ඇඹිලිපිටිය සිසු ඝාතන නඩුවෙන් පසු මානව අයිතිවාසිකම්
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය



PUBLIC OPINION POLL
ON SRI LANKA'S CONSTITUTIONAL REFORM
MAY 2019
CENTRE FOR POLICY ALTERNATIVES – SOCIAL INDICATOR



CPA
HIV / AIDS in Sri Lanka
A Profile on Policy and Practice
July 2007



சமஷ்டி அரசுகள்
Federations
ஜேர்மனியின் சமஷ்டிச் சீர்திருத்தம்



Media Monitor
2006 May - June



Speeches and Writings of Sir Ponnambalam Arunachalam
Introduced by H. Kumarasingham


The Sri Lankan Republic at 40: Reflections on Constitutional History, Theory and Practice
Edited by Asanga Welikala
Volume I


POWER-SHARING IN SRI LANKA
Constitutional and Political Documents
1926-2008
EDITORS
ROHAN EDRISINHA
MARIO GOMEZ
V.T. THAMILMARAN
ASANGA WELIKALA



සිය දිවි නසා ගැනීම්
සංවේදී ජනමාධ්‍ය භාවිතාව



ධනය බලය මැතිවරණය සහ ඡන්දදායකයා


VOLUME 6
moot point
Legal Review 2002
Centre for Policy Alternatives



தகவல் அறியும் உரிமை மற்றும் ஊடகப் பயன்பாடு





සාම ක්‍රියාවලිය පිළිබඳ මත විමසුමක්


LAND AND PROPERTY RIGHTS OF INTERNALLY DISPLACED PERSONS
CENTRE FOR POLICY ALTERNATIVES
FEBRUARY 2003
PROJECT FUNDED BY NOVIB



1998 ஆம் ஆண்டு ஏப்ரல் 24


Law
Human Rights
and
HIV/AIDS
A Guide
Centre for Policy Alternatives


විලාසම
விலாசம்
Vilasam





UNHRC


THE ORIGIN OF THE STATEMENT
PUNCHI



P. SARAVANAMUTTU
JEFFREY




Sunday Observer - 2011-03-13




ceylon-today-23-07-2015




Dinamina 2016-02-20




திவிநெகும சட்டம் பற்றி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் உயர்நீதிமன்றத்திடம் சமர்ப்பித்த அடிப்படை உரிமைகள் மீதான மனு வெற்றியீட்டிய பின்னர் அநாமதேயக் குழு ஒன்று எமக்கெதிராக சேறு பூசி இலங்கை பூராவும் ஒட்டியிருந்த சுவரொட்டிகள்.

25 YEARS
1996 - 2021
CENTRE FOR POLICY ALTERNATIVES

ISBN 978-624-5914-12-8